உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கைலாசபரம்பரைப் பொம்மபுரம்

ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

தோத்திரப்பிரபந்தத்திரட்டு.

இஃது,

ஷை ஆதீனத்துச் சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

காயாறு-ஞானசுந்தரஐயராலும்

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாராலும்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிக்கப்பட்டுமுடிந்தது.

விகிர்திஸு தைமீ.

பிரசித்தபத்திரம்.

சிவப்பிரகாசசுவாமிகள்முதலிய மூவர்களும் அருளிய (௩௩) பிரபந்தங்களுள்ளே, திருவெங்கையலங்காரம், க்ஷேத்திர வெண்பா, சிவநாமமகிமை, ஏசுமதநிராகரணம், பழமலைக்கொச்சகம், வேலையர்கைத்தலமாலை, மயிலத்திரட்டைமணிமாலை, பாரிசாதலீலை, குக்கைநமச்சிவாயலீலை என்னும் ஒன்பதும் அகப்படவேயில்லை; ஏனைச் சிவப்பிரகாசவிகாசம், சதமணிமாலை, தருக்கபரிபாஷை, வீரசிங்காதனபுராணம், மயிலத்துலா, என்னும் ஐந்துக்கும் இன்னும் இரண்டொருபிரதிவேண்டும்; மற்றவை அச்சிடப்பட்டிருக்கின்றன. மேற்குறித்தவற்றுள், ஏதேனும் கிடைத்துள்ளவர்கள் அறிவிக்கிற் பொருளை விரும்பினும் இயன்றமட்டும் உபகரித்துப்பெற்று அச்சிட்டு வெளிப்படுத்துவேம்.

இங்ஙனம்.

கா - ஞானசுந்தரஐயர்.

சென்னைமுத்தியாலுபேட்டை தம்புசெட்டிவீதி 130-வதுவீடு.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இதிலடங்கியபிரபந்தங்கள்.

௧.	சோணசைலமாலை.	அ௰
௨.	நால்வர்நான்மணிமாலை.	
௩.	திருச்செந்திலந்தாதியுரை.	
௪.	பழமலையந்தாதி.	
௫.	பிக்ஷாடனநவமணிமாலை.	௫
௬.	பெரியநாயகியம்மைவிருத்தம்.	
௭.	பெரியநாயகியம்மைகலித்துறை.	
௮.	நன்னெறி.	
௯.	திருவெங்கைக்கோவை.	
௧௦.	திருவெங்கைக்கலம்பகம்.	எ௨
௧௧.	திருவெங்கையுலா.	
௧௨.	இஷ்டலிங்கவபிஷேகமாலை.	
௧௩.	,, நெடுங்கழிநெடில்.	
௧௪.	,, குறுங்கழிநெடில்.	௧
௧௫.	,, நிரஞ்சனமாலை.	
௧௬.	,, கைத்தலமாலை.	
௧௭.	சிவஞானபாலையதேசிகர் தாலாட்டு.	
௧௮.	,, நெஞ்சுவிடுதூது.	
௧௯.	,, திருப்பள்ளியெழுச்சி	௪
௨௦.	,, பிள்ளைத்தமிழ்.	
௨௧.	,, கலம்பகம்.	
௨௨.	இஷ்டலிங்கவகவல்.	
	இவ்வகவல் அபிஷேகமாலைமுதலிய ஐந்தோடு.	க௨

புத்தகவிளம்பரம்.

	ரூ. அ. பை.
வசவபுராணம்.	௧ - ௪ - 0
வாயுசங்கிதை.	௧ - 0 - 0
குமரகுருபரசுவாமிகள் பிரபந்தத்திரட்டு.	௧ - 0 - 0
சிவப்பிரகாசசுவாமிகள் தோத்திரப்பிரபந்தத் திரட்டு. சோணசைலமாலைமுதல் (22)	௧ - 0 - 0
திருக்கூவப்புராணம்.	0 - ௧0 - 0
சீகாளத்திபுராணம் ஆப் பைண்டு.	0 - ௧0 - 0
ஷை புராணம் வரலாறுடன் காலிகோபைண்டு.	0 - ௧௨ - 0
சீகாளத்தி மான்மிய வசனம்.	0 - ௨ - 0
திருவெங்கைக்கோவை.	0 - ௪ - 0
திருவெங்கைக்கலம்பகம் திருவெங்கையுலா.	0 - ௫ - ௬
பழமலையந்தாதியுரை.	0 - ௫ - 0
விநாயகரகவல், திருவிரட்டைமணிமாலை, திருமும்மணிக்கோவை, திருவிரட்டைமணி மாலை, விநாயககவசம், செங்கழுநீர்விநாய கர்பிள்ளைத்தமிழ். ஆ ௬-ம்.	0 - ௧ - ௬
வடதிருமுல்லைவாயிற்றேவாரம், திருப்புகழ் (௧) பிள்ளைத்தமிழ், பஞ்சரத்தினம், இரட் டைமணிமாலை. ஆ ௫-ம்.	0 - ௧ - ௬
புள்ளிருக்குவேளூர்க்கலம்பகம்.	0 - ௧ - ௬
குசேலோபாக்கியானம்.	0 - ௫ - 0
திருவாலங்காட்டுப்புராணம்.	0 - ௮ - 0

இவை சென்னை முத்தியாலுபேட்டை தம்புசெட்டிவீதி (130)வதுவீட்டில் நம்மிடத்திலும், சென்னை நாட்டுப்பிள்ளை யார்கோவில்வீதி (36)வதுவீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, கா-முரு கேசமுதலியாரிடத்திலும், சென்னை தண்டையார்பேட்டை திருவொற்றியூர்ஹைரோட்டு(279)வதுவீட்டில் ம-ா-ா-ஸ்ரீ, க-வ-திருவேங்கடநாயுடுவினிடத்திலும், சிதம்பரம் சைவப் பிரகாசவித்தியாசாலை மானேஜர் ம-ா-ா-ஸ்ரீ,பொன்னுசாமிப் பிள்ளையிடத்திலும் தபாற்செலவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

இங்ஙனம்,

கா-ஞானசுந்தரஐயர்.

உ

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாளையம்

சிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

சோணசைலமாலை

முதலிய பிரபந்தங்கள்.

இவை,

ஷை ஆதீனத்துச் சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

காயாறு

ஞானசுந்தரஐயராலும்

பாளையம்

சோமசுந்தர செட்டியாராலும்

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

பார்த்திப௵ ஆவணிமீ.

௳

க. சோணசைலமாலை.

உ. நால்வர் நான்மணிமாலை.

௩. திருச்செந்திலந்தாதியுலா.

௪. பழமலையந்தாதி.

௫. பிக்ஷாடன நவமணிமாலை.

௬. பெரியநாயகியம்மைவிருத்தம்.

௭. பெரியநாயகியம்மைகலித்துறை.

௮. நன்னெறி.

விலை அணா ௫.

கணபதிதுணை.

சோணசைலமாலை.

காப்பு.

சதுரனெழிற் சோண சயிலற் றுதிப்பன்
மதுரமொழி யன்பர் மனமாங்—குதிரைதிறை
கொண்டவனென் றேத்துங் குரைகழற்கால் யானைதிறை
கொண்டவனை யென்னுளத்தே கொண்டு.

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

அண்ணன்மா புகழ்மூ வரும்புனை யரும்பா வன்றியென் கவியுநின் றனக்காம், பண்ணுலா மிருவ ரிசைகொணின் செவியிற் பாணிமா றெலியுமேற் றிலையோ, விண்ணுலா முடியின் மேருவின் வடபால் வெயிலொரு புடையுற வொருபாற், றண்ணிலா வெறிப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (க)

துவக்கற வறிந்து பிறக்குமா ரூருந் துயர்ந்திடா தடைந்துகாண் மன்று, முவப்புட னிலைத்து மரிக்குமோர் பதியு மொக்குமோ நினைக்குநின் னகரைப், பவக்கடல் கடந்து முத்தியங் கரையிற் படர்பவர் திசைப்பற நோக்கித், தவக்கல நடத்த வுயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (உ)

நீங்கருந் துயர்செய் வளிமுதன் மூன்ற னிலையுளே னவைதுரந் திடுமுன், வாங்கிநின் றனிவீட் டுறைகுவான் விரும்பி வந்தன னின்குறிப் பறியே, னுங்குறை மதியே தாங்கியென் னுலக மறைகுறை யறநிறை மதியுந், தாங்கிய முடியோ டோங்கிய சோண சைலனே கைலைநாயகனே. (௩)

கனிமலை துவர்வாய்க் கோதையர்க் குருகுங் கன்மனக் கொடியனுக் கென்னீ, துனிமலை பிறவி தவிர்த்தனை யெனநிற் சுளிபவ ரிலையெனக் கிரங்காய், பனிமலை கதிர்வந் துறநிலை யாடி பயின்றபீ டிகையென வுதயத், தனிமலை யிருப்ப வளர் ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ச)

சுடரிலை நெடுவேற் கருங்கணார்க் குருகித் துயர்ந்துநின் றலமரு மனநின், னடநவில் சரண பங்கய நினைந்து நைந்து நைந் துருகுநா ளுளதோ, மடலவிழ் மனைமாட் டெகினென வருந்து மதியுறக் கார்த்திகை விளக்குத், தடமுடி யிலங்க வள ர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ரு)

அருங்கவி வாத வூரனே முதலோ ரன்பிலே மென்றது வேண்டி, யிரங்குதல் பொய்ம்மை யன்பிலே னெனயா னியம்ப லே மெய்யெனக் கருளாய், கருங்கட முமிழு மீர்ங்கவுட் பனைக்கைக் கரியுரிக் கஞ்சுகங் கடுப்பத், தரங்கமுண் டெழுகா ர் முகில்பயில் சோண சைலனே கைலைநா யகனே. (சு)

புரத்துறு மவுணக் குழாமும்வண் டிசைகூர் பூங்கணை மதனுமுன் பெறுநின், சிரித்தவெண் ணகையு நுதல்விழி நோக்குஞ் சிறியனே னிருண்மலம் பெறுமோ, கருத்தினுங் கருத வரியநுண் ணியனென் கடனற வுலகெலாங் காண்பான், றரித்ததி தூல வடிவுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.()

ஆர்த்தெழு திரைகள் சுருண்டெறி கடனஞ் சமுதுசெய் பெரும்புகழ்த் தனிமை, தீர்த்திட வுளங்கொண் டவலனேன் றனைநின் றிருவடிக் கன்பனுக் கிலையே, கார்த்திகை விளக்கு மணிமுடி சுமந்து கண்டவ ரகத்திரு ளனைத்துஞ், சாய்த்து

நின் றெழுந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அ)

தொடையுடைத் திரடோ ணமன்புறத் தடலந் தொலைக்குமு னகத்துட ரொலைத்துத், தடையறத் திகழ்பே ரறிவுருவாகத் தமியனேற் கருளுநா ளுளதோ, புடையினிற் கரிக்கோடிளம்பிறை புரையப் பொங்குசோ தியங்கொடி விரித்த, சடையெனப் படர்ந்து கிடந்தொளிர் சோண சைலனே கைலைநா யகனே. (கூ)

கண்புன றுளிப்ப வழற்படு மிழுதிற் கரைந்துகு நெஞ்சினின் றனையே, பெண்பயி லுருவ மொடுநினைந் தெனது பெண்மய லகற்றுநா ளுளதோ, வண்புனல் வேந்த ஞர்கலிக் குடத்து மணிமுகிற் கலயத்தின் முகந்து, தண்புன லாட்ட வாடுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கo)

வேலையந் துகில்சூழ் மலர்தலை யுலகின் மெய்யினைப் பொய்யெனு மவர்க்கே, யேலவந் தருள்வ தன்றிமெய் யினைமெய் யெனுமெனக் கருள்புரிந் திடாயோ, காலநன் குணர்ந்து சினகரம் புகுந்து காணரி தெனுந்தல கனைத்துஞ், சாலநின் றுழியே கண்டிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கக)

மயலினு லழுந்தும் பிறவியா மளற்றை வளர்தரு நின்பெருங் கருணை, வெயினு லுலர்த்தி யெனதுளக் கமலம் விரிக்குமொண் பரிதிநீ யலையோ, பயிலுமா லயமோர் சைலமோர் சைலம் பகைப்புல முருக்குகார் முகமோர், சைலமா தலனு மெனக்கொளுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கஉ)

புலம்புரி துயரங் கழன்றுநின் கழற்கால் புந்தியஞ் சினகரத் திருத்தி, நலம்புரி புனிதர் பேரவை தமியே னணுகுவா

னருளுநா ளுளதோ, வலம்புரி மனிதர் கடலென வொலித்து வளைவுற நடுவண்மந் தரம்போற், றலம்புரி தவத்தி னின்றொளிர் சோண சைலனே கைலைநா யகனே. (கங)

நீரினி லெழுமொக் குளினழி யுடம்பு நிலையென நிலைக்குமா னந்த, வாரிதி படிய வறிந்திடா தழலு மடமையே னுய்யுநா ளுளதோ, வேரியல் பதமுன் றேடுமக் கேழ லின்றுநாடியகிளைத் திடல்போற், சாரலி னேன மருப்புழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கச)

கருத்திடை நினது கருணைமா மேனி கண்டெழுத் தைந்துநா வியம்பச், சிரத்தினி லமைத்த கரத்தொடு நினையான் றினம்வலம் புரியுமா றருளாய், வரத்திரு முடியின் மதிதிரு முடியின் வனைந்துகந் தரத்தினி லிருள்கந், தரத்தினி லிருத்தி விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கரு)

பாரொலா மிகழு மிகழ்ச்சியும் புகழ்ச்சிப் பயனென வுணர்ந்துநா டொறுமா, ரூரஞ ரவையி னிகழ்ந்தசொற் றுதியி னுவக்குநின் பதந்தொழ வருளா, யேருலா மண்டச் சுவர்மதின் மிசைப்பா லிலங்குறு மண்டகோ ளகையாச், சாருமா லயத்தி லிலிங்கமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கசு)

இந்தியங் கரண முடலம்வே ருக்கி யிருண்மலப் படலமுங் கீறிக், கந்தமு மலரு மெனநினை யென்னிற் காண்பறக் காணுநா ளுளதோ, வந்தொரு களிறு முழுவையுங் கொன்ற மலிபகை தவிர்ப்பவெண் ணிறந்த, தந்தியும் புலியும் வளர்த்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கஎ)

முழங்குவண் டினங்கள் விருந்துணு மலங்கன் மொய்குழன் மகளிர்தம் மயலாற், புழுங்குமென் றனைநின் றிருவடி நி

ழலிற் புகவிடுத் தளிக்குநா ளுளதோ, வழங்குவெண் டிரையா றவிர்சடை கரப்ப மணிமுடி நின்றிழிந் திடல்போற், றழங்குவெள் ளருவி யிழிந்தொளிர் சோண சைலனே கைலைநாயகனே. (கஅ)

குன்றுதோ றாடுங் குமரனே யெனவுங் கொடுஞ்சிலை மதனவே ளெனவும், புன்றொழின் மனிதர்ப் புகழ்ந்துபாழ்க் கிறைக்கும் புலமைதீர்த் தெனக்கருள் புரியா, யொன்றொரு தினந்தோட் குட்குழைந் தனமென் றுருதுநா டொறுமக மேரு, தன்றலை தாழ்ப்ப வளர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநாயகனே. (கக)

வெண்டிரு நீறு புனையுமா தவர்க்கு விருந்துசெய் துறும் பெரு மிடியுங், கொண்டநல் விரதத் திளைக்கும்யாக் கையுமிக் கொடியனேற் கருளுநா ளுளதோ, வண்டுழுங் குவளை மலர்த் தடஞ் சுனையின் மற்றைவா னவர்க்குரித் தன்றிச், சண்டியுண் மகிழ்ந்து கொளமலர் சோண சைலனே கைலைநா யகனே. ()

வந்துமா மறலி யெனதுயி ருண்பான் மயிலையுஞ் சிரலினிற் கின்றான், முந்திநீ யெனையா னந்தவா ரிதியின் மூழ்குற விடுத்தருள் புரியாய், நந்துளான் மலையே யென்றுசா திப்பனனைமலர் வேங்கையு மசோகுஞ், சந்துமென் முளைப்பச் செய்துகொள் சோண சைலனே கைலைநா யகனே. (உ௦)

பூமறை யமரர் பொழியமா தவர்கட் புனன்மறு கிடைப் பொடி யடக்கத், தூமொழி மனைநீ தூதுபோம் பயனில் சொற்பதர் புடைத்திளைக் கின்றேன், யாமுணர் மிகுபே ருருவமாய் வரினு மிருவரு முணர்த்திடி னன்றித், தாமுணர் கிலவொன் றெழுந்துயர் சோண சைலனே கைலைநா யகனே(உக)

கழைமொழிக் கொடியோர்க் கேவல்செய் துடலங் கமரு கு மமிழ்தின்மங் குறுமல், விழைவறத் துறந்துன் றிருவடிக் கமலம் விழைகுநர்க் கேவல்செய் திலனே, மழைமதக் களி நல் யானைமத் தகம்பாய் வள்ளுகி ரோடுசெல் லரிமா, தழை சிறைச் சிம்புள் கொண்டெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (உங)

கார்தரு சுருண்மென் குழற்சிறு நுதற்பூங் கணைபுரை மதரரிக் கருங்கட், டார்தரு குவவுக் கொங்கைநுண் மருங்குற் றையலார் மையலென் றொழிவேன், சீர்தரு மணியி னணிந்த ன வெனக்கட் செவியுமொண் கேழலின் மருப்புஞ், சார்தரு முலக விளக்கெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. ()

நந்துகைத் தலத்து நாரணற் கயற்கு நவமணிக் கரகநீ ரிருந்து, மைந்துறக் குறித்து மாட்டியுங் காண்பான் மதித்திடா துனையெதிர்ந் திலரோ, யைந்துகைத் தனிக்கோட் டொருபெருங் களிறு மறுமுகம் படைத்தகே சரியுந், தந்தெமைப் புரக்குங் கருணைகூர் சோண சைலனே கைலைநா யகனே. (உரு)

வினையரும் புகலிக் கிறைமணப் பந்தர் விருந்தினுக் குதவிலேன் முந்திற், றுனையிரந் திடுவான் வந்தனன் பதநீ யுதவியென் றுயரொழித் தருளா, யினியபைந் தமிழின் பொதியமால் வரைபோ லிசைக்குரு காதிம மலையின், றனையயின் றீஞ்சொற் குருகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே()

பெண்ணருங் கலமே யமுதமே யெனப்பெண் பேதையர்ப் புகழ்ந்தவந் திரிவேன், பண்ணுறுந் தொடர்பிற் பித்தவென் றினுநீ பயன்றர லறிந்துநிற் புகழேன், கண்ணுறுங் கவின்கூ

ரவபவங் கரந்துங் கதிர்கணூ ருயிரங் கோடிச், தண்ணிறங் கரவா துயர்ந்தெழுஞ் சோண சைலனே கைலைநா யகனே()

உயங்குநூ லிடைப்பூங் கோதைய ரல்கு லொளிமணிப் பாம்புதீண் டுதலான், மயங்குவேன் றனக்குன் பதமருந் துதவி மயக்கமென் றொழித்தருள் புரிவாய், முயங்குமா புகழ்ப்பூம் புகலியந் தணர்க்கு முத்துவெண் பந்தரீந் தகல்வான், றயங்குமீன் முத்துப் பந்தர்வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (உஅ)

மெய்த்தவ ரடிக்குற் றேவலின் றிறத்தும்,விளங்குமா கமவுணர்ச் சியினும், புத்தலர் சொடுநிற் பரவுபூ சையினும் பொழுதுபோக் கெனக்கருள் புரிவாய், முத்தமு மரவ மணிகளு மெறிந்து முதிர்தினைப் புனத்தெயின் மடவார், தத்தைகள் கடியுஞ் சாரலஞ் சோண சைலனே கைலைநா யகனே. (உகூ)

பாயும்வெண் டிரைப்பே ராழிசூ ழுலகிற்பழமொழி யொழியமெய் யடியா, ராயுமென் மலரோர் மலையள வணிய வமர்ந்தநின் கோலம்யான் மறவேன், றூயவெண் மதியிற் களங்கமென் றுரைப்பச் சூழ்பசுங் கொடிபயி லுருவச், சாயைசென் றுறநின் றிலங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

நடமிடு பசும்பொற் புரவிமேற் கொண்டு நளினமென் மலர்க்கரத் தெறிபூம், படையொடு தூரந்து வந்துமென் விடயப் பகைப்புலி தனையெறிந் திலையே, யடிநடு நிழல்சென் றெழுகட லடைய வகல்பெரும் புறத்துவா ரிதியிற், றடமுடி நிழல்சென் றுறவளர் சோண சைலனே கைலைநா யகனே. (௩க)

யாவுமா முமையுண் ணுமுலை முலைப்பா லீந்துபா டச்செயா யெனினு, மேவுமா துயர்செய் சூலைநோ யெனினும் விடுத்

துநிற் பாடுமா றருளா, யோவுமா னலது தொல்லுருக் கொ
ளின்வே றென்றெடுத் திடுமென நினைந்து, தாவுமா னினமெ
ண் ணிகந்தசூழ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௨)

விருப்பொடு வெறுப்பு மகன்றுபே ரின்ப வெள்ளத்து ளழு
ந்துநின் னடியார், திருப்பத மிறைஞ்சி யவர்க்குவே ளாண்
மை செய்பெருஞ் செல்வமே யருளாய், பொருப்புக டொறு
ம்வீழ் பொங்குவெள் ளருவி போன்றறி விலர்க்கிடை யரு
மற், றரிப்பருங் கருணை பொழிதருஞ் சோண சைலனே கை
லைநா யகனே. (௩௩)

பொங்குறு கவினுங் கற்பும்வாய்ந் திலங்கு புண்ணிய மடந்
தையும் பொருளு, மிங்குநன் குதவி யங்குவான் கதியி னிரு
த்துநிற் புலவரொன் புகழார், துங்கவெங் குறவர் புனத்திடு
பரண்கா றுணித்துநட் டாரமீ மிசைமா, தங்கவெண் மருப்
புப் பரப்புறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௪)

போழ்ந்திடு வடுக்கண் மகளிரா யணைத்துப் புகழ்நந்தி பிர
ம்படிக் கொதுங்கிச், சூழ்ந்திடு மமரர் நெருங்குசந் நிதியிற்
றெண்டனேன் வரவருள் புரியாய், வாழ்ந்திடு மகக்கண் டுரு
குதாய் முலைப்பால் வழிந்தொழு குதலென வடியார், தாழ்ந்
தெழவருவி யொழுகுறுஞ் சோணசைலனே கைலைநா யகனே.

நேர்ந்திடு மொருசெங் கோல்கொடு கொடுங்கோ னிமிர்ந்
திட விலங்கைசென் றடைந்தோன், கூர்ந்தவன் பொடுநின்
றிறைஞ்சுபு வழுத்துங் குரைகழ லிரக்கவஞ் சுவல்யான், சே
ர்ந்திடு மலைமான் பெருமுலை யுவமை சிறுமலை களுக்குத வா
மற், சார்ந்திட விரும்பி வளர்ந்தெழுஞ் சோண சைலனே
கைலைநா யகனே. (௩௬)

தெருமரும் பிறவி தமையகன் றிடாத தேவரைத் தேவரொ ன் றெண்ணி, யருமருந் தனைய நினையடை யாத வறிவிலார் பவப்பிணி யறுமோ, கரிமருங் கணைந்த தௌமுழை வாயிற் கார்வர விரைந்தெழுந் துகள்கே, சரிமறைந் திருந்து நாணு றுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௭)

ஆண்டுகம் பலசென் றிடவிருந் திடினு மன்றியோ ரிமைப் பினி லுடல, மாண்டுகு மெனினு நன்றுநின் கமல மலரடிக்க ன்பரா யிருப்பிற், பூண்டயங் கயில்வேற் குதலையந் தீஞ்சொ ற் புதல்வன்மே லிவர்செய லெனமார்த், தாண்டன்வந் திவ ர விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௩௮)

வினைவிடை யிவரு நினைப்பிற வாமை வேண்டுநர் வேண் டுக மதுரம், பெருகுறு தமிழ்ச்சொன் மலர்நினக் கணியும் பிறவியே வேண்டுவன் றமியே,னிருசுடர் களுமேல் கீழ்வரை பொருந்த விடையுறன் மணிக்குடக் காவைத், தரையிடை யிருத்தி நிற்றனேர் சோண சைலனே கைலைநா யகனே. ()

ஒண்மணிப் பசும்பொற் பூணிள முலையார்க் குளத்திட மெலாமளித் தடியார், கண்மணிக் கமையா விருந்துசெய் தருணி கணமிருப் பதற்கிடம் புரியேன், வெண்மணிக் கழை முன் கரியநெற் றிதழி வேங்கைபொன் சொரியமா சுணங்க, டண்மணிப் பைக ளவிழ்த்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௪௦)

அருங்கலம் புனையு மகளிரோ ரிருவ ரணிமணம் புணர்த் திவா ரணமுந், துரங்கமும் புலவர்க் குதவுநின் றனையே துதி த்திடா துழன்றனன் வறிதே, மருங்குநின் றழகா லத்திதா

ங் குவபோன் மமாமலர்ப் பெருஞ்சுனை யொடுபூந், தரங்கநி ன் றிலங்க விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

ஏனுறு மமரர் கடைகட லளித்த விருளொடு மணிமிடற் றடியே, ஞனவ விருளுங் கலந்திடிற் கருமை யழகுமிக் கில ங்குறுங் கண்டாய், மாணெழில் வராக முழும்புழை யனந்த ன் மணியொளிப் பிழம்பெழல் சிறுதீத், தாணுவின் முருக னெழுதனேர் சோண சைலனே கைலைநா யகனே. (௪உ)

மின்னவிர் சடிலக் கற்றையு மருள்கூர் விழிகளுந் திருமுக த் தழகுங், கன்னவி றிரடோ ளுன்குமீ ரடியுங் கண்டுகண் க ளிக்குநா ளுளதோ, வின்னிசை யொலிசேட் டெருகுதல் கடுப்ப விழிதர வருவிகிம் புருடர், தன்னிக ரிசைகூர் சாரலஞ் சோ ண சைலனே கைலைநா யகனே. (௪௩)

அள்ளிவெண் டிருநீ றுடன்முழு தணியு மடியவர்ப் பெறி னெழுந் திளங்கன், றுள்ளிநின் றருகு மன்னையின் மனநெக் குருகுபு சென்றிறைஞ் சிலனே, யெள்ளிவெம் புலியெண் கரி திருமேனி யெறுத றகாதென்ன வெருண்டு, தள்ளிவந் தருவி யிழிதனேர் சோண சைலனே கைலைநா யகனே. (௪௪)

இழையெனத் தளர்சிற் றிடையுறு முலையா ளெனக்குவ ண் புகலிவேந் தயின்ற, கழுமணிப் பசும்பொற் குலவுபாற் கி ண்ணங் கழுவுநீர் வார்ப்பதற் குரையாய், முழையிடைக் க திர்மா மணிவிளக் கேற்றி முசுக்கலை பிணவொடு மசோகத், தழையிடைத் தழுவி யுறங்குறுஞ் சோண சைலனே கைலை நா யகனே. (௪௫)

வினைவழி யுடலிற் கமைந்துறு முணவே வேண்டினர் வினை யொடு புணரா,நனைமலர் புனைநின் றிருவடி யடைவா னுடொ

றும் வேண்டில ருலகர், கனையிருள் கரந்த விடமறிந் துணைப் போங் காட்சியிற் புனக்கிளித் தொகுதி, தனையெறி மணிக ண் முழைபுகுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சசு)

மாங்குயின் மிழற்று நாவலூர்ப் புலவன் மறுப்பவு முடிமி சை யிருத்தும், பூங்கழ லடியேன் றலைமிசை யிருத்தப் புக லினு மென்கொனீ யிரங்கா, யோங்குறு மண்ட கோளகை யளவு முயர்ந்துமோர் மழவிடை முதுகிற், ருங்குபு நடக்க விருந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சஎ)

ஈரமு மருளு மொழுக்கமுஞ் சால்பு மின்சொலு மிந்தியப் பகைவெல், வீரமு மருளி யெனதுவெம் பிறவி விலக்கியாட் கொள்ளுநா ளுளதோ, வாரமு மகிலுந் தடிந்துசெம் மணிக ளரித்தெறிந் தெறும்வலிக் குறவர், சாரலி னிறுங்கு விதைக் குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சஅ)

தொகைமிகு மமரர் முனிவரர் பரவித் தொழுதகை யொடு விரை கமழ்பூம், புகைமிகு மணிமண் டபத்திடை நெருங்கப் புகுதநீ யணிதல்கண் டுவந்தேன், குகைமிகு வாயிற் சோதி மா மரஞ்சேர் குளிர்மதி விழுங்கவாய் வைத்த, தகைமிகு மூரற் றிரளைநேர் சோண சைலனே கைலைநா யகனே. (சகூ)

சினம்படு முளங்கொன் றவரவை யெனையுஞ் சேர்ப்பது தகுமுனக் கிசைவண், டினம்படு மலரி னகவித ழொடுபுல் விதழுமொன் றுதலுல குடைத்தே, மனம்படு மடிமை யுளன் சிலை யெறிக்கு மனங்குழைந் தமையவள் களபத், தனம்பட வடிவங் குழைந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.

வாம்பரி கரிதேர் சிவிகைபொற் குவியன் மணிப்பணி பெ ரும்புவி யாட்சி, யாம்பரி சலவென் றன்பத மருவி னன்றி

யென் கவிகளென் கவிகள், காம்பரி முரண்மும் மதகரி வளை த்த கைவிட மோதலாற் கதிர்த்தேர்த், தாம்பரி துணுக்கென் றீர்த்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ருக)

துன்னுறு துயரப் பிறவிவெங் கொடுநோய் தொலைப்பினுந் தொலைத்திடா துறினு, நின்னடி மலரை யன்றியான் மறந்து நினைப்பனோ விறக்கும்வா னவரை, மன்னளி பருக வுடையி ருன் மதுவும் வாரண மதமும்வெள் ளருவி, தன்னொடு மிக லி யொழுகுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ருஉ)

நீரினு லழலால் வருங்கொடும் பிணியா னிருதரா லலகை யால் விலங்காற், சோரரால் வருந்து மவரலர் நினது தூயநா மம்புகன் றிடுவார், சீருலா மணியா லரிபர வுதலாற் றிசையு ற நீள்கையா லெழின்மை, சார்தலா லுமையாள் விழிநிகர் சோண சைலனே கைலைநா யகனே. (ருங)

முகவிளக் கென்ன மணிக்குழை மிளிர முலைமுகட் டணி பெற மலராள், பகல்விளக் கென்ன வொளிகெட வரும்பொ ற் பாவையர்க் கிரங்கிடா தருளா, யகவிளக் கென்ன வகநிறி நெய்தீ யாக்குவோ ரின்றியே யெழுந்த, சகவிளக் கென்ன விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (ருச)

நீலியோ டுனைநா டொறுமருச் சித்து நின்றொழில் புரிந் திட வுடற்குக், கூலியோ தனமென் றளிப்பவர்க் கன்றிக் கூ ற்றினைக் கடக்குமா றெளிதோ, மாலியோ சனையின் வணங்கு றுங் கைலை மலைநிவே தித்திடக் குவித்த, சாலியோ தனமெ ன் றிடத்திகழ் சோண சைலனே கைலைநா யகனே. (ருரு)

தோற்றிடும் பிறவி யெனுங்கடல் வீழ்ந்து துயர்ப்பிணி யெ னுமலை யலைப்பக், கூற்றெனு முதலை விழுங்குமுன் னினது

குழைகழற் களைபுக விடுப்பா, யேற்றிடும் விளக்கின் வேறுப
ட் டகத்தி னிருளெலாந் தன்பெயரொருகாற்,சாற்றினு மொ
ழிக்கும் விளக்கெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே.()

கந்தர மிருந்து மடகுநீ ரயின்றுங் கரநிலத் தமைத்திரு
பதமு, மந்தர நிமிர்த்து நின்னிலை யறியா ரரும்பவ மொழி
யுமோ வுரையா, யிந்திரன் வனத்து மல்லிகை மலரி னிண்
டைசாத் தியதென நிறைந்த, சந்திரன் முடிமேல் வந்துறுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (ருஎ)

கூம்புறு கரமு மலர்ந்திடு முகமுங் கொண்டுநின் றனைவல
ம் புரிவோர், மேம்படு சரண மலர்ப்பொடி மேனி மேற்படி
ற் பவம்பொடி படுமே, பூம்பொழிற் புகலிக் கிறைவனு னில
ஞ்சேர் புண்ணியத் தலங்களி னடைந்து, தாம்புனை பதிகந்
தொறும்புகழ் சோண சைலனே கைலைநா யகனே. (ருஅ)

கானமே மருவும் விலங்கினுங் கடையேன் கற்பவை கற்றி
லேன் விடய, ஞானமே யுடையே னறிஞரைக் காணி னுணி
லே னும்யுநா ளுளதோ, வானமே யளவு நெடுங்கிரி மலய
வாதமோ துறுபவர் கட்குத், தானமே யுதவ வளர்ந்திடுஞ்
சோண சைலனே கைலைநா யகனே. (ருகூ)

விழைவொடு மறஞ்செய் துய்கவென் றுரைக்கும் விதியினை
க் கவளமுண் கெனவுங், கழைசுளி நெடுநல் யானையின் முனி
ந்து கடக்குமென் பவமொழிந் திடுமோ, மழைமுகில் வந்து
தவழ்ந்துவிண் படரு மலிதரு புகையென வெழுந்து, தழலு
ரு வுண்மை விளக்குறுஞ் சோண சைலனே கைலைநா யக
னே. (கூ0)

வாத்திய முழங்கச் சிவிகையுங் கரியு மாறியூர்ந் துலவிவா ழ்ந் தவரு,மேத்திய மொழியோ டிரக்கையா னின்குற் றேவலே வாழ்வென வறிந்தேன், பாத்திய மணிகள் கொண்டிழைத் திலங்கும் பாரவா சிகைமணி மேகஞ், சாத்திய நெனவில் வளிந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௧)

குலத்தினிற் பிறந்து மலகினுல் கற்றுங் குணத்தினிற் சிறந்துநல் விரத, பலத்தினிற் கவர்ந்து நின்னடி யவர்க்குப் பரிவிலார் கதியிலா தவரோ, கலத்தினிற் பொலிந்த விமயமீன் றெடுத்த கன்னிநுண் ணிடைமிசைக் களபா, சலத்தினிற் குறுதி கொடுத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௨)

மூடக விருளோ டுன்னையின் றுண்ணு முலையர சாலகற் றுவலென், சூடரு மொழியா லடைந்தனன் றமியேன் சூள்வழு வாதுநீ யருளாய், வீடுறுங் கவரி கீழ்விழ வுறல்கார் மிசையனம் பன்றிதா மாறித், தாடலை துருவ வடைதனோர் சோண சைலனே கைலைநா யகனே. (௧௩)

ஐயநுண் மருங்குன் மாதர்மேல் வைத்த வாதர வுன்பதாம் புயத்து, மெய்யுறு நறுமென் கலவையின் விருப்பு வெண்டிரு நீற்றினும் வருமோ, கொய்யுறு தினைவீழ்ந் திடுபசுங் கிள்ளைக் குழுக்கடோ ரணமென வெழுந்து, தையலர் கடியப் பறந்துறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧௪)

களவினு டமைத்த விழுதென வுருகக் கற்றதன் றுள்ளமென் கரங்கள், புனலுமாய் மலருங் கொடுகினைப் பூசை புரிந்தில வென்செய்கோ வுணையாய், சினவுநோய் மருந்து வேறுகொண் டிருக்குஞ் சிலம்புக ணுணவுட் கொள்வோர், சனன

நோய் மருந்தா யெழுந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுரு)

ஊழுறு மணிப்பொற் கோயில்போய் வாவ லுறக்கொடுத் தாங்குநிற் புணர்த்தாப், பாழுறு மனம்பே ரவாக்குடி யிருப் பப் பண்ணுமென் கண்ணுநண் ணுவையோ, வீழுறு மெயினர் கிழங்ககழ் குழியும் வேழம்வீழ் குழிகளு நிரம்பத், தாழுறு மருவி பொன்சொரி சோண சைலனே கைலைநா யகனே. ()

பைம்மறிப் படுத்தி யுள்ளறி யாமற் பணிநறுந் துகில்புனை மடவார், மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும் வினையினே னுய்யுநா ளுளதோ, செம்மலர்ப் பதம்பா தலங்கடந் திடவான் திருமுடி கடப்பினு மூவர், தம்மியற் செப்பி னடங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுஎ)

செக்குறு திலத்தின் வருந்துபு பிறக்குஞ் செல்லலு நாடியின் பிணிப்பு, நெக்குற வறிவு கலங்குசாக் காடு நினைதொறு முளம்பதைக் கின்றேன், மொய்க்குறு முகில்கண் டரிகரி யென்னுமுழக்கமு மரகர வென்னுந், தக்கவர் முழக்கு மெதிரொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுஅ)

மரணமும் பிறவித் துயருநீங் குறநூல் வாய்ச்சிலம் பிக்கருள் புரிந்த, கருணியென் றுனைவந் தடைந்தன னினிநின் கருத்தினை யின்னதென் றறியேன், முரணிபம் பருஉக்கை தலைமிசை யெடுப்ப முழைக்கரும் பாம்பென மணித்தேர்த், தரணியுள் வெருவி யகன்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (சுகூ)

அங்கையின் வைத்த கூர்ங்கனன் மழுவா லருவினைக் காட
ற வெறிந்து, மங்கலில் பத்தி வித்திட வடியேன் மனத்தினை
த் திருத்துநா ளுளதோ, பொங்குறு செக்கர் கருவிசும் புற
வேள் புரத்தெரி கதுவிட நோக்கித், தங்குத லொப்ப நின்றி
டுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எ0)

சுருக்குமைம் புலனும் விரிக்குமூ தறிவுந் துன்னுநல் வினமு
நீத் தகன்றே, யிருக்கும்வெங் கயவ ரினமுமென் றருளி யெ
ன்னைநின் னடிமைசெய் தருள்வாய், முருக்குமங் கதமா ம
ணியுமிழ்ந் தகன்ற முழைதழற் றெனவுளம் வெருவித், தருக்
குமொண் புலிசென் றுறமருள் சோண சைலனே கைலைநா
யகனே. (எக)

அந்தரி குமரி யஞ்சலி கௌரி யம்பிகை மனோன்மனி மத
ங்கி, சுந்தரி யுமையுண் ணாமுலை யெனநின் றுணைவியை வாழ்
த்துமா றருளாய், வந்தரி சுருதி மருங்கினிற் பாட வயங்கு
தும் புருவுநா ரதனுந், தந்திரி யிசையாழ் பாடுறுஞ் சோண
சைலனே கைலைநா யகனே. (எஉ)

நீக்குறு மயனு நிலைத்தபே ரறிவு நின்றிரு வடிமலர்க் கன்பு,
காக்குறு மனமு முடையமெய்த் தொண்டர் கணத்தினு ளெ
னைவிடுத் தருளாய், தேக்குறு மிருலிற் கன்னல்காட் டுவபோ
ற் றென்றல்வந் தசைதொறு மெல்லத், தாக்குறு காந்த டுடு
ப்பலர் சோண சைலனே கைலைநா யகனே. (எங)

பவமிலே மினியா மென்றிறு மாந்து பயமற விருந்திடப்
பத்தி, நவமிலே மடியே மென்செய்வா னிருந்து நா்ளினை வ
றிதொழிக் கின்றே, மவமிலே மிமையா விழியினுற் காண்கை

யால்வலங் கொளவடி நிலந்தோய், தவமிலே மெனவான் சு
ரர்தொழுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எச)

கண்கணிற் பரிந்து கண்டுவப் பனவே கைகணிற் றொழுப
வே செவிகள், பண்களிற் புகழும் புகழ்ச்சிகேட் பனவே ப
தநினை வலம்புரி வனவே, யெண்குபுற் றிடப்ப வெழுமணி
கரவா விருந்துசென் றிருள்கவர் வனபோற், றண்கதிர்க் கற்
றை கான்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எரு)

நிணந்திகழ் வடிவேற் காளையே யென்று நேரிழை யவர்வி
ழைந் திடுவோர், குணந்திரி தளிரின் மடியவுங் கண்டு கொடி
யனேன் வாழ்வுவந் திருந்தேன், மணந்திமிர் மகளிர் சிலம்
பொடு மைந்தர் வார்கழ றுவக்கிட வலம்போய்த், தணந்திடு
மமயத் தறிந்துநாண் சோண சைலனே கைலைநா யகனே.()

மாந்தளிர் கவற்று மணிச்சிலம் படிகள் வடுவகிர் பொருவு
ம்வா ணெடுங்கண், காந்தளி னிமைக்கு மங்கையென் றவலக்
கன்னியர்ப் புகழ்வினை யறுமோ, பூந்திரை சுருட்டுங் கடல்
கடை குநரொண் பொறியர வின்றிமா தவர்க்குச், சாந்துய
ரகற்று மருந்தருள் சோண சைலனே கைலைநா யகனே. ()

சிந்தனை கலங்கி யிணைவிழி யிருண்டு செவிகளுஞ் செவிடு
பட் டைம்மே, லுந்திட வுயிர்போம் பொழுதுநின் வடிவ மு
ளங்கொளும் பரிசெனக் கருளாய், மந்தர சைலந் தருவிடங்
களத்து வைத்திடத் தினிலிம சைலந், தந்திடு மமுதை வைத்
திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எஅ)

நயங்கொளு மலரா னின்றிரு வடியை நாடொறு முயிரு
ணுங் கூற்றம், பயங்கொள வகலா தருச்சனை புரிந்து பரகதி

யடையுநா ளுளதோ, வயங்கொளும் விடயப் பெரும்பகை கடந்து வானநா டாண்டிட மதிப்போர், சயங்கொளவடை தற் கரணமாஞ் சோண சைலனே கைலைநா யகனே. (எக)

பிரம்பொரு கரங்கொண் டடிப்பநந் தீசர் பெருங்கல்வீழ் பாசியி னிமையோர், சிரம்பொர வொதுங்கி நெருங்குமின் னவையிற் றீயனே னணையுநா ளுளதோ, வரம்பொர வகன்ற விலங்கிலை நெடுவே லமர்த்தகட் கிரிமக ளிணைக்குஞ், சரம்பொர விருந்து விளங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அ0)

காமனை முனிந்த முனிவரர் புகுமெய்க் கதியிடைப் புகவிடுத் திடினும், பாமர னிவனென் றிருளினுய்ப் பினுநின் பதமல ரன்றிவே றுளதோ, வாமனை பொருந்து முலகுள குவட்டு மலைகள்போ லாதுணு முலையா, டாமனை பொருந்து மானுள்வாழ் சோண சைலனே கைலைநா யகனே. (அக)

தொடுக்குமா கமங்க ளெலாஞ்சொலைந் தெழுத்துந் துணிந்தநெஞ் சிருக்கையாற் பகையைப், படைக்கைதா னிருந்து மஞ்சுறு மவர்போற் பகட்டுமா மறலியை வெருவேன், மடக்குவார் கலாப மயிறுயி லெழுந்து மருவலர் வேங்கைமீ தகவத், தடக்கைவா ரணங்கள் பிளிறிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அஉ)

நிந்தியா துடல முழுதுநீ றணிய நேசியா தமலவைந் தெழுத்துஞ், சிந்தியா துழலு மெனைக்கொடுங் கூற்றென் செய்யுமோ வறிந்திலேன் றமியேன், வந்தியா வரவ மன்றிடைக் கண்ட மலர்சிலம் படியைமண் ணுணிபோய்ச், சந்தியா தயர வொளித்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அங)

மங்கையர் பாரக் கொங்கையங் குவட்டு மதர்விழிக் கடலினு மளகக், கங்குலி னூடுஞ் சென்றவென் மனத்தைக் கதியிடை நடத்துமா றெளிதோ, செங்கதிர் காலை மாலையுந் தங்கச் சிலம்புள வெனக்கடும் பகலிற், றங்குற நீடி நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அச)

கண்டிகைக் கலனே கலனென விழைந்து காயமே லணிந்துவெண் ணீற்றுப், புண்டரக் குறிசேர் நுதலொடு நினையான் பூசனை புரியுமா றருளாய், முண்டகச் செழும்பூ வெனவிளக் கெரியு முடிமிசை முத்துமேற் கட்டித், தண்டிரைக் கங்கை யாறுசேர் சோண சைலனே கைலைநா யகனே. (அரு)

நாவினைந் தெழுத்து மந்திர மலாத நவிற்றுவோர் தமையுநீ யிருப்பப், பாவினங் கொடுபுன் மனிதரைப் புகழும் பாமரர் தமையுமென் றொழிவேன், கோவினம் புரப்பக் குன்றமன் றெடுத்த குன்றமம் பாடகக் குன்றந், தாவினஞ் சிலையென் றெடுத்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அசு)

திங்களுங் கதிரு மிலங்கிய மானுந் திகழ்பெரும் பூதமோரைந்துங், கங்குலும் பகலுங் கடந்தநின் வடிவங் கண்டுகண் களிக்குநா ளுளதோ, பொங்குகுங் குலியக் கலயவா ரழலிற் புகையெனச் சரோருக வல்லி, தங்குவண் டெழுபூம் பொய்கைசூழ் சோண சைலனே கைலைநா யகனே. (அஎ)

பொறியெனப் புலன்க ளெனக்கர ணங்கள் பூதங்க ளெனவிலா தடங்க, வறிவெனத் தமியேற் கொருமொழி யுதவி யருவினைக் குறும்பற வெறியாய், செறிமுலைக் கரியுஞ் சிற்றிடை யரியுஞ் சேரமா தனைதினங் கட்டுர், தறியெனக் கவின்பெற் றிலங்குறுஞ் சோண சைலனே கைலைநா யகனே.()

பொன்னிடத் தடைந்த மணியென வடைந்து புண்ணியர்க் கருளுநின் பதங்க, ளென்னிடத் திரும்பி னடைந்தசெம் மணிபோ லெய்திய தம்மவோ வியப்பே, மன்னிடக் கட்லு ளடங்கும்வெற் பன்றி மலைதரு மருட்பெருங் கடலைத், தன்னிடத் தடக்கு மலையெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (அக)

நீங்கிய நேயத் தவர்க்கறி வரிய நெடியவ னெஞ்சகன் றிடாத,தேங்கிய சோதி மன்றுளா டுவவென் சிந்தையு ணடப்பநின் பதங்க, ளோங்கிய மூங்கிற் றலைமிசை மலர்வீழ்ந் தூழமளி புரியிருன் மருவித், தாங்கிய வால வட்டநேர் சோண சைலனே கைலைநா யகனே. (கo)

எழுபசும் புல்லும் புனலுமெவ் விடத்து மிருந்திட நினைத் தவவ் விடத்தே, விழைவொடு வந்து தோன்றுநீ யிருப்ப வீணின்மா னுடர்பிறந் தழல்வார், மொழிதரு கருணை மலையெனும் பெயரன் மொழியொரீஇ வேற்றுமைத் தொகையைத், தழுவுற நின்று வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கக)

வேணவா வகன்று நின்றிரு வடியின் மெய்ம்மையன் படைந்துபொய்ப் பிறவி, நாணுவா ரினங்கண் டுறும்படி தூய ஞானநாட் டம்பெற வருளாய்,சேணுலா மதியந் தவழ்பெருங் குடுமிச் சிலம்புகள் சிறுதரும் பாகத்,தாணுவா யெழுந்து வளர்ந்திடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கஉ)

நின்னையே நோக்கி விடாதகட் புலனு நின்னையே நினைக்கு நெஞ் சகமு, நின்னையே துதிக்கு நாவுமென் றருளி நின்றிரு வடியின்வைத் தருள்வாய், தன்னையே தினர்க்குச் சகமெ

லாங் காட்டுந் தரணியோ டிகலிமே வினர்க்குத், தன்னையே காட்டு மலையெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. ()

மின்வணங் கவருஞ் செஞ்சடா டவியும் விளங்கொளி மார்பும்வா னுலக, மன்வணங் குறுநின் பதாம்புய மலரு மனங்குடி யிருக்குநா ளுளதோ, பொன்வணம் புரியுங் காகமொன் றினைப்பொற் பொருப்பென வடைபொரு ளனைததுந், தன்வணம் புரியும் பொருப்பெனுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கச)

குருமணி மகுடம் புனைந்துல காளுங் கொற்றவ ராதலி னென்கட், கருமணி யெனுநின் றொண்டர்குற் றேவல் கருதியாட் பட்டிட லினிதே, பெருமணி விசும்பி னுச்சியி னெழுந்த பிள்ளையங் கதிரென வரவந், தருமணி யொளிவெண் மதியுறுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கரு)

சிம்புளாய் மடங்க லெறுழ்வலி கவர்ந்த திறலுமுப் புரஞ்சுடு விறலு, மம்புயா தனத்தன் முடிகளைந் திட்ட வடலுமேத் தினர்க்கிட ருளதோ, வும்பர்மா மதியி லங்கையி லிருந்த வுழைகுதித் திருப்பவா ரழல்வான், றம்பமா யெழுந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கசா)

அஞ்சலென் றவலக் கொடியனேன் றனைநின் னடியரிற் கூட்டுக வுலகி, னஞ்சமுண் டிருண்ட கண்டமென் றுனதுநற்கள மிகழ்பவ ருளரோ, வஞ்சமைங் கரன்கொண் டிளவலோ டிகலி வலங்கொள்வா தின்னும்வந் துறினுந், தஞ்சமென் றிடர்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே.()

அணிந்திடு கலனுஞ் சாந்துமொண் டுகிலு மரிவையர் போகமும் பெறுவான், றுணிந்திடு மனமென் றுனைப்பொரு ளா

கத் துணியுமோ வறிந்திலேன் றமியேன், பணிந்திடு மயன் மால் பெருமைக ளனைத்தும் பறவைகொண் டெழுதலாய் முடிந்து, தணிந்திட நிமிர்ந்து நின்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (கஅ)

பூவுறு தடமு மதியுறு விசும்பும் பூணுறு முறுப்புநின் றுலகாள், கோவுறு நகரு மென்னவென் மனநின் குறைகழன் மருவுநா ளுளதோ, வோவுறு மனைசெய் பவர்கொள மரந்தாங் கோங்கல்க ணுணவுன் னினர்க்குத், தாவுறு முயர்வீ டளித்தருள் சோண சைலனே கைலைநா யகனே. (கக)

சீரணி புகழுங் கல்வியுஞ் சிறந்த செல்வமு மில்லில்வாழ் பவர்க்குப், பேரணி கலமென் புதல்வருங் கதியும் பெறத்துதிப் பவர்க்கருள் பவனீ, நேரணி கதியை மறந்தவர் கண்டு நினைந்தற மிக்கபே ரருளாற், றாரணி முழுதுந் தோன்றிடுஞ் சோண சைலனே கைலைநா யகனே. (௧00)

சிறப்புப்பாயிரம்.

ஏறுருஞ் சோண சயிலனுக் கெஞ்ஞான்றும்
பூறா மாலை புனைந்தணிந்தான்—மாறாப்
பவப்புணரி நீந்தியிடப் பாரதிநூல் செய்த
சிவப்பிரகா சையன்றன் றேர்ந்து.

சோணசைலமாலை

முற்றிற்று.

கணபதி துணை.

சைவசமயாசாரியர்களாகிய

நால்வர் நான்மணிமாலை.

காப்பு.

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

வெண்பா.

பூவான் மலிமணிநீர்ப் பொய்கைக் கரையினியற்
பாவான் மொழிஞான்ப் பாலுண்டு—நாவான்
மறித்தெஞ் செவியமுதாய் வார்த்தபிரான் றண்டை
வெறித்தண் கமலமே வீடு. (௧)

கலித்துறை.

வீட்டிற்கு வாயி லெனுந்தொடை சாத்துசொல் வேந்தபொது
வாட்டிற்கு வல்ல னொருவர்க்கு ஞான வமுதுதவி
நாட்டிற் கிலாத குடர்நோய் நினக்குமுன் னல்கினுமென்
பாட்டிற்கு நீயு மவனுமொப் பீரொப் படியினுமே. (௨)

விருத்தம்.

படியிலா நின்பாட்டி லாரூர னனிவிருப்பன் பரம னென்ப, தடியனே னறிந்தனன்வான் றெழுமீச னினைத்தடுத்தாட் கொண்டு மன்றித், தொடியுலா மென்கைமட மாதர்பா னினக்கரகத் தூது சென்று, மிடியிலா மனைகடொறு மிரந்திட்டு முழன்றமையால் விளங்கு மாறே. (௩)

அகவல்.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரண னுரையெனு மாரண மொழியோ

வாதிசீர் பரவும் வாதவூ ரண்ணன்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனை
யாதோ சிறந்த தென்குவீ ராயின்
வேத மோதின் விழிநீர் பெருக்கி
நெஞ்சநெக் குருகி நிற்பவர்க் காண்கிலேந்
திருவா சகமிங் கொருகா லோதிற்
கருங்கன் மனமுங் கரைந்துகக் கண்க
டொடுமணற் கேணியிற் சுரந்துநீர் பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர்விதிர்ப் பெய்தி
யன்ப ராகுந ரன்றி (௪)
மன்பதை யுலகின் மற்றைய ரிலரே.

வெண்பா.

இலைபடர்ந்த பொய்கை யிடத்தழுதல் கண்டு
முலைசுரந்த வன்னையோ முன்னின்—னிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
விங்குயர்ந்தா ளார்சொல் லெனக்கு. (௫)

கலித்துறை.

எனக்கன்பு நின்பொருட் டெய்தாத தென்கொல்வெள் ளேறுடையான், றனக்கன்பு செய்திருத் தாண்டக வேந்தவி த் தாரணியி, னினக்கன்பு செய்கின்ற வப்பூதி யைச்சிவ நே சமுறு, மினர்க்சன்பு செய்நம்பி யாரூர னேத்து மியல்பறிந் தே. (௬)

விருத்தம்.

அறிந்து செல்வ முடையானு மளகைப் பதியாற் றேழமை கொண், டுறழ்ந்த கல்வி யுடையானு மொருவன் வேண்டு மெனவிருந்து, துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா

நினைத்தோ ழமைகொண்டான், சிறந்த வறிவு வடிவமாய்த்
திகழு நுதற்கட் பெருமானே. (எ)

அகவல்.

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ள
மூழ்கிய புனிதன் மொழிந்தவா சகமே
வாசக மதற்கு வாச்சியந்
தூசக லல்குல்வேய்த் தோளிடத் தவனே. (அ)

வெண்பா.

இடுகாட்டுண் மாத ரொலும்பிற் புரண்மால்
சுடுகாட்டு ளாடுவாற் சுட்டி—னொடுகாட்டுஞ்
சம்பந்தா வென்புகின்பாற் றந்தாக்கிக் கொண்டிலனென்
கும்பந்தா மென்னுமுலைக் கொம்பு. (கூ)

கலித்துறை.

கொள்ளைக் கதிர்முத்தின் பந்தருஞ் சின்னமுங் கொள்ளு
பிள்ளைக் கதுதகு நாவர சாய பெருந்தகையோய் [மொரு
கள்ளைக் குவளை யுமிழ்வீ ழியிற்படிக் காசொன்றுநீ
வள்ளைக் குழையுமை பங்காளர் கையிலென் வாங்கினையே.

விருத்தம்.

வாங்குசிலை புரையுமுட லெனுங்குளத்தின் மூல
மலமெனுமோர் வெங்கரவின் பகுவாயி னின்றுந்
தீங்கிலுயி ரெனும்பனவக் குலமகனை யாதி
திரோதாயி யென்னுமொரு வெந்திறற்கூற் றுவனு
லோங்குறுநா தாந்தமெனப் பெயரியவக் கரையி
லுமிழ்வித்துச் சிவமெனுமோர் தந்தையொடுங் கூட்டாய்
கோங்சமுகை கவற்றுமிள முலைப்பரவை மகிழக்
குண்டையூர் நென்மலைமுற் கொண்டவருட் கடலே. (கக)

அகவல்.

கடனிற வண்ணன் கண்ணொன் றிடந்து
மறைச்சிலம் பரற்று மலரடிக் கணியப்
பரிதி கொடுத்த சுருதிநா யகற்கு
முடிவிளக் கெரித்துங் கடிமலர்க் கோதைச்
சுரிகுழற் கருங்கட் டுணைவியை யளித்து
மருமக ணறும்பூங் கருமயி ருதவியு
நென்முளை வாரி யின்னமு தருத்தியுங்
கோவண நேர்தனை நிறுத்துக் கொடுத்து
மகப்படு மணிமீ னரற்கென விடுத்தும்
பூட்டி யரிவா ளூட்டி யரிந்துந்
தலையுடை யொலிக்குஞ் சிலையிடை மோதியு
மொய்ம்மலர்க் கோதை கைம்மலர் துணித்துந்
தந்தையைத் தடிந்து மைந்தனைக் கொன்றுங்
குற்றஞ் செய்த சுற்றங் களைந்தும்
பூக்கொளு மாதர் மூக்கினை யரிந்து
மிளமுலை மாதர் வளமை துறந்தும்
பண்டைநா ளொருசிலர் தொண்ட ராயினர்
செங்கண்மா றடக்கையிற் சங்க நாண
முட்டாட் டாமரை முருச்கவிழ் மலர்மேல்
வலம்புரி கிடக்கும் வாதவூ ரன்ப
பாடும் பணிநீ கூடும் பொருட்டு
மதுரைமா நகரிற் குதிரை மாறியும்
விண்புகழ் முடிமிசை மண்பொறை சுமந்து
நீற்றெழின் மேனியின் மாற்றடி பட்டு

நின்னைத் தொண்ட னென்னக் கொண்டன
னிருக்கு மடுக்க லரக்க னெடுப்ப
முலைபொர வரைபொரு மொய்ம்பின்
மலைமக டழுவ மனமகிழ் வோனே. (கஉ)

வெண்பா.

மகிழ்ச்சி மிகவுண்டு போலுமெதிர் வந்து
புகழ்ச்சியொடு நீபாடும் போது—நெகிழ்ச்சிமலர்ச்
சந்தையினும் வண்டிரையுந் தண்புகலிச் சம்பந்தா
தந்தையினும் பால்கொடுத்த தாய்க்கு. (கங)

கலித்துறை.

தாயிலி யாகுஞ் சிவபெரு மான்றனைத் தானெனுமோர்
கோயிலி னூறி வாகிய நாமமுன் கொண்டிருந்த
வாயிலி னுணவ் மாகுங் கபாடமு மன்றிறந்து
நோயிலி யாகிய சொல்லிறை காட்டுவ னேக்குதற்கே.(கச)

விருத்தம்.

நோக்குறு நுதலோ னின்னிடை விருப்பா னூற்பக வன்ன நுண் மருங்குல், வார்க்குவி முலைமென் மகளிர்தம் புலவி மாற்றுவான் சென்றன னென்றுற், கோக்கலிக் காமன் வயிற்றிடைக் குத்திக் கொண்டதே துக்குநீ புகலாய், காக்கரு முதலை விழுங்கிய மதலை கான்றிடத் தோன்றுநா வலனே. (கரு)

அகவல்.

வலமழு வுயரிய நல்மலி கங்கை
நதிதலை சேர்ந்த நற்கரு ணைக்கடன்
முகந்துல குவப்ப வுசந்தமா ணிக்க
வாசக னெனுமொரு மாமழை பொழிந்த

திருவா சகமெனும் பெருநீ ரொழுகி
யோதுவார் மனமெனு மொண்குளம் புகுந்து
நாவெனு மதகி னடந்து கேட்போர்
செவியெனு மடையிற் செவ்விதிற் செல்லா
வுளமெனு நிலம்புக வூன்றிய வன்பாம்
வித்திற் சிவமெனு மென்முளை தோன்றி
வளர்ந்து கருணை மலர்ந்து
விளங்குறு முத்தி மெய்ப்பயன் றருமே. (கசு)

வெண்பா.

பயனுகு நல்லாண் பனைக்குவிடத் திற்கு
மயிலாகு நோய்க்கு மருந்தா—முயிராகுஞ்
சிந்துமெலும் பிற்குச் சிரபுரத்து நாவலன்சம்
பந்த னியம்புதிருப் பாட்டு. (கஎ)

கலித்துறை.

பாட்டான் மறைபுக ழும்பிறை சூடியைப் பாடிமகி
ழூட்டா மகிழ்சொல் லிறைவனைப் பாடி யுவப்புறுக்க
வேட்டான் மலிபெருங் கல்லவன் போல மிதப்பனெனப்
பூட்டா மறிதிரை வார்கடற் கேவிழப் போதுவனே.' (கஅ)

விருத்தம்.

போத முண்ட பிள்ளை யென்பு பொருகண் மாது செய்த
தோ, காதல் கொண்டு சொல்லின் மன்னர் கன்மி தப்ப வுய்
த்ததோ, வாய்தி றந்து முதலை கக்க மகனை நீய ழைத்ததோ,
யாது நம்பி யரிது நன்றெ னக்கி யம்ப வேண்டுமே. (கக)

அகவல்.

வேண்டுநின் னடியார் மெய்யன் பெனக்கு
மருள்செய் சிவனே யலந்தே னந்தோ

முறையோ முறையோ விறையோ னேயென்
றழுது செம்பொ னம்பலக் கூத்த
னருளாற் பெற்ற வன்பினி லொருசிறி
தடிய னேற்கு மருளல் வேண்டு
நீயே கோட வின்னருட் பெருக்கிற்
கேற்ற தன்றிள வேறுகந் தேறியைப்
பரிமா மிசைவரப் பண்ணிய வித்தக
திருந்திய வேத சிரப்பொருண் முழுதும்
பெருந்துறை யிடத்துப் பெருஞ்சீர்க்
குருந்துறு நீழலிற் கொள்ளைகொள் வோயே. (உ0)

வெண்பா.

கொள்ளைகொள்ள வீடுதவிக் கூற்றைப் பிடர்பிடித்துத்
தள்ளுந் திருஞான சம்பந்தா—வெள்ளமிடு
மேடேறப் பால்குறைந்த தென்றழுவ ரோகமுவின்
காடேறப் புக்கவரு கர். (உக)

கலித்துறை.

அருகக் கடல்கடந் தேறிய தோசிலை யம்பியெனப்
பெருகக் கடல்கடந் தேறிய தோசொல் பெருமிடறு
கருகக் கடல்விட முண்டோ னடியிற் கசிந்துமன
முருகக் கடலன்பு பெற்றசொல் வேந்த வுனக்கரிதே. (உஉ)

விருத்தம்.

உனற்க ரும்புகழ் மேவிய சுந்தர னும்பன் மீதிவரா
நினைப்ப ருங்கயி லாயம டைந்தமை நின்று காண்குறவே
யெனக்கு வந்துறு மோமக வென்றழு கின்ற நாளலைபா
றனித்த ருந்துபு மாலை யுமிழ்ந்திடு தம்பி ரானலனே. (உரு)

அகவல்.

நலமலி வாதவூர் நல்லிசைப் புலவ
மனநின் றுருக்கு மதுர வாசக
கலங்குறு புலனெறி விலங்குறு வீர
திங்கள் வார்சடைத் தெய்வ நாயக
னொருகலை யேனு முணரா னஃதான்று
கைகளோ முறிபடுங் கைகள் காணிற்
கண்களோ வொன்று சாலையிற் காணு
மாலையி லொன்று வயங்கித் தோன்றும்
பழிப்பி னொன்று விழிப்பி னெரியு
மாயினுந் தன்னை நீபுகழ்ந் துரைத்த
பழுதில் செய்யு ளெழுதின னதனாற்
புகழ்ச்சி விருப்பன் போலு
மிகழ்ச்சி யறியா வெண்பணி வானே. (உச)

வெண்பா.

வானும் புகழ்புகலி மன்னன் றொடர்பொன்று
தேனுந் திதழியோன் சிரோடு—தானுங்
கரியாய் மொழியுங் கரியாய் விடாம
லெரியா ரழல்வீழ்ந் தெழுந்து. (உரு)

கலித்துறை.

துடைவாழை மேன்மட வாரல்குற் பாம்பு தொடமயங்கி
நடைவாய் பிணமெனப் பட்டார் பெறுகிலர் நச்சுகுலை
யுடைவாழை மேலுர கந்தீண்ட மாய்ந்த வொருவனுயி
ரடைவா னருள்புரி யுந்திரு நாவுக் கரசினையே. (உசு)

விருத்தம்.

அரசன் பரிமேல் வரநெடுநல் யானை யெருத்தத் தமர்ந்து போய், வரதன் கைலை மலையடைந்த மணியே மணிநீ ரிடுப சும்பொன், திரைசங் கெறியுங் குளத்துவரச் செங்கற் செம் பொ னுப்பாடும், பரிசின் றெனக்குன் செம்பவளத் திருவா ய் மலர்ந்து பகர்வாயே. (உஎ)

அகவல்.

பகிர்மதி தவழும் பவளவார் சடையோன்
பேரருள் பெற்றும் பெருநீ ரழுங்கி
நெஞ்சநெக் குருகி நிற்பை நீயே
பேயேன் பெறாது பெற்றூர் போலக்
களிகூர்ந் துள்ளக் கவலைதீர்ந் தேனே
யன்ன மாடு மகன்றுறைப் பொய்கை
வாதவூ ரன்ப வாத லாலே
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலரெனுஞ்
செஞ்சொற் பொருளின் றேற்றறிந் தேனே. (உஅ)

வெண்பா.

தேனே றலர்சூடிச் சில்பலிக்கென் றூர்திரியு
மானேறி யாண்டுபெற் றுன்கொளி—தானேறும்
வெள்ளைமணி யென்று வினவுவோம் வாங்கியவப்
பிள்ளையையாங் காணப் பெறின். (உகூ)

கலித்துறை.

பெற்ற னினைப்பெற் றவர்போற் பெறலும் பிறப்பதுண்டே
னற்ற ரணியி னினைப்போற் பிறப்பது நல்லகண்டாய்
செற்றர் புரமெரி செய்தவில் வீரன் றிருப்பெயரோ
பற்ற மறிவெண் டிரைக்கட னீந்திய பாவலனே. (௩0)

விருத்தம்.

பாவாய்ப் பொழிந்த வானமுதப் பவளத் திருவாய் நம்பி நீ, சேவாய்ப் பொருதுந் தருமமுடைத் தேவன் மலைக்குப் போம்பொழுது, காவாய்ப் பயந்த தடக்கைமலர்க் கழறிற் றறிவார் கடாவிவரு, மாவாய்ப் பிறக்கக் கிடையாதே மாவாய்ப் பிறக்குந் திருமாற்கே. (௩௧)

அகவல்.

திருவார் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தி
னிழல்வா யுண்ட நிகரிலா னந்தத்
தேன்றேக் கெறியுஞ் செய்யமா ணிக்க
வாசகன் புகன்ற மதுர வாசகம்
யாவரு மோது மியற்கைத் தாதலிற்
பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை
மட்கல நிகர்க்கு மதுர வாசக
மோதின் முத்தி யுறுபயன்
வேத மோதின் மெய்ப்பய னறமே. (௩௨)

வெண்பா.

அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடையை—மறுத்தார்சம்
பந்தன் சிவிகை பரித்தார் திரிகுவர்மற்
றுந்துஞ் சிவிகையினை யூர்ந்து. (௩௩)

கலித்துறை.

ஊர்ந்து வருமிள வேறுடை யான்ற னுளத்தருளாற்
சார்ந்து சமண்வீட் டுறுமுனக் கேவருஞ் சைவநலங்
கூர்ந்து மிளிர்தரு நாவர சேநல் குரவுமுனஞ்
சேர்ந்து மருவினர்க் கேசிறந் தோங்குறுஞ் செல்வமுமே. ()

விருத்தம்.

செல்வநல் லொற்றி யூரன் செய்யசங் கிலியா லார்த்து
மல்லலம் பரவை தன்கண் மாழ்குற வமிழ்த்து மேனு
மல்லுநன் பகலு நீங்கா தவன்மகி ழடியி லெய்தி
நல்லவின் படைந்தி ருப்ப னம்பியா ரூரன் றுனே. (௩௫)

அகவல்.

தானே முத்தி தருகுவன் சிவனவ
னடியன் வாத வூரனைக்
கடிவின் மனத்தாற் கட்டவல் லார்க்கே. (௩௬)

வெண்பா.

வல்லார் பிறப்பறுப்பர் வண்மை நலங்கல்வி
நல்லா தரவின்ப ஞானங்க—ளெல்லாந்
திருஞான சம்பந்தன் சேவடியே யென்னு
மொருஞான சம்பந்த முற்று. (௩௭)

கலித்துறை.

உற்று னலன்றவந் தீயினின் றுனல னூண்புனலா
வற்று னலனுகர் வுந்திரு நாவுக் கரசெனுமோர்
சொற்று னெழுதியுங் கூறியு மேயென்றுந் துன்பில்பதம்
பெற்று னொருநம்பி யப்பூதி யென்னும் பெருந்தகையே. ()

விருத்தம்.

பெருமிழலைக் குறும்பனொனும் பரம யோகி பெரிதுவந்துன் றிருவடித்தா மரையைப் போற்றி, விரைமலர்தூய் வந்தனை செய் கின்ற னென்றால் விளங்கிழையா ரிருவரொடு முயங்க லாமோ, வுரைமதிநின் றனைவெறுப்ப தென்கொ ளின்னை யுடையானுக் கடுத்தசெய லுனக்கு மாயிற், சுரர்முனிவர் பரவுறும் பெருஞ்சீர்த் தொண்டத் தொகைசெய்தோ யறமுதனூல் வகைசெய் தோயே. (௩௯)

அகவல்.

செய்ய வார்சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டுப்
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே. (௪0)

———:o:———

தேவாரம் திருவாசகம் என்கிற தமிழ்வேதஞ் செய்தருளிய சைவசித்தாந்த சமயாசாரியராகிய நால்வர்களிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருக்கு வெண்பாவும், திருநாவுக்கரசுநாயனாருக்குக் கட்டளைக் கலித்துறையும், சுந்தரமூர்த்திநாயனாருக்கு விருத்தமும், மாணிக்கவாசக சுவாமிகளுக்கு அகவலுமாக அருளிச்செய்த நால்வர் நான்மணிமாலை முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவசண்முகன்றுணை.

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதி.

மூலமும் உரையும்.

காப்பு.

கொற்றவருணனைநின்றன்றுழக்கியகொக்குருவைச்
செற்றவருணனையன்னசெவ்வேற்படைச்செந்திலர்க்கு
முற்றவருணனையந்தாதியென்றுமுதிர்மதப்பேர்
பெற்றவருணனையானனத்தாதியைப்பேசுவனே.

(இதனதுபதப்பொருள்.) அன்று கொற்ற வருணனை நின்று உழக்கிய கொக்குருவைச் செற்ற- (யுத்தஞ்செய்த) அக்காலத்து வெற்றியையுடைய சமுத்திரராசனை (க்கடலிடத்தே) நின்று கலக்கிய மாமரவடிவாகிய சூரபத்மனைக் கொன்ற,—அருணனை அன்ன செவ்வேற்படைச் செந்திலர்க்கு - சூரியனைப் போன்ற சிவந்தவேலாயுதத்தையுடைய திருச்செந்தூரில் வாழும் முருகக்கடவுளுக்கு,—வருணனை அந்தாதி முற்ற- (நான் பாடத்தொடங்கும்) வர்ணனையுடைய இந்நிரோட்டக யமகவந்தாதியானது (இடையூறின்றி) முடியும்பொருட்டு,—என்றும் முதிர் மதப்பேர் பெற்ற அருள் நனை - எக்காலத்தும் முதிர்ந்த மதநீரொன்று (உலகத்தார் சொல்லும்) பெயரைப் படைத்த அருள்வெள்ளமானது தோன்றி நனைக்கப்பெற்ற,—ஆனனத்து ஆதியைப் பேசுவன் - யானைமுகத்தையுடைய கணபதியை (யான்) துதிப்பேன். என்றவாறு. ஏ - ஈற்றசை. அந்தாதியானது முடியும்பொருட்டுக் கணபதியைத்துதி

[illegible]

பாரிக்கண்டக் [illegible]
பாரிக்கண்டக் [illegible] [செந்]
பாரிக்கண்டக் [illegible]
பாரிக்கண்டக் [illegible].

(இ-ள்.) பாரிக்கண் [illegible]

யானைக் கண்டு - (பிரணவப்பொருளை)உபதேசித்தருளிய நன்மையாகிய கீர்த்தியையுடைய சுப்பிரமணிய சுவாமியைத்துதிசித்து,—அங்கு அரிதாகிய சீர்க்கதி எய்தினன் - அவ்விடத்தே (யாவர்க்குங் கிடைத்தற்கு)அரிதாகிய சிறப்பையுடைய மோக்ஷத்தை யடைந்தேன்.எ-று. நான் சுப்பிரமணிய சுவாமியைத்துதித்து மோக்ஷத்தை யடைந்தேனெனக் கூட்டுக. (௧)

தினகரனந்தநனியிலங்காநின்றசெய்யநற்செந்
தினகரனந்தநிதியாயினனடற்சீரயிலேந்
தினகரனந்தகனைச்செற்றதாளர்திகழ்கனகா
தினகரனந்தநடனர்தனயனென்சிந்தையனே.

(இ-ள்.) தினகரன் நந்த நனி இலங்காநின்ற செய்ய நற்செந்தில் நகரன்-சூரியன் ஒளிகுன்றும்படி மிகப்பிரகாசிக்கின்ற செவ்வையாகிய நல்லதிருச்செந்திலென்னும் நகரத்தையுடையவரும்,—நந்தம் நிதியாயினன்-நம்முடைய செல்வமாயினவரும்,—அடற் சீர் அயில் ஏந்தின கரன்-வலிமையையுடைய சிறப்பாகிய வேலாயுதத்தைத் தரித்த கையை யுடையவரும்,—அந்தகனைச் செற்ற தாளர் திகழ் கனகாதில் நகர் அனந்த நடனர் தனயன்-இயமனை உதைத்த பாதங்களையுடையவராகியும் விளங்குகின்ற பாரத்தையுடைய செவிகளிலே அசைகின்ற அனந்தனாகிய குண்டலத்தையுடைய நடேசராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய குமாரருமாகிய முருகக்கடவுளானவர்,—என் சிந்தையன் - என்மனத்தின்கண் இருக்கின்றனர். எ - று. (௨)

சிந்தனையாகத்திசையந்தனார்க்கிறைசேரகங்க
சிந்தனையாகத்தனையளித்தாடரைசென்றிரந்த

சிந்தனையாகத்திடையியைந்தான்றந்தசேயளியாற்
சிந்தனையாகத்தநற்செந்திலாய்நினைச்சேர்ந்தனனே.

(இ-ள்.) சிந்தனை யாகத்து இசை அந்தணர்க்கு இறை-தங்கள் மனமானது வேள்வியின்கண்ணே பொருந்தப்பெற்ற பிராமணர்கட்குத்தலைவரே,—சேர் அகம் கசிந்து அனையாகத் தரை அளித்தாள் - பொருந்திய மனங்கசிந்து மாதாவாக இப்பூமியைப்பெற்ற உமாதேவியையும்,—சென்று தரை இரந்த சிந்தனை-(மாவலிச்சக்கிரவர்த்தியிடத்திலே)போய்ப்பூமியை யாசித்த வாமனரூபத்தை யுடைய விஷ்ணுமூர்த்தியையும்,—ஆகத்திடை இயைந்தான் தந்த சேய்-தமதுதிருமேனியிலே (இடப்பாதியும் வலப்பாதியுமாகக்) கொண்ட பரமசிவன் பெற்ற குமாரரே,—அளியால் சிந்து அனையா - கிருபையினாலே சமுத்திரத்தைப் போன்றவரே,—கத்த-கருத்தாவே,—நற்செந்திலாய்-நன்மையாகிய திருச்செந்தூரையுடையவரே,—நினைச் சேர்ந்தனன்-உம்மை (யான் வந்து) அடைந்தேன். எ-று. என்னைக் காத்தருளுமென்பது எஞ்சிநின்றது. அன்னை நின்னை என்பன அனை நினை என இடைக்குறைந்து நின்றன. (௩)

தனத்தலங்காரநிறைநாரியரந்தரத்தசைகே
தனத்தலங்காரநிகழரங்காடச்செய்தன்னினயத்
தனத்தலங்காரதராயியங்கத்தக்கதண்செந்திற்கந்
தனத்தலங்காரனையானயனேத்திடத்தங்கினனே.

(இ-ள்.) தனத்து அலங்கு ஆரம் நிறை நாரியர்-முலைகளினிடத்து ஒளிர்கின்றமுத்துமாலைகள்நிறையப்பெற்றபெண்கள்,—அந்தரத்து அசை கேதனத்து அலங்காரம் நிகழ் அரங்குஆட-ஆகாயத்திலே அசைகின்ற கொடிகளையுடைய அழகுவிளங்கு

கின்ற சபையின்கண்ணே நடிக்கவும்,—செய்தன்னின் நயத்த நத்து அலம் கார் அதராய் இயங்கத்தக்க தண் செந்தில் கந்தன்-வயல்களிலே சுகத்தையுடையனவாகிய சங்குகள் கலப்பைச்சாலிலேநிற்கின்ற சலமானது வழியாக அதிலூர்ந்து செல்லவுந்தக்க குளிர்ச்சியையுடைய திருச்செந்தூரில்வாழும் கந்தசுவாமியானவர்,—அத்தலம் காரனையான் அயன் ஏத்திடத் தங்கினன் - அந்தஸ்தலத்தினிடத்தே மேகம்போலும் விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவருந் துதிக்க இருந்தருளினார். எ-று. அலம் ஆகுபெயர். (௪)

தங்கந்தனங்களடையத்தனியெனைத்தள்ளியங்கே
தங்கந்தனங்கடரச்சென்றனரறிந்தாரிலைகா
தங்கந்தனங்களலர்காக்கணுரெழிற்றண்செந்திலார்
தங்கந்தனங்கநிகர்செக்கர்செய்சஞ்சலத்தினையே.

(இ-ள்.) தனங்கள் தங்கம் அடையத் தனி எனைத்தள்ளி-என் முலைகள் பொன்போலும் தேமலைப்பொருந்தத் தனியாக என்னை இவ்விடத்திலே விட்டுப் பிரிந்து,—அங்கே தங்கு அம் தனங்கள் தரச்சென்றனர்- (தாம்போன) அவ்விடத்தில் இருக்கின்ற அழகிய திரவியங்களைக் கொண்டுவரும்பொருட்டுப் போன என்னுடைய நாயகர்,—காதம் கந்தம் கள் அலர் காக்கண் ஆர் எழில் தண் நம் செந்திலார்தம் கந்தன்-ஓர் காததூரம் மணம் வீசுகின்ற தேன்பொருந்திய பூக்கள் நந்தனவனங்களிலே நிறைந்திருக்கப்பெற்ற அழகையும் குளிர்ச்சியையுமுடைய நமது திருச்செந்தூரில் வசிக்கின்றவர்களுடைய கந்தசுவாமியினது,—அங்கம் நிகர் செக்கர் செய் சஞ்சலத்தினை அறிந்தாரிலை - திருமேனியைப்போலும் இச்செவ்வானம்

எனக்குச்செய்கின்ற துக்கத்தை உணர்ந்தாரில்லை. எ-று.[தலைவன் பிரிந்துழித் தலைவி மாலைப்பொழுதுகண்டிரங்கல்.] (ரு)

சலந்தரனாகந்தரித்தார்தந்தாதன்றனதிடைச்சஞ்
சலந்தரநாகந்தரைநடந்தாலெனச்சார்ந்ததண்டன்
சலந்தரனாகந்தளரச்செற்றார்தனயன்றலநச்
சலந்தரநாகந்தனக்கிறைசேர்செந்திற்சார்ந்திடற்கே.

(இ-ள்.) சலம் தரம் நாகம் தரித்தார்-கங்கையையுந் தலைமாலையையும் சர்ப்பத்தையும் தரித்தவரும்,—தம் தாதன்றனதிடைச் சஞ்சலம் தர-தம்முடையஅடியாராகிய மார்க்கண்டேயரிடத்திலே துக்கத்தைக் கொடுக்கும்பொருட்டு,—நாகம்தரை நடந்தாலெனச் சார்ந்த தண்டன்- யானையானது பூமியிலேநடந்தாற்போலச்சேர்ந்தஇயமனையும்,—சலந்தரன் ஆகம் தளரச் செற்றார் தனயன்-சலந்தரனையும் உடலஞ்சோரும்படிகொன்றவருமாகிய பரமசிவனுடைய குமாரராகியும்,—தரம் நாகந்தனக்கு இறை சேர் செந்தில் தலம் சார்ந்திடற்கு நச்சலம் - மேன்மையையுடைய மலைகளுக்குத் தலைவராகியுமிருக்கின்ற முருகக்கடவுள் வீற்றிருக்குந் திருச்செந்தூராகிய தலத்தையடைதற்கு யாம் விரும்பினோமில்லை. எ-று. (சு)

சாரங்கஞ்சங்கரிகட்கிச்சித்தேய்ந்தகைச்சங்கரனார்
சாரங்கஞ்சங்கரிதாஞ்சக்கரங்கையிற்றாங்கினன்சேய்
சாரங்கஞ்சங்கரியாநண்ணினர்க்கந்தத்தந்திரத்தா
சாரங்கஞ்சங்கரிதேயெனச்செய்நின்சரண்டந்ததே.

(இ-ள்.) சாரங்கம் சங்கரி கட்கு இச்சித்து ஏய்ந்தகைச்சங்கரனார்-மானானது உமாதேவியினது கண்ணினதழகுக்கு விரும்

பி வந்திருந்தாற்போலப் பொருந்திய கையையுடைய சங்கரரும்,—சாரங்கம் சங்கு அரிதாம் சக்கரம் கையில் தாங்கினன் சேய் சார் அங்கம் சங்கரியாநண்ணினர்க்கு-சாரங்கமென்னும் வில்லையும் சங்கையும் அரிதாகிய சக்கரத்தையும் கையிலே தரித்த விஷ்ணுமூர்த்தியுடைய புதல்வனாகிய மன்மதனுடைய பொருந்திய உடலத்தைக்கொன்று(முன்போலயோகத்து)இருந்தவருமாகிய பரமசிவனுக்கு,—அந்தத் தந்திரத்து ஆசாரம்-வேதத்தின்முடிவாகிய சைவாகமத்தினது சீலத்தை,—கஞ்சம் கரிதேயெனச் செய் நின்சரண் தந்தது-செந்தாமரைமலரும் கரிதென்று சொல்லும்படி செய்கின்ற உம்முடைய பாதம் கொடுத்தது. எ-று. இரண்டாமடியிலே சார்ங்கமென்பது எதுகைநோக்கிச் சாரங்கமென ஓரகரம் விரியப்பெற்று நின்றது. (எ)

தந்தனஞ்சங்கையணிகரர்சேர்க்கத்தடங்கணலை
தந்தனஞ்சங்கையலரென்செய்யாடங்கச்சற்சனர்நித்
தந்தனஞ்சங்கையகலறத்தீசெந்திற்சார்கதனித்
தந்தனஞ்சங்கையநகனிளையனற்றுடரற்கே.

(இ-ள்.) சங்கை அணி கரர் தம் தனம் சேர்க்கத் தடங்கண் அலைதந்தனம் - சங்குவளையலையணிந்த கையினையுடைய பெண்கள் தங்கள் முலைகளிலே புணர்க்க அவர்களுடைய விசாலமாகிய கண்களினாலே யாம் அலைந்தோம்:—சம் கை-(இனி அவர்களோடனுபவிக்குஞ்) சுகத்தை நீ வெறுத்துவிடு;—அலர் என்-(இதனாலுண்டாகும்) பழிமொழி நமக்கு ஏன்?—செய்யாள் தங்கச் சற்சனர் நித்தம் தனம் சங்கை அகல் அறத்து ஈ-இலக்குமி வசிக்கச் சன்மார்க்கமுடைய சனங்களுக்கு எப்

பொழுதுந்திரவியங்களை ஐயம் நீங்கிய தருமநெறியிலே கொடு:—தனித் தந்தன் அஞ்சு அங்கை அநகன் இளையன் நற்றாள் தரற்குச் செந்தில் சார்க-ஒற்றைக் கொம்பினையுடையவரும் ஐந்தாகிய அழகிய கையையுடைய பாவமில்லாதவருமாகிய விநாயகக்கடவுளுடைய தம்பியாராகிய சுப்பிரமணிய சுவாமியானவர் தம்முடைய நன்மையாகிய பாதங்களை நமக்குத் தரும்பொருட்டு அவர் வீற்றிருக்குந் திருச்செந்தூரை அடை. எ - று. (அ)

தரங்கனந்தாரனனியேற்றெழிற்செந்திற்றந்தைநிரந்
தரங்கனந்தாரகநாடினென்றேநினைசத்தியரந்
தரங்கனந்தாரநகரீசர்சேய்கிரித்தையலர்க்கந்
தரங்கனந்தாரளகஞ்சிற்றிடைசலசங்கண்களே.

(இ-ள்.) தரங்கம் நந்து ஆரல் நனி ஏற்று எழிற்செந்தில் தந்தை-கடற்றிரைகள் சங்குகளை மதிலின்மேலே மிக ஏற்றுகின்ற அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் பிதாவாகியும்,—நிரந்தரம் தாரகம் நாடின் கனம் என்று நினைசத்தியர் அந்தரங்கம் நந்தார் - எக்காலத்தும் பிரமஸ்வரூபத்தை விசாரிக்கில் நமக்கு மேன்மையாகுமென்று நினைக்கின்ற மெய்ஞ்ஞானிகளுடைய அந்தரங்கத்திலே கெடுதலின்றி விளங்குகின்றவரும்,—அநகர் ஈசர்-ஆணவமில்லாதவருமாகிய பரமசிவனுடைய,—சேய் கிரித் தையலர்க்கு-குமாரராகியுமிருக்கின்ற முருகக்கடவுளுடைய மலையிலிருக்கும் பெண்ணுக்கு.—தார்அளகம் கனம்-மாலையையுடையஅளகமானது மேகத்தைப் போலும்;—சிற்றிடை அந்தரம் - சிறுமையாகிய இடையானது ஆகாயத்தைப்போலும்; — கண்கள் சலசம்-

கண்களானவை செந்தாமரைமலரைப் போலும். எ-று. [தலைவியினதவயவம் புகழ்தல்.] (௯)

சங்கங்களங்கழனிக்கரைசேர்செந்திற்றங்கினநஞ்
சங்கங்களங்கரநண்ணரன்சேயெய்தச்சார்ந்தனஞ்சற்
சங்கங்களங்கனியைநிகர்தண்டதரற்கினிய
சங்கங்களங்கொணின்றயாங்கணெஞ்சங்கரைந்தே.

(இ-ள்.) சங்கங்கள் அம் கழனிக்கரை சேர் செந்தில் தங்கினம் - சங்குகள் அழகையுடைய வயல்களினது கரைகளிலே பொருந்திய திருச்செந்தூரின்கண் இருந்தனம்;—நஞ்சம் கம் களம் கரம் நண அரன் சேய் எய்த - நஞ்சும் தலையும் கழுத்திலுங் கையிலும் இருக்கப்பெற்ற பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளை அடையும்பொருட்டு,—சற்சங்கம் சார்ந்தனம்-சற்சங்கத்தைச் சேர்ந்தோம்;—களங்கனியை நிகர் தண்டதரற்கு இனி அசங்கம்-களாப்பழத்தைப் போலும் நிறத்தையுடைய இயமனுக்கு இனி அஞ்சோம்;—களங்கொண நின்ற யாங்கள் நெஞ்சம் கரைந்து-குற்றத்தையுடையவர்களாய் நின்ற நாங்கள் மனம் உருகி. எ-று. நாங்கள் மனமுருகி இருந்தனமெனக் கூட்டுக. (௧௦)

கரத்தரிக்கங்கணங்கட்டாரனார்தந்தகந்தர
கரத்தரிக்கங்கணங்கண்டசெய்ச்செந்திலெங்காங்கெயர்
கரத்தரிக்கங்கணங்கட்கயனார்க்கெழிற்காசணிசே [சா
கரத்தரிக்கங்கணங்கற்றிடத்தாங்கினர்கைச்சத்தியே.

(இ-ள்.) கரத்து அரிக் கங்கணம் கட்டு அரனார் தந்த கந்தர்-கையிலே சர்ப்பமாகிய கடகத்தைக் கட்டிய பரமசிவன் பெ

ற்ற கந்தசுவாமியும்,—அழகர்-அழகையுடையவரும்,—அத்தர் - பிதாவும்,—இக்கு அங்கணம் கண்ட செய்ச் செந்தில் எங்காங்கெயர்-கரும்புகள் சேற்றினிடத்துஉண்டாகப்பெற்ற வயல்களையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கின்ற நம்முடைய காங்கேயருமாகிய முருகக்கடவுளானவர்,—சாகரத்துஅரிக்கு-திருப்பாற்கடலிலே நித்திரைசெய்கின்ற விஷ்ணுமூர்த்திக்கும்,—அம் கணங்கட்கு-அழகிய (தேவர்முதலிய) கணங்களுக்கும்,—அயனார்க்கு - பிரமதேவருக்கும்,—எழிற்காசு அணி சேகரத்து அரிக்கு-அழகையுடைய இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட முடியையுடைய இந்திரனுக்கும்,— அங்கு அணங்கு அற்றிட - அவ்விடத்தே (சூரன்முதலிய அசுரர்களாலுண்டாகிய) வருத்தம் நீங்கும்பொருட்டு,—கைச் சத்தி தாங்கினார் - கையின்கண்ணே வேலாயுதத்தைத் தரித்தருளினார். எ-று. காங்கேயனென்பது காங்கெயனெனக் குறுக்கல்விகாரம் பெற்றுநின்றது. (௪௧)

சத்திக்கரத்தனகச்சேயங்கத்தினைத்தந்தனனற்
சத்திக்கரத்தனகச்சிலையாளிதன்றாளிணைநே
சத்திக்கரத்தனகத்தியைந்தேத்தரன்றந்தகதிர்ச்
சத்திக்கரத்தனகசெந்திலாய்நின்சரண்சரணே.

(இ-ள்.) சத்திக் கரத்தன் அகச் சேய் அங்கத்தினைத் தந்தனன்-வலிமையையுடைய முதலையினது வயிற்றினுள்ளேபுகுந்த பிராமணப்பிள்ளையினுடைய உடம்பை (சுந்தரமூர்த்திநாயனாருடைய திருப்பதிகத்தின்பொருட்டு) அழைத்துக்கொடுத்தவரும்,—நல் சத்திக்கு அரத்தன்-நன்மையாகிய உமாதேவிக்கு நேர்பாதியாயினவரும்,—நகச்சிலை ஆளி - மகாமேருமலை

யை வில்லாக ஆண்டவரும்,—தன் தாளிணை-தம்முடையஇர ண்டுபாதங்களையும்,—நேசத்து இக்கர் அத்தன் அகத்துஇயை ந்து ஏத்து அரன்தந்த-அன்பினைக் கருப்புவில்லையுடைய மன் மதனுக்குப் பிதாவாகிய விஷ்ணுமூர்த்தி மனசிலே பொருந் தித் துதிக்கின்ற சங்காரகர்த்தாவுமாகிய பரமசிவன் பெற் ற,—கதிர்ச் சத்திக் கரத்து அனக-கிரணத்தையுடைய வேலா யுதத்தைத்தரித்த கையினையுடைய மலமுத்தரோ,—செந்திலா ய்-திருச்செந்தூரையுடையவரோ,—நின்சரணே சரண் - உம் முடைய பாதங்களே எனக்குப் புகலிடம். எ-று. ஏழாவது செய்யுளில் சார்ங்கமென்பது போலவே,இச்செய்யுளின் இர ண்டா மடியிலுள்ள அர்த்தன் என்பதும் அரத்தனென ஒரு அகரம் விரியப்பெற்று நின்றது. (௧௨)

சரிதங்கையாரக்கலன்றந்தனந்தரித்தார்நரகே
சரிதங்கையாரக்கரிடத்தினார்தந்ததண்செந்தினே
சரிதங்கையாரக்கணத்தின்னல்கைத்தல்சரதந்தஞ்சேர்ச்
சரிதங்கையாரக்கசிந்திசைக்கின்றதகையினர்க்கே.

(இ-ள்.) சரி தம் கை ஆரக் கலன் தம் தனம் தரித்தார் நர கேசரி தங்கையார் அக்கர் இடத்தினார் தந்த - வளையலைத் தம து கையிலும் முத்துமாலையாகிய ஆபரணத்தைத் தமது முலை யிலும் தரித்தவரும் நரசிங்கவுருவங்கொண்ட விஷ்ணுமூர்த் தியினுடைய தங்கையாரும் சங்குமணியை அணிந்த பரமசி வனது வாமபாகத்தை யுடையவருமாகிய உமாதேவியார் பெற்ற,—தண் செந்தில் நேசர் - குளிர்ச்சியையுடைய திரு ச்செந்தூரில் விருப்பத்தையுடைய முருகக்கடவுள்,— இத ம் கையார் - இன்பத்தை வெறுது செய்வார்;— அக்கண

த்து இன்னல் கைத்தல் சரதம் - அந்தக்கணத்திலே துன்பத்தை வெறுத்தொழித்தல் சத்தியம்;—தம் சீர்ச்சரிதம் கை ஆரக் கசிந்து இசைக்கின்ற தகையினர்க்கு-தமது சிறப்பையுடைய சரித்திரத்தை ஒழுக்கம் பொருந்தும்படி மனங்கசிந்து சொல்கின்ற அன்பினையுடையவர்களுக்கு. எ-று. முருகக்கடவுள் அன்பினையுடையவர்களுக்கு இன்பத்தைச்செய்வார் துன்பத்தையொழித்தல் சத்தியமெனக்கூட்டுக. (௩௫)

இனனந்தியங்கிநிகர்த்தசெங்கேழன்கையீரிரண்டா
யினனந்தியங்கிரியைச்சிலையாக்கிதன்சேயெழிற்செய்
யினனந்தியங்கியிருங்கஞ்சஞ்சேர்செந்திலெந்தைதனை
யினனந்தியங்கிசையக்கதியீந்தனனென்றனக்கே.

(இ-ள்.) இனன் அந்தி அங்கி நிகர்த்த செங்கேழன் - சூரியனையும் செவ்வானத்தையும் அக்கினியையும் போன்ற செந்நிறத்தையுடையவரும்,—கை ஈரிரண்டு ஆயினன் - திருக்கரங்கள் நான்காகப்பெற்றவரும்,—நந்தி-நந்தியென்னுந்திருநாமத்தையுடையவரும்,—அம் கிரியைச் சிலையாக்கிதன் சேய்-அழகையுடைய மகாமேருமலையை வில்லாக்கிக்கொண்டவருமாகிய பரமசிவனுடைய குமாரராகியும்,—எழிற் செய் இனம் நந்து இயங்கி இரும் கஞ்சம் சேர் செந்தில் எந்தை-அழகைப்பொருந்திய வயல்களிலே கூட்டமாகச் சங்குகள் ஊர்ந்து சென்று பெருமையாகிய தாமரைகளிலே பொருந்தியிருக்கப்பெற்ற திருச்செந்தூரில் வீற்றிருக்கும் நமது பிதாவாகியும் விளங்குகின்ற முருகக்கடவுளானவர்,—தனை இனல் நந்தி அங்கு இசைய - பாசத்தினது துக்கத்தாற் கெட்டுலைந்து அங்

தஸ்தலத்தின்கண்ணே சேர,—என்றனக்குக் கதி ஈந்தனன் - எனக்கு மோக்ஷத்தைத் தந்தருளினார். எ-று. நான்காமடியிலே இன்னல் என்பது இனல் என இடைக்குறைந்து நின்றது. இச்செய்யுளை (இன்னந்தியங்கி) எனப் பாடமோதி அதற்கியையப் பொருள்கொள்ளுதலும் வழக்கம். (௧௬)

தனக்கடங்காரெயில்செற்றகங்காளன்றனயனங்கந்
தனக்கடங்காதிழிதந்திக்கிளையன்றளிரெழிற்சந்
தனக்கடங்காநிறைசெந்திலினற்சேய்சயிலநங்கை
தனக்கடங்காணினச்சாரிலையண்ணறரணியிலே.

(இ-ள்.) தனக்கு அடங்கார் எயில் செற்ற கங்காளன் தனயன் - தமக்கு அமையாத அசுரர்களுடைய மும்மதில்களையும் அழித்த முழுவெலும்பையணிந்த பரமசிவனுடைய குமாரரும்,—அம் கந்தன் - அழகைப்பொருந்திய கந்தசுவாமியும்,—அக்கடம் காது இழி தந்திக்கு இளையன் - அந்த மதமானது காதினின்றும் சொரிகின்ற யானையாகிய விநாயகக்கடவுளுக்குத் தம்பியும்,—தளிர் எழிற் சந்தனக் கடம் கா நிறை செந்திலில் நற்சேய் - தளிர்களைப்பொருந்திய அழகையுடைய சந்தனமரங்களின் காடுகளும் பூஞ்சோலைகளும் நிறையப்பெற்ற திருச்செந்தூரில் வீற்றிருக்கும் நல்ல இளையோருமாகிய சுப்பிரமணிய சுவாமியினது,—சயில நங்கை தனக்கடம் காணின்-மலையிலிருக்கின்ற பெண்ணினுடைய தனமாகிய குடங்களைக் காண்பாராயின்,—அண்ணல் தரணியில் நச்சார் இலை - தலைவனே, இப்பூமியின்கண்ணே விரும்பாதாரில்லை. எ-று. [பாங்கன் தலைவியை வியத்தல்.] (௧௭)

தரணியனையநிறத்தண்ணலாரிரந்தன்றளந்த
தரணியனயனிறைஞ்சயிலார்நற்றனிச்சிலையாந்
தரணியனையனகனனையந்தரிதந்திடுகந்
தரணியனையனெஞ்சேயலர்த்தாள்கடரித்திறைஞ்சே.

(இ-ள்.)தரணி அனைய நிறத்து அண்ணலார்-சூரியனைப்போன்ற நிறத்தையுடைய பெருமையிற் சிறந்தவராகியும்,—அன்று இரந்து அளந்த தரணியன் அயன் இறைஞ்சு அயிலார் - அக்காலத்து யாசித்து அளக்கப்பட்ட பூமியையுடைய விஷ்ணுமூர்த்தியும் பிரமதேவரும் வணங்குகின்ற வேலாயுதத்தை யுடையவராகியும்,—நல் தனிச் சிலையாம் தரணியன் ஐ அனகன் அணை அந்தரி தந்திடு கந்தர்-நல்ல ஒப்பில்லாத வில்லாகிய மலையையுடையவரும் அழகினையுடைய மலரகிதருமாகிய பரமசிவனைச்சேர்ந்த உமாதேவி பெற்றருளிய கந்தசுவாமியாகியுமிருக்கின்ற முருகக்கடவுளே,—அணி அல்- (நமக்குப்) பெருமைபொருந்திய அரணாயிருக்கின்றார்;—நெஞ்சே நையல் - மனமே, நீ வருந்தாதே;—அலர்த் தாள்கள் தரித்துஇறைஞ்சு-அவருடைய செந்தாமரைமலர்போலுந் திருவடிகளைத் தாங்கி வணங்கு. எ-று. அல்லென்பது மதிலுக்குப் பெயராமாறு "இரவு மிருளு மிரும்பின் பெயரு—மெயிலு மிரவியு மல்லெனலாகும்" என்னும் பிங்கலந்தைச் சூத்திரத்தாலுணர்க. ()

தரிக்கனந்தங்கலைநீள்சடைக்கைக்கனற்சங்கரனந்
தரிக்கனந்தங்கலைநீதிகள்சாற்றரன்றந்தநற்கந்
தரிக்கனந்தங்கலைநீர்ச்செய்க்கணுஞ்செந்திலார்தளையா
தரிக்கனந்தங்கலைநீத்திழந்தேங்கரச்சங்கங்களே.

(இ-ள்.) தரிக்க நந்து அம் கலை நீள் சடைக் கைக்கனற் சங்கரன்-தன்னைச் சூடிக்கொண்ட மாத்திரத்தில் ஆக்கம் பெற்ற அழகிய சந்திரகலையையுடைய நீண்ட சடையையும் கையிலே பொருந்திய அக்கினியையுமுடைய சங்கரரும்,—அந்தரிக்கு அனந்தம் கலை நீதிகள் சாற்று அரன் - உமாதேவிக்கு முடிவில்லாத சாஸ்திரமார்க்கங்களை உபதேசித்த சங்கார கர்த்தாவுமாகிய பரமசிவன்,—தந்த நற் கந்தர் - பெற்ற நன்மையையுடைய கந்தசுவாமியாகியும்,—இக்கு அனம் தங்கு அலை நீர்ச் செய்க்கண் ஆம் செந்திலார் - கரும்புகளானவை அன்னங்கள் இருக்கின்ற அலையையுடைய ஜலம்பொருந்திய வயல்களிலே உண்டாகப்பெற்ற திருச்செந்தூரையுடையவராகியு மிருக்கின்ற முருகக்கடவுளுடைய,—தளை ஆதரிக்கு-மாலையை விரும்பின மாத்திரத்தில்,—நந்தம் கலை நீத்துக் கரச் சங்கங்கள் இழந்தேம் - நம்முடைய வஸ்திரத்தை நீங்கிக் கையிலிருந்த சங்கவளையல்களையும் இழந்தனம். எ-று. [முருகக்கடவுள் பவனி வருதல்கண்டு மால்கொண்டு வஸ்திரமும் வளையலு மிழந்துநின்ற மகளிர்சொல்லியது.] (கஎ)

சங்கரியக்கநிகர்த்தநின்றாதைதகையதென்னச்
சங்கரியக்கரிறைஞ்செழிற்செந்திற்சடானனகஞ்
சங்கரியக்கதிர்தானிசைகின்றசரணத்திறற்
சங்கரியக்கணத்தேயெற்செறியந்தகற்சினந்தே.

(இ-ள்.) சங்கரி அக்கம் நிகர்த்த நின் தாதை தகையது என்ன - உமாதேவியுடைய கண்ணைப்போன்ற உம்முடைய பிதாவாகிய பரமசிவனது செய்கையைப்போல,—சங்கு அரியக்கர் இறைஞ்சு எழிற்செந்திற் சடானன - சங்கையுடைய

விஷ்ணுமூர்த்தியும் இயக்கர்களும் வணங்குகின்ற அழகையுடைய திருச்செந்தூரில் வாழும் ஆறுதிருமுகங்களையுடையவரே,—கஞ்சம் கரியக் கதிர் இசைகின்ற சரணத்தினால் சங்கரி - தாமரைமலரும் கருகும்படியாக ஒளி பொருந்துகின்ற உம்முடைய பாதத்தினாற் கொன்றருளும்,—அக்கணத்தே எற்செறி அந்தகற் சினந்து - அந்தக்கணத்தே என்னைச் சேரும் இயமனைக் கோபித்து. எ - று. இயமனைக் கோபித்துக் கொன்றருளுமெனக் கூட்டுக. தான் அசை. (கஅ)

தகரனலங்கநிறைநிறத்தான்செந்திற்றந்தைசங்கேய்ந்
தகரனலங்கனளிருதனத்தினன்றூழளகந்
நகரனலங்கடரநின்றசத்தியன்றாளெனினந்
தகரனலங்கனன்றாலெனச்சிறிடத்தக்கரன்றே.

(இ-ள்.) தகரன் - மேடவாகனத்தை யுடையவராகியும்,—நல் அங்கம் நிறை நிறத்தான் - நன்மையாகிய திருமேனியிலே நிறைந்த வண்ணத்தையுடையவராகியும்,—செந்தில் தந்தை - திருச்செந்தூரில் வாழும் பிதாவாகியும்,—சங்கு ஏய்ந்த கரன் அலங்கல் நளினதனத்தினன் தாழ் - சங்கு பொருந்திய கையையுடைய விஷ்ணுமூர்த்தியும் மாலையையணிந்த தாமரையாசனத்தினையுடைய பிரமதேவரும் வணங்குகின்ற,—அளகம் தகர நலங்கள் தர நின்ற சத்தியன் - அளகமானது மயிர்ச்சாந்தாலாகிய இன்பத்தைத் தரும்படி நின்ற கிரியாசத்தியாகிய தெய்வயானையையுடையவராகியு மிருக்கின்ற கந்தசுவாமியினுடைய,—தாள் எனின் - பாதமென்பேனாயின்,—அந்தகர் அனலம் கனன்றாலெனச் சீறிடத் தக்கரன்று - யமனார் வடவாமுகாக்கினி சுவாலித்தாற்போலக் கோபித்தற்குத் தக்கவரல்லர். எ-று. (கக)

தக்கனகத்தினடறணித்தானயன்றன்கதிசந்
தக்கனகத்திகிரிக்கரனுக்கங்கடந்தளிக்கத்
தக்கனகத்தியனையாளியென்னெஞ்சதாஞ்சலசந்
தக்கனகத்தினகரன்றன்செந்திலைச்சநதிக்கினே.

(இ-ள்.) தக்கன் அகத்தின் அடல் தணித்தான் (கதி) - தக்கனுடைய அகங்காரத்தினது வலிமையை அடக்கிய உருத்திரமூர்த்தியினுடைய பதத்தையும்,—அயன்றன் கதி - பிரமனுடைய பதத்தையும்,—சந்தக் கனகத் திகிரிக் கரன் ஆக்கங்கள் - அழகினையுடைய பொன்மயமாகிய சக்கரத்தைத் தரித்த கையையுடைய விஷ்ணுவினது செல்வத்தையும்,—தந்து அளிக்கத் தக்கன்-தந்து காக்கத்தக்கவர்,—அகத்தியனை ஆளி-அகஸ்தியமகாமுனிவனை ஆண்டருளினவரும்,—என் நெஞ்சதாம் சலசம் தக்கன் நகு அத்தினகரன்-என்னிதயமாகிய தாமரைமலருக்கு அன்பராகி விளங்குகின்ற அந்த ஞானசூரியருமாகிய முருகக்கடவுளானவர்,—தன் செந்திலைச் சந்திக்கின்-தம்முடைய திருச்செந்தூரைச் சந்திக்கில். எ-று. முருகக்கடவுளானவர் தம்முடைய திருச்செந்தூரைச் சந்திக்கில் உருத்திரமூர்த்தியினுடைய பதத்தையும் பிரமனுடைய பதத்தையும் விஷ்ணுவினுடைய செல்வத்தையும் தந்து காக்கத்தக்கவரெனக் கூட்டுக. (உ0)

சந்தத்தனத்திகடந்திறத்தாசைதலத்தினிச்சை
சந்தத்தனத்தினசைதீரடியன்றனதிலிற்சேர்
சந்தத்தனத்தியதளான்றனயதடக்கயல்கஞ்
சந்தத்தனத்தினிநங்கிழிசெந்திற்றங்கினற்கே.

(இ-ள்.) சந்தத் தனத்திகள்தம் திறத்து ஆசை - சந்தனத்தையணிந்த தனத்தையுடைய பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும்,—தலத்தின் இச்சை-மண்ணில் வைக்கப்படும் ஆசையையும்,—சந்தத் தனத்தின் நசை தீர் - அழகையுடைய பொன்னிலேறும் ஆசையையும் தீர்த்தருளும்;—அடியன்றனது இல்:இல் சந்து சேர் அத்தன் அத்தி அதளான் தனய-தமதடியாராகிய சுந்தரமூர்த்திநாயனுருடைய மனைவியாகிய பரவையினது வீட்டிலே தூதாகச் சென்ற பிதாவும் யானையினது தோலையுடையவருமாகிய பரமசிவனுடைய குமாரரே,—தடக்கயல் கஞ்சம் தத்த நத்தினம் கீழ் இழி செந்தில் தங்கினற்கு-பெரிய கயன்மச்சங்கள் தாமரைமலரிலே பாய(அதின்மேற்றுயின்ற)சங்குக்கூட்டங்கள் கீழேயிறங்கப்பெற்ற உம்முடைய திருச்செந்தூரிலே வந்து வசித்த எனக்கு. எ-று. பரமசிவனுடைய குமாரரே எனக்குப் பெண்களது காரணத்தாலாகிய ஆசையையும் மண்ணில் வைக்கப்படுமாசையையும் பொன்னிலேறுமாசையையும் தீர்த்தருளுமெனக் கூட்டுக. (உக)

தங்கச்சினகரநேராக்கலந்திச்சகநிறைந்தார்
தங்கச்சினகரநேயர்தனயன்றனக்கினிதாந்
தங்கச்சினகரநீள்செந்திலுட்டிற்றனகரிதந்
தங்கச்சினகரநற்கனனென்னங்கடையலர்க்கே.

(இ-ள்.) தங்கு அச்சின் அகரம் நேராக் கலந்து இச்சகம் நிறைந்தார்-பொருந்திய உயிரொழுத்துக்களுக்குள்ளே அகரமாகிய அக்கரத்தைப்போன்று உயிர்கள்தோறும் பொருந்தி இவ்வுலகத்திலே வியாபித்தவரும்,—தம் கச்சி நகரம் நேயர்-தம்

முடைய காஞ்சிபுரத்தில் விருப்பத்தையுடையவருமாகிய பரமசிவனுடைய,—தனயன்றனக்கு இனிதாம்-குமாரராகிய முருகக்கடவுளுக்கு இனியதாகிய,—தங்கச்சினகரம் நீள் செந்தில நாட்டில்-பொன்னாலாகிய கோயிலானது உயர்ந்திருக்கப்பெற்ற திருச்செந்தூரைத் தன்னிடத்துடைய நாட்டின்கண்ணே,—கரி தந்தத் தனம் கச்சில் நகர நற்கனன் என் நங்சள் தையலர்க்கு-யானையினது கோட்டைப்போலும் தனங்கள் கச்சுள்ளேநின்றும் பிதுங்குதற்கு நல்ல கனம் யாதுகாரணத்தால் உண்டாயது எங்களுடைய பெண்ணுக்கு? எ-று. பாங்கியே நீ சொல்லென்பது எஞ்சிநின்றது. [செவிலி தலைவியினது முலையிருமாப்பைக் கண்டு ஐயுற்றுப் பாங்கியை வினவல்.] (௨௨)

அலரிநனந்தலையாழிகண்டாங்குச்சிகியினிடை
யலரினனந்தநிகரயிலான்செந்திலாயிழையை
யலரினனந்தநினைநிலந்தேர்ந்ததற்கன்றயலா
ரலரினனந்தஞ்சொலற்கிடனுநெஞ்சழிகின்றதே.

(இ-ள்.) ஆழி நனந்தலை அலரி கண்டாங்கு - சமுத்திரத்தினது நடுவிலே சூரியன் தோன்றினாற்போல,—சிகியினிடை அலர் இனன்-மயில்வாகனத்திலே விளங்குகின்ற தலைவரும்,—அந்தம் நிகர் அயிலான் - அழகிய ஒளிபொருந்திய வேலாயுதத்தையுடையவருமாகிய முருகக்கடவுளது,—செந்தில் ஆயிழை-திருச்செந்தூரிலிருக்கும் பெண்ணுக்கு,—ஐயலர் இனல் நந்த நினை நிலம் தேர்ந்ததற்கு-ஐந்து புஷ்பபாணங்களாலாகிய துன்பங்கெடும்படி உன்னை இந்நாட்டின்கண்ணே தேடியதற்கு;—அன்று அயலார் அலரின் அனந்தம் சொலற்கு

இடஞ நெஞ்சு அழிகின்றது-அந்நாளிலே அயலவர்கள் பழி மொழியாக அளவில்லாத வார்த்தைகளைப் பேசுதலுக்கு இடமாக மனம் வருந்துகின்றது. எ-று. [அலரறிவுறுத்தல்.](௨௩)

தேயத்தியங்கியலகிறலங்களிற்சென்றடிக
டேயத்தியங்கியலையறிடங்கதிசேர்தலறைந்
தேயத்தியங்கினநித்திலந்தாளெறிசெந்திலடைந்
தேயத்தியங்கிதரித்தான்றனயற்றெரிசிக்கினே.

(இ-ள்.)தேயத்து இயங்கி அலகில்தலங்களில் சென்று அடிகள் தேயத் தியங்கி அலையல் - தேசங்கள்தோறுஞ் சஞ்சரித்து அளவில்லாத க்ஷேத்திரங்களிலே போய்க் கால்கள் தேயும்படி தியங்கி அலையாதே,—கதி சேர்தல் திடம் - மோக்ஷத்தை அடைதல் நிச்சயம்:—அறைந்து அத்தி அங்கு இனம் நித்திலம் எறி செந்தில் அடைந்து-ஆரவாரித்துச் சமுத்திரமானது அவ்விடத்திற் கூட்டமாகிய முத்துக்களைக் கரையிலெறியப்பெற்ற திருச்செந்தூரைச் சேர்ந்து,—ஏய் அத்தி அங்கி தரித்தான் தனயன் தெரிசிக்கின் - அவ்விடத்திலிருக்கின்ற எலும்பையும் அக்கினியையும் தரித்த பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளைத் தரிசிக்கில். எ-று. முருகக்கடவுளைத் தரிசிக்கில் மோக்ஷத்தையடைதல் நிச்சயமெனக் கூட்டுக. மூன்றாமடியின் முதலிலிருக்கும் ஏகாரம் அசைநிலை. ()

சிக்கத்தனங்கடிறக்கின்றகன்னியர்சிந்தைகணே
சிக்கத்தனங்களளித்தழிந்தேற்செழிற்செந்திறரி
சிக்கத்தனங்கழலையேத்தநல்கினன்சேர்நிறைகா
சிக்கத்தனங்களகிலேசன்றந்ததிறற்கந்தனே.

(இ-ள்.) சிக்கத் தனங்கள் திறக்கின்ற கன்னியர் சிந்தைகள் நேசிக்க - கண்டவர்கள் தங்களிடத்தில் அகப்படும்படி முலைகளைத் திறவாநின்ற பெண்களுடைய மனம் விரும்பும்பொருட்டு,—தனங்கள் அளித்து அழிந்தேற்கு - திரவியங்களை அவர்களுக்குக் கொடுத்துக் கெட்டவனாகிய எனக்கு,—எழிற்செந்தில் தரிசிக்க - அழகையுடைய திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும்,—தன் அம் கழலை ஏத்த-தம்முடைய அழகிய பாதத்தைத் துதிப்பதற்கும்,—நல்கினன் - அருள்செய்தார்,—சீர் நிறை காசிக் கத்தன் நங்கள் அகிலேசன் தந்த திறற்கந்தன்-சிறப்புப் பொருந்திய காசியில் வீற்றிருக்கும் கருத்தாவாகிய எங்கள் விசுவநாதசுவாமி பெற்ற வலிமையையுடைய கந்தசுவாமியானவர். எ-று. கந்தசுவாமியானவர் எனக்குத் திருச்செந்தூரைத் தரிசிப்பதற்கும் தம்முடைய பாதத்தைத் துதிப்பதற்கும் அருள்செய்தாரெனக் கூட்டுக. (உரு)

கந்தரங்கானந்தனிற்சென்றடங்கிலென்காசிக்கநே
கந்தரங்கானந்தநண்ணிலென்கன்னியர்கட்டளக
கந்தரங்கானந்தநின்றுடெழிற்செந்திற்கண்டிறைஞ்சிக்
கந்தரங்கானந்தநல்கச்சனனங்கடந்திலரே.

(இ-ள்.) கந்தரம் கானந்தனில் சென்று அடங்கில் என்-முழையிலும் காட்டிலும் போய்ப் புலனொடுங்க இருந்ததனாற் பயன் யாது?—காசிக்கு அநேகந்தரம் கால் நந்த நண்ணில் என் - காசிக்கு அநேகமுறை கால்கள் வருந்தும்படி போனதினாற் பயன் யாது?—கன்னியர் கந்தரம் கட்டு அளகம் கான் நந்த நின்று ஆடு எழிற்செந்தில் கண்டு இறைஞ்சி - பெண்

கள் மேகம்போலும் நிறத்தையுடைய கட்டப்பட்ட அளகத்திலே வாசம் மிக நின்று நடிக்கின்ற அழகையுடைய திருச்செந்தூரைத் தரிசித்து வணங்கி,—கந்தர் அங்கு ஆனந்தம் நல்க - முருகக்கடவுள் அவ்விடத்திற் சிவானந்தத்தை அருள,—சனனம் கடந்திலர் - அதனாலே தங்கள் பிறவியை நீங்காதவர்கள். எ-று. சிவானந்தம்போற் கர்மயோகங்கள் பயன்படாவென்பது கருத்து. (௨௬)

கடனந்திநாகத்ததளாடையாயெனைக்காக்கனிற்கே
கடனந்திநாணிறத்தாயெனநாரணன்கண்டிறைஞ்செங்
கடனந்திநாதன்றனயனற்செந்திலிற்காரிகையே
கடனந்திநாயகங்காதலர்தேரிற்கலிக்கின்றதே.

(இ-ள்.) கடம் நந்து இல் நாகத்து அதள் ஆடையாய் - மதங் கெடுதலில்லாத யானையினது தோலாகிய வஸ்திரத்தையுடையவரே,—எனைக் காக்கல் நிற்கே கடன் - அடியேனை இரக்ஷித்தல் உமக்கே கடனாம்,—அந்தி நாண் நிறத்தாய் என - செக்கர்மேகம் நாணத்தக்க செந்நிறத்தையுடையவரே என்று,—நாரணன் கண்டு இறைஞ்சு எங்கள்தம் நந்திநாதன் தனயன் - விஷ்ணுமூர்த்தி தரிசித்து வணங்குகின்ற எங்களுடைய நந்தியென்னும் பெயரைப்பொருந்திய பரமசிவனுடைய குமாரராகிய முருகக்கடவுளது,—நற்செந்திலில் காரிகையே-நன்மையாகிய திருச்செந்தூரிலிருக்கும் பெண்ணே,—கடல் நந்தின் நாயகம் காதலர் தேரில் கலிக்கின்றது-சமுத்திரத்திலே தோன்றிய சங்குகளுடைய நாயகமாகிய வலம்புரி உன்னுடைய தலைவரினது தேரிலே சத்திக்கின்றது.எ-று. [பாங்கி வலம்புரிகேட்டுத் தலைவனது வரவறிவுறுத்தல்.] ()

கணக்காகநாய்கடின்காயநிலையெனக்கண்ணியென்ன
கணக்காகநானலைந்தெய்த்தேனெழிற்செந்திற்கந்தநெற்றிக்
கணக்காகனார்தந்தநின்றனையேயினிக்காதலினாற்
கணக்காகனுநிகர்த்தேயழியங்கத்தின்காதலற்றே.

(இ-ள்.) கணக்காகம் நாய்கள் தின் காயம் நிலையெனக் கண்ணி - கூட்டமாகிய காகங்களும் நாய்களும் உண்கின்ற சரீரத்தை நித்தியமென்று நினைத்து,—என்ன கணக்கு ஆக நான் அலைந்து எய்த்தேன் - என்ன தாற்பரியத்தின்பொருட்டு யான் அலைந்து இளைத்தேன்?—எழிற்செந்தில் கந்த - அழகையுடைய திருச்செந்தூரில் வீற்றிருக்கும் கந்தசுவாமீ,—நெற்றிக்கண் அக்கு ஆகனார் தந்த நின்றனையே - நெற்றிக்கண்ணையும் எலும்புமணியைத்தரித்த திருமேனியையுமுடைய பரமசிவன் பெற்ற உம்மையே,—இனிக் காதலினால் கணக்கா-இனி விருப்பத்தினாலே தியானிக்கும்பொருட்டு (இடையூறுவராமற்) காத்தருளும்,—கனா நிகர்த்து அழி அங்கத்தின் காதல் அற்று - சொப்பனத்தைப்போன்று அழிகின்ற சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்கி. எ-று. கண்ண என்றது கண எனா இடைக்குறைந்து நின்றது. சரீரத்தில் வைத்த விருப்பம் நீங்கி உம்மையே தியானிக்கும்பொருட்டுக் காத்தருளுமெனக் கூட்டுக. (உஅ)

காதலையானின்றனக்காக்கினனினிக்காயந்தந்தே
காதலையானின்றனக்காரணனடிக்கஞ்சங்கணீங்
காதலையானின்றகங்கரைந்தேத்தரன்கண்ணியராக்
காதலையானின்றசங்கரன்சேய்செந்திற்காங்கெயனே.

(இ-ள்.) காதலை யான் நின்றனக்கு ஆக்கினன் - விருப்பத்தை நான் உம்மேல் வைத்தேன;—இனிக் காயம் தந்து காதல்-இனிச் சரீரத்தைப் படைத்துக் கொல்லாதொழியும்.—ஐயான்-சூக்குமரூபியும்,—இன் தனம் காரணன் - இனிமையாகிய அருட்செல்வத்துக்குக் காரணரும்,—அடிக் கஞ்சங்கள் நீங்காது அலையான் நின்று அகம் கரைந்து ஏத்து அரன்-தம்முடைய பாதமாகிய தாமரைமலர்களை நீங்காமல் திருப்பாற்கடலிலே நித்திரைசெய்யும் விஷ்ணுமூர்த்தி முன்னின்று மனம் உருகித் துதிக்கப்பெற்ற சங்காரகர்த்தாவும்,—கண்ணி அராக் காது அலையாநின்ற சங்கரன் சேய் - மாலையாகச் சர்ப்பம் காதுகளிலே அசைகின்ற சுகஞ்செய்பவருமாகிய பரமசிவனுடைய குமாரரே,—செந்தில் காங்கெயனே-திருச்செந்தூரிலிருக்கின்ற கங்காபுத்திரரே. எ-று. சனனமரண துக்கங்களைநீக்கி நித்திய பேரின்பமயமாகிய மோக்ஷத்தைத் தந்தருளும் என்பது கருத்து. (உக)

காயங்கலையநலியந்தகனணைகாலஞ்செய்ய
காயங்கலையதளானிலநீரழல்காற்றெழிலா
காயங்கலையனலரிசித்தாயினன்காதலழ
காயங்கலையதிருஞ்செந்திலாயென்ககன்றனெஞ்சே.

(இ-ள்.) காயம் கலைய நலி அந்தகன் அணை காலம்—சரீரம் நீங்கும்படி வருத்துகின்ற இயமன் வருங்காலத்திலே,— செய்ய காயம் கலை அதளான்- (சாக்கியநாயனாரெறிந்த செங்கல்லாலாகிய)சிவந்த தழும்பையும் கலைமானினது தோலையுமுடையவராகியும்,—நிலம் நீர் அழல் காற்று எழில் ஆகாயம் கலையன் அலரி சித்து ஆயினன்-பிருதிவியும் அப்புவும் தேயுவும்

வாயுவும் அழகையுடைய ஆகாசமும் சந்திரனும் சூரியனும் ஆன்மாவும் ஆயினவராகியுமிருக்கின்ற பரமசிவனுடைய,— காதல் அழகு ஆய் - குமாரராகிய முருகக்கடவுளினது திரு வுருவத்தைத் தியானி;—அங்கு அலை அதிரும் செந்திலாய் என்க - அவ்விடத்தே சமுத்திரம் ஒலிக்கின்ற திருச்செந்தூ ரையுடையவரோ என்று சொல்லு;—கன்றல் நெஞ்சே - வரு ந்தாதொழி என் மனமே. எ-று. என்மனமே இயமன் வருங் காலத்திலே வருந்தாதொழி முருகக்கடவுளினது திருவுருவ த்தைத் தியானி திருச்செந்தூரையுடையவரே என்று சொ ல்லு எனக் கூட்டுக. சரீராந்தியத்திலே மனமானது எப்பொ ருளிலே சிந்தனை வைத்ததோ அப்பொருளே கைகூடும் என் பது சாஸ்திரசித்தம் ஆதலால், இப்படி உணர்த்தியருளினார். எக்காலத்திலும் இடைவிடாமல் வைத்த சிந்தனை எதுவோ அதுவே சரீராந்தியத்திலும் வருவது ஆகையால், முருகக்க டவுளைத் தியானித்தலை எக்காலத்திலும் இடைவிடாது செய் தாலொழியச் சரீராந்தியத்திலே செய்தல் கூடாது எனவும் அதனால் எப்பொழுதும் தியானிக்கவேண்டும் எனவும் அறிந் துகொள்க. (கூ0)

திருச்செந்தினிரோட்டகயமகவந்தாதியுரை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

கணபதி துணை.

பழமலையந்தாதி.

காப்பு.

சீரதங்கோட்டு முனிகேட்ட நூற்படி செங்கரும்பா
லேரதங்கோட்டு வயல்சூழ் முதுகுன்றிறையவனைப்
பூரதங்கோட்டு மலையானைப் பாடப் புரந்தருளும்
பாரதங்கோட்டு நுதியா லெழுதிய பண்ணவனே.

திருவருந்தங்கவருங்கல்விமாதுசிறப்புவருங்
கருவருந்தங்கநிலையாதென்றுள்ளங்கரைந்திறைஞ்சிற்
பொருவருந்தங்கமலைபோலுந்தன்றைப்புராதனனை
யிருவருந்தங்கடலையாலிறைஞ்சுமிறைவனையே. (௧)

இறைக்குவளையுமிளங்கிள்ளையுமழுகென்பவர்சேர்
துறைக்குவளையுமெகினமும்வாவிக்குத்தூயவிதழ்
நறைக்குவளையுமழகாமுதுகிரிநாதர்க்கின்றிப்
பிறைக்குவளையுமுடல்வந்தவாறென்கொல்பேசுகவே. (௨)

பேசுகவீரவருநாளென்றெல்லைப்பெருங்கடல்சே
ராசுகவீரபழமலைவாணவென்றன்பளைந்து
பூசுகவீரமதிவேணிநீற்றைப்புலவிர்பிறர்
காசுகவீரவனையுகவீர்மெய்க்கதிதருமே. (௩)

கதியிலைவேலைமடவார்க்கியற்றக்கருதுளமே
பொதியிலைவேலையுண்டுற்றோன்றொழும்பழம்பூதரத்தை
நுதியிலைவேலைமகிழ்வீரன்றந்தையைநோக்கிலைநீ
யொதியிலைவேலைவளர்ப்பாய்தருவையொடித்தெறிந்தே. (௪)

ஓடியமருங்குலைக்கொங்கைகள்வாட்டுறுமோடரிக்கட்
டொடியமருங்துலைக்காந்தளங்கைம்மகள்சோரமதன்
கடியமருங்குலைத்தீப்போன்மதியங்கனன்றெழுத
லடியமருங்குலைச்செய்ம்முதுகுன்றர்க்கறைகுவமே. (௫)

மேருக்குவடுநிகர்தோட்பழமலைமேவுதிருத்
தேருக்குவடுவசமாடுமாடத்தெருவினிற்போய்
நீருக்குவடுவிழியெழின்மாய்நதெதிர்நின்றுநம
தாருக்குவடுவிளைத்தனளேயின்றெழிவறவே. (௬)

ஒழியாக்கவலையொழிவதென்றேசொல்லுழல்புலத்தின்
வழியாக்கவலையிடைப்படுமோனின்மயங்கிநின்று
பழியாக்கவலைமனமேபணிந்துபரவிலைவேல்
விழியாக்கவலைமகளிறைதாழ்பழவெற்பினையே. (௭)

வெற்றிக்குமாரனையீன்றபழமலைவேந்தனின்னு
முற்றிக்குமாரனைநோக்குங்கொலோவென்பர்முலைவம்புச்
சொற்றிக்குமாரனைவார்மடவாரவன்றேண்முலையோ
டொற்றிக்குமாரனையோன்முனஞ்சேரவுழலுவரோ. (௮)

உழவரைச்சந்தவிளவாளைபாய்வயலோங்குகுன்றைக்
கிழவரைச்சந்ததமுநினைவாய்நற்கிளைவளரும்
பழவரைச்சந்தநறுந்தழைவாங்கிப்பரவினடு
ளுழவரைச்சந்தமயிலியல்பூசவுமெண்ணினளே. (௯)

எண்ணிவருந்தினநொந்தோம்பழமலையெய்திலர்கா
னண்ணிவருந்தினமின்றேயினிக்கதிர்நற்புரவி
மண்ணிவருந்தினமாவாலெழுந்துகள்வந்துடலின்
கண்ணிவருந்தினவான்மதிறேய்க்குங்கடிநகரோ. (௧௦)

கடிக்கஞ்சமனையுவந்துலகாக்குறுங்காரணனோர்
முடிக்கஞ்சமனைதொறும்பலியேற்றமுதுகிரியான்
மிடிக்கஞ்சமனைவருந்தொழவாழ்வம்விரவுறுமெங்
குடிக்கஞ்சமனைவெருவுதலேயின்றுகொல்வனென்றே. (கக)

கொல்லைக்குறவரைவாயனையார்கரிக்கோட்டைவிளை
நெல்லைக்குறவரையாதுகொள்காளத்திநேயரைவான்
றில்லைக்குறவரைநம்முதுகுன்றரைச்சேர்வலென்றா
ரெல்லைக்குறவரைமாத்திரைக்கேநலமீகுவரோ. (கஉ)

ஈகையிலங்கைதவமுளமெங்ஙனமெய்துவமென்
றோகையிலங்கைவடிவேலொடுவருந்தோன்றறந்தை
வாகையிலங்கையரசிறவூன்றியவள்ளன்மமு
மாகையிலங்கைம்முகமுதுகுன்றன்மலர்ப்பதமே. (கந)

பதம்பரவைக்குவருந்துபிராற்குப் பசுமயின்மேற்
கதம்பரவைக்குவரச்சுற்றுகட்செவிக்கங்கணற்குச்
சிதம்பரவைக்குமுதுகுன்றவாணற்குச்செல்வமெல்லா
மதம்பரவைக்குநிகர்கரித்தோறலைமாலைகளே. (கச)

மாலைக்கலுழனெய்யோனெனத்தாங்கவயங்குமரு
ணாலைக்கலுழவொழியெனுமேற்றிவர்நோன்மையனும்
பாலைக்கலுழவொருமகற்கீந்தபழமலையான்
மூலைக்கலுழநடம்புரிவானெம்முதற்றெய்வமே. (கரு)

தெய்வசிகாமணியேமணிகூடலிற்சென்றுவிற்ற
மெய்வசிகாமணிகண்டாபழமலைவித்தகமீ
னெய்வசிகாமணிமாவெனுங்கண்ணியைநெஞ்சகத்து
வைவசிகாமணிநேவாதெனையின்பவாழ்வளித்தே. (கசு)

வாழமரிக்குமடநெஞ்சமேமென்மலர்ப்பசழி
தாழமரிக்குமதற்காய்ந்ததந்தையுந்தாயுமொரு
வேழமரிக்குமிகவுறவாம்பழவெற்பினயல்
சூழமரிக்குமியல்பையெஞ்ஞான்றுந்துணிந்திலையே. (கஎ)

தந்துமியும்பரியம்பும்பழமலைசூழ்ந்துறையீர்
நுந்துமியும்பரியாவினையவேண்டியுண்ணேம்புலவீர்
சிந்துமியும்பரிவாலுதவார்த்தீதுசெய்விர்மல
முந்துமியும்பரிபாகமுன்போசொல்லுமுங்களுக்கே. (கஅ)

கேட்டுப்புவனங்கொளவுமெண்ணேமெய்க்கிராதனின்முன்
னூட்டுப்புவனம்பயின்மான்றசையுண்டநாதனராப்
பூட்டுப்புவனங்கொளுமெய்ப்பழமலைப்புண்ணியன்றுள்
வேட்டுப்புவனம்பதினுன்குநல்கினும்வேண்டிலமே. (கக)

வேண்டவடுக்கநினைவதுன்றுண்மலர்வேட்கைமணி
பூண்டவடுக்கணாறுநுதலார்மயல்போக்குவது
நீண்டவடுக்கனயமாதிளமுலைநேர்ந்துதவ
மாண்டவடுக்கனிகர்தோட்பழமலைமன்னவனே. (உ0)

மன்னவமாதவனும்பழமலைவாணமணி
யன்னவமாதவனன்மலைக்காற்கசைந்தம்மதிகண்
டென்னவமாதவனல்லின்வந்தானென்றிரங்கிமதன்
றின்னவமாதவநீாமேயென்செல்வத்திருந்திழையே. (உக)

திருந்தியவேதம்புகல்பரிசேயறஞ்செய்துடலம்
வருந்தியவேதம்பொருளெனவாழ்பழமாமலையான்
பொருந்தியவேதந்தருநஞ்சுணுனெனிற்பூமலர்கா
மருந்தியவேதம்புயமனையாட்கணிமங்கலமே. (உஉ)

மங்கலமாவிமலைசேர்பழமலைவாணமணிச்
செங்கலமாவிமலர்க்கைக்குருகொடுசெல்கவெமர்க்
கிங்கலமாவிவளைநீயணைந்ததினியுனெதிர்
தங்கலமாவிதரிற்கொடுசேறுமெந்தண்மனைக்கே. (௨௩)

தண்டங்கமண்டலங்கொண்டுபழமலைச்சங்கரதாட்
புண்டங்கமண்டலங்கண்டுசென்றாலுமெய்ப்போதமுறார்
பண்டங்கமண்டலங்காரமின்னுக்கினன்பாட்டியலைக்
கொண்டங்கமண்டலம்பாழாக்கியவுனைக்கூறலரோ. (௨௪)

கூற்றைக்கொடியங்கடப்பானருளெனக்கூய்ப்பரவி
யேற்றைக்கொடியங்கரஞ்சேர்பழமலையீசனணி
நீற்றைக்கொடியங்குளமேவெறுத்திநிறைபெருந்து
மூற்றைக்கொடியங்கினமோடருந்துமுடம்பினையே. (௨௫)

உடற்குவலையந்தகன்கைக்கயிறென்றுணர்ந்துளமே
கடற்குவலையம்புகழ்சேர்முதுகிரிக்கண்ணுதற்கு
மடற்குவலையம்புனைகளத்தாற்குநம்மன்றமர்ந்த
நடற்குவலையம்பணியாமவற்கன்புநண்ணுகவே. (௨௬)

நட்டுவனாயறிகிலன்றண்ணுமைநந்திநின்று
கொட்டுவனாயிரைதேர்கயமுதுகுன்றுடையாய்
தட்டுவனாயகலாதநான்முகன்றாளமுயர்
குட்டுவனாவனைவான்பரவுநின்கூத்தினுக்கே. (௨௭)

கூத்துகந்தம்பலமேவுறுமோர்முதுகுன்றனைநம்
பாத்துகந்தம்பலமாரினுமெள்ளினும்பண்பனைத்தாள்
சாத்துகந்தம்பலமாமறையாற்புசழ்தாணுவைநா
மேத்துகந்தம்பலமார்பொதுமாதனையெள்ளினமே. (௨௮)

எள்ளாதவனையெலும்பாபழமலையென்றிருந்த
கள்ளாதவனைமகவரிந்தாக்கெனக்கட்டுரைத்து
விள்ளாதவனைமகிழ்பரமாவழல்வெண்மதியைத்
தள்ளாதவனைமுடிசூடெம்மாதுதருக்குதற்கே. (௨௯)

தருவினிலையினிமன்னவற்கில்லையித்தண்புனத்தின்
மருவினிலையினிமைக்கூற்றெனக்கந்திவாளரிக
ருருவினிலையினியல்வேற்குகனையுதவியகோன்
கருவினிலையினிகந்தோன்பழமலைக்காரிகையே. (௩0)

காரிகையார்க்குவரும்பொதுவோவல்லகாண்விசும்பிற்
பூரிகையார்க்குமுதுகுன்றநாயகன்பொங்குமருள்
வாரிகையார்க்குமருந்தனையான்மலைமன்னனரு
ஞரிகையார்க்குமெழுவுறழ்தோட்கணவநுதலே. (௩௧)

நுதலரிக்கும்பருவங்குறையென்றுவஞேக்கடையா
முதலரிக்கும்பருமேத்துந்தமிழர்முருகுபெரு
குதலரிக்கும்பருகற்கருங்காமுதுகுன்றரிலார்
சிதலரிக்கும்பருமாமரம்போற்றுயர்தின்பவரே. (௩௨)

தின்னக்கனியைவிழைகூனிளமந்திதீங்கனியீ
தென்னக்கனியையிரவியிற்பாய்பொழிலீண்டுகுன்றை
னன்னக்கலையமதிவேணியணிந்தநாம்பயந்த
சின்னக்கனியைவலத்தில்வைத்தால்வருந்திங்கென்னையே. ()

தீங்குதிரைக்கடனேர்நரர்காடுயர்செய்மலத்திற்
காங்குதிரைக்கடநாய்க்கிரையென்றிந்தவாகமய
னீங்குதிரைக்கடநன்முதுகுன்றர்க்கம்பனுக்கு
லாங்குதிரைக்கடனீயவல்லார்க்குவணங்குமினே. (௩௪)

வணங்கக்கரமுமொழியப்பழமலைமன்னுருவா
யிணங்கக்கரமுமிருப்பவைத்தேபுணரோந்திழையார்
பிணங்கக்கரமுஞமலியும்போலவர்பின்றொடர்வீ
ரணங்கக்கரமுதலைபோலுமைப்பற்றுமந்தகனே. (ஙரு)

அந்தரங்கங்கைதவரறியாமலமுதருள்சம்
பந்தரங்கங்கைவலிபோன்மின்னுக்கினர்பாடியுனைச்
செந்தரங்கங்கைரவமொண்கமலந்திரைத்துவருஞ்
சுந்தரங்கங்கைவிரும்புமுத்தாறுடைத்தொன்மலையே. (ஙசு)

மலங்கலையங்கலைகற்றேன்றனக்கருள்வாழ்வளிப்போன்
கலங்கலையங்கலைநல்லோர்பரவுங்கழலடியான்
விலங்கலையங்கலைவேலோன்பிதாமுதுவெற்பிடத்திற்
பொலங்கலையங்கலையான்மூடுமீனைப்புதைத்தவனே. (ஙஎ)

புதைத்துக்கரக்கும்பொருளாளர்வெஞ்சொற்பொருமறலி
கதைத்துக்கரக்குங்குமமுலைபாகன்மெய்க்கண்டடியார்
பதைத்துக்கரக்குஞ்சிறிதாவுருகும்பழமலையான்
வதைத்துக்கரக்குஞ்சரமீர்ந்தவன்றரும்வாழ்விலரோ. (ஙஅ)

இலங்குமரியுமருள்கோன்முதுவெற்பிடத்துரற்கால்
விலங்குமரியுமுழலலெல்லாமுன்னிவெய்துயிராக்
கலங்குமரியுமிருந்துயர்கூருங்கலுழ்ந்திடுந்தாய்க்
குலங்குமரியுமொருவனும்போகுங்கொடுஞ்சுரத்தே. (ஙகூ)

கொடுவரியானையடர்ந்துறுமாறெனக்கொண்டுயர்தூ
ணுடுவரியானையுறவடிட்போமென்றொருங்குவந்தே
யடுவரியானைநிகர்நமன்றூதரடிமுடிமன்
னடுவரியானைமுதுகுன்றொடேசுநரர்தமையே. (சய)

நரகாவலர்மடவார்க்குள்ளுருகிக்கைகநாவிருப்ப
வரகாவலர்புனைந்துன்றனையேத்திலராய்ந்தறிவா
லுரகாவலரெனவுய்ந்தாரினமுளமுற்றகுன்றைப்
புரகாவலரிலருட்கோயிலாகும்புராந்தகனே. (௬௧)

புரந்தரனஞ்சுபழமலைவாணன்புலவர்தொழுந்
துரந்தரனஞ்சுதலைநாககங்கணன்றொண்டுறுமா
னிரந்தரநஞ்சுதொழுதேத்துதாதர்க்குநேயமொடு
வரந்தரநஞ்சுகளத்துவைத்தானென்பர்மாதவரே. (௬௨)

மாதனைக்கொன்றுவரம்மேனிவைத்தவமாசுணத்தை
பீதனைக்கொன்றுசிறுநாணென்றார்க்குமெழிலுடையாய்
தீதனைக்கொன்றுநலஞ்செயல்வேண்டுநினையிகழும்
வாதனைக்கொன்றுமுதுகுன்றமாநகர்மாசொழித்தே. (௬௩)

மாசியதிகந்துறந்தார்மகிழ்குன்றைமாநகரோ
காசியதிகங்கொலோவென்பிராயினக்காசியெனப்
பேசியதிகந்தகன்றிருந்தான்பரன்பேரடலை
பூசியதிகம்பரனீங்கிலானிப்புரியினையே. (௬௪)

புரிசடையாளபழமலைவாணபொருப்பெடுத்த
கரிசடையாளதிகந்தீர்த்தருளக்கடுவயின்ற
பரிசடையாளமுடையாயொழித்தனள்பட்டினையத்
துரிசடையாளதழுக்காமெனுநின்றுகிலினுக்கே. (௬௫)

துகிலங்குருகுந்துறந்தாளுயிருந்துறக்கநின்று
ளகிலங்குருகுமணிமுடியாயெனுமத்தவளை
முகிலங்குருகுமடியாய்பரந்தமுதுகிரியாஞ்
சகிலங்குருதல்மேத்திறைவாமைத்தடங்கண்ணியே. (௬௬)

நடுக்கமலத்திறைெடுங்குதல்போலநின்ருளிலுறு
மொடுக்கமலத்திகழ்வால்வளையினமூர்ந்திடச்சேன்
மடுக்கமலத்திலுகள்வயல்சூழ்குன்றைமாநகரோ
யடுக்கமலத்திபுனையலங்காரவருளுகவே. (சஎ)

அருவரைவில்லையுமிழ்மணிநாசமுமத்திகளு
முருவரைவில்லையெனப்பூண்பவரையவ்வும்பர்தொழும்
பொருவரைவில்லையுறுமுதுகுன்றரைப்போந்துமரு
ளொருவரைவில்லவரிலொற்றிவையெனவுற்றனமே. (சஅ)

உற்கைக்குமாறுபடுமணிநாகமொளித்தலவி
விற்கைக்குமாறுசுமந்தவசீர்முதுவெற்பினின்பா
ணிற்கைக்குமாறுவழுவாநடக்கைக்குநேரிழையார்
சொற்கைக்குமாறுந்தமியேனுக்கென்றுதுணைசெய்வையே. ()

செய்க்குத்தனங்கமலமலர்சீர்தருஞ்செய்யதிரு
மெய்க்குத்தனங்கடரவடுவாங்கிதொல்வெற்பிடத்திற்
கைக்குத்தனங்கவொழியினுந்தாடனைக்காய்வதிலேன்
வைக்குத்தனங்களழித்திறையாதிந்தவையகமே. (௫0)

வைத்துமதிக்குமருங்கிற்கைத்தாயெனமந்தரமத்
துய்த்துமதிக்குமனையின்மையான்மறையோதிமமுன்
னெய்த்துமதிக்குமுடிமிசைக்கங்கையையேற்றினையோ
மெய்த்துமதிக்குமணுகவொண்ணுமுதுவெற்பினனே. (௫௧)

வெற்புக்குமையவடிவேலெறிந்தசெவ்வேண்மதவேள்
பொற்புக்குமையவனேடரன்வாழ்முதுபூதரத்தி
னிற்புக்குமையவளொத்திருந்தாள்குறைவின்றிவளர்
கற்புக்குமையவள்போலுறுங்காதற்கருங்கண்ணியே. (௫௨)

கருந்தடங்கட்குமுதவாய்மயிலெங்கள்கண்களுக்கு
விருந்தடங்கட்குநலமெனப்போந்தவிண்மீன்பொரியு
மருந்தடங்கட்குவளையோடையாகுகவம்புயங்கள்
பெருந்தடங்கட்குமுகமாகுங்குன்றைப்பெருந்தகையே. (ருந)

பெருமுதலைவளையான்போற்றுங்குன்றைப்பெருந்தகையை
யிருமுதலைவளைமூப்படைந்தாண்டவற்கின்மகவைக்
கருமுதலைவளைவாயிற்றந்தானைமுன்கண்டமுது
பொருமுதலைவளைநீத்தனண்மேவினள்பூங்கொடியே. (ருச)

பூங்குமிழும்படிமுள்ளும்பொருந்திப்புளிஞர்பொருள்
வாங்குமிழும்படிமோதுமெனல்கொடுமால்விழுங்கி
யாங்குமிழும்படிவந்தவெம்பாலையடைந்தவள்கால்
வேங்குமிழும்படினென்னும்பழமலைவித்தகனே. (ருரு)

வித்துருமத்தைநிகர்வானுயிர்செய்வினையருத்துங்
கத்துருமத்தையிடுதயிர்போலக்கலங்குமதன்
சத்துருமத்தைவனைமுதுகுன்றிறைதாள்கொடுவா
னத்துருமத்தையிலவாகவெள்ளுவர்நற்றவரே. (ருசா)

நற்றவராகமறையவராகவிந்நாணிலத்தி
லற்றவராகமனமுடையார்க்கன்றியச்சமற
வுற்றவராசமறியாதொளித்தநின்னெண்பதங்கள்
பற்றவராகமலாலயன்போற்றும்பழமலையே. (ருஎ)

பழங்கவிகடமகமந்திக்கீபொழிற்பண்டைமறை
முழங்கவிகடவுளர்க்கியுங்குன்றைமுதல்வனைவே
ளழங்கவிகடவிழிதிறந்தானையடிபரவார்
கிழங்கவிகடமறவரிற்றேன்றிக்கெடுவர்களே. (ருஅ)

கெடுத்துப்பணியுமுடையும்வெள்காமற்கிழத்திமுலை
வடுத்துப்பணியுமுரம்வேட்டுநின்றனள்வல்லியத [லாங்
ஞடுத்துப்பணியுமரைக்கசைத்தோய்தொண்டருள்ளமெல்
கொடுத்துப்பணியுமலர்த்தாட்டிருமுதுகுன்றத்தனே. (ருகூ)

குன்றுகளுங்களையொவ்வாவெனுமுலைக்குன்றதிர்க்குஞ்
சென்றுகளுங்களையுண்வண்டுமோவில்செழுங்கொன்றைமா
கன்றுகளுங்களைநன்மதிவேணிக்கடவுடனை [ன்
யென்றுகளுங்களையெம்மானைக்குன்றையிறைவனையே. (சுா0)

இறவாதவாநந்தவெள்ளத்தழுத்தியெனையருளாற்
றுறவாதவாநந்தவாள்வதென்றோமெய்த்துறவர்தொழு
மறவாதவாநந்தனஞ்சூழ்முதுகுன்றடைந்தவர்த
முறவாதவாநந்தகோபாலனென்றற்குடையவனே. (சுாக)

உடையமடங்கலுதைத்தபொற்பாதவொளிசெய்மழுப்
படையமடங்சன்முகற்காய்ந்தவீரபழமலையாய்
கடையமடங்கல்லொடுபகலுந்தொழக்கற்றிலமெம்
விடையமடங்கல்வருவதெஞ்ஞான்றுவிளம்புகவே. (சுாஉ)

விளங்கவலம்புரிமால்போற்றுநன்முதுவெற்பகஞ்சேர்ந்
துளங்கவலம்புரியாய்மாய்பிறிதொருடம்படையாய்
துளங்கவலம்புரிமென்குழன்மாதர்க்குச்சூழ்ந்துநின்று
களங்கவலம்புரியிவ்வெற்பையேநிலைகைவருமே. (சுாங)

வருந்ாதவளைவளைத்திட்டவபவவன்பிணிக்கு
மருந்தாதவளைமருவும்பழமலைவாணவனைப்
பொருந்தாதவளையுயிர்செகுத்துண்ணம்புலிமழுங்கத்
திருந்தாதவளைவரக்கூவுறுதென்சேவல்களே. (சுாச)

சேவாலங்காட்டுபொழுதகஞ்சாயச்செலுத்திவரி
மாவாலங்காட்டுமுதுகிரிவாணவவ்வானமுய்ய
வேவாலங்காட்டுமிடற்றாய்நின்சீர்த்திவிரித்துரையா
நாவாலங்காட்டுவிலங்காயினேனிந்தநானிலத்தே. (சுரு)

நிலங்கடந்தானைமகிழ்வானைத்தன்னடிநின்றொடுங்கும்
புலங்கடந்தானைமுதுகுன்றவாணனைப்போற்றிலர்தந்
நலங்கடந்தானைமுழுதுமிழந்தநகரினிற்போ
யிலங்கடந்தானைதுணிசிறையாக்கொண்டிரப்பர்களே. (சுசு)

இரப்பாரிலாரையிலரொளின்வைவரிரந்திடிற்றுங்
கரப்பாரிலாரைமுகநோக்குறார்மழுக்கைக்குன்றையா
யுரப்பாரிலாரையுறவாகக்கொள்வர்தம்முள்ளனபோய்
நிரப்பாரிலாரையவிப்பார்தம்மக்களைநீத்திருந்தே. (சுஎ)

இருப்புவலியையகன்றுபொன்வல்லியையெண்ணுதலாம்
விருப்புவலியைமுலையாரணங்கினர்விண்ணுறுதல்
பொருப்புவலியையிடத்தில்வைத்தாய்மலர்ப்பூங்கணைசேர்
கருப்புவலியையொழித்தாய்பழமலைக்கண்ணுதலே. (சுஅ)

கண்டந்தரிக்கும்விடத்தார்பழமலைக்கண்ணுதலார்
பண்டந்தரிக்குமருங்களித்தார்தம்பழவடியா
ரெண்டந்தரிக்குமரிதாகும்பாதரிருங்கருமா
வெண்டந்தரிக்குமதற்காய்ந்தவரொனுமெல்லியலே. (சுகூ)

மெல்லவணங்குநினைவாலெதிர்ந்திடவேனெடுங்க
ணல்லவணங்குவளையுடையோடுநடந்திலைநீ
கொல்லவணங்குமதிசுமந்தேநின்றகொள்கையென்னே
வெல்லவணங்குமலையாய்முதுகிரிவேதியனே. (எ0)

வேதியவாவிதனக்காவியாகியவித்தகபெண்
பாதியவாவிமலர்த்தேன்பெருகும்பழமலைவாழ்
சோதியவாவிவருவிடைப்பாகநின்றொண்டருறு
நீதியவாவியவரையென்றோசென்றுநேர்குவனே. (௭௧)

நேருமடியர்தமக்குறவாமவர்நேசமறச்
சோருமடியர்தமையணுகாதவர்தம்பியினுற்
சாருமடியர்மணிநிறவண்ணன்றனிரயிடந்து
தேருமடியர்முதுகுன்றவாணுதற்றீக்கண்ணரே. (௭௨)

கண்டரவந்தனைநேர்ந்தாங்கருகக்களிற்றினைமுன்
கொண்டரவந்தனைவானோர்செயுமுதுகுன்றனொடு
வண்டரவந்தனைநேர்வாளைக்கோலம்மதனனெய்யும்
புண்டரவந்தனைசேர்தியென்றோதுமின்போமின்களே. (௭௩)

போதுமின்மாலைவகைவகையாகவம்பொற்றொடியீ
ரோதுமின்மாலைதரின்வம்மினில்லையென்றோட்டினரேன்
மாதுமின்மாலைவருமுனஞ்சாமென்றுவண்கைமலர்
மோதுமின்மாலைமகிழ்துன்றைவாணர்தம்முன்னடைந்தே. ()

முன்னஞ்சிலம்புசிலையாக்கியான்முதுகிரியாய்
பொன்னஞ்சிலம்புசிலம்புதலோடையிற்பூஞ்சிறக
ரன்னஞ்சிலம்புநடையிளமானையனங்கனெய்து
தன்னஞ்சிலம்புகுவளையல்லாதுதணந்தனனே. (௭௫)

தணந்தவளக்கரிமேனியளாங்கொல்வெண்சங்கினங்கண்
மணந்தவளக்கரினின்றழுமோவலவாவுயிர்க
ளுணந்தவளக்கரிதாமுதுகுன்றரனோங்கமர
கணந்தவளக்கரியானேத்திறையன்றிக்காப்பிலையே. (௭௬)

காப்புக்கரியுந்திருமகணாயகன்காப்பவற்றின்
பூப்புக்கரியுந்தலையுடையானும்பொருந்தவைத்தான்
மாப்புக்கரியுங்குயிலும்பயில்பொழில்வண்டில்லையான்
மூப்புக்கரியும்புலியுங்கொன்றீர்ந்தமுதுகுன்றனே. (எஎ)

முதுமறையந்தமுறுபொருளோநன்முழுப்பணிக்கு
விதுமறையந்தமுடியாய்புராணம்விளங்கிரண்டோன்
பதுமறையந்தமுதுகுன்றவாணநின்பாதம்வணங்
குதுமறையந்தகனைமார்பிலெம்மைக்குறுகிடினே. (எஅ)

குறுகுமுனிவனையன்றுண்டவிம்முதுகுன்றனுக்கு
மறுகுமுனிவனைசெய்தாலுய்வாரெவர்வந்தருளென்
றறுகுமுனிவனைபோதுமிடார்நமனார்முனிவு
முறுகுமுனிவனையெய்தாரறிவறுமூடரினே. (எகூ)

மூடாநமாதிமிரையடைந்தாயலென்முன்னணுகன்
மீடாநமாதிபெருமானுதைக்கினுமெய்ப்புகழைப்
பாடாநமாதியெழுத்தைந்துமோதிப்பழமலைவாழ்
வீடாநமாதியடியாரடியருண்மேவினமே. (அ0)

மேவத்தகரையிவர்மகவீன்றதொல்வெற்பரச
சேவத்தகரைவொடுபூசித்துன்னைவிண்செல்வமுறும்
பூவத்தகரைநகுவேமெமக்குநின்பொங்கருளா
லோவத்தகரைவகைப்பாசமுந்தம்முரங்குலைந்தே. (அக)

குலையாநிலமும்விசும்புந்தொழுமுதுகுன்றமதிக்
கலையாநிலமும்மடியழல்காயவக்காய்கனலின்
மலையாநிலமுமுடன்கூடவேமெனைவாங்குகழைச்
சிலையானிலமுமெமதில்லமாய்நின்றுசீறுவனே. (அஉ)

சிறிரையாகமதியுணும்பாம்பணிசெல்வமறை
மாறிரையாகமலிமுதுகுன்றமருவுதற்குச்
சேறிரையாகயிலாசவிலாசசுதேவவென்மின்
றேறிரையாகநிலையென்றுவாழன்மின்றொண்டர்களே. (அங)

தொண்டரைக்கூடல்விழையார்பொழின்மலர்த்தூளுதிர்த்த
விண்டரைக்கூடலறவுறல்போலுந்தொல்வெற்புறுமைக் [ல்
கண்டரைக்கூடலுடையாரைப்போற்றிலர்கற்றறியா
மிண்டரைக்கூடல்வழியேநடத்துபுவீழ்த்துவரே. (அச)

வீழிவலஞ்சுழிதில்லைசிராப்பளிவேதவனஞ்
சாழிவலஞ்சுழியன்மேவுகுன்றைக்கடவுள்விடி
னூழிவலஞ்சுழிவெள்வளையானனையன்னகல்விப்
பாழிவலஞ்சுழியுந்தியுள்வாங்குவர்பாவையரே. (அடு)

பாவலருக்குமலிபொருளீந்துகொள்பாட்டினர்க்கு
மேவலருக்குமழுவார்க்குநன்முதுவெற்பினுக்குக்
காவலருக்குமயலாகிநின்றுகலங்குகின்ற
யாவலருக்குவிளைநிலமாயினையாயிழையே. (அசு)

ஆயக்கலையகலுஞ்சீர்முதுகுன்றரசமுனஞ்
சாயக்கலையணியிர்த்தசெம்மேனியதப்பலில்லா
னேயக்கலையபுழுக்கூடெனுமுடனேயமெல்லா
மாயக்கலையமலமாயைகன்மங்கள்வந்தருளே. (அஎ)

வந்திக்கநாவினினையேவழுத்தமலர்விழியான்
முந்திக்கணுவிதொலைத்தோய்நினதமுதுவெற்பையே
சிந்திக்கநாவிமதநாறுமாதரைச்சேருமின்ப
நந்திக்கணுவினொழிவாமென்றுன்னுறநல்குதியே. (அஅ)

நல்குரவேநல்லுரைதான்முதுகுன்றர்நாட்டுனக்குச்
சொல்குரவேநல்குரவுறுவேலதொடைகள்பல
மல்குரவேனலிதண்விட்டகம்புக்கமானையிந்த
வொல்குரவேனல்விடைக்கொடுபோகலென்றேதிலையே. ()

ஓதித்திருக்குமொழிவதல்லாமலுன்னுண்மைநிலை
சாதித்திருக்குமியல்புதந்தாயிலைதன்மையெல்லாம்
போதித்திருக்குமொழிகுன்றைவாணபொருப்புதவுஞ்
சோதித்திருக்குமரிபாகசுந்தரன்றூதுவனே. (௯0)

தூதுகண்டாலுமதியணிவேணியர்துன்னிவந்தென்
காதுகண்டாலுமுடன்மூக்கின்பெய்தநல்காரொனவெம்
மாதுகண்டாலுமுவக்கப்படுமொழிவந்தனள்கார்ப்
போதுகண்டாலுமயில்வாழ்பொழிற்பழம்பூதரனே. (௯௧)

பூதரனன்றுசிலைக்கென்றுகொள்ளும்புராந்தகனூர்
சிதரனன்றுபொழிலெனுங்குன்றைத்திருநகரார்
காதரனன்றும்விழிபெறுமாறுடைக்கண்ணுதலார்
மாதரனன்றுவருமதிக்கோய்தலைமாற்றிலரே. (௯௨)

மாற்குச்சிவந்தமலர்த்தாண்முதுகிரிவாணன்மறை
நூற்குச்சிவந்தவிராப்பொருளென்பவர்நோக்குநான்வேள்
கோற்குச்சிவந்தவிறலாளனின்னுங்குறுகிலனிம்
மேற்குச்சிவந்ததறியேனிவட்குவிளைவதுவே. (௯௩)

விளையவளையுமணிநெல்வயன்முதுவெற்பிறைவ
னளையவளையுமுறவுடையானவ்வனங்கசிலை
வளையவளையுமுடையுந்துறந்துவருந்துறுமிவ்
விளையவளையுமொருபுடைசாரவிருத்திலனே. (௯௪)

இருத்தவிருப்பதிடத்திலல்லாமலிருப்பலென
நிருத்தவிருப்பமுதுகுன்றவாணனை நீவலியுஞ்
செருத்தவிருப்பவுததியையாருணச்சிந்தைசெய்வர்
திருத்தவிருப்பவலையாவர்மெல்லுவர்தேமொழியே. (கூரு)

தேவியுமானும்விளையாடிடமுடைச்செங்கணுத
லாவியுமானும்வருஞ்சீர்முதுகுன்றணிவிழவைக்
காவியுமானும்விழியாய்கண்டெய்தெனக்கண்மறுகி
னேவியுமானும்மகட்கிடர்நீர்செய்திரோழையமே. (கூசு)

ஏடலையாறுகிழித்தெதிரோறவிண்ணேறுபுகழ்க்
கூடலையாறுபுலியூர்மகிழ்முதுகுன்றர்பெற்ற
வேடலையாறுமுயிர்த்தெடுத்தேந்துபுமென்கைகொடுத்
தூடலையாறுவருகவென்பார்நல்லுமைதனையே. (கூஎ)

உமையிடப்பாகனலங்கூர்முதுகுன்றுடையனராச்
சுமையிடப்பாகவரிதேடடியுறத்தூமலர்க
டமையிடப்பாகமருவுவரோலவர்தங்களைப்பா
ரமையிடப்பாகனணுகானுதைநினைந்தஞ்சுவனே. (கூஅ)

அஞ்சுவணத்தைவரன்முறையோதவரக்கெறிந்த
பஞ்சுவணத்தைமருவுமென்றாளுமைபாகமொடு
செஞ்சுவணத்தையனையநின்கோலமென்சிந்தையுற
விஞ்சுவணத்தைமகிழ்குன்றைவாணவிரும்புவனே. (கூகூ)

விருத்தாசலாசங்கராமலைமாதுவிழிகளிக்கு
நிருத்தாசலசந்திரன்போலுடம்பிடைநின்றவர்தங்
கருத்தாசலசம்பவமிலர்க்காண்டறங்காட்டியசொற்
றிருத்தாசலசந்தமியேன்றலைக்குன்றிருவடியே. (௱)

பழமலையந்தாதி முற்றிற்று.

உ

பழமலைநாதர்

பிக்ஷாடன நவமணிமாலை.

நங்குற்றந் தீர்க்கும் பழமலை நாதர்க்கு நற்பலிகொண்
டங்குற்று மென்றுமில் போக்கினள் வெற்றனை யாகியந்தோ
விங்குற் றனையென வெம்பெரு மானிவ் விருநிலத்திற்
றங்குற்றம் பார்க்கு மவருள ரோவெனத் தாழ்ந்தனளே. ()

குன்றா முதுகுன் றுடையா னிலாதவெண் கோவணத்தான்
றன்றா மரைக்கை விரன்மூன்று காட்டித் தனங்குறித்து
நன்றாக வித்தனை பிச்சையுண் டோசொன் னறுநுதலா
யென்றா னிரண்டத் தனையுள கோடியென் றிட்டனளே. (௨)

இப்பாத் திரந்தலை கீழாப் பிடித்தனை யென்னைமுனந்
தப்பாப் பலிகொண் டறிந்திலை யோவெனத் தாழ்குழலாள்
செப்பார் பணைமுலை யாய்நிலத் தேபலி சிந்தியிட்டா
யெப்பாத் திரத்திலு மிட்டறி யாய்கொன்முன் னென்றனரே.

வெட்டன மாதுகை தாழ்த்திட மாமுது வெற்பர்பலி
யொட்டினை நீதொட லாமோ வெனவுமை யுந்தொடலாம்
விட்டினில் யானென வேயவர் தாமிது வேண்டுவைகோல்
யாட்டினின் பாலென மூலமு மாமென்ப தென்றனரே. (௪)

மாண்ட வெலும்பணி கோலமொ டேபலி வாங்கிடுதற்
கீண்டு வருமுது குன்றுடை யீருமை யான்மிடற்றி
னீண்ட வுகிருறுத் தாதனை வேனென்று நீர்தலையைத்
தீண்ட வுமது பலிப்பாத் திரமென் சிரிக்கின்றதே. (௫)

வானோர் தொழுநின் பலிப்பாத் திரத்தை வனைந்ததுந்
தானோ வெனச்சக் கரந்தான் சுழற்றத் தகுங்குயத்தி
யானோர் குயவன்மெய் யென்றே முதுகுன் றிறையியம்ப
நானோ வொருசிற் றிடைச்சியென் றாளந் நறுநுதலே. (சு)

பங்கய மன்ன விழியார் முதுகுன்றர் பாத்திரத்தி
லங்கையி லைய மொடுவண்டு வீழநல் கையவென
வெங்கையில் வந்த தெமதாக வேவழக் கென்றுசெட்டி
மங்கையர் தங்கட் கிருங்கூடலிலிட வைத்தனரே. (எ)

நீருக்குத் தக்க சடையார் முதுகுன்றர் நேடியுங்க
ளூருக்குட் பிச்சையென் றற்றேமுண் டாயி னுமாமினென
வாருக்குத் தக்க முலையா ரதற்குளர் மற்றொருவர்
யாருக்குக் கிட்டு மதுசோறு நீர்கொளு மென்றனரோ. (அ)

முழங்குந் துடியொடு பிச்சையென் றேமுது குன்றர்வரச்
சழங்கு முலைமுதி யாளென் பலியெனத் தம்மனையில்
வழங்கு மனமென் றனர்புறம் போந்து வளர்முலையாள்
விழுங்குமனம்பகற்போதுகொள்வாயென்று வேண்டினளே,

சிறப்புப்பாயிரம்.

பிச்சா டனநவ ரத்தின மாலையைப் பீடுபெறத்
தைச்சான் றுறைமங் கலமுறை சிவ தயாபரனும்
பொய்ச்சார் பதனை யொழிக்குஞ் செழும்புலி யூர்ப்புனித
னற்சார்பு சார்ந்த சிவப்பிர காச நவமணியே.

முற்றுப்பெற்றது.

உ

விருத்தகிரி

பெரியநாயகியம்மை

நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம்.

முழுமணி மிடற்றன் கனன்மழு வீரன் முக்கணுண் டகை நின தெழில்கூர், முகம்புலர் தலைக்கண் டெல்வளைந் தடியின் முளைப்பிறைக் கோடுகொண் டுழுது, விழுமணி யரவ நுழை சடா டவியின் விண்ணதித் தண்புனல் விடுப்ப, விளைவொடு குளிர்ந்து முகமலர் தலினுன் மென்கொடி யெனநினை யுணர்ந்தேன், செழுமணி நீல மழைமுகி றவழுஞ் சிலம்பெனும் புற்றினின் றூர்ந்து, திரைபொரு கடற்பேர்ப் பெரும்படம் விரித்துத் தினமணி யெனப்படுஞ் செங்கேழ்,கெழுமணி யுமிழ்ந்து பேரிருடுரந்து கிடக்குமெய்ம் முடக்குமா சுணமாய்க், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (க)

விழைவொடு நினக்கு மாதுலன் மாமி வெற்புவேண் டுருதுதன் மருகன், மேலெலா மெலும்புந் தோலுமாய்க் கிடத்தல் வெறுத்திடா திளமைநா டாது, பழமலை தனக்குச் சாதியொப் பெனவே பார்த்துனைக் கொடுத்ததுன் றந்தைப்,பனிமலை யென்றே தன்மனை யாட்டி பயந்திடப் பெருமக ளென்றே, கழைவளை முன்ன ருன்றுபு நடந்து கடிதுபள் ளங்களின் வீழ்ந்து, கரைகளின் மெல்ல வேறிவெண் ணுரைவாய்க் கடையுற வளைந்துருத் திரைந்து, கிழவுரு விருத்த நதியெனப் பட்டுக் கீர்த்திமே வுலகினும் போர்ப்பக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (உ)

காமமென் கின்ற கதவுவெந் தீயுங் கடுஞ்சின மெனப்படு
புலியுங்,களிப்பெனுஞ் சிறுகட் புகர்முகப் புழைக்கைக் கறை
யடிக் களிநல்யா னையுமே, தாமிகு மெனது மனமெனும் வ
னத்திற் றனிவரல் வெருவினை யாயிற்,றழலினின் முடிப் புலி
கரி யுரிபோர்த் தடுத்தவாண் டுணையொடும் வருவா, யீமவெ
ள் ளெலும்பங் கிடப்படு மெனத்தா னெலும்பணி கடவுண்
மா நதியா, யிருந்துநல் லன்னங் கொண்டுமெய் வெளுப்ப
வினைதபு கங்கையை யிகழ்ந்து, கீழ்மைசொல் கின்ற தொன்
றுமின் முயிற் கிடைக்குமோ விதன்குண மென்னக், கிளர்ம
ணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே.(௫)

சுட்டுதற் கரிய நின்னைமெய்ஞ் ஞான சொரூபியென் றரு
மறை யனைத்துஞ்,சொல்லுவ துண்மை யென்னநன் குணர்ந்
தேன் சுரந்தநின் றிருமுலைச் செழும்பால், வட்டிலிற் கொச்
சைப் பிள்ளைமுன் னுண்டு வண்புகழ் ஞானசம் பந்த, வள்ள
லென் றிடப்பேர் பெற்றரன் மொழிபோன் மையறீர் செய்
யுள்செய் தமையா, லெட்டிநற் றிகிரி பறித்தெறிந் தரற்கா
லியானையை யுருட்டிவாங் குதிரை, யெறிந்துசங் கதிர்த்துக்
கொடுமர முறித்திட் டெதிர்ந்திடார் தலைவிடுத் தோடிக், கி
ட்டினர்ப் புரட்டி முருகவேள் பூதக் கிளைப்பெரு வெள்ள
மொத் தெழுந்து, கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரிய
மர் பெரியநா யகியே. (௬)

உள்ளமென் மனையில் விருப்பொடு வெறுப்பா முறுகுழி
மேடுக ணிரவி, யொழிவிலா வாய்மை மெழுக்கினாற் பூசி யு
யர்தரு மனமெனப் படுமோர், பள்ளிமென் றவிசி லிருத்தி
நின் பதியைப் பழுதில்யா னெனப்படு நெல்லைப், பழமல மா

யைத் தவிடுமி போக்கிப் பாகஞ்செய் தென்றருத் திடுவாய், தள்ளுமொண் மறிமான் முல்லையு ளாயர் சூழல்வெண் ணெய்க்குட முருட்டித், துணைமுலைக் குவட்டின் மஞ்சண்மேற் படப்போய்த் தோய்ந்துநின் ருடிளங் கயற்கட், கிள்ளைமென் மொழியார் துகிலெடுத் தொளித்துக் கேடில்சீர்க் கண்ணனு டுதல்போற், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௫)

நாடினு ருயிர்க ளாமெவற் றினுக்கு நல்கிய தந்தையுந் தாயு, நம்பனு நீயு மல்லிர்நும் மூர்க்கே நவின்றவம் முறையுளீர் நீவிர், பாடியா ரணஞ்சொ லீண்டுமொய் வளைதாம் பரிந்துநீ மடிமிசைக் கிடத்தப், பழமலை தனது பெயர்வலக் காதிற் பகர்ந்தருள் செயப்பெறுஞ் செயலா, லோடியோர் காக மேறுபு கவிழ்த்த வொருசிறு கரகநீர் தானு, மொருவனோர் செவியால் விடுத்தவப் புனலு முமைபொரு பாகர்கட் டோன்றிக், கேடிலா னந்த வுருவமா மெனையொக் கின்றனை வோவென வதிர்த்துக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநா யகியே. (௬)

தன்னொரு மகன்வா கனத்தினை வெறுத்தோர் தனயன்வா கனத்தினை விரும்புந், தண்மணிப் பணியு மதனையுள் வெருவித் தான்வள ராமதி யமும்வாழ், மின்னவிர் சடையான் றனைநினை யன்றி மேவுவா னவனைநெஞ் சுன்னல், விரிகதிர் விழுங்கு மணியினை விடுத்து வெறுமணி கொள்ளுமா றன்றே, மன்னவர் மனிதர் சந்திரன் பரிதி மகபதி மலரயன் மழவி, வானவர் வசுக்கள் சித்தர்கிம் புருடர் மாதவர் விஞ்சைய ரசுரர், கின்னர ருரகர் மூழ்குபே ரரவங் கேட்டொரு மு

ராரிபாய் சுருட்டக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநாயகியே. (எ)

படைத்திடுந் தொழிலோன் மறைச்சடங் கியற்றப் பாவியேன் மனத்தினும் வலிய, பன்மணி குயின்ற செம்பொனம் மியினின் பதமலர் வைத்தக லாம, விடத்தினி லுனைவைத் தருளுதன் முன்னே வியற்பகை மனைவியை யிரந்தா, னிளம்பிறை சூடு மிறையவன் பின்ன ரெங்ஙனம் போயிரந் திடுவான், கொடுத்தெனி லிடுபொன் புலவனுக் காரூர்க் குளத்தினிற் பழமலை யன்று, கொடுத்தது நானே கொடுத்தன னென்னிற் குளித்தகல் பவர்குளத் தெல்லாங், கிடைத்திட வொருகண் டருமெனக் கிதுசெய் கின்றதற் புதங்கொலோ வென்னச், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநாயகியே. (அ)

பண்டுநின் கொழுநன் றந்தையுந் தாயும் பயந்ததன் னருமருந் தன்ன, பாலனைக் கொன்று சமைத்திடக் கொள்ளும் பாதக மொன்றுளங் கொண்டு, தொண்டர்தம் மனையிற் செல்வனென் றெழுநின் சுதனழப் பொருதுநின் முலைப்பால், சுரந்தமு தூட்டு மன்னைநீ யாவாய் தொழுதுபோய்ப் பிரித்திலை யென்னே, வண்டர்தங் கங்கை யன்னமங் கதன்களுடல தன்னைவந் தடையா, வாடியிங் கிதன்க ணமர்வுறப் பெறலா லடைந்துவான் கங்கையை யிகழ்ந்து, கெண்டையொண் வாளை யுடனெழக் குதிப்பக் கிளைவளைக் கமுகின்மேற் றவழக், கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநாயகியே. (கூ)

புரிசடைக் காட்டு ளாடவிட் டிளவம் புலியினைச் சிறப்புலி யொடுகோட், புலிதொழ விருக்கு மொருபெருந் தெய்வப் புலிபணி மலையிள மானைப், பரிவுறத் தொழுது மருவிய வதனாற் பயமறச் சாதிக டனது, பாங்கர்வந் தெய்தப் பெற்றதென் றறிந்து பசுவெலா மருவுறப் பெறுமே, சுரிகுழற் கயற்கட் பிறைநுதற் கனிவாய்த் துடியிடைக் குவிமுலைத் தளிர்க்கைத், துணைவிழுற் கங்கை பெயர்சொலக் கூசுஞ் சுடர்மணிக் கட்செவிப் பணியான், கிரிமகட் கடுத்த கறைமிடற் றிறைவன் கிளக்குமேற் புகழெனத் தோன்றிக்; கிளர்மணி முத்த நதியுடை விருத்த கிரியமர் பெரியநாயகியே. (௧0)

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பெரியநாயகியம்மைகலித்துறை.

இறைவற்குத் தக்க விறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாமிறு மாப்பனெனக்
குறைவற்ற நெற்கொண் டுலகேற் றுணைப்பலி கொள்ளுமரன்
பெறவுற் றனையனை யேகுன்றை வாழும் பெரியம்மையே (க)

பத்தர்க்கு நெஞ்ச மலர்மீ திருத்திப் பயந்துநெடுஞ்
சித்தர்க் ககலுநின் பாதாம் புயமொரு செஞ்சிலைமேல்
வைத்தற்குமெண்ணி மதியுடையேனென்பன்வார்சடையான்
பித்தர்க்குத் தங்குண நூலினுஞ் செம்மை பெரியம்மையே()

இழைபொறுத் தாற்பொறை தானென்ப ரானல் லிசைப்பு
லவர், மழைபொறுத் தார்புளன் முக்காற் பொறுக்கும் வழ
க்கதுண்டே, யுழைபொறுத் தார்நல் லியற்பகை யார்மனைக்
குற்றவொரு, பிழைபொறுத் தாய்நன்று காண்குன்றை வா
ழும் பெரியம்மையே. (ரு)
கையன்று தாமரை கண்ணன் றிளமென் சயலெனவே, பொ
ய்யன் றுகங்கையைநீயொன் றுசாதிப்பர்போர்விடையார்,மெய்
யென் றுநீகொண்டிரோலறலாயினெனென்மென்கையிடைப், பெ
ய்யென்றுபின்னை யறிவாய்தென் குன்றைப்பெரியம்மையே.
பொன்வாங்கு செஞ்சடைப் பாம்புகள் சுற்றும் புதுமதியி
னன்வாங்கு கோடு கிழிக்கு நகுவெண் டலைபடுங்கன்
முன்வாங்கு மெந்தைநின் பாதாம் புயத்தின் முடிவணங்கிற்
பின்வாங்கி நில்லன்ன மேகுன்றை வாழும் பெரியம்மையே.
கடிநறு மென்றரு மீதிருப் பானெனக் கங்கையென்பாண்
முடிநடு வேறி யிருந்தனள் வேனின் முதிர்விலத
னடியடை வானெனச் சங்கரன் பாங்க் ரமர்ந்தனைநீ
பிடிநடை யேகுயி லேகுன்றை வாழும் பெரியம்மையே. (சா)
நின்போ லிலரரு ளாளரொன் றேசொல நின்கொழுந
னென்போ ருருவன் மகன்பூங் கழுத்தினை யீர்வலென்றே
யன்போர் சிறிது மிலனுகப் போக வதற்கிசைந்து
பின்போய்விடாதுகண்டாய்குன்றைவாழும்பெரியம்மையே.
செச்சை மலர்புனை வானோடு மேனி திறந்துகொண்டு
கச்சை யரவொன் றசைத்துக் கபாலங் கரத்தெடுத்துப்
பச்சை மயிலனை யார்மனை தோறும் படர்ந்திரக்கும்[மையே.
பிச்சை யொழிகென் றொருவார்த்தை சொல்லெம் பெரியம்

சோதிப் பதியன்றி வேறொரு தெய்வந் தொழுதற்கில்லை
யோதிற் பிறரென வச்ச முறும லுயிர்கணெல்லா
நீதிப் புதல்வர்க ளாயின வாதலி னீகொள்கற்புப்
பேதிப்பதன்றுகண்டாய்குன்றைவாழும்பெரியம்மையே (கூ)

நின்னைய நாயக னென்றிருப் பாய்நினை நீத்தகன்று, தன்
னேரில் பூவணத் தேயன்று போய்ச்செய்த தன்மையெலாஞ்,
சொன்னே னலேனினி நின்னோ டொளிப்பதென் சொல்லுவ
ன்யான்; பின்னே தெனக்குத் தருவாய்தென் குன்றைப் பெ
ரியம்மையே. (க0)

நற்றவத் துன்னைப் பெறுமலைக் கென்னமுன் னல்கியுனைப்
பற்றுறக் கொண்ட தெலும்பே யணியும் பழமலைதான்
சற்றெனக் கையன் தராதுசொன் னும்மலைச் சாதியுள்ளே
பெற்றவர்க்கென்னமுலைவிலைகுன்றைப்பெரியம்மையே. (கச)

கற்று ரறிந்துவர் மக்கடம் பேறெனக் கட்டுரைத்த
சொற்று னொருபெண் ணொழித்ததென் பாரொடு தொல்லுலகி
னற்றுண் மகற்பெறு கென்றுசி சொல்பவர் நாணவுனைப்
பெற்றுள் மலையனா யன்குன்றை வாழும் பெரியம்மையே.()

கரிய மிடறுடைப் பெம்மான் கரத்துறைக் கன்றொடுமோ
ரரிய முடியம் புலியோடு மேவினை யாடுகின்றாய்
தெரிய வரிய பதினா லுலகுமென் சிற்றிலென்பாய்
பெரியவ ளென்ப துனக்கேது குன்றைப் பெரியம்மையே. ()

தண்ணு ரிதழி புனைவான் விழிபிணை தம்மனைகள்
பண்ணு வழிக்குமென் றோநின் றிருமுக பங்கயத்திற்
கண்ணு யினருனக் கவ்வலை மாதுங் கலைமகளும்
பெண்ணரமுதனையாய்குன்றைவாழும்பெரியம்மையே. (கசு)

உள்ளத் துறுபிணி யேற்கு மருந்துக்கென் றுன்னைவந்து
மெள்ளத் தொழவுந் திருமுலைப் பான்மெல் விரனுதியாற்
றெள்ளித் துளியள வாயினுந் தொட்டுத்தெறித்திலையுன்[யே
பிள்ளைக்குங் கிள்ளைக்கும் பால்கொடுத் தாலென் பெரியம்மை

ஆருத் துயர்கொண் டடியேன் சலிப்ப வதுசெவியி
லேறும லேயிருந் தாலென்செய் வேனெங்க ளீசற்கொரு
கூருகி யண்ட முதலா யிளமை குலவுதவப்
பேருகி வாழ்பவ ளேகுன்றை வாழும்பெரியம்மையே.(கசு)

நனைமாட்சி மென்கொன்றைத் தாரோன் றருமிரு நாழிநெல்லால், வினைமாட்சி கொண்டுயி ரொல்லா மளித்தருண் மேன்மையினுன், மனைமாட்சி யெய்து முனக்கே பெருங்கற்பு மாட்சியன்றிப், பினைமாட்சி யார்க்குண் டுலகின்ற குன்றைப் பெரியம்மையே. (கஎ)

நெடிய விலங்க லொருசிலை யாக்கிய நின்பதிமேற் [த
கொடிய வநங்கன் சிலைபோ யெடுத்துமுன் கொண்டெதிர்ந்
வொடிவி லருஞ்சிலைச் செங்கரும் போசொல் லுனதுநடுப்
பிடியு ளடங்கிய தென்னிது குன்றைப்பெரியம்மையே.(கஅ)

பண்டரு வீணை யொடுபாட வந்தவப் பாமடந்தை
கண்டழு மாறு மதிநிரை போலக் கவின்கனியும்
வெண்டலை மாலை கிடந்தொளிர் தோளிக்கு வீங்குமுலைப்
பெண்டகை மாமணி நீகுன்றை வாழும் பெரியம்மையே. ()

முற்றிற்று.

நன்னெறி.

:o:

காப்பு.

மின்னெறி சடாமுடி விநாயக னடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே.

என்று முகம னியம்பா தவர்கண்ணுஞ்
சென்று பொருள்கொடுப்பர் தீதற்றோர் - துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழ்வோ
நாவிற் குதவு நயந்து. (௧)

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க - வீசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு. (௨)

தங்கட் குதவிலர்கைத் தாமொன்று கொள்ளினவர்
தங்கட் குரியவராற் றாங்கொள்க - தங்கநெடுங்
குன்றினாற் செய்தனைய கொங்கையா யாவின்பால்
கன்றினாற் கொள்ப கறந்து. (௩)

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம் வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறாம் - பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு. (௪)

நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலு
நோக்கி னவர்பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மைநிலை போம். (௫)

காதன் மனையாளுங் காதலனு மாறின்றித்
தீதி லொருகருமஞ் செய்பவே - யோதுகலை
யெண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கலுங்
கண்ணிரண்டு மொன்றையே காண். (சு)

கடலே யனையம்யாங் கல்வியா லென்னு
மடலே றனையசெருக் காழ்த்தி - விடலே
முனிக்கரசு கையான் முகந்து முழங்கும்
பனிக்கடலு முண்ணப் படும். (எ)

உள்ளங் கவர்ந்தெழுந் தோங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க - வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. (அ)

மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற் - பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவியஞ் சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து. (கூ)

தங்குறைதீர் வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறைதீர்க் கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகி
னிறையிருளை நீக்குமே யின்று. (க0)

பொய்ப்புலன்க ளைந்துநோய் புல்லியர்பா லன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாந் - துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறு வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு. (கக)

வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
பொருந்துத றானே புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது
வீதலோ நிற்றல் வியப்பு. (௧௨)

பெருக்க மொடுசுருக்கம் பெற்றபொருட் கேற்ப
விருப்ப மொடுகொடுப்பர் மேலோர் - சுரக்கு
மலையளவு நின்றமுலை மாதே மதியின்
கலையளவு நின்ற கதிர். (௧௩)

தொலையாப் பெருஞ்செல்வத் தோற்றத்தோ மென்று
தலையா யவர்செருக்குச் சார்த - லிலையா
லினரக்கும்வண் டேமல ரீர்ங்கோதாய் மேரு
வனைக்கும்வந் தன்று வளைவு. (௧௪)

இல்லானுக் கன்பிங் கிடம்பொரு ளேவன்மற்
றெல்லா மிருந்துமவற் கென்செய்யு - நல்லாய்
மொழியிலார்க் கேது முதுநூ றெரியும்
விழியிலார்க் கேது விளக்கு. (௧௫)

தம்மையுந் தங்க டலைமையையும் பார்த்துயர்ந்தோர்
தம்மை மதியார் தமையடைந்தோர் - தம்மி
னிழியினுஞ் செல்வ ரிடர்தீர்ப்ப ரல்கு
கழியினுஞ்செல் லாதோ கடல். (௧௬)

எந்தைநல் கூர்ந்தா னிரப்பார்க்கீந் தென்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா வரம்பையின்கீழ்க்
கன்று முதவுங் கனி. (௧௭)

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே - பொன்செ
யதிர்வளையாய் பொங்கா தழற்கதிராற் றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல். (௧௮)

நல்லோர் வரவா னகைமுகங்கொண் டின்புறீஇ
யல்லோர் வரவா னழுங்குவார் - வல்லோர்
திருந்துந் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்துஞ் சுழல்கால் வர. (௧௯)

பெரியவர்தந் நோய்போற் பிறர்நோய்கண் டுள்ள
மெரியி னிழுதாவ ரென்க - தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண். (௨0)

எழுத்தறியார் கல்விப் பெருக்க மனைத்து
மெழுத்தறிவார்க் காணி னிலையா - மெழுத்தறிவா
ராயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில்
வீயுஞ் சுரநீர் மிகை. (௨௧)

ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர்விழிவு வேண்டற்க - நீக்கு
பவரா ரரவின் பருமணிகண் டென்றுங்
கவரார் கடலின் கடு. (௨௨)

பகர்ச்சி மடவார் பயிலநோன் பாற்ற
றிகழ்ச்சி தருநெஞ்சத் திட்ப - நெகிழ்ச்சி
பெறும்பூரிக் கின்றமுலைப் பேதாய் பலகா
லெறும்பூரக் கற்குழியு மே. (௨௩)

உண்டு குணமிங் கொருவர்க் கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே - வண்டுமலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய் வேம்பன்றோ
காக்கை விரும்புங் கனி. (உ௪)

கல்லா வறிவிற் கயவர்பாற் கற்றுணர்ந்த
நல்லார் தமதுகன நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியுங் கருங்கண்ணாய் நொய்தாம்
புணையிற் புகுமொண் பொருள். (உ௫)

உடலின் சிறுமைகண் டொண்புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண்ணளவாய் நின்றதோ காணுங் கதிரொளிதான்
விண்ணளவா யிற்றே விளம்பு. (உ௬)

கைம்மா றுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மா லியலுதவி தாஞ்செய்வ - ரம்மா
முளைக்கு மெயிறு முதிர்சுவைநா விற்கு
விளைக்கும் வலியனதா மென்று. (உ௭)

முனிவினு நல்குவர் மூதறிஞ ருள்ளக்
கனிவினு நல்கார் கயவர் - நனிவிளைவில்
காயினு மாகுங் கதலிதா னெட்டிபழுத்
தாயினு மாமோ வறை. (உ௮)

உடற்கு வருமிடர்நெஞ் சோங்குபரத் துற்றோ
ரடுக்கு மொருகோடி யாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகலும் பனிமொழியா யஞ்சுமோ
மண்ணிற் புலியைமதி மான். (உ௯)

கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்மு
னுள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே - வெள்ளம்
வருவதற்கு முன்ன ரணைகோலி வையார்
பெருகுதற்க ணென்செய்வார் பேசு. (௧0)

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்
மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது. (௧௧)

பன்னும் பனுவற் பயன்றே றறிவிலார்
மன்னு மறங்கள் வலியிலவே - நன்னுதால்
காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றான். (௧௨)

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர்
விள்ளா வறிஞரது வேண்டாரோ - தள்ளாக்
கரைகாப் புளதுநீர் கட்டுகுள மன்றிக்
கரைகாப் புளதோ கடல். (௧௩)

அறிவுடையா ரன்றி யதுபெறார் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு. (௧௪)

கற்ற வறிவினரைக் காமுறுவர் மேன்மக்கண்
மற்றையர்தா மென்று மதியாரோ - வெற்றிநெடு
வேல்வேண்டும் வாள்விழியாய் வேண்டா புளிங்காடி
பால்வேண்டும் வாழைப் பழம். (௧௫)

தக்கார்க்கே யீவர் தகார்க்களிப்பா ரில்லென்று
மிக்கார்க் குதவார் விழுமியோ - ரொக்காலு
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய். (௩௬)

பெரியார்முற் றன்னைப் புனைந்துரைத்த பேதை
தரியா துயர்வகன்று தாழுந் - தெரியாய்கொல்
பொன்னுயர்வு தீர்த்த புணர்முலையாய் விந்தமலை
தன்னுயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து. (௩௭)

நல்லார் செயுங்கேண்மை நாடோறு நன்றாகு
மல்லார் செயுங்கேண்மை யாகாதே - நல்லாய்கேள்
காய்முற்றிற் றின்றீங் கனியா மிளந்தளிர்நாள்
போய்முற்றி னென்னாகிப் போம். (௩௮)

சற்றறியார் செய்யுங் கடிநட்புந் தாங்கூடி
யுற்றுழியுந் தீமைநிகழ் வுள்ளதே - பொற்றொடீ
சென்று படர்ந்த செழுங்கொடிமென் பூமலர்ந்த
வன்றே மணமுடைய தாம். (௩௯)

பொன்னணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னு மறிஞரைத்தா மற்றெவ்வார் - மின்னுமணி
பூணும் பிறவுறுப்புப் பொன்னே யதுபுனையாக்
காணுங்கண் ணொக்குமோ காண். (௪0)

நன்னெறி முற்றிற்று.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

பிரசித்தபத்திரம்.

சிவப்பிரகாசசுவாமிகள், வேலையசுவாமிகள், கருணைப் பிரகாசசுவாமிகள் என்னும் மூவராலும் அருளிச்செய்யப் பட்ட (௩௩) பிரபந்தங்களுக்குள், திருவெங்கையலங்காரம், க்ஷேத்திரவெண்பா, சிவநாமமகிமை, யேசுமத நிராகரணம், பழமலைநாதர் கொச்சகக்கலிப்பா, அதிசயப்பத்து, வேலைய சுவாமிகள் கைத்தலமாலை, மயிலத்து இரட்டைமணிமாலை, பாரிசாதலீலை, குகைநமச்சிவாயலீலை, வீரசிங்காதனபுராண ம் என்னும் பதினொன்றும் அகப்படவேயில்லை: மற்றைப் பிர பந்தங்கள் அச்சிடப்பட்டு வருகின்றன: இவற்றுள், திருவெ ங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, சிவப்பிரகாசவிகாசம், சதமணிமாலை, தருக்கபரிபாஷை, மயிலத்துலா, இஷ்டலிங்க வகவல் என்னும் ஏழு பிரபந்தங்களுக்குமாத்திரம் இன்னும் இரண்டுமூன்று பிரதிகள் வேண்டியிருக்கின்றன: ஆகலின், இப்பிரபந்தங்களில் ஏதேனும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் அனுப்புவார்களாயின் மிகவும் பேருபகாரமாகும். இதுவிஷ யத்தில் புகழ்புண்ணியங்களையேயன்றிப் பொருளைவிரும்பி னும் இயன்றவளவு உபகரிக்கலாம். இங்ஙனம்,

சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டி யார்வீதியில் மேலண்டைவாடை 130-வது நெம்பர் வீடு

☞ கா - ஞானசுந்தரஐயர்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௩௩	௧௪	யுடைவர்	யுடையவர்
௭௭	௨௫	கோல்	கொல்

உ

கணபதிதுணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாளையம்

சிவஞானபாலையதேசிகராதீனத்து

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

இஷ்டலிங்கவபிஷேகமாலை

முதலிய பிரபந்தங்கள்.

இவை,

ஷை ஆதீனத்துச் சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு,

கரயாறு

ஞானசுந்தரஐயராலும்

பாளையம்

சோமசுந்தரசெட்டியாராலும்

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

பார்த்திப௵ ஆவணிமீ.

உ

க. அபிஷேகமாலை.

௨. பெருங்கழிநெடில்.

௩. குறுங்கழிநெடில்.

௪. நிரஞ்சனமாலை.

௫. கைத்தலமாலை.

விலை அணா - க.

௨

சிவசண்முகன்றுணை.

இஷ்டலிங்கவபிஷேகமாலை.

பந்தமறுமரர்மிருடர் பவருருத்திரர்களொரு பதினொரு வர்மிளிர்பீடமேற், படியிலையைவகைப் படுமீசர்தாநிதம் பத்திலெண்வித்தையிறைவர், சந்தமுறுகோமுகத் தைங்கலைகள் சத்திசா தாக்கியமூர்த்திவதனந், தட்டற்றவட்டத்தி லொட்டற்றசிற்சத்தி தானுற்றநாளத்திலே, நந்தலறவருகோளக ந்திசழ்சிதம்பர நற்சிகையினிற்சூனிய, நட்டமறவமைகின்ற விட்டவடிவொடுநின்ற ஞானமயமோனநடுவோ, டந்தமற முந்துபர மானந்தநீநந்த வபிடேகமாடியருளே, யறிவுற்றெ னங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே.

நாடரியசத்தியோ சாதத்தும்வாமத்து நன்றுமகோரத்தி லு, நவையற்றபுருடத்து மாகமமொராவ்வைந்து நல்கியீ சானத்திலே, பீடுதருமெட்டுமுறை தந்தவற்றிடைநீசொல் பெருமைபெறுமருமைவிதியிற், பேசரியபூசைசிவ கோசரி யெனப்புரிதல் பெற்றிலேன்மற்றடியனேன், வேடுவர்குலத் தலைவன் மெய்யன்புபூண்டிலேன் வேட்டொருவர்மாட்டரு ளினுன், மீக்கொளொருபுடையொப்பு நோக்கிவைத்தனைசா ற்றின் வேண்டல்வேண்டாமையிலையா, லாடுகின்பால்வேறு பாடொன்றிலாமையா லபிடேகமாடியருளே, யறிவுற்றென ங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே.(௨)

நவிற்றலருமிதயமிளிர் கண்டநாவடிபுருவ நடுவுபிரமப்பு ழையெனு, நல்லிடத்தகராதி கிரியாதிமனமுதல நண்ணியு மைம்மூவகை, யிவற்றிலொவ்வொன்றகல நின்றவிடயங்க ளெதிர் வின்றிச்சிவாகாரமா, யெதிருநனவுஞ்சொகமென்று பாவித்தலுறு மென்கனவுஞாதுருவொடே, யுவப்பறிவுஞேய மென வுற்றனுபவித்திடு மொண்சுழுத்தியுஞானமே,யொளிர் துரியமுந்திளைத் தயர்சிவானந்தநுகர் வுறுமதீதமுமாகுநல், லவத்தைகள்கடந்தவற் றப்புறப்படுமமல னபிடேகமாடியரு ளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபி டேகமாடியருளே. (ங)

ஒருவனோர்பொருளிலாற் குற்றுதவினுளம்வியந் தொகை பெறுமன்றியுடைமை, யுதவுருவமையத்தி லுதவினுந்தன்னி டத் துள்ளதிற்பெரிதளிக்கும், பொருளதாயினுமதனி னினிய தாயினுமவன் புந்திமகிழ்வுற்றிடுவனால், புனல்விடுத்திடுமுடி யி னிற்புணரியிற்பெருகு புண்ணியத்தெய்வநதிதான், மருவ லானீர்விருப் பிலைவிளக்கொருதிவலை மற்றென்முடியிற்றெறி ப்பின், வைப்பன்வானத்தினென வெத்திறத்தானுநினை மக்க ணினைவுற்றுய்ந்திட, வருளினன்முனம்விதித் தவனுதலான்ம கிழ்ந் தபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறி வுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (ச)

கருகிச்சிவந்தகடு வருகிப்பொருந்தமிளிர் களம்வாழ்வு மேவவணிவாய், கடலிற்சிறந்தநிற் வுடலிற்றிருந்துமணி கதி ர்போலவேயுநெடுமா, லொருகட்கிசைந்தவடி யிருகட்கிண ஙகவற முடையார்முனோடிவருவா, யுலகத்தைவென்றமன மிலகுற்றமன்றினிடை யுமைகாணவாடல்புரிவாய், மருகற்

பெரும்பதியி லொருகற்பணங்குதொழ மணவாளனுவியுத வா, மயிலைக்கணென்பினுயிர் பயில்வுற்றெழுந்துவர வருவா யெனுமுனமழையா, வ்ருகர்க்கணங்குழரு முருகர்க்குகந்தவ ரனபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற் றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (௫)

ஓகைமலிகுருவாணை யுறுவிக்குமாணையு முயர்புராதனசரி தமோ, டொக்குநடைவருவிக்கு முவமையுந்தன்மகனை யொ ண்சுவத்திகமேற்றுபு, சோகமறுமனுமயஞ் செய்தமைத்திடு மொரு சுவத்திகாரோகணமுநூல், சொல்லியவிடங்களிற் றூயநீறணிதருந் தொல்விபூதிப்பட்டமு, மாகலசநீராட்டுக லசாபிடேகமு மருவுசிவநோக்குவிக்கும், வயங்குலிங்காயத மு மன்னுசிவலிங்கமுரு வனைசுவாயதமுமெனுமே, மூாகுநெ றிதான்மருவி யாகமிசையிலகுமர னபிடேகமாடியருளே, ய றிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடி யருளே. (௬)

போயகுலமொடுசரண ரொடுமேவுசமயமும் பொன்றுல கம்விட்டமலனூர், பூசனைகொளரியநிச் சஞ்சாரமுங்கொடிய பொன்பெண்மண்ணாசைநெறியிற், பாயமனமோடாத நிட்டி ராணமுமெய்ம்முப் பத்தாறுதத்துவமறப், பகுதியொடுணர் த்தூதத் துவமுமிறையஞ்சனி பாலொன்னுமான்மிகமுமே, மே யசடுலிங்கமுட னுறங்கமாகுமொருமெய்யனுக்கிரகநிலையும், விமலமுறுசச்சிதா னந்தசிவமயமென்னு மிக்கசத்தியசுத்த மு,மாயவெழுவகைநெறியி னுவியிடையிலகுமர னபிடேகமா டியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை ய பிடேகமாடியருளே. (௭)

கிடைத்தசிவலிங்கமன் றுணராதவேகாக் கிரசித்தமென் னும்விரதங், கெடாததிடவிரதம்விட யங்கள்சிவனுக்குதவு கின்றவிந்திரியார்ப்பித, முடற்றியுயிர்கொன்றிடா நின்றிடும கிஞ்சைசிவ னுண்மைகொளிலிங்கநிசமே, யுயர்சிவத்துளம டங் குறுமனேலயமதனி லொன்றாகிநின்றுபேதம், விடுத்த லுறுசத்தியோன் முத்தியெனுமிவையேழு மிக்கருவருள் புரியவே, மேவலருமெய்ஞ்ஞான பாவநிலைமேவியிடும் வேத முடியாவுமுணரா, தடுத்தமனமொழியுடற் கப்புறப்படுமமல னபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்ற மர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (அ)

நல்லதிலநெய்யாடி யானிடத்தைந்தாடி நவையிலையமுத மாடி, நல்குகாரணகாரி யம்முறையினன்றியே நறுநெய்பா றயிராடியே, மெல்லமலர்மதுவாடி யின்கழைச்சாறாடி மென் பழச்சாறாடியே, விழையுமிளநீராடி யரக்குழம்பாடி விதியி னமைநபனமாடி, யொல்லைநகுவெண்டலைப் புழையினிடை யோடிநல் லுத்திகொடுபைத்ததலைய, வுரகநுழைவுறவிளங் குழவிமதியொருபுடை யொதுங்கவிடமின்றியசைய, வல்லல றநிறைகங்கை யசையாதுநிற்பநீ யபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமா டியருளே. (கூ)

நரர்கடமினரசரவர் தமினியதிவவியாழ் நண்ணுநரசந்த ருவர்தா, நவிலுமவர்தமினமர கந்தருவரவர்தம்மி னுடரிய தேவரவரிற், சுரரதிபனவனினுயர் சுரர்குரவனவனினயன் சொன்முறையினூறுமடிமேற், றுன்னுசுகமொருதிவலை யள வுமின்றாகமிகு சுகவேலைபுகலீருவாய், தனைமுதற்பூதங்கள்

புத்திகுணதத்துவந் தகுதிபெறுபகுதிபுருட, தத்துவம்வித்தைமுத லனவெனுமிவற்றிலறு சமயரொனவெமைவிடாம, லருளினிணையடைதலுறு மரியபதமருளுமவ னபிடேகமாடியருளே, யறிவுற்றெனங்கைமலர் செறிவுற்றமர்ந்தவிறை யபிடேகமாடியருளே. (கo)

அபிஷேகமாலைமுற்றிற்று.

நெடுங்கழிநெடில்.

பெருந்துறு மன்பாற் பூசனை புரிந்த பிணங்குநூற் சிலம்பி வெவ் வரவம், பிறைமருப் புரற்கால் யானையென் றிவற்றின் பிறவியோ விதழ்முறுக் கவிழ்ந்து, முருகுமிழ் நறுமென் மலர்புனைந் தன்னை முற்றும்வந் தனைபுரி யாமன், முகிழ்முலை மகளிர் மயலிடை யழுந்து மூடர்தம் பிறவியோ நல்ல, திரைபொருங் கங்கை யுவட்டெடுத் தொழுகுஞ் செஞ்சடைமிசையொரு துளிநீர், தெறித்தவர் தமையு நறவுகொப் பளிக்குஞ் செழுமலர்க் கற்பக வேந்து, மெரிபுரை யிதழ்ச்செங் கமலநான் முகனு மெய்தரும் பதத்தில்வைத் தருள்வோ,யிட்டடஙன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே()

கட்டழ கமைந்த காளையம் பருவங் கடந்திடா துள்வலியுடைத்துக், கலங்கல்செய் பிணியின் றியன்றயாக் கையராய்க் கல்வியங் கடல்கடந் தவராய், நட்டவர் விரும்பு மாறுநீ செய்ய நடக்குநா ளுடல்வெறுத் துனையே, நம்பியா ரூரன் முதலியோர் நண்ண நானுடல் விடுமென வழிவேன், பட்டி

ருள் விழுங்க வலர்கதி ரவனும் பனிமதி யோடுயிர்த் தொகையும், பார்புனல் சுடுதீ வளிவிசும் பென்னப் பட்டவைம் பூதமு மாகு, மெட்டுரு வடைந்து முருவமொன் றின்றி யிற்றென வுணர்வரும் பொருளே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (உ)

மனமெனும் வயமா வென்வயப் படாமன் மயங்குறு மைம்புல வீதி, மறிபடா தோடு கின்றது முறையோ மறித்ததை நிறுத்தியென் றனக்கு, நினையல துதவு வாரிலை யதனு வினைப்பர வுற்றன னதனை, நிறுத்திநீ யிவர்ந்துபின்னர்நீ வேண்டு நெறிகளிற் சென்றிட விடுவாய், கனலுறு மெழுகி னெஞ்சநெக் குடைந்து கரையில்பே ரன்பெனும் வெள்ளங், கண்வழி புறப்பட் டென்னநீர் வாரக் காலங்க டொறும்வழு வாம, லினமலர் தூவு மடியவ ருள்ளத் திருள்கெட வெழுந்தபே ரொளியே,யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௩)

கிலங்கடந் தவன்முன் னறுமலர் சாத்த நிகரிலம் மூர்த்திமுன் சந்து, நினக்கணி வுறவாட் டாயர்முன் னிருந்து நிவேதனம் புரிந்திட வன்று, நலங்கிளர் கலையர் கலியர்முன் றூபநல்விளக் களிப்பநின் றன்னை, ஞானசம் பந்தப் பிள்ளைமுன் பாட நாணிலேன் பூசனை புரிவேன்,—விலங்கினுங் கடையர் வளர்த்தசெந் தீயின் விரைந்தெழும் வாள்வரி வேங்கை, விடுப்பவங் கதுவந் தெதிர்ந்திட விகழ்ந்து விடாததன் றோலுரித் திருள்கொண்—டிலங்கொளி யிரவி யனையமெய்ப் படுத்த விறைவனே யநிட்டநின் றகற்றி, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௪)

மூக்கிடை யிரண்டு விழிகளோ டுதன்முன் முடங்குகைக் கோலொரு காலா, முன்னநின் றிருவாய் மலர்ந்தருள் செய்த முதிர்கலைப் பொருள்படித் தவராய்க்;—கார்க்கடன் முகட்டி னிரவிவந் தெழுமுன் கடிதுசென் றணிமலர் கொய்துன், கழற்கிடார் பிறப்பி னுய்ப்பிறப் பினிது கற்றவ ரிகழ்ந்திடாமையினு;—ணுக்கற நோக்கு முருவமே நாவா னுகர்ந்திடா வினியபே ரமுதே, நுதல்விழிக் கனியே கறைமிடற் றரசே நுவலரு மாயையிற் பிறவா;—யாக்கைய துடைய வருட்பெருங் கடலே யெழுந்தொடுங் காதவான் சுடரோ, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (ரு)

திருக்குறு மழுக்கா றவாவொடு வெகுளி செற்றமா கியமன வழுக்கைத், தியானமென் புனலாற் பொய்புறங் கூற றீச்சொலென் கின்றவா யழுக்கை,—யருட்கிளர் நினது துதியெனும் புனலா லவத்தொழி லென்னுமெய் யழுக்கை, யருச்சனை யென்னும் புனலினாற் கழுவா வசுத்தனே னுய்யுநா ளுளதோ;—விருப்பொடு வெறுப்பிங் கிலாதவ னென்ன வெண்மதியோடுவெண் டலையும், விரைவழி புதுந்து வண்டினம் பசுந்தேன் விருந்துணுங் கொன்றைமென் மலரோ,—டெருக்கையுமணிந்து மின்னொளி கடந்த வீர்ஞ்சடைப் பாந்தளு னுடையா, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (சு)

சிவமுட னமூர்த்தி மூர்த்திகர்த் திருவஞ் செயன்மலி கருமமென் றருநூல், செப்புதத் துவமுஞ் சதாசிவ னீசன் றிகழ்தரு பிரமனீ சுரனோ;—டுவமையி லீசா னப்பெய ரவனென் றுரைத்திடு மூர்த்திக டாமு, முற்றவீ சான முதற்பிர பாவ மு

டையநின் றன்னையென் றுணர்வேன்,—புவிமுத லனைத்து மா க்குத லளித்தல் போக்குத லுயிர்வினை யருத்தல், புதிதுறச் செம்பிற் களிம்பென வறிவைப் புணர்மல மகற்றுத லென் னு;—மிவைபல வியைந்தும் விகாரமொன் றின்றி யிரவிபோ னின்றகா ரணனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (எ)

தான்பெறு மழலை மொழிமகன் றன்னைத் தன்கையா லுள ங்களித் தரிந்து, சமைத்துல கறிய விடுபெருந் தொண்டன் றனைச்சிறுத் தொண்டனென் றவன்சே,—யூன்பெறு நீயே யுரைத்தனை யென்று லுரிமையோர் சற்றுமி லாதே, னுன்றிரு ந் தொண்ட னென்றிருப் பதனுக் குன்னுதல் பெரும்பிழை ய ன்றோ;—தேன்பெறு நளின மலர்களா யிரத்தோர் செழுமலர் குறைபட விரைந்து, செங்கணோன் றிடந்து குறையற நிரப் பித் திருமறைச் சிலம்படிக் கணியா,—யான்பெறு நிதியே யெ ன்றுல களந்தோ னேத்திநின் றிறைஞ்சுறு மமுதே, யிட்ட நன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே(அ)

நின்புகழ் பாடும் பாணனுர் தமக்கு நிதிதரச் சேரலன் ற னக்கு, நீமுன முடங்க லொன்றளித் ததுபோ னிகரிலா வச வநா யகன்ற;—னன்பினி லொருநூ றுயிரங் கூறிட் டடுத்தகூ ற் றினிலொரு கூறிங், களிப்பதற் குனது திருமுக மருளா லடியனேற் களிக்குநா ளுளதோ,—பொன்புனை கடுக்கை மலர்ந் தசெம் பவளப் புரிசடைப் பேரருட் குன்றே, புணர்முலைக்க யற்கட் பிறைநுதற் கனிவாய்ப் பொற்றொடி யிடத்துவா ழமுதே;—யென்பும்வெண் டலையு மணிந்துநான் புனிதனென்று

மென் றிருந்திடு பவனே, யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௯)

வங்கையர் முத்த சங்கையர் சென்ன வசவண ரசகணர் வீர, மாச்சையர் பிப்ப பாச்சையர் வள்ள மல்லையர் கல்லைய ரெங்கள்,—சங்கண் வசவ ராசையர் சேட தாசையர் சங்கர தாசர், சவுண்டைய ரொன்றிங் கிவரடிக் கேவ றலையினுற் செய்யுநா ளுளதோ,—பங்கய மலரோ டரிவிழி பரித்த பதமலர் சிவப்பவே னெடுங்கட், பரவைதன் மனைக்கட சுந்தர னேவும் பணியெலா முனிவற வியற்றி,—யெங்கணும் விளங்க நம்பியா ரூர னேவல னெனப்படு மிறையே,—யிட்டநன் குதவி யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௧௦)

நெடுங்கழிநெடில்முற்றிற்று.

குறுங்கழிநெடில்.

பொன்செய்வா ணிகர்போ லெவ்வழி யானும் புண்ணிய மீட்டினு மறிஞர், கொன்செய்பா தகமே புரிந்தன னின்முன் குறுகுவ தென்றென விரங்க, முன்செய்தீ வினையோ கனவிலு மறமே மொழிந்திலேன் களித்திருக் கின்றே, னென்செய்கோ மறலிக் கென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே ()

மென்னிழற் றருவை யடைபவர் தம்மை விடாநிழல் விட்டிடு மாபோ, னின்னடிக் கமல மடைந்திடிற் றொடர்ந்து நீங்கலா வினையுநீங் குறுமே, கன்னலிற் கனியிற் சுவைதரு மமுதே கண்மணி யேயருட் கடலே, யென்னுயிர்த் துணையே யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௨)

முந்திரு வினையுந் தமவென விருப்பின் முற்றவற் றின்பய
ன் றருவாய், வந்தவை நினவென் றிருப்பினங் கவற்றை மா
ற்றிவீ டுறவருள் குவையே, நிந்தையி லென்னெஞ் சுனதுநெ
ஞ் சென்மெய் நினதுமெய் யென்றனிந் தியநின், னிந்தியமெ
னக்கொண் டென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே (௩)

கண்ணுடைக் குறையாற் சுடர்பல வாகிக் காட்டல்போற்
காரண முதலாய், பண்ணுடற் றிறஞ்சே ரொன்றிருக் கதனாற்
பலவுரு வாயினை யொருநீ, பெண்ணுருப் படைத்த பேரரு ளி
டப்பால் பெற்றிட வுகந்தளித் தவனே, யெண்ணிடைப் படா
மலென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௪)

பிறவிமா மிடியன் முனெதிர் கண்ட பெறற்கரி தாயவைப்
பென்ன, வறிவிலே னயன்மாற் கரியநின் றன்னை யம்மவோ
வெளிதுகண் ணுற்றேன், றுறவினோ ருள்ளத் தெழுந்தொளி
பரப்பித் தொல்லிருள் கடியுமெய்ச் சுடரோ, யிறைவிகூற் று
டையா யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௫)

நினக்குறு கூறு மென்மன மதனை நிறைவளைத் தளிர்க்கை
நெட்டிலைவேற், சினக்குறு மலர்க்கட் பேதையர் கொளாம
ற்செறிந்துநீ யேகவர்ந் தருள்வாய், புனக்குற மகட்கு மயல்
கொடு திரிந்த பொறிமயிற் குமரனைப் பயந்தோ, யெனக்குறு
துணையா யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௬)

அன்பினுக் கன்றி நான்புனை மலருக் கருளுவை யலைமலர்க்
கருளின், முன்படுத் தெறிந்த சாக்கியன் கல்லின் முருகலர்
மிகவுமின் றுதோ, துன்பமுற் றிடுசிற் றின்பவெவ் விடயங்

துறந்துளோர் மனத்தெழு தருபே, ரின்பநற் கடலே யென்க
ரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௭)

ஆடுற வடியேன் புதுக்குடந் தருநீ ரன்பன்வாய்ப் புனலு
னைக் காமோ, கூடையின் மலர்பீற் றையிற்றரு மலரோ கூறு
மென் கவியவன் மொழியோ, நாடரு மொருநீ யிறையெனும்
வழக்கை ஞானசம் பந்தனுற் றிட்ட, வேடனா செய்ய வென்
கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௮)

மெய்யுறு பிணிக்கு விலக்குவ வொழித்து விதித்தன கொ
ள்ளுவன் பிறவி, மையுறு பிணிக்கு மவ்வகை செயாமல் வரு
த்துமந் நோயிடைப் படுவேன், பெய்யுறு வளைக்கைத் திருநு
த லுமையாள் பெருவிழிக் கணைகொடு விடாம, லெய்யுறு மு
ரத்தோ யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே. (௯)

சரிப்பினு மொருபா லிருப்பினு முறக்கச் சார்வினும் விழி
ப்பினு மொருசொல், லுரைப்பினும் போக நுகர்வினு மாவி
யொழிவினு நின்னையான் மறவேன், விருப்புறு மலரும் வி
ரையுமே போல விம்மியெங் கணுமுறு பொருளா, யிருப்பி
னு மரியோ யென்கரத் திருக்கு மீசனே மாசிலா மணியே.()

குறுங்கழிநெடில் முற்றிற்று.

நிரஞ்சனமாலை.

நிரஞ்சன சூனிய நிட்கள மாகியந் நிட்களத்தின்
வருஞ்சிவ சித்துச்சின் னுதவிந் துக்களை மன்னியொன்று
யருஞ்சுட ராயக ராதிப் பிரணவ மாகிநின்று
தருஞ்சகம் யாவுமென் கையா லயத்திற் றனிமுதலே. (௧)

குருவாகி முத்தனு விற்கிரி யாதிகள் கொண்டொருமூன்
றருவாய் மலமொழித் தாவிகண் மூவங்க-மாவருளி
யொருவாது தான்முதன் முப்பொரு ளாகி யுவந்துநிற்குந்
திருவாரு மென்கைத் தவிசிடை மேவுஞ் சிவலிங்கமே. (உ)

என்னை யறித லினையறி கின்ற வியல்பதென்று
துன்னை யெனைவிட் டறிவான் றொடர்த லொருவனிழ
றன்னை யடியின் மிதிப்பான் றொடருந் தகைமைத்தன்றோ
பொன்னை நிகர்செஞ் சடைக்கற்றையென் கைப்புராந்தகனே.

தன்பொரு ளென்ப நினைப்பிறர் தம்பொரு டாவரமா
மென்ப னறிந்து முயிர்க்கே ளிருப்பவு மேதிலர்மெய்ப்
புன்புணர் வெஃகு மடமாதி னின்னிற் புறந்திரியு
மன்பறு மென்பவம் போமேயென் னங்கை யமர்ந்தவனே.

அங்கையி னெல்லி யெனவந்தெ னங்கை யமர்ந்தவிளந்
திங்களங் கண்ணி நினையன்றிப் போய்ப்பிற தெய்வந்தொழ
கொங்கவிழ் பூந்துணர்க் கற்பக நீழற் குடிமுனிந்து [ல்
பொங்கெரி வெந்நிர யத்தா டிருப்பப் பொருந்துவதே. (ரு)

சித்து நிரஞ்சனத் தச்சு ளியத்துச் செயலுணாதீர்
நித்த வநாதி சரணன் சரணனந் நிட்களத்தே
யத்தனி மாலிங்க மாதியி ஞனயிக் காதிகளாய்
மெய்த்த வுனையென்று நீங்கேனெ னங்கை விடாதவனே. ()

கண்ணி லிரவி செவியிற் றிசைநின் கருத்தின்மதி
யொண்ணுத லிற்கனல் வானுத ரத்தி லுயிர்ப்பில்வளி
வண்ண வடியிற் புவியிந் திரனயன் மால்புயத்தி
லண்ணல் வதனத் தரன்றோன்று மென்கை யமர்ந்தவனே.

காயங் கரணநற் பாவ மறிபவன் காணறிவு
ஞேயங்க ளாகி முதனடு வீறி னினக்கயலே
யாயிங் கொருபொரு ளர்ப்பிப்ப லென்ப தவிச்சையன்றே
பாயுஞ் சினவிடை யொன்றூரு மென்கைப் பரஞ்சுடரே.(அ)

சத்தங்க ளிங்கங்க ளாயே நிகழ்ந்தது சத்திபத்தி
சித்திங் கடைந்தது கைமுக வர்ப்பித சேடங்களாய்
மெத்தன் றிலங்குநின் னுனந்த மேயென் விழிகளிப்பக்
கைத்தங்கு செம்பொரு ளேயருள்காட்டுங்கறைக்கண்டனே.

வான்குறித் தெய்யுங் கணைநுதிக் கேநிற்கும் வானெனவே
யூன்குறித் தெய்தப் புகுமறி வின்க ணிருத்திகண்டாய்
கூன்குறித் திங்கட் சடையாய் மகரக் குழைதடவு
மான்குறிக் குங்க ணுமைபங்க னேயென்கைம் மாணிக்கமே.

பிரமமுந் தானு மயலென் றருச்சிக்கும் பேதநிலை
தருமம் மயலற நானுகி நின்றனை தான்சிவமென்
றருமை வினையி லபேதம் புகாம லருச்சிக்குமா
றிருமை வடிவுகொண் டுற்றுயெ னங்கை யிறையவனே.(கக)

கோலந் தருமடி நாப்பண் விருத்தநற் கோமுகமா
ஞாலங் கருதருங் கோளகந் தம்மி னயந்தடியேன்
சீலங் கொளுமரு ளாசார மாதி திகழ்ந்துநிற்கு
மூலங் கரணங் கலந்தங்கை மேவிய முக்கண்ணனே. (கஉ)

மண்ணும் புனலுஞ் சுடுசெழுந் தீயும் வளியுமகல்
விண்ணும் படைத்து விளையாடிக் காக விழியிரண்டு
நண்ணுங் கருமணி யொன்றென வேபவ நாசமுறக்
கண்ணுங் கருத்துங் கலந்துநின் றுயென்கைக் கண்ணுதலே.

நாக மெனவும்பின் கோக மெனவுமெய்ஞ் ஞானத்தினற்
சோக மெனவுஞ் சொலுமறி யாமை தொலைத்தொருநீ
யாக முழுது நிறைந்துநின் றுய்நல் லருட்கடலே
பாக மொருபெண் குடியாகு மென்கைப் பரஞ்சுடரே. (கச)

ஒன்றிரண் டாயவை பற்பல வாகி யுதித்தமுறை
சென்றிரண் டாகிப்பின் ஞென்றுகி நிற்குஞ் சிவமொடங்க
மென்றிரண் டாக வுரைப்பார் நிஜதிய லெய்திலர்காண்
மின்றிரண் டாலன்ன மேனிய னேயென்கை வித்தகனே. ()

உறங்குது மென்றுறங் காநிற் பவரிலை யோங்கொளியாய்ப்
பிறங்கு முனையடைந் தோமென் றிருப்பது பேதைமைகா
ணிறங்குணி போல வெனைக்கொண்டு நின்ற நிலையினின்று
புறம்பக மொன்று மிலாதென்கை மேவும் புராந்தகனே (கசு)

குருவிற் குதவு முடல்சரத் திற்குக் கொடுத்தலுறு
திருவிற் றிகழு நினக்கே தருமனஞ் சேயரிக்கட்
பொருவிற் புருவ மடமாதர் தம்மிடைப் போக்குறுமென்
கருவிற் கொழிவுள தோகர பீடத்தெங் கண்ணுதலே. (கஎ)

துயிலினும் போகினு நிற்கினும் வீழினுஞ் சொல்லினுமொன்
றயிலினுங் காணினுஞ் சேட்பினும் வாழினு மல்லலொடு
பயிலினுஞ் சோரினுந் தேறினு நீக்கினும் பற்றினும்பொய்
குயிலினுஞ் சோம்பினு நிற்கட வேனென்கைக்கொற்றவனே.

ஓடுந் தனமும் புகழும் பழியு முயர்விழிவுங்
கேடுந் திருவு மமுதமும் புற்கையுங் கேள்பகையும்
வீடுங் குடிலு மகளிரு மன்னையும் வேற்றவே
நாடுங் கருத்து வருமோ வெனக்கென்கைந் நாயகமே. (கக)

பாடு மவனுமொண் பாட்டுமெப் பாடப் படுபவனு
நாடு மளவினி னீயன்றி வேறிலை நான்முகன்மா
றேடு மருமருந் தேயமு தேயிளந் திங்கண்முகிழ்
சூடு·மணிவிளக் கேசர பீடத்திற் றூயவனே. (உ0)

இல்லாள் புதல்வ ரனைதந்தை பொன்மண் ணிடைவிழைவு
செல்லா மருளு மயறீர்ந்து நின்கழல் சேர்ந்துனக்கே
யெல்லா முதவுநற் சித்தத் துறைகுவை யென்கையுள்ளாய்
நல்லார் புகழ்தரு மாசார லிங்கமென் னுமமுற்றே. (உக)

பழியாம் பிறர்தம் பொருண்மனை வேட்கை பரதெய்வமோ
டொழியா வருடரு மட்டா வரண முவந்துகொண்டே
யழியா துயருநற் புத்தி யெனுங்கை யமர்வைகண்டாய்
மொழியா வருங்குரு லிங்கமென் றேயென்கைமுன்னவனே.

விடயங் களினண் ணியானென தென்னு மிகையொருவி
யடையும் புலனினக் காக்குந் தவிரகங் காரப்பெய
ருடையங் கரமிசை நற்சிவ லிங்கமென் றுற்றனைகாண்
புடையம் பிகையொ டமர்வாயெ னங்கைப் புராந்தகனே.()

நில்லா தியங்கும் வளியொடு கூடி நிலையழிந்தே
புல்லா விடயத் தலமர னீங்குபு பொய்யினெறி [ளாய்
செல்லா தொளிர்நன் மனத்தே யிருத்தியென் செங்கையுள்
கல்லா ரறிவருஞ் சங்கம நாமங் கடைப்பிடித்தே. (உசு)

உடம்பு சதிபதி தானுய் விடயங்க ளுண்டுழலா
தடங்கு சதியொரு தானுகி நீபதி யாகவுனைத்
தொடர்ந்து நுகருநன் ஞானக் கரத்திடை தோன்றுவைமால்
கடந்து வருபிர சாதமென் றேயென்கைக் கண்ணுதலே. ()

யானு ரடிமை சிவனே யிறையென் றிருப்பது போய்
நீநா னெனப்படும் பேத மிலாமை நெறியுதவு
மானு துயர்ந்தசற் பாவத்து மாலிங்க மாகிநின்ருய்
வானு டரியவ னேகர பீடத்து மாணிக்கமே. (உகூ)

உலகிய றன்னை யொருவாது பற்று முளத்தொளியா
யிலகிய நின்னைத் தெரிப்ப தொருவற் கெளிதுகொலோ
சிலைகவர் கையில் விளங்காய் பிடித்தல் செயுமவர்யார்
விலகுதின் டோளணி கொண்டவ னேயென்கை வித்தகனே.

ஆனந்த வாரிதி யாகிய நீகை யமர்ந்திருப்ப
நானந்து தீவிட யந்தேடிச் சென்றுண்டு நைந்தழிதல்
வானந் தமுதங் கரத்தே யிருப்பதை மாற்றியருந்
தீநஞ் சருந்துத லன்ருே நிரஞ்சன சின்மயனே. (உஅ)

உருவஞ் சுவைநிறை வாகிய மூன்று மூவந்துகொண்டு
மருவங்க முள்ள முருவக லாதுள்ள வாறுநின்ரு
யருவன் றுருவன் றருவுரு வன்றி யறிவுருவாய்க்
கருவென் றுலகம் படைத்தாடு மென்கைக் கறைக்கண்டனே.

விள்ளேன் சிறிய ரினம்பெரி யோரை விரும்பியென்று
நள்ளேன் பிறர்மனைப் போக்கொழி யேன்மெய்ந் நடுநடுங்க
வுள்ளேன் றிருவடி நீழலி லென்னெஞ் சுருகிநையேன் [னே.
றுள்ளேன்ருெழும்புசெயேனென்செய்கேனென்கைத்தூயவ

அழியும் பொருள்கொடுத் தேசங் கமத்திற் கழிவில்பொருள்
பழியும் பவமு மிலாதெய்த லாயும் பயனிலவாய்க்
கழியும் படிநெடு நாணீத் தமுதங் கமருகுத்தேற்
கொழியும் பவமுள தோகர பீடத் துறைபவனே. (நூக)

நிரஞ்சனமாலைமுற்றிற்று.

கைத்தலமாலை.

—:o:—

முன்ன மாலய னிந்திர னமரர்கண் முனிவர்
பன்னு மாரணம் போற்றுதற் கரியநம் பரமன்
மின்னு லாவிய சடாடவிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (க)

அன்ன மாயும்வெண் பிறைமருப் பேனமென் றாயு
முன்ன நான்முக னாரணன் றேடரு முதல்வன்
பின்னு வார்சடைப் பெருந்தகை பீடமாக் கோடற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (உ)

தன்னை மேவிவந் தனைபுரி பவன்செய றடுப்பா
னுன்னி மேல்வரும் வெந்திறற் கூற்றினை யுதைத்த
மன்னு மாலயற் கரியவன் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ங)

தன்னை நேர்வட காசிதென் கயிலைகே தார
மன்ன மார்வய லம்பல நமன்றமர் வராமற்
கன்னன் மாமதற் றெறும்விழிக் கடவுள்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ச)

கன்ன லாரமு தினுஞ்சுவை தருவதாய்க் காண்பா
னுன்னு மாலயற் கரியதா மொருமலை யுச்சி
மன்னு மோர்பவப் பிணிமருந் தெளிதுவந் திருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (ரு)

அன்னை யாகியின் னுயிர்க்குயி ராமரு ளாளன்
பொன்னு மாரமு மணியுமா ரமுதமும் போல்வான்
றன்னை நாடொறுங் கண்டுகண் களிப்பதாச் சார்தற்
கென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (சு)

அன்ன மூர்பவன் முதலியோ ரயயமென் றடைய
முன்ன மாலமுண் டவர்துயர் களைந்தருண் முதல்வன்
மின்னு மாமழு வலமுடை வீரன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (எ)

பன்னு மாமறை தமிழினாற் பாடுநம் பிக்குப்
பொன்னு மாடையு மணிகளு மூர்தியும் பொருளு
மின்னு மீபவ னருளினன் மேவிவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (அ)

பின்னும் வார்திரைக் கடலின்வீழ்ந் தமிழ்கையிற் பிடிப்ப
முன்ன மோர்புணை யகப்படு முறைமைபோற் பிறப்பி
னின்னல் கூர்பொழு தெம்பிரான் வந்துவீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (கூ)

தன்னை யோர்பொழு திறைஞ்சுவான் கருதியித் தனைமேன்
மன்னு மாலயம் யாண்டுள தெனவல மராமற்
பொன்ன வாமலர்ச் சடையுடைப் புனிதன்வீற் றிருப்ப
வென்ன மாதவஞ் செய்ததோ வெனதுகைத் தலமே. (க0)

கைத்தலமாலை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

கணபதி துணை.

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மையபாளையம்

சிவஞானபாலையதேசிகர் தாலாட்டு

முதலியபிரபந்தங்கள்.

இத்தேசிகர்மாணாக்கராகிய

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தன.

இவை,

ஷை தேசிகர் ஆதீனத்தில்

பதினான்காம்பட்டமாக இப்பொழுதுவிளங்கும்

ஸ்ரீ@ஸ்ரீ சிவஞானபாலையதேசிகசுவாமிகள்

கட்டளையின்படி

இத்தேசிகசுவாமிகள் மாணாக்கராகிய

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதித்து,

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டன.

சர்வசித்து ௵ வைகாசி௴.

௳

௧. தாலாட்டு.

௨. நெஞ்சுவிடுதூது.

௩. திருப்பள்ளியெழுச்சி.

௪. பிள்ளைத்தமிழ்.

௫. கலம்பகம்.

சரித்திரத்துடன் விலை அணா - ௪.

உ

சிவசண்முகன்றுணை.

சிவப்பிரகாசசுவாமிகள் வரலாறு.

கடல்சூழ்ந்த இப்பூவுலகத்திலே, முற்காலத்திலே, வேதாகமங்கள்மறைய, இல்லறமுதலிய நல்லறநெறிகள் குறைய, சமண்முதலிய புறச்சமயங்கள்நிறைய, சைவசமயமும் அதற்குரிய விபூதிருத்திராக்ஷசாதனங்களும் நாடோறுந் தேய்ந்தன. அதுகண்டு, சித்தர்களும் இருடிகளும் ஒருங்குசேர்ந்து, திருக்கைலையிற்சென்று, திருநந்திதேவரநுமதிபெற்று, சந்நிதியையடைந்து, சிவபெருமானைத் தரிசித்து, கைகளைச்சிரமேற்குவித்துத் தோத்திரஞ் செய்து நின்றார்கள். அப்பொழுது, சிவபெருமான் அவர்மீது கருணைகூர்ந்து, "அன்பர்களே! உங்களுக்கு யாதுகுறை?" என்று வினவியருள; அச்சித்தர்முதலியவர்கள் அடியற்ற மரம்போல நிலத்திலேவீழ்ந்து நமஸ்கரித்து, எழுந்துநின்று, "எம்பெருமானே, பூமியிலே வேதசிவாகமங்களிற் கூறப்படும் சைவசமயந்தழைக்கவும் சமண்முதலியபுறச்சமயங்கள் நசிக்கவும் திருவருள்செய்யவேண்டும்." எனப் பிரார்த்தித்து, அங்ஙனமே அநுக்கிரகிக்கப்பெற்று, தங்கள் தங்களிடத்தைச் சார்ந்து, சைவசமயந்தழைத்தோங்குங் காலத்தை எதிர்பார்த்திருந்தார்கள். அதுநிற்க.

உலகமாதாவாகிய உமாதேவியார் ஓர்நாள், நீர்விளையாடலைவிரும்பி, திருக்கைலாசமலையின் ஓர்பக்கத்தில் சண்பகமுதலிய மரங்களடர்ந்த ஓர்சோலையையும் அதன் நடுவே நாற்புறமுங் கோப்புவாய்ந்த ஓர்தடாகத்தையும் சிருட்டித்து, கணநாதராகிய சங்குகன்னரையழைத்து, "யாம் நீராடிவரும்வரையில் ஒருவரையும் உள்ளேவிடாதொழிக." என வற்புறுத்தி ஆஞ்ஞாபித்து, அவரை வாயிற்காவலராக நிறுத்தி, சரஸ்வதி இலக்குமி முதலாகிய தெய்வப்பெண்களோடு பாங்கியரும் புடைசூழத் தடாகத்திலிறங்கி நீர்விளையாடுகையில், திருக்கைலாச மலைச்சாரலிலுள்ள சிறப்புக்களைக்கண்ணுற்று அங்கெழுந்தருளிய சிவபெருமான், சோலையையும் அதனடுவிலுள்ளதடாகத்தையுங் கண்டு அதிசயித்து, அத்தடாகத்தின் வாயிலையடைந்து, அங்குநின்ற சங்குகன்னர் ஒன்றும் விண்ணப்பஞ்செய்யாது அஞ்சிவாளாநின்றமையால் உள்ளேசெல்ல; நீர்விளையாடிக்கொண்டிருந்த உமாதேவியார் கண்டுவெள்கி, தெய்வமகளிரோடும் ஓர்பக்கத்திலொளித்தனர். எம்பெருமான் அதை உற்றுணர்ந்து விரைந்து வாயிலையடைந்து, சங்குகன்னரைநோக்கி, "உமையினது நீர்விளையாடலை நமக்கு உணர்த்தாதகுற்றத்தால் நீ பூமியிலே மனிதப்பிறப்பை அடைவாயாக." என்று சபிக்க; அதுகேட்ட சங்குகன்னர் மனங்கலங்கி, சிவபெருமானுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து, "எம்பெருமானுந்த இச்சாபம் நீங்குநாள் எந்நாள்!" என்று பிரார்த்தித்தனர். உடனே கடவுள் கிருபைகூர்ந்து, "நீ பூமியிலே பிறந்து வேதசிவாகமங்களை விளக்கி, சைவசம

யத்தை விர்த்திசெய்து, எப்பொழுது நமது குமாரனாகிய சுப்பிரமணியனோடெதிர்த்து யுத்தஞ்செய்வாயோ அப்பொழுதே இச்சாபம்நீங்கி, சின்னாளிலே நம்முருவத்தையும் பெறுவாய்." என்று அநுக்கிரகித்தனர்.

பின்பு சங்குகன்னர் பூமியிலே யோனிவாய்ப்பட்டுப் பிறவாது, சிவந்த சடையையும், குண்டலம்பொருந்திய காதையும், கல்லாடையோடு விபூதிருத்திராக்ஷம் சிவலிங்கம் விளங்கும் உறுப்புக்களையும், சின்முத்திரையோடுகூடிய வலக்கரத்தையும், விபூதிப்பையையும் மாத்திரைக்கோலையுந்தாங்கிய இடக்கரத்தையும், லங்கோடு கௌபீனம் பொருந்திய திருவரையையும், திருப்புன்முறுவலோடுகூடிச் சிவாகமத்தையுபதேசித்தருளும் செவ்வாயையும், அஞ்செழுத்தை அகலாதுச்சரிக்கும் நாவையும்பெற்று, பத்து வயதோடுவிளங்கும் மானுடத்திருமேனிதாங்கி, ஞானசூரியன்போல மயூராசலத்துக்குச் சமீபமாகக் கீழைச்சமுத்திரத்திலேயுதித்து, அந்தச்சமுத்திரதீரத்திலே ஓராச்சிரமங்கண்டு, அதில் சிலசித்துக்கள்விளங்க சிவயோகசமாதியோடு எழுந்தருளியிருந்துகொண்டு, தம்மிடத்து அன்புபூண்டடைந்த சித்தர்முதலிய அடியவர்களுக்கு வேதாகமங்களிற்கூறப்படும் ஞானசித்திகளையுபதேசித்து, சிலகாலம் வீற்றிருந்து, பின்பு பெருமுக்கல்மலைமுதலிய பலமலைகளினும் வனங்களினுஞ்சென்று, அங்குள்ள சித்தர்கள் முதலாயினோர்க்கும் அநுக்கிரகித்து, அச்சமுத்திரதீரத்திலுள்ள ஆச்சிரமத்திலே மீளவும் வந்திருந்தார். பாலவயதோடு சமுத்திரத்தில் திருவவதாரஞ்செய்து சித்திகளில் வல்லரா

யிருந்தமையால், இவருக்குப் பாலசித்தர் என்னுந் திருநாமமுண்டாயிற்று.

இவ்வாறு பாலசித்தர் அவ்வாச்சிரமத்தில் வீற்றிருக்குநாளில் ஓர்நாள், சிவபெருமானது ஆஞ்ஞையின்படி திரிலோகங்களிலும் சஞ்சரிக்கின்ற நாரதமுனிவர் சித்தரிடம் வந்து, அவராற்செய்யப்பட்ட உபசாரத்தைப்பெற்று மகிழ்ந்து, அவரைநோக்கி, "இவ்வாச்சிரமத்திற்கு மேற்றிசையிலே மயூராசலமென்று ஓர் திவ்வியக்ஷேத்திர மிருக்கின்றது: அது, தன்னையடைந்தவர்கள் வேண்டியவரங்களை வேண்டியவாறேபெறும்படி மயூரமானது மலையுருக்கொண்டு முருகக்கடவுளை வழிபட்டு வாகனமாகப் பெற்றது." என்று குறிப்பால் விளக்க; சித்தர் "அச்சரித்திரத்தை விரித்துரைத்தல்வேண்டும்" என்று வேண்டிக்கொண்டனர். முனிவர் "முன்னே முருகக்கடவுளது வேலாயுதத்தினாற் கிழிக்கப்பட்டு யுத்தத்திலே மயிலுருக்கொண்ட சூரனானவன், பின்னே ஞானத்தையடைந்து, அக்கடவுளை வணங்கிநின்று, "சுவாமீ, அடியேனை வாகனமாகக் கொண்டருளவேண்டும்." எனப் பிரார்த்திக்க; கடவுள் "நீ இப்பிறப்பிற்செய்த பாவங்கள் ஒழியும்வண்ணம் தொண்டைநாட்டிலே பெண்ணைநதிக்கும் மாவிந்திய பர்வதத்திற்கும் நடுவிலுள்ள பூமியிலே தவஞ்செய்து சுத்தனானபின் நாம் அவ்வாறே கொண்டருள்வோம்." என்று ஆஞ்ஞாபித்தனர். அதனால், அவன் அவ்விடஞ்சென்று, மயில்வடிவாயமைந்த மலைரூபமாயிருந்து, முருகக்கடவுளைக்குறித்து ஒருவருஷந் தவஞ்செய்ய; எம்பிரான் எழுந்தருளிவந்து அவனை வாகனமாகக்கொண்

டருளி, இன்னும் வேண்டும்வரம் கேளென்று கட்டளையிட்டனர். உடனே சூரன் பணிந்து, "அடியேனை வாகனமாகக் கொண்டதன்றியும் இம்மலை என்னுடைய அம்சத்தால் மயூராசலமென வழங்கவும் இதில் தேவரீர் எந்நாளும் வீற்றிருந்து அடியார்களுக்கு அருள்பாலிக்கவும் வேண்டும்." என்று வேண்டிக்கொள்ள; கடவுள் "இம்மலையின்கண்ணே பாலசித்தன் என்பவன் சிவபெருமானாற் றனக்குக்கிடைத்த சாபத்தை நீக்கிக்கொள்ளுமாறு நம்மைக்குறித்துத் தவஞ்செய்வான்; யாம் அவனுக்கு அநுக்கிரகிக்கவேண்டி இம்மலையின்கண்ணேவந்து, அன்றுமுதல் எந்நாளும் நீக்கமின்றி வீற்றிருப்போம்." என்று திருவாய்மலர்ந்தருளினர். ஆகையால் அதனையடைந்து அருந்தவமியற்றில் எண்ணியகருமம் எளிதிற்கைகூடும்." என்றுணர்த்தி விடைபெற்றுக்கொண்டு சென்றனர்.

அப்பொழுதே மயூராசலத்தையடைந்து, அம்மலையினுச்சியிலேறி அங்குள்ளசுனையில் ஸ்நானஞ்செய்து, விபூதிருத்திராக்ஷந்தரித்து சிவபூசைமுடித்து, பத்மாசனமாக இருந்து, முருகக்கடவுளைக்குறித்து முப்பத்தைந்துவருஷம் தவயோகமும், பின் பஞ்சாக்கினிமத்தியிலிருந்து சிலகாலங் கடுந்தவமும் புரிந்தும், கடவுள் பிரசன்னமாகாமையினல், அவருடைய தேவிமார்களைக்குறித்துப் பலநாள்தவஞ்செய்தார். அக்காலத்தில், வள்ளிநாயகி முருகக்கடவுளைநோக்கி, "நம்மைக்குறித்து நெடுங்காலமாகத் தவஞ்செய்கின்ற பாலசித்தனிடஞ்சென்று அநுக்கிரகிக்கவேண்டும்." எனப்பிரார்

த்திக்க; கடவுள் வள்ளிநாயகியைப்பார்த்து, "அப்பாலசித்தன் சிவாபராதியாதலால் அவனுக்கு அருள்பாலித்தல் முறையன்று." எனக் கட்டளையிட்டும் மேலுமேலும் தேவியார்வேண்டல்கண்டு முனிந்து, "பெண்ணே நீ சிவாபராதியிடத்தில் இரக்கம் வைத்திருக்கின்றாயாகலின் நமதருகில் நில்லாது அகலுதி." என்று மேல்விளைவைநோக்கி மறுத்தருளினர். உடனே, தேவிமாரிருவரும் சித்தகன்னிகைகளாக வடிவங்கொண்டு சித்தருக்கு முன்வந்துநிற்க; அதுகண்ட சித்தர் முருகக்கடவுளுடைய தேவிமார்களே நம்மையாட்கொள்ள இவ்வுருக்கொண்டு எழுந்தருளினாரெனத்துணிந்து உபசரித்து, "நீயிர்யாவர்? இங்கு வந்தகாரணம் யாது?" என்று வினவினர். அக்கன்னியர்கள் "இவ்விடத்தில் சித்தர்கள் இருப்பதையறிந்து நாமும் வசிக்கவிரும்பி வந்தேம்; நீர் எங்களைப் புத்திரிகளாகப்பாவித்து ஆதரிக்கவேண்டும்." என்று கூறி, அதற்கு அச்சித்தர் மனமகிழ்ந்து உடன்பட்டமைகண்டு, தேவதச்சனால் அம்மலையின்மேல் ஒருமாளிகை சிருட்டிப்பித்து, அதிலே தாம்வீற்றிருந்துகொண்டு, "யாவர் வரினும் உள்ளேவிடவேண்டுவதில்லை." என்று சித்தரை வாயிற்காவலராகநிறுத்தி, அவரால் தினமுங்கொடுக்கப்பட்ட காய், கனி, கிழங்கு முதலியவைகளை உண்டுவந்தார்கள்.

தேவிமார் இங்ஙனமிருக்குநாட்களில், ஓர்நாள் முருகக்கடவுள் திருவுளங்கலங்கி இவர்களை எங்குந்தேடி இளைத்தவர்போல நடித்துக்கொண்டு மயூராசலத்தையடைந்து, அம்மலையின்மேலேறி, அதன்மேல் அதிவிசித்திரமாக நவமணிக

ளால் அமைக்கப்பட்டிருக்கும் மாளிகையை உற்றுநோக்கி, அதனுள்ளேசென்று தேவிமார்களைப்பார்க்கவேண்டுமென்னும் ஆசையால் ஓர் அரசகுமாரவடிவங்கொண்டு, கையிலே வேல் வாள் வில்முதலியவற்றையேந்தி அம்மாளிகையின் வாயிலிலே நுழையப்போக; அத்தருணத்தில், காவலராக நின்றசித்தர் சிவபிரான்றந்த சாபசம்பந்தத்தால் அவரை முருகக்கடவுளெனத் துணியாது, "இராஜகுமாரனே இம்மாளிகையில் சித்தகன்னியர்கள் வசிக்கின்றார்கள்: நீயோ யுத்தசந்நத்தனாய் வந்திருக்கின்றாய்: நின்னோடெதிர்த்துச் சமர்புரிவார் இங்கொருவருமில்லை; அன்றியும், மநுநீதியறிந்த அரசர்களுக்கு ஒத்தவரசர்களோடன்றிச் சித்தர்முதலியவர்களோடு யுத்தஞ்செய்வதும் அறமன்று: ஆகையால், இதைவிட்டுப்போவதேதகுதி." என்றார். இவ்வாறுரைத்தும், கேளாது கடவுள் உள்ளேசெல்லத்துணிதலை சித்தரறிந்து, உள்ளேயிருக்கும் தேவிமார்களைத்தியானித்து, அவர்களால் அத்திரசத்திர வித்தையுபதேசத்தோடு ஆயுதங்களையும் தேர்முதலியவற்றையும் சிருட்டித்தருளப்பெற்று, அவர்கள்கிருபையால் முருகக்கடவுளோடெதிர்த்து, அவரால்விடப்பட்ட ஆயுதங்களனைத்தையும் தடுத்தமையேயன்றி, அவர்விடுத்த வேலாயுதத்தையும் தேவிமார்தியானபலத்தால் கைப்பற்றினர். அக்காலையில், கடவுள் மிகுதியும் கோபமுடையவர்போல வில்யுத்தத்தைவிடுத்து, மல்லயுத்தந்தொடங்கிச் சித்தரது மார்பிலேயறைந்து கீழேதள்ளி, எலும்புகளொடியும்வண்ணம் குத்த; அதனால், சித்தர் மிகவும் சோப

த்தையடைந்தும், கடவுளைப்பரிசிக்கப்பெற்றதால் விரைவில் வருத்தம்நீங்கி, இவர் முருகக்கடவுளேயென்று உணர்ந்தெழுந்து நமஸ்கரித்துத் துதித்து, "சுவாமீ! அடியேன்செய்த இக்குற்றத்தைப்பொறுத்து, சாபத்தையும் நீக்கியருளல்வேண்டும்." என்று பிரார்த்தித்தார்.

முருகக்கடவுளும் அவ்வாறேயருள்செய்து உள்ளேயெழுந்தருளிச் சிங்காதனத்திலேவதிந்திருக்க; உடனே சித்தரும் தேவிமார்களையலங்கரிப்பித்து அழைத்துவந்து அவர்களோடும்வணங்கிநின்று, "அடியேன் புத்திரிகளாகப் பாவிக்கப்பட்ட இக்கன்னியர்களைத் தேவரீர் திருமணமுடித்து இத்தலத்திலேயே எந்நாளும் வீற்றிருந்தருளல்வேண்டும்." என்று வேலாயுதத்தையும் சந்நிதியில்வைத்து விண்ணப்பித்தார். கடவுளும் அதற்கிசைந்து, சிவபெருமான் உமாதேவியாரோடும் கணங்கள்சூழ எழுந்தருளும்படி தியானிக்க; எம்பிரானும் அவ்வாறே தேவியாரோடுமெழுந்தருளி மயன்வகுத்த மணமண்டபத்திலே வீற்றிருந்தார். முருகக்கடவுள் சிவபெருமானுடைய ஆஞ்ஞையால் பிரமதேவர் திருமணச்சடங்குநடத்த, சித்தர் தத்தநீர்வார்க்க, கன்னியரிருவரையுந் திருமணம்புரிந்தார். அவ்வமயத்தில் சிவபெருமான் சித்தரைநோக்கி, "நம்முடைய சாபத்தினின்று நீங்கியநீ இந்தஸ்தலத்தில் நமதுகுமாரனாகிய சுப்பிரமணியனோடு இன்னும் ஐந்நூறுவருடமிருந்து உலகத்தில் சைவசமயத்தை விர்த்திசெய்து பின் நம்மிடத்திற் கலப்பாயாக." என்று கட்டளையிட்டு, தமது திருவருட்குறியாகிய ஓர்சிவ

லிங்கமும் அங்கேதோன்றும்படி அநுக்கிரகித்து எழுந்தருளினர்.

அவ்வாறே சித்தர் முருகக்கடவுளோடு மயூராசலத்திலிருக்கும்போது,ஓர்நாள் கடவுள் சித்தனைநோக்கி, "நீ நம்பெருமான் ஆக்கினைப்படியே பூமியிற்சென்று பக்குவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து வரக்கடவை." என்று கட்டளையிட்டு, முத்துச்சிவிகைமுதலியவற்றையுங் கொடுத்து அனுப்பியருள; சித்தர் சிவிகையிலேறி, அடியார்கூட்டத்தோடும் பலதேசங்களினுஞ்சென்று, அங்கங்குள்ள அன்பர்களுக்கு வேதாகமங்களினுயர்ச்சியையும் அவற்றிற் கூறப்படும் சைவசமயத்தினருமையையும் அதற்குரிய விபூதிருத்திராக்ஷ பஞ்சாக்ஷரங்களின்பெருமைகளையும் இவற்றைக் கைக்கொண்டு சிவபெருமானை வழிபட்டாலன்றி முத்திப்பேறில்லையென்பதையும் உபதேசித்து, தம்முடைய ஆச்சிரமத்தையடைந்து, அங்கே பிரசன்னராகவிளங்கும் முருகக்கடவுளை நமஸ்கரித்துநின்றனர். சிவஞானத்தை யாவருக்கும் உபதேசித்துவந்தமையால் சித்தருக்கு சிவஞானபாலசித்தர் என்னுந் திருநாமமுண்டாயிற்று. அவ்வேளையில், எம்பிரான் சித்தனைநோக்கி, "வேண்டியவரங்களைப்பெற்றுக்கொள்.,, என்று கட்டளையிட; சிவஞானபாலசித்தர் நமஸ்கரித்துநின்று, "ஐயனே, அடியேனாலுண்டாக்கப்பட்ட இந்தமடத்திலே அடியேனுடையசீடன் ஆசாரியாபிடேகம்பெற்று மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம்புரிந்துகொண்டு விளங்கும்படி தேவரீருடைய திருவருளைப் பதிவித்தல்வேண்டும்." என்றுவிண்ணப்பஞ்செய்துகொண்டார்.

முருகக்கடவுள்,இதற்குமுன்னே * பச்சைக்கந்த தேசிகர்மரபிலே புத்திரப்பேறில்லாமல்வருந்திய அம்மவையென்பவள் பெருமுக்கன்மலையையடைந்து பாலசித்தர் திருவுளப்பாங்கின்படியே தினந்தோறும் திருவமுது கொள்ளும்படி சதுரக்கள்ளிப்பாலைக் கறந்துகொடுத்துக்கொண்டிருக்க ஒருநாள் தயைகூர்ந்து அப்பாலசித்தரளித்த பாற்பிரசாதசேடத்தானுதித்து அருகே தொண்டுபூண்டொழுகிநிற்கும் புதல்வனையழைத்து, சந்நியாசாச்சிரமந்தந்து, ஆசாரியாபிடேகமும் ஞானோபதேசமும்புரிந்து, தமது அம்சத்திலே ஓரம்சம் அவரிடத்திலேபதியும்படிசெய்து, "நீ பாலையுணவாகக்கொண்டு சீடபரம்பரையோடு சிவஞானதேசிகனென வாழ்வாயாக." என்று அநுக்கிரகித்து, மடத்திலிருத்தி, பின்பு சித்தனைநோக்கி, "பிரமநிலையுணர்ந்த நீ பாலவயதோடும் சித்தனாகத் தங்கியிருந்தமையால் இவ்வாச்சிரமத்

---

* இவ்வாசிரியர் கன்னடதேயத்திலேயவதரித்து, மல்லிகார்ச்சுனபருப்பதத்திலே சிலகாலந்தவம்புரிந்து, சிவானுக்கிரகம் பெற்று, பின்னர் தென்றிசைநோக்கி வருங்கால் வழியிலே, சோமேசர் கட்டமுதளிக்க வுண்டு, மலையனூரையடைந்து, அங்கே, சலத்திற்பதிந்துகிடந்த மரகதக்கடகமானது தானேவந்து தமது திருமேனியிலே பச்சையொளி பரப்பிப் பிரகாசிக்கும்படி அற்புதங் காட்டியருளி. அதுகண்ட அரசனால் யானைமுதலிய பலவிருதுகளுந்தந்து உபசரிக்கப்பெற்று, சிதம்பரத்தையடைந்து தெய்வீகமுற்று விளங்கியிருந்தவர்.

திற்கு * பிரமபுரமெனவும் பாலசித்தர்மடமெனவும் பெயர்வழங்குக.'' என்று திருவாய்மலர்ந்து, அவருடன் மயூராசலத்தையடைந்து, முன்னர் சூரனுக்கருளியவரத்தின்படியே தமது தேவிமார்களோடும் வீற்றிருந்தருளினர். சித்தரும் அம்மலையிலே சிலகாலமிருந்து மிதுனமாதத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்திலே அம்முருகக்கடவுளுடைய சந்நிதிக்குத் தென்பக்கத்தில்விளங்கும் சிவலிங்கமயமாயினர். †

சிவஞானதேசிகர் அதுகண்டு அற்புதமுடையராய் பலவாறு துதித்து, முருகக்கடவுளுக்கும் சிவலிங்கப்பெருமானுக்கும் நித்திய நைமித்திகங்களைக் காலந்தோறும் வழுவாமல் நடத்திக்கொண்டு மயூராசலத்திலும் பொம்மபுரத்திலும் சிலகாலமிருந்தனர். பின்பு காஞ்சீபுரத்தையடைந்து, ஏகாம்பரநாதரைத்தரிசித்து, அன்பர்கட்கு அருள்பாலித்து இருக்கும்பொழுது, விஷந்தீண்டியிறந்த ஒருவனை அன்பர் வேண்டுகோளின்படி உயிர்ப்பித்து, அவ்விடத்திலே எக்காலமும் விஷவாதனையில்லாதிருக்கவும் அநுக்கிரகித்தனர். அதுகேட்டு அந்நாட்டையாளும் நபாபு வென்பவன், தன் மனைவிக்கு நேரிட்டிருக்கும் கொடிய சூலைநோயைத் தணிப்பித்துக்கொள்ளும் உத்தேசமுடையவனாய்ச் சந்நிதியையடைந்து வணங்கி விண்ணப்பஞ் செய்துகொள்ள; அவனை நோக்கி, "ஏகாம்பரநாதர் சந்நிதிமுதலியவற்றில் உன்னாற்

---

* பிரமபுரம் என்பது பொம்மபுரமென்றாகி பொம்மையபாளையமென மருவிற்று.

† இச்சரித்திரவிரிவை மயூராசலபுராணத்துட்காண்க.

குறைக்கப்பட்ட நித்தியநைமித்திகங்களை முன்போல நடத்துவையாயின் இந்நோய்நீங்கும்.'' என்று கட்டளையிட்டு, விபூதியால் அந்நோயைத்தணித்து, ஆலயங்கட்கு முன்னையினுமதிகமாக நிபந்தனைகளை நடத்துவித்து, அங்கே அவனால் விளைநிலமுதலியவைவிடுத்து கட்டுவிக்கப்பட்ட திருமடத்தில், அடியார்களால் மகேசுரபூசைமுதலியவற்றை நடத்திக்கொண்டு எழுந்தருளியிருந்தனர்.

சிலநாட்சென்றபின் அங்ககன்று, வழியிலுள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு * செய்யூரையடைந்து, அங்கே வேளாளரிற்சிலர் பரிசோதனையினிமித்தம் ஓர்புதுக்குடத்தில் நிறைத்து மறைத்துக்கொண்டுவந்த வெண்மணலைச் சருக்கரையாக்கி, யாவருக்குமளித்து, அவர்களால் நிலமுதலியவைவிடுத்து கட்டுவிக்கப்பட்ட திருமடத்தில் வதிந்திருந்து, பின்பு தக்ஷிணயாத்திரையைவிரும்பி, சிதம்பரத்தையடைந்து, ஸ்ரீநடேசப்பெருமானைக் காலந்தோறும் தரிசித்துக்கொண்டு சிலதினம் வசித்துநீங்கி, இடையிலுள்ளதலங்களையும் தரிசித்து, மதுரையையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு தங்கியிருந்தனர். அக்காலையில், தையல்வேலைசெய்பவனொருவன் புதல்வற்பேற்றைவிரும்பி அதுகாரணமாக மீனாட்சியம்மையின்சந்நிதியிற் கட்டுதற்கு அறுபத்துநான்குதிருவிளையாடல்களையும் நெடுங்காலமாக தையலாற்சித்திரித்த ஒரு அரியபடாத்தை அந்த அம்பிகையின் கட்டளைப்படியே, சிவஞானதேசிகர் சந்நிதியில்வைத்து, மனைவியுடன்வணங்கி விண்ணப்பஞ்செய்துகொள்ள; உடனே

* சேயூரென்பது செய்யூரென வழங்குகின்றது.

அச்சித்திரபடாத்தைநோக்கி திருவுளமகிழ்ந்து, அவ்விருவருக்கும் மூப்பையகற்றி, இளமையைத்தந்து, புத்திரப்பேற்றையுமளித்து, அத்தலத்தினீங்கி, மற்றையதலங்களையுந்தரிசித்து விருத்தாசலத்தையடைந்து, சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு சிலநாள்வாசஞ்செய்து, பொம்மபுரியைச்சேர்ந்து, தெய்வீகசித்தியோடு விளங்கியிருந்தார்.

இங்ஙனம் விளங்குநாட்களில், ஜீவகருணையால், அநேகருக்கு விபூதியளித்து கூன் குருடு முடமுதலிய அங்கவீனங்களையும், குடர்நோய் வெப்புநோய் காசமுதலிய கொடியவியாதிகளையும், மாந்திரிகர்களால் நீங்காதுவருத்திநின்றவலிய பேய்முதலியவற்றையும் நீக்கியருளினார். இவற்றை அடுத்த கூனிமேட்டிலிருந்த ஓர் மாந்திரிகன்கண்டு, பொறாமைகொண்டு செஞ்சியையடைந்து, திரியம்பகமகாராஜாவைக்கண்டு, "ஐயா! தங்களாளுகையிலமைந்த பொம்மபுரத்திலிருக்கும் சிவஞானதேசிகரென்பவர் மிகவும் சித்துடையவர்போல நடித்து சனங்களை வஞ்சிக்கின்றனர்: ஆகையால் அவரைப் பரீக்ஷித்து நமது நாட்டைவிட்டகற்றுவதே தகுதி." என்றனன். அதுகேட்ட அரசர் உடனே இளமைதொடுத்து நரைமுதிர்ந்தகூந்தலையுடைய தன்பெண்ணையும் அழைத்துக்கொண்டுவந்து சிவஞானதேசிகரையடைந்து, தன்கருத்தை அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்துகொள்ள; அப்பொழுதே திருநீற்றினால் அந்நரையைமாற்றுவித்தருளினார். அதுகண்டமாந்திரிகன் இவரை ஓர்வகையாகமருட்டி ஊரைவிட்டகற்றவேண்டுமென்னும் உத்தேசங்கொண்டு, அரசரைநோக்கி, "எங்களிருவருள் கடலினுள்ளேமூழ்கிக் கரையேறுபவ

ர்களே சித்தியில்வல்லவர்கள்.'' என்று வீண்வாதஞ்செய்ய; அரசர் ஞானதேசிகரநுமதிபெற்று, அவர்களோடு தோணியேறிச்சென்று, அவ்விருவரும் கடலினுள்ளேமூழ்கியவுடன் கரையையடைந்து, அதற்குமுன்னமே அங்குவந்துவீற்றிருக்கும் ஞானதேசிகரைக்கண்டு, அதிசயித்துவணங்கி, அம்மாந்திரிகன் ஒருமீனால்விழுங்கப்பட்டதை அவ்வாசிரியராற் கேள்வியுற்று, மனம்வருந்தி, "ஐயனே! தேவரீருக்கு அபராதியாகிய அம்மாந்திரிகனை மீன்வாயினின்றும் வரவழைத்தருளல்வேண்டும்." எனப் பிரார்த்தித்தார். அவ்வரசர் வேண்டுகோளின்படியே அவனையுயிர்ப்பித்து, நல்லறிவு போதித்து, அடிமையாக்கிக்கொண்டருளினார்.

அப்பொழுது, அரசர் மனமகிழ்ந்து பொம்மபுரத்திலே ஒரு பெரியதிருமடங்கட்டுவித்து, அதிலே எவர்கள் எப்பொருளை விரும்பினும் ஈதற்குவேண்டும்சிலகிராமங்களைச் சர்வமானியமாகச் சிலாசாசனமெழுதி நியமித்துவிட்டு, யானைமுதலியபற்பலவிருதுகளையுங் காணிக்கையாகக்கொண்டு,ஞானதேசிகர்சந்நிதியையடைந்து, "எம்பெருமானே,இவற்றை அங்கீகரித்து அடியேங்களைச் சந்ததிபரம்பரையாக ஆட்கொண்டருள்வதுமல்லாமல் இப்பொழுது அடியேனுக்கு மிகுதியும் சத்துருக்களாயுள்ளவர்களைவெல்லும் ஆற்றலையும் தந்தளித்தல்வேண்டும்.'' எனவணங்கிப் பிரார்த்திக்க; தேசிகர் அவ்வாறேயென்று அரசாளும்படி ஆசீர்வதித்துத் திருநீறளித்து * அணுக்கத்தொண்டராகக்கொண்டு,அவரால் சில திவ்வியதலங்களில் அடியவர்கள் ஆராதனையின்

* அணுக்கம் - சமீபம்.

பொருட்டுத் திருமடங்கட்டுவித்து, மயூராசலத்திலும் பொம்மபுரத்திலும் முருகக்கடவுளுக்கும் சிவபெருமானுக்கும் அடியவர்பூசைமுதலியவற்றிற்கும் வேண்டும் நிபந்தனைகளையேற்படுத்தியருளினார். அன்றியும், நடுநாட்டிலே சிலபாகத்தையாண்டுகொண்டிருந்த சிதம்பரபூபதியென்பவர், தமதரசுரிமையை வேற்றரசன் கவர்ந்துகொண்டமையால், ஓர்வகைவெறுப்புத்தோன்றி,இனிபிச்சையெடுத்துண்டு பெரியோர் பணியியற்றியுய்தலே தகுதியெனத்துணிந்து, பொம்மபுரத்தையடைந்து, இயன்றபணிகளை இயற்றிக்கொண்டிருக்க; ஒருதினம் தேசிகர் திருவருள்கூர்ந்து, அவர்பக்கத்திலிருந்த சிலசேனைகளைக்கொண்டே பகைவனைவென்று அரசாளும்படியாசீர்வதித்துத் திருநீறளித்து, இவரையும் அடிமையாகக்கொண்டு, தாம் தம்மையடைந்த மாணாக்கர்களுக்கு ஞானோபதேசம்புரிந்துகொண்டு சிவயோகசமாதியில் வீற்றிருந்தருளினார். இதுநிற்க.

காஞ்சிபுரத்திலே, ஏறக்குறைய இருநூற்றெண்பதுவருடங்களுக்குமுன் தொண்டைமண்டலவேளாளர்க்குத் தீக்ஷாகுருவாகக் குமாரசுவாமிதேசிகர் என்பவர் ஒருவரிருந்தார். அவர், திருக்கார்த்திகைத்தரிசனத்திற்காகத் திருவண்ணாமலையாத்திரைக்குப்புறப்பட்டு, ஒருநாள் வழியில், ஒருநந்தனவனத்திற்றங்கிச் சிவபூசைமுடித்து, அன்றுசாயங்காலமே தாங்குறித்த அத்தலத்தையடைந்து, அங்குள்ள ஈசானியதீர்த்தத்திலே அநுட்டானஞ்செய்துகொண்டு, பூசைப் * பேடகம் எங்கே? என்று பரிசனர்களிடத்து வினவ;

* பெட்டகம் என்பதும் வழக்கம்.

அவர்கள், பகலிலேதங்கியிருந்த இடத்தில்வைத்து மறந்துவந்ததாக அச்சத்தோடு விண்ணப்பஞ்செய்தனர். அதுகேட்டு, மிக மனக்கலக்கமுற்று, அப்பரிசனர்களை பகற்றங்கியிருந்த நந்தனவனமவரையும் பரிசோதித்துவரும்படி அனுப்பிவிட்டுத் தாம் ஓரிடத்திற்போய், நம்முடைய ஆன்மார்த்தமாகிய உடையவரை விட்டுப்பிரியும்படி நேரிட்டதே! என்னும் வருத்தத்தால் அன்றிரவுமுழுதும் நித்திரையின்றிச் சிவத்தியானஞ்செய்துகொண்டிருந்தனர். அத்தருணத்தில், அவரது சிவபுண்ணியமுதிர்ச்சியினாலே திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், ஓர் சங்கமத்திருவுருவங்கொண்டு, அவரிடத்திற்கெழுந்தருளி, தம்மெதிர்வந்து தமக்குநிகழ்ந்த ஆபத்தைத்தெரிவித்து அன்பொடுவணங்கி நின்ற அவர்மீது கிருபாநோக்கஞ்செய்து, "நீர் அங்கம்வேறு இலிங்கம்வேறாக இருந்தமையால் இவ்வாறு பிரியும்படி நேரிட்டது: இலிங்காங்க சம்பந்தியாயிருந்தால் இவ்வண்ணம் நேரிடுதலியலாது: உமது பூசைப்பேடகம் நாளையுதயத்தில் வந்துசேரும்: நீர் இதுமுதல் இலிங்கதாரணஞ்செய்துகொள்ளும்." என்று அநுக்கிரகிக்க; அவர், இச்செய்கை தமதுசீடர் பந்துக்கள் முதலானவர்களுக்கு விரோதமாக இருக்கும் என்பதை விண்ணப்பித்து நின்றனர். அதுகேட்ட சிவபெருமான், "அந்தச் சீடர்முதலியோரால் பெறப்படும் பயன் சிறிதுமில்லை: நமது கட்டளைப்படி நீர் சிவலிங்கதாரணஞ் செய்துகொண்டால் உமக்கு மூன்றுபுத்திரர்களும் ஒருபுத்திரியும் பிறப்பார்கள்: அவர்களால் இம்மை மறுமையின்பங்களும் முத்தியுஞ்சித்திக்கும். ஆதலால், இவ்வாலய

த்திற்குத் தெற்குவீதியிலுள்ள மடத்திலிருக்கும் குருதேவரிடத்திலே தாரணதீக்ஷைசெய்துகொள்ளும்.'' என்று வற்புறுத்தி ஆஞ்ஞாபித்து, வீரசைவ சமயாசாரநெறிகளையும் போதித்து, அவ்வாறே குருதேவருக்குங் கட்டளையிட்டு மறைந்தருளினார்.

மறுநாட்காலையில், சிவபெருமானது திருவாக்கின்படியே பூசைப்பேடகம் வரப்பெற்று, ஸ்ரீகுருதேவராலனுப்பப்பட்ட அடியார்களோடு மடாலயத்தையடைந்து, குருதேவரைத்தரிசித்து, அவராலே தாரணதீக்ஷைசெய்யப்பெற்று, திருக்கார்த்திகைத்திருவிழா நிறைவேறியபின் குருதேவரிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, காஞ்சீபுரத்திற்குவந்து, தமது அநுட்டானப்படியே சீடர்களுக்குந் தாரணதீக்ஷைசெய்துகொண்டிருக்க; அக்காலத்திலே. அவருக்கு அண்ணாமலையார் அநுக்கிரகித்தபடியே மூன்றுபுத்திரர்களும் ஒருபுத்திரியும் அவதரித்தார்கள். தந்தையாராகிய குமாரசுவாமிதேசிகர், களிகூர்ந்து அவர்களுக்கு, முறையே சிவப்பிரகாசம், வேலாயுதம், கருணைப்பிரகாசம், ஞானம்பிகை என்று நாமகரணந்தரித்து, முதன்மூவரும் கல்வியிற்பயின்று வருங்காலத்தில், சிவலிங்கவயிக்கியமாயினார்.

பின்பு மூத்தவராகிய சிவப்பிரகாசசுவாமிகள், தமது சகோதரர்முதலியவர்களோடு திருவண்ணாமலைக்குப்போய் குருதேவரைத் தரிசித்து, அங்கே வாசஞ்செய்துகொண்டு, தமது கல்விமுயற்சியிற்றளராது வாழும் நாள்களுள் ஒருநாள், அந்தச் சோணசைலத்தைப் பிரதக்ஷிணஞ்செய்து

வரும்போதே, சோணசைலமாலையெனப்பெயரிய நூறு செய்யுள்களால் அதனைத் தோத்திரம்பண்ணினார். பின்னும் பேரிலக்கணங்களைப் பெரிதுங்கற்கவிரும்பி, தமது சகோதரர்களுடனே தக்ஷிணதேசத்திற்குப் பிரயாணமுற்று, வாலிகண்டபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ள துறைமங்கலம் என்னும் நகரத்தைச்சார்ந்த ஒரு நந்தனவனத்தில், சிவபூசைசெய்துகொண்டிருந்தனர். அக்காலத்தில், அக்கிராமாதிபதியாயும் சிவலிங்கதாரியாயும் குருலிங்கசங்கமபத்தியிற் சிறப்புற்றவராயும் விளங்கிய அண்ணாமலைரெட்டியாரென்பவர், சிவப்பிரகாசசுவாமிகள்வரவைக் கேள்வியுற்று, அங்கடைந்து தரிசித்தமாத்திரத்தில், அவரிடத்தே அநுக்கிரகம் பெறவிரும்பி அடிமைபூண்டு, "சுவாமீ, தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்." என்று பிரார்த்தித்து, அவரை உடன்படுத்தி, தங்கள் குருவாகிய சென்னவசவையர்மடத்திற்கு மேற்றிசையில் ஒருதிருமடங்கட்டி, அதில் சுவாமிகளை எழுந்தருளுவித்து,* அகோராத்திரம் பிரிவின்றி அணுக்கத்தொண்டராயமர்ந்திருக்க; சிவப்பிரகாசசுவாமிகள், அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு, இரண்டுவருஷம்வரையில் அங்கே எழுந்தருளியிருந்தார்.

அதன்பின்பு தாங்கொண்டகருத்தை நிறைவேற்றவிரும்பி, தக்ஷிணதேசத்திற்குச் செல்லல்வேண்டுமென்பதை அவருக்கறிவுறுத்தித் திருநெல்வேலியையடைந்து, தாமிரபர்ணி நதிதீரத்திலிருக்கின்ற சிந்துபூந்துறையில் தருமபுரவாதீன

* அகோராத்திரம் - பகலிரவு.

த்து வெள்ளியம்பலவாணசுவாமிகள் இலக்கணவிலக்கியங்களில் அதிவல்லவர்களாய் இருக்கின்றார்கள் என்பதைக் கேள்வியுற்று, அவ்விடத்திற்சென்று சுவாமிகளைக்கண்டு, தாம் இலக்கணங்கற்கவேண்டி வந்தமையைத் தெரிவித்துக் கொண்டனர். அச்சுவாமிகள், சுவாமிகளுடைய இலக்கியப் பயிற்சியை அறிதற்பொருட்டு, "கு, என்பதை முதற்கொண்டு ஊருடையான், என்பதை இடைப்பெய்து கு, என்பதையே ஈற்றினுங்கொண்டு முடியும்படி ஒருவெண்பாப் பாடுக." என்றுகூற; சுவாமிகள்,

"குடக்கோடு வானெயிறு கொண்டாற்குக் கேழன்
முடக்கோடு முன்னமணி வாற்கு—வடக்கோடு
தேருடையான் றெவ்வுக்குத் தில்லைதோன் மேற்கொள்ள
லூருடையா னென்னு முலகு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளினார். மேலை வெண்பாவினுள் வடக்கோடுதேருடையான் என்று அமைத்தமையை அச்சுவாமிகள் வியந்துபாராட்டி, சுவாமிகளைத் தழுவித் தம்மருகிருத்தி, சுவாமிகள் சகோதரர்களாகிய வேலையசுவாமிகள் கருணைப்பிரகாசசுவாமிகள் என்னும் இருவருக்கும் ஒருபக்ஷத்துள் பஞ்சலக்ஷணங்களையும் பாடஞ்சொல்லிமுடித்தார். அதுகண்ட சிவப்பிரகாசசுவாமிகள் பெருவகையுற்று, அண்ணாமலைரெட்டியாரென்பவர் தங்களுக்கு வழிச்செலவிற்குபகரித்த முந்நூறுபொன்னையும் குருதக்ஷணையாகவைத்து உபசரிக்க; அச்சுவாமிகள், "இது நமக்குவேண்டுவதில்லை: நம்மைத்தூஷித்தலையே இயல்பாகக்கொண்டு திருச்செந்தூரில்வசிக்கும் தமிழ்ப்புலவரொரு

வரைத் தங்கள்முன்னிலையில் வெற்றிகொண்டு அவர்வந்து நம்மைவணங்கும்படி செய்துகோடலே குருதக்ஷிணையாகும்." என்று மறுத்தருளினர்.

அவர்கருத்தறிந்த சுவாமிகள் அதற்குடன்பட்டு, அவர்மாணுக்கரோடும் திருச்செந்தூருக்குப்போய், முருகக்கடவுளைத்தரிசனஞ்செய்து பிரதக்ஷிணம்வரும்போது; அச்சுவாமிகளாற் சுட்டப்பட்ட தமிழ்ப்புலவர், எதிர்ப்பட்டுச் சிவப்பிரகாசசுவாமிகளை யாவரென்று அவருடன்வந்த மாணுக்கரிடத்திற்றுனேவினவி, மேற்படிசுவாமிகளிடத்திற் பாடங்கேட்டசுவாமிகள் என்பதை அறிந்துகொண்டு, அவர்களைத் தமது வழக்கப்படியே தூஷிக்கத்தலைப்பட்டார். அப்பொழுது சுவாமிகளுக்கும் புலவருக்கும் கலகநேரிட; புலவர், சுவாமிகளை நூதனவகையாற்பாடி வெற்றிபெறுவோமெனத் துணிந்து, "நாமிருவரும் நி ராட்டகயமகம் பாடுவோம்: முன்னர்ப் பாடிமுடித்தவருக்கு அஃதியலாதார் அடிமையாவோம்." என்று வாக்குத்தத்தஞ்செய்தார். சுவாமிகள், தங்கருத்து நிறைவேறுதற்கு வாயில் இதுவே என்றுகருதி அதற்கிசைந்தருளி, அவரோடுபாடத்தொடங்கி உடனே, அத்தலத்து முருகக்கடவுண்மீது நிரோட்டகயமகவந்தாதித்தொடையாக முப்பதுகட்டளைக்கலித்துறைபாடி முடித்தருளினர். அதுகண்டபுலவர், தாம் ஒருசெய்யுளேனும் பாடிமுடியாமையையுணர்ந்து, சுவாமிகளுடைய திருவடிகளை வணங்கி, "அடிமையாயினேன்." என்று விண்ணப்பஞ்செய்ய; சுவாமிகள், தமதடிமையாயமைந்த அப்புலவரை ஆதீனத்திற்கழைத்துவந்து அச்சுவாமிகளுக்கு அடிமையாக்கி·

விட்டார். அச்சுவாமிகள் திருவுளமகிழ்ந்து, சிவப்பிரகாச சுவாமிகளைப்பார்த்து, "தாங்கள் பாடியசெய்யுளில் சிவ பெருமானுக்குரியதலம் சிதம்பரமேயெனச்சுட்டிக் குறிப் பால்விளக்கினமையால் அத்தலத்திலே சிலகாலம் வாசஞ் செய்தருளுக." என்று விடைகொடுத்தனுப்பியருளினார்.

சுவாமிகள் அவ்விடத்தினின்றும் நீங்கி, சிவஸ்தலங்க டோறுஞ்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, துறைமங்கலத் தைச்சார்ந்து, முன்போலவே அண்ணாமலைரெட்டியாரென் பவருக்குத் திருவருள்பாலித்து, அவரது வேண்டுகோளின் படி அவராணைகையிலமைந்த வாலிகண்டபுரத்தின் வடமே ற்பாகத்துள்ள திருவெங்கைமாநகரத்திலே, தம்பொருட் டுஅவராற்கட்டப்பட்ட திருமடத்தில் வீற்றிருந்துகொண் டு,அத்தலத்திலுள்ள பழமலைநாதர்மீது திருவெங்கைக்கோ வை, திருவெங்கைக்கலம்பகம், திருவெங்கையுலா, திரு வெங்கையலங்காரம் என்னும் நான்கு பிரபந்தங்களை இய ற்றியருளினார். அக்காலத்தில் ஒருநாள், அவ்வூர்ப்பிடாரியா ரது உற்சவஇரதத்தால், அடியார்க்குபயோகமாகத் திரும டத்தெதிரிலிருந்த முருங்கைமரம் அழிந்தமைகண்டு,

"திருந்துதமி ழிலக்கணவன் இணைக்கோவை விருத்த கிரிச் செல்வற் கோதும், பெருந்தகைமை யுடையம்யாம் விடுமோலை வெங்கைநகர்ப் பிடாரி காண்க, விரும்புவீயி லொருமுருங்கைக் கொம்பொடியா மற்காத்திங் கிருக்கு நீநம், முருங்கைதனை வேரோடுங் களைந்தனையென் றூலுன க்கு முறைய தாமோ."

என்னும் திருவிருத்தத்தை அருளியமாத்திரத்தே, அவ்விர

தம் அழிந்தொழிய; தாம் சிலகாலமங்கிருந்து, துறைமங்கலத்தையடைந்தருளினர்.

அக்காலத்திலே, அண்ணுமலைரெட்டியாரென்பவர், சுவாமிகளை "தேவரீர் விவாகம்செய்துகொள்ளவேண்டும்." என்று பிரார்த்திக்க; சுவாமிகள்,

"சேய்கொண்டா ருங்கமலச் செம்மலுட னேயரவப், பாய்கொண்டா னும்பரவும் பட்டீச் சுரத்தானே, நோய்கொண்டா லுங்கொளலா நூறுவ்ய தளவிருந்து, பேய்கொண்டா லுங்கொளலாம் பெண்கொள்ள லாகாதே." எனவும்,

"நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த பெரியோர்க்ணிமலன் ருளைக், கிட்டையிலே தொடுத்துமுத்தி பெறுமளவும் பெரியசுகங் கிடைக்குங் காம, வெட்டையிலே மதிமயங்குஞ் சிறுவருக்கு மணம்பேசி விரும்பித் தாலி, கட்டையிலே தொடுத்துநடுக் கட்டையிலே கிடத்துமட்டுங் கவலை தானே." எனவும்,

விடையளித்தருளினர். சுவாமிகள்கருத்துணர்ந்து, பின்பு வேலையசுவாமிகளைப் பிரார்த்திக்க; அவர், சிவப்பிரகாசசுவாமிகளுடைய கட்டளை எவ்வாருமோ என்னுங் கருத்தால் உடன்படல் மறுத்தலென்னும் இரண்டுமின்றி மௌனராயினர். பின்னர் யாத்திரையினின்றும் வந்த கருணைப்பிரகாசசுவாமிகளிடத்தில் தமது வேண்டுகோளை விண்ணப்பஞ்செய்தமாத்திரத்தில், அவர், அதற்குத்தரமாக,

"நாணி யென்பதை நாரியென் றுரைத்திடு நசையால்
வேணு வானது வளைந்துபோய்ப் புகுந்தது வென்றுற்

காண லாவதோ ருருவமெய்ந் நாரியைக் கண்டாற்
பூணு வார்மயல் காளைய ரென்பதும் புதிதோ."
என்னும் கலித்துறையைப்பாடித் தமதுகருத்தை உள்ளபடி தெரிவித்தார்.

சிவப்பிரகாசசுவாமிகள், தம்பின்னோராகிய இருவர்கருத்தையும் உணர்ந்து; அவர்களுக்குத் தாம் துறவறம்பூண்டமையைத் தெரிவித்து மணம்புரிவித்து, அத்தருணத்திலே யாவரும் பெருவகையுறும்படி விநோதமாக,

"ஐயநின் சென்னிமிசை யுறைகின்ற மடமங்கை யாரென வுமை வினவவு,மன்னதொரு மடமங்கை யன்றவெண் டிரைகொழித் தழல்கொழுகு தண்புன லெனத், துய்யவொளி யானனங் கரியவிழி காதுவாய் தோயத்தி லுண்டோ வெனச், சொல்லருங் கமலமலர் காவிமலர் கொடிவள்ளை தூய செங் குமுத மென்னப், பொய்யென நினைத்துநற் கொங்கையுங் கூந்தலும் புனலினிடை யுண்டோ வெனப், புற்புதஞ் சைவலம தெனவே மறுத்துப் புகன்றிடுதி நங்கா யெனத், தையலவ ளேனென்ன நாணொடு வணங்கியென் றனபிழை பொறுத்தி டென்றே,சங்கர னுரைத்திடத் திருவுள மகிழ்ந் தசிவ சங்கரி யுமைக் காக்கவே." எனவும்,

"அரனவ னிடத்திலே யைங்கரன் வந்துதா னையவென் செவியை மிகவு, மறுமுகன் கிள்ளினா னென்றே சிணுங்கிடவு மத்தன்வே லவனை நோக்கி, விரைவுடன் வினவவே யண்ணனென் சென்னியில் விளங்குகண் ணெண்ணினா னென, வெம்பிடும் பிள்ளையைப் பார்த்துநீ யப்படி விகடமேன் செய்தா யென, மருவுமென் கைந்நீள முழமளந் தானென்ன

மயிலவ னகைத்து நிற்க, மலையரைய னுதவவரு முமையவ ளை நோக்கிநின் மைந்தரைப் பாரா யெனக்,கருதரிய கடலா டை யுலகுபல வண்டங் கருப்பமாப் பெற்ற கன்னி, கணப தியை யருகழைத் தகமகிழ்வு கொண்டனள் களிப்புட னு மைக் காக்கவே.” எனவும்,

“அம்பிகை யரன்றன்னை நோக்கியுன் றாபரண மரவ மென வுமையை நோக்கி, யரியரவ சயனத்தை யரவுருவ மானத்தை யறியாய்கொல் சிறிது மென்ன, நம்பிமனை தொ றுமிரந் துணுமாண்டி நீயென்ன நான்முறுத னறிவே னென, நவையுறும் பொய்புகன் றீரெனப் பாரத நடந்ததே கரியா மென, வெம்பியொரு வன்பிரம் பாலடித் தானென விளங் கிழை யொருத்தி தாம்பால், வீசினது சொல்லென்ன வெண் ணு யிரம்பெண்கண் மிகுகற்பை நீக்கினை யெனப், பம்புகற் பினிலோ ரிரட்டிப்பு நீக்கினது பதறும னீகே ளெனப், பர மருட னிவ்வாறு விளையாடு பச்சைப் பசுங்கொடி யுமைக் காக்கவே.” எனவும்,

“அச்சுத னளிப்பனில முமதுநே யன்வித்தை யருளுவ ன் பலபத்திர, னலமுதவு வன்சமன் பகடிவ னந்தமக் கான தோ ரொருது முண்டே, மூச்சிர வயிற்படை யினைக் கொழுவ தாக்குவோ மொய்ம்புட னிழுத் திறுக்க, முந்திய வடக்கயிற் றுடன்மற்று நமதன்பர் முன்போ யிரந்து கொள்வோ, மி ச்சையுடை நமதிளைய தனையனு கியகந்த னினிமையொடு மாடு மேய்ப்ப, னினியுழுது பயிரிடுத னன்றுநன் றிதைவிட் டிரந்துண்ப தீன மெனவே, கச்சுமுலை மாதுமை யுரைத்திடு ம் புத்தியைக் கைக்கொண் டுளத்தி லிதுநற், காரிய மெனக்

கருதி மெத்தக் களித்திடுங் கண்ணுத லுமைக் காக்கவே.”
எனவும்,

“கவுரிகம லாயர னிரந்தசோ றுணவெனக் கமலைமண் கண்டே னெனக், காளையொன் றேயரற் கெனமாடு மேய்த் ததைக் கட்டிடைய னுரோ வெனச், சிவனொருவர் தூதென் ன வத்தூது சென்றகதை செப்பிலொரு பாரத மெனச், சே ரோடு திருடினு னரனெனக் கட்டுண்ட செய்திநா மறிவோ மென, வவையினட மாடினு னரனென்ன வவ்வாட லரவம றியாதோ வென,வாலமதை யுண்டன னரனென்ன மண்ணு ண்ட வதனையறி யோமோ வென, விவரமொடு மலைமகளு ம லர்மகளு மிவ்வாறு விளையாடு மிவர்க டுணையா, மேவிவரு புத்ரமித் திரகளத் திரருடன் மேன்மேலு மிக வாழியே.”
எனவும், சிலசெய்யுள்களால் ஆசீர்வதித்தருளினுர்.

பின்பு தம்மிடத்தன்புபூண்ட அண்ணுமலைரெட்டியா ரோடு சிதம்பரத்திற்கு எழுந்தருளி. அங்கே ஒரு திருமட ங்கட்டுவித்து அதில் வீற்றிருந்து, சுவாமிதரிசனஞ் செய்து கொண்டு, சிவப்பிரகாசவிகாசம், தருக்கபரிபாஷை, சதம ணிமாலை, நால்வர்நான்மணிமாலை என்னும் பிரபந்தங்களை ச் செய்தருளி, அத்தலத்தை அருமையாகநீங்கி, பிறதலங் களையும் வணங்கி, திருக்காட்டுப்பள்ளியையடைந்து; சுவா மிதரிசனஞ்செய்துகொண்டு தங்கியிருந்தனர். அங்கிருக்கும் போது, கல்வியறிவிற்சிறந்த ஒருபெண் வீதியினிடத்தே உப் புவிற்றலைதலைக்கண்டு, இரக்கமுற்றுத் திருநோக்கதீக்ஷை செய்து, அவளது நல்லூழையும் பரிபக்குவத்தையும் உண

ர்ந்து, அவளுடைய புலமையைப் பிறர்க்குப்புலப்படுத்தத் திருவுளங்கொண்டு,

"நிறைய வுளதோ வெளிதோ கொளுவேம்
பிறையை முடிக்கணிந்த பெம்மா - னுறையுந்
திருக்காட்டுப் பள்ளி திரிபாவாய் நீயிங்
கிருக்காட்டுப் பள்ளி யெமக்கு."

என்னும் வெண்பாவைத் திருவாய்மலர்ந்தருளியமாத்திரத்தே, அப்பெண்,

"தென்னோங்கு தில்லைச் சிவப்பிரகா சப்பெருமான்
பொன்னோங்கு சேவடியைப் போற்றினோ-மன்னோன்
றிருக்கூட்ட மத்தனைக்குந் தெண்டனிட்டோந் தீராக்
கருக்கூட்டம் போக்கினோங் காண்."

என்னும் வெண்பாவைப் பாடிக்கொண்டு, தரிசனவேதியினெதிர்ப்பட்ட இரும்புபோல மனமுருகி மிக்க விரைவொடு விழுந்து நமஸ்கரித்தெழுந்து கூப்பியகரத்தினளாய்நிற்க; அப்பெண்ணிற்கு உண்மைஞானமுண்டாகும்படி கிருபா நோக்கஞ்செய்தருளினார்.

அதன்பின் காஞ்சீபுரத்தைத் தரிசிக்கவிரும்பி அண்ணாமலைரெட்டியாரோடும் பிரயாணப்பட்டு வரும்போது, வழியிலே சாந்தலிங்கசுவாமிகளைக்கண்டு கலந்து, களிகூர்ந்தபின் அவரைநோக்கித் தாங்கள் பேரொன்னுந் திவ்வியதலத்தினின்றும் எதையுத்தேசித்து எழுந்தருளியதென்று வினவ; அவர், சிவஞானபாலையதேசிகரைத் தரிசித்தல்வேண்டுமென்னும் பெருங்காதலால் வந்தேன். என்றுரைத்தருளினர். பின்னர், இருவரும் பேருவகையுற்றுப் பொம்மையபாளை

யத்துக்குச் சமீபமாகிய புத்துப்பட்டு என்னும் நகரத்தைய டைந்தவுடன், சாந்தலிங்கசுவாமிகள் சுவாமிகளை நோக்கி, "நாமிருவரும் சிவஞானபாலையதேசிகரைத் தரிசிக்கவேண் டியிருப்பதால் அவர்கண்மீது சிலதோத்திரங்கள் பாடுக." என்று பிரார்த்திக்க; சுவாமிகள், "நாம் நரஸ்துதி பண்ணு கிறதேயில்லை." என்று மறுத்துவிட்டு, சாந்தலிங்கசுவாமிக ளோடு அவ்வூரிலுள்ள ஐயனார்கோயிலின்புறம்பில் அன்றிர வு துயில்கொண்டார். அப்பொழுது, முருகக்கடவுள் மயில் வாகனாரூடராய் எழுந்தருளி ஒருபாத்திரத்தில் விடுபுஷ்பங் களைவைத்து "இவற்றை மாலையாகத்தொடுத்து நமக்கு அணியக்கடவாய்." என்று திருவாய்மலர்ந்து மறைந்ததா கக் கனவுகண்டு, சாந்தலிங்கசுவாமிகளுக்குத் தெரிவிக்க; அவர், "சிவஞானபாலையதேசிகர் முருகக்கடவுளிடத்து அதி பத்திமைபூண்ட உள்ளத்தோடு விளங்கியிருத்தலால் அது பற்றியே அக்கடவுள் தங்களுக்குச் சொப்பனத்தில் அத் தேசிகர்மகிமையை இவ்வாறுகப் புலப்படுத்தினர்." என்று வலியுறுத்தினர். அத்தேசிகர்மீது தாலாட்டு, நெஞ்சுவிடுதூ து என்னும் பிரபந்தங்களைப்பாடி, சந்நிதானத்திலே அரங் கேற்றி, ஞானோபதேசம்பெற்று, அந்தஞானாசாரியரது கட் டளைப்படியே தமதுதங்கையாகிய ஞானம்பிகையைச் *சாந் தலிங்கசுவாமிகளுக்கு விவாகஞ்செய்துகொடுத்துவிட்டு தம் மை நெடுநாளாகப்பிரியாது அத்தியந்த அன்புடையராய் உ டன்றொடர்ந்துவந்த அண்ணாமலையொட்டியாரைத் துறைமங்

* சாந்தலிங்கசுவாமிகள் பின்னர்த் துறவுபெற்றவர்.

கலத்துக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்து, ஞானசாரியனைத் தரிசித்துக்கொண்டு, அவ்விடத்திற்றானே இருந்தார்.

சிலகாலஞ்சென்றபின் ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக் காஞ்சிபுரத்தையடைந்து, சுவாமிதரிசனஞ்செய்து அங்கிருக்கும்பொழுது, நிஜகுணயோகியென்பவராற் கன்னடபாஷையிற் செய்யப்பட்டிருந்த விவேகசிந்தாமணியின் ஓர் பாகமாகிய வேதாந்தபரிச்சேதத்துக்கு வேதாந்தசூடாமணியெனப்பெயர்தந்து அதனையும், இரேணுகரொன்னுங் கணத்தலைவரால் அகத்தியமகாமுனிவருக்கு உபதேசிக்கப்பட்ட சித்தாந்தசிகாமணியையும், பிரபுதேவர்சரித்திரமாகிய பிரபுலிங்கலீலையையும் தமிழிற்பாடியருளி, ஞானசாரியனைத் தரிசிக்கவேண்டுமென்னும் பேராசையால் அவர்மீது திருப்பள்ளியெழுச்சி, பிள்ளைத்தமிழ் என்னும் இரண்டுபிரபந்தங்களையுஞ் செய்துகொண்டு, அங்ககன்று இடையிலுள்ள தலங்களைத்தரிசித்து, கூவமென்னுந்தலத்தையடைந்து, அங்குள்ள வேளாளர்கள்முதலியோர் வேண்டுகோளின்படி புராணம்பாடி அரங்கேற்றி, ஞானசாரியனையடைந்து தரிசனஞ்செய்து, மேற்சொல்லிய பிரபந்தங்களனைத்தையும் சந்நிதியிலரங்கேற்றி, உடன்வசித்திருந்தனர். அந்நாளிலேஒருநாள், சாயங்கால அநுட்டானமுடித்துக்கொண்டு ஞானசாரியரிடத்துத் தாம் ஏகாந்தமாயிருந்து, ஷடுஸ்தல இலிங்காநுபவமுதலியவற்றை ஆராய்ந்துகொண்டு இன்புறும்பொழுது, எதிரொழுந்த சந்திரோதயத்தைக் கண்டு,

"கடன்முரச மார்ப்பக் கதிர்க்கயிற்றா லேறி
யடைமதி விண்கழைநின் றாடக் - கொடைமருவு

மெங்கள் சிவஞான வேந்த லிறைத்தமணி
தங்கியவே தாரகைக டாம்."
என்னும் வெண்பாவை அருளிச்செய்தனர்.

பின்னர் ஞானாசாரியரநுக்கிரகித்தபடியே விருத்தகிரியையடைந்து, பழமலைநாதனையும் பெரியநாயகியம்மையாரையுந் தரிசித்து வணங்கி, அவ்விடத்திலே தம்பொருட்டு ஒருதிருமடமமைத்து எதிர்கொண்டு வணங்கிநிற்கும் சிதம்பரபூபதியைச்சிறப்பித்து,

"வெங்கைப் பழமலை யார்மீது கோவை வியந்துரைக்கு
மெங்கட் கினிய சிவஞான தேவ னிசைவுகொடு
திங்கட் பவனி யிருகான் முதுகுன் றர் சேர்மறுகின்
மங்குற் சிதம்பர பூபதி நல்கு மடமிதுவே."

என்னும் கட்டளைக்கலித்துறையைப் பாடியருளி, அத்திருமடத்தடைந்து வீற்றிருந்து, பழமலையந்தாதி, பிக்ஷாடனநவமணிமாலை, கொச்சககலிப்பா, பெரியநாயகியம்மை நெடுங்கழிநெடிலாசிரியவிருத்தம், பெரியநாயகியம்மை கட்டளைக்கலித்துறை என்னும் பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளினார். ஒருநாள், மணிமுத்தநதியிலே ஸ்நானஞ்செய்துவரும் பொழுது, அதனருகிருந்த மாஞ்சோலையின் புறத்து வழிதே விழுந்துகிடந்த மாங்கனியைக்கண்டு, இது சிவலிங்கப் பெருமானுக்கு நைவேத்தியத்திற்கு உபகரணமாகுமென்று கருதியெடுக்க; அதுகண்ட அச்சோலைக்காவலாளன், மகிமையறியாது மடிபிடித்திழுத்து மனவருத்தஞ்செய்தனன். சுவாமிகள், அவன் சிவாபராதியாயிருத்தலின் அவனை தண்டித்துச் சுத்தனுக்கத் திருவுளங்கொண்டு,

"அடுத்துவருந் தொண்டனுக்கா வந்தகனைத் தாளா
லடர்த்ததுவுஞ் சத்தியமே யானு—லெடுத்ததொரு
மாங்கனிக்கா வென்னை மடிபிடித்த மாபாவி
சாங்கனிக்கா தித்தன்வரத் தான்."

என்னும் வெண்பாவைப்பாடி. சூரியனுதயமானவுடன் உயிர் துறக்கும்படிசெய்து, நற்கதியிலடைவித்தருளினர்.

இங்ஙனம் இருக்குநாளிலே, சிவஞானதேசிகர் தமக்கு ஐந்நூறுவயது பூர்த்தியாயினமையால், உலகின்கணிருத்தலில் உவர்ப்புத்தோன்றி, அப்பொழுது சகலபற்றுக்களையும் ஒழித்துவிளங்கும் சிவப்பிரகாசசுவாமிகளுடைய சித்தவிரத்தியைத் தாமறிந்திருப்பதால், பரிபக்குவராகிய வேறோர் மாணுக்கருக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து, ஞானோபதேசம்புரிந்து, அவரைத் தமக்குப்பதிலாக நியமித்துவிட்டு, வைகாசிமாதத்தில் பௌர்ணிமைத் திதியோடுகூடிய விசாகநக்ஷத்திரத்திலே, சிவயோகசமாதியிற்கூடி, சித்தியால் திருமேனியை விபூதிமயமாக்கியொடுக்கி, தாம் இஷ்டலிங்கபரசிவத்திலே கலந்தருளினர். இதனையறிந்த சிவப்பிரகாசசுவாமிகள் மனங்கலங்கி, பொம்மபுரத்தையடைந்து, ஆசிரியரொடுங்கிய குகையுட்சென்று, அடியற்றமரம்போல விழுந்து பலமுறை நமஸ்கரித்துத்துதித்து "கருணாநிதியே! இக்கடையேனையும் விரைவிலேதிருவடியிற்சேர்த்தருளுக." என்றுபிரார்த்தித்து, தாமியற்றியகலம்பகத்தையுஞ் சந்நிதியிலரங்கேற்றி,அக்குகையுள்ளே ஞானசாரியரை பாவனுரூபமாகவழிபட்டுக்கொண்டு,மூன்றும்பட்டத்துச்சுவாமிகளோடு தங்கியிருந்தனர். ஒருநாள் தனிமையாய்ச் சமுத்திரதீரத்

தையடைந்து அங்குள்ள நறுமணற்பரப்பிலே தாமெழுதிய நன்னெறிவெண்பாநாற்பதையும் எழுதிவரும்படி தம்பின்னோராகிய கருணைப்பிரகாசசுவாமிகளுக்குக் கட்டளையிட்டு, ஞானசாரியரிடத்தே விடைபெற்றுக்கொண்டு திருப்பதிகம் பெற்ற திருத்தலங்கடோறும் யாத்திரைபுரிந்து வந்தனர். அக்காலத்திலே, அகராதிசெய்த வீரமாமுனிவரென்பவர் எதிர்ப்பட்டு யேசுமதமாகிய தங்கொள்கையை நாட்டுதற் பொருட்டுத் தருக்கஞ்செய்ய; உடனே, அக்கொள்கையை மறுத்து, யேசுமதநிராகரணமெனப்பெயரிய ஓர்நூலை அருளிச்செய்து, ஒவ்வொருதலங்களையும் இவ்விரண்டுவெண்பாக்களாற் றோத்திரஞ்செய்துமுடித்து, நல்லாற்றூரையடைந்து, ஞானசாரியரது திருமடத்தில் வீற்றிருந்தார்.

இவரிடத்து விடைபெற்றுச்சென்ற கருணைப்பிரகாசசுவாமிகள், இஷ்டலிங்கவகவல் பாடிமுடித்து, சீகாளத்தி புராணத்தைப் பாடத்தொடங்கி சீகாளத்திசருக்கம்வரையும் தமிழில்மொழிபெயர்த்தருளி, திருவெங்கைமாநகரத்தில், பதினெட்டாம்வயதில், சிவலிங்கவைக்கிய மாயினார். அதனையறிந்தசிவப்பிரகாசசுவாமிகள், அவ்விடத்தேசென்று,

"முன்னமொரு தமிழ்ப்புலவன் றனையுண்டு கண்டசுவை முதிர்ச்சி யாலே, தன்னியலை முழுதுமுறைத் தமையாமுன் னினைக்கவர்ந்து தடங்கா ளத்தி, மன்னவனுண் டானெனது மாதவத்தின் வலிதீர மண்ணின் மீதே, யென்னுடன்வந் தவதரித்த விளங்கருணைப் பிரகாச னென்னுங் கோவே."

என்னும் விருத்தத்தைப்பாடிநிற்க; வேலையசுவாமிகள்,

"ஆண்டதனு லெனையொவ்வாய் வித்தையினிற் றமையனினு மதிகமென்றே, பூண்டவுலகதனினுள்ளோர் புகல்வதுகேட் டிருந்துமென்ன புதுமை தானே, காண்டகுகண் மணியேநல் விளங்கருணைப் பிரகாசக் காளாய் நீதான், மாண்டனையென் றறிந்திருந்து முயிர்தரித்தேன் யானுமிகு வன்னெஞ் சேனே."

என்னும் விருத்தத்தைப்பாடித் துக்கித்துக்கொண்டு, சுவாமிகளைப் பிரியலாற்ருது வருந்திநின்றனர். அவரை ஒருவாறு தேற்றி நிறுத்திவிட்டு, தாம் நல்லாற்றூரையடைந்து, திருமடத்திலிருந்துகொண்டு, சிவநாமமகிமையும், இஷ்டலிங்கப்பெருமான்மீது அபிஷேகமாலையும், நெடுங்கழிநெடிலும், குறுங்கழிநெடிலும், நிரஞ்சனமாலையும், கைத்தலமாலையும், சீகாளத்தி புராணத்தில் கண்ணப்பச்சருக்கமும், நக்கீரச்சருக்கமும் செய்தருளி, சிவாநுபவச்செல்வராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, முப்பத்திரண்டாம்வயதில், கன்னிமதியில், பௌர்ணிமைத்திதியில், இஷ்டலிங்க பரசிவத்திற் கலந்தருளினார்.

அப்பொழுது, வேலையசுவாமிகள்

"அல்லிமலர்ப் பண்ணவனு மாராய்ந் தறிகவிதை
சொல்லு மிருவரிடைத் தோன்றியயான்-முல்லை
யரும்பிற் பொலியு மணிமுறுவ னல்லாய்
கரும்பிற் கணுநிகர்த்தேன் காண்."

என்னும் வெண்பாவைப்பாடி அளவிடப்படாத அருந்துயர்க்கடலின்மூழ்கி, ஒருவாறு தெளிந்து, சிவப்பிரகாசசுவாமிகளது சமாதிதரிசனஞ்செய்துகொண்டு, அவ்விடத்தினின்றும்

நீங்கி, நல்லூர்ப்புராணம், இஷ்டலிங்கக்கைத்தலமாலை, கும்பகோணச்சாரங்கதேவர்சரித்திரமாகிய வீரசிங்காதனபுராணம், குகைநமச்சிவாயதேசிகர் சரித்திரமாகிய நமச்சிவாயலீலை, கிருஷ்ணசரித்திரமாகிய பாரிசாதலீலை, மயிலத்திரட்டைமணிமாலை, மயிலத்துலா என்னும் பிரபந்தங்களைச்செய்தருளி, சீகாளத்திபுராணத்தையுமுடித்து, பெருமத்தூர் மடத்தில், எழுபத்திரண்டாம்வயதில், சிவலிங்கவைக்கியமாயினர்.

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

பிரசித்தபத்திரம்.

—:o:—

சிவப்பிரகாசசுவாமிகள் முதலிய மூவருமருளிய (௬௨.) பிரபந்தங்களையும் வெளிப்படுத்த உத்தேசங்கொண்டு ஒவ்வொன்றாக அச்சிட்டுவருகின்றோம்; ஆகையால், அச்சிடப்படாத பிரபந்தங்களில் ஏதேனும் கிடைக்கப்பெற்றுள்ளவர்கள் இத்தருணத்தில் அனுப்புவார்களாயின் மிகுதியும் பேருதவியாகும்: இதுவிஷயத்தில் பொருளைவிரும்பினும் இயன்றவளவு உபகரித்துப் பெற்றுக்கொள்ளுவோம். அறிவிக்குக. இங்ஙனம்,

சென்னபட்டணம் முத்தியாலுபேட்டை தம்புசெட்டியார் வீதியில் மேலண்டைவாடை 130 - வது நெம்பர்வீடு

கா - ஞானசுந்தரஐயர்.

உ

சிவசண்முகன் றுணை.

சிவப்பிரகாசசுவாமிகள்முதலிய

மூவருமருளிய பிரபந்தங்கள்.

இருபத்தெண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தெருள்சிவப்பிரகாசவடிகளருளிய நூல்கள்சீர்ச்சோண
சைலமாலை, செந்திலந்தாதிவெங்கைக்கோவைவெங்கைக்க
லம்பகம்வெங்கையினுலா, செப்பரியவெங்கையினலங்கார
மேசிவப்பிரகாசநல்விகாசஞ், சேர்தர்க்கபரிபாஷைநால்வர்
நான்மணிமாலை திரிபில்சதமணிமாலையே,— யருளுறுஞ்சி
வஞானிநெஞ்சுவிடுதூதுதாலாட்டுபிள்ளைத்தமிழ்கலம், பக
மொடும்பள்ளியினெழுச்சிகூவப்புராணம்பிரபுலிங்கலீலை, ய
மையும்வேதாந்தசூடாமணிசித்தாந்தச்சிகாமணி நல்பழமலை
யினந், தாதிபிக்ஷாடனநவமணிமாலையுட னறைகொச்சகக்க
லிப்பா,— மருளதனைமாற்றுபெரியம்மைக்கலித்துறைவளர்
நெடுவிருத்தம்யேசு, மதநிராகரணநன்னெறியோடுசிவநாம
மகிமைதலவெண்பாமுறை, வதியிஷ்டலிங்கவபிஷேகமாலை
யுநெடுங்கழிநெடில்குறுங்கழிநெடில், மாநிரஞ்சனமாலைகை
த்தலமாலையாமற்றுவேலையர்நூல்கள்,— வெருளில்கைத்த
லமாலைநல்லூர்ப்புராணமலர்விரிபாரிசாதலீலை, வீரசிங்காத
னபுராணமயிலாசலவிரட்டைமணிமாலையொடுலா, மிளிர்கு
கைநமச்சிவாயர்லீலை கருணைப்ரகாசர்நூலிஷ்டலிங்க, விதி
யகவல்சீகாளத்திப்புராணந்தனைவிரித்தனரிம்மூவருமரோ.

ஆக - சஉ.

கணபதிதுணை.

சிவஞானபாலையதேசிகர்

தாலாட்டு.

காப்பு. நேரிசைவெண்பா.

அவஞானம் போக்கி யருண்ஞான மாக்குஞ்
சிவஞான தேவன் றிருமுன் - றவஞானத்
தாலாட் டெனுந்தமிழைச் சாற்றுதற்கு நற்றுணையா
மாலாட்டு மாமுகத்தன் வந்து.

திருவருளா லென்னைத் தெரிவிக்க விங்குத்
திருவுருவாய் வந்த சிவஞான தேசிகனே. (க)

என்றுமித்த பூரணமா யின்பவறி வுண்மையாய்
நின்றபடி நிற்கு நிகழ்பிரம மென்றானே. (உ)

தன்சத்தி யாலாந் தலமங்க லிங்கமென
வென்சத்தி பாதத் தெழுந்தருளிச் சொன்னானே. (ங)

நண்பாகு மிட்டலிங்க நன்றும் பிராணலிங்க
மொண்பாவ லிங்கமா மோர்பொருளிங் கென்றானே. (ச)

ஆசார லிங்கமுட னாருங் குருலிங்கந்
தேசாரு மிட்டலிங்கஞ் சேர்ந்தாகு மென்றானே. (ரு)

அந்தப் பிராணலிங்கத் தாகுஞ் சிவலிங்க
மிந்தச் சரலிங்க மென்றசிவ ஞானியோ. (௬)

பாவலிங்கந் தன்னிற் பரமப் பிரசாதந்
தாவகன்ற மாலிங்கஞ் சார்ந்துவரு மென்றானே. (௭)

ஏகாங்க மேயாகு மின்பத் தியாகாங்கம்
போகாங்கம் யோகாங்கம் போற்றியறி யென்றானே. (௮)

பத்தனுமா யேசனுமாம் பன்னூந் தியாகாங்க
முத்துணரி னென்ன வுணர்த்தும் பெருமானே. (௯)

பிரசாதி யோடு பிராணலிங்கி யாகு
முறைசாரும் போகாங்கமொன்றென் றுசொன்னானே. (௧௦)

சாற்றுமியோ காங்கஞ் சரண னயிக்கியனும்
போற்றிநீ காணென்று போதித்த தேசிகனே. (௧௧)

அங்க நவவிதமு மந்தநவ லிங்கமொடு
தங்கு மெனவெனக்குச் சாற்றும் பெருமானே. (௧௨)

விழுங்கல் பருகலொடு மெல்லலா சார
மொழுங்கிற் குருசிவமு முற்றிடுமிங் கென்றானே. (௧௩)

சோகிய லேகியமுஞ் சொன்ன விவற்றறிவு
மேகியுறும் பின்மூன் றிலிங்கத்து மென்றானே. (௧௪)

இந்தக்கா யார்ப்பணங்க ளிட்டலிங்கத் தென்றெனக்குச்
சந்தப் படவுரைத்துத் தந்தசிவ ஞானியோ. (௧௫)

பீடமிடை வட்டம் பெருங்கோ முகநாள
மாடலுறு கோளகமா சாராதிக் கென்றானே. (௧௬)

நாற்றஞ் சுவையுருவ நல்லூ றொலிநிறைவு
சாற்றுஞ் சடுலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (கஎ)

வேர்முதலாங் கந்தம் விளங்கு மரமுதலாங்
கூர்மணமா சாரங் குருவினிலா மென்றானே. (கஅ)

தளிராதி கந்தமுகை தான்முதலாங் கந்த
மொளிரார் சிவசரத்தி னுற்றிடுமிங் கென்றானே. (கக)

காய்முதலாங் கந்தமெலாங் காசில்பிர சாதத்துந்
தூய்மலிமா லிங்கத்துந் துன்னுமெனச் சொன்னானே.(உ0)

மதுரந் துவர்கார்ப்பு வண்புளிகைப் பெல்லாஞ்
சதுரொன் றிருத்தியவா சாராதிக் கென்றானே. (உக)

பொன்மைவெண்மை பச்சைமாஞ் சிட்டபோ தங்களெலா
நன்மையவா சாராதி நண்ணுமென்ற நாயகனே. (உஉ)

வன்மைமென்மை வெம்மைதண்மை வாய்ந்தமிசிரமெலாஞ்
சின்மையவா சாராதி சேர்ந்துகொளு மென்றானே. (உந)

கஞ்ச நரம்புதோல் கண்டகுழ லாதியொலி
யஞ்சொலிவை யெல்லாமவ் வாறுறு மென்றானே (உச)

மணமுதலா மைந்து வகைநிறைவெ லாமு
நணுமுறையா சாராதி நாடிலெனச் சொன்னானே. (உரு)

இம்முறையா றாறு மிலங்குகர ணார்ப்பிதமென்
றெம்மறிவு கொள்ள வியம்புசிவ ஞானியோ. (உசு)

தொட்டறிந்திங் கொன்றைத் துணிந்து நுகர்ந்துமகிழ்ந்
திட்டமைந்து நிற்கு மிலிங்கங்க ளென்றானே. (உஎ)

கூறுமிவை யாவினுமிக் கொள்கை பெறுமிலிங்க
மேறு மிரட்டுநூற் றெட்டாகு மென்றானே. (உஅ)

உருவஞ் சுவைநிறைவா யோங்காப் பிதங்கண்
மருவுந் திறஞ்சொன் மயிலை மலைவிளக்கோ. (உகூ)

சுத்தசித்த மோடுபிர சித்தமெனத் தோன்றுபுபா
சத்தமுத்த மாக்குபிர சாதமரு ளுயகனே. (௩௦)

அங்கலிங்க சத்திபத்தி யத்தமுக வர்ப்பிதசே
டங்களிவை யட்ட சயிலமெனச் சொன்னானே. (௩க)

குசித்த மழிந்து குடும்பநோய் மாற்றுஞ்
சுசித்தமதி லாசாரந் தோன்றுமெனச் சொன்னானே. (௩உ)

குபுத்தி யழிந்து குருநெறியி னிற்குஞ்
சுபுத்திதனி னிற்குஞ் சுடர்குருவிங் கென்றானே. (௩௩)

ஆங்கார மில்லா நிராங்கார வத்தமதி
னீங்கா திலகு நிகழ்த்துசிவ மென்றானே. (௩௪)

கமன மழிந்து கறையற்று நிற்குஞ்
சுமனமதி னின்றிலகுந் தூயசர மென்றானே. (௩ரு)

மெய்ஞ்ஞான மாகி மிளிரும் பிரசாதஞ்
சுஞ்ஞான வத்தமதிற் றோன்றுமெனச் சொன்னானே. (௩௬)

துற்பாவ நீங்கித் துணிவுபடு மத்துவித
சற்பாவ மாலிங்கஞ் சாருமெனச் சொன்னானே. (௩௭)

ஆதார பீடங்க ளாறினுமவ் வாறிலிங்க
மீதாக வைத்து விளங்கச்செய் வித்தகனே. (௩அ)

ஆறு முகங்களுமவ் வாறுசா தாக்கியமு
மாறு வருணமுமா மாறிலிங்க மென்றானே. (ரு௯)

பத்தனொடு மாயேசன் பார்ப்பரிய வாசார
மெய்த்தகுரு நான்கும் விளங்குகுரு வென்றானே. (௬௦)

பிரசா தியுமப் பிராணலிங்கி தானு
முரைசால் சிவசரமு மோங்கிலிங்க மென்றானே. (௬க)

ஒழிந்தவங்க லிங்க மொருநான்கு நம்பா
லெழுந்தருளுஞ் சங்கமமென் றின்பந் தருவானே. (௬௨)

உருவ முருவருவ முற்றறிதற் கெட்டா
வருவமென நின்றிடுமவ் வாறுமெனச் சொன்னானே. (௬௩)

மாசுதரு தூலாதி மானவிசு வாதியே
யாசி றியாகாங்க மாதியா மென்றானே. (௬௪)

விரிந்தன வெலாமும் விரிந்தமுறை சென்றே
யொருங்கியங்க லிங்க வுபயமா மென்றானே. (௬௫)

கடத்தி னுபாதியா காயமுற்ற வாபோ
லடுத்த வுபாதியா லங்கலிங்க மென்றானே. (௬௬)

தங்கு மிலிங்கமாந் தற்பதமத் தொம்பதமே
யங்க மயிக்கிய மசிபதமென் றுண்டானே. (௬௭)

ஆக முயிர்துரிய னய்நின்ற போதெமைத்தான்
சோகமனத் தானகத் தோன்றும் பெருமானே. (௬௮)

அமைத்தபரஞ் சுத்தத் தசுத்தமதிற் சிவன்
றமப்பகுதி யிற்றோன் றுந் தத்துவங்க ளென்றானே. (௬௯)

நிரஞ்சன சூனியமா நிட்களத்திற் சித்து
வருஞ்சுடர்சின் ஞாதாதி வாய்ப்பவெனச் சொன்னானே. ()

மூலசித்து நாதாதி மூன்றும் புணர்ந்தாகு
மாலகற்றுஞ் சோதிமய மாலிங்க மென்றானே. (ருக)

அகராதி மாலிங்கத் தாகியவை கூடித்
தகவாமோங் கார சதாசிவமா மென்றானே. (ருஉ)

அந்தச் சதாசிவத்தி னைம்முகத்து மைம்பூதம்
வந்துற் றிதயத்தான் மாவருமிங் கென்றானே. (ருந)

அப்பூதம் பஞ்சீ கரித்திருபத் தைந்தாகி
மைப்பூணு மான்மாவை மன்னியிடு மென்றானே. (ருச)

ஆணவத்தான் மூடனு மாருயிர்க்கு முன்வினையான்
மாண வளிக்குமிஃறு மாயைவடி வென்றானே. (ருரு)

மேலைவினை யாலுழலு மெய்யுயிர்க்குப் பாகமலக்
காலமுறச் சுத்தக் கரணமா மென்றானே. (ருசா)

கூறுமனச் சுத்தமுறக் கொண்டுபிண்ட நாமத்தை
நூறு தலநெறியு நோக்குமெனச் சொன்னானே. (ருஎ)

கிரியைமன பாவங் கிடைப்பரிய ஞான
மருவிவிடா தங்கம் வயங்குமெனச் சொன்னானே. (ருஅ)

ஞாதிருவு நின்றறியு ஞானஞே யங்களுமற்
றேதமற வென்று மிருந்தபடி வைப்பானே (ருகூ)

வானேத்த வென்று மருவற் கரியபத
நானேத்த நல்குசிவ ஞானகுரு தேசிகனே. (சாO)

மிடியற் கெளிது விழியுற்ற பொன்போ
லடியற்கு வந்திங் ககப்பட்ட வாரமுதோ. (சுக)

கயிலைமலை மேவுங் கடைப்பிடியாற் சீர்சான்
மயிலைமலை மீதிங்கு வந்தமர்ந்த மாமணியோ. (சுஉ)

எல்லாக் கலையுணர்ந்து மெய்தாப் பொருளையொரு
சொல்லாற் றிகழ்த்துதற்குத் தோன்றும் பெருமானே (சுஙு)

சீலந் திகழ்த்துமதிச் சின்னமின்றி யும்படியோர்
கோலஞ் சிவமெனவுட் கொள்ளுமருட் குன்றமோ. (சுச)

மண்களிக்க நாயேன் மனங்களிக்கக் கண்டுகொண்டு
கண்களிக்க வந்த கருணைப் பெருங்கடலோ. (சுரு)

சம்பந்த னன்றொருநாட் டானுண்ட பாலுரே
வெம்பந்த நீங்க வினிதமுது செய்தானே. (சுசு)

வேண்டுவவெல் லாமுமாம் வெண்ணீ றளிப்பதற்குத்
தீண்டு மலர்க்கைச் சிவஞான தேசிகனே. (சுஎ)

இம்மை மறுமை யிரண்டும் பெறவெமக்குச்
செம்மைதர வந்த சிவஞான தேசிகனே. (சுஅ)

அரசமய மன்றி யகங்களித்தெஞ் ஞான்றும்
பரசமய மும்பணியும் பங்கயப்பொற் றாளானே. (சுகூ)

தானபங்க னென்னுமதன் றன்றனை யைக்கடந்து
மானபங்கம் பண்ணும் வலியொன் றுடையானே. (எ௦)

அறியா தொருநா ளறையினும்வன் பாசஞ்
செறியா தருளுந் திருப்பே ருடையானே. (எக)

பூதமுத லெல்லாமும் போக்கியவற் றுண்மறைந்து
ஞாதிருவா மென்னை நயந்தறிவித் திட்டானே. (எஉ)

எந்தைசிவ சாதனங்கட் கெல்லாந் திருநீறு
முந்தியதென் றுண்மை மொழியும் பெருமானே. (எங)

உருத்திரனே யையமிலை யோருருத்தி ராக்கந்
தரித்தவ னென்றெமக்குச் சாற்றும் பெருமானே. (எச)

ஒண்மறையின் கண்ணு முருத்திரமவ் வஞ்செழுத்துங்
கண்மணியென் றையமறக் காட்டு மருட்கடலோ. (எரு)

அருவாகி நின்றசச்சி தானந்த வீசன்
குருவாகித் தன்னைக் கொடுக்குமெனச் சொன்னானே. (எசு)

பரம சிவமெனவும் பண்டைமறை போற்றும்
பிரமமென வும்பேர் பெறுமிலிங்க மென்றானே. (எஎ)

திரஞ்சரமென் றீசன் றிருவுரு விரண்டுட்
பரஞ்சரமென் றோதும் பவளவா யண்ணலோ. (எஅ)

அங்கம் புனைவோ னடிப்புனலல் லாதுபவப்
பங்கங் கழுவப் படாதென்று சொன்னானே. (எகூ)

அந்தக் கரணத் தழுக்கறுப்ப தெங்கள்பரன்
சந்தப் பிரசாதந் தானென்று சொன்னானே. (அ௦)

தருணமதிற் சீறுந் தனிவிழிகாட் டாமற்
கருணை குடியிருக்குங் கண்களொடு வந்தானே. (அக)

ஏருருந் தான்வா ழிடமேநற் காசியுந்தென்
னூருரு மம்பலமு மாக்குசிவ ஞானியோ. (அஉ)

தன்பாத தாமரைதோய் தண்புனலே கங்கையாய்
வன்பாச நீக்க வழங்குசிவ ஞானியோ. (அங)

மண்படைத்த நான்முகனுர் மானுடர்த மொண்முகத்திற்
கண்படைத்த பேறுபெறக் காட்டு முருவானோ. (அச)

ஆர்க்குங் கொடுநோ யனைத்துங் கடைக்கண்ணாற்
றீர்க்குங் கருணைச் சிவஞான தேசிகனோ. (அரு)

செப்ப முறவென து சிந்தைவீட் டாசையெனுங்
குப்பை துகைத்துக் குடியிருக்க வல்லானோ. (அசு)

தன்னையரு ளாளனெனுந் தன்மை யுலகறிய
வென்னையடி யாரோ டெழுந்தருளிக் காத்தானோ. (அஎ)

மெய்த்த வறிவாம் விளங்குகதை யொன்றெடுத்துத்
தத்துவமா மட்கலத்தைத் தாக்கும் பெருமானோ. (அஅ)

வழுவின்றித் தன்மா வலியுலக மேத்த
மழுவின்றிப் பாவ மரமெறிய வந்தானோ. (அகூ)

இணையாது மில்லா விடர்ப்பவவே லைக்குப்
புணையாக வந்தருளும் புண்டரிகத் தாளானோ. (கூ0)

ஊனோ வுயிரோ வுயிர்க்குயிரோ வானந்தத்
தேனோ வமுதோ சிவஞான தேசிகனோ. (கூக)

அண்ட முழுது மணுவிற் சிறியவாக்
கொண்ட பெருமைக் குணக்குன் றனையானோ. (கூ௨)

எங்கண் மலவிருளுக் கீண்டு மயிலைமிசைச்
செங்கதிர்போற் றோன்றுஞ் சிவஞான தேசிகனோ. (கூங)

அற்பகலு மாரு தரனடியார்க் கீதலுறுங்
கற்பகமாய் வந்துதிருக் காஞ்சிநக ருற்றானே. (௯௪)

பூனு மருள்வசவன் பூண்டசர பூசையன்று
காணு வெமக்கின்று காட்டுசிவ ஞானியோ. (௯௫)

விருப்புவெறுப் பின்மை விளக்கவென்புன் சொல்லைத்
திருப்பதங்கொள் கின்ற சிவஞான தேசிகனே. (௯௬)

பொறியூடு செல்லுமனப் போர்க்களிற்றைத் தன்றாட்
டறியூடு நிற்பத் தளைந்தசிவ ஞானியோ. (௯௭)

பாடியுந்தன் சீர்த்தி பரவியுந்தன் பாதமலர்
சூடியுமிக் காலந் தொலைக்கவருள் செய்தானே. (௯௮)

பொய்ம்மாயை யென்னும் புலியின்வாய்ப் பட்டேனைக்
கைம்மாறி லாமற் கருணைகொடு மீட்டானே. (௯௯)

பத்தியுந்தன் பங்கயப்பொற் பாதமே பாடுகின்ற
சித்தியுந்தந் தாளுஞ் சிவஞான தேசிகனே. (௧00)

தாலாட்டு முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ.

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர்

நெஞ்சுவிடு தூது.

காப்பு. நேரிசைவெண்பா.

கைக்களிற்றை யன்றுரித்த கண்ணுதலோ னீன்றதனி
மெய்க்களிற்றை நெஞ்சமே மேல்கொண்டு - புக்குருக்கி
மேவன்பாற் றூதாகு மேனிச் சிவஞான
தேவன்பாற் றூதாகச் செல்.

நீர்கொண்டு தாளாலங் நீரைத்தீஞ் சாறென்று
பேர்கொண்டு வந்தாரப் பெய்கரும்பி - னேர்கொண்ட

பூமுடியா னீர்கொண்டு பொங்கு மருளென்று
நாமுடியால் வீழ்ந்திறைஞ்ச நல்குதரு - காமருதன்

றேசுணர்த்த வேண்டித் திருமுடிமேன் மேவிவாழ்
மாசுணத்தைத் தானெளித்த மாணிக்க - நேசித்துக்

கொள்ளு மடியார் குழாத்தினைத்தான் வஞ்சித்திங்
கெள்ளும் விடங்கலவா வின்னமுதந் - துள்ளு

மொருமான் மழுவோ டொளித்தெமைமுன் பற்று
மிருமா னெளிக்கவரு மெம்மான் - பெருமா

னுடுத்திருந்த வாதனையா லோங்குபுலித் தோன்மே
லடுத்திருந்து வாழு மரசு - தடுத்திருந்த

தொன்றென் றவித்தை யொழித்திட் டெம்பினை நீ
யன்றென் றொழித்தெனைத்தா னுக்குவா - னன்றென்று

பொன்னை நரர்க்குக் கொடுத்துநீர் போமென்று
தன்னை யெனக்கருளுந் தம்பிரா - னன்னையெனு

முற்று னமுதமே யொப்பா னருண்மேனி
பெற்று னடியேன் பிழைபொறுப்பான் - கற்றூர்

தொடுத்த தொடைக்கிசைந்த தோற்றத்தான் றன்னைக்
கொடுத்த கொடைக்குவந்த கோமா - னடத்தலுறச்

செல்லுமணித் தேர்மீது செய்தமைத்த பாகன்போ
லில்லு ளுமைவைத் தியக்குவா - னல்ல

சுரர்மேன்மை யெங்கீழ்மை தோன்று தொழிய
நரர்மேனி சாத்திவரு நம்பன் - றனாமேன்

மழுவேறு கையான் வரினுநீ றெள்ளுங்
கழுவே றிகளுந்தாழ் காலான் - புழுவேறு

மென்பயிர்போல் வெய்ய விடயத் தரிப்புண்டு
துன்புறுவேற் குற்ற துணையானு - னென்பிலுயி

ராக்கினன் போல வடியே னுளத்தன்புண்
டாக்கினன் மாறுத வானந்தன் - தேக்கினு

னுதாந்தன் வீடுதவு ஞானவினோ தன்றெளிந்த
வேதாந்தன் கைம்மாறு வேண்டாதான் - போதாந்தன்

விண்ணோ ரமுதுண்ண வேண்டி விடமுண்ட
தண்ணா ரருள்சிறிது தானாக - வெண்ணா

விறப்புக் கடிய விருவினையோ டெங்கள்
பிறப்புக் கடியப் பிறந்தான் - சிறப்பக்

கயிலைமலை மீதிருந்த காட்சிபோல் வந்து
மயிலைமலை மீதிருக்கும் வள்ளல் - பயில

நரனென் றிருந்தாலு ஞானமிலா தாரும்
பரனென் றறியப் படுவா - னொருநன்றில்

பாவிக் குதாசனர்க்குப் பத்தர்க்குச் சீடர்க்கு
மேவிக் கருணைபுரி மேன்மையா - னாவிக்குத்

தோன்றாத் துணையாகித் தோன்றுந் துணையுமாய்ச்
சான்றோர்க் கருளுந் தலைமையான் - மூன்றாற்

பெருக்கு மிருசமயம் பேதித் தறியா
திருக்கு நிலையி னிருப்பா - னரக்கன்

மலையா நிலையாகி மத்தாகி யாழி
யலையாத தாயளப்ப தன்றிச் - சிலையாய்ப்

பொறுப்ப திலதாய்ப் பொறையருவி தூங்கி
வறப்பினு நல்கும் வளத்தாய்ச் - சிறப்ப

வணியார் கொடையாளு மைந்தருநற் சிந்தா
மணியார் கருணை மலையான் - கணியா

வறிவாங் குறிஞ்சியினின் றோங்கெழுந்து காமச்
செறிவாங் கொடும்பாலை தீர்த்து - மறியாத

மாயையெனு முல்லை வளர்பசுக்கொண் டைவரொனு
மாய ருறுதொழிலை யாங்ககற்றிப் - பாய
விடய மெனுங்குளங்கள் வேறுவே றாகா
துடைய வுடைத்திட் டுளமென் - றடையு
மருத நிலநிறைந்து வாள்விழியா நெய்தல்
பெரிதுபெற வந்து பெருகிக் - கருதிலொரு
தானந்த மின்றித் தலம்விசும்பு போர்த்துவரு
மானந்த மென்னுமலி யாற்றினன் - ஞானம்
பயனுக வோர்முப் பகுதியுயிர் வாழு
நயனுகு மும்மாயை நாடன் - வியனுக
விள்ளலரு மன்பர் விடயக் கரவருரு
வுள்ளமெனு நன்கமைந்த வூருடையான் - றெள்ளுதமிழ்ச்
சொல்லா மலரைச் சுவையா மதுவொழுகப்
புல்லா வழுச்சொலெனும் புன்மையெலா - மில்லாமற்
புன்புலவ ராங்குரங்கு போற்றூப் பெருமையுற
வின்புலவ ராஞ்சுரும்பார்த் தீண்டிவர - வன்பெனுமோர்
வீடாத நார்கொண்டு மென்ற வெனுங்கரத்தால்
வாடா வகைபுனைபா மாலையான் - பீடார்
மலரா லயனர் மனச்சாலை நின்று
நலநா மணிவாய்த னண்ணி - நிலனுக
வானிடையே யோடி வரையா வழகுடைத்தாய்த்
தானனுமா னிப்பினுயர் தன்மைத்தாய் - ஞான

நிறையா மரபு நிலைவழா தோங்கு
மறையா மரியபரி மாவான் - குறையாத

தத்துவமாஞ் சேனை தனைத்துரந்திட் டாணவமாய்
வைத்த தளையின் வலியறுத்து - மெத்து

வினையாம் பணையொடித்து வீட்டியெழுந் தோடு
மனமாம் பரிமாவை மாய்த்துத் - தனிமாரன்

கன்னன் முரித்துக் கருந்தோலாற் போர்த்திருந்த
துன்னுநிண மென்புதசை சோரிகுட - னென்ன

வளர்ந்தறிவ வெல்லா மழிந்துபுறந் தோன்ற
விளங்கிழையார் தம்மை மிதித்துத் - துளங்கு

சமயமாம் பொய்க்குழியிற் சார்ந்துவிழா தோடி
யமையுமா னந்தநீ ராடிச் - சுமையலா

வேதா கமமாம் விளங்குமணி தாங்கிவரு
மாதார மாஞான வாரணயான் - மாதேவன்

சங்கர னுதியிறை தாணுவெனும் பேருடைய
கங்கரனே யாதி கருத்தாவா - மங்கணனை

யேத்தி யடியி னிடந்து விழிக்கமலஞ்
சாத்தி முடிவணங்கிச் சக்கரமொன் - றீத்தருள்செய்

யென்றுபெறு மான்முதலோ ரெல்லாம் பசுவென்று
மன்றமுறக் கட்டுதரு மக்கொடியா - னென்று

மடியா தெழுமொலியா யானந்த மாகி
முடியாத நாத முரசான் - கடியார்மென்

சந்தமல ரோன்முதலோர் தங்களாற் றேற்றமுத
லைந்தொழிலுஞ் செய்விக்கு மாணையான் - முந்து
தவஞான மில்லாதார் சாற்றினும்வீ டெய்துஞ்
சிவஞான தேவெனும்பேர்ச் செல்வன் - பவநாசன்
முன்னொருநாட் சாதனத்துண் முந்துதிரு வெண்ணீறு
மன்னு முயிரினுறு மாசொழிக்கும் - துன்னு
கலவையுடன் மாசாய்க் கழியுமெனக் கூறிப்
புலவரினம் போற்றப் புனைந்து - பலவணிக
டாங்குமள வன்றித் தரும்பே றிலையென்றுந்
தீங்கி லிதையொருவன் றீண்டறினு - மோங்கு
முருத்திரனே யாவனென வோருருத்தி ராக்கம்
பொருத்த முறவுறுப்பிற் பூண்டு - வருத்துகழை
விற்றேண் மதவேளை வெல்லுமடை யாளமெனக்
கற்றோய் துகின்மருங்கிற் காட்சிதரக் - கற்றோ
ரறியா வறிவாகு மானைமேல் கொண்டு
மறியா மனத்தை மறிப்பா - ருறியாய
தற்றுநிலம் வீழ்ந்ததுபோ லாசையற மெய்ச்சிவத்தி
னுற்றுவச மற்றிருக்கு முண்மையார் - முற்று
மழுக்கா றவாவெகுளி யின்னாச்சொ னான்கு
மிழுக்கா வறமுடைய ரொன்பார் - வழுக்கா
மனை துறந்தார் மாயை வலிதுறந்தார் பாவ
வினை துறந்தார் போகம் வினைசிந் - தனை துறந்தார்

வேண்டுதல் வேண்டாமை யில்லாதார் மெய்யன்பு
பூண்டு சிவனடியே பூசிப்பார் - மீண்டுபவம்

வாராவா றோர்வார் மறையுஞ் சிவாகமமு
மாராய்வா ராரா வனுபூதி - சார்வாவார்

பொன்னுஞ் சிலையும் புகழும் பழியுமே
மன்னுங் குடிலுமணி மாளிகையு - முன்னும்

படிவே றிலாதார் பகைநட் பிலாதார்
முடிவே லரசாய் முயல்வார் - கடிவேது

மில்லா திரப்பா ரிறையை நினைந்தொன்றுஞ்
சொல்லா திருப்பார் துதிசெய்வார் - வெல்லாத

வைம்புலனும் வென்று ரவற்றைத் தடாதுமனஞ்
செம்பொருளின் வைத்துச் செயல்செய்வார் - நம்பெருமான்

மேனியா மஞ்செழுத்தும் வேண்டி யெடுத்துரைப்பார்
மோனிகளாய் வீற்றிருந்து முன்னுவார் - மேனியெலாம்

பூசுவார் வெண்ணீறு புண்டரமே சாத்துவார்
தூசுளார் தூசு துறந்துளா - ராசையினல்

வேணி முடிப்பார் விரிப்பா ருலகியலை
நாணிநடப் பாருலகை நாணுதார் - பேணித்

தனதுபத மெத்திறத்துஞ் சாரு மடியா
ரினமருவி யெம்மருங்கு மீண்ட - மனுவுரையாத்

தன்பெயர்கொண் டார்வமொடு சாரும் புலவரிற்கால்
புன்புவியில் வையாப் புலவர்தாம் - வள்பவநோய்

மாற்றுமருந் தென்று வடிவிற் படத்துடையா
தேற்று மகிழவடி யின்றுகள்போய்ப் - போற்றுமிசை

விண்ணிற் புகவணைய மேவுதனை மாசகன்று
மண்ணிற் புகுமா மதியென்று - நண்ணிப்

பலவியமும் பொங்கிப் பரவையூா யார்ப்ப
மலவலியை மாற்றுவான் வந்தான் - றொலைவின்

முழங்கு மறையின் முடிந்த பொருளை
வழங்கு மருளுடையான் வந்தான் - விழுந்து

பரவு மடியார் பவப்பிணிக்குத் தானே
மருவு மருந்தனையான் வந்தான் - பொருவின்

மணிகண்ட னென்னுமொழி மாற்றியே யக்க
மணிகண்ட னென்னுமவன் வந்தான் - கணிகண்

டெயினர் மணமயர்வுற் றின்ப மருவு
மயிலை மலையுடையான் வந்தான் - றுயர்செய்

பொறிக்குஞ் சரமதனைப் போகாமற் றுளின்
மறிக்குஞ் சிவஞானி வந்தா - னெறிக்குந்

தினகரனு லாரழலாற் றிங்களாற் போகா
மனவிருளை நீக்குவான் வந்தா - னெனமுன்

பரிச்சின்ன ஞானம் பரியநரர் காதிற்
றிருச்சின்ன வாரமுதந் தேக்க - விரித்துக்

கவிராயர் போற்றக் கவரிபல முத்திப்
புவிராய ரொன்றிரட்டிப் போதத் - தவிராமன்

ஞாலவட்டந் தாங்குமொரு நாகத்தின் குட்டியென
வாலவட்டம் பாங்க ரசைந்துவரச் - சாலவட்ட

மாமதியாய் நன்கு வளர்ந்து துறந்தபிறை
காமருதன் வாழிடத்தைக் காண்பதற்குச்-சேர்முறைபோல்

வெள்ளை மணிக்கவிகை மேனிழற்ற வான்மழைபோற்
கொள்ளைமல ரன்பர் குழாம்பொழியக் - கிள்ளை

மொழியார் மயறுரந்து முத்திபதத் தென்று
மழியாத வின்ப மருள்வாய் - பழியா

நடையா யுலகிறந்த ஞானே தயாவெம்
முடையாய் புலன்கொ ளுணர்வாம் - படையா

யணியே யமுதமே யாவியே சிந்தா
மணியே கருணை மலையே - பணியேறு

கோலங் கரந்துவந்த கோதிலாத் தேறலே
ஞாலம் புகுஞான ஞாயிறே - சீலங்கொள்

காவேயென் செல்வமே கண்ணே சிவஞானத்
தேவே யெனவவ் தியர்துதிப்பப்-பூவேறு

கோனும் புரந்தரனுங் கொண்ட லிறத்தானும்
வானும் புகழ்பவனி வந்தருள - ஞானம்

பருவ வகையாற் பலபேதப் பட்டார்
தெருவின் மனமகிழ்ந்து சென்று - ருருவி

னொருதா னணிய வுரியனவா மென்னும்
பெரிதா மழுவும் பிறவுங் — தெரியாம

னித்துப் பொதுவாகு நீறுதிரு மேனிகொடு
சாத்திப் பெருமைபெறுஞ் சங்கரனை - மூத்துத்

திருந்து நதிமுழுதுஞ் சென்றுடி னூனு
மருந்து முணவுசரு காக்கி - வருந்துறினு

நீங்காத மும்மலமு நீக்கவருண் மேனிகொடு
நாங்காண வந்தருளு நாயகனை - யோங்கார

நாத முறுபொருளாய் நாதாந்த நாடகனாய்
வேத முடிமணியாம் வித்தகனைச் - சாத

மருணு சகனை மயிலைமலைத் தேனைக்
கருணு லயனையெதிர் கண்டார் - சரணு

விந்தந் தொழுவார் விழுவா ரிதுநமக்கு
முந்து தவத்தின் முதிர்வென்பா - ருந்தன்பி

னுள்ளந்தா ணின்றுச்சி காறுமுள மாயுருகி
வெள்ளம்பாய் கண்ணராய் மெய்விதிர்ப்பார் - கொள்ளுங்

கலமென் றுகிலுதவிக் காவென்பா ரேனைப்
பலவும் பெறுமோர் பரிவிங் - கிலமடியே

மெம்மை யெமக்கருளா யென்பா ரிறையவனே
யிம்மை நினையனையோ மென்று - மம்மையினில்

யானென்று நீயென் றிரண்டில்லை யென்னுமுறை
தானின் றனையணவோஞ் சார்ந்தென்பா - ருனின்று

வாழ்ந்த தனைமயுமினி மாய்ந்தாலு நன்றென்பார்
வீழ்ந்துமொழி யொன்றுபெற வேண்டுவார் - சூழ்ந்த

திசையெலா நின்மெய்த் திகழ்வென்பா ரொன்சொற்
கிசையலா மோவரசே யென்பார் - நசையினல்
யாம்புணர்ந் தின்ப மிவராற் பெறுவதலாற்
றும்புணர்ந் தின்புறுர் தாமென்பார் - நாம்புணர்ந்தா
னீங்குவது முண்டா நினையா திருந்தபடி
யாங்குறுவ தேநல் லறிவென்பார் - நாங்கள்
கரவி லிவர்வடிவங் கண்டநாட் டொட்டிங்
கிரவு பகலில்லை யென்பா - ரரிதிற்
பிறந்தபயன் மன்மதனுற் பேதுற்று வாளா
விறந்து படுவதோ வென்பார் - சிறந்த
சிலையோ நின் னுள்ளஞ் சிவஞான தேவே
யிலையோ கருணைதா னென்பார் - மலையோடு
மற்பொருதல் போல வலிந்துவரு கென்பார்நீ
யெற்புணர்வ தென்றென் றிரங்குவார் - பொற்ப
வறவனே நின்னை யலதெண்ணேம் வானத்
திறைவனே வந்தாலு மென்பார் - துறவனே
மேவிலெமை நின்னை விகாரி யெனவுரைப்பார்
யாவருல கெங்கு மிலையென்பார் - பூவி
லிவரொலும்புந் தோலுமா யெய்தினு ராயி
னெவர்விரும்பி வேண்டுவா ரென்பா - ரவர்நெருங்கி
யெய்த வுடன்வணங்கி யிவ்வா றடியேனுஞ்
செய்த தவங்கள் செலுத்தப்போ - யையன்

றுரூழம்பு மறந்தொழியாத் தொல்விசயன் வில்லின்
றழும்பு மறைந்த தலையு - மெழுந்துமதன்

வின்னியா சஞ்செய்முன் வென்றுபகை யின்மையாற்
சன்னியா சஞ்செய்படைத் தண்ணுதலு-மன்னிவாழ

கேவலமென் கங்குல் கெடுக்குந் தொழிலொன்றின்
மேவலுற வொத்த விழியிரண்டு - மாவலொடு

நல்லவியல் கேளா நணுகுமிசை பாடுநரைச்
செல்ல விடுத்த திருச்செவியும் - வல்ல

வியற்பகையை முன்ன மிரந்த மொழியை
யயர்த்த மலர்வா யழகும் - வியப்புறவவ்

வாலமுண்ட தென்ப தறையாம லிவ்வுலகம்
பாலருந்து மென்னப் படுமிடறு - மேலுவந்து

நாமங்கை போற்றவுள நாணுந் தலைமாலை
போமங் கலமாம் புயமலையுஞ் - சேமங்கொ

ளேனமருப் பில்லா திருப்பதுவு மோரழகென்
றான மறத்திகழு மொண்மார்பும் - வானம்

வழுத்தம் புயமா மனையான் றலைக்குக்
கழுத்தென்ப தில்லாக் கரமு - மெழுத்தென்று

கொள்ளுங் கொடுவரித்தோல் கொள்ளாது நூல்வலியைக்
கொள்ளுந் துகிலுடுத்துக் கொண்மருங்கு - முள்ளுமும்பர்

மன்னு முடிவெருவி வந்துழியிம் மன்பதைதஞ்
சென்னி படச்சிவக்குஞ் சித்தடியு - மென்னுடைய

கண்களிப்பக் கண்டுமிகக் காதலா னெனிந்த
மண்களிக்க வந்தசுவை வானமுதம் - பெண்களுக்கு
மாலா ரணனமரர் மாதவரிம் மானுடர்போற்
றேலாத வீரமுடைத் தோற்றத்தான் - மேலாய
செங்கையமு தன்னான் சிவஞான தேசிகனெம்
பங்கமல மாயைப் பகையானன் - றங்கணல
வூண்டுறந்து சீர்சா லுடைதுறந்து செம்மணிப்பொற்
பூண்டுறந்து கண்கள் புனல்சொரிய - வாண்டடைந்து
நையு மவர்நிற்க நாயேன்பாற் பொங்குமருள்
செய்து திருக்கடைக்கண் சேர்த்தினு - னையனா
னன்று தொடங்கி யணவான் விருப்புற்றே
னென்றுணை நீ யன்றி யிலைநெஞ்சே - நன்றிபுரி
வேதா கமங்கள் விதிக்கும் விதியனைத்து
நீதான் புனிதமுற நேர்ந்தன்றோ - வாதார
யோக மிருநான்கு முன்னவய மாக்குவதற்
காக முயலுவன வல்லவோ - போகமுறு
தன்மைக்குஞ் செய்யுந் தவத்திற்குங் கற்றறியு
நன்மைக்குங் கொள்ளுமொரு நட்பிற்கும் - வன்மைக்கு
மீகைக்குந் தன்னை யிருந்தாங் குணர்ந்தடையு
மோகைக்கு நீயே யுறுதுணைகாண் - போகத்தி
னின்றானை மெய்த்துறவி னிற்பிப்பா யத்துறவிற்
சென்றானை யில்லிற் செறிப்பிப்பாய் - குன்று

வறத்தை மறமாக்க வம்புவியின் மிக்க
மறத்தை யறமாக்க வல்லாய் - நிறுத்தி

யொடுக்குதலே முத்தி யுனைவிடயத் தோட
விடுக்குதலே பந்தமென மிக்கா - யடக்குதலா

னின்றுயே யாகிலொரு நீதான் புலன்பரந்து
சென்றுலு மெய்துவதோர் தீதுண்டோ - பொன்றாத

முத்தி யொருகணத்தின் முன்வருநீ வேண்டுவையே
லித்தனையு நின்னு லிசைந்தனகாண் - சத்தியமா

யேதேனு மேனி யெனக்கொண்டு வந்தருளு
மாதே வனைநீ வருவிப்பாய் - தூதேவு

நம்பிகர வுண்டவொரு நற்பனவப் பிள்ளைதனை
யம்புவியின் மீள வழைத்ததூஉ - மெம்பெரிய

நாவிற் கரசு நடுக்கடலுட் கற்பெருந்தூண்
மேவிப் புணையா மிதந்ததூஉம் - பாவிற்கு

வல்ல வொருபுலவர் வல்லென்பு பெண்ணுகச்
செல்ல மயிலையிடைச் செய்ததூஉந் - தில்லையினில்

வாளா நெடுங்கண் மடவரலை நீலகண்டர்
சூளான் மனையுட் டுறந்ததூஉந் - தோளாத

முத்தனைய நன்மாதை முன்ன மியற்பகையார்
வித்தகனை நல்கி விடுத்ததூஉம் - புத்திரனைத்

தொண்ட ரறுத்தமலன் ருெண்டர்போல் வந்திரப்பப்
பண்டு சமைத்துப் படைத்ததூஉ - மண்டிருளின்

முக்கணனூர் செல்ல முனைவார மாறனு
ரக்கணமே செய்க்க ணடைந்ததூஉம் - புக்கரனூர்

வேண்ட வரிந்துமகண் மென்கூந்தல் கஞ்சாற
ராண்டு வணங்கி யளித்ததூஉ - மூண்டமரி

னேற்றுனை யீசனென வேனுதி நாதனூர்
நீற்று னினைந்துருகி நின்றதூஉ - மாற்றுனைக்

குத்தினு னென்று குறியாமன் மெய்ப்பொருளார்
தத்தனே காக்கவெனச் சாற்றியதூஉ - மத்தவிபஞ்

சிந்த மலரைச் சிவகாமி யாண்டார்க்காய்
முந்தியெறி பத்தர் முனிந்ததூஉஞ் - சுந்தரரைத்

தொண்டத் தொகைபெறாத் தொல்லுலக முய்யவிறன்
மிண்டத் தொழும்பர் வெகுண்டதூஉ - மண்டபத்து

நீலக்கர் பாணருக்கு நேசித்து நல்யாக
சாலை யிடத்தைமுனந் தந்ததூஉ - மாலயற்கு

மெட்டாற்கு வேண்டி யிருங்கலயர் குங்குலிய
முட்டாமற் கொள்ள முயன்றதூஉம் - வட்டாடி

யாக்கு பொருளை யரனடியார்க் கன்பினுல்
மூர்க்க ருதவி முடித்ததூஉங் - தூக்குதுலை

மீது பரனெளித்த வெண்கோ வணத்திற்காப்
போதவமர் நீதியார் புக்கதூஉ - மாதியுமை

பாக னடியவரைப் பண்டைநிலை யுன்னியதங்
தோகைகரங் கம்பர் துணித்ததூஉஞ் - சோகமறக்

கண்ணப்பர் மென்றசையைக் காளத்தி யார்தம்மை
யுண்ணப்ப வென்றுமுன மூட்டியதூஉம் - வண்ணப்பொன்

மீனை யளக்கரிடை மிக்க வதிபத்தர்
மேனைமரு கற்கென்று விட்டதூஉம் - யானைமிசை

வந்தமலை நாட்டரசர் வண்ணானைத் தொண்டரெனப்
பந்தமற மன்பாற் பணிந்ததூஉங் - கந்தைபரற்

கன்பி னுதவிலனென் றக்குறிப்புத் தொண்டர்தா
முன்புசிலை யோடுதலை மோதியதூஉ - மன்புறுமோர்

தாட்புலியார்போற்ற திருத் தாண்டவனெற்கொள்கிளையை
கோட்புலியார் நேசமறக் கொன்றதூஉங் - கேட்பிலிவை[க்

யெல்லாமு நின்ற னிசைவாற் புரிந்தனநீ
யல்லா தியற்றலற மன்றுகாண் - சொல்லாட

நின்பெருமை யாரறிவார் நீயென் னொடுகூடி
லென்பெருமை சொல்வாரு மில்லைகாண் - வன்புவியி

னின்னைத் துணையல்லை நீயென்று நீங்கினாற்
பின்னைத் துணையாகும் பேரில்லை - யுன்னைத்

துணையாக் கொளற்குத் துணைநீ நினக்கிங்
கிணையாய்ப் பிறிதொன் றிலைகாண் - புணையாய்ப்

பிறப்புக் கடற்குப் பிடிக்கப் படுவாய்
மறப்புற் றதினமூத்த வல்லாய் - சிறப்பு

விலங்கி னரர்தமக்கு மேவியது நின்னா
லிலங்கு முனிவரர்கட் கெல்லா - நலங்கொள்

பெருமை நினைத்துணைக்கொள் பெற்றியா லன்றோ
வுரிமைநீ யன்றிவே றுண்டோ - வருமையென்ப
தில்லையுனக் கெவ்விடத்து மென்மனமே யாதலினு
னல்ல பெரியசிவ ஞானிபாற் - செல்லவுனை
வேண்டுறுவேன் றூதாக வேதக் கிளியைவிடிற்
காண்ட லரிதத னாற் கண்டாலு - மாண்டதுதா
னென்றுக வோதா துரைக்கும் பலமயங்கச்
சென்றாலு நீயேதான் செல்லாம - னின்றாலு
நீயே பிறிதில்லை நெஞ்சமே யெற்பயந்த
தாயே யவனிடங்கள் சாற்றக்கேள் - பேயே
னெழுநகரி னுட்சிறந்த தென்பதலாற் சீர்மை
முழுது மியம்ப முடியா - தழகுறுவேற்
கந்தனுயர் கச்சிவளங் காற்கூ றளவுரைப்ப
னைந்துகரன் சொல்வ னரைக்கூறு - நந்தமரன்
கூறுடையா ளோர்முக்காற் கூறுரைப்ப னுற்றுமிள
வேறுடையான் சொல்வ னெனவனந்தன் - வீறுடைய
நாவா யிரங்கொண்டு நானுரைத்தல் காற்கீழென்
றோவாத நாணுகி யோடியே - தாவாத
வேலையிடை வீழவவன் மேல்வீழ்ந்து துஞ்சினன்
போல வரிகிடப்பப் பொங்குபுகழ் - ஞாலமெலா
நண்ணவொரு * காசி நடுமெய்ஞ் ஞகரமுறு
மெண்ண வரிய வெழினகரு - மண்ணுலகின்

* காசிநடு ஞகரமெய்யுற்றநகர்-காஞ்சி.

முன்னோர் தொடைப்பொருளை முற்றுங் கரந்துரைத்துப்
பின்னோ ரெமதென்னும் பெற்றிபோ - லன்னேபின்

வந்திளைய காசி மரிப்பார்க்கு முத்திபதந்
தந்திடுவ னென்றுமிகு தன்செயலை - முந்துகொடு

சென்றுபர தேயத்திற் சேர்ந்திருப்பச் சீர்மலிந்து
மன்றன் மலரு மணியணியுந் - துன்றுநறுங்

குங்குமமுஞ் சந்தனமுங் கோலம் பெறப்புனையா
வங்குருகு மேகலையு மாங்கொலிப்பத் - துங்கமுறு

நன்பதியைச் சேரவரு நங்கைபோற் சென்றுமலி
தன்பதியைச் சார்ந்தணைந்த தண்கங்கை - யென்பதுதான்

புத்தா றெனத்தான் புராதனவா றென்னுமணி
முத்தா றுடுத்த முதுகிரியுஞ் - செய்த்தாம

மன்னமாய் முற்றும் விளைய வளங்களெலாந்
துன்னுநாட் டிற்குச் சுவைவிளைய - மன்னுவேன்

மீதண்ட ரோடமர்ப்ப வெங்கணையும் விண்ணுறுங்
கோதண்ட மும்பொருந்திக் கொண்டேக - வேதண்ட

மொப்ப வுயர்த்தவுய ருப்புக் குவான்மீது
வெப்ப மறுமதிய மெய்யுரிஞ்சத் - துப்புறுபுள்

ளெண்ணிலா வுண்ணு தொழிந்துமட வார்முறுவல்
வெண்ணிலா வுண்டு மிகவளரக் - கண்ணெலாம்

பூப்பட் டிருந்தாலும் பூம்பொய்கை நன்காய்ந்து
பாப்பட்ட சேடன் பணங்காட்ட - வாய்ப்புற்ற

கங்கையுடன் வந்தாரூர் கண்டுவரு வீரொன்று
தங்குறுதன் மக்க டமைவிடுப்பத் - துங்கமுறு

முத்தீ வளர்ப்பமறை முன்னோர் விருந்தினுத
ரத்தீ யவிப்ப வவர்மாதர் - கொத்தின்

கொடியனையார் கொம்மைமுலைக் குன்றே வருத்தத்
துடியிடையே நின்று துவள - நெடிய

கலவ மயிலிவருங் கந்தவே டேரோ
யுலவ நிலைபெயர்வுற் றோடப் - புலவ

ரிரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்றென் - றுரைப்பாவில்

வைதலை யஞ்சி வளர்த்தா ரிரப்பவர்தா
மெய்தலை நோக்கி யிருந்துதவப் - பொய்தவிர

வில்லென் பதுமொருவ ரீயென் பதும்வினையாஞ்
சொல்லென்ப தின்றுபெயர்ச் சொல்லாக - நல்லவள

மிக்கெலா நாளும் விழவறு வீதியணி
திக்கெலா மேத்தமலி சேயூரு - முக்கணனார்

மந்திர மொன்று யிரமாய் வளர்ந்துபயன்
தந்திடு மொண்மயிலைத் தண்மலையும் - பந்தமறு

தன்னை மருவினரைத் தானாக்குந் தன்மையுடை
மன்னுசிவ ஞானி மருவிவாழ் - நன்னிலையா

லம்ம பிரமபுர மாகும் பொருள்படவே
பொம்மபுர மென்னும் புகழ்ப்பதியு - மெம்மிறைவன்

வீற்றிருந்து வாழிடங்கண் மேவியிவற் றென்றினுறுந்
தேற்ற முணர்ந்துநீ செல்லுங்கா - லாற்றலுட

னில்லை யினைறவனாற் பூதமலா லிங்கென்று
சொல்லி யுலைமறித்துச் சூழ்ந்ததா - னல்ல

வலகா யுதமெறித லாயுளாப்ப னந்த
வுலகா யதனுரைகேட் டோடேல் - பலகாலு

நாணேது மின்றிக் கருமமலா னிறையைக்
காணே னெனுங்கரும காண்டியொடு - பூணே

ணினையணு வாக்கு நியாய னுரையைத்
தினையள வாயினுநீ தேறேல் - பினைவருவை

சேடியனை நெஞ்சமே சேரவவன் றம்பியென
நாடி யொருசிறிது நண்ணுறேல் - கூடியொரு

புத்திகண பங்கமெனப் புத்திகெட்ட புத்தனுரை
மெய்த்ததென நின்று விடாதிநீ - மூத்திபெறு

தன்னை யணுவாக்கித் தாழ்பஞ்ச ராத்திரிதா
னென்ன சொலினு மிசைந்துறேல் - லின்னைக்

கெடுப்பதே யெண்ணிக் கெடும்யோ கிகளை
விடுப்பதே நன்றென்று மேவே - லடுப்பதெனக்

கள்ளைக் குடித்துக் களிக்கின்ற வாமிமொழி
கொள்ளத் தகுவதெனக் கொண்டுறேன் - மெள்ளப்

பகுதி விகுதி பகுத்தறியின் முத்தி
தகுதியெனுஞ் சாங்கியனைச் சாரேன் - மிகுதிபெறு

நஞ்சமார் கண்டனொடு நாரணனை யொப்பாக்கும்
பஞ்சமா பாதகரைப் பாராம - லஞ்சிநீ

சென்று திருமடத்தைச் சேர்ந்துகழு நீர்த்தடமாய்
நின்று நறியகழு நீர்பூப்பத் - துன்று

முகிலா யடைந்துபுகை மூன்றுலகுங் காக்க
நிகமா கமம்விதித்த நீதி - யிகலாத

கோடிமறை யோர்நிறையக் கொள்ளுமுண வின்பயனை
நாடியிடும் பிச்சையா னல்குமொரு - கோடிசிவ

யோகிகட்குப் போன முவந்து சமைப்பாரைப்
போகிகட்குப் புற்றனைய பொற்சடைமேன் - மோகிகட்குப்

பூசனைக்கு வேண்டும் பொருளுதவு கின்றாரை
வாசமலர் கொய்து வருவாரைப் - பூசனைசெய்

கின்றாரை ஞானநூல் கேட்பாரை நைந்தோதா
நின்றாரை மேனியெலா நீறணிந்து - குன்றாத

கண்டி புனைந்து கமலா தனத்திருந்து
கொண்டு சிவனைக் குறிப்பாரைக் - கண்டுருகிப்

போற்றிவணங் காவுட் புகுந்து புரமெரித்த
சீற்ற மறந்ததெய்வ சிங்கத்தை - மாற்றலருஞ்

சீமானை யென்றுந் தெவிட்டாத தெள்ளமுதைக்
கோமானை ஞானக் குணக்குன்றை - பூமாரன்

வண்டு படாத மலரைநாஞ் செய்தவத்தாற்
கண்டுகொளுந் தண்ணறும்பூங் கற்பகத்தை - மண்டலமு

மேனைப் புவனங்க ளெல்லாமும் வேண்டுபசுந்
தேனைச் சிவஞான தேசிகனை - நீநெக்
குருகியெதிர் கண்டுகொண்டே யோடிப் பெருமான்
றிருவடியில் வீழ்ந்தன்பு தேங்கிப் - பருகமுதே
வேண்டுவார் வேண்டுவன வேண்டியவா றேயுதவு
மாண்டகையே யெங்க ளரசனே - நீண்டவொரு
தந்திதரு பச்சைபுனை தன்மையா னீண்டுபச்சைக்
கந்த மரபினுறுங் காரணனே - பந்தமற
வாளாய வன்பர்க் கமரா பதம்போல
மீளாத வீடுதவும் வித்தகனே - வேளாணை
தள்ளு மடியார் தமக்குத் துணையாகக்
கொள்ளு மிருமலர்த்தாட் குஞ்சரமே - விள்ளலறப்
பத்திக் கடலுட் படிந்த வடியார்க்குத்
தித்திக்குங் கோதிலாத் தேறலே - முத்திக்குச்
சாதியா லன்றுரிமை சாதனத்தா லென்றுண்மை
போதியா நல்குமொரு பொன்மலையே - நீதியால்
வீடும் பொருளும் வெறுத்துமுத்தி வேண்டுவார்
தேடுஞ் சிவஞான தேசிகனே - பாடும்
பொருளே யெனவணங்கிப் போற்றிநின்று நின்பே
ரருளே துணைவே றறியேன் - றெருளே
நினது திருப்பவனி நேர்ந்தநாட் டொட்டுக்
கனலின் மெழுகாய்க் கரையும் - புனல்பெருகு

கண்ணொடு நின்றேங்குங் கங்குல் பகலின்றி
யுண்ண வுடுக்க வுவப்பொழியும் - பண்ணொடு

பாடு நினைமெய் பதைக்கு நினையெங்குந்
தேடு முருகுந் திகைத்தலறும் - வாடுமெனைப்

பாராயோ வென்னும் பரம சிவஞானி
வாராயோ வென்னும் வழிபார்க்கு - மோராயோ

வென்னோ யெனப்புலம்பு மென்னைநின்பாற் றூதாக
வன்னோ பலசெய் தளுரொய்துந் - தன்னோ

ருடம்பும் பொறையா யொழிப்பக் கருதுங்
குடும்பம் பகையாகக் கொள்ளு - மடங்க

வொருபூ தருமில்லா துற்ற விடத்தே
வருபூ ரணமா மருவி - யொருபோதும்

வேறிலா தொப்ப விரும்புறுமவ் வென்னுயிரை
மாறிலா ஞான மணிவிளக்கே - யீறிலாச்

செல்வமே யெங்கள் சிவஞான தேவனே
கல்விகொடு காணாத காட்சியே - புல்லுவாய்

புல்லு மளவு முனைவிட்டுப் போவதுநா
னில்லை யிறைவனே யென்றுநீ - தொல்லை

விடய நினைந்தகன்று மீளாம லில்லா
துடைய மலவிருளை யோட்டுஞ் - சுடரை

மரமு நிழலும்போன் மாழையும்பூ ணும்போ
லிருமை யபேதமென்ப தென்றும் - பரமுயிர்கள்

வேற்றன்றும் வேறல்ல வென்றும் விளம்புதலால்
வீறென்று தாதான் மியமென்று - மாறின்று
சாமி யடிமையெனுஞ் சம்பந்த மென்றுமுளம்
வேமிகலை யோர்மொழியில் வீப்பானைத் - தோமி
லுலகிற் கிறைவ னுபாதான மென்று
மிலகுற்ற நன்னிமித்த மென்று - நிலவுற்ற
வாவி யணுவென்று மன்று நிறைவென்று
மேவிய மாயைதான் மித்தையென்று - மோவிலது
நித்திய மென்று நிகழ்த்தி மயங்கும்போ
ர்த்தனையுந் தீர்த்த வருளானைப் - பத்தரிடை
யுள்ள படிதோற்று முண்மை யுடையானைத்
தெள்ளுஞ் சிவஞான தேசிகனை — விள்ளலறப்
பற்றி யடியேன் படுமிப் பெருந்துயர
முற்று மறிந்துசெல முன்னுநீ - யெற்றுதிரை
வேலையுல கெல்லாம் வியக்குஞ் சிவஞானி
மாலைமன மேவாங்கி வா.

நேரிசைவெண்பா.

என்னோ டிருக்கு மெனினுஞ் சிவஞானி
யுன்னோ நினைவிடுத்தா லன்றியே - தன்னோகை
வஞ்சமே செய்குவனென் மற்றவன்பாற் றூதாக
நெஞ்சமே செல்விரைந்து நீ.

நெஞ்சுவிடுதூது முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

சிவஞானபாலையதேசிகர்

திருப்பள்ளியெழுச்சி.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிறைந்தவொரு சச்சிதா னந்தபர சிவத்தி
னிகழுமுயி ரிப்பியிடை வெள்ளிபோற் றோன்றி
யிறந்துமய லகன்றிடிலொன் றன்றிவே றிலையென்
றறைவர்சிலர் பதியினைப்போ லாருயிர்நித் தியமே
யிறந்துமல சத்திவிடிற் சிவசமா னதையா
யிருக்குமென வறைவர்சில ரொதுவழக்கென் றடியேஞ்
செறிந்தனநின் றணைவினவ வெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (க)

சகலரொனும் பசுக்களைமூ லாதார மென்னுந்
தக்கதொழு விடையலமாந் தாம்பினு லார்த்துப்
புகலுமொரு நுகர்வுமிலா தனாநிறுத்திப் பின்னர்
பொருந்துகலை யாங்கரத்தாற் கட்டவிழ்த்து விட்டே
யகலுநன வெனும்புரத்தி லோட்டியே விடய
மாகியபுன் மேய்த்தெமக்கிங் கமுதமருள் பவனே
திகழுமலை மகணகரின் மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (உ

காற்றுமறைப் பாயபடப் பாயலிடை மடங்கற்
கனலருகி னரிசனப்பொற் றூசுமிசை போர்த்துக்
கோற்றொடிமென் முலைமடந்தை தனைமார்போ டணைத்துக்
குளிர்க்குடையா னுததியிடைக் கண்டுயில்வோ னெழுந்து
போற்றிநின தெதிர்குறிப்பச் சங்கொடும்வந் துற்றான்
புண்டரிகன் கரகநீர் கொண்டுதவ நின்றான்
சீற்றமறுந் தவக்களிறே யெங்கள்சிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௫)

தூதுவிடு நம்பிவரு கிலன்சிலையா லெறிந்த
தொண்டனிலை விசயனும்வில் லோடும்வந்தா னில்லை
யேதமறு மியற்பகையார் கிளைஞர்கள்வந் தடைந்தா
ரில்லைநினை மண்சுமவென் றொருபிரம்பா லடித்தோன்
போதில்னின் றிருவடியிற் போதுகடுய்ப் பரவிப்
போற்றலுறு மடியவரோ பொருந்தினரொம் மருங்குஞ்
சீதமதி துறந்தமுடி மருவுசிவ ஞான
தேசிகனே யருண்மலையே பள்ளியெழுந் தருளே. (௬)

திருப்பள்ளியெழுச்சி முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

சிவஞானபாலையதேசிகர்

பிள்ளைத் தமிழ்.

காப்பு.

அத்திமுகத் துத்தமனை
நித்தநினை சித்தமே.

காப்புப்பருவம்.

திருமால்.

திருமா மறையு மாகமமுந் தெருட்டு பொருளோர் முடிவாகத், தெளிவில் சமயர் தமின்முரணித் தியங்கி யபேதம் பேதமென, வருமால் வாத மயலொழிய மலர்வாய் மலரப் பெருங்கருணை, வடிவாய் வந்த சிவஞான வள்ள லிணைத் தாண் மலர்க்காக்க, கருமா முடக்கொம் பொழுகமுதக் கதிர்வெண் டிங்கட் கண்ணிபுனை, காலத் தவன்சே வடியிற்செங் கமல விழியொன் றிடந்தணிந்தும், பொருமா மழவெள் விடையாகிப் பொறுத்துந் தொழும்பு தலைநின்ற, பொன்னந் திருமார் புடைக்கமஞ்சூற் புயல்வண் ணத்தெம் பெருமானே. (க)

மல்லிகார்ச்சுனேசுரர்.

உடற்கு விளையுஞ் சூர்தாக்கு மொழித்தற் கரிய பலபி ணியு, முடற்று பசிநோய் முதலனவு முணர்வைப் பிணித்து ப் பிறப்பெனுமாழ், கடற்கு ளாழ்த்தி யுயிர்சிவத்திற் கலப் பைப் பிரித்து விடுமலமுங், கழலக் கருணை புரிந்தெம்மைக் காக்குஞ் சிவஞா னியைக்காக்க, முடக்கு மடிக ணிமிர்த்தெ ழூந்து முள்கார் திருந்து களஞ்சுருக்கி, முழைவாய் பிளந்து செவிநிமிர்த்து முறுக்கி வெடிவால் சிறிதடித்து, விடக்கு வி ரும்பு புலிபாய விரையு முண்மா னுடைமதியம், வெருவுற் றகலும் பருப்பதமாம் விலங்கன் முக்கட் பெருமானே.(௨)

உமாதேவியார்.

இளைக்கு மருங்கு லொருமடந்தைக் கெய்து தவள மு கிற்கூந்த, லிருஞ்சுன் முகிலி னிருள்படைப்ப விருண்ட வடி யே னுளம்விளர்ப்பத், திளைக்கு மலர்க்கட் கருணைமடை தி றக்குங் குணப்பொற் குன்றையுயர், சிகர மயிலைச் சிவஞான தேவன் றனைநா டொறுங்காக்க, விளைக்குந் தவத்தாற் பாற னக்கு விரும்பிக் கொடுத்த கொழுநன்மணி, மிடறே போல வெனதுபுன்சொல் விடமுண் கின்ற திருச்செவியை, முளைக் குந் தரள நகைவாயான் முதிர்சீஞ் செய்யு ளமுதூட்ட, மு ன்னம் பிள்ளைப் பெருமானை முலைப்பா லூட்டு மொருதா யே. (௩)

விநாயகக்கடவுள்.

நீர்வாழ் வரிச்செங் கயல்கவர நிற்குஞ் சிரல்வா ரிதிக ளங்க,நிலைபேர்ந் துலவுந் திமிங்கலப்பேர் நெடுமீன் கவர்வா

ணிற்பதெனப், பார்வாழ் மக்கட் பரப்பெல்லாம் பணிவேந் தாயின் மொழிப்படுசீர், பாடத் தொடங்கு மெனதிடத்தும் பழிப்பில் சிவஞா னியைக்காக்க, தார்வாழ் திருப்பொற் கோயிற்குத் தடமா மதிலிற் பொலிமார்பத், தனிவான் முகிலுஞ் சரோருகப்பொற் றவிசிற் பசும்பொற் குவடும்வா, னூர்வா ழரசு முனிவரரு மொருதஞ் செயற்குக் காப்பாக, வுவந்து முதற்கட் பரவுபுக ழொருத்தன் முகத்தெம் பெருமானே. (௪)

சுப்பிரமணியக்கடவுள்.

பாயுங் கவனக் கடியமனப் பரிகா வாமற் கொடுவிடயப், பகைகா வாமற் பிறருணாக்கும் பழிகா வாம லிருதாளுந், தேயும் படிசென் றிடையின்றிச் செல்வச் செருக்கர் கடைகாக்குஞ், சிறியேற் காக்குஞ் சிவஞான தேவன் றிருமே னியைக்காக்க, வாயு மனமுந் தொடர்வரிதாய் வருதல் போத லிரவுபகல், வளர்தல் குறைதல் வெறுப்புவப்பு வறுமை செல்வ மிலாததனை, யாயுந் தமிழக் குறுமுனிவற் கறித லறித லிலாமைபோ, யறிவே யாகி யுலகொழிய வருள்செய் சுடர்வேற் பெருமாளே. (௫)

அல்லமதேவர். வேறு.

அகரவுயி ரனையபரி பூரணத் தீர்த்தனை
யடிநிழலி லடையுமெம தாருயிர்க் காப்பனை
நிகரிலல மயனையழி யாதமெய்க் கூத்தனை
நிகழுமனு பவனையரு ளாளனைப் போற்றுது
நகரவர சிடையமரும் வாசனைக் காற்றெனு
நடையிரத மதனன்வலி வீயுமெய்க் காட்டனை

மகரமனே சுவறவெறி வேலுடைச் சூர்ப்பகை
மயிலைமலை மருவுசிவ ஞானியைக் காக்கவே. (சு)

வசவதேவர். வேறு.

விழுப்பநிலை குறிகுணங்க ளுடைடா தென்றும்
வேண்டுவன வேண்டியாங் களித்தரவே டத்தர்
குழுக்கடமக் கன்புசெய்நந் தலைச்சுமைவாங் குபுதான்
கொண்டவனென் றரியசிவ ஞானியைக்காத் தளிக்க
விழிப்பினம தொருநாமம் புகல்பவரைப் பிறப்பி
லெடுக்குநமக் கிஃதரிதன் றெனச்சென்று கடிது
வழுக்கிவிழு பவனையெடுத் தஞ்சலோம் பென்ற
வசவதே சிகனெனுமெங் குடிமுழுதாள் பவனே. (எ)

தேவாரமருளிய மூவர்.

கிளக்கிலா நாமணியி னுவே யாகக்
கேட்கிலாக் காதூசி யின்கா தாக
வளர்க்குமா புகழுலகிற் பரப்பா நின்ற
மயிலைவரைச் சிவஞான தேவற் காக்க
வளக்கிலாத் தமதுண்ணா பூங் தொடைபு னைந்த
வரசுபோன் றல்லனபுன் குறும்பு போலக்
கொளக்குறையாப் பெருஞ்செல்வ மெமக்கா ஞானக்
கூத்தனுறு பதிகள்பல பாடியமூ வருமே. (அ)

மாணிக்கவாசகசுவாமிகள்.

அருந்தமிழ்நா டொருகோடி தவஞ்செயவந் ததிர்வெள்
ளருவிதூங் குயர்மயிலை வரையினமர் விளக்கைப்
பரந்துபடு மிகுபாச ஞானமொடு மற்றைப்
பசுஞானங் கடந்தசிவ ஞானியைக்காத் தளிக்க

விரிந்தமறை யொருநான்கு மெழுதகில மெனவோர்
வீறுடைப்பொற் கொன்றைபுனை விரிசடையோ னெழுதத்
திருந்துதமிழ்க் கோவையொரு நானூறு முரைத்த
திருவாத வூரனெனுஞ் செழுமலர்க்கற் பகமே. (௯)

சென்னவசவதேவர். வேறு.

அறிவுயிர் கரண முடலொடு பொறிகள் சிவமென வுதவு தானியைக் காத்தெமர், வழிவழி யடிமை யெனவருள் புரியு மொருவனை யெமது பாவனைக் கேற்றிடு, மழுதினை மணியை யடியவ ருயிரா யுயர்சிவ சமய நாதனைப் பார்த்துமு,—குறிகுண நிலைகள் குருசிவ சரணர் தமையிகழ் பவரா வேறெனத் தாக்கியை, வளர்தரு தனது குணவருள் கனலினழல்புனன் மருவு மாறெனத் தாட்டுனை, குறுகிடு பவரையடைவுற வுலகின் வருசென வசவ தேவனைப் போற்றுதும்,—பொறியொரு புடையில் வளையொரு புடையி லிரவியினிருளை நாமறத் தீர்த்தெரி, மணிமிளிர் திகிரி யொடுபல வணிகண் முடியொரு புடையி லாருயிர்க் காப்புறு, புயனிற வடிவ வரியொரு புடையில் விழவர வணையை வானுறத் தூக்குபு,—மறிதிரை கதறு கடலிடை யுதறு பொறிமயில் கடவு வீரன்மெய்ச் சீர்த்தியன், மலைமுனி முருக குருபர குமர சரவண பவவெ ளுமிகப் போற்றிட, மறைமொழி யருள்செய வறுமுகன் மருவு மயிலைவ ருசிவ ஞானியைக் காக்கவே. (க௦)

காப்புப்பருவம் முற்றிற்று.

செங்கீரைப்பருவம்.

---:o:---

துங்கவெம் புகர்முகக் களிநல்யா னையினதட் சுமையும் பெரும்புலி தருந்,துகிற்சுமையும் வெண்மருப் புச்சுமையு மிளையாது துள்ளியெழு சிறுகன்று மான், வெங்கனன் மழுச்சுமையும் வெண்முளரி மலர்வென்ற வெண்டலைச் சுமையுமணிகள், வெயிலெறித் திருள்விழுங் கோரா யிரம்படம் விரிக்குமர வச்சுமையு நீ, ளங்கம் புரண்டுவல மாலயம் புரியுமவ ரணியெனத் திரைகள் புரளு, மாயிரந் திருமுகக் கங்கையஞ் சுமையுமொழு கமுதகிர ணக்குழவி வெண், டிங்களஞ் சுமையினெடு போகட் டுலாவுமிறை செங்கீரை யாடியருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (க)

வென்றிவிடை யினர்திருக் காமநா யகர்திரு விழாமுற்ற வருண்மா தவர், வேறுவே ருயதிரு வேடத்தர் நீறுதிமிர் மேனியினர் வேணி முடியர், துன்றிழை மலிந்தகந் தைச்சுவலர் பட்டுமென் றூசுமணி யார மணிவார், சூலப் படைக்கலத் தினர்தனித் தவரருகு தோகையர்க ளோடு வருவார், குன்றுறழ் பனைக்கைவெங் கரிசிவிகை யாதிமிசை கொள்பவ ரியந்த ழங்கக், கோடிநூ றுயிரவர் மகரா லயத்தொடிகல் கொண்டதோர் செயல தென்னச், சென்றெதிர் முழங்கும் பொம் மையபட் டினச்செல்வ செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (உ)

ஒருவாறு மின்றியிது வென்றுணர வரியபர மொன்றி ரண் டாகி யவைமூ, வுருவாகி மூவிரண் டாருறு வகையிரட் டுற்றநூற் றெட்டு விரிவா, யிருவாறு நின்றிலகி யிருநூறு தலையிட்ட வீரொட்டு மாறுறி னவ், வெண்பெற்ற வாறினவ் வாறுமூன் றினிலவை யிரண்டினி விரண்டு மொன்றின், மரு வா வடங்கிநீ நானென்னு மயலின்றி மனவா சகங்கடந்து, வந்துகூ டுதலகற லின்றிநின் றிடுநிலையை மலரடி முடிக்க ளித்துத், திருவாய் மலர்ந்தெனக் கொருமொழியி லருள்ப வா செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (ரு)

பாவகப் படுபெரும் புகழிமய மலைபெறு பவானிவளர் திருமு லைத்தண், பாலுண்டு தண்டையங் தாள்சிவந் திடவாதி பகவன்வியன் மார்பி னுலவிப், பூவகப் பள்ளியமர் தருபுங் கவன்றலை புண்படக் குட்டி நீடு, பொன்னங் குவட்டுமா யிருஞால முடிவைத்த புழையெயிற் றரவ சைத்து, மாவலர்ச் செங்கைகொடு சிறுதே ருருட்டியுயர் வான்வர்க் கிடர்வி ளைத்து, வலிகொண் டிருந்தவன் றிறலசுரர் தலைவெட்டி வட்டாடு மொருவெற் றிவேற், சேவகப் பிள்ளை துணை யாகவிளை யாடுவாய் செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (சு)

பெருமுடக் கானிமிர்ந் ததுகூ னிமிர்ந்தது பிணிகள் பல பலபோ யின, பிடித்திருந் தெவரானு மகலாது துயர்செய்த பேயகன் றிட்ட தம்மா, வருமகப் பெற்றுவந் தனமிடி யகன்றன மகிலம் புரக்க வருமோ, ரரசெய்தி னஞ்சென்று

வென்றெய்து தற்கு மிக வரியபகை வென்றெய் தினம், வருமடக் கொடிமாதர் கண்வலைப் பட்டதுயர் மாற்றவற நெறி கண்டன, மலமாயை கருமங்க ணிலைகண்டி லோமென்று மக்களொலி விண்ண ளப்பத், திருமடத் தரசிருந் தருள்செயருள் விழியாள செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (ரு)

மெய்தயங் கரிசனம் பூசிவெண் ணீராட்டி விழியூதி மெய்துடைத்து, விரனிலந் தைவந் திடும்பொட்டின் மீதுலையின் வெண்ணீ றணிந்து விழியின், மைதயங் குறவெழுதி யியல்பாகு மக்கமணி வடமணிந் தம்பொ னரைஞாண், மஞ்யரிக் கிண்கிணி சதங்கைபொற் றண்டைகள் வனைந்துபொற் றொட்டி லுய்த்தே, யெய்தவந் துறுபெருஞ் செல்வமே யடையாத வின்சுவைத் தெள்ள மூதமே, யென்னுயிர்த் துணையாய மாணிக்க மதலையே யென்றுசீ ராட்டி யன்பாற், செய்தவம் பெருகுமம் மவைவளர்க் குங்குழவி செங்கீரை யாடி யருளே, திமிரமல மகலவரு சிவஞான மாமுனிவ செங்கீரை யாடி யருளே. (சா)

வே று.

முந்துதவு வார்களிடை யொன்றூர்வங் கூர
முந்தையினு மோர்பொருளை நின்றீகின் றூறில்
வந்துநிகழ் காருதவு றுங்காறங் காறு
மண்டுதிரை யானிறைய வொண்காவின் றேறல்
கந்தமலர் வேனிலுமி ழுஞ்சீர்பொன் றூத
கம்பரொரு மாவினுமை யுந்தாமுஞ் சார

நந்துநக ராளுமிறை செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௭)

வஞ்சமல மாயைகரு மஞ்சார்வின் றோட
மண்டுவிழி நீர்சொரிய நின்றேயன் பாகி
நெஞ்சுருகு வார்துணைவ செங்கோசெங் கீரை
நின்றநிலை பேர்தலிலி செங்கோசெங் கீரை
விஞ்சுருவ மோடருவி ரண்டோடொன் பானும்
வெம்புபணை யாதியும கன்றுகும் போத
நஞ்சொருப மாவருளி செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௮)

பங்கயம தேறிநற வுண்டேசங் கீத
பண்கள்பல பாடியொழு குநதாளொண் காவி
யங்குமுத மூசுபிண ரந்தாள்கொம் பூதி
யம்பணில வாவியினும் வெஞ்சூல்கொண் டேகி
மங்குறுயில் சோலையினு மங்கோடிங் கோடு
வண்டுதிரி கீழ்நதியு ளின்கேளின் பூசை
நங்கைநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (௯)

கம்பநகர் வாழிறைவ செங்கோசெங் கீரை
கங்கைசும வாதபர செங்கோசெங் கீரை
செம்பொன்முடி தாழ்சரண செங்கோசெங் கீரை
செங்கைமணி நேர்தலைவ செங்கோசெங் கீரை
யிம்பர்வரு மாரமுத செங்கோசெங் கீரை
யெங்கண்மல நாசவொளி செங்கோசெங் கீரை

நம்புமடி யார்துணைவ செங்கோசெங் கீரை
நங்கள்சிவ ஞானமுனி செங்கோசெங் கீரை. (கο)

செங்கீரைப்பருவம் முற்றிற்று.

தாலப்பருவம்.

——:o:——

ஆற்றற் பெரியோ ராற்றுவார்க் காற்றல் பசியை யாற்றுதலென், றறைந்த மொழியைக் கடந்துசிவ னடியா ரொனுால் விருந்தழைத்துச், சோற்றுக் குவடு தொலைத்தசிறு தொல்லைப் பூத மொருகோடி, தொலைத்தற் கரிய செஞ்சாலிச் சோறுங் கறியுங் கைகவிப்ப, ஆற்றற் கமைத்த பாறயிர்நெய் யுதிர்தீங் கனியு முறைமுறையே, யொழுகு பந்தி பலவிருத்தி யுவந்து படைத்துத் தீப்பசியை, மாற்றிப் பெருஞ்சீர் பெறுதற்கு வல்லாய் தாலோ தாலேலோ, மயிலைவரையிற் சிவஞான மணியே தாலோ தாலேலோ. (க)

அருவா யுருவா யவையன்றி யறிவாய் நிற்கு மவிர்சடிலத், தண்ணல் பெருஞ்சீ ரிசைப்புலவ ரறைதல் பட்டாங் காதல்போன், மருவார் மலர்த்தண் பொழின்மணிநீர் வாவி பசும்பொன் மதின்மாட, மணிமா ளிகைகோ புரநெடுந்தேர் மறுகு முதலா யினவற்றின், பொருவா வளங்க ளிறும்பூது புகல்வார் புகலும் படியெல்லாம், பொருளே யாகி யேனைய போற் புராண மலது மறைகூறுந், திருவார் கச்சி நகரிடங்

கொள் செல்வா தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவ ஞான தேவே தாலோ தாலேலோ. (உ)

ஆர்க்கு மதுரச் சங்கமளித் தரவ மடுத்த பெருங்கங் கை, யாறு மடுத்துப் பிறைத்தோணி யமர்ந்து சடைச்செங் துகிர்படர்ந்து, பார்க்கு முமைகட் கயலுலவும் பழைய கரு ணைக் கடலகத்துப், படிந்து பரக்கும் புறச்சமயப் பாம்பு பதைப்ப விடித்துமயல், போக்கு மயிலை வரையிவர்ந்து பொ ருண்மா மாரி யிடிக்கோடை, பொன்றப் பொழிந்து புகழ் வெள்ளம் பொருப்பு வாளக் கரைவாவி, தேக்கு முகிலே யமுதேசெந் தேனே தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவ ஞான தேவே தாலோ தாலேலோ. (ங)

முதையா மெமது மனப்புலத்தை மூடுங் காம வெருளி வன, முற்றுங் கருணைத் தீக்கொளுவி முருக்கித் திருத்திச் செருக்கெனுமா, மதயா னையைவந் தழியாது மறிப்பப் பொ றைவே லியுமமைத்து, வலிய சிவமந் திரப்படையால் வாய் ப்ப வுழுது சிவவிதையை, விதையா முளைப்பப் பிறதெய்வ விரவு களைகட் டறவளர்த்து, வீடாங் கனிகொள் பருவத்து விடயக் கரவர் புகுந்ததனைச், சிதையா வண்ணங் காத்தளி க்குந் திறத்தாய் தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞா ன தேவே தாலோ தாலேலோ. (ச)

வாங்கு சிறுவெண் மதிக்குழவி வயங்கு முடியு மதன் மாள, மலர்ந்த விழிசேர் திருநுதலு மதிநேர் சங்கக் குழை ப்பணியே, தாங்கு செவியுங் கடற்காளந் தரித்த மிடறுங் க னன்மழுமான், றயங்கு கரமுந் தனிக்கேழற் றடங்கோ டி

மைக்குந் திருமார்பு, மோங்குசினவெம் புலியதளொன் றுடுத்த வரையு மான்மலர்க்க, ணுற்ற வடியு நினதுண்மை யுணரா வஞ்சஞ் செயக்கருணை, தேங்கும் விழிக ளேயதனைச் செய்யா தாலோ தாலேலோ, தேடற் கரிய சிவஞான தேவே தாலோ தாலேலோ. (ரு)

வே று.

மீனெ னப்பிறழ் மதர்நெடுங் கட்சிறு வின்னுதற் றுவர் வாயார், வேட்கை நோய்தவிர்ப் பவர்க்குமட் புனலிடைவே றுசெய் தேறேயோ, லூனு யிர்க்கொரு பிரிவுதந் துதவுறு முத்தமா தாலேலோ, வுருவ மாகிவந் தென்கருங் கன்மன முருக்குவாய் தாலேலோ, வான ளக்குறுங் காலென வெய்திடும் வைந்துதிக் கணையென்ன, வாரி யுட்புகுங் குடமென வுட்புற மருவிநின் றகலாம, ஞானி னைப்பரும் பரசிவத் துறவரு ணற்றவா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (சு)

பாரி னிற்பெருஞ் செல்வமுண் பவர்க்கெனப் பற்றிநின் றுண்ணுமற், பனைப முத்ததற் கொக்குமூர் நடுநயப் பண்பினேன் றிருவென்னுஞ், சீரி யற்படு மொழியெமக் கல்லது திருவுடை யோர்தம்மிற், சிலர்க்கு ளைப்பது முகமனென் றுணர்த்துறு செய்கையொன் றுடையோனே, கூரி சைப்படா வீவறன்மா லையனிடைக் குறுகுறு தீவோர்கட், குறுகு வாரிற்சண் பகம்விடுத் தொள்வழைக் கொத்தில்வேள் சிலைவாங்கு, நாரி மொய்த்தெழு மயிலைமால் வரைக்கொரு நாயகா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (எ)

கல்லெ னத்திர டோட்புனே யீர்ந்தொடைக் காமவே ளுலகெல்லாங், கவன்று தன்வலிக் குடைந்துதம் புறந்தரக் கண்டதோர் மிகுவீரன், வில்லி யற்சுவைக் கரும்பும்வெம் பகழிகள் வீயும்விற் குழைநாரி, விளரி யங்குரற் சுரும்புமா ய் முடிந்துற விளைத்தவோர் விறலாளா, சொல்லி சைப்படு சங்கவண் புலவர்தந் தூக்கொடு நிறைநிற்பச், சொக்கர் கூ டலிற் பொற்பல கையினிடாத் தூக்கினும் படியொக்கு, நல் லி சைத்தமிழ் மாலைசூ டியபுகழ் நல்லவா தாலேலோ, நகரி நாயகக் காஞ்சிமா நகர்ச்சிவ ஞானியே தாலேலோ. (அ)

வே று.

ஒருமா யையினுயிர் மாபரம் வேறு மாபோலு
மூதுபோ மெனினிலை பேதமெ னுவோ தாவீயா
வருமா மறையுளா யாடலும் வேறு மான்மாவோ
டருளார் பதியியல் பாயென வோதா மாறுவாய்
வருமா கமமுளா யாடலு மாரா யாராயே
மலைவா துசெய்மய லாலுள மோவா நோவாவார்
செருமாய் வுறுமொரு வாசக தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (கூ)

நனவா வொருசிவ மோதிறை தாலோ தாலேலோ
நவிலு வலர்புகழ் மாலைய தாலோ தாலேலோ
கனவா வுலகுறு தேசிக தாலோ தாலேலோ
கதிர்வே லவன்மயி லாசல தாலோ தாலேலோ
மனவா சகவினை மேவிலி தாலோ தாலேலோ
மதனு டல்கொலடன் மாதவ தாலோ தாலேலோ

சினவா வருளித யாலய தாலோ தாலேலோ
சிவஞா னியெனுயிர் நாயக தாலோ தாலேலோ. (௧௦)

தாலப்பருவம் முற்றிற்று.

சப்பாணிப்பருவம்.

——:o:——

காளம் புரைந்தநெட் டுடலழற் கட்கொடிய காலன்வந் தனன்வந் தனன், கண்டவா றிஃதுரைத் தனமுரைத் தன மென்று கைதட்டி விடுவதென்ன, வேளம்பு தைத்தலறும் வன்னெஞ்ச ரிவ்வுலக மெய்யென்ப தில்லையென் பவர், விரிச டைக் கடவுளடி யவர்வரவு கண்டுள்ள மிக்கெழு மகிழ்ச்சி யென்ன, வாளம்பு யத்துணர்ப் பதமுக்க ணிறைபுகழ்ழித்த புன் சமய மென்புள், ளணிகடிவ தென்னமழ விடையொன் றுகைப்பவ னரியபுகழ் பாடி யாடத், தாளம் புடைப்பதற் கடியிட்ட தென்னநீ சப்பாணி கொட்டி யருளே, தன்னையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௧)

மொண்டுபொய்ப் பொருளென்று பொருளையிர வலர்வ ரின் முத்திரைசெ யாம லுதவி,முழுமறைப் பொருளைமெய்ப் பொருளென்று தொண்டர்க்கு முத்திரைசெய் தீங்கருள் வது, விண்டுமது மடைதிறந் தொழுகுபைங் கொன்றைபு னை விரிசடைக் கற்றைநெற்றி, விழியுடை யவர்க்கலது குவியாத தில்லையென்று விரியாத தேதி லார்முன், கொண்ட வெம் பவநீறு படநீறு தன்னைக் கொடுப்பது நடுங்க வாவி,

கொள்ளைகொண் டுண்ணவெம் பால்வருங் கொடியவெங்
கூற்றைத் தடுப்ப தாய,தண்டளிர் கவற்றுநின் கையிணை யைய
நீ சப்பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வெ
ன்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௨)

உருக்கிளரும் வடிவென்று நிலையாத விடயத்தி லுழலு
ம் புலன்க ளென்று, மொழிகின்ற புத்தியது தானென்றும்
விரிவாகி யொன்றாய குணம தென்றும், பரக்குமிவை யன்ற
ன்று புருடனே யென்றுமுயர் பகுதியே யென்று மதன்மே
ற், பரவிந்து வென்றுமவை யன்றியே மனமொழி படாத
வொரு பிரம மென்றும், விரிக்கிலிது நிறைவென்று மணு
வென்று மொன்றென்றும் வேறுபற் பலவென்று மெய், வி
ளைவென்று மிலதென்று முயிரியல்பு பலசமயர் வேறுவே
றாக வைத்துத், தருக்கமிடு கலகமற வந்தகரு ணாகரா சப்
பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ
ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (௩)

மும்மைமல முங்கதிர்க் கற்றைவட் டப்பரிதி முன்னி
ருள்செய் தீர மதியின்; முழுநில வெறிக்கும்வெண் டிறநீறு
ஞானமெனு மொய்குழலை மன்றல் புரிவா, ரொம்மணிய தெ
ன்றுபுனை நன்முகக் கண்டியுட னிறைவனரு ளஞ்செழுத்து,
மிலிங்காங்க சங்கசம ரசநிலைமை யிதுவென்ன விருளற வு
ணர்த்து குருவு, மெய்ம்மையுணர் வொடுகலந் துற்றிருந் த
ங்கையில் வெளிப்பட்ட ஞான வடிவும், விளங்குசர மும்பு
னித தீர்த்தசிவ சேடமும் மேலுலக வித்தென் றவை, தம்
மையுல கினில்விளக் கியவந்த தேசிகா சப்பாணி கொட்டி

யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே. (சு)

உரைமன மிறந்தவொரு தனிநிலைமை யிதுவென்ன வுள்ளபடி முனிவர் நால்வ, ருணர்ந்திட வுணர்த்துதற் குற்றதவ யோகத்தி னெண்ணுதற் கண் டிறந்து, பொருமதனை வென்றனன் பரமனென் கின்றசிறு புகழன்றி யோக நிலைமை, பொன்றியங் கவன்வென்றி கொள்ளலாற் படுதோல்வி பொன்றலற வெய்தின னெனும். வரைவில்சிறு மொழிபுகா தெண்ணிலோ ருணரவரு மறைமுடி வுணர்த்தி வெய்ய, மதனன்வந் தொருகணமு மெதிர்நிலா தொழுகுதவமாயாத நிலையி னுடனித், தரையினிடை வந்தருளு மெம்பரம யோகியே சப்பாணி கொட்டி யருளே, தனையறியு மறிவையறி வென்றசிவ ஞானியே சப்பாணி கொட்டி யருளே.

வேறு.

பெருவாழ் வுற்றிடு தீயர்செ ருக்குல கிற்கோரிற்
பிழையாய் முற்றிடு மாறென நத்திட ருற்றுழ
விரைதேர் புட்குலம் வாயிரை யிட்டிரி யக்காவி
யிதழ்சா யத்தடு மாறி வரிக்கயல் கெட்டோட
வெருவா மொய்த்திசை பாடளி மட்டுணல் விட்டேக
விளையா டித்தட வாளை குதித்தெழு பொற்பாய
திருவார் கச்சியர் நாயக கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (கூ)

குருகீ பத்தொடை யாளி யெதிர்த்த விறற்சூர
குலமாள் வித்தவன் வாழ்மயி லைக்கிரி பொற்பார

வருநீர் மைக்கரு ணாகர கொட்டுக சப்பாணி
மலமா யைப்பகை யானவ கொட்டுக சப்பாணி
கருநீர் மைத்திரு மாலடி யுய்க்குமெ னப்பூசு
கவர்நா மக்குறி சேர்தரு நெற்றிது டைத்தீசர்
திருநீ றிட்டிடு மாதவ கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (எ)

ஒருமா தர்ப்பிறை வாணுதன் மைக்கண் மலர்க்கோதை
யுமைகா ணக்கம லாலய னொத்துற நற்றுளம்
வருமான் வத்திர னார்கொளு மத்தள முற்பேச
மகிழ்வீ ணைத்தொழி லாரிசை யொத்திசை யப்பாட
விருமா தர்க்குயி ராமுரு கற்பெறு நிட்காம
விறையா டப்புல வோர்புனை மெய்க்கவி தைப்பேர்கொ
டிருமா லைப்புய மாதவ கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (அ)

எளியா ளைப்பெறின் மேனிப தைப்ப வலைத்தாவி
யெதிர்வா ளைப்பெறி னோடு மறச்சிறி யர்ப்போல
வொளியா முற்சிறு மீனொதி ரக்கவர் வுற்றுடி
யுகள்சே லுற்றிட வாயினா கக்குபு கொக்கோடு
மளியார் மட்டலர் வாவியு டுத்தற நற்சாலை
யழகார் கச்சிநி வாச கருத்தும ருட்பாடு
தெளியார் கட்கரு ணீர்மைய கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (கூ)

புதையா மெய்ப்பொரு ளீகைய கொட்டுக சப்பாணி
பொழில்சூழ் கச்சியின் வாழ்பவ கொட்டுக சப்பாணி

மதயா னைப்பொறி காவல கொட்டுக சப்பாணி
மறைவாய் மைத்திரு வாசக கொட்டுக சப்பாணி
சுதையா மெய்ப்பொடி மேனிய கொட்டுக சப்பாணி
தொழுவார் கட்கரு டேசிக கொட்டுக சப்பாணி
சிதையா நற்குண தாபத கொட்டுக சப்பாணி
சிவஞா னிப்பெய ராண்முனி கொட்டுக சப்பாணி. (௧௦)

சப்பாணிப்பருவம் முற்றிற்று.

முத்தப்பருவம்.

அருந்து மமுதி னினியதா யன்போ டளைந்து படிறில தா, யறைந்த மொழிதத் துவமசியி னன்றி மாறு வியல்பி னதாய்ப், பொருந்து மறையா முடம்பிற்குப் புக்க வுயிரா ய்ப் பவக்கடற்குப், புணையாய்க் கயிலை வழித்துணையாய்ப் பொலிந்த திருவஞ் செழுத்தென்னும், பரந்த புகழ்மந் திர வேந்து பவனி போதுந் திருமறுகாய்ப், பனிவெண் டிங்கட் சடைமுடியோன் படிவ முணர்த்தும் விளக்காகித், திருந்து பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்கு ங் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (௧)

எல்லாத் தேவர் தமதுயிரு மிமைப்போ தினிலுண் கரி யகடு, வீன்ற வோதைக் கடன்முத்த மெனைத்தும் வேண் டே மெழின்மதவேள், வில்லாய்க் கொலைசெய் தொழில்ப டைத்த வேழக் கரும்பின் வெண்முத்தம், விரும்பே மலர்ப் பூம் பொழிற்றிருநெல் வேலிப் பதியின் வேய்முத்த, மல்லா ற் கருங்காட் டுயிரனைத்து மலமந் தழியக் கதழெரியை,

யாக்கு நெடிய வேயமுத்த மணுகேஞ் சிறிது மருளின்மொழி, செல்லாப் பவளத் திருவாயாற் செல்வா முத்தந் தருகவே, திளைக்குங் கருணைச் சிவஞான தேவா முத்தந் தருகவே. (உ)

களரின் மூளைத்த செங்கரும்பு கண்ணுற் பயந்த விளங்குமரன், கதிர்கான் றெழுசெம் பரிதியுடல் கறுப்பச் சிவந்த சுடரிலைவேற், றளிரி னியல்வென் றலவுசிறு தவளை வாய்ச்சில் லரிக்குரற்பூஞ், சதங்கைச் செம்பொற் சிறுதண்டைத் தாளென் றலைமேல் வைத்தபிரான், விளரி வரிவண் டிமிர்குவளை வியன்சேர்த் தணிகைக் கருங்கல்லின், மிசைப்பூப் பித்தா னெனக்கருதி வினையே னுள்ளக் கல்லிடைத்தாண், முளரி மலர்கள் பூப்பித்த முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (௩)

கற்ற புலவர் மிக்சிறந்து காட்டு மொன்றன் வளமெடுத்துக், கவியால் விரித்துப் புகன்றியம்பக் கருதி யதுபொற் குன்றநா, ணுற்ற மணிப்பொற் கோபுரமோ வொளிர்பொன் மாட மோமுகில்வந், துறங்கு மதிலோ மாளிகையோ வுலவு திருத்தேர் மறுகோசீர், பெற்ற குடிகண் மனைவளமோ பிரச மலர்த்தண் டலையோநீர், பெருகு தடமோ வெனவிறைவி பிறங்கு கோயிற் றிசைபோல, முற்ற மயங்குஞ் சீர்க்காஞ்சி முதல்வா முத்தந் தருகவே, முருகன் மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (௪)

இணையி றிருவள் ளுவப்பெயர்கொ ளெம்மான் கரப்பா ரிரவன்மி, னென்ன விரந்து மிரத்தக்கார்க் காணி னிரக்

க வென்றுரைத்து, முணர்வு தெருள்வித் தமைகொண்டே
யொருவர் தமையு மிவ்வளவு, மொன்று மிரந்தா மல்லமி
யா முன்னை யின்றீங் கிரக்கின்ரு, மனையு மவர்தம் முகக்
குறிப்பா னறிந்தங் கவர்த மகம்விழைந்த, வனைத்து மமுத
முறழீர மளைந்த வின்சொ லுடனளிக்கு, முனையில் கொ
டைச்சிந் தாமணியே முகிலே முத்தந் தருகவே, முருகன்
மயிலைச் சிவஞான முனிவா முத்தந் தருகவே. (ரு)

வேறு.

அதிர்செய் கடலகன் ஞால முடியர விற்கெலா
மரசு நடுமுடி யீனு மெழுசுடர் வட்குமோர்
கதிர்கொள் புதுமணி கோடு கொடுமிடி யுற்றுளார்
கடையு மணிகொடு வீசு மவரென நிற்றறீர்
துதியி லுடல்பொரு ளாவி கொடுதமி யற்குமா
சுருதி முடிவுறு மாசில் பொருளுத வுற்றகூன்
மதியின் முடிமதி யாள பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (சு)

கருவி யுடல்பொறி பூத முதலன முற்றுமே
கழல்பு தனியறி வாகி யொருபிர மத்துநாம்
விரவி யதுவடி வாயி னமெனுமோர் சுட்டுமே
விளிய வரவொடு சேற லருகயல் கொட்புறு
வருவ முருவமி லாத நிலையொர் கணத்துளே
யருளு மொருமொழி யாள திருவளர் கச்சியூர்
மருவு பெருகருள் வாரி பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (எ)

நிறையு மருண்மழை மேக மெனவும முப்புரு
நிதிய வளையொடு தாம மாயெனவும் வற்றுரு
துறையு மலிதயை வாரி யெனவுநி னைப்பரா
யுணர்வு தருகலை யோதி யுணர்வும யக்கிலா
ரறையு மொழிகொடு மேவி நினையிரங் துற்றுநா
மலது பிறர்தமை யாது மருவியி ரக்கிலே
மறையி னிலைதவிர் யோகி பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (அ)

குதலை மொழிமருள் பேதை * பிலநதி மட்டுவார்
குவளை மதர்விழி மாலை மதியைம ருட்டுவா
ணுதலை வழிபட வேகி மறியும்வி யப்போடே
நுவலி லளவில வாகும் வளமலி கச்சியாய்
திதலை முலைமட மாதர் கொடுமய லிற்படார்
திகழு மனமுடை வாய்மை நெறியறி ஞர்க்கெலா
மதலை யெனவரு தூய பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிமணி முத்தமே. (கூ)

இயலு மொருகுட வானை யதனுளி ருக்கவா
னெனவ திவுறவு பாதி யறவறி வித்தல்போ
லுயலி லுடலினுண் மேவு முயிர்பிர மத்தின்வே
றுறழிய வொருபொரு ளாகு மெனவறி வித்தவா
செயலொ டுமைமனம் யாவு மதியம ருட்டுமோர்
திலக நுதலுமை பாகர் பணிசெய வுய்த்துவாழ்

---

* பிலநதி-கம்பை.

மயலி லடியவர் நேச பணிமணி முத்தமே
மயிலை வருசிவ ஞானி பணிபணி முத்தமே. (கo)

முத்தப்பருவம்முற்றிற்று.

வாரானைப்பருவம்.

நேரா வெமக்குக் கொடுத்தவுட லிலையா தழியும் பொருளாவி, நெறியின் மயங்கித் தமவென்னு நினைவினோரிங் கிவரொன்றுந், தீரா வெகுளிக் கன்றகிவர்தஞ் சிந்தை முருட்டுவிறகென்றுந், தீய காமக் கள்ளுண்டு செருக்கு களிய ரொன்றுமருள், கூரா தழுக்கா றெனுமளற்றுக் குழிவீழ் குருட ரிவரொன்றுங், கொலையை யஞ்சா ரொன்றுமுளங் கொண்டு தமியேமழைப்பவுந், வாரா தொழியல் பெருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வளாயிற் சிவஞான மணியே வருக வருகவே. (க)

அணங்க வெம்மைப் பிடித்திருந்த வவாப்பே யகன்று குடிபோக, வருள்செ யொருமந் திரவாதி யாகிப் பாச வல்லிருளைப், பிணங்கு மொருசெஞ் சுடராகிப் பிறவிப் பிணிக்கு மருந்தாகிப், பிறந்த வன்புக் குழவிக்குப் பெற்ற தாயா யிடும்பைச்சே, றுணங்க வெழுசெங் கதிராகி யுழலுஞ் சமயக் கடாக்களிற்றை, யுடற்று மரிமா னேறுகி யுவந்து தமியே நறுமலர்தூய், வணங்க வொருதே வாய்க்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வளாயிற் சிவஞான மணியே வருக வருகவே. (உ)

பைந்தா துருக்கு நறுங்கொன்றைப் பனிமா மலருங் குழவியிளம், பயில்வெண் மதியுந் துளையெயிற்றுப் பாம்புஞ் சுமக்கு மன்றுநீ, செந்தா மரைச்சே வடிநோவத் திரும்பித் திரும்பி யோரிரவிற், சேல்வெள் றகன்ற வரிமதர்க்கட் சிலைக்கூன் புருவத் தரளநகை, நந்தா விளக்கின் றிருமனைக்கு நாவ னகரின் வன்றொண்டர், நடத்த வொருதூ தாளாகி நடந்த வுனக்கின் றடியெம்பால், வந்தால் வருமோர் பழியுண்டோ மதுரக் கனியே வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (ந)

முருந்தேர் நகையார் மயறுரக்கு முத்தே வருக பிறவிவன, முரிக்குங் கருணைக் கடாக்களிறே முன்செய் தவத்தோர் தமக்குவரு, விருந்தே வருக தூண்டுசுடர் விளக்கே வருக சோதிமணி, விழியே வருக பரமுணர்ந்து விளைக்குந் தவத்தோர் பானிறைய, விருந்தே கமழுந் தீங்கனியே யிறையே வருக புகழ்நிலா, வெறிக்கு மறுவின் மதியமே யெமையா ளுடையாய் வருகவரு,மருந்தே வருக பெருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (சு)

இரவின் முயல்வார் மிடியினு லிரங்கா வுளத்த னெனப்படுத, லிருளாற் பகைஞ னெனப்படுத லிறவாக் கொடுந்தீவினையினுற், பொருவில் கொலைஞ னெனப்படுதல் பொய்யாற் பொய்ய னெனப்படுதல், பொறுமை யதனு லிவனென்றும் பொறுமை யினன்கா ணெனப்படுதல், வெருவுமுடம்பி னிடும்பையினுல் விளங்க வறியா னெனப்படுதல்,

வெகுளி யதனாற் றரியாத வெகுளி யினனு மெனப்படுதன், மருவி யுலகில் வருங்கருணை வடிவே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (ரு)

சுருளுங் குடரும் புழுமலமுஞ் சொரியு நீருங் கலந்துபுறந், தோன்று வயிறும் வேறொருபாற்றோன்றி நரலை யெனுந்தசைதான், றிரளும் புன்மார் புறமுலையுந் திமிரு நறுநாற் றப்பொருளாற், றீர்க்கு முடலைப் புலாலுடம்புஞ் செத்தாற் கிடந்து புறங்காட்டிற், புரளுந் தலையுங் கொடுநின்ற புன்மாதனைவா னமுதமே, பொன்னங் கொடியே பசுங்கிளியே பூவாய் மயிலே யென்றென்று, மருளும் பெரும்பித் தொழியவரு மருந்தே வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (கூ)

போற்ற வருக வடிமையேம் புகழ வருக நறியமலர், புனைய வருக வருண்மாரி பொழிய வருக வடிகடலை, யேற்ற வருக மவுனமொழி யிசைப்ப வருக வெமதுளத்தி, னிருப்ப வருக வறங்கடலை யெடுப்ப வருக நீற்றழகு, தோற்றவருக வெங்கண்மய றுரப்ப வருக கொடுங்காமந், துடைப்ப வருக கூற்றுவலி தொலைப்ப வருக பிறவிநோய், மாற்ற வருக வறிவுருவில் வைப்ப வருக வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (எ)

அற்றங் களையு நின்பெருஞ்சீ ரறைந்த செந்நா விவ்வுலகி, லயலோர் மொழியு மறையாம லன்பா னின்பாற் பற்றுமுளம், பற்றொன் றிங்கட் செயாமலுனைப் பார்த்த விழிகள் பிறபொருளைப், பாரா துன்சொற் கேட்டசெவி பயனில் பி

நசொற் கேளாம, லுற்றுன் றிருத்தாட் குற்றேவ லுஞற்று கரங்கள் பிறிதொன்றை, யுஞற்ரு துள்ள படிசுட்டா துன்னை யுணர்ந்த பேருணர்வு, மற்றொன் றினையிங் குணராமல் வந்த குரவா வருகவே, மயிலை வரையிற் சிவஞான மணியே வருக வருகவே. (அ)

வே று.

முட்டு மார்புல னுய சேனைகண் முறியமான்
முற்று நானெனும் வேழ மாய்வுற மனமென்மா
பட்டு வீழ்தர வாவி யாமர சுடையவே
பற்றி ஞானநல் வாளி னலொரு தமியனய்
வெட்டு பாணிய னுன லாலய விலையெனு
வெற்றி யாலறி வாகு மோர்நக ரிமையுளே
கட்டு மாறெதிர் மாறில் சேவகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (கூ)

பற்றி லாவுணர் வாகி மாமன மருவியே
பற்று வாள்விழி யாறு சேர்புகை தனில்வரா
வுற்றி லாவமர் ஞான நாயகன் வருகவே
யொப்பி லாவருண் மூல காரணன் வருகவே
முற்றி லாமுலை மாத ரால்வரு மயலரு
முத்தி சேர்வுறு மாறு நீதறு துணிவுநூல்
கற்றி லாரறி யாத சிரியன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (கഠ)

வித்து வான்வர வால லாதொரு பிறிதினுன்
மிக்க வாழ்வுபெ ருத வாறென வடியரோ

மத்து வாமுடி வான நீவரு வரவுதா
னற்று வேறுள வேது வாலுள மகிழ்வுறே
முத்து வாளர வீனு மாமணி மிகுகுவான்
முற்று மாமதி ஞாயி றுமெனு மயிலைவாழ்
கத்து வாதமி லாத போதகன் வருகவே
கச்சி வாழ்சிவ ஞான தேசிகன் வருகவே. (கக)

வாரானைப்பருவம் முற்றிற்று.

அம்புலிப்பருவம்.

இரவடைவை நீயிரவை யடையா னிவன்கலை யெண்டி
ரண் டுடையை யிவனெண், ணெண்கலை கடந்தவன் மறுவு
ண் டுனக்கிவற் கில்லையா லோர்மறுவு நீ, மருவுமனா நாணி
லவை யிவனென்று மழியாது வருபெரும் புகழ்நில வினன்,
வளர்குழவி யிற்றொழு வதற்குரியை நீயிவன் வணங்கியிட
வென்று மூரியான், விரவுபெண் மயலுடைப் போகிநீ யிவ
ன்மயலை மேவாத பரம யோகி, விடையுடைப் பாகன்முடி
யிற்பொறையை நீயிவன் விளங்குதளிர் மென்கை யில்விடா,
தரவவணி யற்பொறுப் பவனுத லால்விளாங் தம்புலீ யாட
வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட ன
ம்புலீ யாட வாவே. (க)

பையரவின் வெவ்விடப் பகுவாயி னிடைசென்று பட்
டுனைப் போல நைந்து, பாதியுமை பங்கனை யிகழ்ந்தவவன்
வேள்வியிற் பல்லொழிந் துழலு மந்த, வெய்யவன் றனை

யடைந் தென்பயன் மெய்குன்றி விளையவிங் கெய்த வருநீ, விரிசிறைய வாரணச் சினையென்ன வேகின்னை மிசையவரு பைங்க ணரவ, முய்யலற வோர்கிலச் சுமையரவை வாயல கிளேடிக் கவர்ந்தெடுத் தே, யுதறுமொரு தோகைமயி றனையேவ வேதனக் கொருதுணைவ னுய முருகற், கையனிவ னுளைசெய்வ னுதலா லுளமகிழ்ந் தம்புலீ யாட வாவே, ய ருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யா ட வாவே. (௨)

கரியவண் டிமிர்குவளை யிகலியங் கயல்வென்று காதள வு மோடி மீளுங், கருநெடுங் கண்ணுடைய வொருமாது கு ழல்வெண்மை கருமைசெய் திடு மிவற்குத், திரியநின் மெய் யினிடை வருகருமை யினைவெண்மை செய்வதரி தன்று கண் டாய், சிவமென்று முயிரொன்றும் வேறுசெய் தகலாத திமி ரமா மலம கன்றே, யிரியவருள் குடியிருக் கின்றவிழி மலர் திறந் திணைமலர்ப் பதமுடி யின்மே,லிருத்திமன மொழிகட ந் துடனின்று குறிகுணமு மின்றியரு மறை தனக்கு, மரிய பொரு டனையளிக் கினுமளிக் குவன்விரைந் தம்புலீ யாட வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட ன ம்புலீ யாட வாவே. (௩)

உந்துமா றருள்பிறந் தெழுதரு மிவன்றிரு வுள்ளத்து முனிவில்லை யென், றுன்னல்சிறு விதிமகத் துறுமமரர் தம் மையு முன்றனையு மமர்கு றித்து, வந்தமா மதனையுங் கண் புன றுளிப்பவே மனமுருகி மெய்யன் பினுன், மலர்கொண் டு பூசனை தொடங்குமொரு தொண்டன்மேல் வஞ்சினங்

கொண்டு வெம்பிச், சிந்துமா ரழல்விழிப் பணமருப் பெரு மையிற் சென்றகொடு மறலி தனையுஞ், சிரமைந்தொ டைந் துடைய திரள்புயத் தெறுழ்வலித் தீயனையு முன்வெகுண்ட, வந்தவா தனையிருப் பினுமிருக் குங்கடிதி னம்புலீ யாட வா வே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட் னம்பு லீ யாட வாவே. (ச)

நெடிமைகொண் டவிர்பவள வார்சடைக் கற்றையு நெ ளிதிரைக் கங்கை நதியு, நெட்டுடற் கட்செவிப் பணியுமத னைத்தெறு நெற்றிமிசை யொற்றை விழியுங். கடிமைகொண் டிடுகவைக் காலெடும் பகடுந்து காள மேகம் புரையுமோர், காலனுயிர் கொண்டசெங் கமலமல ரடியின்மால் கண்ணுங் காணுமை யான், மடிமைகொண் டிங்கழைத் திடவுமொரு மனிதனென வாரா திராதி கண்டாய்,வழங்குமுடல் பொரு ளாவி கைக்கொண்டு மருளாது மனிதனைத் தனதருளினு, லடிமைகொண் டிடவந்த கள்ளவடி வினன்விளைந் தம்புலீ யாட வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானி யுட னம்புலீ யாட வாவே. (ரு)

நறியமலர் விழிசிவந் துணைவருக வென்றில னடந்தத ங் ஙனமாயின் யா; நணுகவரு வாயென வழைத்தெதிர் விடு க்கில நாண்மலரின் முகமலர்ந்து, சிறியநகை யிளநில வெ றிப்பவரு சென்றனன் செயற்கைவடி விதுவன்று தன், திரு முடி யணிந்திஃ தியற்கைவடி வெனமனந் தெருள்விலார்த் தெருள்விக்க வோ, வறியவுரு வாமிரவி யெதிர்மழுங் குறு சிறுமை மாற்றியொளி பெறவைப்ப வோ, மாசுட றுடை

ப்பவோ குறைதவிர்த் தருளவோ மனத்திவர் நினைத்த நினைவை, யறியகில மறியாமை யறவருளு குரவனுட னம்புலீ யாட வாவே, யருள்கசிந் தொழுகுவிழி யுடையசிவ ஞானியுட னம்புலீ யாட வாவே. (௬)

வேறு.

ஏதிலார்களிகழ் காமநோயதுற வேறறங்கடை யுடையநா, மேதுபோவதென வேயிராதிமுன மீறில்வெம்பவ மருவுமோர்,தீதினு *ன்னிற நாமனுமொருவன் ஞானியங்கழல் செறியவே, தேறிநீவருதி யாலெனுவினைக டூகொள்பஞ்சென வழியநால், வேதமாமுடியி னேதுமோர்பொருளை மேனியிந்திய முதலவாய், மேவுபாதிகளை மோதியோர்மொழியில் வேறறும்படி யுதவினு, னுதலாலிவனு மோகையாலருளு மாடவம்புலி வருகவே, யாசிலாதசிவ ஞானதேவனுட னுடவம்புலி வருகவே. (எ)

வெயிலிலங்கிழை மாதராடவர் விரகமொன்றுற மவ்வொலாம், விரியும்வெண்டிரை வேலையூடெழ வெளிறும்வெங்கடுவெனவெழா, முயலிறந்தசை யாதுதானுடன் முறுகவெந்துற வடலையான், முழுகும்வெங்கன லாகுமாலென முனியவுன்றனை யகலெனு, தயர்வுளாந்தரு காமநோய்கன வினுமடைந்திட வறிகிலா, வமலநெஞ்சின னுதலாலிவன் வருகவென்றன னருவிதாழ், மயிலையங்கிரி யாளியோடுற வருகவம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி வருகவே. (அ)

---

* ன்னிறநாமன் என்றது-சசிவன்னனை.

மூடிவறுஞ்சக சீவமாபர மௌனமயங்குறு மயலெலா, முகைநெகிழ்ந்தளி பாடுமாலையின் முதிர்சினங்கொளு மரவு போ, னெடியவன்றறி காணுமோர்மக னெனவழிந்தொரு பிரமமா, நிலையினின்றிடு ஞானியேவலி னெழுகிநின்றிடு மவர்கடா, மொடிவறும்பர போகமேவின ருணருமங்கவர் நிலையிலே, யுறுவர்பின்பென வேதமோதிடு முறையுணர்ந்தனை யலைகொலோ, மடிவறுஞ்சிவ யோகியோடுற வருகவம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி வருகவே. (௯)

அகல்விசும்பெழு பாயபேரிருள் பருகுசெங்கதிர் வருகென, னமரனொன்றுயர் தேவர்தானவர் குரவர்தங்களை வருகெனன், முகமலர்ந்துனை யாடனீயிவண் வருகவென்றனனவன்வரு, முகிலுறங்குறு வானளாவிய மயிலையந்திருமலையிலே, பகையெனுங்கதிர் கரனுமாமணி யரவமுண்டெனவெருவனீ, பரனெனொன்றிய நாகமாலிவர் பறவைகண்டுளம் வெருவுமோ,மகிழ்வுகொண்டெமை யாளியோடுற வருகவம்புலி வருகவே, மருவருஞ்சிவ ஞானியோடுற வருகவம்புலி வருகவே. (௧௦)

அம்புலிப்பருவம் முற்றிற்று.

சிற்றிற்பருவம்.

——:o:——

கடியிற் சிலகஞ் சுகமனிதர் கல்வீழ் மணிநீர்க் குவளைமலர்க், கயத்துப் பாசி யெனவொதுங்கிக் கடிதின் முன்ன ரொ

னெருங்கிப், படியிற் பணியக் கிடையாமற் பாம்பின் றலை யிற் பெருஞ்சுமையைப், பகைதீர்த் தொருசெங் கோலோச் சிப் பாது காக்கு முடிமன்னர், தொடியிற் பொலிந்த கரங் கொண்டு துடைத்துத் துகடம் முடற்கணிந்து, சுடர்மா மணிப்பொன் மகுடத்திற் சுமப்பச் சிறந்த நினதுதிரு, வடியிற் புழுதி படும்வண்ண மடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (க)

அழிக்க வுளத்துக் கொண்டனையே லடங்கா தெழும் வெங் கொடுஞ்சினத்தை, யழிக்க கடலிற் பெருகியெழு மவாவை யழிக்க செருக்குளத்தை, யழிக்க விருளி னுய்த்திடுமோ ரழுக்கா றதனை மூலமற, வழிக்க காமப் பெரும்பிணியை யழிக்க கொலையை யஞ்சாமை, யழிக்க வினைகண் மூன்றனையு மழிக்க வழியு முடம்பதனை, யழியா தென்னுங் கருத்ததனை யழிக்க மூல மலவிருளை, யழிக்க புழுதி கொடுசமைத்த வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (உ)

பழித்த வுலக முயிராதி பகவ னெனப்பே தித்தென்றும், பாழ்செய் மூல மலவிருளைப் பதத்தா லழிக்குஞ் செயலன்றிச். சுழித்த கடலி லரவணையிற் றுயில்வோ னளித்த மலரயனுற், றோன்று முலக மழித்திடுமத் தொழிலும் புகழ்செய் யாததெனி, னிழித்த புன்சொற் புன்புலவ ரிசைத்துத் தாமே யழித்தலுறும், யாப்பே போல விழைத்தளவில் யாமே யழித்து விடுமிதனை, யழித்த னினக்குப் புகழ்தருமோ வடியேஞ் சிற்றி லழியேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியேலே. (ந)

போக்கு வரவு குறிகுணங்கள் புணர்தல் பிரித லிரவுப கல், புறமுள் ளகன்ற நிரஞ்சனமாய்ப் புகரற் கரிய வவாச் சியமாய், நீக்கு முருவக் கலையாகி நிறைந்த வநாதி யாதி யாய், நிகரி லகர முதலனவாய் நின்று பலமந் திரமு நால், வாக்கு மறையு மாகமமு மற்றுங் கலைகள் பற்பலவு, மண்ணும் புனலுங் கதழெரியும் வளியும் விசும்பும் பேருல கு, மாக்கும் விளையாட் டுடைக்குரிசி லடியேஞ் சிற்றி லழி யேலே, யழியாக் கருணைச் சிவஞான வையா சிற்றி லழியே லே. (சு)

செங்கட் கமல மலர்த்தவிசிற் சிறந்து தனிவீற் றிருக்கு மொரு, திசைமா முகற்குத் தொழில்படைத்த றிகிரிப் ப டைவால் வளைசுமந்த, வங்கைக் கமல விழிக்கரிய வழகன் றனக்குத் தொழிலளித்த, லழித்த லெமக்குத் தொழிலென் னி லடுபோர்ப் பணைக்கைக் களிற்றுரியும், பைங்கட் பணியு ம் வேணிநெடும் பவளக் கொடியிற் றிரைதிரைத்துப், பாயு ங் கங்கைப் பெயர்யாறும் பணியத் தகுகூன் முதுகமுத, தி ங்கட் கொழுந்துங் காட்டென்பேஞ் சிறியேஞ் சிற்றில் சி தையேலே, சிகர மயிலைச் சிவஞான தேவா சிற்றில் சிதை யேலே. (ரு)

கொந்தார் மலரு நறும்புகையுங் கொண்டு நினையாந் தொழத்தக்க, குலதே வதையாய் வழிபட்டுக் குறித்துப் ப ணிதுஞ் செங்கரும்பே, நந்தா விளக்கே யமுதமே ஞான வடிவே நாயகமே, நாடும் பொருளே யென்றென்று நாளு நினையே பாடுதும்யாம், வந்தார் தமது பிணிதீர்க்கு மருந்தா ய்ப் பணியு மரசர்முடி, மணியா யெமக்கோர் பற்றாய் வரிவ

ண் டொழுகு மதுவுண்ணுஞ், செந்தா மரைச்சே வடிநோவ ச் சிறியேஞ் சிற்றில் சிதையேலே, சிகர மயிலைச் சிவஞான தேவா சிற்றில் சிதையேலே. (௯)

வேறு.

இற்றைமணல் கோலியிழி சொற்பொருளை வாளா
வெய்ப்பில்புல வோர்கவியெ னப்புகலு மாயோ
னுற்றோர்பெயர் கூறெமது சிற்றில்சிதை யேலே
யுய்த்தமொழி யோவல வெமக்கிறைவ னீயே
மற்றுமொரு தேவுள வெனக்கருதி லேமான்
மக்கள்பிணி யேயலது மற்றருள்செய் யாதே
செற்றறிகி லாவொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (எ)

மெய்ப்படிம மேவியடி மைக்குரிமை யாராய்
மெய்ச்செயலி லாதவரு நற்றவரொ ஞுவோர்
பொய்ப்பெயர்கொள் வாரொனினு மெய்ப்பெயர ராயே
புக்குதவு நீயெமது சிற்றிலென வோர்பேர்
வைப்பவளி யாதிதையு மக்கடலை மீதே
வைக்குமடி யாலிவண ழித்தலற மாமோ
செப்பரிய வாய்மையிறை சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (அ)

ஒற்கவிர வோர்களிலெ னப்புகல்வ தேநீ
யுற்றொருவர் பாலுமுளை வுற்றுரைசெய் யாதே
நிற்கநனி யீகைவினை பெற்றிடுகை யாலே
நித்தமது கோறனினி யற்கைநின தார்சீர்

கற்குமடி யெமிரவ கற்றிலெனு மீதுங்
கைத்தடியி னலிவண ழித்தறகு மோகாண்
சிற்கனசி வானுபவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுனி சிற்றில்சிதை யேலே. (கூ)

மொய்த்தபுழு வாகமுயிர் புத்திமன மாயா
மூற்றுமற வேமறைமு டிக்குமணி யாமா
தத்தொமசி யாகியப தப்பொருளி னலே
தக்கசிவ னீயெனவு ணர்த்தியது தானு
வைத்தநின தாள்படுமி துற்றடிமை யாவே
மைக்கண்மணி பூடுபடு தற்குநிக ராமே
சித்திகட ரும்மொருவ சிற்றில்சிதை யேலே
சிட்டசிவ ஞானமுணி சிற்றில்சிதை யேலே. (க0)

சிற்றிற்பருவம் முற்றிற்று.

சிறுபறைப்பருவம்.

———:0:———

குன்றவரி சிலைகொண்ட வெம்முடைய நல்லருட் குன்றமே தெய்வ மென்றுங், குறுகுமவ னடியவர் குழாத்தினுட் புகுவதே கூறரிய வீட தென்று, மன்றுளுமை க்ண்குளிர நின்றுநட நவிலுமொரு வள்ளறிரு வஞ்செ ழுத்தே, மந்திரம தென்றும்விட யப்பகை யொறுப்பதே வலியென்று முள்ள படியே, நின்றுதனை மயலின்றி யுணர்கின்ற வுணர்வதே நிலையான வுணர்வ தென்று, நெஞ்சினிறை யழியவெகு ளிக்கடுங் கனலெழா நிலையதே தவம தென்றுஞ், சென்றுவினை

பொடியாக வருள்செயருண் மேகமே சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (க)

வந்துபிற கடவுளர்க டமையுணாத் துமைகாண மணிமன்று ணடமாடு மா, மணியையிகழ் பரசமய நிலைகுலைய வென்றறையும் வன்றிறற் பறைய தென்னச், சிந்தைகவ ருந்துயர் விளைத்துவரு காமமொடு சினமென்னும் வெம்பு லிக்குந், தீராத வாணவப் பேரிருட் குந்தனி தெழிக்குநெய் தற்பறை யென,நந்தலரு மறிவென்னு மோரிளங் கன்னிகைய ஞானவடி வான பிரம, நன்மணம் புணர்கின்ற மங்கலப் பறையென்ன நற்றவக் குன்ற மேநீ, செந்தளிரி னெழில்வென்ற நின்றிருக் கையினுற் சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (உ)

கருவிளைக் கின்றசிற் சிலமொழி பகர்ந்துசில கடவுளா யிறைவ ரொன்று, கண்டியொடு வெளியதிரு நீறிழந் திருள்பருகு கனலுமுயர் வான கத்தி, னிருவிளக் குந்திகழும் விழியான வெம்மிறையை யிகழ்புறச் சமயர் தங்க, ளிருகவுளி னுங்கடிதி னறைவதென வெற்றிவே லிறைமயிலை வெற்பின் முடிமே, லொருவிளக் கெனநின்று திகழ்பவா செம்மணிக ளொளிர்பணு முடி யனந்த, வுரகமென் றிடுபெயர்த் தண்டின்மிசை நிலமென்னு மோரகலின் மெய்த்த புகழாந், திருவிளக் கிட்டுவைத் திடவல்ல வித்தகா சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (௩)

வார்மணி முலைக்கருங் கயனெடுங் கட்பவள வாய்மலர்க் குழன் மங்கையர், மலரடிக் கணிசிலம் பரிமணி முழக்கமும் மதமழை விடாது சொரியுங், கார்மணி முழக்கமுங் குணில்பொரு பெரும்பணைக் கடன்முழக் கமும் வீரர்தங், கழலொலி முழக்கமுஞ் செங்குதலை வாய்மகார் கட்டுகிண் கிணி முழக்குந், தார்மணி முழக்கமொடு வருபரி முழக்கமுந் தரும சாலைகண் முழக்குஞ், சதுர்மறை முழக்கமுஞ் செந்தமிழ் முழக்கமுந் தமனியத் திரு மறுகுலாந், தேர்மணி முழக்கமுங் கிளர்கச்சி நகராளி சிறுபறை முழக்கி யருளே, சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (சு)

நரம்புதிர மென்புதோன் மூளைதசை பலகூடி நரியுமடி செவிய சுருள்வா, லுயுநெட் டலகுவிரி சிறகர்வன் கழுகுமிது நமதென்ன வந்த வுடலு, நிரம்புதுயர் செய்தடங் காதுழன் றொழியாத நிரயத் தழுத்து புலனு, நெறிமருண் டலமந்து திரிகின்ற புன்மனமு நில்லா தியங்கு முயிரும், பரம்புபற் பலவாய குணமுமல னென்றுபோய்ப் பாசநிலை குலைய நின்ற, படியிலெனை யறிதலே நினையறித லாகவிரு பதமுமென் முடியில் வைத்துத், திரும்புத லிலாதவொரு பதமுதவு கொடையாளி சிறுபறை முழக்கி யருளே,சிவநெறி தழைக்கவரு சிவஞான தேவனே சிறுபறை முழக்கி யருளே. (ரு)

வே று.

அரிமதர் மழைக்கண் வளர்வா ரவிரறன் மருட்டு குழல்வா, ரணிமதி கவற்று நுதல்வே யனவொளிர் மணித்தொடியதோள், வரியளி மிடிக்கு மிடியா மதுமடை திறக்கு மல

ர்வான், மதிமுக மலர்க்கு முதம்வீழ் மணியிதழ் வளைத்த சிலைதாழ்,முரிபுருவ முத்து நகைநேர் முகிழ்முலை வளைக்கை மடவார்,முதிர்படை யெழுச்சி மதவேண் முரசதிர் முழக்க மறவே, திரிவறு தவத்தரச நீ சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (சு)

பழுதிறலை மைக்கு மணியே படுபறை முழக்கு மதுநீ, பணியென வெனைத்து நினையேல் பனைபுரை புழைக்கை யுழல்வான், மழைமத மொழுக்கு கவுணல் வளைபிறை மருப்பு வணாமேல், வருமரச னுக்கு நிறையா மதுவுறை பிலிற்று மளிவா, யுழுமல ரயற்கு மலரா ளுயிரொனு மவற்கு மிறையா, மொருமுத னடிக்கு மதனு லொருகுறை படைத்த துளதோ, செழுமுகில் கவற்று கொடையாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (எ)

மறியும்வளி யைச்சு ழூனயாம் வழியுற வியக்கி மணியாழ், வளரிசை மடுக்க நினைவார் மனவிழைவி னெட்டு மடியா, யெறியுநின் மலர்க்கை யதனு லெழுபறை முழக்க மடியே, யிருசெவி மடுக்க விழைவே மிகல்கரி முறிக்க வளையா, முறியுமலர் மொய்த்த விணர்வீ முரலளி மறித்து மருளான், முறியிடை மறத்தி யர்கடாழ் முடிசெருகு கொத்தி னிடையே, செறியுமயி லைக்கி ரியுளாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே.()

பகழிபுரை மைக்க ணளிவீழ் பனிமலர் முடித்த குழல்வார், படுமுகிழ் முலைத் திருவொடே பனிமதி நிறக் கொடியனுள், புகழ்வரை தவத்தின் வருமோர் புதல்வி செவியிற் ப

ருகுபால், புனையுமழ லைச்சொன் மணிவாய் புகலவைவள் கட்கி னியனாய், மகிழ்மக வினுக் கமையுமா மணியணி யுறுப்புற வுலாய், வருமரு மகத் தனிமைபோ யொழியமணி முத்தருவிதாழ், திகழுமயி லைக்க ணுறுவாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கியருளே.

உரைசெயு மெவற்று மெனைநேர் வுறநகர் கனத்த திலையா, லெனவுல கமிழ்த்து கடைநா ளொலிகடன் மிதக்கு நகர்வா, ழருள்வடிவ வொப்பி லுமையா ளணிமுலை கறக்கு மருளா, ரமுதமுண மிக்க விழைவா லழுதகுழ விக்கு நிகராய், வருநக ரனைத்தும் வனையா மறையிய முழக்கி யெதிர்வார், வரவர விருப்ப முறுமூர் தொறுமலி தவத்த ருடனே, திருவடி வருத்தி வருவாய் சிறுபறை முழக்கி யருளே, சிவமுனிவ கச்சி நகராய் சிறுபறை முழக்கி யருளே. (கO)

சிறுபறைப்பருவம் முற்றிற்று.

சிறுதேர்ப்பருவம்.

———:o:———

அருவடிவ மாகிமன மொழிகடந் துயர்பிரம மங்கையினு நெஞ் சகத்து, மனுகிவல் சிறைக்கொடியி னிருவிழிக் கொருமணி யமர்ந்ததென நின்ற நிலையைக், குருவடிவு கொண்டுணர்த் துறுகுணக் குன்றமே கோடிமா தவர் குழுகியே, குற்றேவல் செய்தரு கிருந்துநின் றிருவுளக் குறிப்பின்வழி யொழுகி நிற்பக், கருவடிவ நிலையென்று செய்யாத கொலைகளவு கட்காம மேபயிலும் வெங், கயவர்தமை யுற

வுகொண் டொழியாத வென்றனைக் கடிதி னருகுற வழைத் துத், திருவடிகள் புன்றலைக் கணிசெய்த வருளாள சிறுதே ருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டி யருளே. (க)

தகரமலர் வார்குழற் பவளவாய் மடமாதர் தடநெடுங் கண்க ளென்னத்,தாவுமறி கிடைகிடந் திடுபெருங் கொல்லை யைத் தண்டிரை சுருட்டி யெறியு,மகரமனை யுண்டதிர்த் தெ ழுகமஞ் சூன்மழை மாரியென வந்து பிளிறும், வளைமருப் புழல்செவிப் புகர்முகச் சிறுகணல் வலிவேழ மத நனைப்பப், பகரலரு மெறுழ்வலிப் பிறைமருப் பொருகரும் பன்றியது கண்டு செவ்விப், பதமென்ன வுழவண்ட முகடுதொடு நெடிய முதிர் பணைதரள விதை விதைக்குஞ், சிகரமணி மயிலைமலை முருகனுட னமருமிறை சிறுதே ருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டியருளே(உ)

யாவர்யா வருமெழுங் கனவிருள் விழுங்குமோ ரிரவி யைத் தத்த மக்கிங், கெதிரொன்று புகல்கினற தென்னவிவ் வுலகில்வரும் யாவருந் தத்த மக்கு, மேவுமா ரருளுடைய னென்னவரு மவிரோதி விரிசுடர் விளக்கொன்று தான், வி ழையவொரு கம்பத்து மிசையிருந் தகமெலாம் விரிகதிர் ப ரப்பு மதுபோ, லோவிலா வண்புகழ்க் கதிரொளியை வெ ண்டிரைய வோதையங் கட லுடுத்த, வுலகெலா மொருமயி லை வரையிருந் தொளிர்விக்கு மொருவமா முத றடிந்த, தே வர்சே னபதியொ டுற்றிருந் தெனையாளி சிறுதே ருருட்டிய ருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ரு ருட்டி யருளே. (ங)

போரொன்று வஞ்சமன வெஞ்சொற் கொடுந்தகுவர் புரமொன் றிரண்டுமொருதன், பொருவென்ற வஞ்செழுத் தோதுமவர் வினைநிலைமை போல்வதற் கேகு மருளால், வா ரொன்று குங்குமக் கொங்கையங் திருமாது மனை யடைத் துந் திறந்தும், வந்துலா வருமிரண் டாழியும் பொய்யாத வாய்மைநன் னெறி யந்தணர், நேரொன்று நெஞ்சவஞ் சாலைதனி லகலாது நிற்குமா வீரிரண்டு, நிரையிதழ்த் தாமரைத் தவிசினுறை யொருபாகு நிகழ்வுற்று மேவுறு பெருந்,தே ரொன்று கொண்டவிறை யுளமகிழ வெம்மைய சிறுதே ருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டி யருளே. (ச)

குன்றலரு மருளாள னென்றமொழி நிற்குறிக் கொண்டுசெல் கின்ற தெனவுங், குறித்தொருவர் பாலென்ற வளலிலம் மொழிசென்று கோவமுதி னேர்த லெனவு, நன்றினிய பழமென்ற வளவினெட் டிலைவாழை நற்கனியி னெய்த லெனவு, நாடரும் பிள்ளையென் கின்றமொழி யாண்மகவி னண்ணுமா றெனவு மீச, னென்றளவின் விடமெழுந் திடநடு நடுங்கிநிலை யின்றியிரி தரு தேவரை, யெய்தாமன் மணிகண் டனைப்பொருந் துதலெனவு மிவணகர மென்பது தனைச், சென்றடையு மொருபெருங் கச்சிநக ராளிநீ சிறுதேருருட்டி யருளே, சிவசமய குலதிலக சிவஞான மாமுனிவ சிறுதே ருருட்டி யருளே. (ரு)

வேறு.

கருத்திற் காண்குறு நாடிகண் மூன்றையுங் கண்டுநன் னடுநாடி, கலந்தி யங்குறு முயிர்க்கழி விலையெனக் காட்டி

நோ யினர்நெஞ்சந், திருத்திக் கைப்புவிட் டருமறைப் பாலொடு தீஙிறப் பெருமுக்கட், டஞ்சு வைக்கனி தன்னையுட் கொள்கெனத் தெருட்டுபு முனங்கூட்டு,மருத்துப் பையினைச் சோதித்து வெண்பொடி மருந்தெடுத் துடல்பூசி, மணியணிந் தரு ளஞ்செழுத் தாகிய மந்திரம் பிறழாம, லுரைத்திட் டோம்புறும் பவப்பிணி மருத்துவ னுருட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரோ. ()

வண்டமிழ்ப் பெரும் புலவர்தஞ் செய்யுளின் வழூப்ப டாச்சொல்லோடும், வழூவ மைத்தசொற் புணர்த்திடு மா றென வயங்கிள மதிசூடி, தொண்டு பட்டிடு மயறபு நன் னெறித் தொழும்பின ரொடுகூடச், சுளிவு முதடி யேன்ற னைத் தழுவியே தொல்லிசைப் புலவோர்தந், தண்ட மிழ்த் தொடை புணர்க்கிலா முழுவழுத் தாழ்ந்தபுன் சொற்போ லச், சங்க ரன்றிருத் தொண்டில்வெற் றுலகரைச் சார்வற வரைந்திட்ட, வொண்ட ரைத்தனி முகமெனுங் கச்சிய னுரு ட்டுக சிறுதேரோ, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட் டுக சிறுதேரோ. (எ)

வம்பு லாமலர்ப் பொழிலிடை யுடைந்துகு மாங்கனிச் சாறோடும், வண்டு மூங்கடி மலர்முறுக் கவிழ்ந்துபெய் மது ப்பெயர்ப் பெருவெள்ள, மம்பொன் மாமணிப் பூணிள முகி ண்முலை யரிமதர் மழைக்கட்கே, ழரிச்சி லம்படி மாதரோ டெழின்மத ஞடுறு முதிர்வேனில், பம்பு வான்றிரை யாண ர்த்தண் புனலெனப் பாய்ந்துபா லியாற்றோடிப், பரவை தன்கரு நிறந்திரிந் துப்பறப் பரந்துறும் விழவானு, மும்பர்

போற்றிசெய் காஞ்சிமா நகரின னுருட்டுக சிறுதேரே, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரே. ()

திலக வாணுதற் பவளவாய் மலைமக டிரண்முலைத் தடந்தோயுஞ், செஞ்ச டைப்பெரு மான்விளை யாட்டயர் செழுமலர்ப் பொழிற்கூடற், பலகை மீதுமுன் னுயர்த்துள செந்தமிழ்ப் பழமலர்த் தொடைவீழ்ந்து, படிந்தெ ழாதிருந் துறுபொருட் சுவைநறுப் பருகுறு பெருங்கல்விப், புலவர் தூய்மன மெனுங்களி வண்டினம் புக்கிருந் தொருங்குண்ணப், புனைந்த விக்கொடுந் தமிழ்ப்புகர்ச் செம்மொழிப் புதுமலர்த் தொடையார, முலகெலாம்புகழ் திண்புயத் தணிபவ னுருட்டுக சிறுதேரே, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரே. (கூ)

வந்து நம்புகழ் பாடுநர் தமையெலா மருவுடம் பிறுதிக்கண், மாசற் றெங்கணு நிறைசிவ மாக்கியே வைத்திடுஞ் செயலன்றி, நந்து கின்றவோர் பதத்தினுண் மறுமையி னணுகுறும் படியுய்த்த, னமக்க டாதென விம்மையே வண்டிமிர் நணைகவுட் பகையாற்றல், சிந்தும் வன்மருப் பெறுழ்வலிப் புகர்முகச் சிறுவிழிப் பெருவேழச், செல்வ விந்திர னுக்குத லுடையவண் செழுமணித் தரளங்க, ளுந்தும் வெள்ளருவித்திரு மயிலைய னுருட்டுக சிறுதேரே, யுலக வாஞ்சிவ ஞானமா முனிவர னுருட்டுக சிறுதேரே. (கo)

சிறுதேர்ப்பருவம் முற்றிற்று.

பிள்ளைத்தமிழ் முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

சிவஞானபாலையதேசிகர்

கலம்பகம்.

காப்பு. நேரிசைவெண்பா.

சித்திதருங் கச்சிச் சிவஞான தேசிகன்மேற்
பத்திதரும் பல்வகைய பாட்டுதவு - மத்தி
யலங்கலா வானை யடுத்தபிடி யீன்ற
விலங்கலா வானை விரைந்து.

மயங்கிசைக்கொச்சகக்கலிப்பா.

நீர்தாங்கு சடாமவுலி நெடுங்கயிலைக் கிரியாகப்
பார்தாங்கு வரையெல்லாம் பனிக்கலைவெண் மதியாகக்
காய்கதிர்மான் றேரிரவி கடலமுதந் தானகப்
பாய்திரைவார் கடல்யாவும் பண்ணவர்கோன் பகடாக
ஞாலத்த களிறனைத்து நகைமணிப்பாம் பிறையாக
வாலத்த பணிமுழுது மாக்குபெரும் புகழுடையோய்.

இது ஆறடித்தரவு.

தன்னிலையு மெதிர்காட்டாத் தமமாகு மாணவநோய்
நின்னையல தெஞ்ஞான்று நீங்குவது தானன்றே
துன்னிருள்வாய்முழங்குதிரைச்சுருட்டுகடன்முகட்டெழுந்த
மன்னுகதி ராலன்றி மற்றொன்றான் மாயுமோ.

தத்துவமாந் திரையெழுந்த தனிமாலயப் பெருங்கடலுன்
மெய்த்ததாட் புணையன்றி வேறொன்றுற் கடப்பரிதே
மைத்திரைவார் கடலியன்ற மரக்கலங்கொண் டன்றுபோ
யித்தரைவாழ் மனிதர்கடந் தேறுவதற் கொன்றுண்டோ.

பழியிலா வறங்கள்பல பயின்றாலு முன்றிருவாய்
மொழியினா லன்றிவான் முத்திநிலை கிடையாதே
விழியினா லலதுலகின் மேவுமுருப் பிறிதுபொறி
வழியினா லெதிர்காணு மனிதர்தா முளர்கொலோ.

இவைமூன்றும் நான்கடித்தாழிசை.

கொடுமிடி கெடவடு கொடைபடு நடையினை
சடையொடு நதிபணி தவழ்மதி யொருவினை.

மறையறை முறையற மறமற வருளினை
பொறிநெறி மறுகுறு புலனிலை யலகிலை.

யரிகரி பகையிகு மணிமணி மயிலையை
வரியரி மதர்விழி மலைமக ணகரினை.

இவைமூன்றும் ஈரடியராகம்.

முன்னாளி லொருஞான முனையயின்ற வாரமுத
மெந்நாளு முண்கின்ற யாரோநின் னளவறிவார்.

நவத்தமிழ்வே தம்புகலு நன்மொழியிங் குண்மைபெறத்
தவத்தொடுதா னஞ்செயுமோர் தன்மையுனக் கலதுண்டோ
மெய்யிலே பொய்தோன்றி மெய்யாக மயக்குறுமப்
பொய்யிலே பொய்தோன்றப் புகலுமுனைப் புகல்வார்யார்.

இருப்பம்பு பட்டுருவ வெய்தாலுந் தளராமற்
கருப்பம்பு படாவண்ணங் காப்பவர்க்குத் துணைநீயே.

கருமேனி யொழிந்தடியேங் கதிகாண நீயருளாற்
றிருமேனி கொண்டிருந் து செய்ந்நன்றி மறப்பேமோ.

தவப்பிணிக்கு மூலமலந் தான்மூல மாய்க்கிளைக்கும்
பவப்பிணிக்கு மருந்துன து பார்வையே தானன்றே.

இவையாறும் ஈரடித்தாழிசை.

வாத மாற்று நீ, போத மாற்று நீ,
வாய்மை யாக்கு நீ, தீமை போக்கு நீ.

இவைநான்கும் முச்சீரோரடியம்போதரங்கம்.

வசைகெ டுத்தனை, யிசைகொ டுத்தனை,
செயலொ ழித்தனை, மயல ழித்தனை,
யறம்வி ரித்தனை, மறமி ரித்தனை,
விழைவ றுத்தனை, பிழைபொ றுத்தனை.

இவையெட்டும் இருசீரோரடியம்போதரங்கம்.

எனவாங்கு - இது தனிச்சொல்.

நாவலர் புகழ்சிவ ஞான தேசிக
வெவ்வ மகன்ற சைவ நாயக
நின்னடிக் கமல நெஞ்சுற விருத்தி
நறுமலர் தூவி நாடொறும் பரவுதூஉஞ்
செல்வச் செருக்கிற் செவிடுபட் டிருக்குங்
காதிற் றீம்பால் கமர்கவிழ்த் தாங்கு
பாப்பல பன்முறை பாடி நின்னைப்
பாடா மாந்தர் பக்கற்
கூடா வடியரிற் கூட்டுக வெனவே.

இது ஒன்பதடிநேரிசையாசிரியச்சுரிதகம். (க)

நேரிசைவெண்பா.

வேவ மலரும் விழிகரந்த நின்னைமதன்
றேவ சிவஞான தேசிகா—மேவிலனென்
னுள்ள மறிந்த வொருநின் றிருமேனிக்
கள்ள மறிந்தனனென் கண்டு. (உ)

கட்டளைக்கலித்துறை.

கண்டே னறிவெனு மொண்சுட ரேற்றிக் கருத்தகன்மெய்த்
தண்டேயு மன்புநெய் பெய்துபொய் வாதந் தடுத்தொளிரக்
கொண்டே மலவிரு ளெல்லாந் துரந்தெங் குடிமுழுதுந்
தொண்டே யெனுமெய்ச் சிவஞான தேவன் றுணையடியே.

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடிமலர் சிவப்ப நடந்துள முனிந்த வணங்கினைக் கூட்டுதல் வேண்டா, வடியனேன் றமிழ்க்குக் கலந்துட னிருந்த வரிவையைப் பிரிவுசெய் திடுக, மிடிமலி வறிய செங்கல்பொன் னாக்கி வியப்புற வுதவுதல் வேண்டா, வெந்தெரி பசும்பொன் செங்கலாக் குகநீ வேறுனை வேண்டுவ திலையே, பொடிமறை தழல்போ லிருந்துல கினர்கட் புலப்படா னுயர்சிவ ஞானி, புவியிலென் றிருப்ப வனையன்யா னென்று பொங்கொளி யிரவிபோற் றோன்றிக், கடிநக ரொவற்றுஞ் சிறந்தபொற் புரிசைக் காஞ்சியிற் போந்தகற் பகமே, கதிர்மணிவ ரன்றி யருவிவந் திழியுங் கயிலைநேர் மயிலைகாவலனே.

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வலந்திரி கதிர்கா னுலகின ரெல்லாம் வந்துகேட் பனவிலை யெனுத, நலந்தரு மொருநீ தமியனேன் கேட்ப நான

ல திலையெனத் திருவாய், மலர்ந்துரை செய்த தென்கோ லோ வடியேன் மயிலைமால் வரைமணி விளக்கே, புலந்தெ ழுவீரர் பெருமவென்றிறைஞ்சிப் புகழ்சிவஞானதேசிகனே.

கலிவிருத்தம்.

சிகரியி னெழுதின மணியின் றேர்ப்பரிக்
கிகலிர வுளதுகொ லிருவி னைத்தொடர்
நிகரறு நினையடை நிலையி னோர்க்கிலை
நகரியி னமர்சிவ ஞான தேவனே. (௬)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேவரு முனிவர் தாமுஞ் சித்தரு மற்றை யோரு
மேவரு நிலைய ராக வினையினேற் கருள்பு ரிந்தான்
மூவரு மிறைஞ்சு ஞான முதல்வனெண் மயிலை மேவி
யாவரும் விழையும் வான மிலான்புலம் பொழியு மாறே. ()

மேற்படி வேறு.

மாறு செயுமைம் புலக்கணமே குணமே மயக்கு மாயையே, வேறு செயுமா ணவமலமே வினையே நுந்தம் விறல்காட்டித், தேறு செயுநஞ் சிவஞான தேவ னெதிர்நான் செல்வதன்முன், கூறு செயுநீர் செய்பவெலா மென்பாற் செய்து கொள்ளீரே. (அ)

மேற்படி வேறு.

கொள்ளும் வன்பவப் பிணியின ராகிய குவலயத் தவ ரெல்லா, மெள்ளும் வெந்துயர்ப் பவப்பிணி மருத்துவ னெனப்படு சிவஞான, வள்ளல் வந்துவண் மயிலைமேல் வாழ்

தலை மணிவிளக் கெனக்கண்டு, முள்ள நைந்துசென் றாக்
கிலை யொன்கொலோ வுண்டுடுத் துழல்வாரே. (கூ)

மறம். பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரா யரசன் றூதனென வந்த வொருவ யாமகந்
தை, மலையை யுடைக்குஞ் சிவஞான வள்ளன் மயிலைக் குற
வர்கா, ணேரா ரெங்கள் குலமகளை யின்று கேட்ப நினைவி
டுத்த, விறைவன் றிருக்கா ளத்தியிடை யெங்கண் மிச்சின்
மிசைந்தவனாற், சீரா ரெயிறு தாளமெனச் சிதற வடிபட்
டுழல்கின்றேன், சிறிய குலத்திற் பிறந்தவனே செந்தாண்
மலராற் றேய்ப்புண்டு, பாரா ரறிய வுடல்குன்றிப் பகற்
போ தெல்லாம் புறப்படான், பழைய குடியிற் பிறந்தவனே
பகரா யுள்ளம் வெருவேலே. (கo)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வேலுடையா னெடுமயிலை மலைமேவு சிவஞானி வினைக
டேர்க்கும், காலுடையான் புகழோடு வெள்ளிமலை நிறைநிற்
பக் கனம்போ தாமற், பாலுடையான் மிசைவைக்கப் பட்ட
ததன் மேல்வைத்தோன் பால்வெண் ணீற்றுத், தோலுடை
யா னவன்மீது வைத்ததன்றோ விளமதியஞ் சொல்லுங் கா
லே. (கக)

கலித்துறை.

காலம் போயிற் றஞ்சன மன்ன கடாமீதி
லாலம் போல்வெங் காலனு மந்தோ வணுகுற்றான்
சீலங் கேண்மி னெய்யென வோதஞ் சிவஞானி
கோலங் காணுங் கொள்கை கருத்திற் குறியீரோ. (கஉ)

கலிவிருத்தம்.

குறியுமிலை வடிவுமிலை குணமுமிலை யுரையாடவோர்
பொறியுமிலை மனமுமிலை புலனுமிலை யரிதாகநீ
செறியும்வகை யருள்செய்பொருள் சிவசமய குலதீபமாய்
மறியுமளி மலர்முரனு மயிலைவரு சிவஞானியே. (கங)

நேரிசைவெண்பா.

ஞானிபெய ரேதேனு நன்மைதரு மென்னவுஞ்செம்
மேனிபுகல் வேதம் விதித்தபெய - ரான
சிவஞானி நாமஞ் சிவஞானி யென்னு
ளவஞானி யென்ப வவன். (கச)

கட்டளைக்கலித்துறை.

அவனே யிவனென் றெனையாளு மண்ண லடியவர்தம்
பவநோ யகற்றுஞ் சிவஞான தேசிகன் பாரில்வருஞ்
சிவனே யிவனென் றுலகமெ லாந்தொழுந் தெய்வமன்றி
யெவனே தமிய னிதயா லயத்தி லிருப்பவனே. (கரு)

கலிவிருத்தம்.

இருந்து மேனியோ டிம்மை மறுமையிற்
பொருந்து போகம் புரிசிவ ஞானிநீ
விரும்பு வார்கட் கெனக்கருண் மெய்விழைந்
தருந்து மாசை யிலாமையி லாசையே. (கசு)

மடக்கு. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆசை தனைதாண் மூட்டினு னடித்திட் டமுத மூட்டினுன்
பாச விருளை யகற்றினுன் பதிசே ரறிவை யகற்றினுன்

றேசு மலியு மாகத்தன் சிவஞா னிப்பேர் மாகத்த
னேச மருவி மறியாரோ நிரயத் துயர மறியாரோ. (கஎ)

கட்டளைக்கலித்துறை.

மறிமறைத் தானு மழுமறைத் தானு மணிமிடற்றின்
குறிமறைத் தானு மதிமறைத் தானுமென் கொன்றைமலர்
வெறிமறைத் தானு மறிவே னுனைமதன் மேற்பகைமை
நெறிமறைத் தாயிலை யேசிவ ஞான நெடுந்தகையே. (கஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நெடுமடைக்கட் குடவளைசென் றடைப்பவிள வரானு ழைந்து நீர்செ லுத்துந், தடமுடைத்தண் பணைமருதக் கச்சி நகர்ச்சிவஞானத் தம்பி ரானே, படமுடிப்பார் மிசைநின து புகழ்பாடிப் பன்மலர்தூய்ப் பணிகின் றேற்குக், குடமுடைத்தா லெனப்பாசங் கெடுப்பதல்லா லெனக்குநீ கொடுப்ப தென்னே. (ககூ)

நேரிசைவெண்பா.

என்ன தவவுதவி யீதென் றுணர்கிலேன்
மன்னுசிவ ஞானமுனி வந்துற்றான் - றன்னைநிகர்
மாசங் கெடுக்கு மலர்த்தடஞ்சூழ் கச்சியிலெம்
பாசங் கெடுக்கும் படி. (உ0)

கட்டளைக்கலித்துறை.

படிக்குப் பெருஞ்செல்வ மாஞ்சிவ ஞானிமெய்ப் பத்தர்மணி, முடிக்குப் பெருஞ்செல்வ மாம்பதத் தானொடு முன்னியெங்கண், மிடிக்குப் பெருஞ்செல்வ மென்றில ரோதனா வே

ந்தரொடெங், குடிக்குப் பெருஞ்செல்வ மென்றுசென் ஞே
தூறுங் கோளர்களே. (உக)

கலிவிருத்தம்.

கோள்வலி செய்வதென் கொடிய வாகிய
நாள்வலி செய்வதெ னம்மைக் கூற்றெனு
மாள்வலி செய்வதெ னமுத பானிதன்
ருள்வலி யவைகொலுந் தண்டு தொண்டரோ. (உஉ)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

தொண்டர்நெஞ்ச வஞ்சந் தொலைக்குஞ் சிவஞானி
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணல்கா ணம்மானை
யண்டரஞ்சும் வெள்ளிமலை யண்ணலே யாமாகிற்
கண்டநஞ்சங் கண்டிலநங் கண்ணினு லம்மானை
காணு மயிலைவரைக் கண்டக்கா லம்மானை. (உ௩)

கலிவிருத்தம்.

அம்மா சிவஞா னியடிக் கமல
மும்மா யைகடந் துமுயங் குமது
சும்மா தலைமீ துசுமத் தினுற்
கைம்மா முளதோ கடையே னிடையே. (உச)

நேரிசைவெண்பா.

இடையினமே போல விரண்டறமு மல்லா
நடையினமே நாமயிலை ஞானி—புடையினமே
சார்வாகா தோடித் தடுமாறு கின்றமையாற்
றீர்வாகா மாயைச் செயல். (உரு)

காலம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செயலெலா மறமாகச் செய்யுங் காலந் திகழ்வெலாம் பொய்யாகத் திகழுங் கால, மயலெலா முறவாகி யமையுங் கால மறிவெலாந் தனையறிய வணையுங்கால,மயலெலா மொழிந் துபர வசமாங் கால மனமெலாம் பேரன்பு மயமாங் கால, மியலெலாம் பிறப்பொழிய வெடுக்குங் கால மெங்கள் சிவ ஞானியரு ளிசையுங் காலம். (உசு)

கட்டளைக்கலித்துறை.

காலுண்டு வாழு முனிவரு முள்ளங் கலங்குநஞ்ச
மேலுண்டு நஞ்சைய னும்பழி மாறவெல் வீரவனை
மாலுண் டுமிழு முலகமெ லாஞ்சொன் மயிலைவெற்பிற்
பாலுண்டு பாலைய னென்றிருந் தாய்கொலெம் பாலையனே()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஐய மயிலைச் சிவஞானி யந்தோ நம்மாற் செயப்பட்ட
வுய்ய வரிய பாதகங்கட் கொழிக்கு முபாய மிலையென்று
நையு மனிதர் நினதுதிரு நாமத் தெழுவா யெழுத்திரண்டும்
பைய வொருகா லியம்பியுய்யப் பற்றார் துயரி னுற்றாரோ. ()

கலிவிருத்தம்.

உற்பவ நிற்ப தொடுக்க மளிக்குஞ்
சிற்பரன் மெய்ச்சிவ ஞானி திருக்கை
நற்பிர சாத மலர்ப்பத நம்பாற்
சொற்பெறு மூவர் தொழிற்புண ராவே. (உக)

கட்டளைக்கலித்துறை.

வேதந் தெளிந்தநின் செவ்வாய் மொழிநின் விரைமலர்ப்பூம்
பாதம் படுதுக ளெங்குல தேவதை பார்வையெங்கள்
சாதங் களையு மருந்துநின் னுமந் தனிக்குடிலை
நாதன் கயிலை சிவஞானி நீயமர் நல்லிடமே. (நூ0)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நல்ல புலவர் பழிச்சுசிவ ஞானி யெனுமோர் நாமமுறு,
மல்லன் மயிலை மலையனைவே றொருவ னுகமதிக்கிலேன்,மெ
ல்ல வொருபூ வீசுதன்முன் வேளை யெரித்த தான்வெகுளி,
யில்ல னெனினும் பொறையுளன்போற் றோன்று னெனினு
ம் யான்றுனே. (நூக)

நேரிசைவெண்பா.

யானென தென்னு மிவைகழன்று வந்துசிவ
ஞான குருவை நணுகிலா—மானுடர்தம்
பொல்லாப் பிறவிநோய் போமோ வரினுநிலத்
தெல்லாக் கடவுளரு மின்று. (நூஉ)

வண்டுவிடுதூது. இன்னிசைக்கொச்சகக்கலிப்பா.

இன்றுபிழை யொன்று மியற்று வெணைமுனிந்து
நின்று சிறிதுமரு ணெஞ்சுறு வின்மதனைக்
கொன்றுவிடு லில்லைக் கொலைப்பாவ மென்றளிகாள்
சென்றுபுக லீர்நஞ் சிவஞான தேசிகர்க்கே. (நூநூ)

கலிவிருத்தம்.

கேடு தீர்மயி லைக்கிரி ஞானியைத்
தேடு வார்சிலர் செய்யுங் கருமியை

நாடு வார்பலர் நன்மணி யோகடைக்
கோடு வீழ்மணி யோபலர் கொள்வதே. (௩௪)

சித்து. அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளிபோன் மணித்தலைநா கங்கிடக்கு மயிலைமலைக் குகையில் வாழுந், தெள்ளுவா னமுதனைய சிவஞானி பதம் பரவுஞ் சித்தர் நாங்கா, ணள்ளியோர் பிடிசோறு தரிற்பத் தா நாழுனக்கிங் கையமின்றி, வெள்ளிதான் வருவதன் முன் பொன்னுக்கு வோமிதுநம் வித்தை தானே. (௩௫)

நேரிசைவெண்பா.

வித்தை சிவஞானி வித்தையே காண்பவெலா
மித்தையென நின்று விளம்பியே—சத்தியமாய்
நாட்டினு னீதானு நானே யெனப்புகன்று
காட்டினன் றன்னையே காண். (௩௬)

ஊசல். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காண்டகைய விமிழிசைவெள் ளருவி தூங்குங் கவின்மயிலைச் சிவஞான தேவன் கூறு, மாண்டகுநன் மொழிகேளா வாவி பாவ வல்வினையு நல்வினையு நின்று தள்ள, மீண்டுதுயர் நிரயமொடு துறக்க மேவி மெலிவதிவ்வா றெனத்திரிந்து காட்டல் போலத், தூண்டுசுடர் விளக்கனையீ ரிருமருங்குர் தோழியர்க ணின்றூட்ட வாடீ ரூசல். (௩௭)

தாழிசை.

ஊசலாடுறு நெஞ்சொடும்பிட ருற்றவெற்றிகொள் காலனை, யுணர்ந்திலேன்பய மற்றுவேண்டிய துண்டுடுத்துழன்

ஞெண்மலர், வாசமார்குழல் மாதரார்செயு மாலின்மூழ்கின னத்துயர், மாறுமாறு நினைந்திலேனெரி வாய்தலிற்படு மனையின்வாய், தூசுலாமணை மீதுவாள்விழி துஞ்சவீழ்பவர் போலவே, தொண்டர்தந்துயர் கண்டிராது துடைக்குறுஞ்சிவஞானிநீ, யாசுதீரருண் மிகுதிகாணிய வஞ்சலென்றருள் செய்தியோ, வருண்மறைத்து விடுத்தியோசொ லறிந்திலேன் றிரு வுள்ளமே. (௩அ)

அறுசீர்க்கழிநெடி லடியாசிரியவிருத்தம்.

உள்ளதன் பொருள ளிக்கு முயர்சிவ ஞான தேவன்
றெள்ளும்வண் புகழுங் காமற் றெறுபிர தாப முந்தாம்
வெள்ளைநன் மதியுஞ் செங்கேழ் வெய்யவன் றுனு மாகி
யெள்ளவந்தெதிர்வ துண்டோவெனவெழுந் துலாவுமன்றே.

மேற்படி வேறு.

அன்றெடுத்து மலைகுழைத்துப் புரமெரித்த புகழல்லா லளற்றுழ் வேணை, நின்றெடுத்து மனங்குழைத்து வினையெரித்த நின்புகழை நிகழ்த்தல் செய்யார், குன்றெடுத்த புகழிருப்பச் சிறுசிலையொன் றெடுத்தபுகழ் கூறல் போன்மான்,கன்றெடுத்த கரமறைத்துச் சிவஞானிப் பெயர்படைத்த கருணைக் குன்றே. (௪௦)

தவம். கட்டளைக்கலித்துறை.

குன்று மறையுள் விபூதியென் றேசொலுங் கூற்றினுக்குப்
பொன்றுத செல்வ மெனப்பொருள் கூறும்வன் பூசுரருந்
தன்று மனைமலர்க் கைந்நீறு சாற்றத் தவம்புரிவ
ரொன்று லெவர்சிவ ஞானிதன் மேன்மை யிசைப்பவரோ. (௪௧)

புயவகுப்பு.

இசைபோகி மாழ்கமத னம்பைக் கடிந்தன
  விளநாக வீருரியொ டென்பைத் துரந்தன
வசைபோகு மாரநிகர் கண்டிக் கிசைந்தன
  மகமேரு வாதிவரை யஞ்சக் கிளர்ந்தன
நசைபோகு மாதவர்க டுன்பைத் துரந்தன
  நயநிறு தேய்வையென விஞ்சத் திமிர்ந்தன
திசைபோகு தூயதமிழ் தங்கப் புனைந்தன
  சிவஞான தேசிகர்தம் வென்றிப் புயங்களே. (சுஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புயன்மறையா மயிலைமலைச் சிவஞானி நீயேயெம் பொருளிற் கொண்ட, செயன்மறையா விளவேறு கரந்தவன்யா னலனென்னிற் றெளியச் சொல்வே, மயன்மறையா நின்னடிகண் டனமார வாரங்க ளாகா துன்ற, னியன்மறையா துரைசெய்தி செய்திலையே லலர்தூற்ற விளைக்கி லேமே. ()

மேற்படி வேறு.

இளைக்கு மிடியற் குறுபொருளா மிறைவற் கரசாங் கூற்றுவனை, விளிக்கும் பிணிக்கு மருந்தாகும் விடத்திற் கருஞ்சீர்க் கலுழனும், வளைக்கும் பகைக்குப் படையாகு மலடர்க் கரிய மகவாகுந், திளைக்குங் கருணைச் சிவஞான தேவன் றிருக்கைத் திருநீறே. (சுச)

நேரிசைவெண்பா.

நீறுவாய் கோலவினை நெஞ்சமே நெஞ்சமவற்
கூறுநா வேமாற்றங் கூறுநா—பாறுவீழ்

வேல்பிடிக்குஞ் செவ்வேள் வியன்மயிலை ஞான்மலர்க்
கால்பிடிக்குங் கைகளே கை. (சரு)

நேரிசையாசிரியப்பா.

கைகமழ் நறிய கறியொடு படூஉ
மென்மைவெள் ளடிசி லின்மை மாந்தி
விலைவரம் பறியா மென்றுகி லின்மை
நாடொறு முடுத்து நகைமணிப் பசும்பொற்
பூண்டன தின்மை காண்டகப் புனைந்து
திண்குற டுரிஞ்சுஞ் செழுஞ்சாந் தின்மை
பூசிப் பொன்மலி புரிசை மாடத்
தின்மையின் மலர்ப்பூம் பள்ளி யின்மையிற்
கருங்கட் செவ்வாய் வெண்ணகைப் பசுந்தொடி
யிளமுலை மாத ரின்மையொடு தழீஇ
வாழா நின்றநின் வண்புகழ் பாடு
நல்லிசைப் புலவர் நற்பொரு ளின்மை
கண்டது பொருஅ கவலைகூர்ந் தழிக்கு
நின்னை யென்னோ நிலமிசை மாந்த
ரழுக்கா றிலனென வழுக்கா தறைகுவர்
தவப்பல விடர்செய் பவப்பிணி மருத்துவ
கலங்குறு தன்மைப் புலந்தெறு வீர
வடியார் கொள்ள மிடியாச் செல்வ
நானிலம் புகழ்சிவ ஞான தேவ
வடியே மருளா தறிதரக் கூறுதி
யென்றவன் றனையே யாம்வினு யறிகுது

‡ நங்கண் களிப்ப நண்ணு மாயி
னணியென விறங்குவெள் ளருவி
மணிமலி மயிலை மலைகிழ வோனே. (சகு)

கட்டளைக்கலித்துறை.

கிழவி யெனுமிக் கிரிராச கன்னிகை கெண்டையங்க
ணழகி மலனைத் தழூஉ ரமர்ந்த வமுதமுனி
தொழவி கலமி லுயர்ஞானங் கூறுஞ் சுடரிலைவேற்
குழவி தனினு முனையே விரும்புங் குடமுனியே. (சஎ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

குடக்கெனப்படாக்குணக்குங் குணக்கெனப்படாக்குடக்கும்
வடக்கெனப் படாத தெற்குந் தெற்கெனப் படாவ டக்கு
நடக்குமெய்ப் புகழ்மா கச்சி நகர்ச்சிவ ஞான தேவே
படைக்குமப் பெரியோன் றன்னைப் பரவுவார் பரவு வாரே.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரம யோகி யென்றுடம்பிற் பாதி யொருத்தி கொளக் கொடுத்துப், பகர்வுற் றறநன் மகனையடும் பாதகத்திற் குடன்படுத்தித், தருமி தானென் றெருதேறிச் சாந்த னென்று புரமெரித்துத், தம்பி ரானென் றொருவற்குச் சந்து மகளிர் பானடந்து, பெருமை யாள னென்றுபோய்ப் பேய்க்கூத் தாடிச் சின்மயனும், பெயர்பெற் றவையி னம்பியாற் பித்த னாகிப் புனிதனெனுஞ், சிரமு மாலை யென்புமரீஇத் திரிந்த மு

‡ இப்பிரபந்தம் ஆசிரியரயிக்கமுற்றபின்னர் அருளிச்செய்த தாகலின் "நங்கண்களிப்ப நண்ணுமாயின் யாம் வினையறி குதும்" என்று ஆற்றுமையால் விதந்துரைக்கப் பட்டது.

ரண்கொள் செயலெல்லாந், தீர்வான் வந்த சிவஞான தேவ
ற் கிலையொப் பாவாரோ. (சுக)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாரியங் கணாயீர் வாளிலைக் கைதை மலரெனத் தோ
ன்றுவர் சிலர்தா, மதுரவீர்ங் கரும்பின் மலரெனச் சிலர்தா
ம் வருவர்நீ கற்பக மலர்போற், காரியங் களத்த னடஞ்செ
ய்தா மரையின் கழமொலி யாவுமூர் போகி, கண்களாற் க
ண்டு கேட்குமூர்ப் பச்சைக் கந்தமா முனிகரத் துதித்தாய்,
வேரியங் கமலத் தாளிமை மருங்குன் மெல்லியற் பெண்
ணொரு கம்ப, மேவுற விருமா தங்கமுங் கட்டி விடாதமர்
நகர்கணு யகமும், பாரினன் முகமா மிக்கணா முனிந்த பர
ன்றிரு வக்கணா நகரும், பயிலிட மெனக்கொண் மயிலைவா
ழமுத பானமார் ஞானமா தவனே. (ரு0)

கட்டளைக்கலித்துறை.

தடங்கட லீர்முகந் தாங்குப் பொழியினுந் தண்விசும்பு
நெடுங்கட னீர்மை பெறல்போல வேதங்க ணீறுதொட்டு
நடுங்கிடு மாறில் சிவஞான தேசிக னல்கினுமோர்
படங்கிடை ஞால முடையார் பெறுகுவர் பாக்கியமே.(ருக)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாக்கியமும் பாலுமுமை புகட்டியமெய்ஞ் ஞானப்
பாலனீ யளவிறந்த சிவபெருமா னடியார்க்
காக்கியிடல் கருதியே யுருத்திரபல் கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ வெனத்தன்

ராக்கினிடை யுரைசெய்தா னென்றேயென் றனக்குத்
தோன்றுகின்ற துலகில்வே ஞெருவரிலா மையினுற்
சீர்க்கவிஞர் புகழ்மயிலை மால்வரையின் விளக்கே
சிவஞான தேவனெனச் சிறந்தவருட் கடலே. (௫௨)

நேரிசைவெண்பா.

கடலுலக மேத்துங் கருணைமலை மாயை
நடலை தபுமயிலை ஞானி—விடலரிய
நல்வினத்தை நண்ணு நணுகுமுட லாமுதலூர்
மெல்லினத்து ளாதிநிலை மெய். (௫௩)

களி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மெய்த்தவறு சமயங்கட் கிறைவ ஞகி
விளங்குசிவ ஞானகுரு வாம மென்னுஞ்
சத்திசம யத்தினுக்குக் கள்ளு மூனுந்
தகுமெனமான் மதுகைவிடா ஞகி நின்முன்
புத்தலரி யயன்கரகங் கொண்டு வந்தான்
புராரியுழை யைங்கரன்பே ரெலிகைக் கொண்டார்
நெய்த்தவடி வேன்முருகன் சேவல் கொண்டா
னிலவினனோர் முயன்முழுதும் விழுங்கி னனே. (௫௪)

தழை. கலித்துறை.

விழுங்குவள் போலது கொண்டற லோதியின் மேல்வைத்
ளழுந்துற வாள்விழி யொத்தின டேமொழி யன்பாநின் [தா
செழுந்தழை பட்டது நஞ்சிவ ஞானி திருத்தாள்கள்
பழம்படு நெஞ்சுடை யார்கரம் வந்து படும்பாடே. (௫௫)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பாடு வாரிசை யறியு மியாவுமூர் பணியு நல்லிய லம்ப லத்துநின், ருடு வாரறி வார்கொ லோவறி யார்கொ லோ வெனப் பாடு வார்கொளத், தோடு வார்செவி நல்கி னுயர் சூலி நஞ்சிவ ஞானி நீபடை, வீடு வார்செவி யாக நல்கினை விலகி நல்லியற் புலவர் கொள்ளவே. (ருசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொள்ளு முண்டி பகுத்துண்டு பெருஞ்சீர் கொண்டா னின்குரவன், கள்ளும் வண்டு மருமலர்ப்பூம் புலியூர்ப் பச் சைக் கந்தமுனி, தெள்ளு மிருஞ்சீர் நீபகுத்திட் டுண்ணு து ற்ருய் சிவஞானி, துள்ளு மருந்தா யினுங்கன்று சொல்லா ரோசொ னல்லாரோ. (ருஎ)

கட்டளைக்கலித்துறை.

நல்லா ரவன்சொல்வ தெல்லாம்பொய் யென்பவர் நன் மையிலாப், பொல்லா ரவனைமெய் யாளனென் பார்மெய்ப் பொருளுணர்ந்த, வல்லார் மயிலைச் சிவஞானி யைச்சொல வாய்திறவார், கல்லா ரவனியல் சொல்வமென் றேபல கற் றவரோ. (ருஅ)

கலிவிருத்தம்.

கற்றவேத முற்றுமாயை கழலுமீச னேபதி
சொற்றசைவர் கட்கெனச்சொல் சொல்லுமாவி யேபர
முற்றும்வைதி கர்க்கெனச்சொன் மொழியுமாறு மாறுநா
முற்றமயிலை ஞானதேவ னெருசொலுண்மை சொல்லவே.

தாழிசை.

சொல்லருங்கயி லைத்தணந்தனை துன்னுநீவிட குணமுமூ ர், சுடல்செய்சாபமு மின்றியேசம ஞேக்கமெய்தினை தோ லுடை, பல்லெலும்பணி கோலமேவினை பாதியானென ன் மாறினை, பணிகள்யாவுமு ருதகன்றனை பாணிசென்னிசு மக்கிலை, வில்லிருந்தத ழூம்பொழிந்தனை மீளநஞ்சமி ரிந்த னை, விரைந்துசோறிடு மனையைநல்கென வேண்டுமாறு மற ந்தனை, கொல்லிரும்பர சினைவிடுத்தனை குறைவிலாமதி மே வினை, கோதறுஞ்சிவ ஞானியேயருள் கூருஞானவி நோ தனே. (கூ0)

கட்டளைக்கலித்துறை.

வினையே னெனினுங் கொடியே னெனினும் விதிவிலக்கு
நினையே னெனினு மியானே யறங்களி னின்றுடையே
னனையே யனைய சிவஞான தேவ னருண்மிகுதி
யெனையே யடைதலி னுலைய மேது மிதற்கிலையே. (கூக)

நேரிசைவெண்பா.

இல்லாமை யில்லாமை யெய்தலா நூன்முழுதுங்
கல்லாமை கல்லாமை கற்கலாம் - வல்லான்
சிவஞான தேவன் றிருவடியைப் போற்றத்
தவஞான முண்டாயிற் றுன். (கூஉ)

வஞ்சித்துறை.

தானி யேசிவ, ஞானி யேயெனுன்
மேனி யோடபி, மானி யாருமே. (கூங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மேவரு மெய்ச்சிவ ஞானி திருப்புகழ் மேன்மை யிசைத்திடுநாண், மாவுர கர்க்கிறை தானெளிர் பைத்தலை மானவசைக்குமதாற், பூவசை வுற்றிடு மாலென மட்டவிழ் பூமிசை யுற்றிடுவான், பாவின் வியப்புறு மேரு முதற்கிரி பாரமியற்றினனே. (௬௪)

நேரிசைவெண்பா.

பாரார் விசும்புளார் பாதாளத் தார்பரவுஞ்
சீரார் சிவஞான தேசிகா - தீரா
வறவா நினைக்கி னடியேன் பொருட்டுப்
பிறவா தினக்குப் பிறப்பு. (௬௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பிறந்தான் மேலு மிடிதீர்நோய் தீரொன் றெமைப்பின் றொடர்வனென, வறிந்தாய் போலுஞ் செம்பவளத் திருவாய் மலர்ந்தென் னகந்திருத்தி, யிறந்தார் ஞால மிசைப்பிறவா முதுகுன் றகலா தெனைவைத்தாய், சிறந்தார் வாய்மைச் சிவஞானிப் பேரோய் தீராச் சீரோயே. (௬௬)

நேரிசையாசிரியப்பா.

சீர்வளர் குவவுத் திண்டோண் மாருதி
யுயிர்தரு மருந்தொன் றுறுதற் பொருட்டு
முழுமணி கொழிக்கு முகங்கவி ழருவிக்
குன்றமொன் றெடுத்த கொள்கை போலக்

சொற்றிறம் விரித்த சுடர்மணிச் செழுஞ்சூட்
டுரக வேந்த னொருதலை தரிப்பக்
காதல் கூர்ந்து கண்ணகன் ஞால
முச்சிக் கொண்ட கச்சிப் பதியு
மெறும்பியுயிர் நீங்கி லெறும்பி யீருரி
போர்த்துப் போகும் புராதன மலையு
மான்பாற் கன்றி யளவில்பல் கறிக்கு
மின்சுவை விளையு மென்சே யூருங்
கயிலைபோற் சிறந்த மயிலைமால் வரையு
மிடங்கொண் டிருந்த வெங்க ணாயக
னரன்றிருத் தொண்டர்க் கன்னை போல்வான்
புகழுநர்க் கடங்காப் புகழுடைப் பெருந்தகை
யுலகா யதனுக் கிலகா யுதமா
யணுமத மோரணு வாகத் துரந்து
விசேட மதத்தின் விசேட நீக்கிக்
காலவா திக்கோர் கால னாகிக்
குருமத நொய்தெனக் கூறி மாற்றிப்
பஞ்ச ராத்திரிக் கஞ்சு பகலாய்ச்
சைவப் பயிர்க்குத் தண்முகி லானோ
னுந்தொழ வருள்சிவ ஞான தேவன்
சமய வாதிக டம்மத நிறுவத்
தகர்போல் வாதிற் றுக்குத னெக்கிச்
சிரித்துளங் களிக்குஞ் சிவா நு பூதியின்
மாண்டிட வெம்மை வைத்தனன்
வேண்டிய செய்கவவ் வீணர் தாமே. (௬எ)

பிச்சியார். கலித்துறை.

தாமே மனிதர் தமதா மயிலைத் தனிஞானி
பூமேன் மனிதக் கோல மடைந்து புறப்பட்டான்
மாமேன் மையரா கியமா தவர்தவம் வௌவற்குக்
கோமே தகமே நீதவ வேடங் கொண்டாயே. (சுஅ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டசிலை மரமுதலா யினதமைத்தாஞ் சிவமெனவே குறிக்க மாட்டா, ரண்டர்முத லாயினோர் பாவிக்கப் படுமயிலை யமர்ந்திட் டெம்மைத், தொண்டுகொளுஞ் சிவஞானி தனைத்தானே சிவோகமெனத் துணிந்து கொண்டு, பண்டைநரர் பவமுழுதுந் தொலைத்திடுவ னியாரதிகம் பார்த்திடுரோ. (சுகூ)

பாண். நேரிசைவெண்பா.

பார்த்திடுவ னீலகண்ட பாணனு ராகநினைத்
தீர்த்தன் சிவஞான தேசிகன்சீ - ரேத்திவரிற்
பாணு நினைச்சாதி பாராட்டு வேன்பிறர்சீர்
நாணு துரைத்துறலா னுன். (எo)

கட்டளைக்கலித்துறை.

நானே சசிவன் னனிற்பெரி யேனவன் ஞானிதனைத்
தானே யடைந்தில னுன்றிருக் காஞ்சியிற் றண்மலர்ப்பூந்
தேனே யனைய சிவஞான தேவனைச் சேர்ந்திமைப்பி
லூனே யுயிரோ யெனுமிவை வேறுபட் டுய்ந்தனனே. (எக)

நேரிசைவெண்பா.

உன்னைச் சிறையிட் டுளானெஞ் சிவஞானி
தன்னைப் பணிவினவித் தான்செய்வ - னென்னைப்
படைப்பேன் கிடைப்பேனென் றெண்ணாதே பாவி
யடைப்பேன் கமலா லயா. (எ௨)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆலய மெனக்கொண் டெம்மனத் தமர்ந்த வருட்சிவ ஞானதே சிகவெம், பாலைய மலர்க்கண் ணிரண்டுடை யாய்க் குப் பார்வைமூன் றுளனெனப் படுவோன், மேலவ னென்ணி லவற்குநா லிருகண் விண்ணவ னுயர்ந்தவ னவற்குச், சாலவு மதிக னவனு யிரங்கட் டவளமார் கவளவா ரணனே()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வார ணாசி சிதம்பர மங்கல மாதை வீழிபுகார்
ஓர ணாமலை யம்பர் வலஞ்சுழி சேது மாதவனூ
ரார ணாடவி நின்பத பங்கய மாகும் வேறறியே
நார ணாதி வணங்கு மருஞ்சிவ ஞான தேசிகனே (எசு)

தாழிசை.

தேசுலாவுமணி நாகமீரமதி தேய்வகன்றுவளர் மோ வெனு, வாசையோடமரும் வேணிநாதனரு ளாளனெந்தை புகழ் காழிவாழ், பாசநாசனெனு ஞானமாமதலை பாடவென் புமக ளாகுநான், மாசிலாதசிவ ஞானிசீர்பரவ மாதரொன்பு வடி வாவரோ. (எரு)

மதங்கு. மேற்படி வேறு.

ஆகுமேயிவள் வலிபிறர்க் காவிபோமுடல் போலவே, மோகமாதரின் மாறிய முதல்வனஞ்சிவ ஞானிசீர், பாகு போன்மொழி யான்மிகப் பாடியாடிம தங்கிதான், சோக மேதுமின் முனிவர்தங் துறவுகொள்ளைகொள் கிற்பளே. ()

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பகலாவெழுத் தைந்தேவடி வாகுஞ்சிவ ஞானி
பாற்போகுவ னென்றேநினை வுற்றேனது பொழுதே
புகலாவசையி ரும்பேயினிப் போவேனெனப் போய்த்தாற்
புணர்மூலம லப்பேயவற் கண்டேகுவ னென்றே
யகலாமைய கன்றேயக லாநின்றது மெல்ல
வாகத்தின்வி ளைப்பேயவற் கண்டுஞ்சில நாளு
ணிகலாமையி ருந்தேகுவ னெனநின்றது மாயை
யெனும்பேயத ஞேடேகுவ னெனநைந்தி ரந்தே. (எஎ)

வஞ்சிவிருத்தம்.

இரந்து நிற்றலி லாமையுங்
கரந்து நிற்றல்க லாமையும்
பொருந்து நிற்புகழ் வேணியான்
றிருந்து மெய்ச்சிவ ஞானியே. (எஅ)

நேரிசைவெண்பா.

ஞானியஞ் ஞானியெனல் ஞானசம் பந்தனெனுந்
தாணிமணப் பந்தற்குத் தப்பியுழன்—மானுடர்கா
ணில்லாமல் வம்மினே நின்றசிவ ஞானிபத
மெல்லாம் வழங்குகின்று னின்று. (எகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இன்றுவர்வாய் மகளிர்மய லுறுதென்று மெனைத்தடுத் தா ளிசையக் கொண்டாய், வென்றிமலி துறவியா தலினீய ம் மாதொருபால் விழைந்து வைத்தோன், முன்றமர்செய் மணம்விலக்கி வலிந்தாட்கொண் டிருமாதர் மோக வேலை, யன்றமிழ நம்பியைச்செய் தனன்சிவஞா னிப்பெரும்பே ர டைந்து ளோயே. (அ௦)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடையாத புல்ல ரினமோ டிணங்க வடியேனை விட்ட வொருநீ, கிடையாத நின்னை யுறுமன்பர் தங்கள் கிளையோ டிணங்க வருள்வாய், திடையாக நாளி னடியான் முனிந்த சிவஞான தேவ மதியைச், சடையா லணிந்த வவன்வேறி யார்கொ றலைவா வெனக்கு மொழியே. (அக)

கட்டளைக்கலித்துறை.

எனக்குப் பிறப்பில்லை யென்றே கனன்மழு வேந்துவ ன்யா, னினக்குக் கருணையென் மேற்று தலினின் னிலைமை கண்டே, யெனக்குப் பிறப்புண்டென் பார்சிவ ஞானி யிருநி லத்தி, னினக்குப் பிறப்புண்டென் பாரல ரோவவர் நிந்தை செய்தே. (அஉ)

சம்பிரதம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நிந்தையறும் படிமுழுது மளப்பம் வாங்கி
நெடுவரையொன் றெடுப்பமெழு கடலை யள்ளிச்
சிந்துவமல் லியினலரி யாக்க வல்லோஞ்
செய்குவமென் றயன்போனற் றிசையும் பாரோம்

தந்தையினு மினியசிவ ஞான தேவன்
றன்கருணை கொண்டெளிதிற் றருக்கர் கூறு
மைந்தனுவி லோரணுவு ளண்ட முண்ட
வம்புகொளுஞ் சம்புவைநா மடக்கு வோமே. (அங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அடங்க வெலும்புந் தோலுமா யருவ ருத்திட் டுமிழ்கி ன்ற, வுடம்பை நானென் றிருந்தேனை யொழிவில் கருணைச் சிவஞானி, கடந்த பிரம நீயெனவே கழற்கா லென்புன் றலை வைத்தான், முடங்கு சுருள்வா ளுய்க்கொருபொன் முடிசூ ட் டினனெம் பெருமானே. (அச)

தரவுகொச்சகக்கலிப்பா.

பெருமானே சிவஞானிப் பெயருடையோய் நினதருளால்
வருமான்மா பரமுத்தி மருவுதலே யியல்பாகும்
பரமான்மா வுரைசெய்யப் படுகாசி முதலனதாந்
தருமாறே ருபசாரந் தருவதுநிற் கிடைத்திடினே. (அரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கிடைப்பரிய நீதுறந்த கங்கைதிருப் பாற்கடலாய்க் கி டந்த தாங்குச், சடைப்பழகு மனந்தனத னெடுபோகச் சய னமெனச் சார்ந்தான் மாயன், படப்பணியை நீங்குதலால் வளர்ந்துபோ யிற்றுமதி பாணி மானை, விடுப்பவத னுடல்பு குந்த தரியசிவ ஞானியென விளங்கு வோயே. (அசு)

கட்டளைக்கலித்துறை.

விளங்காத வண்ணம் பிறர்நீங் கடக்கி விரித்துநன்மை
ஙளங்காதல் செய்துரைப் பார்கூ றுதற்கிங் கொருசடுகி

ளிளங்கா ழளவு நலமில னுகிய வென்னையென்னே
துளங்கா தருளச் சிவஞான தேவன் றொடங்கினனே. (அஎ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தொடங்கியா யிரநாவால் யோக மெல்லாஞ்
சொல்லினுநீ போகியெனப் படுவாய் மண்ணை
விடும்பரிசு நினக்கில்லை பணம்போ மாயின்
வீந்திடுவை விரைகமழ்மென் மலர்க்கட் பெம்மான்
முடங்குறினு நினைவிடுமோ வளியுள் வாங்கு
முயற்சியால் யோகியெனப் படாய னந்தா
வடைந்தசிவ ஞானியெனும் பரம யோகி
யல்லைகாண் சொற்சொலவே வல்லை நீயே. (அஅ)

நேரிசைவெண்பா.

நீயிருப்பப் புன்பொருட்கு நீசர்ப் புகழ்வாருந்
தீயிருப்ப வூன்விரும்பித் தீய்ப்பாரு - நாயிருத்தல்
போலிருந்து நீணரகிற் போய்விழுவா ரோமயிலை
மேலிருந்து வாழ்முனிவா மேல். (அகூ)

கட்டளைக்கலித்துறை.

மேலுக்கு நீவரம் பாயினை கூறில் வியனுலகிற்
கீழுக்கு நான்வரம் பாயினன் மேலெனக் கீழினுக்கு
மேலுக்கு நாப்பணின் றார்கீ ழெனச்சொல மேவுவர்காண்
கீழுக்கு நாடரி தாஞ்சீர் மயிலைக் கிரிமுனியே. (கூO)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

முனிப்புலி தொழுசிதம் பரங்கண் ணுற்றவர்
முழைப்புலி முழங்குமவ் வருணை யங்கிரி
நினைப்பவ ரமலவா ரூர்ப்பி றப்பவர்
நிகழ்த்துறு காசியிற் சென்றி றப்பவர்
தனிப்பெரு முத்தியை யடைவர் தாங்களே
தலைப்படு குவருயர் பதமுன் கச்சியை
யுனைப்பெயர் பகர்பவர் கேட்கின் றாரொடு
முனைப்பரும் புகழ்ச்சிவ ஞான தேவனே. (கக)

கைக்கிளை. மருட்பா.

தேவென் றறிந்தோஞ் சிவஞான தேசிகனை
யோவென் றெழுகுமருட் கண்களான் - மாவென்
றிமைக்கும் விழியா லிவனை
யிமைக்கு ளணங்கல ளென்றறிந் தோமே. (கஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அறிவதை யறிந்தார் மூவ ரறுமுகக் குரவன் றன்பான்
முறைவரு வருண முற்று முக்கணன் குருவென் றன்பு
செறிகிலன் மலய வெற்புச் செஞ்சடை முனிவன் யாக்கை
குறியவன் குறுகி லானெங் கோன்சிவ ஞானிதானே. (கங)

கலம்பகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

அருள்பொழி விழிகள் வாழி யறம்பகர் பவளம் வாழி [ன்ற
யிருள்புரை தமியே னுள்ளத் தெழுந்துபே ரொளியாய் நி
குருபரன் காஞ்சி வாஞ்சை கொள்சிவ ஞான தேவன்
றிருவடி வாழி யன்னான் றிருப்புகழ் வாழி வாழி.

சிவஞானபாலையதேசிகர் திருவடிவாழ்க.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

௨

பரிசோதனபத்திரம்,

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
௪௮	௬	௬	வைந்துதி	வைந்நுதி
௫௮	௧0	௮	பணிபணி	பணிமணி
௬௫.	௨	௩	வருநீ	வரினீ
௱	௪	௧	றருள்	ரருள்
௭௬	௫	௨	வளலி	வளவி
௯௫	௫0	௪	ழொலி	லொலி

'நெஞ்சுவிடுதூது காப்பில், தூய்தாகுமேனி என்றும் பாடம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை.

நல்லாற்றூர்அல்லதுதுறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்தது.

இஃது

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

காயாறு-ஞானசுந்தரஐயராலும்

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாராலும்

சென்னை:

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விரோதி௵ தை௴.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சிறப்புப்பாயிரம்.

ஏவைக்கடக்கும்விழியாளைவென்றவியலுடையான்
காவைப்பொருவுஞ்சிவப்பிரகாசக்கடவுளென்போன்
பாவைப்பலமுறையானுணர்ந்தோர்கள்படித்துணரக்
கோவைத்தமிழ்நந்திருவெங்கைவாணர்க்குக்கூறினனே.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கோவை.

காப்பு.

கட்டளைக்கலித்துறை.

பூவைமலர்நிறத்தெம்பெருமாட்டிப்பொருப்பனையன்
பாவைவளர்க்குங்கிளிமுன்கையாளொருபான்மருவுந்
தேவைவளர்சடைத்தென்வெங்கைவாணனைச்சேர்ந்துவருங்
கோவைபடர்வதற்குள்ளுன்றுவாமொற்றைக்கொம்பரையே.

களவியல்.

கைக்கிளை.

காட்சி.

பூவும்பழுத்தசெழுந்தீங்கனியும்பொழியமுத
மேவுங்குடங்களிரண்டுடனேயிருமீனுங்கொண்டு
சேவுந்தழகர்திருவெங்கைவாணர்சிலம்பின்மலர்
தூவும்பொழிலிலெதிர்ப்பட்டதாலொருதூமணியே. (க)

ஐயம்.

மண்ணேவிளைச்சந்தனவனையோமலர்மாளிகையோ
விண்ணேவலைத்தண்புனலோபழமலைவெங்கையன்ன
பெண்ணேடிருக்கும்பொழுதிளஞ்சேலிற்பிறழுநெடுங்
கண்ணேடிருக்குமுகம்போல்வதாங்கதுகண்டிலமே. (உ)

இதுவுமது.

முலைப்பகையோகட்பகையோவவர்தம்முகப்பகையோ
மலைப்பகையாம்விண்முழுதாளியென்றும்வணங்குமயன்
றலைப்பகையாயகரமுடையான்வெங்கைசார்ந்துநின்ற
சிலைப்பகையாகுநறுநுதலார்தந்திருமனையே. (௩)

துணிவு.

சேணும்பிலமுமலர்மாளிகையுஞ்செழுஞ்சிலம்பு
நாணும்படிநம்படியேதவப்பயனண்ணியமை
பூணும்பணியரன்வெங்கையின்மாநிழற்பூம்பொழில்வாய்க்
காணும்பிறைநுதலாட்சுமவாநின்றுகாட்டியதே. (௪)

குறிப்பறிதல்.

பாயுமலர்த்தண்பொழில்சூழும்வெங்கைப்பழமலைசீ
ராயுமுனிவரர்தாமேமுனிவருளாக்குதல்போ
னோயுமங்நோய்க்குமருந்துந்தராநிற்குநூற்பகவிற்
றேயுமருங்குற்பெருமுலைமாதர்திருக்கண்களே. (௫)

இயற்கைப்புணர்ச்சி.

இரந்துபின்னிற்றற்கெண்ணல்:

புரந்தாடுமையர்திருவெங்கைவாணர்பொருப்பினின்ற
வரந்தாழயிற்கண்மடமாதிரத்தக்கவாறதனு
லிரந்தாய்குவமிவர்தந்தனநாமின்றினியநெஞ்சே
கரந்தானமக்குப்பழியுளதாயிற்கழறுகவே. (௬)

இரந்து பின்னிலைநிற்றல்.

தாளுந்தரக்கன்றனைமீண்டெடுத்துய்யத்தண்ணளியா
லாளும்பழமலைவெங்கையன்னீரொன்றலாதுபல
வாளுங்கணையுங்கதிர்வேலுமானுமதர்விழியா
னீளுந்துயர்செய்துவாளாநின்றீரிதுநீதியன்றே. (௭)

முன்னிலையாக்கல்.

பாரக்கைச்சூலத்தர்வெங்கையிலேகண்பகைத்துநின்ற
வாரக்கட்பூஞ்சுனைப்போதையெல்லாமடலோடுமெடற்
சேரக்கட்டிக்குழற்காட்டிலிடாமற்சிறந்தவலங்
காரக்கட்பேதைதனித்துநின்றாயென்னகாரணமே. (அ)

மெய்தொட்டுப்பயிறல்.

மெய்கூறிடும்வாைமங்கைமணாளர்தம்வெங்கையினிற்
பொய்கூறிலஞ்சிலர்போலிலையேயெனப்புல்லிழையிற்
செய்கூறதிலொன்றளவுளதேயிவள்சிற்றிடைதான்
மைகூர்குழலில்வெறிகொண்டுலாவுமதுகரமே. (௯)

இதுவுமது.

மன்னிசைவெங்கையுடையபிரான்வாைமானுசுப்பைப்
பொன்னிசைகொங்கையொடித்தாலுநிந்தைபொருந்துநுமை
மின்னிசைமென்குழலேறன்மின்னீவிர்விளங்கிலிரோ
வின்னிசைவண்டினங்காள்காகதாலியமென்பதுவே. (௧0)

பொய்பாராட்டல்.

முழுதலங்காரமழுவோன்றிருவெங்கைமொய்குழலுன்
பழுதறுங்கொங்கைக்குடைதுயராற்பனிமாமலய
மழுதகண்ணீரைப்பொருநையென்பாரதன்வெய்துயிர்ப்பை
யெழுதருந்தென்றலெனவேயுலகரியம்புவரோ. (௧௧)

இதுவுமது.

உன்மலைவார்முலைநல்லேர்கவர்ந்ததுதவுதற்குப்
பொன்மலைநாணெண்கழுத்தொடுதாளுறப்பூட்டிவெங்கை
மன்மலைமாதுமைபங்காளன்முன்னம்வளைத்ததன்றி
வின்மலையாக்குதலென்மிளிர்வேற்கண்விளங்கிழையே. (௧௨)

---

(௧0) காகதாலியம் - ஓர்நியாயம்; இது காக்கையேறப் பனம்பழம் விழுந்ததென்பது.

இடம்பெற்றுத்தழால்.

வந்தாளுமையர் திருவெங்கைவாணர்வரையணங்கே
நந்தாமணிவிளக்குற்றுதிர்பூவணைநன்கமைந்த
பைந்தாதுகுக்குங்கணியேறுமல்லிகைப்பந்தரிடஞ்
சிந்தாகுலமறநாமிசையோர்மணஞ்செய்வதற்கே. (கநு)

வழிபாடுமறுத்தல்.

அகலாதடைக்கலம்புக்கபுட்காகத்தன்னுகமெல்லா
மிகலாயரிந்துபுரந்தவற்காத்தவர்வெங்கையிலே
யிகலாதயற்சந்தனம்படர்ந்தேறுமிளங்கொடியே
புகலாயெனக்குயிர்போலுநன்னுணைப்புரந்தருளே. (கச)

இடையூறுகிளத்தல்.

மதயானையீருரியூடேமறைந்துமழைமறைத்த
வுதயாதிபனெனநின்றார்தம்வெங்கையிலுன்றனைப்போற்
கதையாலெனினுமறிந்திலம்வேள்கலகத்தணங்கே
புதையாதுபைம்பொற்குடங்கதிர்வாளைப்புதைப்பதுவே (கரு)

நீடுநினைந்திரங்கல்.

சூல்க்கரத்தர் திருவெங்கைவாணர்முன்சுட்டமத
னீலக்கணையிற்கைவைத்தானினிச்சற்றுநேரநிற்பிற்
காலற்கிரையிடுமென்னுவியையிந்தக்காரிகையார்
கோலக்களபக்குன்றென்றேமருவக்குறுகுவதே. (கசு)

மறுத்தெதிர்கோடல்.

சந்தாபவெந்தழறன்னடியார்க்குத்தணித்தருளுஞ்
செந்தாமரைமலர்த்தாளர்தம்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னந்தாமதுகையொடுபிறப்பேழுநமைத்தொடர்ந்து
வந்தார்தமையிங்நிறையோவராமன்மறிப்பதுவே. (கள)

(கரு) இசையோர்மணம் - காந்தருவவிவாகம்.

(கச) புரந்தவன் - சிபிச்சக்கரவர்த்தி. (கள) சம் - பிறப்பு.

வறிதுநகைதோற்றல்.

புல்லார்பவர்கணெற்சோறுபெற்ருங்குப்பொருந்தியென்று
மல்லார்மதியநிலவுண்சகோரமருந்தவுங்கல்
வில்லார்திருவெங்கையன்பர்முகாம்புயம்வீறுதவு
நல்லார்வதனமதியிடந்தோன்றுநகைநிலவே. (௧அ)

முறுவற்குறிப்புணர்தல்.

தனிவானவர்நந்திருவெங்கைவாணர்தழலெறிப்ப
முனிவானகைசெய்நகைபோல்வதன்றிம்முகிண்முலையார்
பணிவாண்மதிமுகத்தேயெனையாளப்பரிவின்மனக்
கனிவாயெழுநகையீதம்பிகாமக்கடலினுக்கே. (௧௯)

முயங்குதலுறுத்தல்.

கொங்கைக்குவடுமெணியல்குற்பாம்புங்குறுமுனிவ
னங்கைத்தலமடங்காவிழிவாரியுமாங்கிருப்ப
வெங்கைப்பழமலையாரருளாலவ்விசும்பறியா
மங்கைப்பருவத்திவள்வாயமுதிங்குவாய்த்ததுவே. (உ0)

புணர்ச்சியின்மகிழ்தல்.

தாண்டுஞ்சினவிடையெம்மான்றனிவெங்கைத்தண்சிலம்பில்
யாண்டும்பெறலருமின்பமெல்லாமைம்புலனுமின்று
தூண்டுஞ்சுடரொனநின்றவிம்மாதரிற்றுய்த்தனமால்
வேண்டும்பொருணமக்கேதோவினியிந்தமேதினிக்கே. (உக)

புகழ்தல்.

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தர்வெற்பிற்
குறைந்தாலிவணுதலொவ்வாய்நினதுகுறைநிறைந்தாற்
சிறந்தாயிழைமுகமொவ்வாய்விளங்குஞ்செழுங்கலையா
னிறைந்தாலென்னன்றிக்குறைந்தாலென்னெங்கட்குநீமதியே.

வன்புறை.

அணிந்துழிநாணியது ணர்ந்துதெளிவித்தல்.

மன்றாடிய திருவெங்கைபுரேசர்மணிவரைமே
னன்றாயணிகுவனென்றாலுநின்பெருநாணையஞ்சிக்
குன்றாெ திரொலிபோலநின்பாங்கியர்கோலணியா
வின்றாயிழையணிந்தேன்வெருவேனெஞ்சிளங்கொடியே.(உ௩)

பெருநயப்புரைத்தல்.

கடக்கும்பவத்தர் திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
குடக்குங்குமமுலையாண்மாட்டலாமற்குலவளிகா
ணடக்குங்கமலமுநோக்குங்குவளையுநாணிலவை
யடக்குங்குமுதமுங்கண்டதுண்டோவுங்களாவியிலே. (உ௪)

தெய்வத்திறம்பேசல்.

நதிவசத்தாயசடையார்திருவெங்கைநாட்டொருவர்
மதிவசத்தாலன்றிவான்கூன்மதிநுதல்வல்லிசதா
கதிவசத்தால்வரும்வள்ளிதட்போதின்கடிமணம்போல்
விதிவசத்தால்வருநங்கேண்மையாவர்விலக்குவரோ. (உ௫)

பிரியேனென்றல்.

பாவிடைவைத்தபெரும்புகழ்வெங்கைப்பழமலைகைம்
மாவிடைவைத்தவிகல்வாள்விழியெழின்மாதர்தமை
நாவிடைவைத்தவன்மார்பிடைவைத்தவனுணவகப்
பூவிடைவைத்தநினையோபிரிகுவன்பூங்கொடியே. (உ௬)

பிரிந்துவருகென்றல்.

உழைதொட்டவங்கையர்வெங்கையர்ஞானவொளியர்வெற்பி
லிழைதொட்டுவிம்மிமலையோடிகலுமிளமுலையாய்
மழைதொட்டுநின்றவிப்பூம்பொழிற்புக்குமணிமகரக்
குழைதொட்டுமீளுநின்கண்போல்விரைந்துகுறுகுவனே.(உ௭)

(உ௫) சதாகதி-காற்று. (உ௬) கைம்மா - கையிலுள்ளமான்.

இடமணித்தென்றல்.

சீருக்கயல்விழிமாதேதென்வெங்கைச்செழும்பதியான்
கூருய்த்திகழ்திருமேனியுமாதுமைகூறுடலும்
வேருய்ப்புணர்வதென்னேவந்துன்சாரல்வியன்பதியு
மாருப்பழனத்தெமதூருமொன்றிமருவுறுமே. (உ அ)

தெளிவு.

பழிமாற்றியபுகழ்வெங்கைபுரோசர்பனிவரைமேன்
மொழிமாற்றெனும்பொருள்கோளினல்லாமன்மொழிபிறழார்
சுழிமாற்றியவுந்தியாய்வருவேனெனச்சொல்லியவவ்
வழிமாற்றமும்பிறழ்மோபிறழாதுமறப்பினுமே. (உகூ)

பிரிவுழிமகிழ்ச்சி.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தோடு சொல்லல்.

உடையோர்சிறிதொருகைதூக்கிவீசியொருகையினைப்
புடையோடரிக்கணிலனேக்கிச்சிற்றேலிப்பூணுடனே
சடையோர்திருவெங்கைவெற்பினம்மாவிதனிநெஞ்சமே
நடையோதிமங்கள்கண்டென்னேபறக்கநடக்கின்றதே. (ங0)

பாகனேடுசோல்லல்.

பொன்னங்கிரிநிகர்திண்டேர்செலுத்தும்புகழ்வலவா
மின்னஞ்சடையர்திருவெங்கைவாணர்தம்வெள்ளருவித்
தென்னஞ்சிலம்பிலிடைமிடித்தார்தம்மைத்தேடியெதி
ரன்னம்பிடியென்வேநடந்தேகுநம்மாயிழையே. (ஙக)

பிரிவுழிக்கலங்கல்.

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிது மாயமோவென்றல்.

ஆயவெள்ளத்தினடுவேயிருக்குமரசவன்னம்
பாயவெள்ளத்தமுதுற்றுங்கெனக்ககப்பட்டதுதான்
மேயவெள்ளச்சடையெம்மான்றிருவெங்கைவெற்பிலொரு
மாயவெள்ளக்கனவோவறியேனெஞ்சமாழ்குவதே. (௫௨)

வாயில்பெற்றுய்தல்.

சேவையுகைப்பவர்வெங்கைபுரேசர்சிலம்பின்மய
ஞேவையொழிப்பமருந்துகண்டோமினிநோவனெஞ்சே
பூவையுருத்தமொழியார்மழைக்கட்பொறிவண்டுதான்
பாவையொருத்திமுகாம்புயத்தேசென்றுபாய்கின்றதே. (௫௩)

பண்புபாராட்டல்.

நிதிமுன்மிடியர்மனம்போலவாவிநிகரில்வெங்கைப்
பதிமுன்புகுமுதுகுன்றுடையார்பதம்பண்டளைத்த
மதிமுன்மரையுமரைநாயகன்முன்மதியுங்கண்டோர்
விதிமுன்கொணருமிவர்முகம்போலவியக்கிலரோ. (௫௪)

பயந்தோர்ப்பழிச்சல்.

செந்தாமரையுமரிமார்புமென்னத்திருமகடா
னந்தாமனையிடையின்றிருந்தாங்கெந்தநாளுமுற
வந்தாழ்சடையவர்வெங்கையிலேநமதாவிநிற்ப
வந்தாரமுதிதழ்தந்தாளைத்தந்தவர்வாழியவே. (௫௫)

கண்படைபெறதுகங்குனோதல்.

அரவாம்பணியினர்வெங்கைபுரேசரணியழகின்
வரவாங்கதியொன்றுறுமோவுடமொக்குள்வந்தெழவே
விரவாம்புயற்கரவோடவிர்மாமதிவெள்வளைசே
ரிரவாங்கடலில்விழுந்தமிழ்வேனையெடுப்பதற்கே, (௫௬)

இடந்தலைப்பாடு.

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

மின்றந்தவேணியர்வெங்கைபுரேசர்மிகுமருளா
லன்றந்தவாரிநடுவேயொருவனகற்றியிட்ட
பொன்றந்ததெய்வமன்றேமலர்மாவைப்பொழிலிடத்தின்
முன்றந்தின்றுந்தருநெஞ்சமேசெலின்முந்துறவே. (௩௭)

முந்துறக்காண்டல்.

அங்கஞ்சுமந்ததிருமார்புடைவெங்கையானருளால்
வங்கஞ்சுமந்தகடற்பிறவாமல்வருமமுதஞ்
சிங்கஞ்சுமந்தகரியுடனேயொண்செழுந்தரளச்
சங்கஞ்சுமந்தசெந்தாமரைதோன்றத்தனிவந்ததே. (௩௮)

முயங்கல்.

மடலுமணமுமெனவேநிறைவெங்கைவாணர்தமைத்
தொடலுமடியர்பெறும்பேறெனவிவடோண்மருவி
யுடலுமுயிருமனமுமெலாம்வளர்ந்தோங்குமின்பக்
கடலுளழுந்தியவசமுற்றேதையுங்கண்டிலமே. (௩௯)

புகழ்தல்.

நாங்குழையாமலருள்வோன்றிருவெங்கைநாயகன்கைத்
தாங்குழையேயன்றிமென்முலைதாங்கித்தளருமிடைப்
பூங்குழையாயெப்படிகுதித்தாலுமிப்புல்லறிவாய்
நீங்குழையோநின்மதர்வேனெடுங்கணிகர்ப்பதுவே. (௪௦)

ஆயத்துய்த்தல்.

வானோக்கிநிற்கும்பைங்கூழ்போலவுமொருமன்னவன்செங்
கோனோக்கிவாழுங்குடிபோலவுந்தடங்கோட்டிமையத்
தேனோக்கிநிற்குமெழிலுடையான்வெங்கைச்செல்வியுனைத்
தானோக்கிநிற்குநல்லாயத்துளேசென்றுசார்ந்தருளே. (௪௧)

---

(௩௭) ஒருவனென்றது ஏலேலசிங்கனை.

பாங்கற்கூட்டம்,

தலைவன்பாங்கனைச்சார்தல்.

கன்னியுந்தானுமொன்றானோன்றிருவெங்கைக்கண் ணுதல்போ
வன்னியுங்காற்றுங்கலந்தேறியவெம்மதனைவெல்லச் [ல்
சென்னியுஞ்சேகரமும்போனமக்குச்சிறந்தநண்பன்
மன்னியிங்கோர்துணையாயினல்லாமல்வலியில்லையே. (சஉ)

பாங்கன்றலைவனையுற்றதுவினாதல்.

இலங்காபுரிமன்னன்றோளிறவூன்றியவீசர்வெங்கை
யுலங்காதலிக்குந்திண்டோளுரவாகடலூர்ந்திடினும்
விலங்காமறலியொருகோடிதூதொடுமேல்வரினுங்
கலங்காவுளமுங்கலங்கிநின்றாயென்னகாரணமே. (சரு)

தலைவனுற்றதுரைத்தல்.

மலைவன்பணியரிவின்னாண்கணைசெய்துவந்துவெங்கைத்
தலைவன்புரமிரண்டொன்றேவெலவிச்சகமனைத்துஞ்
சிலைவன்குணங்கணைவேழஞ்சுரும்பலர்செய்துவென்றோன்
முலைவன்கிரியுறவந்தநண்பாவொருமொய்குழலே. (சச)

கற்றறிபாங்கன்கழறல்.

போதைப்பொதிந்திட்டிருதேங்களகப்பொருப்பிமைய
மாதைக்கலந்ததிருவெங்கைவாணர்மதுரைச்சங்க
மேதைப்பசுந்தமிழ்ப்பாற்கடனீந்தியவீரமொரு
பேதைக்குடைந்துநின்றாய்தகுமோசொல்பெருந்தகையே. ()

கிழவோன்கழற்றெதிர்மறுத்தல்.

ஊனுமெனநஞ்சுவந்தோன்றிருவெங்கையூரிலுயர்
சேணுமுலகம்வறிதாகவந்தவச்சேயிழையார்
பூணாரமென்முலையின்பெருங்காட்சியும்பொய்யிடையின்
காணாமையுங்கண்டனையாயினண்பகழறிலையே. (சசு)

(சஉ) வன்னி - கிளி,

கிழவோற்பழித்தல்.

அண்டாதிபர்நந்திருவெங்கைநாயகர்க்கன்றியொரு
பெண்டாலிதயமுருகினையாயிற்பெருந்தகைநீ
விண்டார்ரகைகண்டினியிந்துகாந்தமுமெய்யுருகும்
வண்டாமரைகளுமின்மினிதோன்றமலர்ந்திடுமே. (சஎ)

கிழவோன்வேட்கை தாங்கற்கருமைசாற்றல்.

பாலார்மொழியுமைபங்காளர்வெங்கையம்பாவைதந்த
மாலாழ்தருமெனவெவ்வுளையானண்பவாட்டுகின்றாய்
காலாழ்களரினமிழ்ந்தவெங்கோட்டுக்களிற்றையொரு
வேலாலெறிபவர்போலேயிதுவென்விதிவசமே. (சஅ)

பாங்கன்றன்மனத்தழுங்கல்.

பெட்டுப்பட்டாவுரிகொண்டோன்றென்வெங்கைப்பிரான்வரையின்
மட்டுப்பட்டாவிமலர்வாரிசமுகவல்லிமுகை
முட்டுப்பட்டானையனையானிடையெனுமோரிழையாற்
கட்டுப்பட்டானினியென்செய்குவேனிந்தக்காசினிக்கே.(சகூ)

தலைவனோடழுங்கல்.

நாட்டுமெலிபுகழ்ப்பெம்மான்றிருவெங்கைநாட்டிறைவ
கோட்டுவெரிவிற்கொலைவேடர்தந்தகொடியிடையாள்
பூட்டுமையற்றொடர்நீயேபடினெவர்போக்குறுவார்
காட்டுமிரவிக்கிரவியுண்டோவிருள்காய்வதற்கே. (ருo)

எவ்விடத்தெவ்வியற்றென்றல்.

தழைந்தார்மலிசடையீசர்தம்மாதின்றடமுலைக்குக்
குழைந்தார்திருவெங்கைநாயகனூரிடங்கொண்டுதெனி
விழைந்தார்நினதக்கத்திற்றிட்டிவாயிடைவேழமொடு
நுழைந்தாரிடமியலெல்லாமிறைவநுவன்றருளே. (ருக)

அவனஃதிவ்விடத்திவ்வியற்றென்றல்.

நறையேயிதழிபுனைவார் திருவெங்கைநாதர்சடைப்
பிறையேநுதலவர்மானேகருங்கண்பிடித்ததுடிப்
பறையேயிடையணிபாம்பேயகலல்குல்பற்றுமலை
யிறையேமுலைமலர்த்தண்டலையேயிடமென்னுயிர்க்கே. (ருஉ)

பாங்கனிறைவனைத்தேற்றல்.

தடங்கொண்டகண்ணியிடத்தார் திருவெங்கைத்தண்டலையை
யிடங்கொண்டுகொமப்புனனீந் திரீகரையேறுதற்குக்
குடங்கொண்டுநின்றவொருமாதைக்கண்டுகுறுகுமட்டுந்
திடங்கொண்டுநெஞ்சந்தளராதுநிற்றிதிறலவனே. (ருங)

குறிவழிச்சேறல்.

காவியும்ஆம்பலும்பூத்தசெந்தாமரைகண்டளிகள்
வாவியுமோடையும்விட்டெய்தவேபொழில்வாய்நிற்குமோ
தேவியுமானும்விளையாடிடத்தர் திருவெங்கையி
லாவியுமாரமுதும்போன்றிறைகண்டவாயிழையே. (ருச)

இறைவியைக்காண்டல்.

முகையேமுலைசெழும்போதேமுகமலர்மூசுவண்டின்
றொகையேகுழல்செந்தளிரேயடிநற்சுவைக்கனியே
நகையேயிதழ்திருவெங்கைபுரேசர்கைந்நவ்விமிகும்
பகையேயெனுங்கணிவரேயிறைசொன்னபைங்கொடியே. ()

இகழ்ந்ததற்கிரங்கல்.

புடையேயுமையொடுஞ்செங்கதிர்வேற்கைப்புதல்வனொடும்
விடையேயிவர்தரும்பெம்மான்றிருவெங்கைவெற்பிலன்னப்
பெடையேயெனவந்திளங்காவுறுமிப்பெருந்தனத்தா
ரிடையேயிலையெனினைந்திளையான்கொலிறையவனே. (ருசு)

தலைவனைவியத்தல்.

சூடும்பிறையர் திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுங்கவியுளடங்காக்கவினுடைப்பாவையன்றோ
கூடுங்குவிமுலைக்குன்றுங்கண்வேலையுங்கூந்தனெடுங்
காடுங்கடந்துவந்தான்மிகவீரனங்காவலனே. (ருஎ)

தலைவியைவியத்தல்.

பருத்தகுவிமுலைப்பாரத்திறைற்கடற்பங்கயத்தி
லிருத்தலரிதெனவந்துவன்பூவிலிருக்குமிவர்
விருத்தகிரிமகிழ்வெங்கைவெற்போன்மயல்வெள்ளங்கொண்டு
வருத்தவிதயமலர்மீதிருந்திடவல்லவரே. (ருஅ)

தலைவன்றனக்குத்தலைவிநிலைகூறல்.

இயலாற்சிறந்ததிருவெங்கைவாணரிமையவெற்ப
மயலாற்புரிந்தமுலையானையின்முன்மதர்மழைக்கட்
கயலாற்கலக்குவித்துன்கலைவேலையைக்காரளகப்
புயலாற்பருகுவித்தார்நின்றுளார்தண்பொழிலிடத்தே. (ருகூ)

தலைவன்சேறல்.

ஏழாமுலகும்புகழ்வெங்கைவாணரிமையவெற்பி
லாழாதெனைநெடுங்காமக்கடனின்றணைத்தெடுப்பார்
தாழாதிசையளிமூசுமென்பூந்துணர்த்தண்கொம்பரோ
சூழாயமாகநடுநிற்பரோவிந்தச்சோலையிலே. (சூ0)

தலைவியைக்காண்டல்.

தளைப்பாசநாசகர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பிற்
களைப்பான்மதிமுகக்காரிகையீர்தண்களபமுலைக்
கிளைப்பாரமென்பெருந்தோண்மேலிருத்திநைகின்றவிடை
யிளைப்பாறவோதனிநின்றீரிக்காமரிளம்பொழிற்கே. (சூக)

கலவியின்மகிழ்தல்.

துதிவாய்தொறுங்கொளுமென்மலர்ப்பூம்பொழில்சூழ்ந்தவெங்
பதிவாய்வளையிளமாதோடமர்ந்தபரனருளாற் [கைப்
றிதிவாய்மதியமிர்தம்போலலாமற்சிறந்தமுக
மதிவாயமிர்தமுண்டோம்வந்துகூடவிம்மங்கையரே. (சுஉ)

புகழ்தல்.

சங்கந்துறந்தன்னமில்லாமலேயொருதாளினின்று
பொங்கம்புனலிற்றவம்புரிந்தாலும்புளைகுவீரோ
வங்கம்பலவணிந்தார்வெங்கைவாணரணிவளைமே
லிங்கம்புயமுகைகாளிந்தமாதரிளமுலைக்கே. (சுரு)

பாங்கியோடுவருகெனப்பகர்தல்.

பங்கேருகத்திற்கடுத்தசெங்காவிப்பனிமலர்போ
னுங்கேளெனுமுயிர்ப்பாங்கியொடேமறைநான்முகத்திற்
சங்கேதமாம்பெயர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பி
லிங்கேவருகவென்னெஞ்சாலயத்திலிருப்பவரே. (சுச)

பாங்கிற்கூட்டல்.

கார்கண்டமஞ்ஞையுஞ்செந்தேனிரம்பக்கடைதிறக்குந்
தார்கண்டவண்டுந்திருவெங்கைநாயகர்தாண்மலரின்
சீர்கண்டவன்பரும்போலேநிற்கண்டுசிறக்குமுளப்
போர்கண்டவேற்கண்மடவாளைமேவுகபூங்கொடியே. (சுரு)

பாங்கிமதியுடன்பாடு.

தோற்றத்தாலாராய்தல்.

எனையாடியபதத்தாள்வோன்றிருவெங்கையேந்திழைநீ
சினையாடியமணிப்பொன்னூசலாடிச்செழுங்குவளைச்
சுனையாடிவண்டல்விளையாடிமுத்தந்துவன்றியவம்
மனையாடிவந்தனையோதிருமேனிவருந்தியதே. (சுசு)

ஒழுக்கத்தாலையந்தீர்தல்.

கொற்றிக்கிசைந்தபுயத்தார் திருவெங்கைக்கோமளமே
நெற்றிக்குடைந்ததென்றெள்ளப்படாதந்தநெற்றியின்மேல்
வெற்றிக்கமலக்கரங்குவித்தேயின்றுவிண்ணினெழு
மற்றிப்பிறைத்தெய்வங்கன்னியர்யாரும்வணங்குவதே. (சுஎ)

சுனைநயப்புரைத்தல்.

கடைக்கண்சிவந்திதழொன்றேவெளுப்பக்கலவியினு
ளிடைக்கண்மெலிவுதருங்கொங்கைமேலதுவேயழிய
விடைக்கண்விரும்பியுறைவார் திருவெங்கைவெற்பிடத்திற்
றொடைக்கண்மலர்க்குழலாய்சுனையாதினுட்டோய்ந்தனையே.

சுனைவியந்துரைத்தல்.

ஒளியார்குமுதநல்வெள்ளாம்பலாகவொழிவறுதண்
ணளியார்கருநெய்தல்வந்துசெந்தாமரையாகச்செய்யி
லெளியாரடியவர்க்கானூர்தம்வெங்கையில்யாரொருவர்
குளியார்மதிநுதனீயாடியவக்குளிர்சுனையே. (சுகூ)

தகையணங்குறுத்தல்.

பண்ணூடுமின்சொலுமைபாகர்வெங்கைப்பனிவரைமேல்
விண்ணூடிழிந்துவருந்தெய்வமாதுவிளங்குறுமென்
கண்ணூடிருந்தபெண்ணின்னிழலாகக்கருத்திடைநீ
யெண்ணூடிருந்துகவேலிவடாவெனங்களேந்திழையே. (எ0)

நடுங்கநாட்டம்.

எதிராக்கவினுமைபங்காளர்வெங்கையிறைவர்சடை
முதிராப்பிறையைந்தலைநாகமீன்றமுழுமணியின்
கதிராற்சிவந்ததுபோற்சேந்தகோட்டுக்களிற்றைமல
ருதிராக்கொடியனையாயின்றுநான்கண்டுடைந்தனனே. (எக)

பெட்டவாயில்பெற்றிரவுவலியுறுந்தல்.

அருவாயுருவமுமாம்வெங்கைவாணரரும்பதத்தைக்
குருவாலடைபவர்போலுயிர்ப்பாங்கியைக்கொண்டுமெல்லப்
பெருவாரறநிமிர்ந்தோர்தூன்மருங்குற்பெரும்பழியை
வெருவாதெழுமுலைப்பெண்ணாரமுதத்தைமேவுதுமே. (எஉ)

ஊர்வினுதல்.

வலைநடுவெந்தவிளங்கலைபோனும்மணிவடந்தாழ்
முலைநடுவென்னவிடமறவேவந்துமுட்டுமிரு
மலைநடுவெந்துநொந்தேனுரையீர்நும்வளம்பதியா
தலைநடுவெந்தநஞ்சுண்டபிரான்வெங்கையன்னவரே. (எரு)

பெயர்வினுதல்.

ஊரானதிங்குணாயீராயினுமென்னுளங்குளிரச்
சீரார்திருவெங்கைமாநகரார்தந்திருப்பெயர்போற்
பாரார்பருவங்கண்டேமறையாகப்பகர்வதன்றே
பேராயினுமுரையீர்பிறைவாணுதற்பேதையரே. (எச)

கெடுதிவினுதல்.

பைங்காஞ்சனவணைவில்லாளர்வெங்கைப்பனிவரைமேற்
செங்காந்தளன்னமென்கைம்மடவீர்செங்குருதிபொங்க
வங்கர்ந்ததன்பகுவாய்போலவேல்பட்டழுந்துபுண்ணோ
டிங்காம்புனத்தயல்வந்ததுண்டோநல்லிளங்களிறே. (எரு)

ஒழிந்ததுவினுதல்.

விழித்தேமதனைப்பொடித்தார்செவ்வாம்பன்மிஞிறுவப்பச்
சுழித்தேனுமிழ்வயல்வெங்கையிலேகடற்றோட்டலனை
யொழித்தேவருமடவீரளியேனின்றுளம்வருந்த
மொழித்தேனிலாதெதென்றோவுங்கள்வாய்க்குமுதமலர்க்கே. ()

யாரேயிவர்மனத்தெண்ணம்யாதெனத்தேர்தல்.

ஊரேதென்பாரதைவிட்டேயருகுவந்தும்முடைய
பேரேதென்பார்கரிகண்டதுண்டோவெனப்பேசிநின்று
வாரேறுகொங்கைக்குடநோக்குவார்வெங்கைவாணர்வெற்பி
லாரேயிவர்மனத்தெண்ணமென்னேயென்றறிந்திலமே. (எஎ)

எண்ணந்தெளிதல்.

ஊர்கேட்கவுநம்பெயர்கேட்கவுநின்றுழல்பனைக்கைக்
கார்கேட்கவும்வந்தவரோயலரிவர்கன்னியுமை
சீர்கேட்குமையர்தென்வெங்கையிலேயிவள்செய்யவிள
நீர்கேட்கவந்தவரோபற்றுகாமநெருப்பினுக்கே. (எஅ)

தலைவன்கையுறையேந்திவருதல்.

கொடையாளர்கையிற்பொருள்போற்சிறுமென்கொடிபுரையு
மிடையாளிகுழையுடனிருந்தாளினியேதுகுறை [ன்
விடையானிணையிலிவெங்கைப்பிரான்றன்விழிக்குடைந்தோ
படையான்மெலிந்தவெல்லாநெஞ்சமேமுன்பகருதுமே. (எகூ)

தலைவனவ்வகைவினுதல்.

கானைக்கலையொன்றெனதம்புபாயக்கலைமதியின்
மானைப்புணரவெழல்போலவேதுள்ளிவந்ததுண்டோ
வானைத்தலைமகற்பெற்றோன்றிருவெங்கையாவியிள
மீனைப்பொருதகன்றோள்வாளிகலும்விழியவரே. (அ0)

எதிர்மொழிகொடுத்தல்.

மானக்கலைளெட்டெட்டும்வல்லீர்கொன்றைவார்சடையிற்
கூனற்பிறைபுனையெம்மான்றென்வெங்கைக்கொடிச்சியரே
மேனற்புனத்திற்கிளிபார்த்திதணினிருப்பதன்றிக்
கானக்கலையைத்தனிபார்த்திருக்குங்கருத்திலமே. (அக)

இறைவனைநகுதல்.

தேனனையாவருமாமலராலச்சிலைமதவேண்
மானனையாரைவருத்துமென்பாரின்றுமாந்தழையாற்
கூனனையாமதிவார்சடையார்வெங்கைக்குன்றில்விழி
மீனனையாயிவரெய்தார்பெருங்கலைவீழ்ந்திடவே. (அஉ)

பாங்கி மதியினவரவர்மனக்கருத்துணர்தல்.

௯ மான்வேட்டமீதும்புனங்காவன்மீதினும்வைத்தமனந்
தான்வேட்டகாதன்மறைப்பவெல்லாமயன்ருதையொடு
நான்வேட்டசெம்மலர்த்தாளான்றிருவெங்கைநாட்டிலிவர்
தேன்வேட்டபூங்கண்களேயலர்தூற்றித்தெரிவிக்குமே. (அரு)

பாங்கியிற்கூட்டம்.

தலைவனுட்கோள்சாற்றல்.

நற்றேமொழியுமைபங்கன்றிருவெங்கைநாடனையீர்
முற்றேரிழைமுலைமேனகையாதியர்முற்றுநுங்கள்
குற்றேவல்செய்யுமடந்தையராகக்கொடுப்பனின்னே
சற்றேயருட்கடைக்கண்பார்த்தென்னுவியைத்தாங்குமினே. ()

பாங்கிதலைமறைகிளத்தல்.

௲ பொய்ம்மேவரும்புனங்காவலர்யாங்கள்புனநடுவின்
வம்மேவுறுமதுகாப்பவனீவளைசூழ்வதெம்மூர்
நம்மேலருள்வைத்தளிப்பார்திருவெங்கைநாட்டிலுன்னூர்
கும்மேல்வரும்வளைசெய்காட்டுவதொண்குலோத்துங்கனே. ()

தலைவன்றலைவிதன்னையுயர்த்தல்.

அலைமகளன்னவிலங்கிலைவேற்கணரிவைநல்லாய்
கலைமகள்வந்தனைசெய்வெங்கைநாதற்குக்கைகொடுத்து
மலைமகளண்டமுழுதாளினுங்கண்மலையரையன்
றலைமகணன்மைப்பெருமையையாதென்றுசாற்றுவனே. (அசு)

(அ௭) புனநடுவில் வம்மேவுறும் அது - புவனம்.
கும்மேல்வரும்வளை - குவளை.

பாங்கியறியாள்போன்றுவினுதல்.
இஞ்சிப்புரமொருமூன்றெரித்தார்வெங்கையீர்ம்பொழில்வாய்ப்
பஞ்சிற்சிறுதளிர்மெல்லடிமாதர்பலரினுந்தான்
வஞ்சித்தெமையெம்முடனேயிருப்பினும்வந்துனது
நெஞ்சிற்புகுந்துமறைந்தவள்யார்சொன்னெடுந்தகையே. ()

இறையோனிறைவிதன்மையியம்பல்.
போதேமுகமிளஞ்சேலேவிழிபசும்பொன்னுரைத்த
சூதேமுலைசெந்தளிரேயடிகதிர்ச்சோதியொடு
வாதேபுரியுந்திருமேனியர்வெங்கைமங்கையர்க்கு
மாதேயிடையொன்றுமல்லாமற்பொய்யல்லமற்றவையே. ()

பாங்கிதலைவியருமைசாற்றல்.
ஒறுத்துப்புரஞ்சுடுமெம்மான்றிருவெங்கையூரின்மலர் [யாற்
பொறுத்துக்கொளும்பொனென்றெண்ணேலிராசிப்புதுத்துலை
கறுத்துத்தழைந்தகுழலோடுகொங்கைக்கனத்தசெம்பொ [யே.
னிறுத்துக்கொளும்பொனன்றோ வெளிதோ சொனெடுந்தகை

தலைவ னின்றியமையாமையியம்பல்.
பொங்கூழொளிநிகர்வெங்கைபுரேசர்பொருப்பிடத்தில்
வங்கூழ்வழங்கும்வியன்ஞாலந்தன்னில்வளர்ந்தெழுந்த
பைங்கூழ்புயலின்றமையாதவாறெனப்பாவைநல்லா
யிங்கூழ்தருமென்கொடியன்றிவாழ்தலின்றென்னுயிரோ. (கூ0)

பாங்கி நின்குறைநீயேசென்றுரையென்றல்.
தீயேனுளங்குடிகொள்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பில்
வீயேறுமென்றொடைத்தோளண்ணலேயயல்வேறொருவர்
போயேயுரைப்பின்மனமிரங்காளெங்கள்பூங்கொடிக்கு
நீயேவணங்கிமனமுளைந்தோதுகநின்குறையே. (கூக)

(கூ0) ஒளி - சூரியன்.

பாங்கியைத்தலைவன்பழித்தல்.

கல்லைக்குழைத்துப்பயின்றுளதாகியகல்வியுடைத்
தில்லைப்பதியினடமாடும்வெங்கைச்சிவனையல்லாற்
சொல்லைக்கொடுநின்மனநாங்குழைப்பத்துணிதலொரு
புல்லைக்கொடுதெண்கடனீந்தவுன்னுதல்பூங்கொடியே. (கூ௨)

பாங்கிபேதைமையூட்டல்.

மானைக்கவர்வம்மழுவிலையேல்வெங்கைவாணர்க்கந்த
வானைப்புணர்மதிகேள்வேமகப்படின்மானுக்கென்னுஞ்
சேனைக்குறவர்மகளாகியவித்திருந்திழையா
ளானைத்திறலுடையாயறியாளுன்னருந்துயரே. (கூ௩)

காதலன் றலைவி மூதறிவுடைமைமொழிதல்.

விடுத்தமயலுடையெம்மான்றிருவெங்கைவெற்பணங்கே [த்
யெடுத்தவிடைமுறிக்குங்கொங்கையேயன்றியென்னையெய்ய
தொடுத்தகுவளைக்கணைவாங்கிவின்மதன்றூணியிட
வடுத்தகடைக்கண்வைத்தாரறியாமையறிந்திலரோ. (கூ௪)

பாங்கி முன்னுறுபுணர்ச்சிமுறையுறக்கூறல்.

மருவீரவெண்மதிவேணிப்பிரான்வெங்கைவான்பொழில்வா
யிருவீருமொத்துப்புணர்ந்தாற்பயனுமக்கென்னையொன்றூர்
பொருவீரவாள்விழிக்காப்பதினுயிரம்பொய்யுரைத்து
வருவீரறிந்திலிரேயுலகோதும்வழக்குரையே. (கூ௫)

தன்னிலைதலைவன்சாற்றல்.

மண்ணைக்கொண்டுண்டபெருமான்றொழும்வெங்கைவாணர்
வெற்பிற்,பண்ணைக்கொண்டுற்றமொழியாயுனையன்றிப்பாரமு
லைப், பெண்ணைக்கொண்டின்பம்பெறநான்விரும்பப்பெறிலது
தான், கண்ணைக்கொண்டன்றிவழிதானடப்பக்கருதுதலே. ()

பாங்கியுலகியலுரைத்தல்.

வெண்டாமரைமுளைப்பாலிகைவாளரவிந்தச்செந்திக்
கொண்டாவியிற்சங்கமார்ப்பக்குவளைமணம்புணர்ந்து
வண்டாடுநல்லியலூரவெம்மான்வெங்கைமாதினைநீ
கண்டாசைப்பட்டனையேல்வரைந்தேகொள்கடைப்பிடித்தே.

தலைமகன்மறுத்தல்.

தாமக்குழலைவரைந்துகொண்டேவெங்கைத்தாணுவெற்பிற்
காமக்கனலைத்தணிப்பாயென்றோதியகாரிகைநீ
நாமக்கிணறகழ்ந்தந்நீர்கொடுநென்னகரிற்பற்றி
வேமக்கனலையவிப்பாயென்பார்களின்வேறல்லையே. (கூஅ)

பாங்கியச்சுறுத்தல்.

பால்கொண்டவத்தியெனவேயுடல்வடுப்பட்டவெமர்
வேல்கொண்டதம்முடற்புண்ணிலிட்டேவளைவேனிமிர்ப்பார்
சேல்கொண்டகண்ணியிடத்தார்திருவெங்கைச்சேயிழைக்கு
மால்கொண்டுநின்றுழலேல்விரைந்தேகுகமன்னவனே. (கூகூ)

தலைவன்கையுறைபுகழ்தல்.

கொண்டலங்கண்டர்திருவெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
றண்டளிர்வென்றசெந்தாண்மடவீர்நுந்தடமுலையா
முண்டகமென்முகைமேல்வாழவூசிமுனையினின்று
வண்டவஞ்செய்திங்குவந்தகண்டீரிம்மணிவடமே. (க00)

பாங்கிகையுறைமறுத்தல்.

மல்லார்க்குந்தோளண்ணலேவெங்கைவாணர்வரையிற்பெண்க
ளெல்லார்க்கும்வந்தவிடைபோல்வதன்றிங்கிவட்கன்றியே
வில்லார்க்குநின்னணிகொங்கையிற்காணிலெம்வேடரொன்னும்
பொல்லார்க்குறங்கும்புலிவாயிடறுதல்போன்றிடுமே. (க0க)

ஆற்றநெஞ்சினொடவன்புலத்தல்.

பாமாலைகொண்ட திருவெங்கைவாணர்பனிவரைமேன்
மாமாலைநண்ணியவென்னெஞ்சமேயிவ்வரியளிக
டாமாலைமென்குழலார்தமைவேண்டினந்தாண்முறிந்த
பூமாலையேறுங்கொலோவவர்வார்முலைப்பொற்குன்றமே. ()

பாங்கியாற்றுவித்தகற்றல்.

ஆனுக்களித்தகொடியாளர்வெங்கையணிநகராய்
பானுக்களித்துவருங்காலைநீவரிற்பைங்தொடிக்கைத்
தேனுக்களிக்குமலர்த்தொடைவார்குழற்றேமொழியெம்
மானுக்களித்துக்கலைகாக்குவனுன்கைவண்டழையே. (கoரு)

இரந்துகுறைபெறாதுவருந்தியகிழவோன்
மடலேபொருளெனமதித்தல்.

எண்ணைவிட்டோங்கும்புகழாளர்வெங்கையிமையவெற்பில்
விண்ணைவிட்டெய்துமிவட்டருவாயெனமேவியுழும்
பண்ணைவிட்டேர்தொறும்புக்கிரப்பாரிற்பசியமடற் [மையே.
பெண்ணைவிட்டோர்பெண்ணைநாம் வேண்டிநிற்பதுபேதை

பாங்கிக் குலகின்மேலவைத்துரைத்தல்.

வாமத்துமைமகிழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
ருமக்குவிமென்முலைமட்டுவார்குழற்றையனல்லாய்
நாமக்கடலைக்கலமிவர்ந்தேறுவர்நானிலத்தோர்
காமக்கடலைமடன்மாவிவர்ந்துகடப்பர்களே. (கoடு)

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்.

பாவாக்கிமுன்பெண்பனையாகவாண்பனைப்பாட்டருளுந்
தேவாக்கியாளுந்திருவெங்கைவாணரிற்றேர்ந்தெருக்கம்
பூவாக்கிமாலையணிந்துபொன்னேயொருபொற்பனையை
மாவாக்கிநாளையும்மூர்ந்துவீதிவருகுவனே. (கoசு)

பாங்கி தலைமகளவயவத்தருமைசாற்றல்.

மந்தாகினியணிவேணிப்பிரான்வெங்கைமன்னவநீ
கொந்தார்குழன்மணிமேகலைநூனுட்பங்கொள்வதெங்ஙன்
சிந்தாமணியுந் திருக்கோவையுமெழு திக்கொளினு
நந்தாவுரையையெழுதலெவ்வாறுநவின்றருளே. (௧0எ)

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்.

ஐயானனமுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
பொய்யாவிளமுலைமங்கைநல்லாரிடைபொய்யென்றதை
மெய்யாகச்சாதித்தெழுதாவிடிற்புகழ்வேண்டியயான்
கையாலெடுத்ததுதூரிகையேயன்றுகாரிகையே. (௧0அ)

பாங்கியருளியல்கிளத்தல்.

வென்றிப்படைநன்மழுவுடையார் திருவெங்கையிலே
குன்றிற்பொலியுங்குவிமுலையாளொடுகூடவெண்ணி
நின்றிப்படிதளர்வேலண்ணலேயென்றுநீக்கமற
வன்றிற்பெடையொடுவாழ்வதன்றோபனையாவதுவே. (௧0௯)

பாங்கி நொண்டுநிலை கூறல்.

மூலத்தனிமுதலானூர் திருவெங்கைமொய்வரையாய்
நீலத்தடங்கண்ணினாட்குன்குறைசொலநேர்ந்திலளேற்
கோலத்தளிரியன்மாதின்கருங்கட்குடங்கவரத்
தாலத்திவர்கனிையாவர்பின்னைத்தடுப்பவரே. (௧௧0)

தலைவியிளைமைத்தன்மைபாங்கி தலைவற்குணர்த்தல்.

பொடிக்கின்றகொங்கையிடைவருத்தாமுனம்பூவிரவி
முடிக்கின்றகங்குல்களம்வருத்தாமுனமுத்தலைவேற்
பிடிக்கின்றவங்கையர்வெங்கையிலேயிளம்பெண்ணினுக்கா
வடிக்கின்றவேலண்ணலேயென்கொலோசொல்வருந்துவதே.

தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்.

கருவுக்குமாமருந்தானூர்தென்வெங்கைக்கனகவெற்பிற்
பொருவுக்குமாறொன்றிலாதெழுந்தோங்கியபூண்முலையாய்
திருவுக்குமாலைத்தருமெழில்கூர்நுந்திருந்திழைக்கு
மருவுக்குவாசனைபோல்வந்ததாலென்னைவாட்டுவதே. (ககஉ)

பாங்கிசெவ்வியருமைசெப்பல்.

கிளிக்குஞ்சுவையமுதூட்டாளக்கிள்ளைசொற்கேட்டுவவாள்
குளிக்குஞ்சுனையிற்குளியாள்சிலம்பெதிர்கூவுகிலா
ளளிக்குந்தொழிலுடையார்வெங்கைவாணரணிவரைமேற்
றுளிக்குஞ்செந்தேன்மலர்த்தாராயவட்கென்னசொல்லுவனே.

தலைவன்செவ்வியெளிமைசெப்பல்.

தேன்வந்தகொன்றைச்சடையாளர்வெங்கைச் செழுஞ்சிலம்பி
கான்வந்தவேரிப்புனற்கோர்சிறுவழிகாட்டுதல்போல் [ற்
யான்வந்தவாறுசிறிதுணைத்தாலிடையீடின்றியே
தான்வந்துகுங்குமக்கொங்கைகளாரத்தழீஇக்கொளுமே.(ககச)

பாங்கி யென்னைமறைத்தபினெளிதெனநகுதல்.

குற்றாலமுந்தென்றிருவாலவாயுங்குடியிருப்புப்
பெற்றார்பவர்திருவெங்கையிலேயெங்கள்பெண்ணணங்கின்
முற்றாமுலையையென்னைமறைத்தின்பமுயங்குறுதல்
கற்றாவினைமறைத்தேயதன்பாலைக்கறப்பதுவே. (ககரு)

அந்நகைபொறாஅதவன்புலம்பல்.

தடாதுவிளங்கொளியானூர் திருவெங்கைத்தையனல்லாய்
படாதுவளர்முலையால்வருநோயைப்பரிகரித்து
விடாதுநகைசெய்திகழ்வதளற்றில்விழுந்தவனை
யெடாதுமருமமுருவச்செவ்வேல்கொண்டெறிவதுவே.(ககசு)

பாங்கிதலைனத்தேற்றல்.

தொடர்ந்தாளும்வெங்கைப்பழமலைவாணரச்சுந்தரர்சொற்
கடந்தாலுமென்சொற்கடவாள்வரிச்செங்கயன்மருட்டும்
விடந்தாழயிற்கண்மடமான்றருமயல்வெள்ளத்திலே
கிடந்தாகுலமுற்றிடேல்விடுவாயுன்கிலேசத்தையே. (கக௭)

பாங்கிகையுறையேற்றல்.

ஏகநிலைத்தவுமைபாகன்வெங்கையிமையவெற்பின்
மாகநிலத்திலரிதாயவின்பம்வளர்ந்தெழுமே
பாகநிலப்பிறைவாணுதலாடன்பரவையல்குற்
போகநிலத்திலிட்டாளையனேயுன்கைப்பூந்தழையே. (ககஅ)

கிழவோனுற்றல்.

வன்மொழிபோலவுரைத்தவெல்லாமிந்தமங்கைநல்லா
ளின்மொழியேமனத்தன்புவிடாமலிசைத்தமையான்
மென்மொழிவாய்மைத்திருத்தொண்டர்தாமுனம்விட்டெறிந்த
கன்மொழிமாமலரன்றே திருவெங்கைக்கண்ணுதற்கே. (கககூ)

இறைவன்றனக்குத்துறைநேர்பாங்கி யிறைவிக்கவன்குறையுணர்த்தல்.

வத்திரமைந்துடையார்வெங்கைவாணர்வரையணங்கைப்
பத்திரங்கொண்டருச்சித்தேவரங்கொளும்பான்மையரை
யொத்திரங்குள்ளமொடுபூந்தழைக்கையொருவரின்று
சித்திரமொன்றனையாயடைந்தார்நந்திருப்புனத்தே. (கஉ0)

இறைவி யறியாள்போன்றுகுறியாள்கூறல்.

வேலுக்கும்அம்புக்குமாறுகொண்டோடும்விழிமடவாய்
மாலுக்குநன்மனையாண்மனையாகிவழங்கும்வல்ல
கோலுக்குவல்லவண்ணுமலையார்கட்டுகோயிலகப்
பாலுக்குவந்ததுகண்டாய்நம்வெங்கைப்பழமலையே. (கஉக)

பாங்கியிறையோற்கண்டமைபகர்தல.

போரையும்வேலேயுமாற்றிதன்வெங்கையிற்போதக்கண்டேன்
வாரையுங்கீள்பெருங்கொங்கையின்மேன்மனம்வைத்திருண்ட
காரையுஞ்சீறுமலர்க்குழலாய்கரியுங்கிரியும்
பேரையுஞ்சீரையுங்கேட்டுமுன்போந்தபெருந்தகையே. (கஉஉ)

பாங்கியைத்தலைவிமறைத்தல்.

நாரணனுன்முகன்காணுர்சதானந்தர்ஞானபரி
பூரணர்வெங்கைப்பழமலைவாணர்பொருப்பின்மலர்த்
தாரணிவார்குழலாய்நிந்தைகூறத்தகாதுகண்டாய்
காரணமின்றிக்கலுழ்வாரொருவரைக்கண்டுகொண்டே. (கஉஙு)

பாங்கி யென்னைமறைப்பதேன்னெனத்தழால்.

மேலிலையென்னவுயர்ந்தார்திருவெங்கைவெற்பிலுள
மாலிலையென்னவெனைமறைத்தாய்திருமாலுறங்கு
மாலிலையன்னவயிற்றணங்கேயருந்தாய்க்கொளித்த
சூலிலைநெஞ்சறியாவஞ்சகமிலைச்சொல்லுதற்கே. (கஉச)

பாங்கிகையுறைபுகழ்தல்.

நீரையணியுந்திருச்சடையார்வெங்கைநித்தர்வெற்பிற்
றூரையணியுமதன்றேர்கண்டம்மதழைத்ததுகாண்
வாரையணியுமுகிண்முலையாயணிவாய்த்தவல்குற்
றேரையணியுந்தகுதியதாமிந்தச்செந்தழையே. (கஉரு)

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தல்.

வளங்கனிவெங்கைப்பழமலைவாணர்வரையினவர்
குளங்கனிவெண்மருப்போர்மதயானையொளிர்நுதலாய்
களங்கனியன்னமடப்பிடிவாயிற்கனிந்துவிழும்
விளங்கனிநல்கக்கண்டானரம்பைதுண்ணும்விளங்கனியே. (கஉசு)

மறுத்தற்கருமைமாட்டல்.

நந்தாவொளியர்திருவெங்கைநாட்டினமக்களிப்பச்
சந்தாடவியுளிறைவர்கொய்யாப்பைந்தழையுமில்லை
முந்தாவவர்க்கெதிர்நானுரையாப்பொய்ம்மொழியுமில்லை
வந்தாலினியெனக்கில்லைபெண்ணேயொருவார்த்தையுமே. ()

தலைவன் குறிப்புவேறாகநெறிப்படக்கூறல்.

போருடையானுடையார்வெங்கைவாணர்பொருப்பின்மணித்
தேருடையார்கருத்தேதோவறிந்திலந்தேமொழியாய்
ஊருடையானினும்வேம்புடையானினுமையபனைத்
தாருடையானல்லனேமதிமானெனச்சாற்றினரோ. (கஉஅ)

தலைவியைமுனிதல்.

மறியேறியகைத்திருவெங்கைவாணர்மணிவரைமேற்
சிறியேனம்மெய்களிரண்டினும்வாழ்ந்திடுஞ்செய்யவுயிர்
நெறியேரயில்விழியாயின்றுகாறுமிரண்டென்பதை
யறியேனறிந்தனனேலுரையேனிவ்வடாதனவே. (கஉகூ)

தலைவிபாங்கியைமுனிதல்.

நாட்டுமெலிபுகழ்வெங்கைபுரோசர்நயந்துகதி
காட்டுமமலர்ருளான்முன்றெய்வங்கடைப்பிடித்துக்
கூட்டுமொருவனைத்தானேநடுநின்றுகூட்டுதல்போல்
நீட்டுமொழிகள்பலபகர்ந்தாளிவட்கென்சொல்வதே. (கங0)

தலைவிகையுறையேற்றல்.

பலர்செய்தமென்றுதியாயினுங்கொச்சையம்பாலன்முதற்
சிலர்செய்தவின்றமிழிச்சையினார்திருவெங்கையன்னாய்
அலர்செய்துநிற்பதொன்றாயினுமாகவனங்கனெய்யும்
மலர்செய்தநோய்மருந்தாமாயினல்குகமாந்தழையே. (கஙக)

இறைவிகையுறையேற்றமைபாங்கி யிறைவற்குணர்த்தல்.

இரைத்துப்பொருகங்கைவேணியர்வெங்கையிறைதழையென்
றுரைத்துக்கொடுத்தலுமோடிவந்தேற்றதுயிர்த்துமுத்தம்
நிரைத்துக்கிடக்குமுலைமேலழுத்தினணேரிழைதான்
னணைத்துக்குடித்திலளன்பசெய்யாததுமவ்வளவே. (௧௩௨)

பாங்கிதலைமகற்குக்குறியிடங்கூறல்.

அகலிலிருக்குஞ்சுடரென்வெங்கையகத்திருக்கும்
புகலிலிருக்கும்பொருளனையார்தம்பொருப்பருகே
இகலிலிருக்குங்கதிர்வேலிறைவவிரவுகடும்
பகலிலிருக்கும்பொழில்பகல்யாங்கள்பயிலிடமே. (௧௩௩)

பாங்கி குறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

புணர்பூத்தவார்முலையாய்மலர்தாங்கொய்யப்போதுவமந்
தணர்பூத்தசொன்மலர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
லிணர்பூத்தகட்கவர்வண்டிசைகூருமிளங்கொடிப்பெண்
ணிணர்பூத்தகொம்பர்க்கொழுநனொடாடியசோலையிலே. (௧௩௪)

குறியிடத்துய்த்துநீங்கல்.

மானேநின்கண்ணிகல்பெற்றுள்வாவிமருவலணா
யானேயளியினம்பின்றொடர்ந்தார்ப்பக்கொண்டிங்குறுவேன்
ஆனேறுடையர்திருவெங்கைவாணரருண்முருகன்
தானேறுமயிலாடல்கண்டேநிற்கத்தண்பொழிற்கே (௧௩௫)

இறையோனிடத்தேதிர்ப்படுதல்.

இயலோடுமெல்குந்திருவெங்கைவாணரிமையவெற்பிற்
கயலோடும்வள்ளைக்கொடியோடுமோர்பைங்கமுகணங்கும்
புயலோடுநல்லிளநீரோடுநின்றுபுடைபெயருஞ்
செயலோடுநிற்பவிங்கின்றுகண்டேனொறுதீங்கரும்பே. (௧௩௬)

புணர்ச்சியின் மகிழ்தல்.

மற்றின்ப முண்டென்ப தன்றாலிவ் வடரவந்த வின்பஞ்
சிற்றின்ப மென்பது தென்வெங்கை வாணர் திருநடனம்
முற்றின்பஞ் செய்யுஞ் சிதாகாசந் தன்னை யுணர்வுடைமை
பெற்றின்ப மெய்தினர் சொல்வர் சிற்றம்பலப் பேர்புனைந்தே. ( )

புகழ்தல்.

வெங்கைப் பழமலை யெம்மானு மையும் விளங்குமவன்
பங்கைப் பெறுமுமை செங்காவி யுமவள் பாலனொரு
செங்கைக் கதிர்வடி வேலுந் தரிப்பது செப்பிலிந்தக்
கொங்கைக் குடமுடை யாள்விழி காட்டுங் குறிப்பதுவே. (க௫௮)

தலைமகளைத் தலைமகன் விடுத்தல்.

நீயாவி வந்தளித்தாய் தமியேற்கு நிலாமலினிப்
போயாவி நல்கிநிற் காணுந் தலமரும் பூவையர்க்கு
மாயாவி னோதர் திருவெங்கை வாணர் வரையினெதிர்
கூயாவி மென்மலர் கொய்துநின் றாடுக கோமளமே. (க௫௯)

பாங்கி தலைவியைச்சார்ந்து கையுறைகாட்டல்.

நஞ்சமமுது செய் வெங்கைபுரேசர் நன்னாடனையாய்
வஞ்ச முறவளி யெல்லா மடக்கிய முதவெளி
விஞ்சுமதி கண்டிதழ்மூடி யோகம் விளைத்த தனாற்
கஞ்சமிது முக்சாரூபம் பெற்றது கைக்கொள்கவே. (க௬0)

தலைவியைப்பாங்கிற்கூட்டல்.

கங்கை விழியு முகமுஞ் செவ்வாயுங் கரந்துமைக்குச்
செங்கயலுஞ் செங்கமல மு மாம்பலுஞ் செப்புமவர்
வெங்கை யனைய விலங்கிலை வேற்கண் விளங்கிழையாய்
மங்கையரா யடைந்தம்மனை யாடுக வந்தருளே. (க௬௧)

நீங்கித்தலைவற்கோம்படைசாற்றல்.

பிறவாவடிவன்றிருவெங்கைமேவும்பிரானொடுபோய்
யுறவாருயிருறவேயாக்குஞ்சத்தியையொப்பவின்று
குறவாணர்தங்கண்மடமாதைநின்னொடுகூட்டுமென்ன
மறவாதிருமன்னவாவிதுவேநல்வரமெனக்கே. (கசஉ)

உலகியன்மேம்பட விருந்துவிலக்கல்.

மாயற்கரியர்திருவெங்கைவாணர்மணிவரைமேல்
லீயற்பொரியுங்குறும்பூழ்க்குழம்புடனேனமெல்லூன்
நீயற்கறியுந்தினைமூரலுமெஞ்சிறுகுடில்வாய்
நேயத்திவண்மிசைந்தேகிலென்னாகுநெடுந்தகையே. (கசங)

விருந்திறைவிரும்பல்.

நானக்களபமுலையீரெனக்குநவில்வதென்னீர்
வானத்தவர்தொழுதேத்துஞ்சீர்வெங்கைவாணர்க்குங்கள்
கானக்குறவரிறைமகன்றன்முனங்கல்லையிற்பெய்
யேனத்தசைக்கறியன்றேமிகவுமினியதுவே. (கசச)

பகற்குறி.

கிழவோன்பிரிந்துழிக்கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கல்.

நந்தாமதுகைப்பழமலையார்வெங்கைநாடனையாய்
வந்தாவியம்புயம்வாட்டுமுன்னாளிலம்மாலையன்று
சிந்தாகுலமுறவேதனித்தாரைச்செறுக்குமதன்
செந்தாமரையைமலர்த்துமிம்மாலைச்சிறுபொழுதே. (கசரு)

பாங்கிபுலம்பல்.

அருந்தாவிடமும்மருந்தியவ்வானவராருயிரைத்
தருந்தாருவெங்கையிலெவ்வகையானுந்தனைத்தப்பியே
யிருந்தாலுமாவிகவர்வான்மதிப்பிள்ளையீன்றுவைக்கும்
பெருந்தாபமாலைக்கிவளென்கொலோபிழைசெய்ததுவே. ()

தலைவனிடத்தலைவிவருந்தல்.

கருமுன்படுந்துயர்தீர்ப்பார்நற்கட்செவிக்கங்கணவீ
ரிருமுன்கரமுடையார்வெங்கைவாணரிமையவெற்பில்
வருமுன்மணியும்புனைபூந்துகிலுங்கொண்டாயவெள்ளம்
வருமுன்வந்தாரிலையேயணிகோலநம்மன்னவரோ. (௧௪௭)

தலைவியைப்பாங்கிகழறல்.

புணர்ந்தாருள்வெங்கைப்புரநாதர்பாகம்புணர்ந்தநறு
மணந்தாழ்குழலுமைமங்கையல்லாமன்மகிழ்நர்தமைத்
தணந்தாரமைகிலர்நீதரியாமற்றளர்ந்தனையேற்
பணந்தாழகலல்குலாய்நகுவார்நினைப்பார்த்தவரோ. (௧௪௮)

தலைவிமுன்னிலைப்புறமொழிமொழிதல்.

உரையாதமுன்னமுணர்வார்தமக்கன்றியுற்றதன்னோய்
வரையாமலுள்ளவெல்லாமுரைத்தாலுமதித்துமனங்
கரையாதவர்கட்குரைப்பதில்வெங்கைக்கடவுளுண்ட
திரையாலமுண்டுயிர்நீத்தாலுநன்றுதெரிந்தவர்க்கே. (௧௪௯)

பாங்கியோடு பகர்தல்.

வன்பந்தகனையழைக்குநஞ்சூணின்மறைப்பவர்போன்
முன்பந்தனையிலர்வெங்கையின்மேவிமுயங்குறுபே
ரின்பந்தருமவரவ்வின்பமூடுறவின்றுபிரி
துன்பங்கலந்தளித்தாரறிந்தேனிலைத்தூமொழியே. (௧௫௦)

பாங்கியச்சுறுத்தல்.

சுனைக்காவியன்னவிழிநீபுனத்திற்சுகங்கடியா
துனைக்காதல்செய்தவர்தம்பொருட்டாகவுலைதல்கண்டு
வினைக்காடெறியுமழுவார்திருவெங்கைவெற்பிலன்னை
தினைக்காவன்மற்றொருவர்க்களித்தாலென்னைசெய்குவையே.

நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கல்.

தம்மாவியுந் தந்தலைவரும் வேறுத்ருமவரே
அம்மா வுலகிற் பிரிந்திருப்பாரளி மூசுமதக்
கைம்மா வுரியர் திருவெங்கை வாணர் கனகவெற்பில்
ஏ ஐம்மாவியேய வொன்றாற் பிரிகுவ தெவ்வண்ணமே. (௧௫௨)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

கடிக்குங் கரும்பு மதவேள் சிலையவன் கைப்பகழி
முடிக்குங் கடிமலராமினிக் கேள் வெம் முயலகன்மேல்
ந ன்டிக்குங் கமலபதத்தார் திருவெங்கை நாடனையாய்
வடிக்குஞ் சுடரிலை வேலன்பர் தேரின் மணிக்குரலே. (௧௫௩)

சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

தழலாற் கடிய வளியே நறுமென் றழைகள்கொய்யக்
கழலார்ப்புறுமென்பதத்தார் புனத்தினுங் காவகத்துஞ்
சுழலாத் திரியுங் கிளிகாளினிவெங்கைச் சோதிவெற்பில்
நி ளிழலாற் பொலிந்த விளம்பொழிற் கேயிரு நெஞ்சுவந்தே. (௧௫௪)

முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தல்.

தொண்டா வெமையுடையான் வெங்கைசூழிளஞ் சோலையிற்பூத்
தண்டா தளவுமளிகாளுமக்குத் தகாதுகண்டீர்
கண்டானினைந்துபின் காணுத போதெங் களைமறக்கும்
வண்டாரிறைவ ரொடுகூடி யெம்மைமறப்பதுவே. (௧௫௫)

முன்னின்றுணர்த்தல்.

நனைகாத்த பூமடவார் விழியாக நயந்தருளங்
கனைகாத்த பாகர்தம் வெங்கையிலே வண்டு காவிமலர்ச்
சுனைகாத்த வெற்பெமர் வேலண்ணலே யிச்சுகங்கடிந்து
தினைகாத்த வெம்மைத் துயர்புகக் காப்பர் செறித்தினியே. ()

---

(௧௫௪) தழல் - கவண்.

முன்னின்றுணர்த்தியோம்படைசாற்றல்.

அந்திப்பொழுதிற்பெடைதாமரையுள்ளகப்படநோம்
புந்திச்சுரும்புகதிர்வருங்காறும்புறந்திரியும்
நந்திக்கொடிவலங்கொண்டோன்றிருவெங்கைநாட்டிறைவ
சிந்தித்தமைமறவா திருநீநின்றிருவுளத்தே. (௧௫௭)

கிழவோன் றஞ்சம்பெறதுநெஞ்சொடுகிளத்தல்.

தூற்றிக்கடிமலர்ப்பைந்தேன்கவர்ந்துசுரும்பினங்கள்
ஏற்றிக்குவடுறவைத்தாங்கிதண்ணிருந்தவ்வரை
நீற்றிற்றிகழ்வடிவார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
போற்றிக்குறவர்வைத்தான்மனமேயென்புரிகுவமே. (௧௫௮)

பகற்குறியிடையீடு.

இறைவனைப்பாங்கிதுறிவரல் விலக்கல்.

கானக்குறவர்திருவெங்கைவாணர்கனகவெற்பில்
ஏனக்குரலரிவான்குறித்தாரன்னையென்பவளும்
மானக்கயல்விழியாள்குரலீர்வருவதுபோற்
றேனக்கலர்தொடையாய்வருவாளித்தினைப்புனத்தே. (௧௫௯)

இறைவியைத்துறிவரல்விலக்கல்.

மாடுண்டவீரப்பிறையார்தென்வெங்கைவரையினிலுன்
சேடுண்டகொங்கைப்பசலைகண்டே தினைக்காப்பயிர்த்துத்
தோடுண்டகாதுடையாயன்னைதானுந்துணிந்திலளீ
யோடுண்டகூழெனவேமறுகாநிற்குமுள்ளமுமே. (௧௬௦)

இறைமகளாடிடநோக்கியழுங்கல்.

நீடுந்தினையிற்கிளிநோக்குதலென்னின்றுநம்மோ
டாடுந்தலைவர்வரனேக்கித்தணும்வருடனே
கூடுந்தொழின்மறைக்குஞ்சனையோடலர்கொய்யுமலர்க்
காடும்பிரிவுறச்செய்வதென்னோவெங்கைக்கண்ணுதலே. ( )

பாங்கி யாடிடம்விடுத்துக்கொண்டகறல்.

வயிரோசனனுக்குலகீந்தவர்வெங்கைமன்னனுக்குப்
பயிரோடுறவறநீத்தாளென்றெண்ணிப்பழுதுரையல்
செயிரோர்சிறிதுமிலாக்கிளிகாடன்சிறுகுடிலுக்
குயிரோடரிவைநடந்துசென்றாளென்றுரைமின்களே. (௧௬௨)

பின்னு ணெடுந்தகைகுறிவயினீடுசென்றிரங்கல்.

தன்னோடிருந்தபொழுதிளஞ்சோலைசெய்தன்மைகண்டேற்
கன்னோதனியிருந்தாற்செய்யுமாறுமறிவிக்கவோ
மின்னோவெனநின்றவிர்சடையார்திருவெங்கைவெற்பில்
என்னோவறிந்தருள்செய்வான்வராமலிருந்ததுவே. (௧௬௩)

வறுங்களநாடிமறுகல்.

பெறுங்கள்நஞ்சமுடையாரடியவர்பிள்ளைதனை
அறுங்களென்னுமொருவெங்கைவாணரணிவரைமேல்
நறுங்கள்வன்னகுழனீங்கமங்கலநாணிழந்த
வறுங்களமென்னவிருந்ததந்தோவிம்மணியிதணே. (௧௬௪)

குறுந்தொடி வாழூர்நோக்கிமதிமயங்கல்.

அறத்தாறுடையர்நுகர்பெரும்போகமறமறியா
மறத்தாறுடையர்விரும்புதல்போலும்வளர்சடையின்
புறத்தாறுடையர்திருவெங்கைவாணர்பொருப்படைந்த
குறத்தாறுடையர்மடமாதைமேவக்குறிப்பதுவே. (௧௬௫)

இரவுக்குறி.

இறையோனிருட்குறிவேண்டல்.

பொருந்தாரரணம்பொடித்தோர்பவப்பிணிபோக்குதற்கு
மருந்தாமிறைவர்திருவெங்கைவாணர்வரையனையீர்
திருந்தார்கலியிற்புகுந்துநன்மீன்வரச்செய்துமக்கு
விருந்தாகவைத்தகன்றானெளியேனையவ்வெய்யவனே. (௧௬௬)

---

(௧௬௨) வைரோசனன் - வாணாசுரன்.

பாங்கிநெறியினதருமைகூறல்.

அங்கமுழுவணியானென்றென்வெங்கையரனருண்மா
தங்கமுழுமதயானையன்றுடகற்சாடுமொரு
சிங்கமுழுவரியன்றென்வேழமுஞ்சியமுஞ்சேர்
துங்கமுழுவன்மெய்வாறிருள்வரச்சொல்லுவதே. (௧௬௭)

இறையோனெறியினதெளிமைகூறல்.

பங்கந்தனக்கிலன்வெங்கையிலேநம்பணைமுலைமா
தங்கந்தனக்குமம்மாதங்கபாரந்தரிக்குமிடைச்
சிங்கந்தனக்குந்தளர்வதல்லாமற்சினவிலங்கின்
சங்கந்தனக்கொருநானேதளர்குவன்றாழ்குழலே. (௧௬௮)

பாங்கி யவனாட்டணியியல்வினாதல்.

போதேதுகொய்வரிழையேதணிவர்பொழில்விளையாட்
டேதுசெய்வர்புனலேதுதோய்வரெமைத்துதிப்பிற்
றீதேதுமில்லையெனும்வெங்கைவாணர்செழுஞ்சிலம்ப
சூதேதெனுமுலையாருங்கணாட்டியற்சொல்லுகவே. (௧௬௯)

கிழவோனவனாட்டணியியல்வினாதல்.

என்னாட்டணியியலென்னாயினென்னுனக்கென்றனக்குப்
பொன்னாட்டணியியலெல்லாங்கவர்ந்துபுகழ்மலிந்த
சொன்னாட்டணியியல்வெங்கைப்பிரேசர்சுடர்க்கிரிசூழ்
நின்னாட்டணியியலெல்லாமுரைத்தருணேரிழையே. (௧௭0)

அவற்குத் தன்னாட்டணியியல்பாங்கிசாற்றல்.

பிறைக்கோலஞ்செய்நுதற்சூட்டணிகுவர்பெய்வளையால்
விறைக்கோலஞ்செய்வர்சுனையர்வேரவ்விரதிதனைச்
சிறைக்கோலஞ்செய்யும்விழியார்தம்வெங்கைச்சிலம்பமத [ரே.
எறைக்கோலஞ்செய்யநறைக்கோலஞ்செய்வபொன்னாட்டவ

இறைவிக்கிறையோன்றுறையறிவுறுத்தல்.

வன்மானுமென்முலைச்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
வின்மான்மதிக்கையரவிந்தம்வாடவவ்வேள்விதரும்
நன்மான்கரத்தர்தம்வெங்கையிலேயிற்றைநாளிரவின்
மின்மான்மதிமுகங்காண்பான்விரும்புநெடுந்தகையே. (௧௭௨)

நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தல்.

ஒலியாலசையச்சருகெழத்தோகையுடன்குதிப்பப்
புலியாவெனவெழக்குஞ்சரமோடப்புளிநரெல்லாம்
மெலியார்விரையும்வனத்தேயிறைதிருவெங்கைவெற்பர்
மலியாரிருள்வர்நெஞ்சமெவ்வாறுவலிப்பதுவே. (௧௭௩)

நேரிழைபாங்கியோடுநேர்ந்துரைத்தல்.

மின்னோடுவேந்தவிரிசடையோன்றிருவெங்கைவெற்பின்
மன்னோடுநீயிருள்வந்தேகெனச்சொன்மடந்தைநல்லாய்
யென்னோடுகூடியிருப்பதுபோல்விருந்துமனம்
முன்னோடுகூடினினியேதுநானிங்குரைப்பதுவே. (௧௭௪)

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல்.

கொலையைக்குறித்தவிலைவேலவநின்குறிப்பிசைய
முலையைப்புணர்மென்கொடியிடையாடன்முரணுமன்ச்
சிலையைக்கரைத்துவந்தேனென்றுநான்வெங்கைச்செல்வரைப்
மலையைக்குழைக்கவும்வல்லேனினியிந்தமாநிலத்தே. [போல்

துறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்.

விந்தாசலமுனிமாதவன்போற்றரன்வெங்கைவெற்பிற்
சந்தாடவிகண்முறித்தெறிவேலொடுதண்புனத்தில்
வந்தாகுலநமக்காக்கியவாரணம்வந்துற்றதோ
நந்தாவனத்திற்பறவையெல்லாமுநரல்கின்றவே. (௧௭௬)

---

(௧௭௬) வேல் - ஆயுதம்; மூங்கில்.

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

மேனைக்குரியமருமகனார் திருவெங்கைவெற்பினல்
மானைக்கடந்துசெவியளவோடுமதர்விழியாய்
யானைக்கரியுமரிக்குச்சரபமுமாகியிந்தக்
கானைக்கடந்துவந்தாருயிர்போலுநங்காவலரே. (௧௭௭)

அவட்கொண்டுசேறல்.

முருந்தார்நகையுமைபங்காளர்வெங்கைமுதுகிரிமேல்
விருந்தார்மறைகண்மறுத்தவிப்போதிலிதழ்திறந்து
விருந்தார்மளிகட்கினிதூட்டுமெல்லிகைமென்மலர்கொய்
தருந்தாரணிகுவனில்லார்தெழுந்தருளாரணங்கே. (௧௭௮)

குறியுய்த்தகறல்.

காதாரமுதம்பெறவேண்டியன்றெருகாரிகைபாற்
றூதாய்நடந்ததிருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
போதார்மலர்மல்லிகையோடுமுல்லையும்போய்க்கொணர்வேன்
பாதாரவிந்தம்வருந்தாதிவணிற்கபைங்கொடியே. (௧௭௯)

வண்டுறைதாரோன்வந்தெதிர்ப்படுதல்.

தாட்டாமரையென்றலைக்கணிவோன்வெங்கைத்தண்சிலம்பிற்
றீட்டார்வொருநடையோவியம்போலுந்திருவுருவீர்
சூட்டார்னென்றுங்கதிரேடாங்கதவடைத்தாங்கதன்மேற்
பூட்டார்மளியுறப்பூட்டிற்றன்றேவுங்கள்பூவகமே. (௧௮௦)

பெருமகளாற்றினதருமைநினைந்திரங்கல்.

விண்டெரியாதுமுகிலான்முகில்பொழிவெள்ளத்தினன்
மண்டெரியாதெவ்வகையடைந்தாயன்பமாறன்வயற்
கண்டெரியாவிருளிற்பேர்மருமைகருதியன்றே
பண்டெரியாயொளிர்வெங்கைப்பிரான்பதம்பாலித்ததே. ()

---

(௧௮௧) மாறன் - இளையான்குடிமாறநாயனார்.

புரவலன்றேற்றல்.

முன்காட்டுபெந்தமும்வீடுமுள்ளோன்வெங்கைமொய்வரைசூழ்
கொன்காட்டிலுன்குழல்போலேயிருண்டவிக்கூரிருள்வாய்
பொன்காட்டுநல்லெழிலுன்னிடைபோலப்புயனுடங்கும்
மின்காட்டிவந்ததிங்குன்னூர்வழியைவிழியினுக்கே. (௧௮௨)

புணர்தல்.

ஓர்போதெனும்பிறைவேணியிற்சூடுமொருவர்வெங்கைத்
தேர்போலகன்றமணியல்குலாயிருசெய்யவிள
நீர்போலமைந்தின்பமேதிரண்டாங்குறுநின்முலைக்கண்
மார்போட்டழுந்தத்தழுவவென்னான்செய்தமாதவமே. (௧௮௩)

புகழ்தல்.

பெண்காட்டியவொருபங்குடையாருதிர்பிட்டினுக்கா
மண்காட்டியபொன்முடியார்திருவெங்கைவாணர்வெற்பிற்
றண்காட்டியமலர்க்கோதாய்குரும்பைகட்டாமொருமுக்
கண்காட்டுமோயினுமொவ்வாநினதொருகண்முலையே. (௧௮௪)

இறைமகளிறைவனைக்குறிவரல்விலக்கல்.

அரவெளிதோவவ்வனமெளிதோவன்றியாற்றின்மடுக்
கரவெளிதோநந்திருவெங்கைவாணர்களமருட்டும்
இரவெளிதோவிவையெல்லாங்கடந்திங்கெனையளிப்ப
வரவெளிதோவென்னுயிர்க்கரணாகியமன்னவனே. (௧௮௫)

அவனிறைவியையில்வயின்விடுத்தல்.

வலம்பொலிவீரமழுவாளன்வெங்கைமணிவரைமேல்
நலம்பொலிவாணுதல்வேற்கணல்லாயுன்னடைவிரும்பி
அலம்பொலியோடுதொடரோதிமமிலையஞ்சலைதாட்
சிலம்பொலியாமற்பரிகரித்தேகுன்றிருமனைக்கே. (௧௮௬)

இறைவியை யெய்திப்பாங்கிகையுறைகாட்டல்.

முட்டுப்படாத திருவாளன்வெங்கைமுளரிமுகை
நட்டுப்படாத்திளமுலையாயுன்னகையுடனே
மட்டுப்படாமலிகலுந்தளவின்றுமட்டுப்பட்டுக்
கட்டுப்படாமலென்கைக்கேவந்துற்றதுகண்டருளே. (௧௮௭)

இற்கொண்டேகல்.

சூடுந்துளபமணிநீல்வெற்புந்தொடர்ந்துமுனம்
நாடுந்திருவடியெம்மான்றிருவெங்கைநாடனையாய்
ஆடுங்கலாபமயில்போலுறங்குநம்மன்னையினூற்
றேடும்பொருளல்லமோசெல்லுவோநந்திருமனைக்கே. (௧௮௮)

பிற்சென்றிறைவனைவரவுவிலக்கல்.

தம்மேற்பணிபுனைவெங்கைபுரேசரைச்சார்கிலர்போற்
கைம்மேற்பொருடெரியாவிருள்வாய்வெங்கரியுடனே
தெம்மேற்புலிதிரியுங்காட்டினீயிச்சிறுவழிவந்
தெம்மேற்பழிசுமத்தாதகல்வாயெம்மிறையவனே. (௧௮௯)

பெருமகன்மயங்கல்.

ஆய்வாரளவினளவாகும்வெங்கையமலர்வெற்பிற்
றெய்வானுடங்கிடையாயறிந்தாரைச்செலவிடுப்போர்
போய்வாவென்பாரிவ்வுலகினிற்போவென்வேமுடித்து
நீவாவென்றுயிலைகண்ணோட்டமில்லைகொனின்றனக்கே. ( )

தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தல்.

வம்புகுறித்துவருமாரளியினமல்லிகைப்பூங்
கம்புகுறிக்கும்பொழுதில்வெங்கேசரைக்கைதொழுது
நம்புகுறிக்கண்வருமண்ணலேநின்னகரினிற்போய்க்
கொம்புகுறித்துவரக்காட்டொலியையெங்கொம்பினுக்கே. ( ).

திருமகட்புணர்ந்தவன்சேறல்.

முப்போதினுமந்தணர்தொழுதேத்துறுமுத்தலைவே[illegible]
[illegible]ப்போதகன்றிருவெங்கையன்னாளல்குற்காடரவம்
[illegible]ப்போதெனவொண்மணிவிளக்கேற்றியுதவிசெய்யுஞ்
செப்போதிளமுலையாய்செல்லுவேனென்றிருநகர்க்கே. (௧௯௨)

இரவுக்குறியிடையீடு.

இறைவிக்கிதுளையிறைவரவுணர்த்தல்.

வள்ளலம்பாகுமரியாளன்வெங்கைமணிவரைமேல்
விள்ளலம்பானல்விழியாய்துணைபுணர்மென்சிறகர்
[illegible]ள்ளலம்பாதுதுயில்கூர்தருதலொழிந்தெழுந்து
புள்ளலம்பாநின்றதென்னேநமதிளம்பூம்பொழிற்கே. (௧௯௩)

தான்குறிமருண்டமைதலைவியவட்குணர்த்தல்.

கானலைவேனின்முதிர்வாலெதிருறக்கண்டுமறி
மானலைந்தோடுதல்போல்வெங்கைவாணர்வெற்பிற்
றேனலைவார்தொடையார்குறியாமெனச்சென்றுநைந்தேன்
பானலைவென்றகண்ணாய்குறிவேறுறப்பைம்பொழிற்கே, ()

பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்.

மறிக்கும்புலனுடையன்பர்தம்பாவமரமுறியத்
தறிக்குங்கனன்மழுவெங்கைப்புரேசர்தடஞ்சிலம்பில்
வெறிக்குங்குமமுலைமெல்லியலாயிந்தமேதினியோர்
குறிக்குங்குறிசெய்வரோநமையாளக்குறித்தவரே. (௧௯௫)

புலந்தவன்போதல்.

மறந்தடுக்குஞ்செயல்வெங்கைப்புரேசர்மறைவனத்தில்
[illegible]றந்தழைக்குந்திருவாலயம்போலுலகர்ரிருளைப்
பிறந்தழித்தென்றுமொளியோடுலாவரும்பேரிருவர்
திறந்தடைக்கின்றதன்றேநெஞ்சமேநந்திருமனையே. (௧௯௬)

புலர்ந்தபின்வருங்களந்தலைவிகண்டிரங்கல்.

பணஞ்செய்பொறியிள்நாகர்பரணர்பகைதடிந்து
நிணஞ்செய்சுடர்மழுவெங்கைபுரேசர்நெடுஞ்சிலம்பிற்
குணஞ்செய்கதிரிலைவேலன்பர்தாங்குளிர்மாலையிட்டு
மணஞ்செய்தனரெனவோர்தழைந்தாய்மலர்மாதவியே. (௧௯௭)

தலைமகள்பாங்கியோடுரைத்தல்.

நல்லார்தொடர்பிளங்காய்முதிர்வாமெனநாடுரைப்ப
வல்லார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கையாதிவெற்பின்
மல்லார்திணிபுயத்தன்பர்நம்பான்முனம்வைத்தநட்பு
வில்லார்சிறுமென்றளிர்முற்றலாகிவிளைந்ததுவே. (௧௯௮)

தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

தீங்கையொன்றானுமுறுகிலர்போற்றுந்திருவடியான்
காங்கையன்றாதைதன்வெங்கையிலேபைங்கனகநிறக்
கோங்கைவென்றோங்குமுலையாய்நம்மன்பர்குறிபிழையார்
வேங்கையென்றாயினும்பூத்ததுண்டோமுல்லைமென்மலரே. ()

இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல்.

பொருவோவிலர்திருவெங்கையிலேமுன்புனத்திலெமை
மருவோடுயிரமுதென்றுபொய்கூறியுழன்றவரே
வெருவோமிரவும்பழியுமும்மூர்க்குவினவிழி
வருவோம்வரினுமெமைநோக்குறீரெனவந்திலமே. (௨௦௦)

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்.

நறவேயிதழியுங்கங்கையும்பாம்புநகைமதியும்
முறவேயணியுமணிமுடியார்வெங்கையூரனைய
புறவேயிளமயிலேயமுதேபசும்பொற்கொடியே
மறவேனுனையென்றுநீநினையாமன்மறப்பினுமே. (௨௦௧)

தலைவி குறிமருண்டமைபாங்கிதலைவற்குரைத்தல்.

ஈயார்தவரைக்கண்டிவரெனச்செல்லிரவலர்போற்
போயாவியிற்சிறுமாங்கனிவீழப்புரவலனே
நீயாவியிற்செய்குறியென்வேசென்றுநித்தர்வெங்கை
வீயாமலர்க்குழலாள்வறிதேநொந்துமீண்டனளே. (௨0௨)

அவன்மொழிக்கொடுமைபாங்கியவட்கியம்பல்.

கள்ளெழுங்கொன்றையர்வெங்கையிலேமைக்கடலின்மதி
நள்ளெழுங்காலம்பெறவேகுறியிடநான்மருவி
உள்ளெழுங்காமம்மருந்துபெறாமலுழன்றுசென்றேன்
புள்ளெழுங்காலையென்றாரன்பர்தாமிளம்பூங்கொடியே. (௨0௩)

என்பிழைப்பன்றென்றிறைவிநேர்தல்.

அஞ்சாமதற்றெறும்வெங்கைபுரேசர்மணிமிடற்றின்
னஞ்சாமிருளிற்குறிபிழையாதொருநான்குறித்துத்
துஞ்சாதிருந்துந்துஞ்சுற்றுளெனவவர்தூற்றப்பட்டேன்
னெஞ்சாவமுதனையாயினிநானிதற்கென்செய்வதே. (௨0௪)

தாய்துஞ்சாமை.

கயிற்றுணிகழர்வம்போற்சகந்தனிற்கற்பனையாக்
குயிற்றுநிகழிறைவெங்கையிலேயெழுங்கூன்பிறையோர்
எயிற்றுணிகழுமிளம்பேதையாமிவ்விரவுவந்து
துயிற்றுவனைதனைவெங்காலதூதர்துயிற்றுகவே. (௨0௫)

நாய்துஞ்சாமை.

சுளைவாய்மடைதிறக்கும்பலவான்வயற்றேன்றுசெந்நெல்
விளைவாய்மலியுந்திருவெங்கைவாணர்தம்வெற்பிடைமா
தளைவாய்மடமயிலேதனிவேழந்தனையொருப்பின்
வளைவான்ஞமலிகுரைத்திங்குறுமன்மறித்ததுவே. (௨0௬)

ஊர் துஞ்சாமை.

நீர் துஞ்சுஞ்செஞ்சடையார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பில்
வார் துஞ்சுமென்முலைக்கோமளமேவுந்துமால்வரைமேற்
கார் துஞ்சமாவின்மெல்லன்முன்றுஞ்சக்கடலுந்துஞ்ச
வூர் துஞ்சிலாதவென்னோவிதுநான்செய்தவூழ்வினையே. (உ0எ)

காவலர்கடுகுதல்.

தேவாதிதேவர்திருவெங்கைவாணர்சிலம்பர்நமை
மேவாதவண்ணங்கதிர்வேன்மருட்டும்விழிமடவாய்
கூவாமறுகிற்றிரிகாவலர்கையிற்கொட்டுபறை
வாவாவெனநெய்தலம்பறைகூவுநம்வாய்தலுக்கே. (உ0அ)

நிலவுவெளிப்படுதல்.

ஒழுங்கியிருந்தசடையாளர்வெங்கையொருவர்வெற்பிற்
புழுங்கியிருந்தமனத்தன்பர்தாம்வந்துபோமளவும்
மழுங்கியிருந்துமிளிர்திங்களையொருவாளரவம்
விழுங்கியிருந்துவிடாதுகொலோதளிர்மெல்லியலே. (உ0கூ)

கூகைகுழறுதல்.

நாகாபரணர்திருவெங்கைநாயகர்நல்லடிக்கண்
பாகாதவொனக்கூகூவென்றதத்திய திலிருந்து
நீகாவலரைவிலக்குகின்றாயுயிர்நீத்திலனேற்
கூகாய்நினதடல்காண்பேன்விடியிற்கொடிமுன்னமே. (உக0)

கோழிகுரற்காட்டுதல்.

வாய்மையெனினும்புலரியைக்கூறுதல்வாரணங்காள்
சேய்மையிறுநங்கொழுநர்தங்கூட்டஞ்சிதைத்தெமக்குத்
தீமையயந்தமையால்வெங்கைநாயகர்செய்தவறத்
தூய்மையுணர்ந்தவர்வாய்மையன்றாமெனச்சொல்லுவரே. ()

வரைதல்வேட்கை,

தலைமகளைப்பாங்கிபருவரல்வினவல்.

என்னிடத்துற்றகுறையுள்வோநம்மையீன்றவன்னை
தன்னிடத்துற்றமுனிவோர்வுலகந்தருமிமைய
மின்னிடத்துற்றபழமலையார்திருவெங்கையன்னாய்
நின்னிடத்துற்றதென்னோவுரையாய்நின்னினைவினையே. ()

அருமறைசெவிலியறிந்தமைகூறல்.

வேலையிலேவருநஞ்சமுண்டார்திருவெங்கைவெற்பின்
மாலையிலேவண்டிசைபாடுமென்குழல்வாணுதலாய்
சோலையிலேநங்கொழுநர்வந்தேகதிர்தோன்றுசிறு
காலையிலேதருமாலையன்னோவன்னைகண்டனளே. (உகங)

தலைமகன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

தாயுஞ்சுணங்கனுமூரும்வெங்காவலுஞ்சந்திரனுந்
தீயுங்குடிஞையுஞ்சேவலுந்தப்புஞ்செயலெளிதோ
பாயுஞ்சினவிடையார்வெங்கைவாணர்பனிவரைமேற்
காயுங்கதிர்வேல்வீரர்நம்மைக்கருதினுமே. (உகச)

தலைமகனூர்க்குச்செலவொருப்படுதல்.

அறிவேயொருவடிவாமீசர்வெங்கையிலன்னமன்னாய்
எறிவேலிறைவர்தம்மூர்க்கேகியாங்கவரெண்ணமெல்லாம்
அறிவேமவரன்பிலாமைகண்டாலுரையாடலமாய்
மறிவேமறிந்தபினந்தகனூர்க்குவழிக்கொள்வமே. (உகரு)

பாங்கியிறைவனைப்பழித்தல்.

வன்பற்றவர்தொழும்வெங்கைபுரேசர்மணிவரைமேல்
இன்பற்றிலர்கைவிடுத்தாரிறையவர்நீயவர்மேல்
அன்பற்றிலையணங்கேசிறிதேனுமன்பற்றவரைப்
பின்பற்றுவருளரோவிதுதான்மிகப்பேதைமையே. (உகசா)

இறைவி யிறையோன்றன்னைநேர்ந்தியற்படமொழிதல்.

சுரும்புகளிக்கும்பொழில்வெங்கைவாணர்சுடர்க்கிரிமேல்
அரும்புகடுக்குமுலையாயுலகுளவாவியெல்லாம்
விரும்புகொடைத்தண்ணளிவேந்தர்நம்மைவெறுப்பவரோ
கரும்புகசப்பதுவாய்க்குறையேயிந்தக்காசினிக்கே. (உகஎ)

கனவுநலிபுரைத்தல்.

ஓடுஞ்செயல்செயுமாசைத்தளையையொடித்திருத்தல்
கூடும்படிசெயும்வெங்கைபுரேசர்குவட்டில்விழி
மூடும்பொழுதெதிர்தோன்றிநிற்பார்கண்முகிழ்திறந்தால்
நீடும்புகழுடையாரெதிர்தோன்றிலர்நேரிழையே. (உகஅ)

கவினழிபுரைத்தல்.

ஈயார்பொருளுமிறையாக்கிணறுமெனத்துணைவர்
தோயாமுலைக்கணலமிழந்தேன்மதிசூடுமொரு
மாயாமயமலர்வெங்கைபுரேசர்மணிவரைமேல்
வேயாம்பணைபுரைமென்றோட்கருங்கண்விளங்கிழையே. ()

தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்.

விழிக்கிடனாகுநுதலார்தம்வெங்கையில்வேந்தொடுபெண்
பழிக்கலையென்றொருவார்த்தையையாரும்பகர்ந்துமிகுஞ்
சுழிக்கிடனாகுந்திருப்பர்க்கடலெனத்தோன்றுபுகழ்
மொழிக்கிடனாகுதுமென்பரைக்கண்டில்மொய்குழலே. ()

துன்புறுபாங்கிநீசொல்லெனச்சொல்லல்.

பொறியாலயம்பொய்கைசூழ்வெங்கைவாணர்தம்பூங்கரத்தில்
மறியாமெனப்பிறழ்சேயரிவாட்கண்மடந்தைநல்லாய்
பிறியாதுன்னுள்ளத்திருப்பர்க்கயல்வர்பேசுவதென்
அறியாதவர்தமக்கன்றோவொருவரறிவிப்பதே. (உஉக)

தலைமக ளலர்பார்த்துற்றவச்சக்கிளவி.

கலரானறிவரியார்வெங்கைவாணர்கனகவெற்பிற்
பலரானணியும்புகழார்பிறப்பொன்றிற்பாவிமதன்
மலரால்வருந்துயர்நீக்குவராயினுமண்ணுள்ளர்வா
புலரால்வருந்துயர்நீக்குகிற்பாரையிந்திலமே. (உஉஉ)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

ஒருகோடுதம்மிற்குறைந்தநல்வாரணமொன்றுமன்றி
யிருகோடுவந்துமிகுங்களிறேனுமிகன்மதமா
கருகோடுவெவ்வதரென்றாலும்வெங்கையமலர்தரு
முருகோடுறழும்வடிவாரிடைமனமுந்துறுமே. (உஉங)

காமமிக்ககழிபடர்கிளவி.

மாமாயனுந்தொழும்வெங்கைப்புரேசர்மணிவரைமேற்
பாமாமுனிவன்மலயானிலமொருபாலசைய
வேமாயர்வேய்ங்குழலாலூதமேனிவிற்கிற்பற்றுங்
காமானலமவியாகடலேழுங்கவிப்பினுமே. (உஉச)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

வம்புற்றனைவெண்மதியாலொடுங்கினைவண்டிழந்தாய்
வம்புற்றனைமிகுகண்முத்துகுத்தனையம்புயமே
நம்புற்றரவணியெம்மான்றிருவெங்கைநாட்டிறையை
வெம்புற்றனையெனைப்போலென்பதின்றுவெளிப்பட்டதே.()

நெறிவிலக்குவித்தல்.

நீரலைவேணியர்வெங்கையில்வாழுநெடுந்தகையைச்
சீரலைவாய்வருஞ்செவ்வேண்முருகனுஞ்சேறலருஞ்
சாரலைமேவுமொருபெருங்காட்டுத்தனிவழியில்
வாரலைநீயென்பவர்க்கேவருவனவண்புகழே. (உஉரு)

குறிவிலக்குவித்தல்.

பிளவுமதிச்செஞ்சடையாளர்வெங்கைப்பெருந்தகைதான்
றளவுநகைக்கருங்கண்மடவாய்விண்டலமுகட்டை
அளவுபொழிற்குறிவந்தாற்றுயில்பொழுதார்க்கும்புள்ளாற்
களவுவெளிப்படினென்னாய்முடியுநங்காரியமே. (உஉஎ)

வெறிவிலக்குவித்தல்.

மறிகொண்டவங்கையர்வெங்கையிலேமென்மலர்ப்பொழில்வா
குறிகொண்டவன்பர்தருநோயென்றன்னைகுறித்திலளாய் [ய்க்
நெறிகொண்டதெய்வமணங்கிற்றென்றேதன்னினைவழிந்து
வெறிகொண்டனண்மற்றொருவிதியோவிதுமெல்லியலே. ()

பிறவிலக்குவித்தல்.

அருங்கண்ணிவெண்மதிசூடும்பிரான்வெங்கையாவிமலர்க்
கருங்கண்ணிக்கையின்மென்றூவியன்னங்கருதிவைத்த
பெருங்கண்ணியிற்புனற்காக்கைபட்டாங்குப்பிறர்நமதில்
மருங்கண்ணிவந்தனரொன்பதுகேட்டின்னுமாய்ந்திலமே. ()

தூரவரைவரைவேதிர்கோள்ளுவித்தல்.

பூண்கொண்டமென்முலையாய்வெங்கைவாணர்பொதியவெற்
வேண்கொண்டநங்கருத்தீன்றவர்க்கோதுமிசைவுபெரு [பி
நாண்கொண்டுநங்கற்பழிதனன்றோவன்றிநாணிழந்து
மாண்கொண்டவங்கற்புறுதனன்றோநம்மரபினுக்கே. (உரு0)

வரைவுகடாதல்.

வினவியசெவிலிக்குமறைத்தமைவிளம்பல்.

வண்டுகெலிக்குந்தொடையாயெம்மன்னையிம்மாதுதுயில்
விண்டுதெரித்திலளென்கொலென்றாளரன்வெங்கைவெற்பிற்
பண்டுபுனத்தில்வருமதவாரணம்பாய்கனவு
கண்டுபினைத்துயின்றாளிலையென்றுகரந்தனனே. (உருக)

அலரறிவுறுத்தல்.

கோட்டுமேலைவில்விறலாளர்வெங்கைக்குளிர்சிலம்பிற்
றீட்டுமிலைமலிவேலண்ணலேநின்றிருக்கரத்தால்
வேட்டுமகிழ்செய்யணங்கெனவேயிவண்மென்குழலிற்
சூட்டுமலர்கண்டுலகமெலாமலர்சூட்டியதே. (உ௬உ)

தாயறிவுணர்த்தல்.

நீர்பூத்தசெஞ்சடையார்வெங்கைவாணர்நெடுஞ்சிலம்பிற்
கார்பூத்தவண்மைமடங்கலன்னாயன்னைகாலமன்றி
யேர்பூத்தபைந்தளிர்மெல்லியலாமிவ்விளங்கொடிமேற்
பீர்பூத்ததென்னைகொலோவறியேனெனப்பேசினளே. (உ௬௩)

வெறியச்சுறுத்தல்.

அலைமேற்கிளர்பொறிவாழ்வெங்கைவாணரணிவரைமேற்
சிலைமேற்பயில்கைத்தலத்தையநீயெமைச்செய்துயர்க்குத்
தலைமேற்படுமெறிக்கோர்கான்முடக்குந்தகைமையென்னக்
கொலைமேற்பயிலுமெமர்வெறியாடல்குறித்தனரோ. (உ௬௪)

பிறர்வரைவுணர்த்தல்.

மகவானிறைஞ்சுந்திருவெங்கைவாணர்வரையணங்கின்
முகவாரிசமுமுலையுங்கண்டான்மிகுமோகமுறுஞ்
சகவாழ்வினரையுரைப்பதென்யான்மறைசாற்றுகின்ற
சுகவாமதேவருமின்றேவிடுவர்துறவினையே. (உ௬௫)

வரைவெதிர்வுணர்த்தல்.

கொன்னெறிவேற்குமரன்போலெமரொதிர்கொண்டுதரு
நன்னெறியாற்பெறலாகவுந்தென்வெங்கைநாதர்வெற்ப
செந்நெறியாற்செல்பதிக்கோர்கொடுநெறிசெல்பவர்போன்
மின்னெறிவேற்கண்ணியைக்களவாற்பெறவேண்டினையே. ()

வரையுநாளுணர்த்தல்.

பணிவாய்விரிசடைப்பெம்மான்றென்வெங்கைப்பனிவரைமே
கணிவாய்மலர்ந்துமணநாளுரைப்பக்கடன்றரக்கிண் [ற்
கிணிவாய்மலரனையாண்மறிப்பாயிடுங்கீற்றெனவொண்
மணிவாய்புயத்தன்பவூர்கொண்ட தால்வெண்மதியமுமே. ()

தலைமகளறிவறிவுறுத்தல்.

பிற்பழியாதுமிலராலசுந்தரர்பித்தவெனுஞ்
சொற்பழியாளர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
றற்பழியாகநின்றன்பழிநாணித்தலைவவறக்
கற்பழியாதுமடமாதெனையுங்கரந்தனளே. (௨௫௮)

குறிபெயர்த்திடுதல்.

ஐயுற்றெமர்தெளிவானிருந்தார்நும்மடிச்சுவடு
கொய்யுற்றபூம்பொழிலூடுகண்டேமென்குழலுமையாண்
மெய்யுற்றவங்கணர்வெங்கையிலேகுறிவேறுகொண்டு
மையுற்றகண்ணியொடும்விளையாடுகமன்னவனே. (௨௫௯)

பகல்வருவானையிரவுவருகென்றல்.

நந்தேடவிழ்ந்துநறவூற்றிருக்குநளினமிசை
வந்தேறிமென்றுயில்கொள்வெங்கைவாணர்வரையின்மலர்க்
கொந்தேறுமென்குழலாண்முகவாவிக்குமுதமலர்ச்
செந்தேனிரவினல்லாற்கிடையாதென்னசெய்யினுமே. ()

இரவுவருவானைப்பகல்வருகென்றல்.

சேல்கொண்ட தண்பணைசூழ் வெங்கைவாணர்தஞ்சேய்திருக்
வேல்கொண்டகண்ணிளம்பெண்ணேடுகூடவிருப்பமுறு[கை
மால்கொண்டவெங்களிறன்னாய்மலர்மனைவாய்திறக்குங்
கோல்கொண்டுவெந்திலையேலரிதாலவட்கூடுதலே. (௨௬௧)

---

(௨௬௧) கோல் என்றது சூரியனை.

பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்.

சொல்லும்பொருளுமெனநிறைவாரிளஞ்சூன்மிடற்ற
நெல்லுங்கரும்புநிறைவெங்கைவாணர்நெடுஞ்சிலம்ப
வில்லும்பிறையும்பணிவாணுதற்றளிர்மெல்லியலை
யல்லும்பகலுமகலாதிவண்வந்தடைந்தருளே. (உசஉ)

பகலினுமிரவினுமகலிவணென்றல்.

பாவலர்பாடும்புகழ்வெங்கைவாணர்பணிவரைமேன்
மேவலராருயிருண்டமைவேலவவெம்பகலி
லேவலராயநெருங்குமின்றேன்வண்டெனவிரவிற்
காவலர்சூழ்ந்துதிரிவார்பொன்காத்தகடியெனவே. (உசங)

உரவோனூடுழநுங்குலனு மரபும்புகழும்வாய்மையுங்கூறல்.

துதியுந்தொடையும்புனைபுயத்தாய்மணஞ்சூழ்ந்திலையே
னதியும்பணியும்புனைவேணியர்வெங்கைநாட்டினினின்
பதியுங்குலனுமரபுநல்வாய்மையும்பல்புகழு
மதியுங்களங்கமும்போலொழியாமன்மறுப்படுமே. (உசச)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

அரியும்பணியுந்திருவெங்கைவாணரடியரல்லார்
திரியும்பவநெறிபோன்றொழியாதிரைதேர்ந்துகொடு
வரியுங்கரியுஞ்செறியுஞ்சிறுவழிவாரலைநீ
புரியுங்கருங்குழலாட்பொருட்டாகப்புரவலனே. (உசரு)

ஆற்றத்தன்மையாற்றக்கூறல்.

அழுவாண்மொழிதளர்வாளையகோவென்றலம்வருவாள்
விழுவாள்புரண்டெழுவாள்வெங்கைவாணனைவேண்டியடி
தொழுவாளநங்கன்சொடியனென்பாளுயிர்சோர்ந்திடுவாண்
முழுவாள்விழிமடமாதெண்ணமன்பமுடித்தருளே. (உசசு)

காவன்மிகவுரைத்தல்.

ஆக்குறுங்காரணர்வெங்கைபுரேசரணிவரையாய்
தாக்குறுஞ்சியமும்வேழமும்வேங்கையுந்தப்பிவந்து
மாக்குறுஞ்சோலையெம்மூர்புகுந்தாலுமனையருகு
காக்குறுங்காவலர்தம்மையெவ்வாறுகடப்பதுவே. (உசஎ)

காமமிகவுரைத்தல்.

தாள்வலிகொண்டுபெகடுந்துகாலன்றனைமருட்டு
மாள்வலிகொண்டவர்வெங்கைவெற்பாநின்னணியலர்கற்
றோள்வலிகொண்டுதவிர்ப்பினலாமற்றுயர்விளைக்கும்
வேள்வலிகொள்ளுந்துணையெங்கள்பேதைக்குவேறில்லையே.

கனவுநலிபுரைத்தல்.

மனவேயணியுந்திருவெங்கைவாணர்வ்வரையணங்கு
சினவேலிறைவநின்றோளொடுகொங்கைதிளைக்கவருங்
கனவேயுயருந்துறக்கமென்பாணினைக்காண்பரிய
நனவேதுயரந்தருகின்றதீவெந்நரகென்பளே. (உசகூ)

கவினழிபுரைத்தல்.

கருவரையெங்கடிருவெங்கைவாணர்தங்கண்ணழித்த
வொருவரையன்னவெழிலுடையீரிங்குமதருளா
லிருவரைபொன்னுமிருவேலைமுத்தமுமீன்றனவாற்
குருவரையன்னமென்றோளுடையாட்குக்குறையென்னையே.

ஒருவழித்தணத்தல்.

தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

என்மனநல்லிளம்பூங்கொடிபால்வைத்திளங்கொடிதன்
னன்மனமென்னொடுகொண்டேர்புகுந்திங்குநான்வருவேன்
வன்மனம்வந்துபுகாவீசர்வெங்கைமருவலர்போ
னின்மனமஞ்சலைசெங்கயல்வாட்கண்ணிறைவளையே. (உருக)

பாங்கிவிலக்கல்.

ஊனுருயிரினுயிர்போலவேயவ்வுயிரினுயிர்
தானுமொருவன்றிருவெங்கைவெற்பிலுன்றன்பதிக்குப்
போனல்விரைந்துவருவாயலையன்பபோகலைநீ
யானுயிழைத்துயர்கண்டாவிகொண்டிங்கிருக்கிலனே. (௨௫௨)

தலைவனீங்கல்வேண்டல்.

நீர்புக்குவாழுநெடுமீனங்நீர்தனைநீங்கியுய்ந்தாற்
றூர்புக்குவாழுமுலையாளையானுந்தணந்துய்குவேன்
மார்புக்குமாலையரவானவர்வெங்கைவாணர்வெற்பி
லூர்புக்குநான்வரவேண்டுமின்னேநின்னுளத்திசையே. (௨௫௩)

பாங்கிவிடுத்தல்.

கொந்தார்மலர்க்குழல்வெண்முத்தவாணகைக்கோமளத்தின்
சிந்தாகுலமுற்றுநீயறிவாயன்பதேமொழிக்கு
நந்தாமணிவிளக்கன்னார்தம்வெங்கைநகரினிற்போய்
வந்தாலொனச்சென்றுநான்கூறநீசென்றுவந்தருளே. (௨௫௪)

பாங்கிதலைவிக்கவன்சேலவுணர்த்தல்.

அம்மூலகாரணர்வெங்கைபுரேசரணிவரைமேற்
செம்மூரிவேலவர்நீயாரணங்கின்முன்செல்லுமுன
மெம்மூர்புகுந்துவருவலென்றேகினரோந்திழையாய்
நம்மூர்மருங்குறவிந்நேரம்வந்துநணுகுவரோ. (௨௫௫)

தலைவிநேஞ்சோடுபுலத்தல்.

விளித்தாருயிராயடிநீழல்வைப்பவர்வெங்கையிலே
யளித்தார்புனைகுழலாயகலேனென்றகந்தெளியத்
தெளித்தாரகன்றனரேலவர்வார்த்தைதெளிந்துமனங்
களித்தார்தமக்குளதோபிழைதானிந்தக்காசினிக்கே. (௨௫௬)

சென்றேனீடலிற் காமமிக்ககழிபடர்கிளவி.

பூளையணியுஞ்சடையாளர்வெங்கைபுரேசர்வெற்பிற்
யாளைம்மணங்கமழ்மாதிருப்பாளெனப்பச்சைமயிற்
காளையனையநங்காதலர்தாமலர்க்கால்வருந்த
நாளைவராமலிடம்போய்மறியுநன்னுரைகளே. (௨௫௭)

தலைவியைப்பாங்கியாற்றுவித்தல்.

பொலம்புரிவார்சடையார்வெங்கைவாணர்பொருப்பணங்கே
கலம்புரிமேனியிற்குங்குமந்தோய்தண்களபமென்ன
நலம்புரிகாதலர்தம்பதிநோக்கிநடந்தவழி
வலம்புரிதோன்றுமடிப்பொடிபூசுகவந்தருளே. (௨௫௮)

தலைவன்வந்தமைபாங்கியுணர்த்தல்.

மலையானைமாதுலனென்பார்தம்வெங்கைவரையிடைப்பூஞ்
சிலையானைவென்றவெழிலுடையார்நஞ்செழும்பதிக்குக்
கொலையானைமேற்பசும்பொன்னேடுவெந்தனர்கோதைகமழ்
முலையானைமேற்பசும்பொன்னொழிவாய்மலர்மொய்குழலே. ()

பாங்கிதலைவனொடுநொந்துவினுதல்.

காரார்மணிமிடற்றெம்மான்றிருவெங்கைக்காரிகைதன்
பீரார்நுதலுமுடியாக்குழலும்பெருவிழியி
னீரார்நிறைகுங்முங்கண்ணுருமைநன்னீதியென்றே
வாராதொழிந்தனைநின்கருத்தேதுசொன்மன்னவனே. (௨௬௦)

தலைவன்பாங்கியோடுநொந்துவினுதல்.

அலையாநிலையர்திருவெங்கைவாணரணிவரையீர்
கலையானிறைமதிவேய்ங்குழல்சோலைக்கருங்குயில்யாழ்
மலையானிலநல்லவோவல்லவோவம்மதனவென்டுஞ்
சிலையானுமிழ்வதல்ரோவம்போவென்னசெப்புமினே. (௨௬௧)

தலைவியை யாற்றுவித்திருந்தவருமைசாற்றல்.

நீர்மல்குகண்ணும்வளைதீர்ந்தகையும்வெந்நெட்டுயிர்ப்பும்
பீர்மல்குகொங்கையுமாய்ப்பின்னைவேறுபிழைப்பிலதாம்
ஆ யார்மல்குசெஞ்சடையார்வெங்கைவாணரருளதனாற்
றூர்மல்குதோளண்ணலேபுரந்தேனின்றனியுயிரோ. (உசுஉ)

வரைவிடைவைத்துப்பொருள்வயிற்பிரிதல்.

என்பொருட்பிரிவுணர்த்தேந்திழைக்கென்றல்.

இடைநிலையாம்பொருளுண்டேன்முதனிலையெய்தறமுங்
கடைநிலையாமின்பமுமேவுமென்றனர்காதலவொன்
றடைநிலையாம்பதத்தெம்மான்றிருவெங்கையாயிழைக்குத்
தொடைநிலைவார்குழற்பூங்கொடியேசென்றுசொல்லுகவே. ()

நின்பொருட்பிரிவுரைநீயவட்கென்றல்.

என்னோடுசொல்லுகசெல்லாமையுண்டெனினீரமதி
தன்னோடுமேல்குசடையாளர்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
பொன்னோடுசொல்லுகநீநின்செலவைப்பொருணினைந்து
முன்னோடுபின்னுமிழப்பான்கருதியமுன்னவனே. (உசுச)

நீடேனென்றவனீங்கல்.

மாணிக்கவாசகன்செந்தமிழ்மாலைமணக்குமுடி
வேணிக்கடவுளிடமாகிய திருவெங்கையன்னாய்
ஆ யாணிக்கனகமனையாள்செயலிங்கறிந்துசெல்வேன்
பாணிக்குமாறிருந்தாலெனைப்போலிலைப்பாவிகளே. (உசுரு)

பாங்கிதலைவிக்கவன்சேலவுணர்த்தல்.

இருளாலயமன்னவார்குழலாய்நம்மிறைவரின்று
வெருளாலமுண்டதிருவெங்கைவாணர்தம்மெல்லடியை
அ யருளாலலதெய்தலாகாதவாறெனவானைமிசைப்
பொருளாலலதுனையெய்தவொணாதென்றுபோயினரோ. (உசுசு)

தலைவியிரங்கல்.

பொழியுமருளுடையார்வெங்கைவாணர்பொருப்பருவி
விழியுமெலிவும்பசப்பூர்முலையுமவ்வின்மதனால்
அழியுமனமுமறிந்திலராயினுமாவொருபெண்
பழியுநினைந்திலரோபொருண்மேற்சென்றபாதகரோ. (௨௬௭)

தலைவியைப்பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

அரியாரறிதற்கரியார்திருவெங்கையாயிழையாய்
பிரியார்பிரியப்படாரிலையோநின்பெருமணக்குக்
கரியார்பொருடரச்சென்றார்பொருட்டுக்கயன்மருட்டும்
வரியார்கண்ணீர்மல்கவென்னைகொலோநின்றுமாழ்குவதே. ()

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

நீடறிவாய்நின்றவெம்மான்றிருவெங்கைநேரிழையாய்
பீடறிவாய்நம்முயிரனையார்தம்பெரும்பணைநீர்
நாடறிவாய்பொருணச்சியிப்போதுநடந்தகொடுங்
காடறிவாய்துணிந்தாயுனைப்போலிலைக்கன்னெஞ்சரோ. (௨௬௯)

வருதுவர்மீண்டெனப்பாங்கிவலித்தல்.

வலையிற்படுகலைகண்டிளமான்பிணைமாழ்கிநிற்கு
நிலையிற்படர்வனஞ்சென்றநங்காதலர்நெஞ்சுருகிக்
கொலையிற்படுமெழுவார்வெங்கைமாதுன்குளிர்தரள
மலையிற்படர்தனம்பீர்மிளமீண்டுவருகுவரோ. (௨௭௦)

பருவங்கண்டுபெருமகள்புலம்பல்.

பூட்டாதவில்வளைத்தார்த்தாங்கிடித்துப்புயலெழுந்து
தீட்டாதவம்புபொழியுமிக்காலந்தெரிந்திலரோ
காட்டாதநன்னிலையார்வெங்கைவாணர்கனகவெற்பி
லீட்டாதபொன்னனையாயகன்றார்பொருளீட்டுதற்கே. (௨௭௧)

இதுவௌவம்பேன்றல்.

வெயிலேயெனமணிகண்டிதழ்கூம்பிவிளைக்குவளை
துயிலேபுரியுஞ்சுனைவெங்கைவாணர்சுடர்க்கிரியின்
மயிலேயுளங்கவலேலிதுதான்மழைவம்பொடுங்கிக்
குயிலேமருபருவத்தாற்பொழிதருங்கொண்டலன்றே. (உஎஉ)

இறைமகண்மறுத்தல்.

கொங்கைப்பசப்பெனக்கொன்றைகள்பூத்தகுருகொழிந்த
வங்கைத்தலமெனத்தோன்றியுந்தோன்றினவன்னவயல்
வெங்கைப்பதியிற்பழமலைநாதர்மிட்டெறனவே
மங்கைப்பருவத்தணங்கேமுகிலெழும்வம்பலவே. (உஎங)

அவர் தூதாகிவந்தடைந்ததிப்பொழுதேனத் துணைவிசாற்றல்.

இணர்வார்சடைமுடியார்வெங்கைவாணரிமையவெற்பிற்
புணர்வார்முலையிளமென்கொடியேநம்புலம்புறுநோ
யுணர்வார்பொருளொடும்வந்தாரொன்றேகையுரைத்துமுகில்
வணர்வார்குழலெழில்வாங்குதல்வேண்டிமுன்வந்ததுவே. ()

தலைமகளாற்றல்.

பொருநாண்மதனையழித்தேயிமையப்பொருப்பின்மணத்
திருநாளதிற்றரும்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பிற்
கருநாண்மலர்விழிமாதேயென்றுயினுங்காதலரீங்
கொருநாள்வருவரொன்றேநின்றதாவியுடலகத்தே. (உஎரு)

அவனவட்புலம்பல்.

ஓடுந்தடங்கண்மணற்கேணியாகவவ்வூற்றிறைக்கு
நீடும்புளினமுலையாக்குறைவுநிறைவுமின்றிச்
சூடும்பிறையர்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
பாடுஞ்சுரும்பலர்மொய்குழறேம்பிப்பதைத்திடுமே. (உஎசு)

பாகனொடுசொல்லல்.

வார்கொண்டமென்முலையாளிடையேபொய்வருவலென்னுங்
கார்கொண்டவென்னிடையில்லைபொய்யென்னக் கடுக்கைநறு
தார்கொண்டசெஞ்சடையார்வெங்கைவாணர்தமதருளாற் [ந்
றேர்கொண்டசீர்வலவாவிரைந்தேகச்செலுத்துகவே. (௨௭௭)

மேகத்தோடுசொல்லல்.

சென்னிப்பிறையர் திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பின்
மன்னிப்படருங்கொடிபோற்றழைந்துமலர்வதன்றெங்
கன்னிப்பசுங்கொடிவாடுங்கண்டீர்மெய்க்கருகிநின்று
மின்னிப்பொழியிலெனையன்றுபோய்க்கருமேகங்களே. (௨௭௮)

பாங்கி வலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

தெண்ணீர்முடியர் திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
புண்ணீர்முழுகுமிலைவேலிறைவர்பொற்றேரின்மிசைப்
பண்ணீர்மொழியணங்கேகிளர்ந்தார்க்கும்பணிலமுன்றன்
கண்ணீர்வழியடைத்தற்குரித்தாகியகல்லெனவே. (௨௭௯)

வலம்புரிகிழத்திவாழ்த்தல்.

வேயின்கவின்புனைதோளுமைபங்கர்தம்வெங்கைநகர்க்
கோயின்முனம்புகுஞ்சங்கெனவாழ்கநங்கொண்கர்சுரம்
போயின்றணைவலெனவோதியமொழிப்பொய்ம்மைபடா
வாயின்புகழ்திரண்டாலெனவார்க்கும்வலம்புரியே. (௨௮0)

தலைவன் வந்துழிப்பாங்கிநினைத்தமைவினவல்.

அம்மையிடத்தர் திருவெங்கைவாணரணிவரையெங்
கொம்மைமுலைத்தலமெல்லாம்பசலைகொளக்கொடுத்துச்
செம்மைமனத்திற்பொருள்விழைந்தார் தரச்சென்றவிடத்
தெம்மைநினைத்ததுண்டோவிலையோசொல்விறையவனே. ()

தலைவனினைத்தமைசெப்பல்.

புறந்தாழ்குழலுமைபங்காளர்வெங்கைபுரத்தரயன்
பறந்தாலுமென்னென்றிருக்கின்றவேணிப்பரமர்தமைத்
துறந்தார்மனமெனவெங்கொடுங்காட்டுச்சுரத்திடைநான்
மறந்தானினைத்தலுமுண்டுபொன்னேயுங்கள்வஞ்சியையே. ()

பாங்கி தலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்.

விண்மணிபொய்ப்பினும்பொய்யாநின்வாய்மைவிளம்பியெங்க
கண்மணியொத்தசெவ்வேலிறைவாவுயிர்காத்தளித்தே [ள்
ளெண்மணிகண்டத்தொருவெங்கைவாணருயர்சிலம்பிற்
பெண்மணியைப்பிறைவாணுதலீர்ங்குழற்பேதையையே. ()

களவியல் முற்றிற்று.

வரைவியல்.

வரைவுமலிவு.

காதலன்முலைவிலைவிடுத்தமைபாங்கி
காதலிக்குணர்த்தல்.

மலைவிலையென்றநிலைவெங்கைவாணர்மணிவரைமே
விலைவிலையிந்தமணிக்குமுலைக்குமென்றெண்ணியொரு
கொலைவிலைவென்றநுதன்மடவாய்நங்கொழுநர்முகிழ்
முலைவிலைநல்கினராந்தலைநாகமுழுமணியே. (உஅச)

காதலிநற்றயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

நான்றசடிலத்திருவெங்கைநாயகர்நல்குமொரு
கான்றகுருதிக்குடர்மாலைவேலுடைக்காளையெழில்
போன்றவுருவத்திறைவர்மென்றோளிடுபூந்தொடைகண்
டின்றபொழுதிற்பெரிதுவவாநிற்குமெம்மனையே. (உஅரு)

(உஎரு) விண்மணி - சூரியன்.

பாங்கி தமர்வரைவேதிர்ந்தமைதலைவிக்குணர்த்தல்.

புரவலரொக்குங்குடிவாழும்வெங்கைபுரத்தரிந்தீ
வரவலரொக்குமிடற்றூர்தங்கையிளமான்விழியா
யிரவலரொக்குமிறையோன்முலைவிலையின்மொழியாற்
றரவலரொக்குமெதிர்புகுந்தார்க்குந்தடமுரசே. (உஅசு)

தலைமகளுவகையாற்றுளத்தோடுகிளத்தல்.

வில்லுங்கணையுமதவேளுமாயவிழித்தவளொஞ்
சொல்லும்புனையுந்திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேற்
கொல்லுந்துயரமுலைமேற்பசப்பினைக்கொண்டுநெஞ்சே
செல்லுஞ்செலவையுணர்த்தியதாமிச்செழுமுரசே. (உஅஎ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

கணத்தினிலங்குமதிப்பிள்ளையொன்றிளங்கட்செவியின்
பணத்தினுறங்குஞ்சடையாளர்வெங்கைப்பனிவரைமேற்
குணத்தினுயர்ந்தகொடியிடையாவிகொடுப்பதற்கா
மணத்தினலங்கல்புனையுநங்காதலர்வாழியவே. (உஅஅ)

தலைவி மணம்பொருட்டாகவணங்கைப்பராநிலைகாட்டல்.

நிலமாதணிநிகர்வெங்கையுளான்றருநீமுனமெங்
குலமாதினைமணஞ்செய்தாங்கெனையுங்கொழுநர்வந்து
நலமாமணம்புணர்ந்தால்விழவாற்றுவனென்னவே
பலமாதருந்தொழும்பாவைசெவ்வேளைப்பரவுறுமே. (உஅகூ)

அதுகண்டோன்மகிழ்தல்.

மால்பற்றியபொழில்வெங்கைப்புரேசர்மணிவரைமேற்
சேல்பற்றியவிழியாளுல்கோர்முனஞ்செங்கையினூற்
கால்பற்றியம்மியின்மீதேயிருத்தல்கடைப்பிடித்து
வேல்பற்றியதெய்வ்சூளாம்மணியினைவேண்டுறுமே. (உகூ0)

(உஅசு) இந்திவரம் - கருங்குவளை.

அறத்தொடுநிற்றல்.

கையறுதோழிகண்ணீர்துடைத்தல்.

கோலம்புனைதலிற்குற்றமின்றான்மலர்கொய்துவருங்
காலந்தவறிலபந்திடைத்தோல்வியுங்கண்டிலமால்
ஆலந்திகழ்மிடற்றார்வெங்கைநாட்டனெதம்புயத்தி
னீலஞ்சிறுமுத்துதிர்ப்பதென்னோசொன்னெடுந்தகையே. ()

தலைமகள்கலுழ்தற்காரணங்கூறல்.

தெண்ணீர்முடியர்திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பண்ணீர்மைமென்மொழிப்பாவைநல்லாயிப்படிமுழுதும்
மெண்ணீர்மையன்பனைக்கண்டனமால்வந்ததென்றனது
கண்ணீர்கொடுமென்முலைமேற்பசப்பைக்கழுவுற்றதே. (௨௯௨)

தலைவன் றெய்வங்காட்டித்தெளிப்பத்தெளிந்தமைகூறல்,

கொலைசூழ்குருகுமொன்றுண்டாற்கரிநெறிகூறுமெனி
லிலைசூழ்மனையின்முனிவொல்லாந்தொழுமெங்கள்பழ
மலைசூழ்மறுகெழில்வெங்கைநன்னாடர்மனந்தெளியச்
சிலைசூழ்வனந்திகழ்தெய்வதங்காட்டித்தெளித்ததற்கே. (௨௯௩)

பாங்கியியற்பழித்தல்.

முனங்குழையாதமலைகுழைத்தாரம்முதல்விகன
தனங்குழையாதுகுழைந்தார்தம்வெங்கைத்தடஞ்சிலம்பிற்
கனங்குழையாயுனக்கீந்தாரிலைகொனங்காவலனார்
மனங்குழையாமன்முனந்தாமருந்துமருந்தினையே. (௨௯௪)

தலைமகளியற்படமொழிதல்.

உழைகாதலிக்குங்கரத்தார்நிறைமதியொத்தசங்கக்
குழைகாதிற்பெய்பவர்தென்வெங்கைவாணர்குளிர்சிலம்பின்
மழைகாதலிக்குங்கொடையன்பர்மேற்பிறர்வாயுரைக்கும்
பிழைகாதிற்கேட்பவந்தோபடைத்தானயன்பெண்பிறப்பே. ()

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

புற்றங்கதமணிவெங்கைபுரேசர்பொருப்பிலெங்கள்
சுற்றந்தொழுமெங்கொழுநர்நிற்காட்டிமுன்சூளுரைத்த
குற்றம்பொறுத்தருளென்றடிபோற்றிக்கொழுமலர்தூய்ச்
செற்றந்தணிக்குதும்பெண்ணேயினிக்குலதெய்வத்தையே. ()

தலைவி யில்வயிற்செறித்தமையியம்பல்.

சுட்டாவறிவுருவானார்வ்வானிற்சுரர்தமக்குங்
கிட்டாவமுதனையார்வெங்கைவாணர்கிரியணங்கே
மொட்டாமுலையிற்பசலைகண்டேமனைமுன்றில்விடாள்
விட்டாளிலைவிலங்கென்பதொன்றேகுறையீன்றவட்கே. ()

செவிலி கனையிருளவன்வரக்கண்டமைகூறல்.

மீனைக்கடந்தபொழில்சூழரன்றிருவெங்கைவெற்பர்
கானைக்கடந்துகுறிவாயிருள்வரக்கண்டனள்யாய்
மானைக்கடந்தவிழியாய்தரளமணிவடத்த
வானைக்கடந்தவிளஞ்சிங்கமோவென்றயிர்த்தனளே. (உகஅ)

எறிவளைவேற்றுமைக்கேதுவினவல்.

கனம்வேறுபட்டமிடற்றார்தம்வெங்கைக்கனகவெற்பிற்
புனம்வேறுபட்டிங்குவந்தவன்றேநம்புரிகுழற்குத்
தனம்வேறுபட்டுவிழிவேறுபட்டுத்தளர்ந்துமொழி
மனம்வேறுபட்டதென்னேவுரையாய்செவ்வரிக்கண்ணியே. ()

பாங்கிவேறிவிலக்கல்.

வீட்டையுவந்துதருவார்திருவெங்கைவெற்படுத்த
காட்டைவிரும்பியுறைதெய்வமேயெங்கள்கன்னிபடும்
பாட்டைநினைந்திலைவாளாவுலகிற்பலர்விரும்பும்
மாட்டைவிரும்பினைநன்றேவிதுசொல்லறிவினுக்கே. (௩௦௦)

வெறிவிலக்கியவழி செவிலிவினுதல்.

மின்றோடுவமிக்குஞ்செஞ்சடையார் திருவெங்கைவெற்பிற்
பொன்றோய்விலக்குவமென்றெண்ணியாங்கள்புகும்பொழுதில்
லென்றேவெறிவிலக்குற்றாயிளமுலையேந்திழையாள்
டன்றேயறிந்தனையேலுரையாய்மைத்தடங்கண்ணியே. ()

பூத்தருபுணர்ச்சியாலறத்தோடுநிற்றல்.

தடுக்கநிறைபுனற்பண்ணையிற்சூன்முதிர்சங்கம்வந்து
படுக்கநளினமலர்வெங்கைவாணர்பனிவரைமேல்
லுடுக்கவுதவினன்மாந்தழைமாமலரொண்ணுதற்குக்
கொடுக்கமதனைவிடுத்தகன்றானொருகோமகனே. (கூ0உ)

புனறருபுணச்சியாலறத்தோடுநிற்றல்.

வான்கற்றவண்புகழ்வெங்கைபுரேசர்மணிவரைமேற்
றான்கற்றகல்விதளர்வூடுதவுந்தகையெனவே
தேன்கற்றமென்மொழியாள்வருநீரொடுசெல்பொழுதில்
லூன்கற்றவேலுரவோனொருவேந்தனுதவினனே. (கூ0கூ)

களிறுதருபுணர்ச்சியாலறத்தோடுநிற்றல்.

ஐங்கைக்களிறுதரும்வெங்கைவாணரணிவரைமேல்
வெங்கைக்களிறுதனைப்பாய்வுறவர்மெய்ந்நடுங்கிக்
கொங்கைக்களிறுபுறம்பாய்வுறப்புல்லிக்கொண்டனள்வேற்
செங்கைக்குமரனையன்னானொருவனைத்தேமொழியே. (கூ0ச)

மணம்விலக்கல்.

வன்னித்திருவிழியார்வெங்கைவாணர்மணிவரைமேல்
லிந்நித்திலவடநல்கின்றதேயன்றியேதிலர்க்குக்
கன்னிக்குமரிமணமுடையாளல்லள்காண்டகைய
சென்னிக்கணிமுடிதாட்கணியாகுஞ்செயலில்லையே. (கூ0ரு)

தலைமகள் வேற்றுமைகண்டுநற்றாய்செவிலியைவினுதல்.

நெடுங்கோவளவயல்வெங்கைப்ரோசரைநெஞ்சிருத்தாக்
கொடுங்கோலரசர்குடைக்கீழடங்குங்குடியெனவே
நடுங்கோல்வளைவிழிநீரொழியாமலிருப்பதென்னே
விடுங்கோல்புரைவிழிவெண்முத்தவாணகையாயிழையே. ()

செவிலிநற்றாய்க்கு முன்னிலைமொழியாலறத்தொடுநிற்றல்.

புலங்கண்டளவின்மறைவெங்கைவாணர்பொருப்பிடைச்செங்
நிலங்கண்டளவிலுறைதிரிந்தாங்கொர்நெடுந்தகைதன்
நலங்கண்டளவினலந்திரிந்தாண்மென்னகின்மிசையோர்
கலங்கண்டளவின்மிகநேர்மருங்குலுன்காரிகையே. (௩0௭)

நற்றாய்தமர்க்கறத்தொடுநிற்றல்.

வேலோடுவாளும்பயினமர்காணம்விளங்கிழையைப்
பாலோடுதேன்கலந்தாங்கிள்வாளைப்பணைமருதச்
சேலோடுபாயுந்திருவெங்கைவாணர்சிலம்பினெடு
மாலோடுமானுமொருவேல்வற்கும்மணஞ்செயுமே. (௩0௮)

உடன்போக்கு.

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்.

தாயிற்சிறந்ததிருவெங்கைவாணர்தடஞ்சிலம்ப
போயிப்பொழுதுவருவலென்றேகிற்பெற்றுக்கறியாள்
ஆயிற்புழுவென்வேபதைப்பாணின்றிருவருளால்
நீயித்திருவையுடன்கொடுபோநின்னெடுநகர்க்கே. (௩0௯)

தலைவனுடன்போக்குமறுத்தல்.

அனிச்சமுமன்னத்தின்றூவியுமாதரடிமலர்க்குச்
சனித்தநெருஞ்சிப்பழமென்றறிந்துந்தகுவரன்றி
மணித்தர்வழங்கரும்வெங்கொடும்பாலைவழியொருநாண்
இனித்தமொழியுடையாளையெவ்வாறுகொண்டேகுவனே. ()

பாங்கிபோக்குடன்படுத்தல்.

துணையிற்புணர்களிவண்டினம்பூந்தண்டுணர்பொதுளும்
பணையிற்றுயில்பொழில்வெங்கைபுரேசர்பனிவரையாய்
பிணையிற்பிறழ்கருங்கண்ணாட்குநின்னைப்பிரிந்தமலர்
யணையிற்கொடியதுவோவையநீசெல்லழற்சுரமே. (௬௧௧)

தலைவன்போக்குடன்படுதல்.

நாமொழியாதுபுகழ்வான்றருள்வெங்கைநாதரைச்சொல்
பாமொழியானெய்தலாம்பாலைஞானசம்பந்தனுக்குத்
தேமொழியாயுன்னுயிரனையாட்கருஞ்செம்பவள
வாய்மொழியாலிளங்காவாகும்பட்டமரங்களுமே. (௬௧௨)

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்.

தேவியுஞ்சம்புவுநீங்காதவெங்கைச்செழுஞ்சிலம்பர்
காவியுங்கஞ்சமுமாம்பலும்பூத்துக்கவின்கனியும்
வாவியும்பெண்ணணங்கென்றூர்கதிர்தெறும்வன்சுரத்திற்
காவியுங்கண்ணுமமுதமும்போன்றெளிராரணங்கே. (௬௧௩)

தலைவிநாணழிவிரங்கல்.

ஊணிலையாகநஞ்சுண்டோன்றிருவெங்கையூரனைய
வாணிலையாகுமதர்விழியாய்முன்வனைந்திருந்த
பூணிலையாகுமவயவம்போலப்பொலிவழிவார்
நாணிலையாகிற்றனுவாற்பயனென்னைநங்கையர்க்கே. (௬௧௪)

கற்புமேம்பாடுபூண்முலைப்பாங்கிபுகறல்.

சேண்போலுமேனியர்தென்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பாண்போலுமென்மொழிச்செந்துவர்வாய்மலர்ப்பாவையன்ன
பூண்போலுநாண்முதலெல்லாமுமங்கலப்பூங்கழுத்திலி [ய்
ஞூண்போலுமாணுறுங்கற்பொன்றுமேகுல்நாரியர்க்கே. (௬௧௫)

தலைவியொருப்பட்டெழுதல்.

நரைப்பால்விடையர்பிறையார்சடையர்மெய்ஞ்ஞானமயர்
வரைப்பாவைபங்கர்திருவெங்கைவாணர்மணிவரைமேல்
உரைப்பாருரைப்பவையெல்லாமுரைக்கவுனக்கிசைவேற்
றிரைப்பாவையேசெல்லுவேனன்பரோடருந்தீச்சுரமே. (௫௧௬)

பாங்கி சுரத்தியல்புரைத்துழித்தலைமகள்சொல்லல்.

மாவேர்வெனுங்கறைக்கண்டர்வெங்கேசர்மணிவரைமேல்
ஏவேர்வெனுங்கண்ணிளங்கொடியேமதினெய்யுநறும்
பூவேர்பயில்வெண்மதியோர்கனிகொளும்பூங்குயில்வாழ்
காவேர்விறைவருடனேபுகுங்கள்ளிக்காடெனக்கே. (௫௧௭)

பாங்கிகையடைகொடுத்தல்.

இறந்தார்பிறந்துழலாதேமுதுகுன்றியற்றுசெயல்
சிறந்தார்புகழ்வெங்கைசெய்வரருளுஞ்சிவனுமையை
மறந்தானுருவுகொண்டன்றன்வசிட்டனருந்ததியைத்
துறந்தானுநீதுறவேலையனேநின்றுணைவியையே. (௫௧௮)

பாங்கிவைகிருள்விடுத்தல்.

வெங்கேதகைமுனிவார்வெங்கைவாணர்தம்வெற்பிலன்னை
யெங்கேமகளென்றிறுப்பாளவட்குன்னியல்பதனை
யிங்கேயிருந்துரைத்தோரிமைப்போதினுளெப்படியும்
அங்கேவந்துன்னொடுகூடுவேனன்மலராரணங்கே. (௫௧௯)

தலைமகளைத்தலைமகன்சுரத்துய்த்தல்.

கொடும்பாவிகளுமொருமாதவப்பயன்கொள்வரென
நெடும்பார்மிசையின்றறிந்தாம்விழிபொழிநீர்பெருகச்
சுடும்பாலையிலுன்றிருவடித்தாமரைதோய்ந்தமையால்
கடும்பார்தகநஞ்சமுண்டமைவார்வெங்கையாரணங்கே. (௫௨௦)

தலைமகன்பொழில்கண்டுவியத்தல்.

பிறப்பாம்வனம்புக்குழல்வார்தமக்குப்பெரிதுமுன்செய்
யறப்பாலுதவுந் திருவெங்கைவாணரடிநிழல்போ
லுறப்பாலைசெய்துயரொல்லாமொழியவொளியிழைதாழ்
நிறப்பாரமென்முலையாய்பொழிலோவொன்றுநேர்ந்ததுவே. ()

தலைமகன்றலைமகளசைவறிந்திருத்தல்.

ஆடும்பதத்தர் திருவெங்கைவாணரதிகபுகழ்ப்
பாடுங்குமுதம்புனலூறவேயப்பரிதியினல்
வாடுங்கமலமுகவேர்புலரமலர்ந்துதென்ற
லோடுங்குளிர்தண்பொழிற்கேயிருந்தருளொண்ணுதலே. ()

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

எண்ணியவெண்ணமுடிப்பார்தம்வெங்கையிமையவெற்பி
னுண்ணியநூன்மருங்குற்கனிவாய்வின்னுதலியுன்றன்
மண்ணியநீலமணிவார்குழலின்மலர்புனையப்
பண்ணியபுண்ணியமுன்னமென்னேவென்றன்பாணிகளே. ()

கண்டோரயிர்த்தல்.

நந்தனும்வெள்ளைமதகரிவேந்துநறியவர
விந்தனுமுள்ளங்கசிந்தேத்தும்வெங்கைவிழலர்தருங்
கந்தனும்வள்ளியுமோவறியேமிந்தக்காளையெழின்
மைந்தனும்வள்ளிதட்போதணிவார்குழன்மங்கையுமே. (௩௨௪)

கண்டோர்காதலின்விலக்கல்.

தாதையனைய திருவெங்கைவாணர்தடஞ்சிலம்பிற்
சீதையொடுவருமாலனையாயித்திருந்திழையாள்
கோதைவெயிலிடைப்பட்டனையாளெங்குடிலில்வைகி
மாதையுடன்கொண்டுநாளையுன்னூர்க்குவழிக்கொள்கவே. ()

கண்டோர்தன்பதியணிமைசாற்றல்.

பணியேறியசெஞ்சடைவெங்கைவாணர்பனிவரைமேற்
கணியேறுமாவிற்படர்கொடிமீதுகழனிவளை
யணியேறுவேழம்பர்போலேதவழுமணிநகர
மணியேறுதோளண்ணலேயுங்கண்மாடவளநகரே. (௩௨௬)

தலைவன் தன்பதியடைந்தமைதலைவிக்குணர்த்தல்.

பன்னகர்கின்னரமன்னவரென்றும்பரவுவெங்கை
நன்னகர்தன்னகரென்னுமெம்மான்கிரிநன்னுதலாய்
பொன்னகரெந்நகரிந்நகர்முன்னெனப்போற்றலுறு
மிந்நகரென்னகர்நின்னகராகவெழுந்தருளே. (௩௨௭)

கற்பொடுபுணர்ந்தகௌவை.

செவிலிபாங்கியைவினுதல்.

சொன்மாதுதன்புகழ்யாழிலிட்டேத்தித்தொழுமிமைய
நன்மாதுபங்கர் திருவெங்கைவாணர்நன்னுடனையா
யென்மாதுசென்றவிடமேதறிந்திலனின்முழுதும்
பொன்மாதுசென்றமனைபோற்பொலிவறப்புல்லென்றதே. ()

பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

சாந்தந்தருபவர்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பிற்
சேந்தங்கயல்விழிநீர்மல்கவேநின்றுதேய்புமன்னே
காந்தந்தொடர்கரும்பொன்போலவின்றுதன்காந்தனைக்கண்
டேந்தங்கலமுலைச்செம்பொன்னனுடொடர்ந்தேகினளே. ()

செவிலி யினையலென்போர்க்கெதிரழிந்துமொழிதல்.

அனையேயனையவருளாளர்வெங்கையணிவரைமே
வினையேயெலனவெனக்கோதிநிற்பீரெனைப்போலவொரு
புனையேடவிழ்மலர்க்கோதையைப்பாலையிற்போக்கினின்றால்
வினையேனுறுதுயரெல்லாமுமக்குவெளிப்படுமே. (௩௩0)

செவிலி தன்னறிவின்மைதன்னைநொந்துரைத்தல்.

புன்றேலுடையர் திருவெங்கைவாணர்பொருப்பணங்கு
வன்றேஎரிராமனொடுசீதைதங்கண்மனைகடந்து
சென்றோர்வனம்புகுந்தாளென்பர்மாசிறெரிவையர்க்கு
நன்றேவதுபிழைதானோவென்றுளதுநாடிலனே. (௬௬௧)

செவிலிதெய்வம்வாழ்த்தல்.

செடிமுழுதும்புலிதுஞ்சுபொல்லாதவெந்தீச்சுரத்தி
லடிமுழுதுஞ்செம்புனல்பாயச்சென்றவணங்குவந்தாற்
படிமுழுதும்புகழ்வெங்கைபுரேசர்தம்பாலனுக்கெங்
குடிமுழுதுந்தொழும்பாளாகவேலைகொடுக்குதுமே. (௬௬௨)

செவிலிநற்றாய்க்கறத்தோடுநிற்றல்.

வேலைத்தரளமுமைந்தலைநாகவியன்மணியுஞ்
சோலைச்செழுமலரும்போலநம்மைத்துறந்துமெல்ல
மாலைக்குழலிதனக்குரியானைமணந்துசென்றாள்
பாலைப்பொருமொழிபங்கர்வெங்கேசர்பனிவரைக்கே. (௬௬௩)

நற்றாயயலார்தம்மோடுபுலம்பல்,

பொன்போ லொருபெண் டிருவெங்கை யானருள்பூண்டுபெற்
றேன்போலிலையுலகம்ப திஞன்கினுமிப்பொழுது [றே
துன்போடழுங்குமவருமென்போலிலைச்சோகமுறே
லென்போரறிகுவரோவறியாரிவ்விரண்டையுமே. (௬௬௪)

நற்றாய் தலைமகள்பயிலிடந்தம்மோடுபுலம்பல்.

ஆவிக்குரியர் திருவெங்கைவாணரணிவரைமேன்
மேவிக்குடையுஞ்சுனையேமலர்கொய்யுமென்பொழிலே
வாவிக்குமுதமலர்வாய்சிறிதுமலர்ந்துபெற்ற
பாவிக்குரையுமென்றென்சொல்லிப்போயினள்பாதகியே. ()

நிமித்தம்போற்றல்.

பாவிரிமாபுகழ்வெங்கைபுரேசர்பனிவரைமேற்
பூவிரிவான்பொழில்காப்பதற்காகப்பொருதிரைத்தண்
காவிரிமாதைவருவித்தகாக்கையுங்காக்குங்கொலோ
மாவிரிமாகுழனன்மாதையீங்குவரவழைத்தே. (௫௫௬)

சுரந்தணிவித்தல்.

சங்கலைத்தொண்புனலூர்வயனுவற்றலைவனுக்குச்
செங்கலைப்பொன்செய்ததென்வெங்கைவாணர்திருவருளாற்
பொங்கலைத்தண்புனற்காவிரிநாட்டிற்பொலிகநிறை
யங்கலைத்திங்கண்முகமாதுசென்றவருஞ்சுரமே. (௫௫௭)

தன்மகண்மென்மைத்தன்மைக்கிரங்கல்.

நோக்கக்குழையுஞ்சிலையாளர்வெங்கையினுண்ணிடையார்
மோக்கக்குழையுமணிச்சமென்பூவின்முகந்திருத்தித்
தூக்கக்குழையும்பதங்கள்வெம்பாலைச்சுடுபரலிற்
றூக்கக்குழையுங்கொலோகுழையாதெங்கடையலுக்கே. (௫௫௮)

இளமைத்தன்மைக்குளமெலிந்திரங்கல்.

பேதைப்பருவமிறந்தேபெதும்பைப்பிராயமுறும்
போதைத்தொடங்கிமருண்மாலைபோல்பவள்போனதென்னே
மாதைக்கலந்தவிடத்தார்திருவெங்கைவாணர்வெற்பிற்
கோதைச்செழுங்கதிர்வேல்வேந்தொடுமெக்கொடுஞ்சுரமே. ()

அச்சத்தன்மைக்கச்சமுற்றிரங்கல்.

ஆலமெழும்பொழுதவ்வெங்கைவாணர்க்கபயமென
வோலமிடுஞ்சுரர்போலேயபயமென்றேடுங்கொலோ
ஞாலமிடந்துதிரிந்தவக்கோலமுநாணவொரு
கோலமெழும்பொழுதஞ்சிமுன்போந்தகொழுநனுக்கே. (௫௬௦),

கண்டோரிரக்கம்.

துன்படுமையர் திருவெங்கைவாணர்சுடர்க்கிரிமேன்
மின்படுநுண்ணிடையாள்விளையாடியமென்பொழிலும்
பொன்படுமூசலும்வண்டலும்பாவையும்பூவையுங்கண்
டென்படுமோவறியேம்பெற்றதாயென்றிருப்பவளே. (௫௪௧)

செவிலியாற்றத்தாயைத்தேற்றல்.

வெல்லப்படாதவயில்விழியாள்செயல்வேறென்றன்றிச்
சொல்லப்படாதசெயலாய்முடியிற்றுயர்தனன்றே
வல்லற்படாதியன்னேவெங்கைவாணரருள்கொடுநான்
செல்லப்படாதவிடமேனுஞ்சென்றுதிருப்புவனே. (௫௪௨)

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினுதல்.

தன்னைத்தலைவனைநின்றுங்கறிந்துதவம்புணர்ந்து
முன்னைப்பவந்தொலைத்தீருண்மைகூறுமின்மூரிவெள்ள[ங்கள்
மின்னைப்பொருசெஞ்சடையில்வைத்தார்வெங்கைவெற்பிலெ
பொன்னைக்கரந்தொருகாளைகொண்டேதனிபோயினனே. ()

மிக்கோரேதுக்காட்டல்.

சேவிற்பிறங்குங்கொடிவெங்கைவாணர்சிலம்பணங்கே
பூவிற்பிறந்தபசுந்தேன்விரைவழிபோந்தணுகு
மாவிற்கலதுமலர்க்கேதுசெய்யுமவ்வாறெனவே
யேவிற்சிறந்தவிழியாணமக்குமென்றெண்ணுகவே. (௫௪௪)

செவிலியெயிற்றியோடுபுலம்பல்.

அள்ளியளைந்துபசுந்தாதளியினம்புயமென்
பள்ளியுறங்குந்திருவெங்கைவாணர்பனிவரையாள்
வள்ளிநடந்தவழிதூர்ந்திடாதவ்வழிநடந்தாள்
கள்ளிபடர்ந்தசுரத்தேவருமறக்காரிகையே. (௫௪௫)

செவிலிதூரவோடுபுலம்பல்.

புரவேபுரியுந் திருவெங்கைவாணர் புனையுமணி
யிரவேபுரையுமகலல்குலாளொட்டனை துயர
வரவேதகுவதன்றென்றுயிலைமலர்வாய் திறக்குங்
குரவேமொழிநல்குரவேநினக்கிதுகூறுதற்கே. (௩௪௬)

சுவடுகண்டிரங்கல்.

புலியோட்டரவுதொழுங்கூத்துடையவர்பூவையர்கைப்
பலியோடுயிர்கவர்வெங்கைபுரேசர்பனிவரைமேன்
மலியோதியினிசைவண்டுபெண்பாடுறும்வஞ்சியடி
கலியோமுனஞ்செலும்வெள்ளடியோடுகலந்ததுவே. (௩௪௭)

செவிலி கலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

வேண்டாருயிர்கவர்செவ்வேலிறைவனுமெல்லியலு
மீண்டாரெனவுண்மகிழ்ந்துநின்றேன்மலர்வேதன்முதன்
மாண்டாரெலும்பணிவெங்கைபுரேசர்மணிவரைமேற்
றூண்டாவிருஞ்சுடர்போல்வருவீரெதிர்தோன்றுறவே. (௩௪௮)

அவர்புலம்பதேற்றல்.

என்னூர்பெயரவ்விளங்காளையுமிவ்விலங்கிழையா
டன்னூர்பெயர்நும்பிணைவிழியாளுந்தனிவினவிப்
பொன்னூபுரவடிவஞ்சிபங்காளர்பொருந்துகொடி
மின்னூர்முகிலுறங்கும்பொழில்சூழ்வெங்கைமேவினரே. ()

செவிலி புதல்வியைக்காணாதுகவலைகூர்தல்.

சேணுடியமதில்வெங்கைபுரேசர்செழுஞ்சிலம்பின்
மாணுவலர்மொழிவார்க்கேதுசொல்வனென்வாய் திறந்து
நாணுதினியெங்ஙன்மீண்டெனன்னகர்நான்புகுவேன்
காணுமருங்குலொருமாதையாற்றிடைக்கண்டிலனே. (௩௫௦)

மீட்சி.

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குணர்த்தல்.

கூனும்பிறையொன்றணிவார்தம்வெங்கைக்குளிர்சிலம்பி
லூனுங்குருதியுந்தோய்வடிவேலனொருவனொடு
மானுங்கயலும்பணிவிழியாளரிமாவழங்கு
கானுங்கரைபொருகான்யாறுங்குன்றுங்கடந்தனளே. (௫௫௧)

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றல்.

சேய்விளையாடுந்திருமார்பர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
னீவிளையாடுஞ்சுனையீதுநாண்மலர்நீபறிப்ப
மாவிளையாடும்பொழிலதுகாணிளமந்திமுதிர்
வேய்விளையாடுமெவ்வெற்பேநம்வெற்புவிளங்கிழையே. (௫௫௨)

தலைவிமுன்செல்வோர்தம்மோடுதான்வரல் பாங்கியர்க்குணர்த்திவிடுத்தல்.

வேலையிற்றோன்றுநஞ்சுண்டோன்றிருவெங்கைவெற்பிலளி
சோலையிற்பாடுமெம்மூர்புகுவீரிதுசொன்மினறு
மாலையிற்றோன்றுங்கதிர்வேலவனொடுமாவழங்கு
பாலையிற்போயினமாதுவந்தாளென்றுபாங்கியர்க்கே. (௫௫௩)

ஆங்கவர்பாங்கியர்க்குணர்த்தல்.

வெளிறுந்தரளநகையீரரன்றிருவெங்கைவெற்பிற்
களிறும்பிடியுமுடங்குளைக்கோளரிகண்டுடைந்து
பிளிறுஞ்சுரத்திடைப்புக்கநும்மாதுபிறழுமின்போ
லொளிருங்கதிர்வடிவேலுடையானொடிங்குற்றனளே. (௫௫௪)

பாங்கியர்கேட்டுநற்றாய்க்குணர்த்தல்.

கீற்றுப்பிறையர்திருவெங்கைவாணர்கிரியிலன்னே
கூற்றுக்குடித்தவுயிர்மீண்டெனத்தன்கொழுநனொடு
வேற்றுப்புலத்தினின்றுற்றாளெனச்சிலர்மெய்யுரைத்தா
ராற்றுப்படுத்துன்மனத்தேயிருந்தவருந்துயரே. (௫௫௫)

நற்றாய் கேட்டவனுளங்கோள்வேலனைவினாதல்.
கைக்கால்சூலத்தர்வெங்கையிலேநற்கடவுடர
முக்கால்முமுணர்ந்தீருலகாளுமுடிமன்னவன்
மைக்காவியங்கண்மடமாதுடனெம்மனைவருமோ
தக்கார்புகழ்தம்மனைபுகுமோவொன்றுசாற்றுமினே. (ருகூ)

தன்மனைவரைதல்.

நற்றாய் மணமயர்வேட்கையிற்செவிலியைவினாதல்.
மின்னைப்பயந்தவெனக்கோகதிர்வடிவேலொருவன்
றன்னைப்பயந்தவனைக்கோதிருவடித்தாமரையில்
என்னைப்புரந்தவர்வெங்கையுன்னாய்மணமேற்றுவக்கும்
முன்னைத்தவமெவர்க்கோவறியேம்வந்துமுற்றுவதே. (ருஎ)

செவிலிக்கிதுளைவரைந்தமையுணர்த்தல்.
செவ்வாய்மடமயிறன்னையன்னேமணஞ்செய்திருந்தார்
வ்வாளரியனையாரென்றுதூதரறைந்தனராற்
சைவாகமந்திகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
லெவ்வாறறைவதறங்கோடிசெய்துமுன்னீன்றவட்கே. ()

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.
பொன்னாரிதழித்தொடையாளர்வெங்கைப்பொருப்பிலிந்த
நன்னாளினிவருங்காலத்துருதென்நன்மணஞ்செய்
தன்னாய்வருகின்றனர்மடமாதுடனன்பரென்று
சொன்னார்மொழிபிறழாதுண்மைகூறுநற்றாதுவரே. (ருகூ)

தலைவன்பாங்கிக்
கியான்வரைந்தமைநுமர்க்கியம்புசென்றேன்றல்.
ஊனெழுவாய்மழுவெங்கைபுரேசருயர்சிலம்பிற்
றேனெழுவார்குழலாய்நுமர்தேறத்தெளித்தருள்வாய்
வானெழுமீரமதிவாண்முகத்துங்கள்வல்லிதனை
யானெழுநாவொன்றுசான்றுகச்செய்தவிருமணமே. (ருகூ௦)

பாங்கி தானதுமுன்னேசாற்றியதுரைத்தல்.
பன்னாளருந்தவஞ்செய்ததன்மாதைப்பணியிமைய
நன்னாகநல்கவரைந்தார் திருவெங்கைநாடளிக்கு
மன்னாவெம்மேமவரைவளர்மாதைவரைந்தமைதான்
முன்னாவறிந்துபயந்தாடமக்குமொழிந்தனனே. (நசுக)

உடன்போக்கிடையீடு.

நீங்குங்கிழத்திபாங்கியர்தமக்குத்
தன்செலவுணர்த்திவிடுத்தல்.
வெறிமேவுகொன்றையம்பூந்தொடையார்திருவெங்கைவெற்பி
கறிமேவுமுப்பெனவன்பரிற்கூடிவெங்கானகத்தி [ற்
னெறிமேவுமங்கைமகிழ்ந்துசென்றாளெனநீருரைமின்
மறிமேவுமுண்கண்மடக்கொடிமாதர்க்குமாதவரே. (நசுஉ)

தலைமக டன்செலவீன்றாட்குணர்த்திவிடுத்தல்.
மின்னைத்திருத்துமவிர்சடையார்திருவெங்கைவெற்பிற்
பொன்னைப்பரித்ததிருமார்பரோடதர்போயினளென்
றென்னைக்கொடுத்துக்கலங்கவிழ்நாய்கனெனக்கவலு
மன்னைக்குரைத்தருளீர்வழுவாநெறியந்தணரே. (நசுந)

நற்றாய்க்கந்தணர்மொழிதல்.
அல்லஞ்சுகண்டர்திருவெங்கைவாணரணிவரையீ
ரில்லஞ்சுரமச்சுரமேதன்னில்லமெனக்கருதி
வல்லஞ்சுமென்முலையாணடந்தாளென்வழிச்செலவைச்
சொல்லந்தணவனைக்கென்றுவெம்பாலைச்சுரத்திடையே. ()

நற்ற யறத்தொடுநிற்றலிற்றமர்பின்சேறலைத்
தலைவிகண்டுதலைவற்குணர்த்தல்.
கல்வளைத்தன்றுபுரமெரித்தார்கருங்காவியங்கட்
பல்வளைச்செங்கைக்கொடிபாகர்வெங்கைப்பனிவரையாய்
வில்வளைத்தம்புபொழிந்தார்த்தெழுந்துவியன்சிலம்பைச்
செல்வளைப்புற்றதுபோல்வளைந்தாரெமர்தேரினையே. (நசுரு)

தலைமகடன்னைத்தலைமகன்விடுத்தல்.
செருகிக்கிடந்தமதிவேணியர் திருவெங்கைவெற்பிற்
சருகிற்புகுஞ்சுழல்காற்ருகுவன்பகைச்சார்வினரேற்
குருகிற்சிறந்தகைத்தோகாய் நமரைக்கொலாமையினு
லருகிற்செலவஞ்சுவேனிற்கநீயிவ்வதரிடையே. (ருசுசு)

தமருடன்செல்பவளவன்புறநோக்கிக் கவன்றரற்றல்.
கன்மலையென்னினுமவ்வேடர்பெய்யுங்கணைமழைக்கிங்
கென்மலையென்னும்புயத்தோர்க்கிடந்தருமிம்மலைதான்
ப்ன்மலையென்னுமணிமாடவெங்கைப்பழமலைவாழ்
பொன்மலைவெள்ளிமலைபோற்பொலிகபுகழ்படைத்தே. (ருசுஎ)

வரைதல்.

சென்றேன்மீண்டுவந் தந்தணர்சான்றேரைமுன்னிட்
டருங்கலந் தந்துவரைந்துழிக்கண்டோர்சாற்றல்.
கருவேரறுக்குந் திருவெங்கைவாணர்க்குங்கற்புமைக்கு
மருவேள்விநன்மணஞ்செய் துசெம்பாதிமெய்யாயினவால்
வருவேதநன்னெறிதான்வழுவாமன்மணம்புணர்ந்து
பொருவேலிறைவற்குநன்மாதினுக்குமெய்பூரித்தவே. (ருசுஅ)

வரைவியல் முற்றிற்று.

கற்பியல்.

இல்வாழ்க்கை.

தலைவன்றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்.
கலைகாணரும்புகழ்வெங்கைபுரேசர்கனகவெற்பிற்
குலைகாணலைபுனற்பண்ணையினுக்குபைங்கூழ்விளைவுற்
றலைகாணளவும்வருந்துகின்ருரிமென்னெஞ்சொடைமின்
முலைகாணளவும்வருந்திளைவாழிமுகிண்முலையே. (ருசுகூ)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

மால்போலிருக்குமிறைநீயணிந்தநன்மங்கலநாண்
பால்போலிருக்குமொழியாட்குவெங்கைப்பரனணிந்த
சேல்போலிருக்கும்விழிமாதுமையின்றிருக்கழுத்தி
னூல்போலிருக்கப்பெறுகதின்மாதவநோக்கடைந்தே. (௩எ0)

பாங்கிதலைவியை வரையுநாளளவும்
வருந்தாதிருந்தமை யுரையாயென்றல்.

போற்றலர்போற்றுங்கதிர்வேலவன்பொன்புனையளவு
நீற்றலர்மேனியர்வெங்கையிலேயுண்ணிரம்புசெந்தே
னூற்றலரொன்றிற்கொடிநுசுப்பாயிவ்வுலகநிறை
தூற்றலரெங்ஙனநீசுமந்தாற்றினைசொல்லுகவே. (௩எக)

பெருமகளுரைத்தல்.

வினைக்கூறுசெய்தன்றிருவடித்தாமரைமேவுறவென்
றனைக்கூவுமையர்திருவெங்கைவாணர்தடஞ்சிலம்பின்
முனைக்கூரயில்விழியாயின்றுகாறுமுதல்வருட
னெனைக்கூறிடுமலரேதுணையாகவிருந்தனனே. (௩எ௨)

தலைவனைப்பாங்கிவரையுநாளளவு
நிலைபெறவாற்றியநிலைமைவினுதல்.

வேலைதருவிடமிண்டோன்றிருவெங்கைவெற்பிலெழு
காலையிரவியனையாயெவ்வாறுகன்லிமுனஞ்
சோலையிளமயிலன்னாள்கழுத்திற்சுரும்புமுரன்
மாலையிடுமளவும்பொறுத்தாய்மலர்வாளியையே. (௩எ௩)

மன்றன்மனைவருசெவிலிக்கிதுளை யன்புறவுணர்த்தல்.

இலருமுளருமலர்வெங்கைவாணரிமையவெற்பி
லலருமலருமலர்த்துவெய்யோனுமன்றோன்றற்கொன்று
மலருமிருபொருளுண்டாயின்மங்கைக்குமன்னவற்கும்
பலருமிசையவொப்பாகுமன்னேயிப்படியகத்தே. (௩எ௪)

பாங்கி யில்வாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்.

பல்லறமாற்றியுமெல்லாமொருங்குபடத்துறந்தோர்
நல்லறமாற்றுந்துணையாகவும்பெறுநன்மையினு
லல்லறமாற்றுங்களத்தார் திருவெங்கையாரணங்கி
னில்லறமாற்றவுநன்றெனுமாலிவ்விருநிலமே. (௩எரு)

மணமனைச்சென்றுவந்தசெவிலி
போற்றேடிகற்பியனைற்றய்க்குணர்த்தல்.

மெய்யாமிறைவர் திருவெங்கைவாணர் தம்வெற்பில்வளைக்
கையாளுடனவ்வருந்ததிமாதொப்பள்கற்பினென்றாற்
பொய்யாமருங்குலவள்வாழுமூர்க்குப்புயல்களென்றும்
பெய்யாவிவளிடந்திங்கண்மும்மாரியும்பெய்திடுமே. (௩எசு)

நன்மனைவாழ்க்கைத்தன்மையுணர்த்தல்.

நூறுஞ்செறியிதழ்த்தாமரைத்தேனுமந்நுண்டுகளுஞ்
சேரும்பழனத்திருவெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
பேரும்பெருவிருந்தோடுதன்கேளைப்பிடிகடொறும்
வேறுஞ்சுவைபெறவூட்டிப்பின்றானுணுமெல்லியலே. (௩எள)

செவிலி நற்றய்க்கிருவர்காதலையுமறிவித்தல்.

கருமாமணிகண்டர்தென்வெங்கைவாணர்கைக்கார்முகமா
மொருமாமலையைவலங்கொண்டுகொலையுதயவெற்பில்
வருமாதவன்றிருத்தேர்மெய்ம்மைபோலப்புன்மாலையினிற்
செருமாமுகமுறச்சென்றாலுமன்பர்தந்தேர்வருமே. (௩எஅ)

பரத்தையிற்பிரிவு,

காதலன்பிரிவுழிக்கண்டோர்புலவிக்
கேதுவிதாமவ்விறைவிக்கென்றல்.

வெண்டாமரைமனையார்புகழ்ந்தேத்தரன்வெங்கைவயற்
றண்டாமரையையிசைபாடியாடித்தடவும்வரி
வண்டாமெனமடவார்பலர்சூழ்ந்தனர்மன்னவனைக்
கண்டாலனமனையாளூடற்கிங்கிதுகாரணமே. (௩எகூ)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினுதல்.

திரியாவருநிலையார்வெங்கைவாணர்செழுஞ்சிலம்பிற்
கரியானுமார்பிற்றிருமாதுமென்னக்கணவனுரம்
பிரியாதமையுமிக்காலத்திலேமன்பிரிந்தவர்போற்
றரியாதழுங்கினைமாதேயுனக்கென்கொல்சார்ந்ததுவே. (௬அ0)

இறைமகன்புறத்தோழுக்கிறைமகளுணர்த்தல்.

செய்ச்சேதகத்திற்குளிர்நடந்தாங்குச்செறிந்தவடு
மெய்ச்சேயிழைக்கொடியன்னூர்சடைத்தலைமேயினதாற்
கைச்சேரிடபக்கொடியாளர்வெங்கைக்கனகவெற்பின்
மைச்சேல்விழிச்செந்திருவேநம்வாய்தன்மணிவையமே. ()

தலைவியைப்பாங்கிகழறல்.

பலமாதருள்வெள்வளையூடியர்ந்தபழுதில்சலஞ்
சலமாமெனவுயர்மாதேதிருவெங்கைத்தாணுவெற்பி
னலமாமனையறஞ்செய்கடன்பூணுநயன்றிருந்து
குலமாதர்தங்கட்கியல்போதங்கேள்வர்குறைசொல்வதே. ()

தலைவி செவ்வணியணிந்துசேடியைவிடுப்புழி யவ்வணியுழையர்கண்டழுங்கிக்கூறல்.

நறுவாய்முருகுமிழ்வெண்டாமரையினகைம்திய
மறுவாயளிமுரல்செய்வெங்கைவாணர்வரைமடவீர்
வெறுவாய்மெல்வார்கட்கவல்கிடைத்தாங்குமுன்வீணிலிக
ழுறூவார்தமக்கிவ்வரத்தமெங்கேவந்துதவியதே. (௬அ௩)

பரத்தையர்கண்டுபழித்தல்.

பரைகவர்பங்கர்மதிவார்சடையர்பணியணியர்
தரைகவர்வண்புகழ்வெங்கைபுரேசர்தடஞ்சிலம்பில்
விரைகவர்வண்டுதொடர்வெட்சிசூடிமெம்மெல்லியலார்
நிரைகவர்கின்றவரோவறியேமிவர்நெஞ்சகமே. (௬அ௪)

பரத்தையர் நலகியனேக்கிவிடுத்தலிற்றலைமகன்
வரவுகண்டுவந்துவாயில்கண்மொழிதல்.

நாவலரென்றும்புகழ்வெங்கைவாணர்நன்ருடனையா
ளேவலர்தம்மையெதிர்கண்டபோதிலிரவியெதிர்
பூவலர்கின்றதெனவேமகிழ்ந்துபுவிபுரக்குங்
காவலர்வந்தனர்தாமேயுலகியல்காப்பதற்கே. (௩அ௫)

வரவுணர்பாங்கிதலைவிக்குணர்த்தல்.

மின்னுகியசெஞ்சடையார்திருவெங்கைவெற்பிலுனை
யுன்னுதகன்றவர்வந்தாரவர்செயலுன்னலைநீ
யின்னுசெய்தாரையொறுத்திடினன்மையியற்றுகெனச்
சொன்னர்புலவரறிந்திலையோபொற்சுடர்த்தொடியே. (௩அ௬)

தலைவனைத்தலைவியெதிர்கொண்டுபணிதல்.

அரவிடுங்கங்கணக்கையாளர்கொன்றையுமாத்தியுமே
விரவிடுஞ்செஞ்சடைவேதியனுர்திருவெங்கைவெற்பிற்
பரவிடுமெங்கள்விழியாரக்கண்டுன்பதம்பணிய
வரவிடுமெங்கையர்பல்லாண்டிருந்துயிர்வாழியவே. (௩அ௭)

புணர்ச்சியின்மகிழ்தல்.

நாவுண்கடலமுதொப்பாகுவதன்றுநல்லளிகள்
பூவுண்பொழில்புடைசூழ்வெங்கைவாணரைப்போற்றலுறும்
பாவுண்செவிச்சுவையேயெனலாமலர்ப்பாயலினி
லேவுண்கருங்கண்மடப்பாவைநல்கியவின்பினையே. (௩அ௮)

வெள்ளணியணிந்துவிடுத்துழித்தலைமகன்
வாயில்வேண்டல்.

மலைமகள்பங்கர்திருவெங்கைவாணர்மணிவரைமே
லலைமகளென்னவருமடவார்வெள்ளணியணிந்து
கலைமகளென்னவடைந்தனராலினிக்கானவர்தந்
தலைமகண்மெய்ந்நலங்காண்பானெனையார்தருபவரே. (௩அ௯)

தலைவிநேய்யாடியதிதுளைசாற்றல்.
மையாடியதடங்கண்ணுளொருநன்மகவுயிர்த்து
மெய்யாடியதிருவெண்ணீறழகர்தம்வெங்கையிலே
செய்யாடியநல்வலம்புரியீன்றசெழுமணிபோ
னெய்யாடினணல்வினைப்பயன்மேவுநெடுந்தகையே. (௩௯0)

தலைவன்றன்மனத்துவகைகூர்தல்.
பத்திரதன்மகனின்றேத்தும்வெங்கைப்பழமலையார்க்
கத்திரமன்னவிழியுமையாளயில்வேலவனைப்
புத்திரனென்னும்பொருள்படவீன்றிலள்பொன்னுரைத்த
சித்திரமன்னவள்புத்திரற்பூத்துச்சிறந்தனளே. (௩௯௧)

தலைவிக்கவன்வரல்பாங்கியுணர்த்தல்.
ஆடுந்தொழிலர்திருவெங்கைவாணரணிவரைமேற்
பாடுஞ்சுரும்புபடர்ந்தலர்பூத்தபசுங்கொடியை
நேடும்பணியெனநன்மகவீன்றநினைவிரும்பிக்
கூடும்படிவந்தனர்பிரிந்தேகியகொற்றவரே. (௩௯௨)

தலைவியுணர்ந்துதலைவனைடுபுலத்தல்.
பண்காணுறுமென்மொழிப்பங்கர்வெங்கைப்பனிவரையாய்
கண்காதளவுமக்காதேந்திளமுலைகாறுமுள
பெண்காணெனமுன்புரைத்ததுநீபெறும்பிள்ளைசுவைத்
துண்காலமென்முலைநுண்ணிடைகாறுமுளையென்றதே. ()

தலைவிபாணனைமறுத்தல்.
பைத்தலைநாகமணிவோன்றென்வெங்கைப்பனிவரைமேற்
செய்த்தலையூரனுனையீங்குவிட்டதுதேரிஞெரு
மெய்த்தலைநீட்டிநுழைவான்கருதிமுன்வெங்கரவன்
பொய்த்தலைகாட்டியதன்றேபண்பாடும்புலைமகனே. (௩௯௪)

---

(௩௯௧) பத்திரதன் - தசரதன்.

வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

வெல்வீரவாள்விழிமங்கைபங்காளர்தம்வெங்கைவெற்பி
னல்வீகமழ்புயத்துங்காதலர்பெயர்நானுரைப்பிற்
செல்வீயுலகரெனைவியந்தேகட்செவியுமிழ்செங்
கல்வீசுவரின்றுநீவீசினைகருங்கல்லினையே. (ருகரு)

விருந்தோடுவந்துழிப்பொறுத்தல்கண்டிறையோன்மகிழ்தல்.

திருந்துமரவப்பணியாளர்வெங்கைச்செழுஞ்சிலம்பி
லருந்துமமுதமருந்தாய்ப்பிணிகளைந்தாங்குமுத்து
முருந்துமனையநகையாளிதயமுனிவகற்றும்
விருந்தும்வருகதில்லென்றுமெப்போதுமெம்வீட்டினுக்கே. ()

விருந்துகண்டொளித்தவூடல்வெளிப்படநோக்கிச்சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

அறத்தாற்றியுந்திருவெங்கைவாணரணிவரைமேல்
வெறுத்தாலுனைமுனிவாற்றுநர்தாஞ்சிலர்வேறுளரோ
வொறுத்தார்பெறுமின்பமுநினையாமலொருவர்பிழை
பொறுத்தார்புகழுமறிந்திலையேமலர்ப்பூங்கொடியே. (ருகஎ)

இஃதெங்கையர்காணினன்றன்றென்றல்.

மையென்றகண்டர்தம்வெங்கையிலேவண்டுவாரிசமென்
கையென்றலம்வருநல்வயலூரகண்ணுற்றனரேற்
பொய்யென்றறிகிலரெங்கையர்நீசெயும்பொய்ம்மையினை
மெய்யென்றுளங்கொண்டொழியாரெழுந்ததம்வெஞ்சினமே.

நின்னலதியாரையுநினையேனென்றல்.

மின்னையலாமலுவமையில்வேணிநம்வெங்கைபுரி
மன்னையலாமலடியார்பிறரைமதிப்பரெனி
னின்னையலாமனினைவேன்பிறரையென்னெஞ்சகத்திற்
பொன்னையலாமலெதிரிலையாகியபூங்கொடியே. (ருகக)

காமக்கிழத்தியைக்கண்டமைபகர்தல்.

மறிந்தேதெருவிற்சிறுதேருருட்டுறுமைந்தனைப்போய்ச்
செறிந்தேதழுவக்கண்டுன்மகன்காணெனச்செப்பவெள்கிப்
பிறிந்தேகினளொருபெண்சோதிவெங்கைப்பெருந்தகையா
யறிந்தேனவளையிங்குன்மாமகன்றனக்கன்னையென்றே. (௪00)

தாமக்குழலியைப்பாங்கிதணித்தல்.

ஏயேதிலனாவிடாதன்பர்தாம்வந்திறைஞ்சிடவு
நீயேதுமெண்ணலையென்கொல்பொன்னேவிழிநீர்ப்பரவை
தூயேறுவந்தவர்தென்வெங்கைநாயகர்தூதுவராய்ப்
போயேயிரந்துகொளத்தீர்ந்தனடன்புலவியையே. (௪0௧)

தலைமகள்புலவி தணியாளாகத்தலைமகனூடல்.

விரும்பாமறவர்புரமூன்றெரித்தவர்வேணியினி
லரும்பாமதியொன்றணிந்தபிரான்வெங்கையன்னவயற்
கரும்பாமொழியென்மடமாதினுக்கெந்தக்காலமுமிவ்
விரும்பாமனமிலையாரோவறிதிங்கிருந்தவளே. (௪0௨)

பாங்கி யன்பிலைகோடியையெனத்தலைவனையிகழ்தல்.

தீம்பால்கமழுமணிவாய்ப்புதல்வற்குச்சிற்றெறும்பு
பூம்பாவையாகவருள்வோன்றென்வெங்கைப்பொருப்பிலிளங்
காம்பானதோளிமுன்வேம்புதந்தாலுங்கழைக்கரும்பாம்
வேம்பாமுனக்குக்கரும்பாயினுமின்றுவேலவனே. (௪0௩)

ஆயிழைமைந்தனுமாற்றமையுமே
வாயில்களாகவரவெதிர்கோடல்.

அறந்தாங்குமையவள்கொங்கைத்தழும்பழியாவுரத்தர்
பிறந்தாங்கறிகிலர்வெங்கைமன்னுதுப்பிலகுமொரு
நிறந்தாங்கரவிந்தவண்டோர்புன்முள்ளிநினைந்ததுபோன்
மறந்தாங்கிராமலெமைநீநினைந்ததெம்மாதவமே. (௪0௪)

மணந்தவன்போயபின்வந்தபாங்கியோ டிணங்கியமைந்தனையினிதிற்புகழ்தல்.

பிறந்தவன்றேநன்மணிநேர்புதல்வன்பிறர்கடைத்தேர்
பறந்தடைந்தாங்குநம்வாய்தலிலேவரப்பண்ணினனு
லிறந்தவங்கம்புனையெம்மான்றன்வெங்கையிலிம்மையினுஞ்
சிறந்தவின்பந்தரவல்லவனேயெனத்தேறினமே. (௪0௫)

தலைவிதலைவனைப்புகழ்தல்.

பண்ணுற்றமென்மொழியாய்தமிழ்நூலிசைப்பாவலர்தாம்
எண்ணுற்றநம்முயிர்க்காதலர்போல்பவரில்லையெனப் [யக்
பெண்ணுற்றபங்கர்தம்வெங்கையிலேதண்பெரும்பொழில்வா
கண்ணுற்றகாதலியின்றளவாகவுங்காட்டினரே. (௪0௬)

சிலைநுதற்பாங்கிதலைவியைப்புகழ்தல்.

கேளோர்பரத்தையிற்போகாதிருத்தலிற்கீர்த்திபெற்றும்
நாளோடிலங்குமருந்ததியோவொப்புநாகமணி
தோளோனொருதெய்வசூளாமணிவெங்கைத்தொன்னகரில்
வாளோவெனுங்கட்பிறைவாணுதலெங்கண்மாதினுக்கே. ()

ஓதற்பிரிவு.

ஓதற்குப்பிரிவுதலைமகன்றன்னு லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

விண்ணுடையார்புகழ்நூபுரப்பாதர்வெல்வேனெடுங்கட் [கே
பெண்ணுடையார்மகிழ்தென்வெங்கைமாநகர்ப்பெண்ணணங்
கண்ணுடையார்கற்றவரேகல்லார்கண்முகத்திரண்டு
புண்ணுடையாரெனக்கூறிநங்காதலர்போயினரே. (௪0௮)

தலைமகள் கார்ப்பருவங்கண்டுவருந்தல்.

சிலையோடுவந்தனவென்செய்குவேன்முகில்செங்கமலன்
றலையோடுகொண்டவர்வெங்கையிலேசெந்தமிழ்முதலாங்
கலையோதுவான்விழைந்துற்றார்க்கக்கல்விக்கடலதனுள்
ளிலையோவொன்றேனுமருள்வேண்டுமென்னவிசைப்பதுவே.

பாங்கியாற்றுவித்தல்.

என்போட்டரவணியெம்மான்றிருவெங்கையேந்திழையாய்
நின்போதகமன்னமன்னவர்தாமின்றுநீகளிப்பத்
துன்போடுகல்விக்கடன்மேய்ந்துசெய்யுளஞ்சோனைபெய்து
தன்போல்வருவதொன்றேவந்தாலிச்சலதரமே. (சகO)

காவற்பிரிவு.

காவற்குப்பிரிவுதலைமகன்றன்னா லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

கருமாமுகிலுறங்குஞ்சோலைவெங்கைக்கடவுண்முக்கட்
பெருமாடொழிலையொருநீபெறினும்பெறுகவென்றே
யொருமாநிலந்தனினம்முயிர்க்காவலரோங்குபுகழ்த்
திருமாறெழில்வைகுதுமென்றுபோயினர்தேமொழியே. ()

தலைமகள் கூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

கணையிலைவேலெனுங்கண்மாதுபங்கர்கருப்பவில்லிற்
கிணையிலையென்னுந்திருவெங்கைநாட்டிலிறைவரின்றே
வணையிலையென்செய்குவேன்முறையோவென்றரற்றுகினுந்
துணையிலையென்பதுகொண்டோவிவ்வாடைதுயர்செய்வதே.

தோழியாற்றுவித்தல்.

பனிபொருசெஞ்சுடரன்னார்திருவெங்கைப்பாவைநல்லாய்
முனிபொருவிந்தமெனவேக்கணவர்தம்முன்புரத்திற்
கனிபொருமெல்லிதழ்நன்மாதர்கொங்கைக்கரந்திடப்பன்
னுனிபொருகாலம்வரக்காதலர்நமைநோக்குவரே. (சகங)

(சகஉ) - கருப்ப இல் - கருப்பக்கிருகம்.

தூதிற்பிரிவு.

தூதிற்குப்பிரிவுதலைமகன்றன்னு
லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

சடைநின்றகங்கையர்வெங்கையிலேயொருசந்துசென்றார்
படைநின்றகண்ணிநங்காவலரின்றுபற்றுசொன்றுதான்
தொடைநின்றநேரிசைமுன்குறளுந்தனிச்சொல்லுமுற
விடைநின்றுகூட்டுதல்போலிருவேந்தையிசைப்பதற்கே. ()

தலைமகள் முன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

கருங்காளகண்டர்திருவெங்கைவாணர்கனகவெற்பிற்
பொருங்காவலர்தம்பகைதணிப்பான்முனம்போயினவர்
பெருங்கால்முன்பனிநாள்வந்தும்வந்திலர்பேதையர்மேல்
வருங்காமவெஞ்சரந்தன்னையுமாற்றமனமதித்தே. (சகரு)

தோழியாற்றுவித்தல்.

போதாகிவந்தபிறைவேணியர்வெங்கைப்பொன்னகரிற்
காதாகிவந்தநல்வள்ளையிற்றூங்குகனங்குழைசேர்
மாதாகிவந்தசெந்தேனேயவர்தம்வரவுசொலத்
தூதாகிவந்ததுமுன்பனிநாண்மன்னர்தூதுவர்க்கே. (சகசு)

துணைவயிற்பிரிவு.

துணைவயிற்பிரிவுதலைமகன்றன்னு
லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

கடுக்கையணிந்தமுடியோன்றிருவெங்கைக்காரிகையாய்
உடுக்கையிழந்தவன்கையோர்பொருளையொழித்ததனைத்
தடுக்கைவிரைந்ததுபோனட்டவேந்தன்றனக்குதவி
யடுக்கைவிழைந்துவினைவிடுத்தார்நட்பறிந்தவரோ. (சகஎ)

தலைமகள் பின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

நன்பனிவெண்மதியொன்றுடையோன்வெங்கைநாட்டொருதலை
பின்பனிருந்துயர்தீர் துணையாகவடலரிபோன் ஸ்
முன்பனிகஞ்செலச்சென்றவர்காண்கிலர்மூடியெங்கும்
பின்பனிபெய்துபெருந்துயர்வேலைபெருகுவதே. (சகஅ)

தோழியாற்றுவித்தல்.

நின்பாலுதவிநினைந்துவந்தார்கைந்நிமிர்த்தலரும்
பின்பாய்பனிவருநாள்யில்வேற்கட்பிறைநுதலாய்
தன்பாதமென்றலைக்கீவோன்றிருவெங்கைதன்னிலொரு
மன்பாலுதவிநினைந்துமுன்போயினமன்னவரோ. (சகக)

பொருள்வயிற்பிரிவு.

பொருள்வயிற்பிரிவுதலைமகன்றன்னா லுணர்ந்ததோழிதலைமகட்குணர்த்தல்.

திரைப்பாலெழுநஞ்சமுண்டோன்றிருவெங்கைத்தெண்கயத்தி
விரைப்பானலங்கண்விளங்கிழையாய்மகமேருவென்னும் [ன்
வரைப்பானிதியந்தரற்கேகினர்கடன்மாநிலத்தில்
விரப்பார்மிடிகள்புகுமிடந்தேடவிறையவரே. (சஉ0)

தலைவி யிளவேனிற்பருவங்கண்டுவருந்தல்.

போதந்திறைப்பவழறென்றல்பற்றுதல்போலவிளஞ்
சூதந்தழைக்குமிந்நாள்கண்டிலார்கொறுணிவொடுநால்
வேதந்துதிக்குந்தனிமூலகாரணர்வெங்கைவெற்பிற் ஸ்
பாதஞ்சிவக்கப்பொருள்வயிற்போயினபாதகரே. (சஉக)

தோழியாற்றுவித்தல்.

நாகூரரவணிவெங்கைப்புரேசர்நன்னாட்டிலொரு
பாகூர்மணிநெடுந்தேரன்பர்கேட்டுநின்பாலடைந்தார்
ராகூழ்பெறுவலிவெஞ்சின்வேள்வந்தமர்புரியக்
கூகூவெனவிள்மாவேறியேகுயில்கூவுவதே. (சஉஉ)

கற்பியல்.

தலைமகன்றலைமகளது
வுருவெளிப்பாடுகண்டுள்ளேவியத்தல்.

கூர்க்குங்கனன்மழுவார்வெங்கைவாணர்குளிர்சிலம்பிற்
சீர்க்குங்கயலுங்கருமேகமுந்தொண்டைத்தீங்கனியும்
வார்க்குங்குமமுலையுங்கொண்டுமாதெதிர்வந்துநின்றாள்
பார்க்குந்திசைதொறுமெங்கேயிம்மாயைபயின்றதுவே.(௪௨௫)

பாசறைமுற்றிமீண்டூர்வயின்வந்த
தலைவன்பாகற்குப்பரிவோடுமொழிதல்.

கார்கண்டகண்டர்திருவெங்கைவாணர்கனகவெற்பிற்.
போர்கண்டமன்னவர்நல்வலவாகம்புரவிநெடுந்
தேர்கண்டபோதிலிரிந்தாரினிமணித்தேரெதிர்செந்
நீர்கண்டமீனெனவுண்மகிழ்ந்தேவருநேரிழையே. (௪௨௪)

தலைமகளோடுகலந்துறுந்தலைமகன்
கார்ப்பருவங்கண்டுகளித்தியம்பல்.

கயலேயனையவிழியாளும்யானுங்கலந்துபுணர்
செயலேமருவியிருக்கின்றனமலர்த்தேனொழுகி
வயலேவிளையுந்திருவெங்கைவாணர்வரையில்வரும்
புயலேயினிமதியொன்றின்முக்காலும்பொழிபொழியே(௪௨௬)

கற்பியல்முற்றிற்று.

திருவெங்கைக்கோவைமுற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள்திருவடிவாழ்க.

பரிசோதனைப்பத்திரம்.

பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
* ஙசா	உ	வாறதஞெ	ர்ாதலிஞெ
* உக	ரு	மால்	வால்
* சக	உ	வாழுங்	நிற்குங்
* சகூ	ரு	முட்டு	ஒட்டு
* ருஅ	ரு	கொண்டு	கொண்ட
* சாஅ	க	ஃலவி	கலவை
அக	க	கலை	கலைக
கூஉ	க	குழைமு	குழை
கூச	,,	வுட	வுடை
* க0ரு	ச	கலைகா	கலையா
* க0சா	க	பாவாக்கிமுன்	பாவாக்கியைப்
ககஎ	க	தலைனை	தலைவனை
ககஅ	ச	ளைய	லைய
கருரு	ச	நிற்கத்	நிற்க
* உஎஎ	ரு	தமதருளாற்	தடஞ்சிலம்பிற்
* உஅக	ச	விறை	விறை
* உகூ0	ச	டுறுமே	டலென்னே
* உகூச	க	தாரம்	தார்தம்
ருகஎ	ரு	பயில்	புயல்
* ருஉஉ	உ	வேயப்	வெய்ய
* ருஉசா	க	வெங்கைவாணர்	யாளர்வெங்கை
* ருசரு	உ	வலாயாழ்	வளாமேல்
* ருரு0	ரு	னன்னகர்	னென்னகர்
* ருருரு	ரு	வழங்கு	வழங்காப்
ருசாக	ச	டமக்கு	டனக்கு
ருசாசா	க	தொருகி	செருகி
* ருஎக	க	பொன்புனைய	றொடைபூண
ருஎரு	க	மிண்	முண்
ருகூசா	ச	விருந்தும்	விருந்து

* இக்குறியிடப்பட்டவை அச்சிட்டபின்கிடைத்த பிரதிபேதங்கள்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

நல்லாற்றூர் அல்லது துறைமங்கலம்

சிவப்பிரகாசசுவாமிகள்

அருளிச்செய்த

திருவெங்கைக்கலம்பகம்,

திருவெங்கையுலா.

இவை,

திருக்கைலாசபரம்பரைப்

பொம்மபுரம்

ஸ்ரீ சிவஞானபாலையதேசிகராதீனத்துச்

சிதம்பரம்

இராமலிங்கசுவாமிகளால்

பரிசோதிக்கப்பட்டு

காயாறு. ஞானசுந்தரஐயராலும்

காணியம்பாக்கம்

முருகேசமுதலியாராலும்

சென்னை

இந்துதியலாஜிகல்யந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

விகிர்தி௵ கார்த்திகைமீ.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைமான்மியம்.

நடுநாட்டிலே, *துறைமங்கலத்திலே, மூந்நூறுவருடங்கட்குமுன்னே, பண்டகுலத்திலே, வல்லகோலாதிபதியென்னும் பட்டப்பெயர்பெற்று குறுநிலமன்னவராய் இலிங்காரெட்டியார் என்பவர் ஒருவரிருந்தார்.

அவர் கல்வியறிவு வொழுக்கங்களினும், குருலிங்கசங்கமபத்தியினும், வீரசைவாநுஷ்டானத்தினும் மிகச் சிறப்புற்றவராய் வாழுநாளில், பிரதோஷகாலத்திலே, சிவதரிசனஞ்செய்தே போசனஞ் செய்யவேண்டுமென்னும் நியமமேற்கொண்டு, தமது நகரத்திற்கும் விருத்தாசலத்திற்கும் சுமார் நான்குகாவதமிருக்கவும், அத்தலத்தில் வீற்றிருக்கும் பழமலைநாதரிடத்தும் பெரியநாயகியம்மையாரிடத்தும் அத்தியந்தபத்தியுடையராய்ப் பிரதோஷகட்டளையேற்படுத்தி, தமது அருந்தவத்தாலுதித்த அண்ணாமலைரெட்டியா ரென்னும் சற்புத்திரரோடு, அப்புண்ணியகாலந்தோறும் தவறாமற்சென்று, தரிசனஞ்செய்துவந்தார்.

அக்காலத்திலே ஒருநாள், பிரதோஷதினத்திலே, தரிசனத்தின்பொருட்டு புத்திரரோடு புறப்பட்டுவருங்கால், போ

---

* இது வாலிகண்டபுரத்திற்குத் தென்பாகத்திலுள்ளது.

று என்கிற வெள்ளாறு இருகரையினும்பெருகி ஓடமுதலியவும் செல்லுதற்கு இடங்கொடாதிருப்பதைநோக்கி, இலிங்காரெட்டியார் மனம் நைதலோடு, "யாங்கள் சிவபெருமானுக்குத் தொண்டராயின் இந்நதி வழிவிடுக; இன்றேல், இதிலிறப்பதே தகுதி" எனப்பிரதிக்ஞைசெய்துகொண்டு, துணிவோடு அந்நதியிலிறங்கலும், அது சிவபெருமான்திருவருளால் வழிவிடக்கண்டு, "எளியேங்களிடத்தும் எம்பெருமான்றிருவருள் இருந்தவாறு என்னே!" என்றுவியந்து, புத்திரரோடுசென்று, பழமலைநாதரையும் பெரியநாயகியம்மையாரையும் தரிசித்து, மனமுருகிப் பலவாறு துதித்து, தமக்குச் சிவபெருமான்பாலித்த திருவருளைச் சிந்திக்குந்தோறும் பேராநந்தமுடையவராய், அத்தலத்திலேயே தங்கினர். அன்றிரவிலே, பழமலைநாதர் அவர்கள் சொப்பனத்திலே, ஒரு சிவனடியார்போலத் தோன்றி, "நீங்கள் என் இவ்வாறு கஷ்டத்தை யடைகின்றீர்கள்; யாம் உங்கள் ஆளுகையிலமைந்த * திருவெங்கை நகரத்திலே இன்னதானத்திலே திருவுருக்கொண்டு வீற்றிருக்கின்றோம்; ஆலயமமைத்து வழிபடுவீராக; அமைக்குங்கால், வடதேசத்திலிருந்து க்ஷாமத்தினால்மெலிந்து சில சிற்பர்கள் வருவார்கள்; அவர்களாலே திருப்பணி பூர்த்தியாகும்" என்று கட்டளையிட்டு மறைந்தருளினர்.

அவ்வாஞ்ஞையின்படியே திருவெங்கைநகரத்தை யடைந்து, குறிப்பித்த தானத்திலே பரிசோதிக்க; அங்கே பூமிக்குள், ஒருசிவலிங்கமும், அம்பிகைமுதலிய சில மூர்த்தங்களும்

---

* இது வாலிகண்டபுரத்தின் வடமேற்பாகத்திலே திருவெங்கனூரென வழங்குகின்றது.

இருக்கக்கண்டு அளவிடப்படாத ஆனந்த சாகரத்தின்மூழ்கி, திருவருளைப்பரவி, அப்பொழுதே சுவாமிக்குப் பழமலைநாதரெனவும், தேவிக்குப் பெரியநாயகியம்மையெனவும் திருநாமந் தரித்து, சிறிய ஆலயம்அமைத்து, நித்தியபூசை ஏற்படுத்தினர். அந்நாளிலே, சிவாக்கினையின்படியே வடதேசத்திலிருந்து சில சிற்பர்கள்வர ; அவர்களுடைய நூலுணர்ச்சிமுதலிய உத்தம குணங்களனைத்தையும் நோக்கி, அதிசயித்து, வேண்டும் பொருள்களை வெறுக்கக்கொடுத்து, அவர்களை அத்தலத்திற்றானே குடியேற்றி, திருப்பணிகளை யியற்றிவருங்கால், இலிங்காரெட்டியார் சிவலிங்க ஐக்கியமாய்விட்டமையால், அண்ணாமலை ரெட்டியாரே தலைவராகவிருந்து, அவரினும் மிகச்சிறப்பாக நடத்திவந்தார்.

ஒருதினத்திலே, அச்சிற்பர்களுக்குத் தலைவனானவன் கருப்பக்கிருகத்தின்கீழே கட்டப்பட்டிருக்கும் சாரத்தின்மேலிருந்துகொண்டு, வேலைக்காரனை வெற்றிலைமடித்துக் கொடுத்தற் பொருட்டு அழைக்க ; அவன் அத்தருணம் அங்கில்லாமையால் அண்ணாமலைரெட்டியார் அவ்வேலைமுட்டுப்படாவண்ணம் தாம் கீழிருந்து, மடித்துக்கொடுத்தனர். அச்சிற்பன் சாரத்தினது மறைப்பால் இன்னாரெனத்தெளியாது, இடதுகரத்தால் வாங்கியுட்கொண்டபின் உண்மைதெளிந்து, ஓகோ ! என்செய்தோமெனப் பெரிதும் இடரின்மூழ்கி, அபசாரஞ்செய்த அந்த கரத்தைத்துணிக்க எத்தனித்தலும் ; ரெட்டியார் அவனைநோக்கி, "கரத்தைத்துணிப்பது தகுதியன்று ; அக்கரத்தைக்கொண்டு உனக்குத் தெரிந்துள்ள அரியவேலைகளெல்லாம் அமைய இத் திருப்பணியைப்பூர்த்திசெய்யின் என்றும் நின்பெயர் நிலைபெறு

வதன்றியும் நினக்கு எய்துதற்கரிய சிவகதிபெறுதற்கும் இதுவே ஏதுவாகும்.'' என்று வற்புறுத்தினர். சிற்பனும் இவ்வுத்தமோத்தம உறுதிவாக்கியத்தைக் கேட்டு, பெருமகிழ்சிறந்து, முன்கட்டிய கருப்பக்கிருகத்தை முற்றும் பிரித்துவிட்டு, இத்திருப்பணிபோல யாண்டுமில்லையென யாவருங்கொண்டாட அதிவிசித்திரமாக அமைத்துமுடித்தனன்.

அதுகண்ட அண்ணாமலைரெட்டியாரும் அகங்களிகூர்ந்து, அர்த்தமண்டபமுதலிய திருப்பணிகளை ஒருவாறுமுடித்து, * சாலிவாகன சகாப்தம் - கருசடுரு ஆகிய உருத்திரோற்காரிரு வைகாசிமாசத்தில் பூர்வபக்ஷ துவாதசியும் அஸ்தநக்ஷத்திரமும்கூடிய குருவார சுபதினத்திலே, ஆபத்தோத்தாரண சிவாசாரியார் குமாரர் பிழைபொறுத்த சிவாசாரியாரால், விநாயகர்முதலிய சகல மூர்த்தங்களுடன் பழமலைநாதரையும் பெரியநாயகியம்மையாரையும் பிரதிஷ்டைசெய்வித்து, கும்பாபிஷேகமும்நடத்துவித்து; பின்னும் வேண்டிய பெரும்பொருள்செலவிட்டு மஹாமண்டபம் நிருத்தமண்டபம் இரண்டு பிராகாரம் கோபுரம் திருமதில் திருக்குளமுதலிய திருப்பணிகளைக் குறைவற இயற்றிக்கொண்டிருந்தனர்.

---

*இது மேற்படி அண்ணாமலைரெட்டியார் சந்ததியாராய்த் தற்காலத்திலுள்ளசிவநேசமிக்க விர்த்தாசலரெட்டியார் முன்னிலையில் அத்தலத்திலுள்ள சிலாசாசனத்திலிருந்து எடுத்தெழுதப்பட்டது ; ஆனல், அண்ணாமலைரெட்டியாரே திருப்பணிமுடித்துக் கும்பாபிஷேகம் நடத்துவித்திருக்கவும் அவர்பிதா நடத்துவித்ததாக அச்சாசனத்திலிருப்பது அவர் முதலிலே திருப்பணிதொடங்கியமைநோக்கிக் குறித்திருக்கலாம்.

அந்நாளிலே, சிவப்பிரகாச சுவாமிகள் தக்ஷிண யாத்திரையை விரும்பிச் சகோதரர்களோடு காஞ்சியினின்றும் புறப்பட்டு, திருவண்ணாமலை முதலிய திவ்விய தலங்களைத் தரிசித்துக்கொண்டு வரும்போது, துறைமங்கலத்தை யடைந்து, ஒரு நந்தனவனத்திலே சிவபூசை செய்துகொண்டிருந்தார். ரெட்டியார் சுவாமிகளுடைய அற்புதமகிமைகளைக் கேள்வியுற்று அங்கடைந்து, தரிசித்தமாத்திரத்திலே அவர்களிடத்தே அநுக்கிரகம்பெறவிரும்பி அடிமைபூண்டு, "சுவாமி! தேவரீர் இவ்விடத்தில் வாசஞ்செய்தருளவேண்டும்" என்றுபிரார்த்தித்து, உடன்படுத்தி, தங்கள்குருவாகிய சென்னவசவையர்மடத்திற்கு மேற்றிசையில் ஒருதிருமடங்கட்டி. அதில் சுவாமிகளையெழுந்தருளுவித்து, அகோராத்திரம்பிரிவின்றி அணுக்கத்தொண்டராயமர்ந்திருக்க; சுவாமிகள் அவருக்குச் சன்மார்க்கங்களைப் போதித்துக்கொண்டு, இரண்டுவருஷம்வரையில் அங்கேவீற்றிருந்து, பின்பு தக்ஷிணதேசஞ்சென்று யாத்திரையை முடித்துக்கொண்டு, மீட்டுந் துறைமங்கலத்தையடைந்து, அண்ணாமலைரெட்டியாரால் திருவெங்கையிலே தம்பொருட்டுக் கட்டுவிக்கப்பட்ட திருமடத்திலே வீற்றிருந்துகொண்டு அத்தலத்தைச்சுட்டித் தாமருளிச்செய்த திருவெங்கைக்கோவை திருவெங்கைக்கலம்பகம் திருவெங்கையுலா திருவெங்கையலங்காரம் என்னும் நான்கு பிரபந்தங்களுள்ளே, உலாவில், (சுக) வது கண்ணிமுதல் (சுஎ) வது கண்ணிவரையும் அண்ணாமலை ரெட்டியார் பெருமையையும் திருப்பணியி னருமையையும் பாராட்டியருளினமையேயன்றி, கோவையினும் "வல்லகோலுக்கு வல்ல அண்ணாமலையார் கட்டுகோயில்" எனவும், "கருப்ப இல்லிற்கிணையில்லையென்னும் திருவெங்கை" எனவும் சிறப்பித்து,

அப்பிரபந்தங்களைச் சந்நிதியிலரங்கேற்றி, சின்னாள்வசித்து, சிதம்பரத்தையடைந்தருளினர்.

அண்ணாமலைரெட்டியாரும் பிரிவாற்றாமையால் உடன்சென்று, சிற்சபாநாயகரையும் சிவகாமியம்மையையும் தரிசித்து, அங்கே சுவாமிகள் எழுந்தருளியிருத்தற்கு ஒரு திருமடங்கட்டுவித்து, சிலநாள்வாசஞ்செய்து, அநுமதிபெற்றுச்சென்று, துறையங்கலத்திலிருந்துகொண்டு, சிவப்பிரகாசசுவாமிகள் தரிசனத்தின்பொருட்டு எத்தலத்திற்கெழுந்தருளினும் தாமும் அத்தலங்கடோறுஞ்சென்று, தரிசித்துமீளுவர். அன்றியும், அன்புமேலீட்டால் தாம் அங்கே ஒரு தூணிலமைத்துவைத்த சிவப்பிரகாசசுவாமிகள் திருவுருவத்திற்கு நித்திய பூசையும், பழமலைநாதருக்கு நித்தியநைமித்திகங்களும் திருவிழாவும் அதிசிறப்பாக நடத்துவித்து, காலந்தோறும் தரிசனஞ்செய்துகொண்டு, திருவருட்குப் பாத்திரராய்ச் சிலகாலம் வாழ்ந்திருந்து, சிவலிங்க ஐக்கியமாயினர்.

திருவெங்கைமான்மியம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கைக்கலம்பகம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

பொன்னுலவும் வெங்கைப் புனிதற் கடியேனு
முன்னுங் கலம்பகப்பாட் டோதுகேன்—றன்னைநிகர்
முத்திதரு மன்னோன் முழுதருளி னூற்பூத்த
வத்திதனைக் கண்டவத னால்.

ஒருபோத மயங்கிசைக் கோச்சகக்கலிப்பா.

சீர்பூத்த நிறைமதிமான் றிருக்கரங்கொண் டம்மதியை
யேர்பூத்த சடாமௌலிக் கியையவீர்ந் தனையிருத்தி
மற்றையவோர் பகவுமணி மார்பகத்திற் கிடந்திமைப்பக்
கொற்றவநீ யிருங்கேழற் கோடெனப்பூண் டருளினைகொல்
பூம்புனலோ பொன்முடிக்கட் புல்லோநஞ் சுமிழெயிற்றுப்
பாம்பினமோ கண்டனது பாணியின்மான் றுவ்வவதே.

இது ஆறடித்தரவு.

காமத்திற் படிலுமையாங் கடுநிரயத் திடவெமென
நாமத்திற் படவெமக்கு நவின்றொருவன் றூதாய்நீ
யாமத்திற் றனியிருட்க ணேந்திழைபா லெய்தியதென்.

நீவிர்புல வருந்திலெரி நிரயத்தி லிடுவெமெனத்
தேவவெமக் கியம்பினைநீ சிலைவேட னிடும்பிசித
மாவலொடு மிசைந்தவனுக் கருளினைமெய்க் கதியென்சொல்.

ஒன்றொருயிர் தனைச்செகுப்பி னுமைநிரயத் திடுவமென
மன்றறைய வெமக்கியம்பி மைந்தனைமுன் றந்தைதனைக்
கொன்றவரை யுவந்தருளிக் கொடுத்தனைவா னுலகென்கொல்.

இவைமூன்றும் மூவடித்தாழிசை.

எனமிகு வளமுள வியலதி சயமொடு
முனிவரர் பலவகை மொழிதரு புகழினை.
பலகலை வலபுல னிலைமல வலைமலை
சிலரல துலகலை கலர்சொல விலகிலை.

இவையிரண்டும் ஈரடியராகம்.

எனவாங்கு, இது தனிச்சொல்.

எழில்விகண் படுக்கும் பொழில்புடை சூழ்ந்த
வெங்கையம் பதிவா ழெங்க ணுயக
பழமலை நாதநிற் பரவுவன் விசும்பி
னரையனுக் கரைய னுகுமந் நிலையு
நினைகிலன் றமியே னின்னடி யவர்கட்
கென்று மடியவ னுகு
மொன்றொரு வரமு முதவுதி யெனவே. (௧)

இதுஎழடிநேரிசையாசிரியச்சுரிதகம்.

நேரிசைவெண்பா.

எவ்வா றளித்த திமையப் புதுமலைதன்
னெவ்வா விளமை யொருமகளை — யவ்வான்
பரவுதிரு வெங்கைப் பழமலையே நிற்கு
விரவுகிளை யோடும் விழைந்து. (௨)

கட்டளைக்கலித்துறை.

விழக்க மலங்களை மோதிவல் வாளை வியன்படுகெ
ருழக்க மலங்களை போய்ப்புகும் வெங்கை யொருவவிண்ணோர்
தொழக்க மலங்களை மாமதி வேணி சுமந்தருள்வோய்
பழக்க மலங்களை யான்பவ வேரைப் பறிப்பதற்கே. (௩)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பரந்தபுகழ்த் திருவெங்கைப் பழமலையார் தமைத்துதித்துப் பதத்து மென்பூச், சொரிந்துபணிந் திரந்திடவு மெமக்கருளச் சிறிதுமுளந் துணிந்தா ரல்லர், திருந்தவையிற் பித்தவென வைதுகல்லா லெறிந்துபொருஞ் சிலையான் மோதி, யரந்தையின்மெய்க் கதிதருதி யெனக்கேட்போர்க் கன்றியவ ரளித்தி டாரே. (௪)

மறம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அளியாரு மலர்ப்பொழில்சூழ் வெங்கை யீச ரம்மலையி லெம்மூர்மான் பிடிப்போ மென்றுங், களியாரும் வேடர்யா மெம்மகற்குக் கன்னிதனைத் தருகவெனக் கொடுத்த வெம்மை, யெளியாரென் றெருதூதா மாது வேண்டி யிறைவர்திரு முகமெனமற் றொன்று தந்தா, யொளியாம லுரையவன்யா ரியாங்களின்னே யுண்மையவன் றிருமுகங்கொண் டெய்து வோமே.

நேரிசைவெண்பா.

மேதகைய * வில்லிறைவன் வில்லிளவல் வல்வீரர்
காதனிக மற்றுங் கருதெவையும் — பாதத்
தொருவிரலாம் வெங்கையர னென்றுமை யாசைப்
பருவரலாற் காணப் படும். (௬)

---

*வில்லிறைவன் - இராமர், பருவிரலால் என்றும்பாடம்.

மடக்கு, தாழிசை.

படமெத்தமிழுக் குவந்தவிறை விடமெத்தமிழுக் குவந்தவிறை
பண்டங்கரிய வடிவாமன் கண்டங்கரிய வடிவாமன்
சடையிற்படமம் புயனிசையான் ரெடையற்படமம் புயனிசையான்
சம்புவனமாக் குணர்வாக னம்புவனமாக் குணர்வாகன்
கடலைக்கலக்கு மலைவில்லா னுடலைக்கலக்கு மலைவில்லான்
கங்கைப்பதியன் பரையானுன் வெங்கைப்பதியன் பரையானு
னடலைப்புரத்தங் கணையெய்தா னுடலைப்புரத்தங் கணையெய்தா
னன்பினிகழ வணங்கீரே துன்பினிகழ வணங்கீரே. (எ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கீற்றுப் பிறையை யணிந்ததிரு வெங்கை விருத்த கிரிநாத,
னூற்றுப் பொருளைக் குளத்திலொரு புலவர்க் களைத்தன் றருளினேன், சோற்றுத் துறையுந் திருநெய்த்தா னமுமீங் குடையான் சுழலாமற், றேற்றுப் பசிநோய் தொலைப்பனவன் றனையே துதியீர் புலவீரே. (அ)

அம்மானை. மடக்கு. கலித்தாழிசை.

புண்ணியனம் வெங்கைப் புனிதனயன் மாலெதிரே
யண்ணலரும் பேரொளியா யன்றெழுந்தா னம்மானை
யண்ணலரும் பேரொளியா யன்றெழுந்தா னுமாகிற்
கண்ணி லவரெளிதிற் காணுரோ வம்மானை
கண்ணின்றிக் காணுங் கதிரொளிகா ணம்மானை. (க)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அம்புமே லிருக்கு நாரி யடற்சிலை கொண்ட வெங்கை
யெம்பிரா னெடும்போர் செய்வ னென்றுதன்னிதயத்தெண்ணி

யம்பின்மே லிருக்கு நாரி யருஞ்சிலை கரங்கொண் டேற்றோ
னெம்பெரு வமுதன் ஞானை யென்செயா னுலகிற் றானே. (கo)

கலித்துறை.

தாமங் கமழு மொய்ம்புடை யன்பர் தமியேன்வெங்
காமங் கனலு மனமொடு துன்பக் கடல்வீழ
வேமங் கருதிச் சென்றன ருமையன் றிதுகொண்டோ
வாமங் கலவெங் கைப்பர னேடொன் றுனாளே. (கக)

கலிவிருத்தம்.

ஆயிழை மகளிர்வா ழகங்க டோறுமுன்
னீயிரும் பலிகொள நினைந்து வெங்கையிற்
றூயநின் சடையினிற் சோமன் சுற்றியே
யேயினை வெற்றனை யாகி யென்னையே. (கஉ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

என்றனை முகத்தின் வென்று ளிவளெனும் பகையுட் கொண்
பின்றலி லன்ப ரொன்று பிரிவரொன் றிருந்து வெங்கை [டோ
மின்றிகழ் சடிலத் தண்ணன் மேவலர் போல்வெண் டிங்கள்
வன்றுய ருழக்க வென்மேன் மலிதழல் சொரியும் வாறே. ()

மேற்படிவேறு.

வாசக் கமல மலர்த்திருவே மயிலே யென்கண் மணியேநின்
றேசைக் குமுத மலர்வாயி னமுதம் பெறுதற் கரிதாயோ

(கo) சிவபெருமானுக்கு அம்பு திருமாலும் நாண் ஆதிசேட னுமாகலின் அம்பு மேலிருக்கு நாரி என்றும், மன்மதனுக்கு அம்பு மலரும் நாண் வண்டுமாகலின் அம்பின்மேலிருக்கும் நாரி யென்றும் முரண்பட விதந்தபடி.

வோசைக் கடலைக் கடைந்துகடு வுமிழ வ மயோ ரொடும்வெ
யீசற் கபய மபயமென விரிந்தான் மேனி கரிந்தானே. [ங்கை

வண்ணம்.

கன்றுக்கர மலராண்முக விந்துத்தவி சடைமீனிகர்
கண்டத்தணி மணிமாலையள் கயிலையங்கிரியார்
கங்கைச்சடை முடிநேடிய துங்கப்பற வையுநாடுற
கஞ்சத்திரு வடியீதென நவில்சிலம்படியாள்
வென்றிச்சிலை மதன்வாள்களி னஞ்சைத்தட வுதல்போலமை
விஞ்சப்புனை விழியாளொளி பெருகுசெங்குழையாள்
விம்பப்பிறை யெனநீறிடு சந்தச்சிலை நுதலாடிரு
வெங்கைப்பழ மலைநாயகர் பவனிவந்திடவே
சென்றுற்றன டொழுதாளுமை தங்கப்படு புறநாடினள்
செங்கைக்கவி னுழையீதிவள் பயில்வதொன்றறியாள்
சிந்தித்தன ளொருமாதினி யிந்தப்புற முறமானெழி
செங்கைக்கணு மிவரேகொளி னனிசிறந்திடுமே
யென்றித்தகை பலகூறினள் கொங்கைச்சுவ டுறுமார்பினை
யின்பத்தொடு மெதிர்நாடின ளனையணைந்தருளா
லிந்தப்படி தமியேன்முலை சந்தத்திரு மணிமார்பழ
கெஞ்சப்படு கிலர்பாரொன் மதிமயங்கினளே. (கரு)

நேரிசையாசிரியப்பா.

மதிநுதற் பவள வாய்க்கருந் தடங்கட்
குவிமுலைப் பசும்பொற் கொடிதனை யமையாக்
காதன்மீ தூரக் கலவிசெய் திடுவான்
புகும்பொழு தவளொரு பொருமையுட் கிடப்பப்
டு படர்முதிர் வேனிற் பகற்கொடும் பாலை
நிலத்துநீர் வேட்டோ னீரரி தினிற்பெற்
றுண்புழி யுண்ணு தொல்லையிற் றடுக்குஞ்

செயலென வெனைநீ தீண்டே லென்று
நின்மே லாணை நிகழ்த்திட நீங்கிப்
புணரியுண் டெழுந்த புயனிகர் வள்குழ
லஃதுணு முகில்போன் றழகுறுங் காறுந்
தீண்டா தொருபூஞ் சேக்கையிற் றுயின்று
மாறா வன்பு வளர்மனத் தவனே
மிளிர்தரு ஞர்த்த வேடமா தவனாய்
நீமுன் கற்பு நீங்கா மாதைத்
தருகெனக் கொடுத்துத் தன்பெருங் கிளைஞர்
மானமீக் கூர வந்தனர் சூழ
வொன்னலர் போல வுடன்றவர்ப் படுத்துக்
கனையில்பே ருவகைக் கடல்படிந் தவனே
திருமணக் கோலஞ் செய்துவீற் றிருந்த
வொருமகள் கூந்த லையநின் னுருவங்
கரந்துசென் றிரப்பக் களித்தக மணப்பூம்
பந்தரிற் கிளைஞர் பலருங் காண
வரிந்து கொடுத்த வடியவன் றானே
நின்னொரு விழிசெந் நீர்கொளக் கலங்கித்
தன்னொரு விழிவெஞ் சரத்தினா லிடந்து
சாத்தி மற்றைத் தடங்கணவ் வகைபெற
வின்னமுண் டொருக வென்றுளங் களித்து
மற்றதுங் களைவான் வாளிநட் டவனே
மருவலன் புணர்ப்பான் மாய்ப்பமெய்த் தவன்போல்
வந்தனன் படையான் மார்பிடைத் தாக்கக்
கண்டெட் கடைத்தலைக் காவல னொருவன்
வெகுண்டவற் றுணிப்பான் விரைந்துசென் றெய்த
வானையாற் றடுத்த வரச ரேறே

பொருகளத் தொட்டலன் புனைநுத னீறு
கண்டுனைப் போலக் கருதிமற் றவனைத்
தன்படை சாய்த்தவன் றன்படை மார்பிற்
றூக்கக் கொடுத்த தளர்விலன் பினனே
வருஞ்சிறு மகனை யரிந்துநிற் கட்டுப்
படைத்துக் களிகூர் பரிவுடை யவனே
நின்சின கரத்து நீக்குபூ மோந்த
மாதுமூக் கரிந்த மலிபெருந் தவனே
துணுக்கென வவள்கை துணித்தகொற் றவனே
சந்தன மாகச் சாத்தநின் றனக்கு
முன்கை தேய்த்து முகமலர்ந் தவனே
செயற்கருஞ் செய்கை செய்தவன் யார்கொல்
பகருதி வெங்கைப் பழமலை நாத
பராபர முக்கட் பகவசங் கரசிவ
கருணா கரதிருக் கயிலை நாயக
வென்றருந் தவர்க ளேத்தும்
பின்றிகழ் சடிலப் பெருந்தகை யோனே. (கசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பெருந்தகைமை தனக்கன்றி மற்றையபூ வினுக்கிலையென் பெற்றி யன்றே, திருந்துதட மதிற்குவளை குமுதமொரோ ருறுப்பினையே சிவணநிற்ப, முருந்துநகை யுமைகணவன் றிருவெங்கை யனையாயுன் முகம்பொற் றுள்கை, புனைந்திடுதற் கரவிந்த மொருதாளி னின்றுதவம் புரித றானே. (கள)

தாழிசை.

தாராம விருந்தாரொளி யாளாம விருந்தார்
தனிவெங்கையை யுள்ளார்மய றவிரும்படி யுன்னார்
சீராரிசை வண்டேயொழி கிலவேள்கர வண்டே
செறிகின்றிலை குருகேதுய ரறிகின்றிலை குருகே

வராய்மட மயிலேமிகு தாய்மார்சொலு மயிலே
வானூடெழு மதியேயெனை முனியாதருண் மதியே
யூரார்புகல் வம்பேயென விழியோவில வம்பே
யுரையாயவ ருழையேயென தகலாவிட ருழையே (கஅ)

வஞ்சிவிருத்தம்.

உழையென வெங்கை யுவப்பானூர்
தழலுரு வென்ற தரத்தாலோ
விழவெமை யின்று வெதுப்பாமே
லெழுமதி யொன்றை யெடுத்தாரோ. (கக)

நேரிசைவெண்பா.

எடுக்குமான் வெங்கையிறை யேந்திழாய் நின்னெஞ்
சடுக்குமால் பங்கினள்கே ளாமற் — கெடுக்கவே
காதின் மறையாய்நின் கண்போன்ற தாதலா
லோதுஞ் செயல்பா ருவந்து. (உ0)

கட்டளைக்கலித்துறை.

துன்னாரை வென்ற சிலையாளர் வெங்கை சுடர்க்கிரிமே
லென்னாவி கொள்ள வரிப்புள்ளி மானுக் கெளிதன்றென்றே
பொன்னார் சுணங்குப் புகர்முக வேழம் புயனுணங்கு
மின்னா மருங்கு லணங்கே தடாமல் விடுத்ததுவே. (உக)

நேரிசைவெண்பா.

வேலைக் கடுவையின்ற வெங்கையா னாரிவட்குச்
சாலத் திருமறுகிற் றந்துபோ — மாலிப்
பெரு * மையாற் போக்கும் பிணியோ வவர்த்தாழ்க்
தருமையாற் போக்கு மது. (உஉ)

---

* மை - ஆடு.

புயவகுப்பு.

அந்தி யொடுமோறு பட்டுத் திகழ்ந்தன
வன்று தமிழ்மூவர் வைப்பச் சுமந்தன
புந்தி மகிழ்மாது கட்டக் குழைந்தன
புண்ட ரிகமாலை யுற்றுக் கிடந்தன
நந்து தலைமாலை யிட்டுச் சிறந்தன
நன்றி மறைநாலு மற்பிற் புகழ்ந்தன
விந்த மகமேரு வொப்பக் கிளர்ந்தன
வெங்கை புரிநாதர் வெற்றிப் புயங்களே. (உ௩)

கலித்துறை.

புயலே யனையங் கெதிர்கண் டிடுமெப் பொழுதேவண்
குயிலே யனையா ளென்வர வினைநீ கூறுங்கான்
மயிலே யனையாள் பழமலை வெங்கை வளமன்னுள்
வெயிலே யிழையா ணின்பகை நிற்றூழ் விப்பாளே. (உ௪)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

விழியொன் றியநன் னுதற்பரமர் வெங்கை விரும்பும் * விம
லேச, னொழிலொன் றிரதக் காலிரதக் காறெற் கெழுந்தே யோ

---

* விமலேசனொழிலொன் றிரதக்காலென்றது, சிவபெருமா
ன்கொண்டருளிய பூமியென்னும் இரதத்தின் உருளையாகிய
சூரியனை; பின்ன ரிரதக்காலென்றது, அச்சூரியனுடைய இர
தத்தி னுருளையை. வாளிவாளி என்றது, அப்பெருமானுடைய
பாணமாகிய திருமாலின் பாணத்தை. எனவே, என்றும் நியதி
யாகக் கிழக்கேதோன்றி மேற்கேயோடும் சூரியனுடைய இர
தவுருளை தெய்வகதியால் அந்நிலைமாறி தெற்கேதோன்றி வட
க்கேயோடினும், சுட்டி விடப்பட்டாரைத் தப்பாது கொன்றே
மீளும் அத்திருமாலின் பாணம் தவறுதலை யடையினும் அக்
காலத்தும் என்மொழி பிறழாதெனத் தலைமகனிசைத்தவாறு.

டுகினும், பிழையொன் றிடினு மவர்வாளி வாளி பிறழா தியான் புகலு, மொழியொன் றகலே னுனையெனமுன் மொழிந்தா ரொன்னை யொழிந்தாரே. (உரு)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஒழியாத னங்க வொருகோடி வாளி யுளவேனு மெய்தி யினியென், விழியான வுன்னை யுருவில்லி யென்ன வயலோர்கண் முன்செய் விமல, னுழியான வெங்கை தனிலேகின் மாது முருவில்லி யென்று நினையே, பழியாட வின்று செயுமன்பர் வந்த படியாலொ ழிந்த பயமே. (உசு)

கலிவிருத்தம்.

பரவும் வெங்கைப் பழமலை நாட்டுளேன்
வெருவ வெந்தழல் வீசுகின் றுய்மதீ
பரிவி லாவுனைப் பாம்பு கடிக்கநீ
மருவு பெண்பழி மாற்றிட வல்லையோ. (உஎ)

கட்டளைக்கலித்துறை.

வல்லெனு மாமுலைக் கோதைய ராசை மறந்தவர்க்கே
யொல்லையி னீகுவன் கம்புமுன் னூழி யுடையன்றங்கை
நெல்லிரு நாழி கொளக்கொடுத் தோனெடு வான்கதிரின்
பல்லுக மோதிய வெங்கைப் பிரான்றன் பதாம்புயமே. (உஅ)

சம்பிரதம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

பலவரைகள் கரத்தடக்கிக் காட்டு வோநீர்
பார்ப்பவரே கங்கடலை யருந்து வோநா

மிலகுறநும் மனையிடத்தி னுலோக மெல்லா
மிக்கண்மே காட்டிடுவோ மூலகி லெண்ணில்
கலையறிவோ மொருகாலும் பொய்ம்மைபகர்ந் தறியோங்
கண்ணனெனு மவன்வாயின் மண்விழுமுன் னருவா
லலையிலெழுங் கடுமிடற்றி னடக்கு மீச
னமர்ந்ததிரு வெங்கையினின் றடைந்து ளோமே. (உக)

நேரிசைவெண்பா.

மேகத்தை யொத்துவளர் மென்குழலைச் சார்ந்திலைநின்
ஞகத்தை யொத்துவள ரந்திதனில் — வேகத்து
வேளிக் குவளையுமே வெங்கையம லாடடுமே
வாவிக் குவளையுமே வந்து. (௩௦)

கைக்கிளை. மருட்பா.

வம்புலவு மீர்ங்கோதை வாடுகின்ற தென்மனம்போ
லம்புவியிற் றேய்ந்த வடித்தா மரையதனுற்
செங்கமலை பேதையாச் செய்யு மடந்தையிவள்
வெங்கைநகர் மேய விமலன் றிருவருளால்
விண்ணின் பெருமையும் வியனீர்
மண்ணின் சிறுமையு மறவரு மணங்கே. (௩க)

கட்டளைக்கலித்துறை.

அற்போ டமரர் குழாம்போற்றும் வெங்கை யமலர்வெற்பி
னற்போ தகமன்ன மன்னநின் காத லலமறியாள்
பொற்போ டரவுமிழ் செங்கேழ் மணியைப் புனத்தில்வெறுங்
கற்போ லெறிந்து சுகம்போக்கி நிற்கின்ற கன்னிகையே. (௩உ)

வஞ்சித்துறை.

கன்னனெ டுஞ்சிலைவே, டன்னதி ருங்கணைபோ,
தென்னநம் வெங்கையுளாய், மின்னைய ணைந்தருளே. ()

எழுசீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

அருளாளர் வெங்கை புரமேவு கின்ற வரனுரை நம்பு கிலர் போன், மருளாவ யர்ந்து தமியேனி ருந்து மதனுல ழிந்து விடவோ, பொருளாத ரங்கொ டகனுய கன்ற னெடுநோவ ணைந்து புகலா, யுருளாவி ரைந்து திரைமோது கின்ற வொழி யாவ ளங்கொள் கடலே. (ருச)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கடகரி நரம டங்கல் காலன்வெண் மதிய ரக்க
னடுமுய லகன்ப தைப்ப வடர்த்தனை பதத்தாற் கஞ்ச
னடுமுடி கரத்திற் கொண்டாய் நகைத்துமுப் புரமெ ரித்தாய்
படைகள்கைக்கொண்டதென்கொல்பசருதிவெங்கையோனே.

கலிவிருத்தம்.

வெங்கைப் பதிமே வியவித் தகநின்
றுங்கப் படுதேர் மிசையே * சுடர்கா
றங்குற் றவியங் குறுதன் மையெவ
ளங்கட் கதியம் புதிநன் குறவே. (ருசு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நன்போது கொடுபுலவர் பரவுதிரு வெங்கைபுர நாதர் நாட்டின், முன்போத வறிவனைத்து முயிர்மதவே ளெடுத்தசிலி

---

* சுடர்கால்-சூரியசந்திரர்களாகிய உருளைகள்.

முகங்க டாக்கிப், பின்போது மமயத்தோ வெமக்குமணி வாய்மருந்து பெறவ ளிப்பீர், பொன்போல வடிவுபடைத் திரும்புபோன் மனம்படைத்த பொருவின் மாதே. (கூஎ)

நேரிசைவெண்பா.

பொன்னுண் கவினிமைக்கும் பூவையர்சொற் கண்கைவேள்
வின்னுண் கணைநிகர்க்கும் வெங்கைபுர—மன்னுமுன்
னீர்க்குப் பயந்தவடா னீநெருப்பா யன்றெழுந்த
சீர்க்குப் பயந்திலளோ செப்பு. (கூஅ)

தழை. கட்டளைக்கலித்துறை.

செவ்வா யிளந்திரு நீதந்த மாந்தழை சீறடிக்கு
மொவ்வா தெனநினை யாதுகண் ணேடொற்றி யோதிவைத்தா
ளவ்வா னவர்புக ழெம்மான் றிருவெங்கை யன்பமதன்
வெவ்வா ளிகள்விலக் காமருந் தாக வியந்தனளே. (கூகூ)

நேரிசைவெண்பா.

விழுமுருளு மேங்குமெழும் வெங்கைக்கோ விந்தா
வெழுமதிய மென்னு மிரங்குந்—தொழுமிதழி
யின்று மனைக்க ணிராமா வருளெனுநீர்
தன்று மனைக்கண் டர. (சO)

கட்டளைக்கலித்துறை.

தடுத்திலை யைம்புல வேழங்க டம்மைத் தவநெறியி
லடுத்திலை யன்ப ரினமே மருவி யவலரினம்
விடுத்திலை யெங்க டிருவெங்கை வாணர் விரைமலர்த்தா
ளெடுத்திலை நெஞ்சக மேவிடு மோநம் மெழுபிறப்பே. (சக)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

* என்னடிகள் வெண்குறணே ரடியி ரண்டு மென்றலையி
லிருத்துமிறை வெங்கை நாட்டின், முன்னடிக ளிரண்டுநெடி
லடிகள் பின்னர் முயங்கடிக ளிரண்டுநே ரடிக ளாகப், பன்ன
டிக ளொருநான்கு கொடுந டக்கும் பழுதகல்வெண் டுறைபோ
லப் படர்த லாலே,பின்னடிக ளெங்கடிரு வடிகண் முன்னர்ப்
பெயர்ந்தவடி யெழிலிளஞ்சே யடிக ளாமே. (சஉ)

எழுசீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

ஆர ணங்களு மோத ரும்புக ழாளர் வெங்கைபு ரேசனூர்
பூர ணந்திரி யாது ணர்ந்திலர் போல வன்றுயர் கூடவே
வார ணங்கனி தானி ரும்பிடி வாயி னுங்குற வேகொடா
நேர ணைந்திடு கான கம்புகு நேயர் வந்திலர் மீளவே. (சங)

கட்டளைக்கலித்துறை.

மீனக் கருங்கண்ணி வேள்கணை யாற்சிலை வேடர்வைத்த
கானக் கருங்கண்ணி மான்போற் பதைத்தனள் காரளிக
டேனக் கருங்கண்ணி யீந்தரு ளீர்திரு வெங்கைநகர்
மானக் கருங்கண்ணி மாறீர்ந் தவளுயிர் வாழ்வதற்கே. (சச)

சித்து. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வாளா யொளிர்கட் பொனணைந் திடுமான் மாலா கவிளங்
குறுபொன் னனையா, ணீளா சையினுய்த் தகரும் பொனெலா
நிகழ்செம் பொனெனப் புரிசித் தர்பெறு, மாளா யவர்வெங்
கையிருப் பமவ ரருளப் பொடியா குமருந் துதனைக், கேளா
யெளிதா கவளித் திடுவேங் கிளர்நம் பசிதீ ரவனம் படையே.

---

* என்னடிகளென்றது திருவள்ளுவநாயனாரை.

பதினாறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

படத்தினிற் பொதிந்த குடத்துவெள் ளெலும்பு பரிந்துபெண் ணாக்கவு மறியா, பரவையிற் புணைபோன் மிதந்துவக் தணையப் பருங்கல்பண் ணாக்கவு மறியா,—வடுத்துல கனைத்தும் பரவுற மறைந்த வரியகண் ணாக்கவு மறியா, வமலவென் கவிக ளடியனேன் மனத்தை யளிந்தபுண் ணாக்கவே யறியு,—மெடுத் தசங் கதனை விடுத்திவற் றெதனை யெடுப்பமென் றரியுள மருள, விவர்ந்திடு மெகின்விட் டிவற்றெதை யூர்வ மெனவயன் கருதறக் குவளை,—விடுத்திவற் றெதனைப் பறிப்பமென் றுசாவ வின் மதன் பணிலம்வா லெகினம், விரிந்ததண் குவளை பரந்தவொண்பழன வெங்கைவா ழெங்க ளுயகனே. (சகூ)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நாடா வுழைகள் புனநாடு நாளுஞ் சுகமுஞ் சுகமாகு
மாடா மயிலு மரவுணவுண் டாடு மரவு மெலியுண்ணும்
பிடார் கயிலை மலைப்பெருமான் பிரியா வெங்கை புரநாட்டிற்
கோடா விதணிற் புனத்திருந்த கொடியார் சென்ற படியாலே.

மேற்படிவண்ணவிருத்தம்.

படியறு சிம்புள தெழநீடும் பயமொடு மங்கரி யினமோடப், பிடியொடு மங்கரி யினமோடப் பெருவரி வெம்புலி பொருகேழன், மடிமயி லொண்கதிர் திசையோடும் வனவழி வெங்கையி லுறுமீச, ரடிதவிர் நெஞ்சக மெனநீளு மகலிரு ளிங்குற *லயநீயே.

---

* ஐயவென்பது அயவெனப் போலியாயிற்று.

நேரிசைவெண்பா.

தீத்தவினை யார்புகழும் வெங்கையோய் நின்னடியாற்
றேய்த்த மதியைத் திரும்பநீ — வாய்த்தநறுந்
தேனனைக்குங் கொன்றைமுடி சேர்த்தி யழல்விக்க
யானுனக்குச் செய்தகுறை யேது. (சகூ)

கட்டளைக்கலித்துறை.

ஏட விழுங்குவ ளைத்தாரிற் றேனொ டிசைச்சுரும்புங்
கூட விழுங்குவ வுத்தோட் டிருவெங்கைக் கோன்றுணையாங்
கேட விழுங்குவ ரிப்புன லுண்பவன் கேழ்மதியம்
வாட விழுங்குவ தெய்தாமை நான்செய்த வல்வினையே. (ருo)

கோச்சகக்கலிப்பா.

வல்லங்க மானமுலை மாதுமையா ளென்றனிணை
யில்லங்க மானநுத லின்பகையென் றவண்முனியச்
சொல்லங்க மீதிற் சுமப்பதென்கொ னீயிந்த
வில்லங்க மாம்பிறையை வெங்கை புரத்தரனே. (ருக)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

புரந்தரனு மரியயனும் பரவுபரன் றிருவெங்கை புரமே யன்னை, யிருந்தரள வடம்புரளு மிளமுலைக ளோடோறு மெழுந்து யர்ந்து, வருந்தமனை மலர்த்தாணு லெனத்தினமுந் தேய் மருங்கை வருத்த நீருந், திருந்துநெடுங் குழலிசைதல் வண் டினங்கா டகுதிகொலோ செப்பி டீரே. (ருஉ)

கலித்துறை.

செங்கையில் வில்லே றிடுகணை யோடுஞ் சினவேளை
யிங்குற வாவா வென்ன விருந்தே குயில்கூவ

மங்கையர் நானே மாவை வளர்த்தேன் வடுவுற்றேன்
வெங்கையின் மேவுங் கண்ணுத லாரும் வினவாரே. (ருங)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வில்வளைத்தைங் கணைகொடுபோர்த் தொழில்புரிய வரும் பொருவில் வீர வேளே, கல்வளைத்தன் றொருகணையான் முப் புரங்கண் முருக்குபெருங் கழற்கால் வீரன், பல்வளைத்தெண் புனற்பழன வெங்கையாண் டகையொடுபோர் பயிலப் போதி, யெல்வளைத்தண் டளிர்க்கையிளம் பெண்ணுடைமர் செயலா ண்மைக் கியன்றி டாதே. (ருச)

கலிவிருத்தம்.

இந்து வந்து வெதிர்ப்ப விருந் *தமிழ்
வந்து வந்து மலைப்பதை யின்றொடை
தந்து வந்து தவிர்க்கிலர் செய்க்கணை
நந்து வந்துமன் வெங்கையி னுதரோ. (ருரு)

ஊசல். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நானக் குழலளிக ளெழுந்து பாட † நாதித் தணியசைய வாடி ரூசல், பானற் கமலவயல் வெங்கை வாணர் பதமுற் றிலர் பவமொத் தாடி ரூசல், மானக் குமரருள மறுகி யாட வாட்கட் புடைபுரள வாடி ரூசல், கூனற் பிறைவெயர்ப்ப வாடி ரூசல் கோனவக் கனியிதழீ ராடி ரூசல். (ருசா)

கட்டளைக்கலித்துறை.

ஊனாகி யைம்புலக் கூட்டங்க ளாகி யுழல்கரணந்
தானாகி வெவ்வுயி ராய்க்குண மாகித் தனியிருளாய்
நானாகி நல்லருட் சத்தியு மாகி நலத்தவெங்கைக்
கோனாகி மற்றொன்று மாகா திருப்பக்கை கூடியதே. ()

---

* தமிழ்வந்து - தமிழொடு பிறந்த காற்று. † நாதித்தல் - ஒலித்தல்.

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கூடற் பதியிற் சமணிருளைக் குலைத்துத் திருவெண் ணீற்றதொளி, கொடுத்துக் கருத்திற் குடிபுகுந்தென் குலத்தைத் தொழும்பு கொளுங்கோவு,—மாடற் பரியிற் சேரமா னணையக் கயிலைக் கிரிமீதி, லானைக் கழுத்தி லிவர்ந்தணையு மரசுந் திருநாவுக்கரசு,—நாடப் பசும்பொன் னிடைப்பதித்த நாக மணியிற் றமதுதமிழ், நாட்டப் படுநின் றனதுதிரு நாமத் தினைப்புன் மதியாலென்,—பாடற் பதிப்ப திரும்பிலதைப் பதிக்குந் தகைமை போலுங்காண், பதியாய் வெங்கைப் பதியாளும் பகரார்க் கருணைப் பெருமாளே. (௫௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மாறு மலபொன் பதுவாயும் வழியு முடலை யுடலமிக
நாறு வகைநன் மணந்திமிரு நடலைக் கபட மாதர்தமைப்
பேறு நினைந்து கடலமுதே பிணையே மயிலே யெனப்பிதற்றித்
தேறுவெனையுந் தனைத்துதிக்கச் செயுமோ வெங்கைச் சிவன்றனே.

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சிவநாலு மறையாலு முணர்வி னாலுந் தெரியாத பரன்வெங்கை யரசன் றன்மா, தவனாலு மயனாலு மலரி யாலுஞ் சசியாலுங் குருவாலு மமரர் கோவா, மவனாலுங் குகனாலு முனிவராலு மரவாலுஞ் சுரராலும் புலவ ராலு, மெவராலும் வெலற்கருமைம் புலன்கள் வென்ற வெழிலடியார் பெருமைதனை யியம்பொ ணாதே. (௬௦)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

தேக்குறு கருணைப் பெரியநா யகிதன் றிருமுலை சுரந்தபான் மதுர, வாக்குறு மழகன் ஞானசம் பந்த வள்ளலுண் டிடவவன்

கடைவாய்ப், போக்குற வொழுகுந் திவலையொன் றடியேன்
புண்ணிய வசத்தினாற் கிடைப்பிற், றுக்குறு புலன்வென் றுன்
னடி யவருட் டங்குவன் வெங்கைகா வலனே. (௬௧)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

வருமதன் கொடிய னென்பாள் வரிக்குயிற் காற்றே னென்பாள்
குருமதி முனியே லுன்னைக் கும்பிடு கின்றே னென்பா
ளொருவரும் வெங்கை யீசற் குரைப்பவ ரிலையோ வென்பாண்
முருகல ரணை தீ தென்பாண் மொய்குழன் மையல் கொண்டே.

களி. எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொண்டறவழ் மணிமாட மலிந்த வெங்கைக் கோவிடங் கொள்பெரியநா யகியெம் மன்னை, தண்டரள நகையுமையாள் கருணை தன்னாற் றூலத்து வந்தகுருக் களையுட் கொண்டு, கண்டவர்க ளதிசயிப்பப் பரமா னந்தக் களிப்படைந்து கரணமுடல் புலன்களெல்லா, முண்டெனவு மிலையெனவு முணர்ந்தி டாம லுணர்வுகடந் திருக்கின்ற களியர் யாமே. (௬௩)

நேரிசைவெண்பா.

யாமேபோய் வெங்கை யிறைவன்பான் மெல்லியலீர்
மாமேவுந் தண்மாலை வாங்குவோம்—பூமேவு
மன்னத்தாற் காண்டற் கரியவனைத் தூதுவிடு
மன்னத்தாற் காண்டற் கரிது. (௬௪)

கட்டளைக்கலித்துறை.

அரியானை வேதன் றலையரி வானை யரியமறைப்
பரியானை யெங்க ளிடைப்பரி வானைப் பழுதில்வெங்கைப்
புரியானை யெவ்வுல கும்புரி வானைப் பொதுநடனந்
திரியானை யையங் கொளத்திரி வானைச் செறிகுவனே. (௬௫)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

செறியிதழ் வனசப் பொன்னிற் சிறந்தமா தினையு நீங்கிப்
பொறிவழி மறுத்து வெங்கை புரத்தனைப் பொருந்த நோக்கு
மறிஞரு மிவளைக் கண்டோ மருந்தவப் பயனு லென்னு
மறிவிழி யணங்கைக் கண்டு மறியுமோ மன்னர் கோவே. (௬௬)

நேரிசையாசிரியப்பா.

கோதை தாழ்ந்த கொடிநிமிர் நெடுந்தேர்ப்
பரிதி வானவன் பரவையிற் படியக்
கடனிறக் கமலக் கட்பெருந் திருமான்
மார்பிடைக் குங்கும மட்டித் தாங்கு
குணகடற் றுகிர்ப்பூங் கொடிபடர்ந் தென்னச்
செக்கர்வந் தெய்தத் தன்மனந் திரிந்து
மணந்தவர்த் தணந்த மாதர்வீழ்ந் திறப்ப
வமைத்த வழல்கொலோ வறைதி ரென்னுஞ்
சேண்விசும் பெழுந்த திங்க ணோக்கிக்
கருங்கடு வுமிழ்ந்த கடன்ம றித்தொரு
வெண்கடு வுமிழ்ந்த தெனவுளம் வெதும்பு
மந்த மாருதம் வந்தழல் வீசுற
வாற்றா ளாகியவ் வளக்கரி னின்றெழு
மூழித் தீகொலென் னுன்னியே யயரும்
வேய்ங்குழல் காம வெவ்வழல் கொளுவ
வூதுங் குழலென் றுளைத்தக நெகிழு
மென்மல ரமளி மேல்விழும் புரளு
மசைந்தெழு முயிர்க்கு மந்தோ வென்னு
மொள்ளிதழ் குவித்துயிர்ப் புமிழ்ந் திடு மவிழ்ந்த
கருங்குழல் வாமக் கரங்கொடு செருகித்

தனிப்பொற் றூணிற் சாய்ந்திடும் பனிநீர்
சந்தனக் கலவை தண்ணறுங் கோதை
தரள வடங்க டரிப்பவந் திறைஞ்சும்
பாங்கியர்ச் சுளிந்து பறித்தவை யெறியு
மழவிடை மீதில் வந்துநீ யுலாவக்
கண்டுநின் னழகுணுங் கருங்கட் பூங்கொடி
விரைமலர்ப் பொழில்சூழ் வெங்கை காவல
பொன்னவிர் புரிசடைப் புனித
மன்னவ வவனோய் மருந்துநின் புயமே. (௬௭)

எண்சீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

புரளுந்திரை யெறியுங்குரை கடலும்பகை தழிழோன்
பொதியம்பகை மதியம்பகை மதனன்பகை முலைசேர்
தரளம்பகை பனையன்றில்கள் பகையங்குயில் பகையே
தமரும்பகை யனையும்பகை சகியும்பகை நகர்வாழ்
திரளும்பகை மலர்சிந்திய வணையும்பகை பனிநீர்
திமிருங்குளிர் களபம்பகை யெனிலென்செய வடியே
னருளுஞ்சுக மருள்கின்றிலர் பெயர்சங்கர னெனவே
யணிவெங்கையி லமர்கின்றவ ரதுமென்குறை யனமே.

நேரிசைவெண்பா.

அந்துவா வென்று * மறையே னினைத்தவர்க்கு
வந்துவா வென்று மருவல்போ—லிந்துவா
ழென்றைக் கடுக்கு மிருஞ்சடைசேர் வெங்கையோ
யென்றைக் கடுக்கு மிதம். (௬௮)

* அறையோம் என்றும்பாடம்.

வண்ணத்தாழிசை.

இதயங்கலங்க வினையம்புகன்ற வொருவஞ்சகன்ற னுடனே, யெனையுந்துறந்து மனையுங்கடந்து தனியங்ககன்ற மகளே, மதியங்கிடந்த முடியன்றயங்கு திருவெங்கைவந்து நெடுநாள், வ்ரமுன்கிடந்து நினைமுன்பயந்த பயனின்றுகண்ட திதுவோ, புதிதங்கிலங்கு மணியன்றிநைந்த சுடரோன்றிருந்த மனையே, புகவெம்புகின்ற வடிவம்பரந்த தழல்வெஞ்சுரஞ்செல் வுறுமோ, வதனம்பொலிந்த குமுதம்புலர்ந்து விடிலங்கிருந்த மூவளோ, மகள்சென்று முய்ந்திவ் வளவும்புலம்பு மனம்வல்லிரும்பின் வலிதே. (எ0)

ஆசிரியத்தாழிசை.

வலிய வடியேன் மனத்துவந் தெய்தினன்
மலியு மமுதுணும் வானவர் தேடியே
மெலிய வணுகலா வெங்கையி லீசனே. (எக)

பன்னிருசீர்க்கழிநேடிலடிவண்ணவிருத்தம்.

ஈதற மன்று தனித்தே யானுறு கின்ற தலத்தே
யேகினை யென்கை பிடித்தே யேதமி தெங்கள் குடிக்கே
மீதுறு கொன்றை மணத்தால் வேணியி லிந்து வுருப்போல்
வீறுகிர் கொங்கை யுறுத்தால் வேல்விழி முந்து சிவத்தாற்
கோதித ழின்று வெளுத்தாற் கோளனை கண்டு கறுப்பாள்
கோதையர் வம்பு தொடுப்பார் கோடுர மஞ்ச ணிறத்தான்
மாதுமை கண்டு கொதிப்பாண் மாபுகழ் வெங்கை புரத்தோய்
மாறுவை யன்பு பினைத்தான் மாழ்குவ னென்று மினைத்தே.

கட்டளைக்கலித்துறை.

இளையா திடைமென் முலைசுமந் தேயம் முலையு மின்னங், கிளையா வுயிருண் டிடவறி யாவிரு கெண்டைகளு, முளையா நகையிவண் மேல்வெங்கை வாணநின் மொய்ம்பிலன்றி, யளை யா நறும்பொடி பட்டதன் றோமிகு மற்புதமே. (எரு)

எழுசீர்க்கழிநெடிலடிவண்ணவிருத்தம்.

அரவு முரிகளு மென்புமா லயனோ டமரர் தலைகளு முண் கபா லமுநீ, யொருவி யறுவைபு னைந்துமா லிகைவா ளுமிழு மணியணி சந்துமான் மதமே, மருவ வுருவில ணிந்துமா லையி லே வருதி மலைதர வந்தநா யகிபோல், வெருவி யிவளவை நிந்தியா ளலள்காண் விமல வெழின்மிகு வெங்கைவாழ் பவ னே. (எச)

நேரிசைவெண்பா.

வாட்டுபவங் கொல்புகலி வண்புலவன் பேரின்ப
வீட்டுபவங் * கொள்ளைகொள விட்டநாட் — கேட்டவரா
தெப்பிறப்பி லெங்ஙனிருந் தேதுபுரிந் தெய்த்தேனோ
வொப்பிறப்பில் வெங்கையுடை யோய். (எடு)

வண்ணக்கலித்துறை.

உடைய வினைகளை முடுகி யெனதுள மொன்றினோ
னடைய வறிவெனு மறிவை யருளிடு மண்டர்கோன்
விடைய னரவணை துயிலு மரிதொழும் வெங்கையோன்
சடைய னுமையுறு புடைய னவனடி தஞ்சமே. (எசு)

---

* பவம் - உலகம்.

வண்ணத்தாழிசை.

தழுவி யணையினு றங்குதாய் தனையு மருகுநெ ருங்கியா
தரவி னொடுதுயில் இன்றமா தரையு மரிதின கன்றுபோய்
வழுவை யனையம றங்கொள்கா வலர்கள் பதறியெ ழுந்திடா
வகைபல் கடைகடி றந்துரு மறுகு தொறுமிக வந்துகு
ழொழிவின் ஞமலியி ரைந்திடா துணவு சிதறிய ணங்குபோ
யுலவு மிருணிறை கங்குல்வா யுனது மருமமு யங்கவே
விழைவி னணையவ ணைந்திலாய் வெருவ விடுவெத றங்கொலோ
விழும மகறிரு வெங்கைவாழ் விமல விதனைவி ளம்பிடே. ()

குறள்வெண்செந்துறை.

விண்ட பூமுடி வெங்கை புரத்தனைக்
கண்ட மாதர் பெறுவது காமமே. (எஅ)

மதங்கு. எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காவி கொண்ட களத்தர் வெங்கை புரத்தர் தங்கழல் பாடியே
வாவி கொண்ட மலர்ப்ப தங்கள் சிவப்ப வாடு மதங்கிதா [மோ
னீவி கொண்டு முலைத்த டங்கண் மறைத்தி லாளெனி னிற்கு
வாவி கொண்டிடு மிங்கி தற்குமு னென்று காளைய ரயர்வரோ. ()

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அயன்கொளுங் கவின்கூர் வெங்கை யமலன்றன் வரத்தா லன்றி, வியன்கொளுங் கவினன் மற்றோர் மெல்லியல் சேர்வோ னன்றே, நயன்கொளுந் தவமென் செய்தா ணகமக ளனத்தன் காதல், பயன்கொளும் படிப கர்ந்து பரிகுவண் மாதர் மாதே. (அ0)

நேரிசைவெண்பா.

மாதா வயிராமன் மற்றோர் பொருள்குறித்து
வேதா வறியாத வெங்கைபுரத் — தாதாவை
யப்பாவா வீட்டிற் கடியேன்சொற் கம்பெறவென்
றிப்பாவை கூறு மிரந்து. (அக)

கட்டளைக்கலித்துறை.

இரவாம லொன்று மயலோ ரிடைச்சென் றிரப்பவர்க்குக்
கரவாம லென்று மிடரே புரியுங் கடும்புலனிற்
பரவாமல் வெங்கை புரிவாணற் கன்பறும் பாதகனை
விரவாம லின்றவர் தாமே பரகதி வேண்டினரே. (அஉ)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

* வேண்டுவார் வேண்டியதே யீவா னென்னும்
வியன்றிருநா வுக்கரசின் மாற்றம் பொய்யோ
வீண்டுவா வென்னைவலப் பாகந் தன்னி
லிருத்துகென நினைவேண்டி யொழியா மையல்
பூண்டுவார் விழிததும்பு புனலோ டொன்றும்
பொற்றொடிக்குந் திருவருள்செய் கின்று யல்லை
நீண்டுவா னுலகளக்கும் பொழில்சூழ் வெங்கை
நிமலனே யெமையாளு மமரர் கோவே. (அரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கோபங் தோன்ற வதிர்ந்தெழுந்து கோக்க டொறுமின் வாள்வீசிச், சாபந் தோன்ற வளைத்தொழியாச் சரமே பொழிந்து காரகிலின், றூபந் தோன்று குழற்பகைதான் றோன்றிற் றிறை

* திருமறைக்காடு திருத்தாண்டகம். க - தூண்டுசுடர்.

வன் றிருவெங்கைத்,* தீபந் தோன்றும் புயனினைவைத் தீரா ரின்னும் வாராரே. (அச)

மேற்படிவேறு.

வார்கொண்ட களபமுலை யுமைகணவன் றிருவெங்கை மகி ழ்ந்த தேவே, யேர்கொண்ட வுனது † மா ணிக்கமலைக் கருங் கொடியை யெரிப்ப தென்கொல், கார்கொண்ட பசுங்காவின் மாவினிருந் தெங்கணமர் கடிய வந்தப், போர்கொண்ட மதவே ள்வந் துறக்கூவுங் கருங்குயிலைப் பொடித்தி டாதே. (அரு)

கோச்சகக்கலிப்பா.

பொடித்தமத னுயிர்படைத்துப் பொருவதுவும் வெவ்வரவங்
கடித்தமதி பிழைத்தனலங் கால்வதுவு மாமுனிவன்
குடித்தகடன் மறித்தெழுந்து குமுறுவது முன்னமுன்னைப்
பிடித்தவினைச் செயலன்றோ பிரிவில்வெங்கைப் பெருமானே.

பாண். அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மான்கொண்ட கரத்தர்திரு வெங்கைபுரத் தவர்பலகை வழங்கப் பெற்ற, தேன்கொண்ட விசைப்பாண ரெனநினைப்ப லுனைப்பாண சிறப்பு நீத்த, கான்கொண்ட தொடைப்புயத்தர்

---

* தீபம் - சுவாதிநாள்; ஐப்பசிமாதத்திலே சுவாதிநக்ஷத் திரத்திலே மழைபெய்யுமென்பதைச் சிந்தித்துள்ளவரென்னுங் கருத்தால் "தீபந்தோன்றும் புயனினைவைத் தீரார்" என்றா ள். இச்செய்யுளில் சிலசொற்கள் சிலேடைப்பொருள் தந்து நிற்கின்றன.

† மாணிக்கமலை - இரத்தினகிரி; வாட்போக்கி என்பதும் இ துவே. இதில் பாலைக்கவிழ்த்த காகத்தை ஒரு இடையன்பொ ருட்டு எரித்த சரித்திரவிரிவை அத்தலபுராணத்துட் காண்க.

பெயர்மொழியா யெனிலவர்பேர் கழற லாற்ரு,லூன்கொண்ட
மழுவலத்தோ ரிசைக்குடைந்த பாணனென வுள்கின் றேனே.

கலித்துறை.

உள்ளே னன்பர் தங்களொ டன்போ டுறும்வண்ணம்
விள்ளேன் வஞ்சம் பொய்கொலை காமம் விடுகில்லே
னெள்ளே னங்கம் வெங்கைபு ரேசா வெனநேயங்
கொள்ளே னெவ்வா றுய்குவ னந்தோ கொடியேனே. (அஅ)

தவம். எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கொடியவரை வனத்திருந்து நோற்கி னுந்தோட் கொற்றவரை யொத்தவரைத் துறந்துபோகிப், படியவரை மருட்டுதவ வேடந் தாங்கிப் படிமுழுது முலாவுகினு மறைக ளெல்லா, முடியவரை யறுத்துணர்ந்து புகலி னுந்தீ முளரிமலர்க் கரத்தெடுத்த வெங்கை வாண, ரடியவரை வழுத்தியவ ரடிகள் சூடா வவலரையோர் பொருளாக † வறிகி லோமே. (அகூ)

மேற்படிவேறு.

அறிவினிலி லங்குதிரு வெங்கைநக ராள ரடியினின்மு யங்கியுறு மென்றனக வன்மை, யெறியயிலை வென்றவிழி யின்கடையி னுலே யிமைவிழுமு னுங்கிமய றந்தமட மாதைப், பொறியரவ ணைந்துதுயி லுங்கடவுள் கண்டாற் பொறியவனு ரந்தனிலி ருந்திடுவ ளோதான், வெறிமலர்நெ டுஞ்சிலைய னங்கனெதிர் கண்டான் மிகுமிரதி கொங்கையவ னம்புயமு ருதே.

---

† அறிதல் - ஈண்டு மதித்தல்; "பெறுமவற்றுள் யாமறிவ தில்லை" என்னும் திருக்குறளிற்போல.

கட்டளைக்கலித்துறை.

உருதே சிறிய ரினம்பே ரருட்பய னுற்றவர்சொன்
மருதே புலனிற் புகாதே திருவெங்கை வாணற்கன்பு
வெருதே யுனக்கிடர் செய்கின்ற ளோர்க்கிடர் மீண்டியற்றிக்
கருதே யிருமன மேபிற வாநெறி காண்பதற்கே. (கூக)

எண்சீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

காணும லயன்றேடு நின்மு டிக்கட் கண்ணப்பன் றொடுகெ ழற்கால் வைத்த போதிற், கோணுக முரிந்ததுவோ குளிர்வெ ண் டிங்கட் கொழுந்துபொரு தொதுங்கிற்றோ நீர்ப்பெ ணன்பு, பூணும லருவருத்து நோக்கி னுள்கொல் பொன்னிதழித் தொடையல்சூழ்ந் திழுத்த தோசொல், வீணுள்பட் டழியாத வன்பர்க் கன்பாம் விமலனே வெங்கைவரு மமர ரேறே.(கூஉ)

கோற்றியார். நேரிசைவெண்பா.

எறுவக்கும் வெங்கை யிறைவற் றொழுதுதவப்
பேறுவக்கு மின்னே பிடிக்கவோ — கோறுவக்குங்
கூடு குறைத்த கொடுமெதனை மொய்த்தகுழற்
காடு குறைத்த கருத்து. (கூரு)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கரியவன் கமலக் கோயிற் கண்ணவன் கற்ப கக்கா
வுரியவன் சுரர்குற் றேவ னுவந்துநா டொறும்ப யின்று

(கூரு) மகளிர்கூந்தலை மன்மதனுக்கு அரணுகவகுப்பது நூற் றுணிபாகலின் குழற்காடுகுறைத்தகருத்து மதனைப்பிடிக்கவோ என்றார்; இதனை "மட்டுக்கணைவேள் அரணுகவளர்த்த குழற்கா டு" என்னும் பிரபுலிங்கலீலையானுமுணர்க.

மரியவ னென்னத் தன்று ளன்பிலா வெனக்கு வெங்கைப்
புரியவ னளித்தா னென்னாற் புரிதருங் கைம்மா றென்னே.

கட்டளைக்கலித்துறை.

எந்தீ வரமதி மாழ்கிச்செவ் வான மெனுங்கொடிய
செந்தீ வரமதி யாகும்வெண் டீவரத் தேம்புமெம்மே
* லிந்தீ வரமதி ரேகவில் வேள்விடி னேதுசெய்வோ
நந்தீ வரமதி னுடாளும் வெங்கை நயந்தவனே. (௬௫)

பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

நயன மிருண்டு போகாமுன் னடனப் பெருமான் றனைப் பாரார், நடக்கும் பதங்க டளராமுன் னடவா ரமலன் றிருக் கோயில்,—பயனின் மொழிகள் குளறுமுன் பரம னடித்தா மரைதுதியார், பழுதில் செவிகள் செவிடாமுன் பரிந்து சிவன்மெய்ப் புகழ்கேளார்,—செயலி னெடுங்கை நடுங்காமுன் றிருமா மகளுங் கலைமகளுஞ், செறியுந் திருவெங் கைக்கரசைச் செழுமென் மலர்கொண் டருச்சியார்,—மயலி லழுந்தி யயராமுன் மனத்தி லவனை யிருத்திடார், மனித ருழன்று வாளா போய் மறியா நரகின் மறிவாரே. (௬௬)

பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

மருக லம்பர்களர் நின்றி யூர்மிழலை வல்லம் வேதிகுடி சேய்ஞலூர், மறைசை காசிதிரு நாவ லூர்கயிலை மயிலை கற்குடி நல்லூர்நணு,—வருணை பஞ்சநதி திங்க ளூர்பனசை யதிகை யொற்றிதிரு நாரையூ, ரால வாய்திருநெல் வேலி வஞ்சிபழை யாறை கச்சிதிரு வாதவூர்,—சிரபு ரங்கமலை முல்லை வாய்சுழிய திருவ ரத்துறையு மேபுகார், திருவ லஞ்சுழிந ளாறு வேதகிரி

---

* இந்தீவரம் - கருங்குவளை. அதிரேகம் - அதிசயம், உயர்ச்சி.

தில்லை மாணிகுழி யாதியாய்,—விரவு கின்றபதி பலவி னுங் குடிகொள் விமலன் வந்ததன தருளினால், விமல சங்கரியொ டுறையும் வெங்கைநகர் மேவு வாரமர ராவரே. (௯௭)

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

ஆவியி னிடத்துற் றெம்முகப் பகையென் றம்புயத் தினைப்பிடித் திழுப்ப, மேவுவெண் பற்சொற் பகையெனு மணிகள் வெருவிவந் தடியின்மேல் வீழக், காவியங் கருங்கட் பகையெனு மளிகள் கலங்கியெண் டிசைதொறு மிரியப், பூவையர் மகிழ்வுற் றுலாவுறும் வெங்கை புரத்தனெங் கருத்தன்வே றிலையே. (௯௮)

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

இரையும் புனற்செஞ் சடைமுடியுங் கடுவார் மிடறு மிளமதியம், புரையுங் கனலி மருப்பொளிருந் திருமார் பகமும் புலியதள்கு, ழுரையுங் கரியின் றலைமிதித்த வழகார் வெங்கை யரன்றாளு, நிரையுஞ் சுரர்கண் டுருவனைத்து மருளே யென்ன நினைவாரே. (௯௯)

நேரிசைவெண்பா.

நினைகுவதுன் கோலமே நெஞ்சத் தடியேன்
புனைகுவதுன் செங்கமலப் பொற்றாள் — வினவுவது
கோவே யெனவிண் குழாம்புகழும் வெங்கைநகர்த்
தேவே யுனதொழிவில் சீர். (௧00)

திருவெங்கைக்கலம்பகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

தனிச்செய்யுட்கள்.

பதினுன்குசீர்க்கழிநேடிலடியாசிரியவிருத்தம்.

விற்ற தார்கலை பாதி யோடுவே னத்தி லேயழ விட்டதார், வெஞ்சி றைப்புக விட்ட தார்துகி லுரிய விட்டுவி ழித்ததா,—ருற்ற தாரமும் வேண்டு மென்றினி மன்னர் பெண்கொள வொண்ணுமோ, வுமிய டாமண மென்ற வாய்கிழித் தோலை காற்றிலு ருட்டடா,—வெற்றி யாகிய முத்தி தந்தருள் வெங்கை மாநகர் வேடர்யாம், விமல ரானவ ரெமைய டுத்தினி தெங்கண் மிச்சின்மி சைந்தபின்,—பெற்ற வேலர்த மக்கு யாமொரு பெண்வ ளர்ப்பினி லீந்தனம், பெற்ற பிள்ளைகொ டுப்ப ரோவிதென் பேய்பி டித்திடு னாதரே.

அறுசீர்க்கழிநேடிலடியாசிரியவிருத்தம்.

துளங்குமொளித் திங்கடனை யம்புலியென் றுலகமெலாஞ் சொல்லக் கேட்டும், பளிங்கனைய வயிற்றினது விழுங்கிய மான் புறந்தோன்றப் பார்த்துங் கெட்டே, னிளங்கொடிய புலியிதென வறிந்திலே னறிந்தேனே லென்பட் டாலுங், களங்கனிமா மிடற்றிறைையைத் திருவெங்கைக் காவலனைக் கைவிடேனே.

இவ் விருசெய்யுட்களும் பிரதிகடோறும் இருக்கின்றன.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருவெங்கையுலா.

காப்பு.

நேரிசைவெண்பா.

நாவலர்தம் வாய்வீதி நாளு முலாவருமே
தாவருநம் வெங்கையிறை தன்னுலாப் — பாவெனுமோ
ரம்பொற் றளிபூண வாழத் தகப்பட்ட
கும்பக் கடாக்களிற்றைக் கொண்டு.

தலவிசேடம்.

௧ பூமேவு செம்மற் புகழ்வடிவங் கொண்டன்ன
பாமேவு மங்கைபுகழ் பண்பினு — னேமேவு
வில்விற் கருந்தடங்கண் மேவுஞ் சிறியநுதல்
வல்லிக் கிடங்கொடுத்த வண்மையினு — னல்லிமலர்
யாணர்த் தவிசி னெகினவர சின்றளவுங்
காணக் கிடையாத கங்கையான் — மாணப்
பொருவரிய பூங்கட் பொறியரியாற் சென்று
மருவரிய நற்றுண் மலரான் — விரவுசடைக்
௫ கானிருக்க விவ்வீர்ங் கதிர்க்கிளையபென் னென்றுமறி
மானிருக்குங் கைத்தா மரையினுன் — யானிருக்குங்

காயத் திருப்பதுபுன் காரேனக் கொம்போவென்
றேயப் பிறையிருக்கு மீர்ஞ்சடையான் — றூயமுக்
கண்ணுமெழின் மூக்கொடுவார் காம்புபுணர் கூவிளமெ
வண்ணவிலை காட்டும் வதனத்தா — னண்ணல் [ன்
வழுவை யடர்த்து வயங்கொளெறி பத்தர்
மழுவை யுவக்கு மழுவான் — பழவடிமைக்
கண்ணனையுஞ்சில்லோர்கடவுளெனத்தன்னுடும்பைத்
தெண்ணவழனஞ்சயின்றவெம்பிரான்—பெண்ணுருவம்
பெற்றவருளொடும்போய்ப் பெண்வலைப்பட்டுற்றுய
ரற்ற வறிஞ ரகம்புகுவோன் — முற்றவிரி
தத்துவமென் றூறுந் தாங்கடந்து போயறத்தி
லெய்த்தவர்க்குக் காட்டு மியல்பினன் — முத்தமணி
யாற்றிற் பொருடிருவா ரூர்க்குளத்தி லன்றுசென்று
தோற்றப் புரியுந் தொழிற்சித்த — னேற்றுங்
கணையைமல ரொன்று கருதா மதனைத்
துணையை விடுத்தெரித்த தோன்ற—லணையும்
பிறப்புக் கிறப்புப் பெருமருந்து செய்யுங்
குறிப்புக் கரியமுது குன்றேன் —சிறப்பப்
பெரியவரைச் சங்கம் பெறப்பந்தி சேர்த்து
விரிய விலைமுன் விரித்து — வரிசைபட
வன்னம் படைத்துமிசை யாங்கிடுவே விட்டருத்தி
மன்னும் பழுக்காய் வரவளித்துந் — தன்னந்
துறைபடுநர் சென்னியிற்றன் றேழமைவான் கங்கை
பொறைபடநன் றேறல் புரிந்து — முறைபடுமிம்

மண்ணின்மேல் வெற்பு வளமுடையே மிம்மடவார்
விண்ணின்மேல் வெற்பதுநா மேவுவமென் — றெண்ணிமேற்
கொங்கைக் கலவைக் குளிர்சந் தழித்தலைத்துக்
கங்கைப் புனலைக் கடுத்தெழுந்துங் — கங்கைக்குத்
தானு யகமென்று தானதனு லெஞ்ஞான்று
மானு வினைக ளழித்திட்டு — மானுகக்
கோடுங் கழையுங் குடவளையும் விண்முகடு
நாடுங் கழையு நளினமலர்க் — காடுங்
கொடுத்த மணிபலவுங் கொண்டு தனக்கிங்
கடுத்த பெயரை யளித்தும் — படைத்த
பழகு புகழிப் படிமுழுதும் போர்ப்ப
வொழுகுமணி முத்தா றுடையான் — முழுகுபவஞ்
சிந்தும் * விவசித்துச் செய்பணிக்குக் காரணமாய்
வந்துமுத னின்றெழுங்காய் வன்னியா — னெந்தை

---

* கோசலைநாட்டிலே மணிபிங்கலைநகரத்திலே அந்தண குலத்திலுதித்த விவசித்தென்பவர் வறுமைமேலீட்டால் எங்குமுழன்று வருங்கால், ஒருவனத்தில் ஒரு தெய்வீகச் சுனையில் மூழ்கி, அங்கே குபேரனது தங்கையாற் கிடைத்த ஆபரணங்களைக் கைக்கொண்டு, ஒருகணநாத ருணர்த்தியவாறே விருத்தகிரியையடைந்து, அசரீரியின்படி உரோமச முனிவரநுக்கிரகம் பெற்று, அருந்தவம்புரிந்து பழமலைநாதர் கட்டளையின்படி அவ்வாபரணங்களை வைக்கப்பட்ட வன்னிவிருக்ஷம் வேண்டிய பொருளுபகரிக்க, அரிய திருப்பணிபலவும்புரிந்துசிவபதமடைந்தனர். இதன்விரிவை விருத்தாசலபுராணத்துட்காண்க.

யருந்தவர்க ளென்று மமரரென்றும் பேரிட்
டிருந்தவர்க ளெல்லா மிரப்பப்—பொருந்தி
முனியா தவர்க்குவர முற்றுங் கொடுத்திங்
கினியார் வரவென் றிருப்பா — னினையாமல்
வேத வுணவு வெறுத்துப் புகழ்மூவ
ரோதுதமி ழுணுக் குழல்செவியான்—றூதையிகழ்
காலிற்குத் தக்க கணிச்சிகைச் சண்டிசொரி
பாலிற்குத் தக்க பழமலையான்—சாலிக்குக்
கைக்கரகத் துற்றிழியுங் காவிரிபோற் சென்றுநறுஞ்
செக்கரிதழ்த் தாமரையின் றேன்பாய—வக்கமல
வேடு கனலா யிடுபசும்பொ னெண்பொகுட்டாய்
மூடு கரியரியாய் மொய்த்ததடம்—பீடுபெற
ஞாலங் கருதுஞ்செஞ் ஞாயிற் றிரும்பகன்மால்
கோலங் கருதுங் குளிர்பொழில்வாய்க்—காலங்
கருதி யிருளிருப்பக் கட்செவிமா ணிக்கம்
பரிதியென நின்று பருகக் — குருதிபுரை
சேயொளிய பூண்மணிசூழ் திண்சுவர்முற் றுங்கவரின்
வாயி றெரிபளிக்கு மாடமுறத்—தூயசுதை
மாடநம் பிக்கு வழிவிடுவான் விண்ணெழுந்து
நீடு புனல்போல நின்றிலங்கப் — *பாடகக
ரிந்திரனுக் கன்றிங் கெனக்கென்று வேளைசைத்த
பைந்தழைய தோரணம்விண் பாலசைய — வந்தணியி
னாயகனு னீக்குதுயி னங்கை விளக்கவிப்ப
மேய மணிப்பூண் விளக்கேற்றச் — சேயிழையார்

---

*பாடமைகாவிந்திரன் என்றும்பாடம்.

முன்றிற் றுகண்மாற்ற மொய்குழலிற் பூந்தொடைக
* ளன்றித் துகளா லதுநிரப்ப — மன்றிற்
கொழுநன்சொன் மாதுகிளி கூறு தடக்கப்
பழகுமயற் பூவை பகர — வெழிலி
மறைத்திருந்து செல்லமணி மாளிகையை வேத
முறைத்திருந்துதீப்புகைபோய்மூட — நறைத்திருந்து
செந்தா மரைநாதன் றேரிற் பதாகையொடு
நந்தா மதிற்கொடிக ணட்பாடப் — பந்தாடு
மங்கையர்கள் செங்கை வளையொலிப்ப வேர்மலியும்
வெங்கை நகரிருப்பு வேண்டியே — பங்குபடு
பெண்ணுசை நம்பிபசும் பொன்னுசை பெற்றவுள
மண்ணுசை தானு மருவுதலால் — விண்ணுசை
கொள்ளுஞ் சிறப்புக் கொடுப்பத் திருவுளங்கொண்
டெள்ளுங் குறியவுரு வின்றுபோய்த் — தெள்ளுங்
கனவு நனவுபோற் காட்டி யிரந்து
மனைவியுமை யோடு மணந்து — வினவினர்க்குப்
பண்டை யறத்தின் படிவமிது வென்னவுருக்
கொண்டவிலிங் கையன் குலமைந்த — னுண்ட
படிதாங்கி மாயன்றேர்ப் பார்தாங்கி யாங்கெங்
குடிதாங்கி நல்லிசைமென் கோதை — முடிதாங்கு
கல்வி யுறுநீல கண்டன் றுணைவனலர்ச்
செல்வி யுறையுந் திருமார்பன் — வல்விரகம்
பூண்ட மடந்தையரே பொல்லா னெனுநல்லான்
றூண்டு திகிரிச் சுமைதுறந்தான் — யாண்டு

* அன்றுதல் - பகைத்தல்.

மிலையென்றல் கேட்பவுமின் னாதென் றிரப்போர்
நிலைகண்டாங் கெப்பொருளு நேர்வோ — னலையுண்டு
பாலாழிக் கின்றுநிலை பான்மதிக்கென் றொப்பிகந்து
தோலா துலகனைத்துஞ் சூழ்புகழான் — மேலாய
செங்கமல வாணற்கே செந்நாவின் மேவுதல்வெண்
மங்கையெனு மவ்வுரையை மாற்றியே — சங்கையற
மூவுலகு ளோர்க்கு முதுசீர்த்தி வெண்மங்கை
நாவுறைய வைத்த நலத்தினான் — றேவிகலி
வந்துதன்சீர் பாடுசுரா மண்மீதி லந்நிலையே
யிந்திரன்றா னுக்கு மியல்பினா — னிந்தையற
வுண்டு பணையலவொன் றொண்காவைக் கீழ்ப்படுத்திக்
கொண்டு புரைதீர் கொடையினான் — கண்டுபுகழ்
பண்பு மலாது பயனும் புணர்ந்துநிதித்
தண்பதுமம் வென்ற தடக்கையான் — வண்புலவர்
தம்மைவிழி காக்குந் தகவி னிமைபோலச்
செம்மைபெறக்காக்குஞ்சீருடையான் — மெய்ம்மைபெற
நல்லா ரொருவ ருளரே யவர்பொருட்டா
லெல்லார்க்கும்பெய்யுமழையென்றுமுனஞ்-சொல்லாடு
மைய மகல வகிலமெலாந் தற்சுட்டிப்
பெய்யுமழை யென்னும் பெயராளன் — றுய்ய
மறையோர் மிடிப்பகைஞன் வாய்மைநா மென்று
மறையோ மெனப்பொய் யறைவான் — முறையோதி
வேலியறஞ் செய்ய விளைத்துக் கரும்பயிலக்
கூலி கொடுக்குங் குலத்தோன்றன் — மாலிரவு

மார்த்தி விருந்தா லடையாக் கதவழகு
மாத்திரையாய்நின்றெளிரும்வாய்தலான்-பூத்தபொரு
ளேதப் படாம லிருந்துதவ நல்லறமென்
பூதப் படியுட் புதைக்கின்றோன் — வேத
னிலம்பெயர்த்து வைத்த நெடுவேரிற் சென்னி
குலம்பெயர்த்துவைத்தகுணத்தான்-நலம்படைத்தோன்
கண்ட குலத்திற் கருதி னிரட்டியாம்
பண்ட குலத்தின் பயனானோன் — மண்டலிகர்
௬௫ நல்லகோ லின்று நவைக்கோ லெனச்செயுங்கோல்
வல்லகோ லண்ண மலைவள்ளன் — மல்லலுறச்
சந்தி பொருத்தித் தகுஞ்சீர் கெடாதடுக்கிப்
புந்தி மகிழப் புதவணித்தா — முந்தையோர்
செய்யுள்போற் செய்த திருக்கோயி லுள்ளிருந்தெம்
பையுள்போக் கிற்கும் பரஞ்சோதி — மையுள்
ளிருந்தபுன் மாக்கடமை யென்றுந் துதியா
வரந்தரவென் முன்னின்ற வள்ளல் — வரைந்தவிடை.

பவனி.

தன்மதியி லென்றூழ் தனதுமதி காட்டியுறப்
பொன்மலியுங் கம்பம் புகவேற்றிச் — சொன்மலியு
௭௦ மிந்திரனு மேனோரு மேத்தத் திருவுலா
வந்தருளு நல்விழவுண் மற்றொருநாட் — சந்தமறை
முன்னூல் வடிவுகொடு முந்நூல் புனைந்தன்ன
பொய்ந்நூறருமறையோர்போந்தெள்ளி—னெய்ந்நூறு
மாமஞ்ச ணெல்வி வருமானைந் தையமுத
மேமந் தருநெய் யிளவெந்நீர் — தேமுந்து

வில்வநீர்கர்ப்புரம்பால் வெண்டயிர்செந்தேன்கரும்பின்
செல்வநீர் பல்கனியின் றீஞ்சாறு — நல்லிளநீர்
சந்தன மென்பனிநீர் சங்கப் புனன்முதலா
வந்தன கொண்டுதிரு மஞ்சனத்தோ — டுந்துதிரைக்
கங்கை நிறந்திரியக் கன்னிப் பிறைதிகைப்பப்
பொங்கி யலைத்துப் புறம்போந்து — செங்கயல்கள்
பாயுந் தடமாப் படர்சடைமீ தாட்டியபி
னேயுங்கற் பான்மலைமா னெள்ளாத — மாயும்
புலியுரி மாற்றிப் புனைமணிய பாம்பின்
மெலியுரி யன்னதுகில் வேய்ந்து — வலிகெழுநற்
பஞ்சவ னென்ன முடிசூட்டிப் பார்வைக்கீழ்ச்
செஞ்சுடர்ப்பொற் றட்டிற் றிலகமுமிட் — டுஞ்சனிகர்
காதிற்குந் தோளிற்குங் கண்டமணிப் பூணென்னச்
சோதிக் குழைகள் சுமப்பித்து — வாதிப்பி
லுண்ட வழனஞ் சொழுகிப் பரந்ததெனக்
கண்ட முழுதுங் கருஞ்சாந்து — கொண்டணிந்து
பொன்னனையார்நெஞ்சியங்கப் பூங்கலவைச்சேற்றிவிடுங்
கன்னிரைபோன்முத்தவடங்கைபுனைந்து-தந்நிகர்பைந்
நாக நினைவுவர நாறு மலர்த்தாம
மாக முழுது மணிந்திட்டுப் — பாக
மதிய மணியிழைத்து வைத்தன்ன செம்பொற்
புதிய மதாணி புனைந்து — நிதியவணி
மாத்திரைதா னன்றி வளைவடிவுங் காக்குமெனச்
சேர்த்தினர்கே யூரந் திகழ்வித்துச் — சாத்தியபூ

ணென்ன மழுமா னியைந்த விரலல்ல
மன்னமணி யாழி மலிவித்துத் — தன்னுழியக்
கைசெய்த வீரக்குக் கட்டியதாய் முற்றுமன்
மொய்செய்த காலன் முரண்முருக்கி — மைசெய்த
மேனி யரக்கன் விறலோர் கணைத்தழித்து
வானி னடுத்த மதிதேய்த்துத் — தானுடைய
வென்றிக் கணிந்ததென வீரக் கழனென்று
ளொன்றிக் கிடப்ப வொளிர்வித்து — மன்றற்
புகைமுதனின் றேந்திநறும் பூங்குவளைத் தீப
வகைமுதல கொண்டுபணி மாறித் — தகைமை
வலக்க ணிடப்பா லிடக்கண் வலப்பாற்
கலக்க நிழலாடி காட்டி — நிலக்கலமும்
பொற்கலமு மன்ன மறையும் புகழ்மூவர்
சொற்கலையு மொத்துத் துதிப்பவிருந் — தற்கதிர்தன்
னங்கந் திரண்டமுத தாரையொழுக் கானதெனத்
தங்கு மணிப்பிடிய சாமரைக — ளங்கசையச்
சாந்தாற்றி பேர்முரணித் தாமரைமுத் தன்னவெயர்
போந்தாற்றி ஞாங்கர்ப் பொலிவெய்த — வேந்தாற்றற்
பிள்ளை மதியினைமுன் பெற்றெடுத்த தாய்மதிபோல்
வெள்ளை மணிக்கவிகை மேனிழற்றத் — தொள்ளைவளை
யொன்று யிரம்வா யொலிக்கு மவைபோன்று
சென்று யிரமெண் டிசைவிழுங்கக் — குன்றுத்
திரண்டா யிரங்கை தெழிக்குமது போற்கை
யிரண்டான் முழவொன் றிரங்க — மருண்டார்நன்

னந்திகரங் கொண்டதென நற்றண் ணுமைமுழங்கச்
சந்தமறை யோன்விழையுந் தாளங்கண் — மூந்ததிரக்
கண்ணன் மலர்வாய்க் கழையெறிந்து பின்றொடர
வண்ண விசைக்குழல்கள் வாய்த்தொலிப்ப — மண்ணியங்க
ளேனையபா தாளத் திறையரவும் விண்ணரவும்
வானுருமே றென்ன மலிந்தார்ப்ப — மீன
வலைப்புதல்வி போற்றுபெரி யம்மைப் பெயர்கொண்
மலைப்புதல்வி தன்கொழுநன் வந்தான் — றொலைப்பின்
முதுகுன்றம் வெங்கையென முன்னுங் கருணை
மதகென்ற கண்ணுடையான் வந்தா — னிதுகுன்ற
மென்னு மழவிடையான் வந்தா னெனக்கோடி
சின்ன மமுத்துஞ் செவிக்குகுப்ப — மன்னுசிவ
செந்துவர்வாய் மங்கைபங்க தேவாதி தேவவென
வந்திகர்நின் றார்க்குமொலி வானளப்பப் — பந்திமணி
மாடக் கரைசேர் மறுகிலஞ்சி மன்பதையா
நீடப் புதுநீர் நிறைந்தொலிப்ப — வாடச்
சிலர்செந் தழற்கொழுந்து சேட்போய் விழல்போற்
பலர்செந் துகிலெறிந்து பற்ற — மலர்சிந்தி
யும்பர்மே னிற்ப வுலகநெருக் காலுயர்த்த
தம்பதுமக் கையெளிதிற் றூங்குவிப்பச் — செம்பொனெடுந்
தண்டுமிசை கொண்டு சகமீன்ற டன்னையுடன்
கொண்டுமணி வீதி குறுகியே — பண்டு
சிலையாகி நொய்துபட்ட தீதகல மேரு
மலையாகி நின்றவா வந்த — நிலையாகி

நாரணனாய் விண்ணுயர்வா னன்னிறத்தாற் செங்கமல
வாரணனாய் மிக்க வணியினால் — வாரணனாய்
கக0 நின்ற பசும்பொ னெடுந்திருத்தேர்க் கண்டுவந்து
மன்ற விளங்கதிர்போல் வந்தேறி—வென்றிதரு
* தந்தி முகன்முருகன் சங்கரிநற் சண்டியிவர்
தந்த மரபிரதந் தாங்கடவி — வந்தணையக்
கட்டளைக்கற் பொன்னுரைபோற் காற்பொன்மறுகுரிஞ்ச
முட்டிமுடிப் பொன்விண்முகடுரிஞ்சப் —பட்டுடைத்தேர்
கண்டோர் விழிகள் களிப்ப நிலைபெயர்த்துத்
திண்டோ ளிறைவன் செலுத்துதலும் — பண்டோர்

துழாங்கள்.

சிரந்துணித்தா னோடமர்ப்பச் சென்மதற்கு வேத
விருந்து படைத்தபடை யென்னத் — திருந்திழையார்
ககரு முற்றினர்முற் றாத முலையிற் பெருவாழ்வுஞ்
சிற்றிடையி னல்குரவுஞ் சேர்ந்துளார் — முற்று
மமைக்கு நிகர்தோ ளணங்கா தலைத்தம்
பிமைக்கும் விழியா லிறுப்பார் — சுமைக்கு
வருந்து நுசுப்பென்று வாணுதலிற் றீட்டுந்
திருந்து திலகஞ் சிதைப்பார் — பரந்தனிமி
றூதித் திரியும் பலமலரி னெண் மணம்போற்
பேதித் தமையுமிகு பேரழகார் — மோதிக்
கிழியா முகில்சிதைக்குங் கேதனப்பொற் றேரோ
னழியா வெரிதீ யழகை — விழியால்

---

*தந்திமுகன்முதனஞ்சண்டியீறாயினோர் என்றும்பாடம்.

விழுங்கினு ரேது விளையா தினிமெய்
புழுங்கினார் மாலை பொரிந்தார் — செழுந்தரள
மாலை பொடிந்துவிழி வார்நீர் கலந்தொழுகிப்
பாலைமொழி யார்பா ரதிபோன்றார் — மேலைநாட்
கூற்றை முனிந்த குணாகழலு முப்புரத்தி
னாற்றல் களைந்த வணிநகையும் — போற்றிலராய்த்
தம்மைநோய் செய்த தறுகட் சிலைமதற்காய்
வெம்மை விழியே வியந்திடுவார் — செம்மைத்
தவங்கொண்டோ யாதுமையா டன்னழகு கொண்டோ
வெவன்கொண் டிடமளித்த தென்பார் — தவங்கொண்டே
லாக வழகா லளித்த திடமாகிற்
போகவிடே மென்றெதிர்தாம் போகுவா — ராக
மருவு மதினெண் மடங்கு பிறைப்பே
ரிரவி தனைமறைப்பி னென்பார் — பரவுறுநீர்
கன்றுபயிர் மேயக் கடாவின் செவியரிந்தாங்
கின்றுதலை வற்கா ணிணைவிழிக — ணன்றிருப்பக்
கொங்கை யழகழியக் கொண்டதென்பார் கொல்பவர்க்குச்
சங்கரனென் னும்பேர் தகாதென்பார் — மங்கையுமை
கொங்கைவடுக் கண்டுங் குழியவுரம் பாயாத
வெங்கண் முலைக்குவலி யில்லென்பார் — செங்குதலைப்
பிள்ளைப் பழியாளர் பெண்பழியை யஞ்சுவரோ
வெள்ளத் தனையேனு மின்றென்பா — ருள்ளுக்
குருகுவார் நெற்றிபுடைத் தோவிதியே யென்பார்
பருகுவார் போலிறையைப் பார்ப்பார் — முருகுவாய்

தங்கமுத முன்பெறுர் தாழ்குழலிற் பூப்புனையா
ரெங்கள் விழிக்கிவர்தாம் யாரென்பார்—பங்குவரு
மார மணிமார் பணையக் கிடைத்தாலும்
பார முலைக்ககலம் பற்றுமோ—நேருகினுங்
கங்கையறி யாமற் கலக்கு மிமையமலை
மங்கையறி யாமல் வருவரோ—மங்கை
யறியாமற் கங்கை யணையு மவரென்
னெறியால் வராரென்று நிற்பார்—குறியா
விணைவிழியா ஞேக்கா ரெனினு நுதன்மே
லணைவிழியா ஞேக்கினுமா மென்பார்—கணைவிழியா
ரேந்திளங் கொங்கை யிடைவருத்தன் மாத்திரையாய்ப்
போந்தன வென்று பொருமுவார்—நாந்தவஞ்செய்
தில்லோ மதனு லினையாம லென்செய்ய
வல்லோ மெனத்திகைத்தார் மற்றொருத்தி—நல்லோர்

*பேதை.

பொதும்பர் வனம்யாம் புகுவோ மிவடான்
பெதும்பையா முன்னமெனும் பேதை—குதம்பை
விழிமேவுங் காதுதோண் மேவப் புனைவாண்
மொழிமேவும் வீணை முனிவாள்—பழிமேவுங்
† கல்லார் பரன்முற் கரத்தல்போற் றன்கண்மூ
யெல்லார் முனுங்கரந்தேனென்றிருப்பாள்—பொல்லாத
வெம்பு பகையாகி மேல்விளைவ தோராம
லம்புலியைவாவாவெனவழைப்பாள்—செம்பொனுயர்

* ஐந்துமுதல் ஏழுவயதளவும் பேதை.

† கல்லார்பான்முன்னர்க்கரத்தல்போற்றன்கணமும் என்றும்பாடம்.

தெற்றிமிசை மென்னடைய தென்றல் வரவேற்றுச்
சற்றுமுள மஞ்சாது தங்குவாள்—பற்றுதவு

தன்பெருமை பொன்னறியாத் தன்மைபோற் பெண்ணரசாந்
தன்பெருமை தானறியாத் தன்மையாள்—பொன்பரிவி

ஞக்கலையிற் கொள்ளி ஞெளிர்பொன்மணியிருப்பிற்
றக்கவளல் லாளொடுக்கத் தக்கிலாண்—மிக்க

வடிவழகுக் கேற்ற மணவாளன் ருனெனப்
படியுளனென் ருராயும் பண்பாண்—முடிவி

லுருவழிந்த வேளை யுரியனெனக் கூறும்
பொருவழிந்த வோர்குறையும் பூண்பா—டிருவழங்கு

பொன்னே யெழின்முனையே பூங்கொடியேபெண்ணரசே
மின்னே மயிலே விழிமணியே — யன்னே

வருக வருகவென வாராது தாய்நெஞ்
சுருக வருக வுழல்வாள் — பெருகறிஞர்

நெஞ்சம் புரைய நிகழ்வுற் ருெருசிறிதும்
வஞ்சம் புகாத மதர்விழியா—டுஞ்சி

விழுந்த கதிரோ யெழல்போல் விழுந்த
தெழுந்ததென வொக்கு மெயிற்ரு — ளழுங்கவுர

மீக்கா ணளவும் வெளிப்படா வுட்பகையை
நோக்காது வாழு நுசுப்பினுள் — சீர்க்காமன்

மாதரழுக் காற்ருல் வடிவிழிவு காணமற்
பேதை யெனவிகழும் பெண்பெருமாள்—காதலுளந்

தள்ளத் தமர்போற் றமரலா ரும்மகண்மை
கொள்ளக் கருதுங் குறியினுள்—பிள்ளைப்

கஞடு பருவத்தா லொத்துப் பகல்விளக்குப் பட்டாங்
குருவத்தா லொவ்வா ரொடுதான் — றெருவிற்போய்ச்
செங்கணெடு மாலுந் திசைமுகனு மீசனெனப்
பங்கமொழி கூறும் படியென்னச்—சங்கம்
பழிக்கும் வழுச்சொற் பதர்சேர்த்து வைத்த
விழுக்குங் கவியென்ப தென்னக் — கொழிக்கும்
புழுதியளைந் தில்லமெனப் போற்றிவிரற் கோல
மெழுதிவிளை யாடி யிருக்கும் — பொழுதிலிசை
வேதச் சிலம்பு மிளிர்பதத்தான் மூவெயிலுங்
காதச் சிலம்பு கரங்கொண்டா — னூதப்
கசுo பணையா னறிய பசுந்துழாய் நாக
வணையா னறிய வரியான் — றுணையா
யடியவரைக் காக்கு மருளான் பனைக்கைக்
கொடியவரைக் காக்குங் கொலையான்—கடிகொள்
பனியிதழி மாலைப் படர்சடையான் வெற்பின்
கனியிதழி மாலைக் கழியா — னினியநறுங்
காவிக் கரிய களத்தினு னெம்முடைய
வாவிக் கரிய வமுதானுன் — பாவித்
துருகு மகத்தை யுவப்பா னிகழ்வா
லருகு மகத்தை யழிப்பான்—பெருகு
கசுடு முருப்பவள மாய வொருவ னிரதி
விருப்பவள மாய விழித்தான்—பொருப்புவளர்
மங்கைக் குழையாய் மழுத்தனக்கென் றேந்துவோன்
சங்கைக் குழையாச் சமைத்தபிரான்—வெங்கைப்

பழமலையா னாளும் பதியிலான் சீற்ற
மெழமலையா னாளு மிறைவன்—றொழமலையான்

வாழி யரம்பையர்தாம் வண்டலயர் பேதையராப்
பூழி யெழுந்தளகம் போய்ப்படிய — வாழிநெடுஞ்

செம்பொற் கொடித்தேர் திருமறுகி னூர்ந்துவர
வம்பொற் கொடிகுறுகு மன்னையரோ—டும்பர்க்

கரியா னெதிர்சென் றவர்தாழத் தாழ்ந்து
பெரியா னிலைசிறிதும் பேதை — தெரியாம

லன்னைமீ ரித்தே ரமர்பவன்யார் மைந்தனிது
பன்னுகவென் றுடைமுதல் பற்றுதலு—மின்னனையார்

வற்புறுத்த வோர்பொருளை வள்ளுவனார் பத்துமுறை
சொற்பொருத்தி யோதுந் துணிவுபோற்—றற்பதத்தா

லோதும் பிரமமொரு தானென்ப தொன்றனைமால்
காதுபவம் பத்தெடுத்துக் காட்டினேன்—சாத

மிவட்குநா மேதென் றியம்புவமென் றெண்ணித்
துவக்கும் வினைவழியாற் றேன்று—மெவர்க்குமிவன்

றந்தையே யன்றித் தனையனு காதவன்கா
ண்ந்தமில்சீர்க் காரைக்கா லம்மைதனை—முந்தொருநாட்

டப்பா வருளாற் றனக்கம்மை யென்றவன்கா
ணப்பா வெனுமொழியு மன்பினாற்—றப்பா

ரயிலேர் மகன்மாட் டறிந்தவன்கா ணெங்கண்
மயிலே யெனவுரைப்ப மற்றும்—வெயிலே

ரிழையா ளிவனூ ரெவனுரையு மென்ன
வுழையா ரிவனூர்நம் மூர்தா—னுழையாய்

விளையாட வென்று நகைத்து விளம்ப
முளையா முலையிளையாண் மோகங்—கிளையாள்
படிவ நனிநன்கு பார்த்தா டவழும்
முடியி லிளம்பிறையு முன்னாள்—வடிவழகன்
கையி லிளமானுங் காதலியா ளெம்பெருமான்
மொய்யகலம் வேய்ந்து முருகுயிர்க்குஞ்—செய்ய
கடுக்கையினப் போதே கருத்தூழ் நடாத்த
மடக்கொடியிவ் வீசர்தோண் மாலை—யுடுத்தெனக்கு
வாங்கி யுதவுமென மைக்கண் கலுழ்ந்துருகத்
தீங்கிலுமை பங்கன் றிருவிழவுள்—யாங்களிளம்
பேதையென வைப்பப் பெதும்பைச் செயலுமலான்
மாதிவளோர் மங்கைசெயன் மன்னினாள்—யாதினியாஞ்
செய்யுஞ் செயலென்று சிந்தித் துளங்கலங்கிப்
பெய்யுஞ் சிறுவளைக்கைப் பெண்ணமுதே—மெய்யன்
றிருத்தார் நினக்கிரத்தல் செய்தும் புனைதற்
குரித்தா முலைவந் துரத்தி—லருத்தாவென்
றோதிக் கலுழ்கை யொழித்தா ரிவளன்று
பேதைப் பருவம் பெறுகையா—லீதிப்
பெருமான் விடுத்தகன்றான் பேரருளாற் பாகத்
தொருமா னிவட்பார்த் துவந்தாள்—பொருமாரன்
றாறடுத்த கோடி நுனைப்பகழி கொண்டாலும்
மாறிவட்கென் செய்வான் வறிதகன்றான்—வேறொருத்தி

* பெதும்பை.

கககo சீர்க்கு மிளைஞராந் தேன்முரலும் போதாகப்
பார்க்கும் பெதும்பைப் பருவத்தாள் — யார்க்குந்
தனைக்காணில் வாய்நீர் தரும்புளியி னுண்மா
றனைக்காணி னல்குமொரு தைய — னனைக்காம
முள்ள மரும்ப வுணர்வுடைய யோகிகட்குங்
கள்ள மரும்புகயற் கண்ணினள் — கொள்ளுந்
தகவையிரு பங்காக்கித் தாமிருப்பக் கண்கள்
முகவினடு விட்டசுவர் மூக்காள் — மிகவும்
புரிந்தநெடுங் கூந்தற் பொறைவருமுன் றுறல்
வருந்துநறுஞ் சந்த வளையா — டிருந்த
கககூ மனங்குழைக்கும் பெண்வளர்த்தான் மானக் குதம்பை
கனங்குழைக்கு நல்கும்வார் காதா — முனங்குழைக்கு
மண்விடுத்துப் பூசு மணங்குழைப்பான் முன்பிறழ்ந்த
வெண்விடுத்துச் செவ்வ ணியம்புவாள் — பெண்விடுத்துப்
பூமங்கை யாணவாம் பொற்பினள் கல்விகொடு
பாமங்கை தாளிற் பணிகுவாள் — காமன்றன்
வல்லியிவள் போலுமவள் வாட்போலுங் கண்ணினளை
வில்லைபுகுந் தாயி னெனப்படுவாள் — மெல்ல
விடையயிரா தாழி யெழுங்கதிர்முன் றோன்று
முடிநுனிபோற் றோன்று முலையா — ளடியழகு
உoo பூழி யழிப்பப் புதுந்திரியா டற்போற்றுந்
தோழியர்நூ றுயிரவர் சூழ்ந்துவரக் — கேழின்

---

* எட்டுமுதற் பதினொருவயதளவும் பெதும்பை.

சிலைய வுறுப்பு நிகரா தவற்றின்
வலைய மலைப்ப மனங்கொண் — டிலகிலஞ்சி
சென்று புகுந்துவளர் சில்லோதி தன்பகையாம்
மன்றுநெடும் பாசி யிடையொதுங்க — முன்றனறுங்
காவிவிழி கண்டொருப்பக் கண்ணீர் குழைபகைத்த
தூவிபடர் வள்ளை யடிதுடக்கத் — தூவிதழ
தும்பன் மலர்வா யதுகண்டு வாய்திறப்ப
† மேம்பல் வளைகழுத்தால் வீழ்ந்தொளிப்பக் — கூம்பன்ல்
முகைகண்டு தாழ முலையை முழந்தாட்
பகைகண்டு ஞெண்டளைகள் பார்ப்பத் — தகைக்கொண்டு
வாய்ந்தகணைக் காற்கு வராலிரிப்பத் தாட்புறக்குப்
போந்த கமடம் புறங்காட்டக் — காந்தளுடை
தன்னெதிர்கஞ் சஞ்சிவந்த சாயாது நிற்பக்கை
யந்நிலையிற் கொய்தாங் கதுபற்ற — மின்னனையாள்
மாடவரோ டாடினு ளாகப் புனலாடி
மாட மணிமறுகில் வந்துறலும் — நீடு
கரும்பு மலருங் கலந்துவிழை வாக்க
விரும்பு மதன் பொன்மலை வீதி — திரும்பிப்
பரிதிநெடுந் தேர்வருதல் பார்த்தவக லல்குல்
விரதியெனத் தானுமெதி ரேற்றாள் — கருதின்
அரிய நந்தற்க ணரசையருள் காட்டுங்
கரிய மிடற்றமுதைக் கண்டாள் — உரிய
இறைவற்குத் தக்காங் கிறைஞ்சினு ளாலின்
முறைமுற் றிரத முதல — குறைவற்ற

† மேம் - மேன்மை. செய்யுமென்னும் எச்சமுமாம்.

மல்கு விழவார வாரத் தகப்படா
தொல்கு மருங்கு லுமைமங்கை — புல்குந்
திருத்தோளிற் கண்வழிதன் சிந்தைபோய்க் காம
எரித்தோற்ற மெய்துறுமவ் வெல்லை — ஒருத்தோர்
பெருநாண் டடுத்துப் பிணைவிழியு ணீருங்
குருநாண் மலர்க்கைக் குருகும் — அரநாண்
அகல்கின்ற வல்குலிற்பட் டாடையுநிற் பிக்கப்
புகல்கின்று ளிம்முளரிப் பூவைப் — பகல்குன்றச்
சோதி தருமிவற்குச் சூட்டியக்கான் மற்றிவன்றான்
ஏதுதரு நல்கு மெனக்கென்ன —* ஓதி
பெருகொருத்தி சென்றருகு பெண்ணணங்கே யின்பம்
பருகற் கிரண்டாம் பதமாம் — அருகிருத்தல்
ஈந்தருளு மென்ன விறைவி யருகிருப்பு
வாய்ந்த முதற்பதமா வைத்தெண்ணிப் — போந்த
மனக்களிப்பு மல்கிமலை மாதையஞ்சி யீசன்
தனக்களிப்ப வெண்ணுமலர் தன்னை — நினக்களிப்பன்
என்ன வவடா னிவண்மனம்பே தித்ததெனக்
கன்ன லனையமொழிக் காரிகையே — பொன்னிரத
மங்கை முலைகளோ வள்ளறடந் தோள்களோ
இங்கிவையி னல்ல வியம்பென்ன — அங்கவளுங்
கூறாது தன்கடைக்கண் கோமான் புயத்துறுப்ப
வேறான துள்ளமெனன் மெய்யென்று — தேறாக்
கொலைமாலை வேற்கணாட் கொண்டமெட மாதர்
நிலைமாட வீதியய னீங்கச் — சிலைமாரன்

---

* ஓதி - அறிவு.

கிட்டிக்கொண் டெந்தைமுன்செல் கின்ற விநாயகற்குக்
குட்டிக்கொண் டெய்யநாட் கொண்டகன்றான்-சுட்டிக்கொண்
டொப்பாக வோதற் கொருபொருளு மில்லான்றேர்
அப்பான் மருகி னடைந்ததா — லிப்பால்

* மங்கை.

இலர்போ லவாவி யிசையளிக ளுண்ணுன்
மலர்போன் மலர்செவ்வி மங்கை — அலர்போ
தலைமங்கை செய்யா ளறவுங் கரியாள்
டலைமங்கை சாலவுமென் மங்கை — கலைமங்கை
வெள்ளை யவட்கருத வேண்டா வெனுமங்கை
கள்ளை விடுத்துமதங் காண்மங்கை — கிள்ளைமொழிச்
செந்திருமென் கொங்கை திருமா றிளக்குங்கால்
புந்திதனிற் கொள்ளும் பொலிவினள் — இந்திரன்றன்
ஆக்கத் தினைவிழையா வாற்று மருந்தவங்கள்
நீக்கித் தனைநினையு நீர்மையாள் — சீர்க்கமல
ஆதியயன் மீக்கூ ரரம்பையரை யாக்குங்கால்
மாதிரிகை யாகவுனும் வாய்ப்பினள் — சோதிமணி
அன்று சுடரோன் றமைந்த மனைபுகினுங்
கன்று தளிர்மெய்க் கவினுடையாள் — இன்று
திருத்தேர் விழாவென்று சேடியர்க ளீண்டி
மருத்தே ரளிசூழ் மலருந் — திருத்தேர்
இழையுந் துகிலு மெனைத்துங் கொணர்ந்து
விழையும் படியணிய வேண்டக் — குழையும்.

* பன்னிரண்டுமுதற் பதின்மூன்றுவயதளவும் மங்கை.

மனத்தொடுமென் றூசு மணிமே கலையா
மினத்தொடு சேரவுடுத் திட்டுச் — சனித்தவிட
முற்றுங் கவரா முகின்முலைமுன் றானையான்
முற்றுங் கருணைகொடு மூடினாள் — முற்றும்
புருவவணி மாறாப் பொருவிழிக்கு மையிட்
டுருவ மதியை யுவந்து — மருவுமொரு
பைத்த நெடியகரும் பாம்பென்னப் பின்னுபுமுன்
வைத்த குழலின் மலர்புனைந்தாள் — மொய்த்தபுக
ழீசற்குத் திங்களொன்றே யென்றுகதி ரும்பிறையும்
வாசக் குழன்முன் வகுத்தணிந்தா — ணேசத்
திலக மதிக்கிழிந்த சிற்றரவ மென்ன
விலகமணிச் சுட்டிபுனைந் திட்டாள் — கலகமிடக்
கண்ணிற்கு வேள்விடுத்த வோலையெனக் காதிற்கு
வண்ணப்பொன் னோலை வதிவித்தா — ணண்ணி
முயங்கு முரோணி முழுமதியோ டென்ன
வயங்குகொடி மூக்கார மாட்டி — யுயங்கியய
லேனை மதிமாத ரெல்லா மிருப்பதென
வானமணி மாலைகழுத் தார்வித்தாள் — மானவளை
காக்க மணிப்பொற் கடகங் கரஞ்செறித்துச்
சேக்க வடியிற் சிலம்பணிந்தா — ளாக்கமுத
மன்னா ளொழிந்த வணிபல்வுந் தாங்கினாள்
பொன்னா லியன்றவுருப் போன்றமைந்தாள் — பின்னா
லுருப்பசி யன்ன வொருத்தி யளிப்பக்
கருப்புரமென் பாகு கவுட்கொண் — டிருப்பவொரு

மாது குறுகி மயிலேபொற் றேரொடுநம்
வீதிதனில் வந்தான் விமலனென — யாதும்
வருவதுண ராமன் மகிழ்ந்தெழுந்து நங்கை
பொருவதரும் வீதி புறப்பட் — டுருவதிலி
யுற்றபெருந் தானையென வுண்கண்ணு மொண்கவளும்
பற்றுபுகர் வாளும் பரிசையுமா — முற்றிழையா
ரெண்ணிலா ரீண்டி யிருமருங்கும் போற்றிவரத்
தண்ணிலா வேணியரன் றன்னெதிர்போ-யண்ணன்மேல்
வண்டு மலரென்னும் வார்சிலையி னேர்தொடுத்துப்
பண்டுமத னெய்த பரிசென்னக் — கொண்டு
விலங்க விழிப்பகழி விற்புருவ மேற்றி
யிலங்க வருமிறைதோ ளெய்தாள் — கலங்கலுரு
மண்ணரன் யோகநிலை யன்மையாற் றன்பரிதிக்
கண்ணினு ளுக்கவெரி காமத்தீ — யொண்ணுதலா
ளாகநீ ருசா வளவுபோய்ப் பற்றுதலும்
போகமார் மாலை பொடிந்தொழியப் — பாகவாஞ்
சொல்லாள் பணியுட் டொலைந்தன வன்றியுள
வெல்லா முருகி யிலையாக — நல்லா
ரிதுவந்த தெம்மா லெனவுள்ள மாழ்கி
மதுவந்த கொன்றையந்தார் வள்ள — லெதிர்வந்து
நின்று தொழுவா னினையிங் கியாங்கொணர
வென்று மறியா விடும்பையெலா — மின்றிவட்குத்
தக்தா யுலகியல்பு தானுமலாற் புன்மாலை
வந்தால் வருத்தும் வளர்பிறையை — யந்தோ

சமந்துவந்திப் போதே சுடுவித்தா யீது
னமைந்த திருவருளுக் காமோ — சமைந்தவொரு
கோதை யனையாள் குழலிசைய வண்டேலான்
மேதைதரு கல்யாணர் வேண்டுதலாற் — போதுபல
பூத்த வவயவமாம் பொற்பினா லூறினிமை
வாய்த்தமையான் மாறா மணத்தினாற் — சீர்த்திபுனை
நின்றிருத்தோட் கேற்ற நிலையா ளணைந்தருளா
யென்றுரைத்து வேண்டுதலு மெம்பிரா — னன்றடுத்த
பங்குமையை யஞ்சிப் படர்சடையில் வைத்தொளித்தாங்
கங்கையினை யிவ்விருவர் காணாம — லெங்கிவளை
நாமொளிப்ப மென்னா நடாத்தினான் பொற்றிருத்தேர்
காம னடுத்துக் கணைமாரி — கோமளப்பொன்
வஞ்சிமிசை தூர்த்து வருந்திக்கை விட்டகன்றா
னஞ்சனவேற் கண்ணா ளவட்கப்பாற் — கஞ்சம்

* மடந்தை.

அடங்கு பொருட்டி னமர்திருவிற் கோடி
மடங்கு கவின்கூர் மடந்தை — நுடங்கு
கொடிமின் னொழுக்காக் குளிர்புயன்மே னின்ற
படிமன்னு கூந்தலுடைப் பாவை — தொடிமன்னு
செங்கைக் குமாரவேள் செவ்வேலை யொப்பாக்கச்
சங்கப் புலவர்க்குத் தானுரைப்ப — வங்கடுத்து
மாரவே ளம்பாக்கின் வார்புருவக் கென்சிலையு
நேருமே யென்னா நெடுங்கண்ணாள் — சீருலாங்

* பதினான்குமுதற் பத்தொன்பதுவயதளவும் மடந்தை.

காரளகம் வின்னுதல்வேற் கண்குமிழ்மூக் கூசல்கா
தாரமெயி றாம்பலித ழாடிகவுள் — வேரறோள்
காந்தளங்கை யோதிகொங்கை காயமிடை வாழைதொடை
மாந்தளிர்செந் தாளென்று மாதரெனப் — போந்தவர்க
ளெல்லார்க்கு மொப்ப விசைப்பவற்றை யொப்பாக்கல்
பொல்லா தெனவுயர்ந்த புத்தமுத — நில்லாமன்
மாதவர்கண் மால்கொள்ள மால்கொண்ட பெண்ணுருவும்
யாதுமழ கில்லை யெனவந்தாள் — கோதி
உஎரு றுறவறமொன் றுண்டென்று சொல்லுமுனை தற்கண்
ணுறுமளவு மென்னு முருவாள் — பொறியரவு
மந்தர வெற்பு மறிகடலு மின்றமுதந்
தந்தருளுஞ் செவ்வாய்த் தளிரியலாள் — செந்திருவோ
டொத்தக லாத வுயிர்ப்பாங் கியைவிளித்து
முத்த மணல்பரந்த முன்றில்வா — யித்தலையில்
வென்றா † ளுடைந்தாள் விரிபசும்பொற் பூண்கொள்க
வென்றாள் பொருந்தி யிளந்தளிர்க்கைக் — கன்றாடக்
காமர் மணிமே கலைகலிப்பப் பூணொலிப்பச்
சேமவிடை யின்றென்று தேராத — தாம
உஅ0 முலைமேற் றுகினுடங்க முண்டகச்செம் போதிற்
சிலைமேற் சிறுவியர்வு சேரத் — தலைமேற்
சுரும்பரெழுந் தார்ப்பத் துகண்மாலை தூர்ப்பக்
கருங்குவளைக் கண்பிறழ்வு காட்டப் — பெரும்புவியின்
முந்தடித்துச் செல்வ முறையாற் றொடர்வதென
வந்தரத்து மங்கை யடுத்தெழுவான் — பந்தடித்துப்

† உடைந்தாள் - தோற்றவள்.

பூவை விளையாடும் போதி லொருமூவர்
பாவை விழையும் பழமலையான் — கோவை
யெழுதுந் திருக்கரத்தா † னெய்யாமல் வேத
முழுதும் புகழு முதல்வன் — றொழுதுந்
துதித்து முழுநாட் டொலைப்போ ருளத்தான்
விதித்து வருமோர் வினையுந் — திதித்தொழிலுங்
கொள்ளுமவ ரோடுலகங் கோறற் றொழில்புரிந்துந்
தெள்ளுமரு ளாண்மை சிதையாதா — னுள்ளுமறை
கற்றும் பிறரைக் கடவுளென்பார்க் காண்கைமுதற்
குற்றம் பொறுத்தெனையாட் கொள்ளுவான் — முற்றுந்
தனக்கடிமை யென்னுமாற் றம்பிரான் பூட்கைச்
சினக்கடிய வேழவுரிச் செல்வன் — மனக்கினிய
துங்க மணிநெடுந்தேர் தோன்றுதலும் வல்விரைந்து
நங்கைவரிப் பந்தொடும்போய் நண்ணினா — ளெங்கள்
கருத்தனைமுன் கண்டாள் கருநெடுங்கண் ணீரோ
பருத்த முலையின் பசப்போ — தெரித்தமலர்ப்
பைந்தெரிய வின்புலர்வோ பல்வளைக டஞ்செலவோ
வந்துவளர் நாற்குணத்தின் மாய்தலோ — முந்தியதிங்
கேதோ வறியோ மிவையெலா மெய்தினாள்
காதோ டமர்செய் கயற்கண்ணாள் — மாதோர்
புறத்திருப்பக் கண்டுதான் புல்லியமேற் சேறன்
மறுத்தடுத்தோர் சூழ்ச்சி மனத்துட் — குறித்து
நினக்குவென்றி யாயி னினக்கே யிவர்தோ
ளெனக்குவென்றி யாயி னெனக்கே — யினக்கரியுங்

† எய்யாமை - அறியாமை.

கோடாத நின்பாற் கொழுநனே யென்னுடைப்பெந்
தாடா யெனவுரைப்ப் வப்பாங்கி — யோடா
வணங்கே யெனைப்போ லவளைமதித் தாய்கொல்
விணங்கே ருனக்கொவ்வா ளேனுங் — குணங்கூ
ரிறைவி யலளோ விதுதகுமோ வென்ன
மறைவி யலனிவ் வழக்குப் — பெறவிவ்
விருவர்க்கு மோது மியற்கைத்தன் றென்று
வுருவக் கொடிநெடுந்தே ரூர்ந்து — விரைவிற்
றிருத்து மிவள்பொற் றெருக்கடந்து சென்றான்
வருத்துமத னுண்டொழிய மற்று — மொருத்தி

* அரிவை.

தருமுத்தி வேறென்போர் தாமுந்தற் சேர
லருமுத்தி யென்னு மரிவை — யொருமுத்தி
வேண்டியுகங் கோடி விளைத்த தவங்கொடுத்துக்
காண்டலுந்தற் கொள்ளக் கருதுவா — னீண்டிமதி
நள்ளிருள்சென் றுச்சி நணுகிற் குழலொடொவ்வா
வொள்ளெழில் வாண்முகத்தோ டொப்பாவாள்-விள்ளலற
நேர்ந்த விளைஞருறு நெஞ்சியங்கு மாறென்ன
வார்ந்தநெடுங் கூந்தல் வகிரினாள் — சேர்ந்த
கயலிரண் டொத்துக் கடைசிவந்து நாப்ப
ணயலிருண்டு வெண்ணிறத்த வாகி—மயல்புரிந்து
நீண்ட வடிவகன்று நேர்வள்ளை மீதோடிக்
காண்டகைய வாயினிகர் கண்ணினா — டேண்டுசுட

* இருபதுமுதல் இருபத்தைந்துவயதளவும் அரிவை.

ரன்ன மணிக்குழைக ளஞ்சனவேற் கண்டஞ்ச
மன்னவிருந் தாடேசல் வார்செவியா — டன்னு
ணிலவை விரித்தொடுக்கி நிற்குங் குமுத
மலருளதே லொக்குநகை வாயா — ளிலகவரி
மூன்றெய்தி யொள்வளைவெண் முத்து வடமாகக்
கான்றெய்தி னொக்குங் களத்தினு — வீன்றெய்து
மாந்தளிர் முன்னாள் வனையன்றி யொவ்வாத
வேய்ந்தொளிர் பல்வளைய மென்கையா — ளேந்திடைமே
லேயு மிருவா ரெழிலொருவா மிக்கவலி
வீயு மெனவெழுந்த வெம்முலையாள் — காயமெனப்
பொய்கூ றியவறியேம் புண்டரிகத் தாளிழையின்
செய்கூறென் றெண்ணவுள சிற்றிடையாள் — மைகூர
நேர்ந்த வெறும்புகுழி நின்றெழல்போ லுந்திமிசை
வார்ந்த வுரோமமெனும் வல்லியினாள் — கூர்ந்தமணி
நேமி வளைகொ ணெடியோன் றிருவுந்தித்
தாமரையை வென்றிகழுந் தாளினாள் — சோமமுடி
காண நடக்குங் கருத்தாற் பறந்தவன்ன
நாண நடக்கு நடையினாள் — வீணை
க்ரங்கொண்டு செம்பவளக் கான்மணிமா டத்து
வரங்கொண்ட பொற்றவிசின் வைகி — மரங்கொண்ட
கோடு குழைந்து குழைப்பச் சிலைவன்மைப்
பாடு குழைந்து பழமாகப் — பாடு
மிசையால் விளர்ப்பெஞ்சா தெய்துகலை மான்கை
யசையா வியவா வயர — நசையா

னரம்புமொழி கற்க நவிற்றுங் குருவி
னிரங்கு மிசைபாடி யேற்றி — விரும்பமுத
மன்னு ளிருப்ப வவள்பாங்கி சென்றுமலை
முன்னு ளுருக்கு முனிநிகர்வை — யிங்கா
௩௨0 ளசையிர் தடுத்த பழமலையை யன்ன
மிசையா லுருக்குவா யென்ன — விசையா
வெளிய திதுவென் றிசைவீணை யோடு
மளிய னெதிர்சென் றடைந்தா — ளொளிகொண்
மதியூர் முடியு மனைமே வடியுங்
கதிர்வேல் விழிகளிப்பக் கண்டாள் — கொதியா
வெருவுறப்புச் சென்று வெருவுற்றாங் கென்னே
மருவுறுக்குங் கொன்றை மலையை — யுருகுவிப்பச்
சார்ந்தாள் பழமலையாற் றானே யுருகுற்றாள்
சோர்ந்தாள் விழியருவி தூங்கினு — டேர்ந்தாண்
௩௨௫ மொழிகற்ற வீணை முறையென்ன வீழ்ந்து
பழியற்ற தாளிற் பணிய — வொழிவற்ற
கோல்வளைக டோற்றாள் குவிமுலைகள் பீர்பூத்தா
ணூல்வகைய பண்பு நழுவினாள் — சூல்வளையி
னெந்தா ளதுபாங்கி நோக்கி யருண்மலைமுன்
வந்தாடன் யாழான் மகிழ்வித்து — நந்தா
வினைபெறுவா னெண்ணி யிழந்தாண் முதலுந்
திசைபெறுவான் வந்தெழுந்து தீரா — வசைபெறுவான்
னின்று ளெனக்கொண்டு நில்லாது போயினாள்
குன்றாத வன்பினொடு கூடவே — நன்றாளும்

ஆனாய னார்த மரியவிசைக் கல்லாமல்
கானார் மலர்க்குழலாள் காமமொடு — தானாளும்
இன்னிசைகேட் டுள்ளுருகற் கிம்மலைதா னம்மலையோ
என்னிசையச் சொல்கென் றெடுத்தியம்பிப் பொன்னவிர்செம்
பூண்டயங்கு மென்முலையா ரேனையர்பின் போயினார்
காண்டகுநம் வெங்கைநகர்க் காவலனை — நீண்ட
கருமா லுலகங் கடந்தான்றன் கண்கள்
திருமா மலரென்ற றேற்றம் — வருமாறு
தொள்ளா யிரத்துத்தொண் ணூற்றொன்ப தொண்மலரும்
எள்ளா விழியொன்று மிட்டவடி — உள்ளான்
மதனன் மலர்ப்பகழி மாறா மறுகில்
புதுநன் மணித்தேரிற் போனாண் அதனில்

* தெரிவை.

இருந்த பதினா யிரவரம்பை மாருந்
தெரிந்துமதன் வைத்த தெரிவை — திருந்த
நடந்தா லரசவன்ன நச்சப் படாத
தடந்தா மரைவென்ற தாட்கும் — அடைந்தார்க்கும்
வண்டமை யாது வரியாழ் பயிலாது
தண்டளிர் தோல்வி தருகைக்கும் — கொண்டமணிக்
கண்ணின் றிருக்குங் கனக மலைவணங்க
எண்ணின் றிருக்கு மிளமுலைக்கும் — புண்ணின்
றணங்குறுவ தன்றி யருள்புரியா வேலின்
இணங்கெறியு முண்க ணிணைக்கும் — வணங்கி

* இருபத்தாறுமுதல் முப்பத்தொருவயதளவும் தெரிவை.

கொடியும் வரிசிலைநா ணுற்றிருப்ப தென்று
கடியு முரிபுருவங் கட்கு — நெடியமணி
வள்ளைக் கொடிபான் மருவிலகண் ணேட்டமெனக்
கொள்ளைக் கவின்கூர் குழைகட்குந் — தெள்ளுற்
றுவமைகூ றக்கருதி னென்றற்கொன் றல்லா
துவமைவே றில்லா வுருவா — வுவமை
கரியகுழ லாகக் கமஞ்சூன் முகிலுஞ்
சூரியபொரு ளாக வுரைப்பா — ரரியமலர்
கொள்ளைகொள வெண்ணிக் குயில்கூவ நல்லாய
வெள்ளமொடு சென்றுபொழின் மேவினள் — கள்ளழியப்
பூத்தகொடி தான்வருமுன் பூம்பணைகண் மீதேற
வார்த்தைகொடு கிள்ளை மருங்கிரியக் — கூத்தனென
மோதி முகில்கண் டுவந்து மயிலாடத்
தீதில் விழிகண்டு தேனினங்க — டாதில்
விழுந்து படிந்துருவம் வேறுகப் பல்வண்
டெழுந்துமலர் வாய்கண் டெதிரச் — செழுந்தரள
வெண்ணகையாள் கண்டு விடுத்துத்தன் மூக்கையெதிர்
வெண்ணகைய சண்பகங்க ளுள்ளவெலாம் — பெண்ணரசு
சென்று கவர்ந்துநனி சிக்கயாத் திட்டுழலை
யென்று பெயரிய * வெற் பேற்றினன் — மன்றங்
குறுகியிளந் தென்றலெதிர் கொண்டிருப்பச் சேணிற்
றுறுகொடிய தேர்தோன் றுதலு — மறுகில்
நிரம்பு கதிர்நேர் நெருஞ்சியெனத் தன்பாற்
றிரும்புவிழி யாயமொடு சென்றாள் — குரும்பைநிகர்

---

* வெற்பேற்றிமனற்குன்றம் என்றும்பாடம்.

கொங்கைநீ லுண்கட் கொடிமென் றளிர்போன்ற
அங்கைநீள் கூந்தலின்மே லஞ்சலித்தாள் — கங்கைநீர்
பாய்ந்துதளி ராது பவள நிறக்கொழுந்திற்
சாய்ந்துபடர் வஞ்சிச் சடையழகும் — வாய்ந்தசிலை
ஆக்கந் தருமதவே ளஞ்சத் திலகமென
நோக்கங் கிடந்த நுதலழகும் — பார்க்கும்
விழியாய்க் கிடந்தசுடர் மேல்வா சிகைபோன்
றழியாப் புருவத் தழகும் — பழியாப்
பரசு வருங்கை பழித்தருள்வர் தெய்தி
அரசு செயுங்கண் ணழகும் — வரிசைபடு
தொண்ட ரகத்தமருஞ் சூளா மணிவதன
முண்டகத்துக் கேற்றகொடி மூக்கழகும் — மண்டெருத்
தோடிமலை வேந்த னுலாவமுதுண் டென்சவிப்புன்
காடிமுனி யாதகுழைக் காதழகும் — பீடிசைய
ஆத்தமொழி யாக வனைத்தும் பயில்வேத
வார்த்தை மொழியுமலர் வாயழகும் — மேத்துறுதன்
சேவ விருக்கு மிமையவர்மேற் சென்றவிடங்
காவ லிருக்குங் கழுத்தழகும் — * நாவல்
விலங்கலுன் றிண்மை விடுத்து வணங்கும்
அலங்கலுழ் திண்டோ ளழகும் — இலங்க
வெடுத்தமழு·மானபய மேனை வரதம்
அடுத்தமல ரங்கை யழகும் — வடித்தகதிர்
வேலு மெனுங்கண் விளங்கிழைகொங் கைத்தழும்பு
மாறு வணியினுறு மார்பழகும் — நாறுய

---

* நாவல்விலங்கல் - மேருமலை.

வெண்ணிற் சிறந்த விதழ்மலரா டாழுநெடுங்
கண்ணிக் கணையாங் கவானழகும் — நண்ணிக்
குடித்தாவி கூற்றெங் குடிமுழுது மாட்கொள்
அடித்தா மரையி னழகுங் — கடித்தாம
மென்முலைகண் ணிற்கு விருந்திட் டமையாது
நன்மணிமுத் தும்புனைய நல்கினாள் — பொன்மலையை
வாரொழுகுங் கொங்கைபெறும் வண்ணத்தா னுங்கடந்தாள்
போரொழுகும் வேளாற் பொலிவழிந்தாள் — சீரொழுகும்
மைத்தமணி கண்டன் வதனத் தொடுவதனம்
வைத்துமுலை வேழமலை மார்புபொர — நெய்த்தகுழல்
மாது தழுவ மனங்கொண்டு பித்தளையுச்
சூதுபொரு சந்தமுலைத் தோழிமார் — மூதுலகில்
ஆடவர்க டம்மி லழகனா மாயோனும்
பீடமையு மைத்தடங்கட் பெண்ணுருவாய்க் — கூட
இருந்த பெருந்தகையை யெங்குலப்பெண் வேட்டு
வருந்தறகு மென்று மதித்து — விரைந்து
மனையிற் கொடுபோய் மலரணையிற் சேர்த்த
இனைவுற் றுயிருண் டிலையென் — றனைவர்க்கும்
ஐயம் விளைய வவள்சோர்ந்து பின்றெளிவுற்
றுய்யும் வகையே துரைமினென்றாள் — ஐயன்
திருவெளியைக் கண்டா ளுழையரைச்செல் கென்றாள்
அருவெளியைப் புல்கி யயர்ந்தாள் — பொருவெளியர்
அல்லரா மாத ரறிஞர்க்குத் தாமல்ல
இல்லரா யாண்டு மெதிர்நிற்க — வல்லராம்

பூசரிவட்கு மெதிர்நின்று ரென்றிருப்பப்
பாசமில னாதி பகவன்றேர் — வாசவன்றான்
முன்னிறுத்த வஞ்சிறகர் மூரிவரை யூர்வதெனத்
தன்னிலைப்பொன் வீதிதனிற் சார்ந்ததால் — பின்னொருத்தி

---

* பேரிளம்பெண்.

கண்ணிற் சிறந்த கருமணிபோல் வானவர்தம்
பெண்ணிற் சிறந்தவொரு பேரிளம்பெண் — விண்ணிற்
குருமதிதா னொக்குமெழில் கூர்முகத்தை யொக்குந்
திருமலரி னுண்மலர்வு தீர்த்துப் — பொருமதர்வாள்
கண்ணொக்கு நீலக் கடிமலரை வாழ்விக்கப்
பண்ணொக்கு மின்சொற் படியிலாள் — விண்ணிற்
கிருசுடரின் மற்றொன் றெழின்முகமொவ் வாமல்
ஒருசுடர்மன் பொற்பழிப்புள்ளாள் - பொருசுடர்வேல்
மாவடியை நோக்கி வரலொத்துக் காதளவுந்
தாவடிபோய் மீளுந் தடங்கண்ணாள் — காவடிபோல்
கண்ணுங் குழைதூங்கு காதுமுறத் தாங்குநரின்
எண்ணுங் குமிழ்வென்ற நாசியாள் — எண்ணும்
முகைமுதல வெல்லா முறையொத் துவமைத்
தகைதவிர முற்றுந் தனத்தாள் — பகைமலரின்
நூற்றமட வாரு ளொருவரே கல்விகவின்
பெற்றிடினன் றெவ்வாப் பெருமையாள் — பொற்றகடு
வேய்ந்தபவ ளக்கால் வியன்மா ளிகையொன்றில்
ஆய்ந்த புராணநூ லந்தணனை — வாய்ந்த

---

* முப்பத்திரண்டுமுதல் நாற்பதுவயதளவும் பேரிளம்பெண்.

மடங்கலணை யுய்த்து வணங்கி மருங்குற்
றடங்கலரூர் தீமூட்டு மண்ணல் — றொடங்குகதை
யொன்றோ துகவென் றுரைப்பவவ ரேதுவான்
அன்றோர் பகன்முக்க ணுண்டகைதான் — குன்றோ
டிணங்குமுலைப் பெண்ணாத லேலாமை யின்மால்
அணங்குருவப் பெண்வடிவ மாகிக் — கணங்கொள்
முனிவர் தவமிழந்து மோகிப்பான் செல்ல
அனையர் மகளி ரமர்ந்த — மனையில்
பலிமுகத்தா னாகிப் பலிக்கெய்த வானம்
புலிமுகத்தா ரெம்மான்முன் போந்தார் — கலிமுகத்துப்
புன்றுரும்பு போன் றலைந்தார் போற்றுமவி காரிமுனஞ்
சென்று வருசொற் றிரிதல்போல் — மென்றளிராம்
மேனி திரிந்தார்கை வெள்வளைகள் போக்கினார்
வேனின் மதன்கணையால் வெய்துயிர்த்தார் - பானுரைபோல்
ஆடை குலைந்தா ரணைந்தாவி தாரீரென்
றேடவிழ்பூந் தாண்முன் னிறைஞ்சினார் — நீடழலில்
காட்டு மரக்கிற் கருத்துக்கா ரென்னவுயிர்
கூட்டுண் மலர்க்கட் கொடியிடையாள் — கேட்டு
மடவார்கட் கெல்லாம் வசைவிளைத்தா ரென்றச்
சடைவா னவன்றனென் றன்பால் — அடைவானேல்
புவனகர் நம்பிபெரு நன்மணப்பூம் பந்தரிடைப்
பாவலர்முற் கூறும் பழிமொழியை — யாவர்களுங்
கூற வெருக்கணிந்த கோல முதவியா
வேறமடன் மாவையெளி தேற்றுவலென் — றறமுதம்

அன்ன மொழியா ல்றைதலுமுக் கட்கனிமுன்
சின்ன முனிமகளிர் சிந்தைகவர் — தன்னனையான்
வந்தா னெனமுழங்க மாதெண்ண முற்றியதென்
றந்தா மரைத்தா ளணிசிலம்ப — முந்தா
இறைவனெதி ரேற்று ளெழிற்பெருக்கங் கண்ணுற்றல்
குறைவ தறமுகந்து கொண்டாள் — கறைமிடற்றுப்
பண்ண வனைமொழிந்த பாவ முடன்பலித்து
வண்ணநறுந் தூசு * வளையொழியக் — கண்ணிணையுள்
ணீர்பெருக நெஞ்ச நிறையழிய மென்முலைகள்
பீர்பெருகச் செவ்வாய் பிழைபிதற்ற — வேர்பெருகும்
மாதவர்த மாதருற்ற வாறுமின்றிக் கையாற்றில்
சாதலுறு வார்போற் றனைமறந்தாள் — கோதையாள்
தானோ பழமலையைச் சார்ந்தசைப்பா ளென்றுமொழித்
தேனோ வெனுஞ்சொற் றிருமுகத்தில் — வானோர்
தனிநா யகன்முடியிற் றண்புனலீ தென்று
பனிநீர் தெளித்தளிப்பப் பாவை — முனியாள்
உணர்ந்தவச நீங்கி யொழிந்தாள் வளைகள்
புணர்ந்த முலைபசலை பூத்தாள் — கொணர்ந்த
தொடைபொடிப்ப வெண்டரளஞ் சுண்ணம் படமெய்
யிடையடுத்தார் நீங்குவெதுப் பேற்றாள் — சடையடக்கக்
கங்கைநீ ரன்றேயிக் கண்ணீ ரெனவழுதாள்
பொங்கெரியின் வீழ்பறவை போன்றினைந்தாள் - மங்கையர்கள்

* மறையொழிய என்றும் பாடம்.

சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயலென்று — மெல்லியலைக்

கொண்டு மனையிற் குறுக மலருண்டு
வண்டுபடுங் கூந்தன் மலர்விழியாள் — பண்டு

திருமாலு நான்முகனுந் தேடும் பொருளைக்
கருமா மிடற்றெங் கரும்பைப் — பெருமானைத்

தெள்ளமுதைத் தெய்வ சிகாமணியைத் தன்னடியார்
ருள்ளுயிரைத் தோன்று வுறுதுணையைக் — கள்ளவிழுங்

௪௨௫ கொன்றைப் பவளநெடுங் குன்றைப் பழமலையை
மன்றிற் குனிக்குமொரு மாமணியைச் — சென்றுற்

றுளத்துப் புணர்ந்துவிடா தோங்கின்ப முற்றாள்
கிளத்தற் கரியபெருங் கீர்த்தி — வளத்தொடுறும்

நாடு நிலைநிற்ப நம்பன் செலுத்தப்போய்
நீடுதிருத் தேர்நிலையி னின்றதால் — ஆடு

படைக்கண் மகளிர் பலரிவ்வா றாகக்
கடைக்க ணருள்சிறிது காட்டிச் — சடைக்கண்

௪௨௯ வில்லாவினான் வெங்கை நிலையினா னாதி
புலாவினான் போந்தா னுலா.

நேரிசைவெண்பா.

பேதை முதலாகப் பேரிளம்பெண் ணீறாக
வோதை யெழுகடல்போ லோங்கினோர் — காதலுறச்
சிந்தா மணிநெடும்பொற் றேரிற் றிருவுலாத்
தந்தான் பழமலைநா தன்.

சிறப்புப்பாயிரம்.

வெங்கைப் பதிப்பழய வெற்புக் கணிமுழுதுந்
தங்கத் திருவுலாச் சாற்றினன் — சங்கத்துப்
போற்றுந் தமிழ்நூல் பொதுக்கடிந்தா னென்றுலகஞ்
சாற்றுஞ் சிவப்பிரகா சன்.

திருவெங்கையுலாமுற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

சிவப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

பரிசோதனப்பத்திரம்.

பக்கம்.	பாட்டு.	வரி.	பிழை.	திருத்தம்.
உ	க	சஅ	நின்னடி	னின்னடி
கூ	கஅ	க	வராய்	வாராய்
ககூ	சஎ	ரு	பிடார்	பீடார்
உக	கூஎ	கசு	னுன்னி	றுன்னி
உஉ	கூஅ	க	தழி	தமி
சரு	கருஉ	க	முன்	மும்

பிரசித்தபத்திரம்.

இத்தலத்திற்குரிய நான்குபிரபந்தங்களுள்ளே திருவெங்கையலங்காரம் கிடைக்கவில்லை ; திருவெங்கைக் கோவை முன்னரேயச்சிடப்பட்டிருக்கின்றது : ஏனையிரண்டனுள்,

திருவெங்கைக்கலம்பகத்திற்கு,

	ஸ்ரீபொம்மபுர ஆதீனப்பிரதி	க
	கும்பகோணம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்	
	ம - ா - ா - ஸ்ரீ - சாமிநாதையரவர்கள் தந்தபிரதி	உ

(இவற்றுள் ஒன்று மஹாவித்வான் சரவணப்பெருமாளையர்பேரர் குருசாமிஐயருடையது.)

சிதம்பரம்

சைவப்பிரகாச வித்தியாசாலை உபாத்தியாயர்கள்

,,	குமாரவீரையர்	,,	க
,,	சிவராமச்செட்டியார்	,,	க

(இது நாகைப்பட்டணம் ரெயில்வே சப் இன்ஸ்பெக்டர் இராமசாமிப்பிள்ளையுடையது.)

பெருமத்தூர்வித்வான் சபாபதிஐயர்குமாரர்

,,	சிவப்பிரகாச ஐயர்	,,	க
,,	வேலூர்குமாரசுவாமி ஐயர்	,,	க
	என்வசத்தது	,,	க

ஆக ௪.

திருவெங்கையுலாவிற்கு,

,,	ஷ ஆதீனப்பிரதி		க
,,	ஷ சாமிநாதையரவர்கள்	,,	க

சென்னை

தொண்டைமண்டலபாடசாலைத் தமிழ்ப்பண்டிதர்

,,	சண்முகப்பிள்ளை	,,	க

(இதுவும் ஷ குருசாமிஐயர்பிரதியே)

,,	ஷ குமாரவீரையர்	,,	க
,,	ஷ குமாரசுவாமி ஐயர்	,,	க

(இதுவும், ஷ ஆதீனப்பிரதியே)

	என்வசத்தது	,,	க

ஆூ சு.

இவ்வளவு பிரதிகளைக்கொண்டு பரிசோதித்தும் ஷ பிரபந்தங்களிலே, நாலைந்து செய்யுட்களினும், அடிகளினும் சிலசொற்கள் பொருளேக்கமின்றிக் கிடக்கின்றன; அவற்றிற்கு வேறு பிரதிபேதம் காணப்படாமையால் இருந்தவாறே அச்சிடப்பட்டன.

விகிர்தி ஹு
கார்த்திகைமீ
சிதம்பரம்.

இங்ஙனம்
அடியார்க்கடியேன்
இராமலிங்கன்.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இஷ்டலிங்கவகவல்.

கருணைப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தது.

இஃது,
திருக்கைலாசபரம்பரைப்
பொம்மபுரம்
ஸ்ரீசிவஞானபாலையதேசிகராதீனத்துச்
சிதம்பரம்
இராமலிங்கசுவாமிகளால்
பரிசோதிக்கப்பட்டு,
காயாறு-ஞானசுந்தரஐயராலும்
காணியம்பாக்கம்
முருகேசமுதலியாராலும்

சென்னை:
ஓர்துதீயலாஜிகல்யந்திரசாலையில்
பதிப்பிக்கப்பட்டது.

விகிர்தி௵ கார்த்திகை௴.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

இஷ்டலிங்கவகவல்.

விரிகட லாடைப் பெருநில மடந்தைக்
கரும்பெற லாரம் புரைந்தினி தொழுகும்
பொருதிரைப் பொன்னித் திருவரங் கத்துப்
புதுவெயி லெறிக்குங் கதிர்மணி சுமந்த
வாயிரஞ் சுடிகை மாயிரும் பாந்தட்
பள்ளி மீமிசை யொள்ளொளி மின்னொடு
கருமழை கிடந்த காட்சி போலப்
பிறைநுதற் றிருவோ டறிதுயி லமர்ந்த
புரிவளைத் தடக்கைப் பெரியோன் றனு
மலர்தலை யுலகம் பலவும் பயந்து
தெய்வத் தாமரைத் திருத்தவி சிருக்கு
மசைவில் காட்சித் திசைமுகத் தொருவனு
மீண்டிதன் னடியுஞ் சேண்டொடு முடியுந்
தனித்தனிக் காண்குது மெனத்தமி லிசையா
விலங்குபிறை மருப்பின் விலங்குரு வெடுத்து
நெடுநிலங் கிளையா வுடன்மிகத் தளர்ந்து
நிறைமதி நிறத்துப் பறவையுருப் பரித்து
வானகம் பறந்து மேனிநொந் திளைத்துங்
காண்டல் செல்லா தியாண்டுபல கழிய
மண்டழற் பிழம்பாய்ப் பண்டு நின்றோன்
பூசனை விடுத்த மாசுபுரி நெஞ்சத்து

வீயா வஞ்சத் தீயோ ரிருந்த
கடிகொண்மூ வெயிலும் பொடிபட நகைத்தோன்
பொன்னி னியன்றன மென்னறுங் கொன்றையும்
வெள்ளியிற் குயின்றன வெள்ளியொள் ளெருக்கு
மொழுகொளி மரகதத் தெழில்பெறச் செய்தன
வறுகும் வில்வச் செறிபசுந் தழையுந்
தும்பையு மத்தமும் வம்பவி ழாத்தியுங்
கொழிக்கு மிருந்திரைக் குளிர்புனற் பெருக்கிற்
சிறுவெள் ளோதிமந் திரிதர லென்ன
வெண்ணில வொழுக்குந் தண்மதிக் கொழுந்துந்
திரிதரச் சிறந்த செக்கரஞ் சடையான்
மன்றலம் பொதியிற் றென்றலந் திருத்தேர்த்
திங்களங் கவிகை யைங்கணைக் கிழவனைப்
பற்றிய செந்தீ நெற்றிநாட் டத்தோ
னருடிரண் டெழுந்த வுருவமென் றுணர்த்தி
யிருள்குடி யிருந்த திருவமர் மிடற்றோ
னேனையோர்க் கிறைமை யின்மை காட்டி
முடங்குளை மடங்கன் முகனுடேக் கோத்த
வெண்டலை மாலை கண்டவர் வெருவத்
தண்டாது கிடக்குந் திண்டோட் பொருப்ப
னண்டப் பித்திகை விண்டிட வதிர்க்குந்
தீவாய்ப் பிணையும் பூவாய்க் கணிச்சியு
மன்ன முயர்த்தோன் சென்னிக் கடிஞையு
மணந்தரு தண்டுழாய்ப் பிணந்தலை சுமந்த
முத்தலைச் சூலமும் வைத்தகைத் தலத்தோன்
வான்றோய் செக்கரிற் றோன்றுபிறை யென்னப்

பொன்வரைக் குவடு தன்வயிற் றுரிஞ்ச
மேனிவந் தோங்கிய வெஞ்சினக் கேழலின்
கோடுகிடந் திமைக்கும் பீடுகெழு மார்போன்
பிறையுகிர் நோன்றாட் பொறியுடற் பேழ்வா
யுறுவலிப் புலியி னுரியுடை யுடீஇத்
துத்திப் பைத்தலைச் சுடர்மணிச் சூட்டுக்
கடுவொடுங் கெயிற்றுநாண் கட்டிய வரையோன்
திருகுவெஞ் சினத்தி னுருகெழு தோற்றத்
தெறுழ்வலி
கடலெனப் பெயரிய விடலருஞ் சிறைப்பட்
டாரஞர் மூன்று மாஞ தருந்து
மென்னையு மாளத் தன்னுளத் தெண்ணி
மனமொழி மெய்களின் மருவரு மொருதான்
கருங்கட லுடுத்த விருங்கண்ஞா லத்துக்
குரவ னெனவோ ருருவொடு வந்து
பெரிதுட் கிடந்த வருள்வெளிப் படுத்து
நன்னர் நோக்கத் தென்னை நோக்கிய
வுலகம் விளக்கும் பலகதிர் பரப்பி
வாளர வென்னுமோர் தாளினிற் பூத்த
வங்கண்மா ஞாலப் பங்கய மலர்க்குப்
பொன்னிறக் கொட்டையாய்ப் பொலிந்துநின் றுயர்ந்த
விண்டொடு குடுமி மேருவலந் திரியு
மாழியொன் றுடைய வேழ்பரி நெடுந்தேர்ப்
பரிதி வானவன் பரவையிற் றோன்றப்
பாயிரு டொலைத்துப் பகல்பிறந் தென்ன
வுள்ளிரு டுமித்தாங் கொளிசிறந் தன்றே

அவ்வழி

தன்னை யெனக்குத் தான
லளியனுந் தற்பெறக் களிசிறந் திசினே
தன்னு லீயத் தானு மருள்சிறந்
தென்னிடத் தொழிவின் றிருந்தனன் மன்னே
தன்னடைந் தவரை யின்னலம் பிறவிப்
பெருந்தளை யகற்றி யரும்பெற லின்பத்
தொருதனி வீட்டுல குய்த்த லானுந்
துஞ்சினோ ரென்பு தோய்த லானு
மூன்கெட வுடம்பு நோன்புழந் திமைய
மீன்றகொம் பிடத்துத் தோன்றுத லானு
மொப்புமை யின்றி யுயர்ந்தமை யானுந்
தன்னை பன்னருஞ் சிறப்பிற்
கங்கையென் றுரைக்குங் கடவுளா றுடுத்த
பேசரும் பெருமைக் காசியம் பதியுங்
கரைமிசை நின்ற விரிதலைத் தாழையின்
பூங்குலை சிதறித் தாங்கரும் பெருங்கா
யழனிறத் தாமரை யலரிதழ் சிதர்ந்து
பொன்னிறக் கொட்டை சின்னமுற் றிடவுஞ்
சேயிதழ் மலரினும் பாசடை யிடத்து
மினிதிருந் தயர்வுயிர்த் திரைதேர் கமஞ்சூற்
சங்கின மலறுபு சைவலத் தொளிப்பவுங்
கரண்டமுங் கம்புளும் வெருண்டுறு கொக்கொடு
தலைமீ தெடுத்தெடுத் தலைநீர் மூழ்கவு
மஞ்சிறை யன்னமு மளியின் றொகுதியும்
வெள்ளியம் புயலுங் கரிய மங்குலும்
பரந்தன வெழுந்து பாந்தளோ டிரியவும்

விரிகதிர் ஞாயிற்றின் வெயில்பெற வேட்டுக்
கோட்டருகு கிடந்த கூன்முது காமை
கைய தெறிந்தன வொய்யென வீழ்ந்து
கீழ்நீர்ப் புகவுங் கிளர்பெருந் திரையெழுந்
தோங்கிருங் கரைமிசைப் பாய்ந்தன புரளவுந்
துடேஉமென வீழ்தரக் கடுவிசை வாள்புரை
வாளை பாயுந் தாளதா மரைத்தடத்
தாடுநர் வீழ்த்த வவிரொளி மணிப்பூ
ணீர்க்கீழ்ப் படர்ந்த நெடுந்துகிர்க் கொடியென
நனிகிடந் திமைக்கும் பனிபடு நறுமலர்
மல்லலம் பசும்பொழிற் றில்லையம் பலமுங்
கவையடி வெடிவாற் குவிமுலை மேதி
மனையுழைக் கன்றை நினைதொறுஞ் சொரிந்த
வெண்பா லருந்திய செங்கா லன்னந்
தாமரைத் தவிசின் மீமிசை யுறங்குங்
கண்ணகன் கழனியொடு விண்ணக டுரிஞ்சு
நொச்சிசூழ் கிடந்த கச்சிமா நகரமுந்
தண்டளிர்க் கோட்டுப் பிண்டிமுதல் பெயர்த்து
வெறிகமழ் சந்தனச் செறிவுகெட முருக்கி
விண்புகு நெடுஞ்சினைச் சண்பகஞ் சாடிக்
காழுடை யகிற்றிரள் வீழ்தர நூக்கி
மங்குல்கண் படுக்குங் குங்குமஞ் சாய்த்து
மிளிர்மணி யருவிக் குளிர்புனன் முகந்து
தூம்புடை நெடுங்கையிற் றூய்விளை யாடு
மீர்ங்கவுட் புகர்முகக் கூர்ங்கோட் டிரற்கால்
வெஞ்சினக் குஞ்சர மஞ்சுவரு நெஞ்சொடு
பசுந்தழை பொதுளிய விசும்புற நிமிர்ந்து

வாரியுண் டெழுதரு மழையொடு முரணும்
புரவேய் பொதும்பரிற் கதுமென வொளிக்க
வடங்கருஞ் சினத்து முடங்குளை நோன்றாட்
பெருவலி யரிமா னுருமென வதிர்க்கு
மணிகிள ரடுக்கத் தருணையங் கிரியு
மணிவரன் றருவிவீழ் மல்லிகார்ச் சுனமுஞ்
சோதி மாமரஞ் சுடுதழற் பிழம்பென்
றிளமட மந்தி யேறா தகலுந்
திருக்கா ளத்தியா முருக்கிளர் பொருப்பு
மீனிடத் தகவயின் விளங்குவெண் டிங்களி
னெழுகொளி நித்திலக் குழுவினுள் வலம்புரிச்
சங்கு கிடந்துறப் பொங்குபுனற் பழனத்துக்
கரும்படு களம ரிரும்பு கைவிடுத்
தடிபெயர்த் தோடிக் குடவளை யிடறிப்
பசுந்தாட் கழுநீர்க் குப்பையுள் வண்டினம்
வெரீஇயொலி கொண்டெழ வீழ்ந்து
நெடுநெறி திரும்பினர் னெருக்கிடைக் கிடந்த
கடுவரருளுங் கம்பலை யவியா
வொருவாச் செல்வத் திருவா ரூரு
மாரங் குங்கும மகில்கரி மருப்புப்
பொன்மணி முதலிய பொருதிரைக் கையால்
விரிபொழில் நிமிர்ந்தின் விருகரை மருங்கினும்
வாழுநர்க் குதவு மணிமுத் தாறெனும்
பெருநதி யுடுத்த திருமுது குன்றமும்
வரைபக வெறிந்து மாமுத றடிந்த
மணிநெடு வேற்கையும் வளர்பூங் குடுமி

முள்ளுடை நெடுந்தாட் புள்ளணி கொடியுங்
வள்ளிபுரை மருங்குல் வள்ளிமா துக்குஞ்
சேயரி நெடுங்கட் டெய்வயா னைக்குங்
காண பூணணி மார்போ
னருணனி சுரக்கு மறுமுகத் தொருவன்
றன்னிக ரில்லாத் தனிமுதற் கடவு
~~ளுறைமலர் சூழ்ந்ததன் விரைமலர்த் திருவடி~~
யுள்ளுநர் தமக்குங் கள்ளவிழ் சேயித
ழல்லியந் தாமரைச் செல்வனும் வணங்கும்
பெறலரு மரசு பெறவினி தளிப்போன்
றேங்கமழ் கடம்பின் றெரியய லுயல்வருஉம்
பன்னிரு தடந்தோட் பண்ணவ னிருந்த
பனியிரு விசும்புதோய் பரங்குன் றிழியு
மணியருவி கொழித்த மணிகிடந் திமைக்குந்
திருமலி மறுகிற் செந்தமிழ்க் கூடலுந்
தமிழ்குடி யிருந்த தடவரைத் தோன்றி
யுமிழ்திரை ஞாலத் தமிழ்தெனக் கிடந்த
தண்பொருநை யுடுத்த விண்பொரு நெடுமதி
னெல்லையு முதலிய பல்பெரும் பதிக
ளனைத்தினுங் கண்டோற் ககற்றரும்
வினைத்தொட ரகல வீற்றிருந் தனனே.

இஷ்டலிங்கவகவல் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கருணைப்பிரகாசசுவாமிகள் திருவடிவாழ்க.

உ

கணபதிதுணை.

பிரசித்தபத்திரம்.

இப்பிரபந்தத்திற்குப் பலவிடங்களினும் முயன்றும் ஸ்ரீபொம்மபுர ஆதினப்பிரதியொன்றேயன்றி வேறு கிடைக்கவில்லை; இதனினும், (ருரு) வது அடியின்கீழ் எறக்குறைய இருபத்தாற்டியும் (எஉ) வது அடியின்கீழ் இரண்டொரு சீர்களும் குறைந்தும் மாறுபட்டு மிருக்கின்றன: ஆயினும், அரிதாகவுள்ள இதுவும் இறவாவண்ணம் பரிசோதித்து அச்சிடப்பட்டது. முற்றுங்கிடைத்துள்ளோர் தயைகூர்ந்தனுப்பில் இக்காபி நஷ்டம் நோக்காது உடனே அப்பிரதியின்படி வெளியிடப்படும்.